ஆண்டவர்
எலன் ஜி. உவைட் அம்மையார்
வாயிலாக நமக்கு
அருளிச்செய்த

# பரம தரிசனங்கள்!

(Early Writings)

ஆண்டவர்

எலன் ஜி. ஒயிட்

அம்மையார்மூலமாக

நமக்கு அருளிச்செய்த

# பரம
# தரிசனங்கள்!

(Early Writings)

# மொழிபெயர்ப்பாளர் பக்கம்

திருமதி எலன் ஜி. ஒயிட் அம்மையாரால் எழுதப்பட்ட **Early Writings** என்ற பெயருடைய நூலை மொழியாக்கஞ்செய்யத்தக்கதாக 28 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வாய்ப்பினை உருவாக்கித்தந்த என் ஆண்டவருக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் தமிழில் **பரம தரிசனங்கள்** என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது; மேலும், இந்த நூல் வெளிவரவேண்டுமென்ற ஆர்வமிகுதியால் என்னைத் தூண்டி, அதிக முயற்சிகளெடுத்து. பல மாதங்களாக அரும்பாடுகள்பட்டு, இறுதி வடிவம் கொடுத்த எனது சகோதரன் **பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா** அவர்களுக்கும், மேலும் சமயங்கிடைத்தபோதெல்லாம் எனது இல்லத்திற்கு வந்து இரவு கண்விழித்து இந்தப் புத்தகத்திற்காக என்னுடன் உழைத்த **செல்வி பிரிம்ரோஸ் ஆரோக்கியம்** அவர்களுக்கும் மற்றும் **செல்வி ஆலிவ் சடகோபன்** அவர்களுக்கும், **திருமதி இவாஞ்சலின் இம்மானுவேல்** அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இந்தப் பரம தரிசனங்கள் என்ற நூல் ஜீவாதிபதியைத் தரிசிக்கவும், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கவும், ஜீவநதியின் நீரைப்பருகவும், ஜீவகிரீடத்தை அணியவும் உங்களை வழிநடத்தும்—வழி நடத்தவேண்டும் என்பதே என் அவா.

ஜீவனுள்ள தேவனுடைய வசனங்களைக் கருத்தோடு வாசிப்போம். நம்மிலுள்ள நான் சாகவேண்டும். நமது இதயங்களில் இயேசு கிறிஸ்து வாழவேண்டும். இந்நூலை வாசிக்கின்ற எனது சகோதரர்களே—சகோதரிகளே! நீங்கள் உங்களையும் உங்களது உடைமைகளையும் தியாகஞ்செய்யவேண்டிய வேளை வந்துவிட்டது; அதற்கு ஆயத்தமாக இருக்கிறீர்களா?

**இவண்**
**மொழிபெயர்ப்பாளர்**
**திருமதி கமலா ஜெகதீசன்**
**செயலாளர் ஃபைலா சப்த ஜோதி அறக்கட்டளை,**
**C 176, கோவிந்தசாமி தெரு, திருநகர்,**
**மதுரை–6, தமிழ்நாடு, இந்தியா.**

*Mrs. E. G. White's*

# PARAMA DHARISANANGAL

(In English: Early Writings)

Translator:

**Mrs. Kamala Jagatheeson**

Secretary - Rila Saptha Jothi Trust
C 176, Govindasamy Street, Thiru Nagar,
Madurai - 6, Tamil Nadu, India.

Publishing Editor:

**Pastor R. Albert Zechariah,**

S.D.A. Office, Post Box No: 2 (H.C.F.)
Hosur 635110. Tamil Nadu, India.

## பதிப்பாசிரியர் பக்கம்

***அன்புள்ள சகோதர-சகோதரிகளே!***

*இந்த நூலானது எலன் ஜி. ஒயிட் அம்மையாரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட, "Early writings" என்ற நூலின் நேரடித் தமிழாக்கமாகும். ஏறக்குறைய 28 ஆண்டுகளுக்கு முன்னால், திருமதி கமலா ஜெகதீசன் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டிருந்த இந்த நூலை, இப்பொழுது அச்சடிக்கக் கிருபைசெய்த ஆண்டவருக்கு நாம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்த நூலானது 148 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, உலகெங்கும் உலவிவருகிறது. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவைகளை நாம் மிகவும் நன்றாக விளங்கிக்கொள்ளத்தக்கதாக உதவி செய்கிறது.* ***இந்த நூலை எழுதிய திருமதி எலன் ஜி. ஒயிட் அவர்கள் உலகப் புகழ்பெற்ற 20 பெண் எழுத்தாளர்களிலும் சிறந்தவர் என்று ஒருவர் குறிப்பிடுகிறார்.*** *அது உண்மைதான்; வெறும் புகழ்ச்சியல்ல. அனைத்தையும்விட இந்த நூலின் ஆசிரியர் தரிசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பல வகைகளிலும் சோதிக்கப்பட்டு, (உண்மையாகவே அவர் தரிசனத்தில் இருக்கிறாரா என்பதைக் குறித்து) மற்றாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்; போற்றப்பட்டவர். இந்த நூலின் ஆசிரியர் தரிசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது,*

— ***இயேசுவிடம் பேசியிருக்கிறார்!***

— ***தூதர்களிடம் பேசியிருக்கிறார்!***

— ***பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கிடம் பேசியிருக்கிறார்!***

— ***பிற உலக மக்களிடமும் பேசியிருக்கிறார்;*** *மேலும்*

— ***“ஆண்டவர் எனக்குக் காண்பித்தது என்னவென்றால்”***

— ***“தூதன் எனக்குச் சொன்னார்”***

— ***“நான் பார்த்துக்கொண்டிருக்கையில்”***

— ***“நான் கண்டேன்”*** *என்பதாக பல நூற்றுக்கணக்கான பக்கங்களில் குறிப்பிடுகிறார். எந்த பரிசுத்தஆவியானவர் வேதாகமம் வெளிவர உதவினாரோ, அதே ஆவியானவர்தாமே, வேதாகமத்தின் உயரிய உண்மைகளை உலகிற்கு உணர்த்த, அம்மையார்மூலமாக ஏராளமான செய்திகளை அவர்தம் பல நூல்களின் வாயிலாக தந்திருக்கிறார். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக. இதுவரையில் எமது வெளியீட்டின்மூலமாக பதிப்பிக்கப்பட்ட ஏனைய தமிழ் நூல்களையும் படித்துப் பயனடையுங்கள். இந்த ஊழியம் சிறக்க ஜெபியுங்கள். உதவுங்கள்.*

அம்மையார் அவர்கள் தமது ஆரம்பகால ஊழியத்தில் தமக்கு கொடுக்கப்பட்ட தரிசனங்களை எழுதி, அவற்றை சிறிய நூல்களாக 1851, 1854, 1858 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டார்கள். அந்த நூல்களின் தொகுப்புதான் **"Early Writings"** என்ற பெயரில் ஒரே நூலாக பின்னர் வெளியிடப்பட்டது; ஆகையால், நீங்கள் சில தரிசனங்களை மீண்டும் மீண்டும் சில பக்கங்களில் வாசிக்க நேரிடும். அவ்வாறு வெளியிடப்பட்டதிலுங்கூட தேவ மகத்துவம் வல்லமையாக நமக்கு வழிகாட்டுகிறதென்பதை உணர்ந்து, அவற்றை நீக்காமல் மூலநூலில் உள்ளபடியே பதிப்பித்திருக்கிறோம். இந்த ஊழியம் சிறக்கத்தக்கதாக உங்களுடைய ஆலோசனைகளை எழுதி அனுப்புங்கள்; இந்த ஊழியம் செழிக்க ஜெபியுங்கள்.

படிப்போம்; பயனடைவோம்; பண்படுவோம்; பரமனின் வருகைக்கு ஆயத்தமாவோம்; மற்றவர்களையும ஆயத்தப்படுத்துவோம்.

இவண்,
பதிப்பாசிரியர்
பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா
C/O. தென்-ஆசிய மண்டல தலைமைச் செயலகம்,
அ. பெ. எண். 2 (எச்.சி.எப்.),
ஓசூர், தமிழ்நாடு - 365 110.

## எலன் ஜி. ஒயிட் அம்மையாரின் தன்னிலை விளக்கம்!

நான் கண்ட—உண்மையென்று அறிந்த காரியங்களை நான் பேசுகிறேன். —**Selected Messages 3:49.**

பத்திரிகையிலே எனது விருப்பத்திற்கு ஏற்ப சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக எந்த ஒரு கட்டுரையையும் நான் எழுதுகிறதில்லை.

நான் எழுதியவைகளெல்லாம், ஆண்டவர் எனக்கு தரிசனத்திலே முன்பாக வெளிப்படுத்தியவைகளே—அவரது சிங்காசனத்தினின்று அரிய—அபூர்வமான ஒளிக்கதிர்கள் பிரகாசித்தன. —**Testimonies 5:67.**

# கர்த்தருடைய ஊழியக்காரி
# தீர்க்கதரிசி எலன் ஜி. ஒயிட்!

இளம் வயதில் இறையருளைப் பெற்றதினால்
எண்ணில்லா தரிசனங்கள் கண்டவராம்
வளமில்லாக் குடும்பத்தில் வாழ்ந்திடினும்
வறுமையிலும் செம்மையினைக் கொண்டவராம்!

அருளொளியால் இவர்யாத்த நூல்களெல்லாம்
அவனியில் அணையாத விளக்காய் நின்று
மருளிருளில் மயங்கிவாழும் மக்களுக்கு
மகிமைமிகு ஒளியாக இலங்கிநிற்கும்!

“அம்மையார்” என்று தமிழ் உலகினிலே
அட்வெந்து மக்களாலே அழைக்கப்படும்
செம்மைமிகும் சிறப்புகள் உடையவராம்
சிறப்பான நூல்கள்பல தந்தவராம்!

எத்தனையோ சிறப்புக்கள் உண்டிவர்க்கு
எடுத்துரைத்தல் எளிதல்ல எந்தனுக்கு!
முத்தனைய பெயருக்கு உரியவராம்
மூதாட்டியாய் வாழ்ந்த எலன் ஜி. ஒயிட்!

—பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அம்மையாரின் கருத்துக்கள்! | XII |
| 1. | எனது முதலாம் தரிசனம்! | 1 |
| 2. | அடுத்து வந்த தரிசனங்கள்! | 35 |
| 3. | முத்திரிக்கப்படுதல்! | 41 |
| 4. | தமது மக்களின்மீது தேவனின் அன்பு! | 45 |
| 5. | வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுதல்! | 49 |
| 6. | திறக்கப்பட்ட—மூடப்பட்ட கதவு! | 51 |
| 7. | நமது விசுவாசத்தின் பரீட்சை! | 57 |
| 8. | சிறுமந்தைக்கு...! | 61 |
| 9. | கடைசி வாதைகளும் நியாயத்தீர்ப்பும்! | 67 |
| 10. | இரண்டாயிரத்து முந்நூறு நாட்களின் முடிவு! | 71 |
| 11. | இக்கட்டுக்காலத்தில் நமக்கு முன்னர் வைக்கப்பட்டுள்ள கடமை! | 75 |
| 12. | சூழ்ச்சி நிறைந்த கதவுத் தட்டொலிகள்! | 79 |
| 13. | தூதுவர்கள்! | 83 |
| 14. | மிருகத்தின் முத்திரை! | 87 |
| 15. | குருடனுக்கு குருடன் வழிகாட்டுதல்! | 93 |
| 16. | முடிவிற்கான ஆயத்தம்! | 95 |
| 17. | ஜெபமும் விசுவாசமும்! | 99 |
| 18. | அறுவடைக் காலம்! | 103 |
| 19. | திருமதி எலன் ஜி. ஒயிட் அவர்களது சொப்பனங்கள்! | 109 |
| 20. | வில்லியம் மில்லரது கனவு! | 113 |
| 21. | ஒரு விளக்கம்! | 117 |
| 22. | சுவிசேஷ ஒழுங்கு! | 131 |
| 23. | சபையின் தொல்லைகள்! | 141 |
| 24. | சபையின் நம்பிக்கை! | 145 |
| 25. | கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தஞ்செய்தல்! | 149 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 26. | சமுதாய ஜெபக்கூட்டங்களில் உத்தமமாய் இருத்தல்! | 153 |
| 27. | அனுபவம் இல்லாதவர்களுக்கு...! | 159 |
| 28. | சுயத்தை வெறுத்தல்! | 163 |
| 29. | அவபக்தி! | 165 |
| 30. | போலியான மேய்ப்பர்கள்! | 167 |
| 31. | மனிதனுக்கு தேவனுடைய ஈவு! | 171 |
| 32. | சாத்தானின் விழுகை! | 175 |
| 33. | மனிதனின் விழுகை! | 179 |
| 34. | இரட்சிப்பின் திட்டம்! | 183 |
| 35. | கிறிஸ்துவின் முதலாம் வருகை! | 187 |
| 36. | கிறிஸ்துவின் ஊழியம்! | 193 |
| 37. | மறுரூபமாகுதல்! | 197 |
| 38. | கிறிஸ்துவானவர் காட்டிக்கொடுக்கப்படுதல்! | 201 |
| 39. | கிறிஸ்துவை நியாயம்விசாரித்தல்! | 207 |
| 40. | கிறிஸ்துவின் சிலுவை மரணம்! | 215 |
| 41. | கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்! | 223 |
| 42. | கிறிஸ்துவின் பரமேறுதல்! | 235 |
| 43. | கிறிஸ்துவின் சீடர்கள்! | 237 |
| 44. | ஸ்தேவானின் மரணம்! | 243 |
| 45. | சவுலின் மனந்திரும்புதல்! | 247 |
| 46. | பவுலை கொலைசெய்வதற்கு யூதர்கள் தீர்மானம் செய்கிறார்கள்! | 251 |
| 47. | பவுல் எருசலேமிற்குச் செல்லுகிறார்! | 257 |
| 48. | மாபெரும் மருளவிழுகை! | 263 |
| 49. | அக்கிரமத்தின் இரகசியம்! | 267 |
| 50. | மரணமே! கடுந்துயர நித்தியவாழ்வு அல்ல! | 273 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 51. | சீர்திருத்தம்! | 279 |
| 52. | சபையும் உலகமும் ஒன்றானது! | 285 |
| 53. | வில்லியம் மில்லர்! | 289 |
| 54. | முதலாம் தூதுனின் தூது! | 293 |
| 55. | இரண்டாம் தூதனின் தூது! | 299 |
| 56. | அட்வெந்து இயக்கம் விளக்கப்பட்டது! | 303 |
| 57. | மற்றுமொரு விளக்கம்! | 309 |
| 58. | ஆசரிப்புக்கூடாரம்! | 315 |
| 59. | மூன்றாம் தூதனின் தூது! | 319 |
| 60. | ஒரு உறுதியான மேடை! | 325 |
| 61. | ஆவிமார்க்கம்! | 329 |
| 62. | பேராசை! | 335 |
| 63. | அசைக்கப்படுதல்! | 339 |
| 64. | பாபிலோனின் பாவங்கள்! | 345 |
| 65. | உரத்த சத்தம்! | 349 |
| 66. | மூன்றாம் தூது முடிவடைந்தது! | 353 |
| 67. | இக்கட்டுக்காலம்! | 357 |
| 68. | பரிசுத்தவான்களுக்குக் கிடைக்கும் விடுதலை! | 361 |
| 69. | பரிசுத்தவான்களுக்குக் கிடைக்கும் பரிசு! | 365 |
| 70. | பூமி பாழாய்க்கிடத்தல்! | 367 |
| 71. | இரண்டாம் உயிர்த்தெழுதல்! | 371 |
| 72. | இரண்டாம் மரணம்! | 375 |

# திருமதி எலன் ஜி. ஒயிட் அம்மையாரின் கிறிஸ்தவ அனுபவமும் கருத்துக்களும்

எனது இனிய நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, எனது அனுபவத்தையும் கருத்துக்களையும் ஒரு சிறிய தொகுப்பிலே கொடுக்க இசைந்துள்ளேன்; இது தேவனையே சார்ந்துள்ள—தாழ்மையான அவரின் பிள்ளைகளை ஊக்குவித்து, பலப்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

எனது பதினோறாம் வயதிலே நான் மனந்திரும்பி, பன்னிரண்டாம் வயதில் ஞானஸ்நானம்பெற்று மெதடிஸ்ட் சபையில் சேர்ந்தேன்.[1] எனது பதிமூன்றாம் வயதில் திரு. வில்லியம் மில்லர் அவர்கள், மெயின் எனப்பட்ட இடத்திலுள்ள போர்ட்லாண்டிலே தமது இரண்டாவது பகுதித் தொடர் பிரசங்கங்களைச் செய்துகொண்டிருந்தார். அதைக் கேட்ட நான், இயேசுவைக் காண ஆயத்தமில்லாமலிருந்த எனது பரிசுத்தமற்ற நிலையை உணர்ந்தேன். ஜெபத்துக்காக முன்வரும்படி சபை அங்கத்தினருக்கும், பாவிகளுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டபோது, தேவனுடைய இராஜ்யத்திற்கு நான் தகுதியாவதற்கு, எனக்காக மகத்துவமான வேலைகள் செய்யப்படவேண்டுமென்று கொடுக்கப்பட்ட முதல் தருணத்தைப்பற்றிக்கொண்டு முன்சென்றேன். என் ஆத்துமா அந்தப் பூரணமான இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள தாகத்தோடிருந்தது; ஆனால், அதை எப்படிப் பெற்றுக்கொள்வதென்று அறியாதிருந்தேன்.

1842–ம் ஆண்டில் போர்ட்லாண்ட் எனப்பட்ட இடத்தில் நடந்த இரண்டாம் வருகையைப்பற்றிய தொடர்பிரசங்கங்களுக்குத் தொடர்ந்து சென்றுவந்தேன். இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்பதை முற்றிலுமாக நம்பினேன். முற்றிலுமாக தேவ சித்தத்திற்கு இணங்கி, முழுமையான இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ள நினைத்து, அதற்காக பசியோடும் தாகத்தோடும் இருந்தேன். உலகத்தின் செல்வங்கள் அனைத்தையும் கொடுத்தாலும வாங்கமுடியாத அந்த விலைமதிப்புமிக்க இரட்சிப்பு என்னும் கருவூலத்தை அடைவதற்காக, இரவும்பகலும் கடும் முயற்சிசெய்தேன். இந்த ஆசீர்வாதத்திற்காக தேவனிடத்தில் ஜெபிக்கக் நான் குனிந்தபோது, பொது ஜெபக்கூட்டத்திலே போய் ஜெபிக்கவேண்டியது எனது கடமை

1 திருமதி எலன் ஜி. ஒயிட் அம்மையார் அவர்கள் 1827-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி மெயின் என்ற இடத்திலுள்ள ஹோம்ஷயரின் பிறந்தார்கள்.

என்பது என் முன்னால் வைக்கப்பட்டது. இதுவரையிலும் எந்தக் கூட்டத்திலும் வாய்விட்டு ஜெபித்தறியாத நான், ஜெபிக்க முயற்சிசெய்வேனாகில், குழப்பமடைந்துவிடுவேன் என்று பயந்து, அந்தக் கடமையினின்று பின்வாங்கினேன். ஒவ்வொருமுறையும் நான் அந்தரங்கமாக தேவனிடம் ஜெபிக்கும்போது, நான் நிறைவேற்றாத இந்தக் கடமையும் ஜெபத்தை நிறுத்தும்வரை உணர்த்தப்படும்; இந்த மாதிரியான சமயங்களில் நான் மனம் சோர்ந்து தீவிரமான மனக்கசப்பிற்கு ஆளானேன்.

ஒளிக்கதிர் ஊடே செல்லமுடியாத—மேகம்போன்ற இருட்டு என்னைச்சூழ்ந்ததுபோன்ற மனநிலையில் நான் மூன்று வாரங்களாக இருந்தேன். அந்தச் சமயத்தில் நான் கண்ட இரு கனவுகள் எனக்கு நம்பிக்கை ஒளியை ஊட்டுவதாக இருந்தன.[1] அதன்பின்பு, என் உள்ளத்தைத் திறந்து எனதருமை அன்னையிடம் எல்லாவற்றையும் கூறினேன். அதைக்கேட்ட அவர்கள், நான் கைவிடப்படவில்லை என்று (இன்னும் நம்பிக்கையுள்ளது என்று) கூறி, அப்பொழுது இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்கும் குழுவிலுள்ள மக்களுக்கு போர்ட்லாண்டிலே பிரசங்கஞ்செய்துகொண்டிருந்த சகோதரர் ஸ்டாக்மேன் என்பவரை போய்ப்பர்க்கும்படி என்னிடம் கூறினார்கள். அவர் பக்தி நிறைந்த—கிறிஸ்துவிற்கு மிகவும் பிரியமான ஊழியனாக இருந்தபடியால், எனக்கு அவரிடம் அளவற்ற நம்பிக்கை இருந்தது. வீடு திரும்பிய பின்னர், தேவனிடத்தில் மறுபடியும் ஜெபத்தில் தரித்திருந்து, இயேசுவின் அன்பான புன்முறுவல் எனக்குக் கிடைக்குமானால் எதையும் செய்யவும் சகிக்கவும் ஆயத்தமாக இருப்பேன் என்று வாக்குறுதி கொடுத்தேன். பொதுக்கூட்டத்தில் ஜெபிக்கவேண்டும் என்ற அதே கடமையானது மறுபடியும் என் முன்னால் வைக்கப்பட்டது. அன்று மாலைவேளையில் நடைபெற்ற பொது ஜெபக்கூட்டத்தில் மற்றவர்களோடு ஜெபிப்பதற்காக நடுக்கத்தோடு முழங்காற்படியிட்டேன். இரண்டு மூன்று போர் ஜெபித்தபின், நானும் வாயைத்திறந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். தேவனுடைய வாக்குதத்தங்கள் அநேக முத்துக்களைப்போன்றதெனவும், அவைகளைக் கேட்டால்மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடியும் என்பதையும் அறிந்தேன். நான் ஜெபித்தபோது, இதுவரையிலும் நான் அனுபவித்த பாரமும் ஆத்தும துயரமும் என்னைவிட்டு நீங்கிற்கு. மென்மையான பனியைப்போன்று தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்மீது அமர்ந்தன. நான் பெற்ற அந்த அனுபவத்திற்காக தேவனுக்கு மகிமையைச் செலுத்தினேன். மேலும், அதுபோன்ற அனுபவத்திற்காக ஏங்கினேன். தேவனின் பூரணத்துவம் என்னில் நிறையும்மட்டாக என்னால் மனநிறைவாக இருக்கமுடியவில்லை.

[1] இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரிசனமானது 19-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இயேசுவின் விவரிக்கமுடியாத அன்பானது என் ஆத்துமாவை நிரப்பிற்று. மகிமை அலைஅலையாக என்மீது உருண்டோடி, கடைசியில் என் உடல் விறைத்துப்போயிற்று. இயேசுவையும் அவரது மகிமையையும் தவிர, எல்லாம் எனக்கு மறைக்கப்பட்டுப்போயிற்று. என்னைச் சுற்றிலும் நடந்த காரியங்கள் என்ன என்று எதுவுமே எனக்குத் தெரியாது.

உடலும் மனமும் ஒன்றிய அதே நிலையில் வெகுநேரம் இருந்தேன்; என்னைச் சுற்றிலுமிருப்பவை என்ன என்பதை உணர ஆரம்பித்தபோது, எல்லாமே மாறிக்காணப்பட்டன. எல்லாமே தேவனைப் புன்முறுவலோடு துதிப்பதுபோன்று, மகிமையாயும் புதிதாயும் காணப்பட்டன; எனவே, இயேசுவைப்பற்றியே எங்கும் சொல்ல விருப்பமாயிருந்தேன். அதன்பின் ஆறுமாதங்களுக்கு எந்தவித இருளின் மேகமும் என் உள்ளத்தில் கடந்துசெல்லவில்லை (என் மனம் தெளிவாக இருந்தது). என் ஆத்துமா ஒவ்வொரு நாளும் விலையுயர்ந்த இரட்சிப்பின் பானத்தை அருந்திக்கொண்டிருந்தது; எனவே, இயேசுவை நேசிப்பவர்கள் அவரது வருகையையும் விரும்புவார்கள் என்றெண்ணி, எனது வகுப்பின் கூட்டத்திற்குச் சென்று, இயேசு எனக்கு என்ன செய்தார் என்றும், அவர் மீண்டும் வரப்போகிறார் என்ற செய்தி எப்படி என்னை முழுமையான பேரானந்தத்திற்கு ஆளாக்கியது என்றும் கூறினேன். வகுப்புத் தலைவர் குறுக்கிட்டு, "மெதடிஸத்தின் மூலமே" என்று கூறினார்; ஆனால் நானோ கிறிஸ்துவும் அவரது அதிசீக்கிர வருகையின் நம்பிக்கையுமே என்னை விடுதலையாக்கினதால், நான் மெதடிஸத்திற்கு மகிமையைச் செலுத்தமுடியாது என்று கூறினேன்.

எனது தகப்பனாரின் குடும்பத்தில் அநேகர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முழுமையான நம்பிக்கையுடையவர்கள். இந்த மகிமையான மூலஉபதேசத்திற்கு நாங்கள் சாட்சிகளாக விளங்கியதால், எங்கள் குடும்பத்தில் ஏழுபேர் ஒரே சமயத்தில் மெதடிஸ்ட் சபையைவிட்டுத் தள்ளப்பட்டோம். ஏசாயா 66:5–ல் சொல்லப்பட்ட "என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" என்ற தீர்க்கதரிசியின் வார்த்தைகள் மிக அருமையாக இருந்தன.

அந்த வேளையிலிருந்து டிசம்பர் 1844–வரை, எனது அருமை அட்வெந்து நண்பர்களைப்போலவே நானும் சந்தோஷங்கள், உபத்திரவங்கள், ஏமாற்றங்கள் முதலியவற்றை அனுபவித்தேன். இந்தச் சமயத்திலே அட்வெந்து சகோதரி ஒருவரைச் சந்தித்தேன். காலைநேரம்

அனைவரும் குடும்பமாக ஜெபத்தில் தரித்திருந்தோம். எந்தவித பரபரப்பும் இல்லாத ஒரு நேரம்; மொத்தம் ஐந்துபேர் இருந்தோம். அனைவருமே பெண்கள். ஜெபித்துக்கொண்டிருந்தபோது, தேவனுடைய வல்லமையானது, நான் ஒருக்காலும் உணர்ந்திராத அளவு என்மேல் அமர்ந்தது. நான் தேவனின் மகிமையான தரிசனத்தால் போர்த்தப்பட்டேன். நான் பூமிக்கு மேலாக உயர்ந்து உயர்ந்து செல்வதுபோன்று தெரிந்தது. பரிசுத்தப் பட்டணத்தைநோக்கி அட்வெந்து மக்கள் பிரயாணஞ்செய்கிறது எனக்குக் காட்டப்பட்டது; அதுவே எனது முதலாம் தரிசனம்! ★

# 1

# எனது முதலாம் தரிசனம்!

அந்த பரிசுத்தப் பட்டணத்தை நோக்கி அட்வெந்து மக்கள் பிரயாணஞ்செய்வதையும், தங்கள் ஆண்டவர் கலியாணத்திலிருந்து திரும்பி வருவதை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு கிடைக்கும் வெகுமதிகளைக்குறித்துமட்டுமல்ல, தேவன் எனக்கு வெளிப்படுத்திய காரியங்களையும் சுருக்கமாகத் தொகுத்தளிப்பது எனது கடமையாகும். பரிசுத்தவான்கள் கடுந்துன்பங்களை கடந்து செல்லவேண்டியதிருக்கிறது. என்றாலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைள நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். அந்தப் பரம கானானிலிருந்து ஒரு நல்ல செய்தியையும் சில திராட்சைப் பழங்களையும் கொண்டுவர பிரயாசப்பட்டேன்; ஆனால், காலேபின்மீதும் யோசுவாவின்மீதும் சபையார் கல்லெறிய முனைந்ததைப்போல், அதற்காக என்னையும் கல்லெறிவார்கள். (எண். 14:10). ஆனால் கிறிஸ்துவிற்குள் எனக்கன்பான சகோதர—சகோதரிகளே, அது ஒரு நல்ல நாடு என்று அறிவிக்கிறேன்; ஏறிப்போய் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவோம் (1)

நான் குடும்ப ஜெபத்திலே தரித்திருக்கும்போது, பரிசுத்த ஆவி என்மேல் அமர்ந்தது. இந்த இருண்ட உலகத்திற்குமேலே, உயர்ந்து உயர்ந்து செல்வதுபோன்று தெரிந்தது. உலகத்தை நோக்கி அட்வெந்து மக்களைக் காண எனது கண்களைத் திருப்பினேன். ஆனால் அவர்களைக் காணமுடியவில்லை. அந்தச் சமயத்தில், “மறுபடியும் பார், சற்று உயரப் பார்” என்று ஒரு சத்தம் கேட்டது; என் கண்களை உயர்த்தியபோது, உலகத்திற்கு மேலாக போடப்பட்ட நீண்ட—குறுகிய ஒரு பாதையைக்கண்டேன். அந்தப் பாதையின் வெகுதெலைவிலுள்ள எல்லையில் அமைந்திருந்த பட்டணத்தை நோக்கி அட்வெந்து மக்கள் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பாதையின் துவக்கத்திலே, அந்த மக்களுக்குப் பின்னாக பிரகாசமான வெளிச்சம் வைக்கப்பட்டிருந்தது. அந்த வெளிச்சமே “நடுராத்திரியின்

சத்தம்" என்பதை ஒரு தூதன் எனக்குக் கூறினான். அந்த வெளிச்சமானது, பாதை முழுவதும் பிரகாசித்து, அவர்களது பாதங்கள் இடறாதபடி அந்தப் பாதையிலே ஒளியை நிரப்பிற்று. பட்டணத்திற்கு அழைத்துச்செல்லுவதற்காக, முன்னாகச் செல்லும் இயேசுவின்மேல் தங்கள் கண்களைப் பதித்திருந்தபோது அவர்கள் பத்திரமாக இருந்தார்கள். வெகுசீக்கிரத்தில் பட்டணத்தை அடைந்துவிடுவோம் என்று எதிர்பார்த்தவர்களில் சிலர் களைப்படைந்து பட்டணம் இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறதே என்று கூறினார்கள். அப்பொழுது இயேசு தமது மகிமையான வலது புயத்தை உயர்த்தி, அவர்களைத் திடப்படுத்தினார். அந்த வலது புயத்திலிருந்து வந்த பிரகாசம் அட்வெந்து கூட்டத்தின்மேல்படிய, அவர்கள் "அல்லேலூயா" என்று சத்தமிட்டார்கள். மற்றவர்கள் தங்களுக்குப் பின்னாக வந்த வெளிச்சத்தை துணிகரமாக மறுத்து, இவ்வளவு தூரம் தங்களை நடத்தியது தேவனல்ல என்று கூறினார்கள்; எனவே, அவர்களுக்குப் பின்னாக வந்த வெளிச்சம் மறைந்து, அவர்களுடைய பாதங்களை முழு இருட்டிலே விட்டுவிட்டது. அவர்கள் அடையாளத்தையும் இயேசுவையும் இழந்து—இடறி—அந்தப்பாதையினின்று—இருண்ட துன்மார்க்க மான உலகத்திலே விழுந்தார்கள். சீக்கிரத்தில் தண்ணீர்களின் பேரிரைச்சல் போன்று தேவனுடைய சத்தம் கேட்டது. அது இயேசுவின் வருகையின் நாளையும் மணி நேரத்தையும் குறிப்பிட்டுக் கூறியது. உயிரோடிருந்த 1,44,000 பரிசுத்தவான்கள் அதை அறிந்து, அந்தச் சத்தத்தை விளங்கிக் கொண்டார்கள்; ஆனால், துன்மார்க்கரோ அதை இடியும் பூமியதிர்ச்சியும் என நினைத்தார்கள். தேவன் அந்த நேரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னபோது, எங்கள்மீது பரிசுத்த ஆவியை ஊற்றினார். மோசே சீனாய் மலையினின்று இறங்கியபோது, தேவ மகிமையால் அவன் முகம் பிரகாசித்ததுபோன்று எங்கள் முகங்களும் பிரகாசித்தன. (2)

அந்த 1,44,000 பேர்களும் முத்திரையிடப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் நெற்றிகளிலே, "தேவன், புதிய எருசலேம்" என்று காணப்பட்டது; மேலும், இயேசுவின் புதிய நாமம் பொருந்தியுள்ள மகிமையுள்ள நட்சத்திரமும் காணப்பட்டது. எங்களது சந்தோஷமான—பரிசுத்தமான நிலையைக் கண்ட துன்மார்க்கர் கடுங்கோபங்கொண்டு, எங்களைச் சிறையிலே தள்ளுவதற்காக மூர்க்கமாகப் பாய்ந்து, எங்கள்மீது கைபோட வந்தார்கள். அந்தச் சமயத்திலே, தேவனுடைய நாமத்திலே எங்கள் கைகளை நீட்ட, அவர்கள் உதவியற்றுத் தரையிலே விழுந்தார்கள். ஒருவர் கால்களை ஒருவர் கழுவி, பரிசுத்த முத்தத்தினால் சகோதரர்களை வாழ்த்திய எங்களை, தேவன் நேசிக்கிறார் என்பதை சாத்தானின் கூட்டம் அப்பொழுதுதான் அறிந்து, எங்கள் கால்களில் விழுந்து பணிந்தார்கள். (3)

சீக்கிரத்தில் எங்கள் பார்வை கிழக்குத் திசையை நோக்கிச் சென்றது. மனிதனின் கையிலே பாதியளவுள்ள ஒரு சிறிய கருமையான மேகம் காணப்பட்டது. அது "மனுஷகுமாரனின் அடையாளம்" என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். அந்த மேகத்தை பரிசுத்தமான அமைதியோடு உற்று நோக்கினோம். அது நெருங்கி வரவர மகிமையினாலும் பிரகாசத்தினாலும் நிறைந்து, ஒரு மாபெரும் வெண்மேகமாக மாறும்வரை மேலும் அதிக மகிமையோடு காணப்பட்டது. அந்த வெண்மேகத்தின் அடிப்பகுதி நெருப்பைப்போன்று காணப்பட்டது. மேகத்திற்குமேலே ஒரு வானவில் காணப்பட்டது. அந்த மேகத்தைச் சுற்றிலும் பதினாயிரம் தேவதூதர்கள் மகத்தான இனிய கீதம் ஒன்றை இசைத்தார்கள். அந்த மேகத்தில் மனுஷகுமாரன் வீற்றிருந்தார். அவரது தலையின் மயிர் வெண்மையாய் சுருண்டு தோளின்மீது கிடந்தது. அவரது சிரசின்மீது ஏராளமான கிரீடங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவரது பாதங்கள் அக்கினியைப்போன்று தோற்றமளித்தன. அவரது வலது கரத்திலே கருக்குள்ள ஒரு அரிவாள் இருந்தது. அவரது இடது கரத்திலே ஒரு வெள்ளி எக்காளம் இருந்தது. அக்கினிப் பிரகாசம்போன்ற அவரது கண்கள் தமது பிள்ளைகளை ஊடுருவி பார்த்தன. பின்பு எல்லா முகங்களும் வெளுத்தது. தேவனால் தள்ளப்பட்டவர்களின் முகங்கள் இருளடைந்தன. பிறகு நாங்களெல்லோரும், "யார் நிலைநிற்கக்கூடும் எனது அங்கி கறையற்றதா?" என்று சத்தமிட்டோம். அப்பொழுது தூதர்கள் தங்கள் பாடலை நிறுத்த, சற்றுநேரம் அச்சமூட்டக்கூடிய அமைதி நிலவிற்று. அப்பொழுது இயேசு: "கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமே நிலைநிற்கக்கூடும்; என் கிருபை உங்களுக்குப் போதும்" என்று கூறினார்; உடனே எங்கள் முகங்கள் பிரகாசமடைந்து, ஒவ்வொரு இருதயமும் மகிழ்ச்சியால் நிறைந்தது; தூதர்கள் தங்கள் தொனியை உயர்த்திப்பாடிட, அந்த மேகமானது மேலும் பூமியைநோக்கி நெருங்கிவந்தது. (4)

அக்கினி ஜுவாலையால் சூழப்பட்ட மேகங்களில் இயேசு இறங்கினபோது, இயேசுவின் வெள்ளி எக்காளம் தொனித்தது. பரிசுத்தவான்களின் கல்லறையை உற்றுநோக்கினவராக, தமது கண்களையும் கைகளையும் வானத்திற்கு நேராக உயர்த்தி: "பூமியின் தூளில் நித்திரை செய்பவர்களே, விழித்தெழும்புங்கள்! விழித்தெழும்புங்கள்! விழித்தெழும்புங்கள்!" என்று உரத்தசத்தமிட்டார். அப்பொழுது ஒரு மாபெரும் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. கல்லறைகள் திறந்து, சாவாமையைத் தரித்தவர்களாக மரித்தோர் வெளியே வந்தார்கள். மரணத்தினால் தங்களிடமிருந்து பிரிக்கப்பட்ட நண்பர்களைக் கண்டமாத்திரத்தில் 1,44,000 பேர்களும் "அல்லேலூயா" என்று ஆர்ப்பரித்தார்கள். அந்தக்

கணத்திலேதானே நாங்கள் அனைவரும் மறுரூபமடைந்து, மேகத்தின்மீது ஆகாயத்தில் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்பட்டோம். (5)

நாங்கள் ஒன்றாக மேகத்தினுள் பிரவேசித்து, உயர உயர ஏழு நாட்கள் மேலே ஏறிச்சென்று கண்ணாடிக் கடலை அடைந்தோம். அப்பொழுது இயேசு கிரீடங்களைக் கொண்டுவந்து, தமது சொந்த வலது கரத்தினாலே எங்களது தலைகளில் அணிவித்தார். வெற்றிக் குருத்தோலைகளையும் பொற்சுரமண்டலங்களையும் எங்களது கரங்களிலே கொடுத்தார். இங்கே கண்ணாடிக் கடலிலே பூரண சதுரத்திலே 1,44,000 பேர்களும் நின்றார்கள். சிலரது கிரீடங்கள் மிகப் பிரகாசமானதாகவும், சிலரது கிரீடங்களின் பிரகாசம் சற்று குறைவானதாகவும் காட்சியளித்தன. சில கிரீடங்களில் ஏராளமான நட்சத்திரங்களும், சிலவற்றில் வெகு சில நட்சத்திரங்களும் பதிக்கப்பட்டிருந்தன; ஆனால், அனைவரும் அந்தக் கிரீடங்களை அணிந்து மனநிறைவுடன் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் மகிமைபொருந்திய வெண்மையான சால்வையால் தோளிலிருந்து பாதம்வரை உடுத்துவிக்கப்பட்டிருந்தார்கள். தேவதூதர்கள் எங்களைச் சூழ்ந்துவர நாங்கள் அணிவகுத்து கண்ணாடிக் கடலைக் கடந்து, பட்டணத்தின் வாசலை அடைந்தோம். இயேசு தமது வல்லமையான மகிமைபொருந்திய புயத்தை உயர்த்தி, ஜொலிக்கின்ற கீல்களின்மீது அமைந்திருந்த பிரகாசமுள்ள முத்து வாசலை விரிவாகத் திறந்துவைத்து, எங்களை நோக்கி: "உங்களது அங்கிகளை எனது இரத்தத்திலே தோய்த்து, எனது சத்தியத்தின் மீதுகொண்ட வாஞ்சையினால் உறுதியாய் நின்றபடியால் உள்ளே பிரவேசியுங்கள்" என்றார். நாங்கள் பட்டணத்தின்மேல் முழு உரிமையும் கொண்டவர்களாக முன்னேறிச்சென்றோம். (6)

பட்டணத்திலே ஜீவவிருட்சத்தையும் தேவனுடைய சிங்காசனத்தையும் கண்டோம். அந்தச் சிங்காசனத்திலிருந்து சுத்தமான தண்ணீருள்ள ஒரு நதி புறப்பட்டுவந்தது. அதன் இரு கரைகளிலும் ஜீவவிருட்சம் காணப்பட்டது. நதியின் இரு கரைகளிலும் உள்ள ஜீவவிருட்சத்தின் அடிமரம் படிகம் போன்ற சுத்தப் பொன்னால் ஆகியிருந்தது. முதலில் நான் இரு மரங்களைக் கண்டதாக நினைத்தேன். மறுபடியும் நான் பார்த்தபோது, இரு மரங்களும் மேலே ஒரே மரமாக இணைந்திருப்பதைக் கண்டேன்; இதுவே ஜீவநதியின் இரு கரைகளிலும் வளர்ந்திருக்கும் ஜீவவிருட்சமாகும். நாங்கள் நிற்கும் இடம்வரை அதன் கிளைகள் படிந்து பரவியிருந்தன. பொன்னும் வெள்ளியும் கலந்து உருக்கிவிட்ட வண்ணத்திலே ஜீவக்கனி மிகவும் மகிமையாக காணப்பட்டது. (7)

நாங்கள் அனைவரும் அந்த இடத்தின் மகிமையைக் காண்பதற்காக ஜீவவிருட்சத்தினடியில் சென்று அமர்ந்தோம். தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த, மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, கல்லறையில் வைக்கப்பட்டிருந்த ஃபிட்ச், ஸ்டாக்மேன் என்பவர்கள், தாங்கள் மரித்து கல்லறையில் நித்திரைசெய்யும்போது, என்னென்ன காரியங்கள் நடைபெற்றன என்று நாங்கள் இருக்கும் இடம்வரை வந்து எங்களிடம் கேட்டார்கள். நாங்கள் அனுபவித்த உபத்திரவங்களையெல்லாம் யோசித்துப் பார்த்தோம். எங்களைச் சுற்றியுள்ள அந்த மாபெரும் நித்திய மகிமையைக் காணும்போது, நாங்கள் அனுபவித்த உபத்திரவங்கள் மிகவும் அற்பமாகத் தோன்றின. எங்களால் எதுவுமே சொல்ல முடியாமல் கடைசியில் "அல்லேலூயா, மோட்சத்தை எவ்வளவு இலகுவாகப் பெற்றுக்கொண்டோம்!" என்று உரத்தசத்தமிட்டோம்; மேலும், எங்களது மகிமையான கீத வாத்தியங்களை இசைத்து, மோட்ச மண்டலம் முழுவதும் எதிரொலிக்கச்செய்தோம். (8)

இயேசுவின் தலைமையிலே புறப்பட்டு, அந்தப் பட்டணத்திலிருந்து பிரமாண்டமாக ஒரு மலையின்மீது வந்து இறங்கினோம். அந்த மலை இயேசுவைத் தாங்கமுடியாமல், இரண்டாகப் பிளந்து, அங்கு ஒரு பெரிய சமவெளியை உண்டாக்கிற்று; பின்னர் நாங்கள் கண்களை உயர்த்தி, பன்னிரண்டு அஸ்திபாரங்கள்மேல் அமர்ந்து, பக்கத்திற்கு மூன்றாக பன்னிரண்டு வாசல்களையுடைய, ஒவ்வொரு வாசலிலும் ஒரு தூதன் நின்றிருந்த அந்த மாபெரும் பட்டணத்தைப் பார்த்தோம். "பட்டணம், மகா பெரிய பட்டணம்! இறங்கிவருகின்றது; பரலோகத்தின் தேவனிடமிருந்து இறங்கிவருகின்றது" என்று உரத்தசத்தமிட்டோம். நாங்கள் நின்ற இடத்திலே, அந்தப் பட்டணம் வந்து அமர்ந்தது. பிறகு பட்டணத்திற்கு வெளியேயுள்ள மகிமையானவைகளைப் பார்க்க ஆரம்பித்தோம். அநேக அழகான வீடுகளைப் பார்த்தேன். தோற்றத்தில் வெள்ளிபோல் காட்சியளித்த அந்த வீடுகள், முத்துக்கள் பதித்த நான்கு தூண்களின்மீது அமைக்கப்பட்டிருந்தன. காண்பதற்கு அவைகள் பேரெழிலுடன் தோற்றமளித்தன. இவைகளே பரிசுத்தவான்கள் தங்கி வாழப்போகின்ற குடியிருப்புகளாகும். ஒவ்வொரு வீட்டிலும் பொன்னலான அலமாரி ஒன்று காணப்பட்டது. பின்னும் நான் பார்த்தபோது, அந்தப் பரிசுத்தவான்கள் தங்கள் ஜொலிக்கும் பொற்கிரீடங்களை எடுத்து, வீடுகளுக்குசென்று, அலமாரியில் வைத்துவிட்டு, வெளியே வயல்களுக்குச்சென்று, நிலத்திலே வேலைசெய்தார்கள். நாம் இங்குள்ள பூமியில் வேலைசெய்வதுபோல் அல்ல; அல்லவே அல்ல. ஒவ்வொருவர் தலைக்குமேலும் மகிமையான ஒளி காணப்பட்டது; அவர்கள் தொடர்ந்து சத்தமிட்டு, தேவனுக்குத் துதிசெலுத்திக்கொண்டேயிருந்தார்கள். (9)

மேலும், மற்றொரு தோட்டம் நிறைய பலவிதமான பூக்களை நான் கண்டேன். அந்தப் பூக்களைப் பறிக்கும்போது, “இவைகள் ஒருக்காலும் வாடிப்போவதில்லை” என்று சத்தமிட்டேன். பின்னர் நீண்ட புல் நிறைந்த வயல்வெளியைக் கண்டேன். அது மிகவும் இரம்மியமாக இருந்தது. அது பசுமையான பச்சை நிறமுள்ளதாக இருந்தது. இயேசு இராஜாவின் மகிமைக்கு அந்தப் பச்சைப் புற்கள் அசைந்தாடும்போது, பொன்னும் வெள்ளியும் மின்னுவதுபோன்று காணப்பட்டது. எல்லா மிருகங்களும் நிறைந்த ஒரு வயல்வெளியைக் கண்டேன். அதிலே சிங்கம், ஆட்டுக்குட்டி, சிறுத்தை, ஓநாய் போன்ற மிருகங்கள் ஒருமித்து சமாதானமாக மேய்ந்தன. அவைகளின் மத்தியில் நாங்கள் கடந்துசென்றோம். அவைகள் அமைதியாக எங்களைப் பின்தொடர்ந்துவந்தன; பின்னர் நாங்கள் ஒரு காட்டினுள் சென்றோம். நாம் பார்க்கும் இருண்ட காடுகளைப்போலில்லை, இல்லவே இல்லை. அவை வெளிச்சமாகவும் மகிமையாகவும் காணப்பட்டன. மரங்களின் கிளைகள் அங்குமிங்கும் காற்றில் ஆடியசைந்தன. “இந்த வனாந்திரத்தில் பத்திரமாகத் தங்கி, இந்தக் காடுகளில் நித்திரைசெய்வோம்” என்று உரத்தசத்தமிட்டோம். இந்தக் காடுகளின் வழியாக சீயோன் மலைக்குச் சென்றோம். (10)

இவ்வாறு பிரயாணஞ்செய்யும்போது, ஒரு கூட்டத்தார் அந்த இடத்தின் மகிமையை உற்றுக்கவனிப்பதைக் கண்டோம். அவர்களது உடைகளின் கரையோரத்தில் சிவப்பு நிறத்தை நான் கவனித்தேன். அவர்களது கிரீடங்கள் பிரகாசமாயிருந்தன. அவர்களது உடைகள் தூய வெண்மையாய் இருந்தன. அவர்களை வாழ்த்தியபின்னர் இயேசுவை நோக்கி: “அவர்கள் யாரென்று” வினவினேன். அவர்கள் அவருக்காக இரத்தசாட்சிகளாக மரித்தவர்கள் என்று அவர் கூறினார். அவர்களோடு எண்ணிக்கைக்கு அடங்காத பாலகர்கூட்டம் காணப்பட்டது. அவர்களது ஆடைகளின் ஓரங்களிலும் சிவப்பு நிறம் காணப்பட்டது. சீயோன் மலை எங்களுக்கு முன்பாக இருந்தது. அந்த மலையின்மீது மகிமையான ஆலயம் காணப்பட்டது. அதைச் சுற்றிலும் ஏழு மலைகள் காணப்பட்டன. அந்த மலைகளில் ரோஜாப்பூக்களும் லீலிபூக்களும் நிறைந்திருந்தன. பாலகர்கள் மலைகளில் ஏறியோ அல்லது அவர்கள் விரும்பினால் தங்களது செட்டைகளை உபயோகித்துப் பறந்தோ, மலையின் உச்சிக்குச்சென்று, ஒருக்காலும் வாடாத பூக்களைப் பறித்தார்கள். ஆலயத்தை அலங்கரிக்கும்படி அதைச் சுற்றிலும் வேலிச்செடிகளும், தேவதாரு மரங்களும், ஊசிஇலை மரங்களும், நறுமண மலர்ச்செடிகளும், மாதுளை மரங்களும், எண்ணெய் மரங்களும் இருந்தன. காலத்திற்கேற்ற பலனைத்தரும் அத்திப் பழங்களால் அத்திமரம் தாழ்ந்து கவிந்திருந்தது. இந்த மரங்கள் அந்த இடத்தை மகிமையால் நிறையச்செய்தன. நாங்கள் அந்தப் பரிசுத்த ஆலயத்திற்குள் நுழையவிருக்கும்போது, இயேசு தமது இனிய

குரலை உயர்த்தி: “1,44,000 பேர்கள்மாத்திரமே இங்கு பிரவேசிக்கலாம்” என்றார். உடனே, நாங்கள்: “அல்லேலூயா” என்று உரத்த சத்தமிட்டோம். (11)

படிகம்போன்று அழகிய முத்துக்கள் பதித்த, மகிமைநிறைந்த பொன்னாலாகிய ஏழு தூண்கள் அந்த ஆலயத்தைத் தாங்கி நின்றன. நான் அங்கு பார்த்த அதிசயமான காரியங்களை என்னால் விவரிக்க இயலாது. ஆ! நான் மட்டும் அந்தப் பரம கானானின் மொழியை அறிந்திருப்பேனானால், ஒரு சிறிதளவாவது அந்த மேலான உலகின் மேன்மையைப்பற்றிக் கூறியிருக்க முடியும்; மேலும், அந்த 1,44,000 பேர்களுடைய பெயர்களும் அங்கு கற்பலகைகளிலே பொன்னால் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த ஆலயத்தின் மகிமையைக் கண்டபின்னர் அங்கிருந்து வெளியே வந்தோம். இயேசு எங்களை அங்கேயே விட்டுவிட்டு பட்டணத்திற்குள் சென்றார். மறுபடியும் அவரது இனிய சத்தத்தை நாங்கள் கேட்டோம். “என் ஜனங்களே வாருங்கள், மிகுந்த உபத்திரவங்களையும் பாடுகளையும் அனுபவித்து வெளி வந்திருக்கிறீர்கள்; என் சித்தத்தைச் செய்தீர்கள்; எனக்காகத் துன்பம் அனுபவித்தீர்கள்; இரவு விருந்துண்ண வாருங்கள். நான் இடைகட்டிக் கொண்டு, உங்களை உபசரிப்பேன்” என்று கூறினார். நாங்கள் “அல்லேலூ யா, மகிமை” என்று முழக்கமிட்டவாறு பட்டணத்திற்குள் பிரவேசித்தோம். அங்கு சுத்த வெள்ளியாலான ஒரு மேசையை நான் கண்டேன். அது அநேக மைல்கள் தூரம் நீண்டு இருந்தது; ஆனாலும், எங்களது கண்கள் அந்தத் தொலைவுவரை பார்க்கும் சத்தியையுடையதாக இருந்தன. ஜீவவிருட்சத்தின் கனி, மன்னா, வாதுமை, அத்தி, மாதுளை, திராட்சை மற்றும் அநேக கனி வகைகளையும் நான் கண்டேன். அந்தக் கனிகளை உண்ண அனுமதிக்கும்படி இயேசுவிடம் கேட்டபோது: “இப்பொழுதல்ல, இந்த நாட்டின் கனிகளை உண்டவர்கள் பூமிக்கு ஒருக்காலும் திரும்ப முடியாது; ஆனால், இன்னும் சிறிதுகாலந்தான்; நீ அதுவரை உண்மையாக இருப்பாயானால், ஜீவவிருட்சத்தின் கனியையும் உண்டு ஜீவ ஊற்றின் நீரையும் அருந்தலாம்” என்றார்; “மேலும், என்னை நோக்கி: நீ உலகிற்கு மறுபடியும் சென்று, நான் இங்கு உனக்கு வெளிப்படுத்தியவைகளை மற்றவர்களுக்கும் கூறு” என்றார். பின்பு ஒரு தூதன் இருண்ட இந்த உலகில் மென்மையாக என்னைத் கொண்டுவந்து விட்டான். சில சமயங்கள் நான் இங்கு வாழவே முடியாதென நினைக்கின்றேன். இவ்வுலகில் எல்லாமே வறண்டு காணப்படுகின்றன. மேலான நாட்டைக் கண்ட நான் எனது தனிமையை இங்கு நன்றாக உணர்கிறேன். ஆ! எனக்கு புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், பறந்துபோய் இளைப்பாறுவேன்! (12)

இந்தத் தரிசனத்திலிருந்து வெளிவந்த பிறகு, எல்லாமே வித்தியாசமாகக் காணப்பட்டன. நான் பார்ப்பதெல்லாம் இருள் சூழ்ந்து காணப்பட்டது. ஆ! இந்த உலகம் எனக்கு எவ்வளவு இருண்டு காட்சியளிக்கின்றது. இங்கே இருப்பதை அறிந்த நான் அந்த மேலான நாட்டைக்குறித்து ஏங்கி அழுதேன். நான் மேலான நாட்டைப் பார்த்ததால், அது இந்த உலகத்தை எனக்கு மோசமானதாக்கிவிட்டது. இந்தத் தரிசனத்தை போர்ட்லாண்டிலுள்ள என்னைச்சேர்ந்த சிறு குழுவினருக்குக் கூறினேன். அதற்கு அவர்கள், முற்றிலுமாக இது கடவுளிடமிருந்து வந்த தூது என்று நம்பினார்கள். அது ஒரு வல்லமையான நேரம்; நித்தியத்தைப்பற்றிய பயபக்தி எங்கள்மீது அமர்ந்தது. ஏறக்குறைய ஒரு வாரத்தில் மறுபடியும் ஒரு தரிசனம் எனக்குக் காட்டப்பட்டது. அதிலே நான் அனுபவிக்கப்போகிற பாடுகளைக்குறித்தும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை மற்றவர்களுக்கு நான் சொல்லவேண்டுமென்றும், அதனால் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டு, மனச்சஞ்சலம் அடையவேண்டியதிருக்கும் என்றும் கூறப்பட்டது; மேலும், தூதன் என்னை நோக்கி: “தேவனுடைய கிருபை உனக்குப்போதும்; அவர் உன்னைத் தாங்குவார்” என்று கூறினான். (13)

இந்தத் தரிசனத்தைவிட்டு வெளிவந்த நான் மிகுந்த துன்பங்களுக்குள்ளானேன். நான் மிகவும் சுகவீனமாயிருந்தேன். எனக்கு அப்பொழுது பதினேழு வயது மாத்திரமே. அநேகர் தங்களை உயர்த்தி, அதன்மூலமாக விழுந்துபோனதை நான் அறிவேன்; நானும் எந்த விதத்திலாவது என்னை உயர்த்துவேனானால், தேவன் என்னைவிட்டு விலகிவிடுவார் என்பதையும், நானும் கைவிடப்படுவேன் என்பதையும் அறிவேன். இந்தப் பாரத்தை வேறு யார்மீதாவது, வைத்துவிடும்படியாக மன்றாடி ஜெபித்தேன்; என்னால் சுமக்கமுடியாததுபோல் எனக்குத் தோன்றியது. நீண்ட நேரம் முகங்குப்புற விழுந்துகிடந்தேன். எனக்குக் கிடைத்த வெளிச்சமோ: “உனக்கு நான் தெரிவித்ததை நீ மற்றவர்களுக்குச் சொல்” என்பதே. (14)

எனது அடுத்த தரிசனத்திலே, நான் தேவனிடம்: “அவர் எனக்குக் காட்டியவைகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமானால், நான் பெருமையடைந்து என்னை உயர்த்தாதபடிக்கு, அவர் என்னைக் காக்க வேண்டுமென்று” மன்றாடி ஜெபித்தேன். என்னுடைய ஜெபம் கேட்கப்பட்டதென்றும், நான் என்னை உயர்த்தி பெருமை கொள்ளும் ஆபத்து வருமானால், அவர் கை என்மீது வைக்கப்படுமென்றும், நான் வியாதிப்படுவேன் என்றும் கூறினார்; மேலும், தூதன் என்னை நோக்கி: “கொடுக்கப்பட்ட இந்தத் தூதை மற்றவர்களுக்கு உண்மையும் உத்தமுமாய்

எடுத்துக்கூறி, முடிவுமட்டும் சகித்தால், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து ஜீவ நதியின் நீரையும் அருந்தலாம்" என்று கூறினான். (15)

இந்தத் தரிசனங்களெல்லாம் மனோவசியத்தின் விளைவே என்ற செய்தி வெகு சீக்கிரத்தில் பரவலாயிற்று. அட்வெந்து மார்க்கத்தைச் சேர்ந்த அநேகர் இந்தச் செய்தியை நம்பவும் மற்றவர்களுக்குப் பரப்பவும் ஆயத்தமாயிருந்தார்கள். மனோவசியத்தில் பிரபலமான ஒரு வைத்திய நிபுணர், என்னுடைய கருத்துக்களெல்லாம் மனோவசியத்தால் ஏற்பட்டவையே என்றும், மனோவசிய முயற்சியினால் நான் எளிதாக கவர்ந்திழுக்கப்படக்கூடியவள் என்றும், அவர் என்னை மனோவசியத்திற்குள்ளாக்கி தரிசனத்தையும் தரமுடியும் என்றும் கூறினார். நான் அவரை நோக்கி: "இந்த மனோவசியக் கலை சாத்தானிடமிருந்தும், பாதாளத்திடமிருந்தும் வந்தது; அதைப் பின்பற்றுகிறவர்களும் அதைத் தொடர்ந்து, அங்கேயேபோய்ச் சேருவார்கள் என்று ஆண்டவர் எனக்குத் தரிசனத்தில் காட்டினார்" என்று கூறினேன். முடியுமானால், என்னையும் வசியப்படுத்த முயற்சிக்கலாம் என்று அவருக்கு அனுமதியும் கொடுத்தேன். பலவிதமான முயற்சிகளைக் கையாடி, அரைமணி நேரத்திற்கும் மேலாகப் பிரயாசப்பட்டு, பின்னர் தோல்வியுற்று அந்த முயற்சியினைக் கைவிட்டார். அந்த மனோவசியத்தின் செல்வாக்கு என்னை எந்தவிதத்திலும் பாதிக்காதபடி தேவனிடம் நான் கொண்ட விசுவாசத்தால், அந்தத் தீய சக்தியை எதிர்க்க என்னால் முடிந்தது. (16)

பொது ஜெபக்கூட்டங்களில் எனக்கு தரிசனங் கொடுக்கப்பட்டால் அது ஏதோ உணர்ச்சிகளின் கிளர்ச்சிகளால் ஏற்பட்டதென்றார்கள்; அல்லது யாரோ மனோவசியம் செய்துவிட்டார்கள் என்றும் பேசப்பட்டது. தேவனைத்தவிர மற்ற எந்தக் கண்ணும் காணாத—எந்தக் காதும் கோட்காத காட்டினுள் சென்று, தனித்து ஜெபிக்க ஆரம்பித்தேன். அங்கும் தேவன் எனக்கு சில சமயங்களில் தரிசனம் கொடுத்தார். எந்த மனித சக்தியின் செல்வாக்கும் இல்லாத காட்டிலுங்கூட, தேவன் எனக்குத் தம்மை வெளிப்படுத்தினாரென்று மற்றவர்களிடம் கூறி மகிழ்ந்தேன்; ஆனால், அதைப்பற்றியுங்கூட, நானே என்னை வசியப்படுத்திக்கொண்டதாகச் சிலர் கூறினார்கள். தேவனை உண்மையாகத்தேடி, அவரது வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ளத் தனித்து மன்றாடி, அவரது இரட்சிப்பை சுதந்தரித்துக்கொள்வதற்காக முயற்சிசெய்யும்போதுங்கூட, தீய—ஆத்துமாவை அழிக்கக்கூடிய—மனோவசிய சக்திக்கு கட்டுப்பட்டவள் என்று குற்றங்கண்டுபிடிக்குமளவிற்கு வந்துவிட்டார்கள் என்று எண்ணினேன். நமது இரக்கமுள்ள தகப்பனிடம் "அப்பத்தைக்கேட்டு", கடைசியில் "கல்லையும்" "தேளையுமா" பெற்றுக்கொள்வோம்? இந்தக் காரியங்கள் எனது ஆவியை முறித்து,

நம்பிக்கையற்றுப்போகுமளவிற்கு என் ஆத்துமாவை கடுந்துயரத்தில் ஆழ்த்தியது; மேலும், பரிசுத்த ஆவி இல்லை என்றும், தேவனுடைய பரிசுத்த மனிதர்களின் அனுபவங்களெல்லாமே மனோவசியம் அல்லது சாத்தானுடைய வஞ்சகத்தின் பலனே என்றும் நான் நம்பவேண்டும் என்று கூறப்பட்டது. (17)

இந்தச் சமயத்திலே, மெயின் எனப்பட்ட இடத்திலே கொள்கைவெறி அதிகமாக இருந்தது. சிலர் வேலை ஒன்றுமே செய்யாமல் விலகியிருந்து, அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத வர்களையும், மற்றும் தாங்கள் ஏற்றுக்கொண்ட—மதக் கடமைகள் என்று வைத்துக்கொண்டவைகளைப் பின்பற்றாதவர்களையும் சபையைவிட்டு விலக்கினார்கள். தேவன் அவர்கள் செய்யும் இந்தத் தவறுகளையெல்லாம் தரிசனத்தின்மூலம் வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு அறிவிக்கும்படிச் சொன்னார்; ஆனால், அவர்களில் அநேகர் இந்தத் தூதை முற்றிலுமாகத் தள்ளிவிட்டு, நான் உலகத்தோடு ஒத்துப்போவதாகக் குற்றஞ்சாட்டினார்கள்; ஆனால், பெயரளவிற்கு அட்வெந்துக்களாக இருந்தவர்களோவெனில், நான் கொள்கை வெறியுடையவள் என்று வேறுவகையாகக் குற்றஞ் சாட்டினார்கள். நான் அவர்களைத் திருத்துவதற்குப் பாடுபடும்போது, நானே இந்தக் கொள்கைவெறிக் கூட்டத்திற்கு தலைவர் என்ற முறையில் என்மேல் தவறாகவும் அவதூறாகவும் பழிசுமத்தினார்கள். இயேசுவின் வருகையின் நேரமானது, அடிக்கடி மாறுபட்ட நேரங்களாகக் குறிக்கப்பட்டு, சகோதரர்களிடம் அழுத்தமாகக் கூறப்பட்டது. ஆண்டவரோ, குறிக்கப்பட்ட இந்த நேரங்களெல்லாம் கடந்துபோகும் என்று கூறினார்; ஏனெனில், கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர், இக்கட்டுக்காலம் வரவேண்டும்; மேலும், அவரது வருகையின் நாள் குறிக்கப்பட்டு, அது கடந்துசெல்லும்போது, தேவனுடைய மக்கள் விசுவாசத்தில் குன்றிப்போவார்கள் என்றும் ஆண்டவர் எனக்குக் காட்டினார்; இதன் காரணமாக, "எனது ஆண்டவன் வர நாள் செல்லும்" என்று சொல்லிய அந்த பொல்லாத வேலைக்காரனோடு நானும் வைத்தெண்ணப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டேன். (18)

இந்த எல்லாக் காரியங்களும் என்மேல் பாரமாக அழுத்தியபடியால், அந்தக் குழப்பத்திலே, சில சமயங்களில் என் சொந்த அனுபவத்தையே சந்தேகிக்கும் அளவிற்குச் சோதிக்கப்பட்டேன். ஒருநாள் காலையில், குடும்ப ஜெபத்திலே, தேவனுடைய வல்லமை என்மீது அமர ஆரம்பித்தது. இது மனோவசியந்தான் என்ற எண்ணம் என் மனதிலே பளிச்சென்று தோன்றி, நான் அந்த வல்லமையை எதிர்த்தேன். உடனே நான் ஊமையாகி, சில கணங்கள் என்னைச் சுற்றிலும் இருந்தவைகளை அறியக்கூடாத நிலையில் கிடந்தேன்.

பின்னர், தேவனுடைய வல்லமையைச் சந்தேகித்த என் பாவத்தையும், அந்தப் பாவத்திற்காகவே நான் ஊமையாக்கப்பட்டேன் என்பதையும், இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் என் நாவு கட்டவிழ்க்கப்படும் என்பதையும் கண்டேன். எனக்கு முன்பாக ஒரு அட்டை காண்பிக்கப்பட்டது; அந்த அட்டையில் பொன்னால் பொறிக்கப்பட்ட எழுத்துக்களில் வேதத்திலே இருக்கும் ஐம்பது வசனங்கள் காட்டப்பட்டன; எந்த அதிகாரத்தில் எந்த வசனம் காணப்படுகின்றது என்றும் குறிக்கப்பட்டிருந்தது. தரிசனத்தினின்று விடுபட்ட உடனே, கைசாடைகாட்டி, கற்பலகை ஒன்றைக் கொண்டுவரும்படிச்செய்து நான் ஊமையென்றும், நான் கண்டவைகளை எழுதிக்காட்ட, பெரிய வேதாகமம் ஒன்று வேண்டுமென்றும் எழுதினேன். வேதாகமத்தைப் புரட்டி, அட்டையில் கண்ட வசனங்களையெல்லாம் படித்தேன். (அந்த 50 வசனங்களும் இந்த அதிகாரத்தின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன). அன்று முழுவதும் என்னால் பேசமுடியவில்லை. அடுத்த நாள் விடியற்காலையிலே என் ஆத்துமா மகிழ்ச்சியினால் நிரம்பிவழிந்தது. சத்தமிட்டு தேவனைப் போற்றித் துதிக்கும் வண்ணம் என் நாவு கட்டவிழ்க்கப்பட்டது. அதற்குப் பின்னர் மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் சரி, நான் ஒருபோதும் தேவனுடைய வல்லமையை எதிர்க்கத் துணியவில்லை; சந்தேகிக்கவுமில்லை. (19)

1846–ல் மாசாகுசெட்ஸில், ∴பேர்கேவன் என்ற இடத்தில் இருந்தபோது, என்னுடன் வழக்கமாக வரும் என் உடன்பிறந்த சதோதரியும், வேறு ஒரு சதோதரியும், ஒரு சகோதரனும் நானுமாகச் சேர்ந்து, வெஸ்ட் தீவு எனப்பட்ட இடத்திலுள்ள ஒரு குடும்பத்தைச் சந்திப்பதற்கு படகிலே புறப்பட்டோம். நாங்கள் புறப்பட்ட நேரம் ஏறக்குறைய இரவாக இருந்தது; சிறிது தூரந்தான் சென்றிருப்போம். அதற்குள் திடீரென்று ஒரு புயல் வீச ஆரம்பித்தது. இடியோசையோடு மின்னலுங்கூடி, எங்கள்மீது மழை கொட்ட ஆரம்பித்தது. கடவுள் காப்பாற்றாவிட்டால், நிச்சயம் நாங்கள் அழிந்துபோவோம் என்று எண்ணினோம். (20)

நான் படகிலேயே முழங்காற்படியிட்டு, எங்களைக் காப்பாற்றும்படியாக தேவனிடத்தில் அழுது ஜெபித்தேன். புரண்டுவரும் அலைகளுக்கு மேலாக—படகிற்கு மேலாக—தண்ணீர் எங்கள்மேல் புரண்டு செல்லும்போது நான் தரிசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டேன். என்னுடைய வேலை அப்பொழுதுதான் ஆரம்பமானபடியால், நாங்கள் அழிந்துபோவதைவிட, சமுத்திரத்தின் ஒவ்வொரு சொட்டுத் தண்ணீரும் வற்றிப்போகலாம் என்பதாகக் காட்டப்பட்டது. தரிசனத்திலிருந்து வெளிவந்தபோது, பயமெல்லாம் நீங்கியது. நாங்கள் தேவனை துதித்துப் பாடினோம். எங்களது சிறிய

படகு மிதக்கும் பெத்தேலாக மாறியது. “அட்வென்ட் ஹெரால்டு” என்ற பத்திரிகையின் பதிப்பாசிரியர், என்னுடைய தரிசங்களைப்பற்றி: “இவை மனோவசிய நடவடிக்கைகளின் விளைவே” என்று கூறினார். இப்படிப்பட்ட படகிலிருந்த ஆபத்தான சமயத்தில் மனோவசியத்திற்கு ஏது சந்தர்ப்பம் என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். என்னுடன் வந்த சகோதரருக்கு படகை வழிக்குக் கொண்டுவருவதற்குள் போதும்போதுமென்றாகிவிட்டது. அவர் நங்கூரம் பாய்ச்ச விரும்பினார்; ஆனால், நங்கூரமோ இழுத்துக் கொண்டுசென்றது. எங்களது சிறிய படகு அலைகளில் மோதி காற்றினால் அலைக்கழிக்கப்பட்டது. படகின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கங்கூட பார்க்கக்கூடாதபடி ஒரே இருட்டாக இருந்தது. நங்கூரம் போட்டபின், என்னுடன் வந்த சகோதரர் உதவிக்காகக் கூப்பிட்டார். அந்தத் தீவில் இரண்டே வீடுகள்தான் உண்டு. நாங்கள் ஒரு வீட்டின் பக்கத்தில் போய்ச்சேர்ந்தோம்; ஆனால், நாங்கள் சந்திக்க எண்ணிய வீடு அதுவல்ல. ஒரு சிறுமியைத்தவிர அந்தக் குடும்பத்திலுள்ள மற்றவர்கள் அனைவரும் நித்திரைக்குச் சென்றுவிட்டார்கள். ஆண்டவர் அருளால் சமுத்திரத்தின்மேல் இருந்துவந்த சத்தத்தை அந்தச் சிறுமி கேட்டாள். அவளது தந்தை ஒரு சிறு படகில் வந்து எங்களை ஏற்றி கரை சேர்த்தார். தேவன் செய்த அந்த மாபெரும் நன்மையை எண்ணியெண்ணி ஜெபத்திலும், துதியிலும் நன்றிகூறுதலிலும் அந்த இரவைக் கழித்தோம். (21)

(ஒயிட் அம்மையார் அவர்கள் ஆண்டவருடைய வல்லமையைக்குறித்துச் சந்தேகங்கொண்டதற்காக ஏறக்குறைய 24 மணிநேரம் ஊமையாக—பேசமுடியாமல் இருந்தபொழுது கொடுக்கப்பட்ட தரிசனத்தில் கண்ட வசனங்கள்தான் பின்வருவன):

லூக்கா 1:20 இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய் என்றான்.

யோவான் 16:15 பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

அப்போஸ்தலர் 2:4 அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

அப்போஸ்தலர் 4:29 இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள்

பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து,

அப்போஸ்தலர் 4:30 உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள்.

அப்போஸ்தலர் 4:31 அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.

மத்தேயு 7:6 பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

மத்தேயு 7:7 கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;

மத்தேயு 7:8 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

மத்தேயு 7:9 உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?

மத்தேயு 7:10 மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

மத்தேயு 7:11 ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

மத்தேயு 7:12 ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

மத்தேயு 7:15 கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.

மத்தேயு 24:24 ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

கொலோசெயர் 2:6 ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு,

கொலோசெயர் 2:7 நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.

கொலோசெயர் 2:8 லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதே யல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.

எபிரெயர் 10:35 ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.

எபிரெயர் 10:36 நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.

எபிரெயர் 10:37 வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்.

எபிரெயர் 10:38 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.

எபிரெயர் 10:39 நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களா யிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.

எபிரெயர் 4:10 ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.

எபிரெயர் 4:11 ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

எபிரெயர் 4:12 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும்

வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

பிலிப்பியர் 1:6 நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

பிலிப்பியர் 1:27 நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளா திருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷ த்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்.

பிலிப்பியர் 1:28 நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது; இதுவும் தேவனுடைய செயலே.

பிலிப்பியர் 1:29 ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.

பிலிப்பியர் 2:13 ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.

பிலிப்பியர் 2:14 நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,

பிலிப்பியர் 2:15 கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

எபேசியர் 6:10 கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

எபேசியர் 6:11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

எபேசியர் 6:13 ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:14 சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;

எபேசியர் 6:15 சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;

எபேசியர் 6:16 பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

எபேசியர் 6:17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

எபேசியர் 4:32 ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

1பேதுரு 1:22 ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;

யோவான் 13:34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

யோவான் 13:35 நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

2கொரிந்தியர் 13:5 நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.

1கொரிந்தியர் 3:10 எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம்போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்.

1கொரிந்தியர் 3:11 போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.

1கொரிந்தியர் 3:12 ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால்,

1கொரிந்தியர் 3:13 அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.

அப்போஸ்தலர் 20:28 ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.

அப்போஸ்தலர் 20:29 நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

அப்போஸ்தலர் 20:30 உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.

கலாத்தியர் 1:6 உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷ

த்திற்கு திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்.

கலாத்தியர் 1:7 வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

கலாத்தியர் 1:8 நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

கலாத்தியர் 1:9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

லூக்கா 12:3 ஆதலால், நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்.

லூக்கா 12:4 என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

லூக்கா 12:5 நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்தபின்பு நரகத்திலேதள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:6 இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை.

லூக்கா 12:7 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

லூக்கா 4:10 ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும்,

லூக்கா 4:11 உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும், எழுதியிருக்கிறது

என்று சொன்னான்.

2கொரிந்தியர் 4:6 இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.

2கொரிந்தியர் 4:7 இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

2கொரிந்தியர் 4:8 நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;

2கொரிந்தியர் 4:9 துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை.

2கொரிந்தியர் 4:17 மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

2கொரிந்தியர் 4:18 ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

1பேதுரு 1:5 கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1பேதுரு 1:6 இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

1பேதுரு 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

1தெசலோனிக்கேயர் 3:8 நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்.

மாற்கு 16:17 விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன:

என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;

மாற்கு 16:18 சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

யோவான் 9:20 தாய்தகப்பன்மார் பிரதியுத்தரமாக: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்.

யோவான் 9:21 இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான் என்றார்கள்.

யோவான் 9:22 அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள்.

யோவான் 9:23 அதினிமித்தம்: இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய்தகப்பன்மார் சொன்னார்கள்.

யோவான் 9:24 ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்.

யோவான் 9:25 அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்.

யோவான் 9:26 அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.

யோவான் 9:27 அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.

யோவான் 14:13 நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.

யோவான் 14:14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

யோவான் 14:15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

யோவான் 15:7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

யோவான் 15:8 நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

மாற்கு 1:23 அவர்களுடைய ஜெபஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான்.

மாற்கு 1:24 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்.

மாற்கு 1:25 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார்.

ரோமர் 8:38 மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

ரோமர் 8:39 உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

வெளிப்படுத்தல் 3:7 பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது:

வெளிப்படுத்தல் 3:8 உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல்,

என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

வெளிப்படுத்தல் 3:9 இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்.

வெளிப்படுத்தல் 3:10 என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.

வெளிப்படுத்தல் 3:11 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

வெளிப்படுத்தல் 3:12 ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

வெளிப்படுத்தல் 3:13 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

வெளிப்படுத்தல் 14:4 ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.

வெளிப்படுத்தல் 14:5 இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

பிலிப்பியர் 3:20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

யாக்கோபு 5:7 இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை

அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.

யாக்கோபு 5:8 நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

பிலிப்பியர் 3:21 அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

வெளிப்படுத்தல் 14:14 பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.

வெளிப்படுத்தல் 14:15 அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

வெளிப்படுத்தல் 14:16 அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது.

வெளிப்படுத்தல் 14:17 பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.

எபிரெயர் 4:9 ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.

வெளிப்படுத்தல் 21:2 யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

வெளிப்படுத்தல் 14:1 பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.

வெளிப்படுத்தல் 22:1 பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்.

வெளிப்படுத்தல் 22:2 நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.

வெளிப்படுத்தல் 22:3 இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.

வெளிப்படுத்தல் 22:4 அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.
வெளிப்படுத்தல் 22:5 அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.
எபேசியர் 6:11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

எபேசியர் 6:13 ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:14 சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்;

எபேசியர் 6:15 சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;

எபேசியர் 6:16 பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

எபேசியர் 6:17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.

எபேசியர் 4:32 ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

1பேதுரு 1:22 ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;

யோவான் 13:34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

யோவான் 13:35 நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

2கொரிந்தியர் 13:5 நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.

1கொரிந்தியர் 3:10 எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாச்சாரியைப்போல அஸ்திபாரம்போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்.

1கொரிந்தியர் 3:11 போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறெ அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.

1கொரிந்தியர் 3:12 ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி,

விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால்,

1கொரிந்தியர் 3:13 அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.

அப். நட. 20:28 ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.

அப். நட. 20:29 நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

அப். நட. 20:30 உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.

கலாத்தியர் 1:6 உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்;

கலாத்தியர் 1:7 வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

கலாத்தியர் 1:8 நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷ த்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூ தனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

கலாத்தியர் 1:9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

லூக்கா 12:3 ஆதலால், நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்.

லூக்கா 12:4 என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்:

சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

லூக்கா 12:5 நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்தபின்பு நரகத்திலேதள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:6 இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை.

லூக்கா 12:7 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

லூக்கா 4:10 ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும்,

லூக்கா 4:11 உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும், எழுதியிருக்கிறது என்று சொன்னான்.

2கொரிந்தியர் 4:6 இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.

2கொரிந்தியர் 4:7 இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

2கொரிந்தியர் 4:8 நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;

2கொரிந்தியர் 4:9 துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.

2கொரிந்தியர் 4:17 மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

2கொரிந்தியர் 4:18 ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

1பேதுரு 1:5 கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1பேதுரு 1:6 இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

1பேதுரு 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

1தெசலோனிக்கேயர் 3:8 நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்.

மாற்கு 16:17 விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷை களைப் பேசுவார்கள்;

மாற்கு 16:18 சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

யோவான் 9:20 தாய்தகப்பன்மார் பிரதியுத்தரமாக: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்.

யோவான் 9:21 இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான் என்றார்கள்.

யோவான் 9:22 அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு

செய்திருந்தார்கள்.

யோவான் 9:23 அதினிமித்தம்: இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய்தகப்பன்மார் சொன்னார்கள்.

யோவான் 9:24 ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்.

யோவான் 9:25 அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்.

யோவான் 9:26 அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.

யோவான் 9:27 அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.

யோவான் 14:13 நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.

யோவான் 14:14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

யோவான் 14:15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

யோவான் 15:7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

யோவான் 15:8 நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

மாற்கு 1:23 அவர்களுடைய ஜெபஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான்.

மாற்கு 1:24 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்.

மாற்கு 1:25 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ

என்று அதை அதட்டினார்.

ரோமர் 8:38 மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

ரோமர் 8:39 உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

வெளிப்படுத்தல் 3:7 பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது;

வெளிப்படுத்தல் 3:8 உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

வெளிப்படுத்தல் 3:9 இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்.

வெளிப்படுத்தல் 3:10 என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.

வெளிப்படுத்தல் 3:11 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

வெளிப்படுத்தல் 3:12 ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய

என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

வெளிப்படுத்தல் 3:13 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

வெளிப்படுத்தல் 14:4 ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.

வெளிப்படுத்தல் 14:5 இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்.

பிலிப்பியர் 3:20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

யாக்கோபு 5:7 இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.

யாக்கோபு 5:8 நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

பிலிப்பியர் 3:21 அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார்.

வெளிப்படுத்தல் 14:14 பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.

வெளிப்படுத்தல் 14:15 அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால்

உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

வெளிப்படுத்தல் 14:16 அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது.

வெளிப்படுத்தல் 14:17 பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.

எபிரெயர் 4:9 ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.

வெளிப்படுத்தல் 21:2 யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.
வெளிப்படுத்தல் 14:1 பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.

வெளிப்படுத்தல் 22:1 பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்.

வெளிப்படுத்தல் 22:2 நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.

வெளிப்படுத்தல் 22:3 இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.

வெளிப்படுத்தல் 22:4 அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.

வெளிப்படுத்தல் 22:5 அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய

கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். ★

# 2

# அடுத்து வந்த தரிசனங்கள்!

மெயினில் டாப்ஷேம் என்ற இடத்தில் இருக்கும்பொழுது, 1847–ல், ஓர் ஓய்வுநாளில் சகோதரர் ஒருமித்துக் கூடியிருக்கையில், இந்தத் தரிசனம் எனக்குக் கொடுக்கப்பட்டது. (1)

வழக்கத்திற்கு மாறான ஒரு ஜெப ஆவி எங்களைப் பற்றியிருந்ததாக உணர்ந்தோம். ஜெபிக்கும்போது பரிசுத்தஆவி எங்கள்மீது ஊற்றப்பட்டது. நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம். வெகு சீக்கிரத்தில் பூமிக்கடுத்த காரியங்கள் எனக்கு மறைக்கப்பட்டு, தேவ மகிமையின் தரிசனத்தால் அணைக்கப்பட்டேன். ஒரு தூதன் வேகமாக என்னிடம் பறந்துவர நான் கண்டேன். அவன் என்னை இவ்வுலகினின்று பரிசுத்தப் பட்டணத்திற்கு வேகமாகத் தூக்கிச்சென்றான். நான் பட்டணத்திலே ஒரு ஆலயத்தைக்கண்டு அதனுள் சென்றேன். முதலாம் திரையை அடையுமுன்பாக, ஒரு வாசல் வழியாய் நான் கடந்துசென்றேன். பின்னர், அந்தத் திரை உயர்த்தப்பட்டு, நான் பரிசுத்தஸ்தலத்திற்குள் சென்றேன். அங்கு நான் ஒரு தூப பீடத்தையும் ஏழு விளக்குகள் அமைந்த ஒரு விளக்குத்தண்டையும், சமூகத்தப்பம் வைக்கப்பட்ட ஒரு மேசையையும் கண்டேன். பரிசுத்தஸ்தலத்தின் மகிமையைக் கண்டபின்னர், இயேசு இரண்டாம் திரையை உயர்த்தவே, நான் அதையும் கடந்துசென்று, மகா பரிசுத்தஸ்தலத்தை அடைந்தேன். (2)

மகா பரிசுத்தஸ்தலத்திலே நான் ஒரு உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டேன். அதன் மேற்புறமும் பக்கங்களும் சுத்தப்பொன்னாலாகியிருந்தது. உடன்படிக்கைப்பெட்டியின் இருமருங்கிலும் அழகிய கேருபீன்கள் பெட்டிக்கு மேலாக செட்டையை விரித்துநின்றன. கேருபீன்கள் ஒன்றுக்கொன்று எதிரில் நின்று தலைகுனிந்து காணப்பட்டன. இவ்விரு தூதர்களுக்கும் மத்தியில் ஒரு பொன் தூபகலசம் இருந்தது. தூதர்கள் நின்ற அந்தப் பெட்டிக்கு மேலாக, பிரகாசமான மகிமை அந்த இடத்தை முற்றிலுமாக நிறைத்திருந்தது. அந்த மகிமை, தேவன் வீற்றிருக்கும் சிங்காசனம்போல்

காணப்பட்டது. உடன்படிக்கைப்பெட்டியின் அருகில் இயேசு நின்றிருந்தார். பரிசுத்தவான்களின் ஜெபம் அவரை வந்தடையும்போது, தூபகலசத்திலுள்ள வாசனைத் திரவியம் புகைய ஆரம்பிக்கும். அவர்களது ஜெபங்களை அந்தத் தூபத்தோடு அவர் பிதாவின் சந்நிதியில் படைப்பார். பெட்டியினுள்ளே மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரம் இருந்தது: மேலும், ஆரோனின் தளிர்த்த கோலும் புத்தகம்போன்று மடக்கப்பட்ட கற்பலகைகளும் காணப்பட்டன. இயேசு அதைத் திறந்தபோது, அதில் தேவனுடைய விரலால் எழுதப்பட்ட பத்துக்கட்டளைகளைக் கண்டேன். ஒரு கற்பலகையில் நான்கு கட்டளைகளும், அடுத்ததில் ஆறும் காணப்பட்டன. முதற் கற்பலகையில் காணப்பட்ட நான்கு கட்டளைகளும் மற்றுமுள்ள ஆறைவிட அதிகமாகப் பிரகாசித்தன. நான்காம் கட்டளையான ஓய்வுநாள் கட்டளையோவென்றால், எல்லாவற்றையும்விட அதிகமாகப் பிரகாசித்தது. தேவனுடைய பரிசுத்த நாமத்தின் மகிமைக்காக தனித்து—பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டதே ஓய்வுநாளாகும். பரிசுத்த ஓய்வுநாள் கட்டளை மகிமையோடு காட்சியளித்தது. ஒரு ஒளிவட்டம்போன்ற மகிமை அதைச்சுற்றிப் பிரகாசித்தது. ஓய்வுநாள் கட்டளை சிலுவையில் அறைப்படவில்லை என்பதை நான் காண்டேன். அப்படி அறையப்பட்டிருந்தால், மற்ற ஒன்பது கட்டளைகளும் அந்த நிலையைத்தான் அடைந்திருக்கும். எல்லாக் கட்டளைகளையும் ஏன் நான்காம் கட்டளையையுங்கூட மீறுவதற்கும் நமக்கு உரிமை இருந்திருக்கும். அவர் ஒருபோதும் மாறாதவராயிருக்கிறபடியால், அவர் ஓய்வுநாளை மாற்றவில்லை என்பதை நான் கண்டேன்: ஆனால், “காலத்தையும் பிரமாணத்தையும் மாற்ற நினைப்பான்” என்றதின்படி, போப்பானவர் அதை வாரத்தின் ஏழாம் நாளிலிருந்து முதலாம் நாளுக்கு மாற்றினார். (3)

தேவன் ஏழாம் நாளை முதலாம் நாளுக்கு மாற்றியிருப்பாரானால், பரலோக ஆலயத்திலுள்ள மகா பரிசுத்தஸ்தலத்திலே உடன்படிக்கைப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் கற்பலகைகளிலும் ஓய்வுநாள் கட்டளையை மாற்றி: முதல் நாள் உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள் என்று எழுதியிருந்திருப்பார் என்பதைக் கண்டேன். ஆனால் “ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்” என்று தேவனுடைய விரலால் கற்பலகைகளில் எழுதப்பட்டு, சீனாய் மலையிலே மோசேயிடம் கொடுக்கப்பட்டதைப் போலவே இருந்ததைக் கண்டேன். பரிசுத்த ஓய்வுநாள், இஸ்ரவேல் புத்திரருக்கும் அவிசுவாசிகளுக்கும் பிரிவினைச் சுவராக இருக்கிறது—இருக்கப்போகிறது என்பதையும் நான் கண்டேன். இதுவே தேவனுடைய அருமையான—காத்திருக்கும் பரிசுத்தவான்களின் இருதயத்தை இணைக்கக்கூடிய ஒரே பெரிய கேள்வி. (4)

மேலும் ஓய்வுநாளை கவனித்து ஆசரிக்காத பிள்ளைகளும் தேவனுக்கு உண்டு என்பதை நான் கண்டேன்: அதைக்குறித்த கிடைத்த வெளிச்சத்தை அவர்கள் மறுக்கவில்லை. இக்கட்டுக்காலத்தின் ஆரம்பத்திலே பரிசுத்த ஆவியால் நிறையப்பட்டவர்களாய் புறப்பட்டுச் சென்று, ஓய்வுநாள் சத்தியத்தை அறிவித்தோம். ஓய்வுநாள் சத்தியத்தை மறுக்கமுடியாததால், மற்ற சபைகளும், அட்வெந்துக்கள் என்று பெயருக்காக வாழ்ந்தவர்களும் கோபமடைந்தார்கள்: ஆனால், இந்தச் சமயத்திலே தேவனால் அழைக்கப்பட்டவர்களோ எங்களுடன் இருப்பது உண்மையான சத்தியம் என்று அறிந்து, வெளியேறி எங்களோடு உபத்திரவத்தைச் சகித்தார்கள். பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் மற்றும் குழப்பங்கள் தேசத்தில் இருப்பதை நான் கண்டேன். துன்மார்க்கரோ எங்களால்தான் மேற்சொல்லிய தீங்குகள் அவர்கள்மேல் வந்தன என்று நினைத்து, கூடி ஆலோசித்து, எங்களை உலகத்தைவிட்டே தொலைத்துவிட்டால், இந்தத் தீங்குகளைத் தவிர்க்க முடியுமென்பதாக நினைத்தார்கள். (5)

இக்கட்டுக்காலத்திலே நாங்கள் அனைவரும் பட்டணங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் உயிர்தப்ப ஓடினோம். துன்மார்க்கரோ உருவிய வாளோடு எங்களது வீடுகளில் நுழைந்து, எங்களைப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் எங்களைக் கொன்றுபோடுவதற்காக வாட்களை உயர்த்தினார்கள்: ஆனால், அவைகள் முறிந்து, வைக்கோலைப்போல வலிமையற்றுக் கீழே விழுந்தன. பிறகு நாங்கள் விடுதலைக்காக இரவும் பகலும் அழுது மன்றாடினோம். எங்கள் அழுகையின் சத்தம் தேவ சமூகத்தை எட்டியது. சூரியன் மேலே வந்தது. சந்திரன் தன் நிலையிலே நின்றது. சிற்றாறுகள் தங்களது ஓட்டத்தை நிறுத்தின. இருண்ட—கனத்த மேகங்கள் வந்து ஒன்றோடொன்று மோதின: ஆனால், மகிமை தங்கிய ஒரே ஒரு தெளிவான இடம் காணப்பட்டது. அதினின்று தேவனுடைய சத்தம் அநேகம் தண்ணீர்களைப்போல் ஒலித்து, வானத்தையும் பூமியையும் அதிரச்செய்தது. ஆகாயமோவென்றால், திறந்துதிறந்து மூடிக் குமுறியது. மலைகள் காற்றினால் நாணல் அசைந்தாடுவதுபோல் ஆடி, அநேகம் பாறைகளை வீசி எறிந்தன. சமுத்திரம் கொதிக்கும் தண்ணீர்ப் பானையைப்போல் கொந்தளித்து, நிலத்தை நோக்கி கற்களை வீசியெறிந்தது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாளையும் மணிநேரத்தையும் அறிவித்தபோது, தேவன் தமது மக்களிடத்தில் கொண்ட நித்திய உடன்படிக்கையை எடுத்துரைத்தார். அவர் ஒரு வாக்கியத்தைக் கூறி, பின்னர் மௌனமாயிருக்க, அந்த வார்த்தைகளோவெனில், பூமியெங்கும் உருண்டோடின. தேவனுடைய

இஸ்ரவேலர் யேகோவாவின் வாயினின்று வந்த வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து, கண்களை மேல்நோக்கி உயர்த்தினர். யேகோவாவின் சத்தம் பூமியெங்கும் இடியோசைபோல் முழங்கியது. எங்கும் பயங்கரமான பக்தி நிலவியது. தேவன் கூறும் ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் பரிசுத்தவான்கள், "மகிமை, அல்லேலூயா" என்று ஆர்ப்பரித்தார்கள். தேவ மகிமையால் அவர்களது முகங்கள் பிரகாசித்தன. சீனாய் மலையினின்று இறங்கிவந்த மோசேயின் முகத்தைப்போன்று பரிசுத்தவான்களின் முகங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. அந்த மகிமையினால் துன்மார்க்கர் அவர்களை ஏறெடுத்தும் பார்க்கக்கூடாதிருந்தார்கள். தேவனுடைய பரிசுத்த நாளைக் கைக்கொண்டு, அவரை மகிமைப்படுத்தியவர்கள்மீது என்றும் நீங்காத, முடிவில்லாத ஆசீர்வாதம் கூறப்பட்டது: அப்பொழுது மிருகத்தின் மீதும் அதன் சொரூபத்தின்மீதும் கிடைத்த வெற்றியின் தொனி முழங்கியது.(6)

பிறகு தேசம் ஓய்வெடுக்கவேண்டிய யூபிலி ஆண்டு ஆரம்பித்தது. பக்தியுள்ள அடிமை தன்னைக் கட்டியுள்ள சங்கிலியை உதறிப்போட்டு, வெற்றியோடு எழுந்தான்: அவனுடைய துன்மார்க்கமான எஜமானோ குழப்பத்தில் ஆழ்ந்து செய்வதறியாது திகைத்தான்; ஏனென்றால், தேவனிடமிருந்து வந்த சத்தத்தை துன்மார்க்கர் விளங்கிக்கொள்ளக்கூடாதிருந்தார்கள். வெகு சீக்கிரத்திலே அந்தப் பெரிய வெண்மேகம் காணப்பட்டது. ஒருபோதும் கண்டிராதவண்ணம் மிக அழகாகக் காணப்பட்டது. அதன்மீது மனுஷகுமாரன் வீற்றிருந்தார். முதலிலே அந்த வெண்மேகத்தின்மீது இயேசுவை நாங்கள் காணவில்லை: ஆனால், அது பூமியை நெருங்கியபோது, அவரது அழகிய ரூபத்தைக் கண்டோம். முதலாவது காணப்பட்ட இந்த மேகம், வானத்தில் மனுஷகுமாரனது அடையாளமாக இருந்தது. மனுஷ குமாரனின் சத்தம் தூங்கும் பரிசுத்தவான்களை அழைத்தது. அவர்கள் மகிமையுள்ள சாவாமையைத் தரித்தவர்களாய் வெளியே வந்தார்கள். உயிருள்ள பரிசுத்தவான்களோ கணப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு, மேக இரதத்தில்—ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்! அது சுழன்று மேல்நோக்கிச் செல்லும்போது மிகவும் மகிமையாகக் காணப்பட்டது. அந்த இரதத்தின் இரு பக்கங்களிலும் செட்டைகள் இருந்தன. கீழே சக்கரங்கள் காணப்பட்டன. அந்த இரதம் உயர்ந்து செல்லும்போது, சக்கரங்கள் "பரிசுத்தர்" எனச் சத்தமிட்டன. செட்டைகளும் "பரிசுத்தர்" எனச் சத்தமிட்டன. மேகத்தைச்சுற்றிக் காணப்பட்ட பரிசுத்த தூதர்களின் கூட்டமும்: "மகா வல்லமையான கர்த்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" எனச் சத்தமிட்டன. மேகத்தில் சென்ற பரிசுத்த வான்கள்: மகிமை! அல்லேலூயா என்று

ஆர்ப்பரித்தனர். அந்த இரதம் மேலாக உயர்ந்து, பரிசுத்தப்பட்டணத்தை நோக்கிச் சென்றது. இயேசு அந்தப் பொன் நகரத்தின் வாசல்களைத் திறந்து, எங்களை உள்ளே அழைத்துச் சென்றார். "கற்பனைகளைக் கைக்கொண்டதி னிமித்தமாக" நாங்கள் உள்ளே வரவேற்கப்பட்டோம்: எனவே, "ஜீவவிருட்சத்தின்மேல் எங்களுக்கு அதிகாரம் இருந்தது." (7) ★

# 3

# முத்திரிக்கப்படுதல்!

பரிசுத்த ஓய்வுநாளின் துவக்க நேரத்திலே—1849—ம் ஆண்டு, ஜனவரி மாதம் ஐந்தாம் நாளிலே—கனக்டிகட் என்ற இடத்திலுள்ள ராக்கி ஹில்லில் உள்ள, சகோதரர் பெல்டன் என்பவரது வீட்டிலே ஜெபத்தில் தரித்திருந்தோம்: அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் எங்கள்மீது அமர்ந்தார். நான் தரிசனத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டு, மகா பரிசுத்தஸ்தலத்தை அடைந்து, அங்கே இஸ்ரவேலருக்காகத் தொடர்ந்து பரிந்துபேசுகின்ற இயேசுவைக் கண்டேன். அவரது உடையின் ஓரத்திலே ஒரு மணியும் ஒரு மாதுளங்கனியுமாக அடுத்தடுத்து தொங்கின. இரட்சிப்பிற்கோ அல்லது அழிவிற்கோ என்று ஒவ்வொருவருடைய காரியத்தையும் தீர்மானிக்குமட்டும் மகா பரிசுத்தஸ்தலத்தைவிட்டு இயேசு வெளியே வரமாட்டார் என்பதைக் கண்டேன். இயேசு மகா பரிசுத்தஸ்தலத்திலே தனது வேலையை முடித்து, தனது ஆசாரிய உடையைக் கழற்றிவைத்து, கோபாக்கினையின் உடைகளை அணியும்வரை, அவரது கோபாக்கினை துன்மார்க்கர்மீது வரக்கூடாதிருந்தது. பிதாவிற்கும் மனிதனுக்கும் நடுவாக இதுவரை இருந்துவந்த இயேசு, வெளியேறுகிறார். இனிமேலும் அமைதிகாக்க விரும்பாத பிதாவோவெனில் சத்தியத்தைத் தள்ளிப்போட்ட அனைவர்மேலும் தனது கோபாக்கினையை ஊற்றுகிறார். மேலும், ஜாதிகளின் கோபமும், தேவனின் கோபாக்கினையும், மரித்தோரை நியாயந்தீர்க்கும் வேளையாகிய ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்ற தனிப்பட்ட காரியங்கள் என்பதையும், மிகாவேல் இன்னும் எழும்பவில்லை என்பதையும், ஒருபோதும் கண்டிராத இக்கட்டுக்காலமும் இன்னும் ஆரம்பமாகவில்லை என்பதையும் கண்டேன். ஜாதிகள் கொந்தளிக்கிறார்கள்; பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே நமது பிரதான ஆசாரியர் தமது வேலையை முடித்து, அதைவிட்டு எழுந்து, தமது கோபாக்கினையின் ஆடைகளை அணிந்த பின்னரே, கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படும். (1)

மேலும், நான்கு தூதர்களும் இயேசு தமது வேலையை ஆசாரிப்புக் கூடாரத்தில் முடிக்கும்வரை நான்கு காற்றுகளையும் பிடித்திருக்க நான்

கண்டேன். அதன் பின்னரே, கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படும். இந்த வாதைகளோவெனில், துன்மார்க்கரை நீதிமான்களுக்கு விரோதமாக மேலும் கோபமடையச்செய்தது. நாங்களே தேவனுடைய சாபத்தை அவர்கள்மீது வரப்பண்ணினோம் என நினைத்து, எங்களை இந்தப் பூமியினின்றே ஒழித்து விட்டால், வாதைகளும்நின்றுவிடும் என்று எண்ணினார்கள். பரிசுத்தவான்களைக் கொல்லுவதற்காக ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டு எங்கும் அனுப்பப்பட்டது. விடுதலைக்காக பரிசுத்தவான்கள் இரவும் பகலும் கதறிக்கொண்டிருந்தார்கள். இதுவே யாக்கோபின் இக்கட்டுக்காலம். பரிசுத்தவான்கள் அனைவரும் ஆவியிலே மகா துயரமடைந்து கதறினார்கள்: பின்னர், தேவ சத்தத்தால் விடுவிக்கப்பட்டார்கள். அந்த 1,44,000 பேர்கள் மேற்கொண்டார்கள். அவர்களது முகங்கள் தேவ மகிமையால் பிரகாசித்தன: ஆனால் மற்றும் இன்னொரு கூட்டமோ கடும் வேதனையினால் அலறிக்கொண்டிருந்தது எனக்குக் காட்டப்பட்டது. அவர்களுடைய உடைகளிலே பெரிய எழுத்துக் களில் “நீ தராசில் நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்” என்று எழுதப்பட்டிருந்தது. இவர்கள் யாரென்று வினவியபோது, தூதன் என்னை நோக்கி: “இவர்கள் ஒரு காலத்தில் ஓய்வுநாளைக் கைக்கொண்டு, பின்னர் அதை விட்டுவிட்டவர்கள்” என்றான். அவர்கள் உரத்தசத்தமாய்: “உமது வருகையில் நம்பிக்கைவைத்து, உற்சாகமாய்ப் போதித்தோமே” என்று கதறுவதைக் கேட்டேன். இவ்வாறு பேசும்பொழுது, அவர்களது கண்கள் தங்களது உடைகளின்மீதுபட்டு, அதில் எழுதப்பட்டிருப்பதை வாசிக்க, மேலும் அதிகமாய்க் கதறி அழுதார்கள்: ஏனெனில், அவர்கள் ஆழத்தின் தண்ணீர்களைக் குடித்து, அதன் வண்டல்களை தங்களது பாதங்களால் நாறச்செய்து, ஓய்வுநாளை தங்களது காலின்கீழ்ப்போட்டு மிதித்து, அதினிமித்தம் தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டார்கள். (2)

பின்பு என்னைக் கவனிக்கும் தூதன் என்னைப் பட்டணத்திற்கு வழி நடத்தினான். அங்கே நான்கு தூதர்கள் பட்டணத்தின் வாசலைநோக்கிப் பறந்துசென்றார்கள். வாசலில் நின்ற தூதனிடம் ஒரு பொன் அட்டையைக் கொடுத்தார்கள். அப்பொழுது மகா உன்னத மகிமையின் உறைவிடத்தி லிருந்து வேகமாகப் பறந்துவந்த தூதன் மற்ற தூதர்களிடம் உரத்தசத்தமிட்டு, கையிலுள்ள ஏதோ ஒன்றை மேலும் கீழுமாக அசைத்தான். எனது தூதனை நோக்கி: “நான் பார்த்த இந்தக் காரியத்தின் விளக்கம் என்ன” என்று கேட்டேன். அவன் என்னை நோக்கி: “இப்போது இதற்கும் மேலாக பார்க்கமுடியாது என்றும், ஆனால் நான் அச்சமயத்தில் பார்த்த காரியங்களின் பொருள் என்னவென்பதை சீக்கிரத்தில் எனக்குக் காட்டுவதாகவும்” கூறினான். (3)

நோய்வாய்ப்பட்டிருந்த அங்கத்தினர் ஒருவர், தான் குணமடையும்படிக்கு ஜெபிக்க எங்களிடம் வேண்டிக்கொண்டார். நாங்கள் அவருக்காக ஜெபிப்பதற்கு ஒரு ஓய்வுநாள் மதியத்திலே கூடினோம். நாங்கள் யாவரும் என்றுமே தோல்வி என்பதைக் கண்டறியாத மாபெரும் வைத்தியரிடம் ஒருமனப்பட்டு விண்ணப்பித்தபோது, சுகமளிக்கும் வல்லமை இறங்கியதால், அந்த நோயாளி சுகமாக்கப்பட்டார்: வல்லமை என்மேல் இறங்கியதால், நான் தரிசனத்திற்குள்ளானேன். (4)

மேலும், பூமியிலே தங்கள் வேலையைச் செய்து முடிக்கத்தக்கதாக நான்கு தூதர்கள் தங்கள் வழியே செல்வதைக் கண்டேன். இயேசு ஆசாரிய உடையை அணிந்திருந்தார். மீதமானோரைப் பரிவோடு உற்றுநோக்கினார்: பின்னர், தமது கரங்களை உயர்த்தி, ஆழ்ந்த—பரிவுள்ள சத்தத்தோடு: “எனது இரத்தம், பிதாவே எனது இரத்தம், எனது இரத்தம், எனது இரத்தம்” என்று கெஞ்சினார். பின்பு, மகா பிரகாசமான வெளிச்சம் தேவனிடமிருந்து வரக் கண்டேன். அவர் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அந்த வெளிச்சம் இயேசுவைச் சுற்றிலும் பிரகாசித்தது. பின்பு இயேசுவின் கட்டளையைப்பெற்ற தூதன் வேகமாகப் பறந்துவரக்கண்டேன். அவன் வேலையை முடிப்பதற்காக உலகை நோக்கி வந்த மற்ற நான்கு தூ தர்களையும் நோக்கி, கையில் ஏதோ ஒன்றை வைத்து, மேலும் கீழுமாக அசைத்து: “தேவனுடைய ஊழியக்காரருடைய நெற்றிகளிலே முத்திரை போட்டுத்தீருமளவும் நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!” என்று உரத்தசத்தமிட்டான். (5)

என்னுடன் வந்த தூதனை நோக்கி: “நான் கேட்ட இந்தக் காரியங்களின் பொருள் என்ன, அந்த நான்கு தூதர்கள் முடிப்பதற்காக இருந்த காரியம் என்ன?” என்று வினவினேன். தூதன் என்னை நோக்கி: “தேவனே இந்த வல்லமையைக் கட்டுப்படுத்து கிறவர் என்றும், அவரே தமது தூதர்களிடம் பூமிக்கான காரியங்களின்மேல் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்” என்றும் கூறினான். அந்த நான்கு தூதர்களும் நான்கு காற்றுகளையும் பிடித்து வைத்திருக்கத்தக்கதான வல்லமையை தேவனிடமிருந்து பெற்றிருந்தார்கள்: காற்றுகளையும் அவிழ்த்துவிடும்படியாக இருந்தபொழுது, அவர்களுடைய கரங்களின் பிடி மெல்லத் தளரும்போது, அந்த நான்கு காற்றுகளும் வீசுவதற்கு ஆரம்பிக்கும்போது, இந்த நான்கு காற்றுகளும் அவிழ்த்துவிடப் படுவதைக்கண்டு, இயேசு முத்திரிக்கப்படாத மீதமானனோர்மேல் இரக்கங்கொண்டு, பிதாவிடத்தில் தமது கரங்களை

உயர்த்தி, தாம் அவர்களுக்காகச் சிந்திய இரத்தத்தைக்கொண்டு பரிந்துபேசி, அதை நிறுத்தினார் என்பதை அறிந்தேன்: எனவே, வேறொரு தூதன் கட்டளை பெற்று வேகமாகப் பறந்துவந்து, ஜீவனுள்ள தேவனின் முத்திரையை அவரது ஊழியக்காரர்களது நெற்றிகளிலே போட்டுத்தீருமட்டும், அந்த நான்கு தூதர்களும் தங்களது வேலையை நிறுத்தும்படியாகக் கூறினான். (6) ★

# 4

# தமது மக்கள்மீது தேவனுடைய அன்பு!

தேவன் தமது மக்களுக்காகக்கொண்ட அன்பு எவ்வளவு மகத்தானது எவ்வளவு மென்மையானது என்பதை நான் கண்டேன். பரிசுத்தவான்கள்மீது தங்கள் செட்டைகளைப் பரப்பி, காத்து நிற்கும் தூதர்களைக் கண்டேன். ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒர காவல் தூதன் உண்டு. பரிசுத்தவான்கள் அதைரியத்தினால் அழுதாலோ—ஆபத்திலிருந்தாலோ அவர்களைக் காத்து நிற்கும் தூதர்கள் வேகமாகப் பறந்து, செய்திகளை மேலேகொண்டு செல்வார்கள். அதை அறிந்தவுடன் பட்டணத்திலுள்ள தூதர்கள், பாடுவதை நிறுத்துவார்கள். அப்பொழுது இயேசு, உடனே இறங்கிச்சென்று அவர்களைத் தேற்றவும், கண்காணிக்கவும் இடுக்கமான அந்தப் பாதையிலிருந்து விலகாவண்ணம் பாதுகாக்கவும் வேறொரு தூதனுக்குக் கட்டளையிடுவார்: ஆனால், கவனத்தோடு கண்காணிக்கும் அந்தத் தூதர்களுக்குச் செவிசாய்க்காமலும், அவர் அளிக்கும் ஆறுதலை ஏற்றுக்கொள்ளாமலும் வழிவிலகிச் செல்வார்களேயானால், அந்தத் தூதர்கள் வருந்தி அழுவார்கள். இந்தச் செய்தியை தூதர்கள் மேலே எடுத்துச்செல்லும்போது, பட்டணத்திலுள்ள அனைத்துத் தூதர்களும் அழுது, பின்னர் உரத்த சத்தமாய் “ஆமென்” என்று சொல்லுவார்கள்: ஆனால், பரிசுத்தவான்கள் தாங்கள் பெறப்போகும் வெகுமதியை முன்நிறுத்தி, தங்கள் கண்களை நேராக நோக்கி, தேவனைத் துதித்துப்போற்றுவார் களானால், அப்பொழுது அந்தச் சந்தோஷச் செய்தியை தூதர்கள் பரலோகப் பட்டணத்திற்கு எடுத்துச்செல்லும்போது, அங்குள்ள தூதர்கள் தங்கள் பொன்னாலான சுரமண்டலங்களை மீட்டு, “அல்லேலூயா” என்று உரத்தசத்தமாய் இனிய கானம் இசைப்பார்கள்: அப்பொழுது பரலோகம் முழுவதும் அந்த இனிய கானத்தை எதிரொலிக்கும்.(1)

பரிசுத்தப் பட்டணத்திலே எல்லாம் பூரண ஒழுங்கோடும் இசைவோடும் அமைந்திருந்தன. பூலோகத்திற்கு போய்வரக் கட்டளைபெற்ற

தூதர்களனைவரும் பொன்னாலான ஒரு அடையாள அட்டையை கையில் வைத்திருந்தார்கள்: அவர்கள் பட்டணத்தைவிட்டு உள்ளே போவதானாலும்—வெளியே வருவதானாலும், வாசல்களில் நிற்கும் தூதர்களிடம் அதைக் காண்பித்துத்தான் செல்லவேண்டும். பரலோகம் ஒரு நல்ல இடம்; அவருடைய மகிமையின் சாயலைப் பெறுவதற்காக, எனக்காக தமது உயிரைக் கொடுத்த, அந்த எழில்மிகும் இயேசுவைக் காண நான் ஏங்குகின்றேன். ஆ! வரப்போகும் அந்தப் பிரகாசமான உலகின் மகிமையை விளக்குவதற்கு மொழியேது! நமது தேவனின் பரலோகப் பட்டணத்தை மகிழவைக்கும் ஜீவனுள்ள சிற்றாறுகளின்மேல் நான் தாகமாயிருக்கின்றேன். (2)

ஆண்டவர் மற்ற உலகங்களைப்பற்றிய ஒரு காட்சியை எனக்குக் கொடுத்தார்: செட்டைகள் எனக்குக் கொடுக்கப்பட்டன. ஒரு தூதன் என்னோடு வந்து, அந்தப் பட்டணத்திலிருந்து, பிரகாசமும் மகிமையுமான ஒரு இடத்திற்கு அழைத்துச்சென்றான். அங்குள்ள புல் மிகவும் பசுமையாயிருந்தது. அங்குள்ள பறவைகள் இனிய கீதமிசைத்தன. அந்த இடத்தின் குடிமக்கள் பலவித உருவ அளவுடையவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் மேன்மை பொருந்தியவர்களாயும், கெம்பீரமாயும், அழகுள்ளவர்களாயும் காட்சியளித்தனர். அவர்கள் இயேசுவின் சாயலை அப்படியே தரித்திருந்தார்கள். அந்த இடத்தில் தங்கித்தரிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியினாலும், சுதந்திரத்தினாலும் உண்டாகும் பரிசுத்த ஆனந்தத்தினால் அவர்களது முகங்கள் பிரகாசித்தன. அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு: பூமியிலிருப்பவர்களைக் காட்டிலும் அவர்கள் மிகுந்த அழகுள்ளவர்களாகக் காணப்படுவதன் காரணம் என்ன என்று வினவினேன். அதற்கு: நாங்கள் தேவனின் கட்டளைகளை வெகு கவனத்தோடு கைக்கொள்ளுகிறோம்; மேலும், பூமியிலுள்ளவர்களைப் போன்று நாங்கள் கீழ்ப்படியாமையினால் வீழ்ச்சியடையவில்லை என்று பதில் கூறினார். பின்னும் நான் இரண்டு மரங்களைக் கண்டேன். ஒன்று பட்டணத்திலுள்ள ஜீவவிருட்சத்தைப்போன்று காணப்பட்டது. அந்த இரண்டு மரங்களிலுமுள்ள கனிகளும் மிகவும் அழகுள்ளவைகளாக் காணப்பட்டன: ஆனால், ஒரு மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாதிருந்தது. அந்த இரு மரங்களின் கனியையும் புசிக்க அவர்களால் கூடும்: ஆனால் ஒரு மரத்தின் கனியைப் புசிக்காதபடி தடைசெய்யப்பட்டிந்தார்கள். என்னுடன் வந்த தூதன் என்னை நோக்கி தடைவிதிக்கப்பட்டுள்ள இந்த மரத்தின் கனியை இங்குள்ளவர்கள் எவருமே ருசித்ததில்லை. அப்படிப் புசிப்பார்களேயானால், நிச்சயம் வீழ்ச்சியடைவார்கள் என்று கூறினான். பின்பு நான் ஏழு சந்திரன்கள் உள்ள உலகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டேன். அங்கே மறுரூபமாக்கப்பட்ட அந்த நல்ல ஏனோக்கை கண்டேன். அவரது வலது

கரத்திலே மகிமை பொருந்திய குருத்தோலை ஒன்றைப் பிடித்திருந்தார்: அதன் ஒவ்வொரு இலையிலும் வெற்றி என்று எழுதப்பட்டிருந்தது. அவரது தலையைச் சுற்றிலும் ஒளிமிகுந்த வெண்மையான மலர் வளையம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. மலர் வளையத்தின் இதழ்களிலும் ஒவ்வொரு இதழின் மத்தியிலும் தூய்மை என்று எழுதப்பட்டிருந்தது. மலர் வளையத்தைச் சுற்றிலும் பலவண்ண மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அவை நட்சத்திரங்களுக்கும் மேலாகப் பிரகாசித்தன. அந்த எழுத்துக்களின்மீது அந்த ஒளி பிரதிபலித்து, மிகப் பெரிதாகக் காட்டிற்று. மலர் வளையம் இணைந்துள்ள ஒரு வில் அவரது தலைக்குப் பின்னால் காணப்பட்டது: அந்த வில்லிலே பரிசுத்தம் என்று எழுதப்பட்டிருந்தது. மலர் வளையத்திற்குமேலாக ஒரு கிரீடம் காணப்பட்டது. அது சூரியனைவிட அதிகமாகப் பிரகாசித்தது. அவரை நோக்கி: பூமியிலிருந்து நேராக இந்த இடத்திற்குத்தான் எடுத்துக் கொள்ளப்பட்டீர்களா என்று வினவினேன். அதற்கு அவர்: அல்ல, பட்டணமே எனது வீடு, இந்த இடத்தைப் பார்ப்பதற்காகவே இங்கு வந்துள்ளேன் என்று கூறினார். தமது சொந்த வீட்டில் இருப்பதுபோலவே அந்த இடத்தில் சுற்றியுலாவினார். நானும் அந்த இடத்திலேயே இருக்க விரும்பி, எனது உடன் வந்த தூதனிடம் கெஞ்சினேன். இந்த இருண்ட உலகத்திற்கு திரும்பவரவேண்டுமே என்ற அந்த நினைவைக்கூட என்னால் சகித்துக்கொள்ளமுடியவில்லை. தூதன் என்னை நோக்கி: நீ மறுபடியும் திரும்பச்செல்லவேண்டும்: ஆனால் உண்மையாக இருப்பாயானால், 1,44,000 பேர்களோடு எல்லா உலகங்களுக்கும் சென்று, தேவனுடைய கரத்தின் கிரியைகளைக் காணும் பேற்றினைப் பெறுவாய் என்று கூறினான். (3) ★

# 5

# வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுதல்!

டிசம்பர் மாதம் பதினாறாம் நாளில் 1848–ம் ஆண்டு, வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் காட்சியை ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார். மத்தேயு, மாற்கு, லூக்கா புத்தகங்களிலே குறிப்பிட்ட அடையாளங்களில், வானம் என்று ஆண்டவர் சொல்லும்போது வானத்தையும், பூமி என்று சொல்லும்போது, பூமியையும் குறிப்பிட்டார் என்பதைக் கண்டேன். சூரியன், சந்திரன் நட்சத்திரங்களே வானத்தின் சத்துவங்களாகும்: அவைகள் வானத்தில் ஆளுகை செய்கின்றன. பூமியில் ஆட்சிசெய்பவைகளே பூமியின் வல்லமைகளாகும். தேவனுடைய சத்தத்தைக் கேட்டமாத்திரத்தில், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். சூரியன், சந்திரன், நட்சத்திரங்களெல்லாம் தங்கள் இடங்களைவிட்டுப் பெயர்ந்துபோகும். அவைகள் ஒழிந்துபோவதில்லை; ஆனால், தேவ சத்தத்தால் அசைக்கப்படும். (1)

இருண்ட கனத்த மேகங்கள்வந்து, ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. காற்று மண்டலம் பிரிந்து, உருண்டு ஓடிற்று. பின்பு நாங்கள் மிருகசீரிஷ (Orion) நட்சத்திரக் கூட்டத்தில் காணப்பட்ட, மாபெரும் வெளியின் வழியாக, தேவ சத்தம் வந்த அந்த இடத்தை நோக்கிப் பார்த்தோம். அந்த வெளியின் வழியாகவே பரலோகப் பட்டணம் இறங்கிவரவிருக்கிறது: மேலும், பூமியின் வல்லமைகள் அசைக்கப்படுவதைக் கண்டேன். அந்தக் காரியங்கள் வரிசைக் கிரமமாக வந்தன. யுத்தம், யுத்தத்தின் செய்திகள், பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் முதலியவைகள் பூமியின் வல்லமைகளை முதலில் அசைக்கவேண்டும். அதற்குப் பின்புதான், தேவ சத்தம் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், பூமியையுங்கூட அசைக்கும். ஐரோப்பாவின் வல்லமைகளின் அசைவு என்பது சிலர் போதிக்கிறபடி வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுவது அல்ல, மாறாக, அது கோபங்கொண்ட நாடுகளின் அசைவாகும். (2) ★

# 6

# திறக்கப்பட்ட—மூடப்பட்ட கதவு!

மெயினிலுள்ள டாப்ஷேம் எனப்பட்ட இடத்தில் உள்ள சகோதரர்களை 1849–ம் ஆண்டு, மார்ச் மாதம் 24–ம் தேதி ஓய்வுநாளிலே சந்தித்தது மிகவும் இனிமையாகவும் உற்சாகமாகவும் இருந்தது. பரிசுத்த ஆவி எங்கள்மீது ஊற்றப்பட்டது. ஜீவனுள்ள தேவன் வாழும் அந்தப் பட்டணத்திற்கு ஆவியிலே எடுத்துச் செல்லப்பட்டேன். மூடப்பட்ட கதவைக்குறித்த இயேசு கிறிஸ்துவின் சாட்சியையும் தேவனின் கட்டளைகளையும் பிரித்தல் கூடாது என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. தேவ கட்டளைகள் அவற்றின் முக்கியத்துவத்தோடு பிரகாசிக்கின்ற நேரமும், ஓய்வுநாள் சத்தியத்தினிமித்தம் தேவனுடைய மக்கள் உபத்திரவம் அடைதலும், பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்திலே கதவு திறக்கப்படும்போது நிகழும். பத்துக்கட்டளைகள் வைக்கப்பட்டுள்ள உடன்படிக்கைப்பெட்டி அங்குதான் வைக்கப்பட்டுள்ளது. 1844–ல் பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்தஸ்தலத்தில் இயேசுவின் பரிந்துபேசுதல் முடியும்வரை கதவு திறக்கப்படாது; பின்பு, இயேசு எழும்பி, பரிசுத்தஸ்தலத்தின் கதவுகளை அடைத்து, மகா பரிசுத்தஸ்தலத்தின் கதவுகளைத் திறந்து, இரண்டாம் திரையை நீக்கிக் கடந்துசென்றார். இஸ்ரவேலின் விசுவாசம் சென்றடைகிற அந்த உடன்படிக்கைப்பெட்டியருகில் இப்பொழுது நிற்கிறார். (1)

பரிசுத்தஸ்தலத்தின் கதவை கிறிஸ்து அடைத்துவிட்டார் என்பதையும், இனி அதை ஒரு மனிதனும் திறக்கமுடியாது என்பதையும் நான் கண்டேன்; மேலும், மகா பரிசுத்தஸ்தலத்தின் கதவுகளைத் திறந்துவிட்டார் என்றும், அதை ஒரு மனிதனும் அடைக்கமுடியாது என்பதையுங்கண்டேன் (வெளி. 3:7,8). உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டுள்ள அந்த மகா பரிசுத்தஸ்தலத்தில் இயேசு பிரவேசித்ததிலிருந்து, தேவனுடைய பிள்ளைகளுக்கு அவரது கற்பனைகள் பிரகாசமாகக் காட்சியளிக்கின்றன; எனவே, அவர்கள் ஓய்வுநாள் சத்தியத்தினிமித்தமாக சோதிக்கப்படுகிறார்கள். (2)

இயேசு பரிசுத்தஸ்தலத்திலே தமது பரிந்து பேசுகின்ற வேலையை

முடித்து, இரண்டாம் திரைக்குள்ளாகச் செல்லும்வரை இப்பொழுதிருக்கும் ஓய்வுநாள்பற்றிய சோதனை வராது என்பதை நான் கண்டேன்; எனவே, 1844–ம் ஆண்டு, ஏழாம் மாதத்தில் நடு இராத்திரியின் சத்தம் முடிவடைந்தபோது, மகா பரிசுத்தஸ்தலத்தின் கதவுகள் திறக்கப்படுவதற்கு முன்னதாக, மரித்த கிறிஸ்தவர்கள் உண்மையான ஓய்வுநாளை ஆசரிக்காவிட்டாலுங்கூட நம்பிக்கையோடு நித்திரைசெய்கிறார்கள்; ஏனென்றால், கதவு திறக்கப்பட்ட பின்னர், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த ஓய்வுநாள் சத்தியத்தைப்பற்றிய வெளிச்சம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை; பரீட்சையும் கொடுக்கப்படவில்லை. தேவனுடைய பிள்ளைகளில் சிலரை, சாத்தான் இந்தக் காரியத்தில் சோதித்துக்கொண்டிருந்தான் என்பதை நான் கண்டேன்; ஏனென்றால், விசுவாசத்தின் வெற்றியோடு, அநேக நல்ல கிறிஸ்தவர்கள் ஓய்வுநாள் சத்தியத்தைக் கடைப்பிடிக்காமல் நித்திரையடைந்திருக்கிறார்கள்; எனவே, ஓய்வுநாள் சத்தியம் நம்மைத் தகுதியுள்ளவர்கள் என்று காட்டும் தேர்வாக எப்படியிருக்கமுடியும் என்று அவர்கள் (தேவனுடைய பிள்ளைகள்) சந்தேகித்துக்கொண்டிருந்தார்கள். (3)

நிகழ்கால சத்தியத்தின் விரோதிகள், இயேசு அடைத்துப் போட்ட பரிசுத்தஸ்தலத்தின் கதவைத்திறக்கவும், 1844–ல் திறக்கப்பட்ட மகா பரிசுத்த ஸ்தலத்தின் கதவை அடைக்கவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். (4)

முத்திரிக்கப்படும் இந்தக் காலத்திலே, சாத்தான் தனது ஒவ்வொரு சூழ்ச்சியின் மூலமாகவும், நிகழ்கால சத்தியத்தினின்று தேவனுடைய மக்களை வழிவிலகச் செய்து தடுமாற்றமடையச் செய்கிறான். இக்கட்டுக்காலத்தில் தமது மக்களைக் காப்பாற்றுவதற் காக தேவன் அவர்களின்மீது மறைப்பு ஒன்றை வைத்து, மூடிக் காப்பதை நான் கண்டேன். இருதயத்தில் சுத்தமுள்ளவர்களும், சத்தியத்தினிமித்தம் உறுதிகொண்டுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும் மகா வல்லவரின் அந்தப் போர்வையால் மூடப்படுவார்கள். (5)

சாத்தான் இதை அறிந்திருந்ததால், சத்தியத்தினிமித்தம் தடுமாற்றத்திலும் முடிவுக்குவராத நிலையிலும் எத்தனை பேரை வைக்க முடியுமோ—அத்தனை பேரை அவ்வாறு வைக்கவேண்டு மென்று மகா வல்லமையோடு தனது வேலையைச் செய்தான். நியூயார்க் பட்டணத்திலும் மற்றும் அநேக இடங்களிலும் மனித சக்திக்கும் அப்பாற்பட்ட—சூழ்ச்சி நிறைந்த கதவுத்தட்டல்கள் சாத்தானின் வல்லமையால் நடைபெற்றவையே; மார்க்கம் என்னும் மாறுவேடத்திற்கான உடையணிந்து இந்தக் காரியங்கள் இன்னும் சர்வசாதாரணமாக நடைபெறும். இவ்வாறு செய்வதின்மூலம், தேவனுடைய மக்களின் மனதை மேற்கூறப்பட்ட காரியங்களுக்கு நேராகத்

திருப்பி, ஏமாற்றமடைந்தவர்களை இன்னும் அதிகப் பாதுகாப்பிலே கொண்டு செல்வது போல தாலாட்டி, உறங்கச்செய்கிறான்; கூடுமானால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் போதனைகளையும் சந்தேகிக்கும் அளவிற்குக் கொண்டுசெல்கிறான். (6)

அநேக வழிகளிலே, சாத்தான் தனது பிரதிநிதிகள் மூலமாக வேலைசெய்துகொண்டிருப்பதை நான் கண்டேன். சத்தியத்தைத் தள்ளிப்போட்ட ஊழியர்கள்மூலமாக சாத்தான் வேலைசெய்தான்; மேலும், பொய்யை நம்பி தாங்கள் அழிந்துபோகும்படியாக கொடிய வஞ்சகத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரசங்கஞ்செய்யும்போதோ அல்லது ஜெபிக்கும்போதோ சிலர் உதவியற்று முகங்குப்புறத் தரையில் விழுவார்கள்: இது பரிசுத்த ஆவியைப் பெற்றதினால் ஏற்பட்ட காரியமல்ல; இப்படிப்பட்ட பிரதிநிதிகளுக்குச் சாத்தான் தனது வல்லமையை ஊதி, இவ்வாறு அவர்கள் மூலமாக மற்ற மக்களுக்கும் பரவச்செய்கிறான். நிகழ்கால சத்தியத்தைத் தள்ளிப்போட்ட—அட்வென்ந்துக்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் சிலர், பிரசங்கஞ்செய்யும்போதோ, ஜெபிக்கும்போதோ அல்லது உரையாடிக்கொண்டிருக்கும்போதோ மனோவசியத்தை உபயோகித்து, அதன்மூலம் தங்களுக்கு ஆதரவாளர்களைச் சேர்த்தார்கள்; மக்களும் இந்தவிதச் செல்வாக்கு பரிசுத்த ஆவியினால் உண்டானதென்று நினைத்து, மகிழ்ச்சி யடைந்தார்கள். இருளிலும் சாத்தானின் ஏமாற்றத்திலும் அகப்பட்ட சிலர், தங்களின் பயிற்சிக்காகவே கொடுக்கப்பட்ட தேவனின் வல்லமை என்று நினைக்குமளவிற்கு அது இருந்தது. தேவனைத் தங்களில் ஒருவராக எண்ணி, அவரது வல்லமையை ஒன்றுமில்லாதது எனவும் மதிப்பிட்டார்கள். (7)

சாத்தானின் இந்தப் பிரதிநிதிகள் தங்களது வல்லமையாலும் செல்வாக்காலும் சத்தியத்தைவிட்டு வழிவிலகிச்செல்லும்படி மற்றவர்களை ஏமாற்ற முடியாமற்போகும்போது, அந்தப் பரிசுத்தவான்களின் உடலைப் பாதிக்கும் காரியங்களைச் செய்தார்கள்; ஆ! எல்லோரும் தேவன் எனக்கு வெளிப்படுத்திய காரியங்களை அறிவார்களானால், சாத்தானின் மாயத் தந்திரங்களை நன்றாக அறிந்து, மிகுந்த காவலோடு தங்களைக் காத்துக்கொள்ளமுடியும். முத்திரிக்கப்படும் இந்தக் காலத்திலே, சாத்தான் வெகு தீவிரமாக தேவனுடைய பிள்ளைகளை ஏமாற்றி, கவனத்தை வேறுபக்கம் திருப்பி, வழிவிலகச் செய்கிறான் என்பதை நான் கண்டேன். இந்த நிகழ்கால சத்தியத்திற்காக உறுதியாய் நிற்காத வேறு சிலரையும் கண்டேன். அவர்கள் சத்தியத்திலே உறுதியாக நாட்டப்படாததால், அவர்களது முழங்கால்கள் நடுங்கி பாதங்கள் சறுக்குகின்றன. இவ்வாறு

நடுங்கும் நேரத்தில், வல்லமையான தேவனின் போர்வை அவர்கள்மேல் விரிக்கப்படமுடியாது. (8)

முத்திரைபோட்டுத் தீரும்வரைக்கும், தேவனுடைய மக்கள்மீது பாதுகாப்பின் போர்வை விரிக்கப்படும்வரைக்கும், சாத்தான் தனது பலவகையான சூழ்ச்சித் திறமைகளையும் உபயோகித்து, மனந்திரும்பாத அந்த நிலையிலேயே அவர்களைப் பிடித்துவைத்துக் கொண்டிருந்தான். கடைசி ஏழு வாதைகளின் நேரத்திலே, அவர்கள் தேவ கோபாக்கினைக்குப் பாதுகாப்பின்றி விடப்படுகிறார்கள். தேவன் தமது மக்களின்மீது அந்தப் போர்வையை விரிக்க ஆரம்பித் திருக்கிறார். சங்காரத்தால் அடிக்கப்படும் அந்த நாளுக்குத் தப்பும்படியாக, வெகுவிரைவில் அவரது பிள்ளைகள்மீது பாதுகாப்பிற்கான போர்வையானது விரிக்கப்படும்; தேவன் தமது மக்களுக்காக வல்லமையோடு வேலைசெய்வார்; சாத்தானும் வேலை செய்ய அனுமதிக்கப்படுவான். (9)

அறியக்கூடாத இரகசிய அடையாளங்ளும், அதிசயங்களும், பொய்யான சீர்திருத்தங்களும் பெருகிப் பரவுவதை நான் கண்டேன். எனக்குக் காண்பிக்கப்பட்ட சீர்திருத்தங்களோ, தவறுகளை நீக்கி சத்தியத்தைக் அறிவிக்கும் சீர்திருத்தங்களல்ல. எப்பொழுதும் இருக்கிற, பாவிகளுக்காக ஏற்படும் ஆத்தும அங்கலாய்ப்பை நோக்கும்படியாக என்னுடன் வந்த தூ தன் எனக்குக் கூறினான். நான் பார்க்கும்போது, அதை என்னால் காண முடியவில்லை. அவர்கள் இரட்சிப்படையும் காலம் கடந்துசென்றுவிட்டது.[1] (10)

---

[1] குறிப்பிடப்பட்டுள்ள காலம், பாவிகள் மனந்திரும்பி, இரட்சிக்கப்படும் வேளை முடிந்துவிட்டது என்று போதிப்பதாக இந்த வார்த்தைகளை எழுதின திருமதி எலன் ஜி. ஒயிட் அம்மையாரா் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. ஏனெனில், இந்த காரியங்கள் எழுதப்பட்டபோது, பாவிகளுடைய இரட்சிப்பிற்காக எப்பொழுதும் போலவே இவரும் முயள்று உழைத்துக்கொண்டிருந்தார்.

தனக்கு வெளிப்படுத்தப்பட்ட காரியத்தை அவர் புரிந்துகொண்டவிதம் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பத்தி 1854–லும், இரண்டாவது 1888–லும் பிரசுரிக்கப்பட்டது. இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பொய்யான சீர்திருத்தங்கள் இன்னமும் முழுமையாக வெளிப்படவுள்ளன. அட்வெந்து சத்தியங்களைக் கேட்டு, அதனைப் புறக்கணித்தவர்களையே குறிப்பதாக இதன் உட்கருத்து அமைகிறது. கொடிய வஞ்சகத்திற்கு இவர்கள் ஆளாகிவிடுகிறார்கள். பாவிகளுக்காக மனம் வேதனைப்படுவது என்பது இப்படிப்பட்டவர்களிடத்தில் முன்பு இருந்ததைப்போலக் காணப்படாது. கிறிஸ்துவின் வருகையைப் புறக்கணித்து, பிசாசின் வஞ்சகத்தில் சிக்குண்டவர்களாக இருக்கும் இவர்களுடைய இரட்சிப்பின்

நேரம் கடந்துவிட்டது. எனினும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்த கொள்கையைப்பற்றி கேள்விப்படாமலும் புறக்கணியாமலுமிருந்தவர்களை இது குறிக்கவில்லை.

நமது மனதில் தெளிவாக அறிந்துகொண்டதும், நமது இதயத்தில் ஆழமாக உணர்த்தப்பட்டதுமான சத்தியத்தை அற்பமாக எண்ணுவதும் ஒரு பயங்கரமான காரியமாகும். கிருபையாக கர்த்தர் அனுப்பும் எச்சரிப்புகளை புறக்கணித்துவிடுவதினால் நாம் எந்தவித தண்டனைக்கும் உட்படாமல், தப்புவது என்பது கூடாத காரியம். நோவாவின் காலத்தில் பரலோகம் எச்சரிப்பின் தூதை இந்த உலகிற்கு அனுப்பியது. அன்று வாழ்ந்த மனிதர்களின் இரட்சிப்பு, அந்த எச்சரிப்பின் தூதை அவர்கள் ஏற்றுக்கொண்டதைச் சார்ந்திருந்தது.

எச்சரிப்பை ஏற்றுக்கொள்ள மறுத்ததால், கர்த்தருடைய ஆவியானவர், பாவிகளான அந்தத் தலைமுறையினின்று எடுத்துக்கொள்ளப்பட்டார்! எனவே, வெள்ளத்தின் தண்ணீர்களில் அவர்கள் மாண்டுபோனார்கள். ஆபிரகாமின் காலத்திலே துன்மார்க்கமான சோதோமின் குடிமக்களிடத்தில் கிருபையின் சத்தம் மன்றாடுவது முடிவடைந்தது. லோத்தும், அவரின் மனைவி மற்றும் இரண்டு குமாரத்திகளும் தவிர மற்ற அனைவரும் வானத்திலிருந்து வந்த அக்கினியால் மாண்டுபோயினர். இயேசு கிறிஸ்துவின் காலத்திலும் இவ்வாறே நடந்தது. “உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்” என்று, விசுவாசியாத யூதர்களிடத்தில் தேவகுமாரன் கூறினார். கடைசிக் காலங்களை முன்னறிந்தவராக, சத்தியத்தின் அன்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இரட்சிக்கப்படும்பொருட்டு, எல்லையற்ற வல்லமையுள்ள தேவன் கூறுவதாவது: “சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.” கர்த்தருடைய வார்த்தையின் போதனையை அவர்கள் புறக்கணித்ததால், கர்த்ர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை அவர்களிடமிருந்து எடுத்து, அவர்கள் விரும்பிய வஞ்சகத்திற்கே அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். ★

# 7

# நமது விசுவாசத்தின் பரீட்சை!

இந்தச் சோதனையின் நாட்களிலே நாம் ஒருவரையொருவர் தைரியப்படுத்தி, தேறுதல் சொல்லுவது அவசியமாயிருக்கிறது. ஒருக்காலும் பார்த்திராதவண்ணம் சாத்தானின் சோதனைகள் ஏராளமாயுள்ளன. மரணமா அல்லது ஜீவனா என்று ஒவ்வொருவ ருடைய காரியமும் வெகு சீக்கிரத்தில் தீர்மானிக்கப்படப்போவதால், கொஞ்சக்காலம் மாத்திரந்தான் உண்டு என்பதை அவன் அறிந்திருக்கிறான். அதைரியத்திலும் சோதனையிலும் மூழ்கிப்போக நமக்கு இப்பொழுது நேரமில்லை. யாக்கோபின் வல்லவரான தேவனை முற்றிலுமாக நம்பி, நமது உபத்திரவங்களை பொறுமையாகச் சகிக்கவேண்டும். நமது சோதனைகளைச் சகிக்க அவரது கிருபை நமக்குப் போதும் என்பதை அவர் எனக்குக் காட்டியிருக்கிறார். சோதனைகள் இதற்குமுன் இருந்ததைவிட அதிகமாக இருந்தபோதிலும், தேவனை முற்றிலுமாக நம்புவோமானால், அவரது கிருபையினாலே ஒவ்வொன்றையும் மேற்கொண்டு வெற்றியோடு வெளிவரலாம். (1)

நம்முடைய சோதனைகளை மேற்கொண்டு, சாத்தானின் தூண்டுதல்களின்மீது வெற்றிகொள்வோமானால், பொன்னைவிட மேலானதாகக் கருதப்படும் விசுவாசத்தின் சோதனையை தாங்கிக்கொள்ளமுடியும். அப்பொழுது நாம் மேலான பலங்கொண்டு, வரப்போகும் அடுத்த சோதனையைச் சந்திக்க ஆயத்தமாகியிருப்போம்: ஆனால், சோர்வில் மூழ்கி, சாத்தானின் சோதனைக்கு வழிகொடுப்போமானால், மிகவும் பலவீனமடைந்து, சோதனையை மேற்கொள்வோருக்குக் கிடைக்கும் வெகுமதியையும் பெறாமல், அடுத்துவரும் சோதனையை மேற்கொள்ள ஆயத்தமுமில்லாமல் போய்விடுவோம். இவ்வாறாக, சாத்தானின் சித்தத்திற்கு ஏற்ப அவனால் அடிமையாக்கப்பட்டுப்போகும்வரை, நாம் மிகவும் நலிந்து பலவீனமடைந்து விடுவோம். தேவனின் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டவர்களாய், இருளின் வல்லமையோடு போராடுவதற்கு எந்தக் கணத்திலும் ஆயத்தமாயிருக்கவேண்டும். சோதனைகளும் துன்பங்களும் நம்மை நெருக்கடிக்குள்ளாக்கும்போது, தேவனிடத்தில் சென்று மனங்கசந்து அழுது

ஜெபிப்போமாக. அவர் நம்மை வெறுமையாக அனுப்பாமல், சத்துருவின் வல்லமையை முறித்து, அவனை மேற்கொள்ளத்தக்கதாக பலத்தையும் கிருபையையும் தந்தருளுவார். ஆ! காரியங்களை அதன் உண்மையான வெளிச்சத் திலே எல்லோரும் கண்டு, இயேசுவின் நல்ல போர்வீரர்களாக உறுதியோடு சகிப்போமானால், எவ்வளவு நல்லது! அப்பொழுது இஸ்ரவேல் அவருடைய மகத்துவமான வல்லமையில் பலங்கொண்டு, தேவனிடத்தில் உறுதியாய் முன்னேறிச்செல்லமுடியும். (2)

தங்களைக் கழுவி சுத்தப்படுத்துவதற்காக, தேவன் அவருடைய மக்களுக்குக் கசப்பான பாத்திரத்தைக் குடிக்கக்கொடுத்திருக்கிறார் என்பதை எனக்குக் காட்டினார். அவர்கள் முறுமுறுத்து, குறைகூறி, அலட்டிக் கொள்வதின்மூலம் இந்தக் கசப்பான மருந்தை இன்னும் அதிகக் கசப்பானதாக ஆக்கிக்கொள்ளமுடியும். இந்த நிலையில் ஏற்றுக்கொள்ளுபவர்களுக்கு அடுத்தும் கசப்பு கொடுக்கப்படுகிறது: ஏனென்றால், முதலில் கொடுத்த அந்தக் கசப்பு மருந்து திட்டமிட்ட பலனை இருதயத்தில் ஏற்படுத்தவில்லை. இரண்டாவது கசப்பு மருந்தும் அந்த வேலையைச் செய்யாவிடில், திரும்பத் திரும்ப இதே மருந்து கொடுக்கப்பட்டு, திட்டமிட்டுள்ள பலனைக் காணும்படிச் செய்யவேண்டும்: இல்லாவிட்டால், தூய்மையற்ற—அசுத்த இருதயத்தோடு விடப்படுவார்கள். அந்தக் கசப்பான பாத்திரமானது பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் ஜெபத்தோடும் இனிமையாக்கப்படுமானால், அதை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களின் இருதயத்திலே திட்டமிட்ட பலனை நிச்சயமாகக் கொடுக்கும்: அதனால், தேவன் கனமும் மகிமையும் அடைவார். தேவனால் சொந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதும், ஒரு கிறிஸ்தவனாக இருப்பதும் ஒரு சிறிய காரியமல்ல. நிகழ்கால சத்தியத்தைக் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிற சிலரது வாழ்க்கை அதற்கு இசைந்ததாக அமையவில்லை. அவர்களது இறைப்பற்று தாழ்ந்த நிலையிலுள்ளதால், வேத சத்தியத்தின் பரிசுத்தத்திற்கு ஒப்பிடும்போது, வெகு குறைவாகக் காணப்படுகிறார்கள். சிலர் வீணான, தகுதியற்ற உரையாடல்களில் ஈடுபடுகிறார்கள்: மற்றும் சிலர் தன்னை மேலாக உயர்த்திக் காண்பிக்கிறார்கள். நமக்கு வேண்டிய—பிரியமான காரியங்களைச் செய்து, உலகத்தைப்போன்று வாழ்ந்து—நடித்து அதன் உல்லாசங்களை அனுபவித்து, உலகத்தாரின் தோழமையில் மகிழ்ந்து, ஆயினும் கிறிஸ்துவோடு மகிமையில் ஆளுகைசெய்வது என்பதை எதிர்பார்க்கமுடியாது (3)

கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்காளிகளாக இருந்தால் மாத்திரமே வரப்போகும் வாழ்வில்—அவரது மகிமையிலும் நாம் பங்கடைய முடியும்.

தேவனுக்கு உகந்தவர்களாக நடந்து, அவரது விலைமதிப்பற்ற பாடுகளின் காரணத்தை முன்னேறச் செய்வதற்குப் பதிலாக, நம்முடைய சொந்தக் காரியங்களை நாடி, நாம் விரும்பும் காரியங்களையே செய்வோமானால், தேவனையும் நாம் நேசிப்பதாகச் சொல்லுகின்ற பரிசுத்த ஊழியத்தையும் கனவீனப்படுத்துகிறவர்களா யிருப்போம். தேவனுக்காக வேலை செய்வதற்கு ஒரு சிறிதளவு நேரமே மீதமாயுள்ளது. சிதறடிக்கப்பட்டுப் பிரிந்துகிடக்கும் இயேசுவின் மந்தையினது இரட்சிப்பைச் சம்பாதிப்பதற்காக எந்தவித மேலான தியாகத்தையும் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். அந்த மேலான பொக்கிஷத்தை சொந்தமாக்கிக்கொள்ளவும், புதிய இராஜ்யத்தைச் சதாகாலத்திலும் சுதந்தரித்துக்கொள்ளவும், பலியினாலே உடன்படிக்கை செய்துகொண்டவர்கள் பரலோக வீட்டிலே கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (4)

நாம் இயேசுவோடிருந்தவர்கள் என்பதையும், அவருடைய சாந்தமான—தாழ்மையான பின்னடியார்கள் என்பதையும், தேவனுக்காக முற்றிலும் வாழ்ந்து, நமது சீரான திட்டமிட்ட வாழ்க்கையின்மூலமும் தெய்வபயமுள்ள உரையாடல்கள்மூலமும் காட்டவேண்டும். பகற்காலம் நீடிக்கும்பொழுது நம்முடைய வேலையைச் செய்யவேண்டும். வேதனையும் கடுந்துயரும் நிறைந்த இராக்காலம் வரும்பொழுது, தேவனுக்காக வேலைசெய்ய முடியாதபடி வெகுவாகப் பிந்திப்போகும். இயேசு தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். இப்பொழுது அவர் நமது தியாகங்களையும், ஜெபங்களையும், நமது பாவங்கள் குற்றங்களுக்கான அறிக்கை யையும் ஏற்றுக்கொண்டு, இஸ்ரவேலின் மீறுதல்களையெல்லாம் மன்னிப்பார்: ஏனெனில், அவர் ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு வெளியேறுமுன்பாக, இவைகளெல்லாம் அகற்றப்படக்கூடும். இயேசு ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு வெளியேறும்போது, பரிசுத்தமாயும் நீதியாயும் இருப்பவர்கள் தொடர்ந்து பரிசுத்தமாயும் நீதியாயும் இருப்பார்கள்: ஏனெனில், அவர்களது பாவங்களெல்லாம் நீங்கப்பெற்று, ஜீவனுள்ள தேவனின் முத்திரையால் முத்திரிக்கப்படுவார்கள்: ஆனால், அநீதியும் அசுத்தமும் நிறைந்தவர்கள், மேலும் அந்த நிலையில்தானே காணப்படுவார்கள்: ஏனென்றால், பிதாவின் சிங்காசனத்திற்குமுன்பாக விண்ணப்பங்களை ஏறெடுப்பதற்கும், பாவ அறிக்கைசெய்வதற்கும், பலிகளை ஏறெடுப்பதற்கும் பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஆசாரியர் இருக்கமாட்டார்: எனவே, பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு இயேசு வெளியேறுவதற்கு முன்பாக—வரப்போகும் கோபாக்கினைக்குத் தப்பும்படியாக—ஆத்துமாக்களை ஆதாயஞ் செய்யும் எல்லா வேலைகளும் செய்துமுடிக்கப்படவேண்டும். (5) ★

# 8

# சிறு மந்தைக்கு... !

**அ**ன்புள்ள சகோர—சகோதரிகளே! தேவன் 1850–ம் ஆண்டு, ஜனவரி 26–ல் எனக்கு கொடுத்த தரிசனத்தை இங்கு கூறுகிறேன். தேவனுடைய மக்களில் சிலர் மதியற்று, செயலற்று பாதி விழிப்புள்ள நிலையிலே இருக்க நான் கண்டேன். தாங்கள் வசிக்கும் இந்தக் காலத்தைப்பற்றிய உணர்வற்றவர்களாயிருக்கிறார்கள். (இந்த நூலின் 20–ம் அதிகாரத்தில் வில்லியம் மில்லர் தனது கனவிலே கண்டதுபோல்) துடைப்பம் வைத்துள்ள மனிதன் நுழைந்துவிட்டதையும், சிலர் அவனது துடைப்பத்தால் துடைத்து வெளியே தள்ளப்படும் அபாயத்தில் இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அறியவில்லை. அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்றும், தாங்கள் இருக்கும் அபாயகரமான நிலையை அறியும்படி, இன்னும் கொஞ்சக்காலம் காப்பாற்றப் படட்டுமென்றும், என்றென்றைக்குமாகப் பிந்திவிட்ட நிலையை அடைந்துவிடுவதற்குமுன், அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அவர்களுக்குத் தருணம் வேண்டுமென்றும் இயேசுவினிடத்தில் கெஞ்சி னேன். அப்பொழுது “அழிவு மகா பயங்கரமான சுழற்காற்றைப்போல் வந்துகொண்டிருக்கின்றது” என்று தூதன் கூறினான். இந்த உலகத்தை நேசிப்பவர்களையும், இந்த உலக ஆஸ்திகளின்மேல் அதிகமான பற்று வைத்து, அதனின்று விடுபட மனதில்லாமலும், அவற்றைத் தியாகஞ்செய்து அதன்மூலமாக ஆவிக்குரிய ஆகாரமின்றி பசியினால் அழிந்துகொண்டிருக்கும் எண்ணற்ற ஆடுகளுக்குப் போதகர்களை அனுப்பாமலும் இருப்பவர்கள்மீது கருணைகூர்ந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சினேன். (1)

நிகழ்கால சத்தியம் கிடைக்காமல் மடிந்துகொண்டிருந்த—இரங்கத்தக்க அநேக ஆத்துமாக்களை நான் தரிசனத்தில் கண்டேன். சத்தியத்தை விசுவாசிக்கிறோம் என்று சொல்கின்ற சிலர், தேவையான பண உதவியைச் செய்யாமல், அந்த ஆத்துமாக்களை மடியும்படியாக விட்டுவிட்டார்கள். இந்தக் காரியம் பார்ப்பதற்கு மிகவும் வேதனையைக் கொடுத்தது. அந்தத் தரிசனத்தை என்னைவிட்டு நீக்கும்படி நான் தூதனிடம் கெஞ்சினேன். இயேசுவிடம் வந்த வாலிபனைப்போல் (மத். 19:16,22) சிலரிடம்

தேவனுடைய வேலைக்காகச் சொத்துக்களை தியாகஞ்செய்யும்படிக் கேட்டபோது, வருத்தத்தோடு அங்கிருந்தே சென்றுவிட்டதை நான் கண்டேன். வெகுசீக்கிரத்தில் பிரவாகம் போன்ற தேவ தண்டனை அவர்களை மூழ்கடித்து, அவர்களது சொத்துக்கள் துடைத்துப்போடப்பட்டதை நான் கண்டேன்: எனவே, பூமிக்கடுத்த செல்வங்களைத் தியாகஞ்செய்து, பரலோகத்தின் செல்வங்களைச் சேர்ப்பதற்கான காலம் அப்பொழுது வெகுவாகப் பிந்திவிடும். (2)

அதன் பின்னர், மகிமையுள்ள மீட்பரை அழகும் இனிமையும் பொருந்தியவராக நான் கண்டேன். அவர் தமது மகிமையின் இராஜ்யத்தைவிட்டு, இருண்ட—தனித்த—இந்த உலகிற்கு வந்தார். நீதியுள்ள அவர் அநீதியுள்ளவர்களுக்காகத் தமது விலையேறப்பெற்ற உயிரைக் கொடுக்க வந்தார். கொடுமையான கேலி, பரிகாசங் களையும் வேதனைகளையும் தாங்கினார்: முள்முடி சூடினார்: அவரது வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக தோட்டத்தில் விழுந்தன. உலகின் பாவப் பாரங்கள் அனைத்தும் அவர்மீது சுமத்தப்பட்டது "எதற்காக" என்று தூதன் வினவினான். ஆ! அது நமக்காகத்தானே என்பதை நான் கண்டேன்; அறிந்துகொண்டேன். அவர் நமது பாவங்களுக்காக இத்தகைய துன்பங்களை அடைந்தார்; ஏனென்றால், அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் தேவனுக்கு நம்மை மீட்டுக்கொள்வதற்காகத்தானே. (3)

மடிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக தங்களது உலகப்பொருட்களைக் கொடுப்பதற்கு மனதில்லாதவர்களையும், அதே சமயத்தில், இயேசு தமது பிதாவின்முன்பாக நின்று, தமது இரத்தத்தினாலும் தமது பாடுகளாலும், அவர்களுக்காகத் தான் அடைந்த மரணத்தினாலும், அவர்களை மீட்டுக்கொள்ளும்படி பரிந்துபேசுவதும் எனக்கு முன்பாகக் காட்டப்பட்டது: மேலும், அவர்கள் ஜீவனுள்ள தேவனின் முத்திரையால் முத்திரிக்கப்படுவதற்காக தேவனுடைய தூதர்கள் இரட்சிப்பின் சத்தியத்தை எடுத்துச்செல்ல ஆயத்தமாயிருப்பதையும் கண்டேன். நிகழ்கால சத்தியத்தை விசுவாசிக்கிறோம் என்று சொல்பவர்கள்கூட, தங்களிடம் தேவனால் ஒப்படைக்கப்பட்ட அவரது சொந்தப் பணத்தைக்கூட கொடுப்பதற்கு மிகவும் மனமின்றி இருக்கிறார்கள். (4)

துயர் மிகுந்த அந்த இயேசு, மனிதனுக்காக தாம் கொண்ட ஆழமான அன்பினால், தமது உயிரையும் கொடுக்கச் சித்தமானது எனக்கு முன்பாகக் காட்டப்பட்டது. அவரது பின்னடியார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற சிலரது வாழ்க்கையில் ஏராளமான உலகச் சொத்துக்கள் இருந்தபோதிலும், மீட்பின் திட்டத்திற்காக உதவிசெய்வதை பெரும் பாரமாக நினைத்தார்கள்.

தூதன் ஒருவன்: “இப்படிப்பட்டவர்கள் பரலோகத்திற்குள் நுழையமுடியுமா?” என்று வினவ, மற்றொரு தூதன் “ஒருக்காலும் முடியாது, முடியவே முடியாது!” எனக் கூறினான். தேவனுடைய வேலையின் காரணமாக, இந்த உலகில் ஆர்வமில்லாதவர்கள், மீட்பின் இனிய கீதத்தை ஒருக்காலும், பரலோகத்தில் பாடமுடியாது என்றும் கூறினான். தேவன் பூமியில் செய்யும் துரிதமான வேலை, நீதியினிமித்தம் சீக்கிரமாக முடிவடையுமென்றும், சிதறடிக்கப்பட்ட மந்தையின் ஆடுகளைத் தேடுவதற்காக தூதர்கள் தங்கள் வழியே வேகமாகச் செல்லவேண்டுமென்றும் நான் கண்டேன். “எல்லோரும் தூதுவர்களா?” என்று ஒரு தூதன் வினவ, “இல்லை, ஒருபோதும் இல்லை: தேவனுடைய தூதுவர்களிடத்திலே ஒரு தூது உண்டு” என்ற மற்றொரு தூதன் கூறினான். (5)

பிரயாணஞ்செய்கின்ற—தேவனிடமிருந்து தூதைப்பெறாத சிலரால்—பூமியில் தேவனுடைய வேலை தடைபட்டு அவமதிக்கப் படுவதை நான் கண்டேன். எந்த இடத்திற்குப் போவதற்கு கடமையில்லையோ, அந்த இடங்களுக்கு அனாவசியமாக பிரயாணஞ்செய்வதின்மூலமாகச் செலவழிக்கும் ஒவ்வொரு காசிற்கும் அவர்கள் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும்: ஏனெனில், அந்தப் பணம் தேவனுடைய வேலைக்கு மிகுந்த உதவியாக இருந் திருக்கக்கூடும்: தேவனால் அழைக்கப்பட்ட—தெரிந்துகொள்ளப்பட்ட தூதுவர்களுக்கு வேண்டிய பொருளாதார வசதி இருந்திருந்தால், அவர்களுக்குத் தேவையான ஆவிக்குரிய ஆகாரத்தை கொடுத்திருக்கக்கூடும். இத்தகைய வசதியின்மையால், ஆவிக்குரிய ஆகாரக்குறைவு ஏற்பட்டு, ஆத்துமாக்கள் பட்டினிகிடந்து மரிக்கிறார்கள். தங்களது கரங்களால் உழைக்கச் சக்திபெற்றவர்கள் தேவனுடைய வேலையை ஊக்குவிக்க உதவிசெய்யவேண்டும் என்பதையும், எப்படி ஏராளமான சொத்துக்களை உடையவர்கள் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டுமோ அதைப்போலவே, உழைக்கச் சக்திபெற்றோரும் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதை நான் கண்டேன். (6)

அந்த மாபெரும் அசைவு ஆரம்பித்துவிட்டது. அது தொடர்ந்து செல்லும்; தேவனுக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும், துணிந்து, விட்டுக்கொடுக்காமல், சத்தியத்திற்காக நிற்க விருப்பமற்றவர்களும் தேவனுக்காகவும் அவரது ஊழியத்திற்காகவும் தியாகம் செய்யாதவர்களும் இந்த அசைக்கப்படுதலில் வெளியே தள்ளப்படுவார்கள். “யாராவது தியாகஞ்செய்ய கட்டாயப்படுத்தப் படுவார்களா?” என்று தூதன் என்னை வினவி, “இல்லை—இல்லை அது மனமுவந்து கொடுக்கும் காணிக்கையாக இருக்கும்; அனைத்தையும் கொடுத்துத்தான் அந்த நிலத்தை (பரலோகத்தை) வாங்கமுடியும்” என்று கூறினான். மயக்கமடைந்து மரித்துக் கொண்டிருக்கும்

தேவனுடைய மக்களைக் காப்பாற்றுமாறு தேவனிடத்தில் கதறினேன். பின்னர் மகா வல்லவரின் நியாயத்தீர்ப்புகள் துரிதமாக வந்துகொண்டிருப்பதை நான் கண்டேன். தூதனிடம் அவனது மொழியிலேயே மக்களிடம் பேசுமாறு கெஞ்சிக்கேட்டேன். “தேவனுடைய வார்த்தையின் எளிய சத்தியங்களால் அசைக்கப்படாத எவரையும், சீனாய் மலையின் இடிமுழக்கங்களும் மின்னல்களுங்கூட ஒன்றும் செய்யமுடியாது; தேவ தூதனின் தூதுகூட விழிப்படையச் செய்யமுடியாது” என்றான் அந்தத் தூதன். (7)

பின்னர் இயேசுவின் அழகையும் இனிய தோற்றத்தையும் நான் கண்டேன். அவரது அங்கி மிகவும் வெண்மையான வெண்மையிலும் வெண்மையாயிருந்தது. அவரது மகிமையையும் உன்னத அழகினையும் எந்த மொழியாலும் வர்ணிக்கக் கூடாதிருந்தது. அனைவரும்— தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற அனைவரும், வாசல்கள் வழியாய் பட்டணத்திற்குள் பிரவேசித்து ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவார்கள். நடுப்பகல் சூரியனைவிட பன்மடங்கு பிரகாசம்பொருந்திய அழகிய இயேசுவின் திருச்சமூகத்தை நித்தமும் தரிசிக்கும் பாக்கியமும் அடைவார்கள். (8)

பின்னர், ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாளின் நிலை எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்ததால் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றும் சாவாமையைத்தரித்த பாவிகளாகவே இருந்துவிடக்கூடாதேயென்று, ஜீவவிருட்சத்தைச் சுற்றிலும் சுடரொளிப்பட்டயம் வைக்கப்பட்டது. சாவாமையை நிலைக்கச் செய்வதற்கானதே ஜீவவிருட்சமாகும். ஆதாமின் குடும்பத்தினரில் இந்தச் சுடரொளிப் பட்டயத்தைக் கடந்துசென்று, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்தவர்கள் யார் என்று ஒரு தூதன் வினவுவதைக் கேட்டேன். “ஆதாமின் குடும்பத்தினரில் ஒருவர்கூட சுடரொளிப் பட்டயத்தைக் கடந்துசென்று, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்ததில்லை: எனவே சாவாமையைத் தரித்த பாவி யாருமேயில்லை” என்று மற்றொரு தூதன் அதற்குப் பதிலுரைத்தான். பாவஞ்செய்த ஆத்துமாவே நித்திய மரணத்தை அடையும். அது என்றும் நிலைபெற்ற மரணம்; அதனின்று உயிர்த்தெழுதலின் நம்பிக்கையே கிடையாது; அதன் பின்னரே தேவனின் கோபாக்கினையானது தணிந்து சமாதானமடையும். (9)

பரிசுத்தவான்கள் பரிசுத்த நகரத்திலே இளைப்பாறி, இராஜாக்களும் ஆசாரியர்களுமாய் ஆயிரமாண்டு அரசாளுவார்கள்: பின்னர், இயேசு தமது பரிசுத்தவான்களோடு ஒலிவ மலையில் வந்திறங்குவார். அந்த மலையோவெனில் இரண்டாகப் பிளந்து, தேவனது பரதீசு

தங்கியிருக்கும்படியான ஒரு சமபூமியாயிற்று. இந்த ஓராயிரமாண்டு முடிவடையும்வரை, துன்மார்க்கர் உயிரோடு எழுப்பப்பட்டு, நகரத்தைச் சுற்றிலும் வளைத்துக்கொள்ளும்வரை இந்த பூமியிலிருக்கும் மற்றவைகள் சுத்திகரிக்கப்படவில்லை. துன்மார்க்கரின் பாதங்கள் புதிதாக்கப்பட்ட இந்த பூமியை ஒருபோதும் தூய்மைகெடச்செய்வதில்லை. தேவனிடமிருந்து—வானத்திலிருந்து அக்கினி வந்திறங்கி அவர்களைப் பட்சித்துப்போடும்; வேரையும் கொப்பையும் வைக்காமல் எரித்துப்போடும்; சாத்தானே—அந்த வேர்; அவன் பிள்ளைகளே—அந்தக் கொப்புகள்; துன்மார்க்கரை விழுங்கிப்போடும் நெருப்பே பூமியைத் தூய்மைப்படுத்தும். (10) ★

# 9

# கடைசி வாதைகளும் நியாயத்தீர்ப்பும்!

வெர்மான்டிலுள்ள சட்டன் என்ற இடத்தில், 1850–ம் வருடம் செப்டம்பர் மாதத்தில், நிகழ்கால சத்தியத்தில் நம்பிக்கையுள்ள விசுவாசிகள் கூடியிருந்த பொதுக்கூட்டத்திலே நான் தரிசனத்திற் குள்ளானேன். இயேசு ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு வெளியேறினபின்பு, கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படும் என்பது எனக்குக் காட்டப்பட்டது. அதுவே, துன்மார்க்கருக்கு மரணம் அல்லது அழிவை விளைவிக்கக்கூடிய தேவனுடைய, ஆட்டுக்குட்டியானவருடைய கோபாக்கினை என்றும் தூதன் கூறினான். தேவனுடைய சத்தம் தொனித்தமாத்திரத்திலே பரிசுத்தவான்கள் வல்லமையும் பயங்கரமுமான சேனையாய் தங்களது கொடிகளைப் பிடித்துக் காணப்பட்டார்கள்; ஆனால், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அந்தச் சமயத்தில் அவர்கள் நிறைவேற்றமாட்டார்கள்: ஆயிரம் வருடத்தின் முடிவிலேதான் அது நடைபெறும். (1)

பரிசுத்தவான்கள் அழியாமையைத் தரித்துக்கொண்டபின்னர், இயேசுவோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் தங்களது சுரமண்டலங்களையும், அங்கிகளையும், கிரீடங்களையும் பெற்றுக்கொண்டு, பட்டணத்திற்குள் சென்றபின்னர், இயேசுவும் அவருடைய பரிசுத்தவான்களும் நியாயசங்கத்திலே உட்கார்ந்தார்கள். ஜீவ புஸ்தகமும், மரண புஸ்தகமும் திறக்கப்பட்டன. பரிசுத்தவான்களின் நற்செயல்களை ஜீவபுஸ்தகத்தில் காணலாம். துன்மார்க்கரின் தீய செயல்களின் தொகுப்பை மரண புஸ்தகத்தில் காணலாம். இந்தப் புத்தகங்கள் சட்டப்புத்தகமாகிய வேதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. அதன்படி மனிதர்கள் நியாயந்தீர்க்கப் பட்டார்கள். பரிசுத்தவான்கள் இயேசுவோடிணைந்து, மரித்த துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்பை நிர்ணயிக்கிறார்கள்: “மேலும், பரிசுத்தவான்கள் இயேசுவோடு நியாயசங்கத்தில் உட்கார்ந்து, துன்மார்க்கர் தங்கள் மாம்சத்திலே செய்த பாவங்களுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பைக் கூறுவார்கள். தங்களது

பெயர்களுக்கு எதிராக எழுதப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பை நிச்சயமாக அடைந்து தீரவேண்டும் என்பதை நீ பார்" என்று தூதன் என்னிடம் கூறினான். இந்தக் காரியம் இயேசுவும் அவரது பரிசுத்தவான்களும், பரிசுத்தப் பட்டணம் பூமியிலே இறங்கும் முன்பாக—ஆயிரம் வருடங்களாக முடித்துவைத்த வேலையாகும். அந்த ஆயிரம் ஆண்டுகளின் முடிவிலே, இயேசு தமது தூதர்களோடும் பரிசுத்தவான்களோடும் பரிசுத்த நகரத்தைவிட்டு பூமியை நோக்கி இறங்கும்பொழுது, மரித்த துன்மார்க்கர் உயிர்த்தெழுவார்கள். அவர் தமது மகிமையோடும், தூதர்களோடும் பரிசுத்தவான்களோடும் வரும்போது, "அவரைக் குத்தியவர்களும்" கண்டு புலம்புவார்கள்; அவரது கரங்களிலும் கால்களிலும் ஆணிகள் கடாவிய தழும்புகளையும், ஈட்டியால் குத்தப்பட்ட விலாவிலுள்ள தழும்புகளையும் காண்பார்கள். ஆணிகளாலும் ஈட்டியாலும் ஏற்பட்ட தழும்புகள் அவரது மகிமையாகக் காணப்படும்; இந்த ஆயிரம் ஆண்டுகளின் முடிவிலே, இயேசு ஒலிவ மலையின்மீது வந்துநிற்கும்போது, மலை இரண்டாகப் பிளந்து, ஒரு பெரிய சமபூமி உண்டாகிறது; இந்தச் சமயத்தில், உயிர்த்தெழுந்த துன்மார்க்கரோவெனில், அவர் சமூகத்தைவிட்டு ஓடுவார்கள்; பின்பு, பரிசுத்த நகரம் இறங்கி, அந்தச் சமபூமியில் நிலைப்படுத்தப்படுகிறது. சாத்தான் இந்தச் சமயத்தில் துன்மார்கரை தனது ஆவியினால் நிரப்புகிறான். அவன்: "பரிசுத்தப் பட்டணத்திலுள்ள சேனை மிகச் சிறியது என்றும், தனது சேனை மிகப் பெரியது என்றும், பரிசுத்தவான்களை மேற்கொண்டு அந்தப் பட்டணத்தைப் பிடித்துக்கொள்ளலாம்" என்றும், தன்னுடைய சேனையனைத்திடமும் புகழ்ந்துரைக்கிறான். (2)

சாத்தான் தனது சேனையைக் கூட்டிச்சேர்க்கும்பொழுது, நகரத்திலுள்ள பரிசுத்தவான்கள், தேவனுடைய அந்தப் பரதீசின் அழகையும் மகிமையையும் கண்டார்கள். இயேசுவே தலைமை தாங்கி அவர்களை நடத்தினார். திடீரென்று இனிய மீட்பர் எங்களது குழுவிலிருந்து பிரிந்துசென்றுவிட்டார்: ஆனால், வெகு சீக்கிரத்தில்: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்ற அவரது இனிய சத்தத்தை நாங்கள் கேட்டோம். இயேசுவைச் சுற்றிலும் கூடிநின்றோம். அந்தப் பட்டணத்தின் கதவுகளை மூடியபோது, துன்மார்க்கரின்மீது சாபம் கூறப்பட்டது. பெருங்கதவுகள் மூடப்பட்டன: பின்பு, பரிசுத்தவான்கள் தங்களது செட்டைகளை உபயோகித்து, உயர்ந்த பட்டணத்துச் சுவர்களின்மீது சூழ்ந்துநின்றார்கள். இயேவும் அவர்களோடிருந்தார். அவரது கிரீடம் பிரகாசமாகவும் மகிமை பொருந்தியதாகவும் காணப்பட்டது. கிரீடத்தினுள் கிரீடமாக ஏழு கிரீடங்கள்

அடுக்கடுக்காக காணப்பட்டன. பரிசுத்தவான்களுடைய கிரீடங்களோவெனில், மிகுந்த பசும்பொன்னாலானதாகவும் நட்சத்திரங்கள் பதிக்கப்பட்டதாகவும் இருந்தன. அவர்கள் இயேசுவின் சாயலை அப்பட்டமாகத் தரித்திருந்ததால், முகங்கள் மகிமையினால் பிரகாசித்தன: அவர்கள் பட்டணத்தின் உச்சியை அடைய ஒன்றாகச் சென்றபோது, அக்காட்சி என்னை மகிழ்ச்சியால் நிரப்பிற்று. (3)

பின்னர், துன்மார்க்கர் தாங்கள் எப்படிப்பட்டவைகளை இழந்து போனோம் என்பதைக் கண்டார்கள். தேவன் அக்கினியை அனுப்பிட, அது அவர்களைப் பட்சித்துப்போட்டது. இதுவே, நியாயத்தீர்ப்பின் நிறைவேறுதலாகும். இயேசுவும் அவரது பரிசுத்தவான்களும் இணைந்து, ஓராயிரம் ஆண்டுகளில் தீர்மானித்ததை துன்மார்க்கர் தங்களின் பங்காகப் பெற்றுக்கொண்டார்கள். துன்மார்க்கரைப் பட்சித்துப்போட தேவனிடமிருந்து வந்த அந்த நெருப்பே, இந்த பூமி முழுவதையும் தூய்மையாக்கியது. உடைந்த, கரடுமுரடான மலைகளெல்லாம் பட்சிக்கும் அக்கினியால் உருகிப்போயிற்று. காற்று மண்டலமும் மீதமிருந்த யாவும் அக்கினிக்கு இரையாயின. மகிமையும் அழகும் பொருந்திய எங்களது சுதந்திரமான காணியாட்சி எங்கள் முன்னாக வைக்கப்பட்டது. புதிதாக்கப்பட்ட பூமியனைத்தையும் நாங்கள் சுதந்தரித்துக்கொண்டோம். “மகிமை! அல்லேலூயா!” என்று நாங்கள் உரத்த தொனியில் ஆர்ப்பரித்தோம். (4) ★

# 10

# இரண்டாயிரத்து முந்நூறு நாட்களின் முடிவு!

எனது தரிசனத்திலே ஒரு சிங்காசனத்தை நான் கண்டேன். அதிலே பிதாவும் குமாரனும் வீற்றிருந்தார்கள். இயேசுவை நான் உற்றுநோக்கி, அவரது அழகைக்கண்டு வியந்தேன். பிதாவை நான் காணக்கூடவில்லை; ஏனென்றால், மகிமைப் பிரகாசமாய் ஒரு ஒளிப்படலம் அவரை மூடியிருந்தது; இயேசுவைப்போன்று அவரது பிதாவிற்கும் உருவ அமைப்பு உண்டோ என்று நான் இயேசுவிடமே வினவினேன். அதற்கு அவர் பதிலாக: பிதாவிற்கு உருவ அமைப்பு உண்டு என்றும், அதை நான் காண முடியாது என்றும், மேலும் பிதாவின் மகிமையின் பிரசன்னத்தைக் கண்டால் உயிரோடிருக்க முடியாது என்றும் கூறினார். சிங்காசனத்திற்கு முன்பாக அட்வெந்து மக்களை நான் கண்டேன். சபையைத் தெரிந்துகொண்டவர்கள், உலகத்தைத் தெரிந்துகொண்டவர்கள் ஆகிய இரண்டு கூட்டங்களை நான் கண்டேன். சிங்காசனத்திற்கு முன்பாக மிகுந்த ஆவலுடன் வணங்கி நின்ற ஒரு கூட்டத்தையும், ஆர்வமின்றி கவலையீனமாக இருந்த மற்றொரு கூட்டத்தையும் கண்டேன். சிங்காசனத்திற்கு முன்பாக தலைவணங்கி நின்ற கூட்டத்தார் இயேசுவை நோக்கி தங்களது ஜெபங்களை ஏறெடுக்க நின்றார்கள். பிறகு இயேசு தமது பிதாவை நோக்கி, அவர்களுக்காகப் பரிந்துபேசுவதுபோல் காணப்பட்டார். பிதாவிடத்தினின்று ஒரு ஒளி குமாரனிடத்திற்கு வந்து, பின்னர் குமாரனிடத்தினின்று ஜெபிக்கும் கூட்டத்தினருக்குச்சென்று பிரகாசித்தது. பின்னும் நான் பார்த்தபோது, மிகப் பிரகாசமான வெளிச்சம் ஒன்று பிதாவிடமிருந்து குமாரனிடம் வந்து, பின்பு குமாரனிடமிருந்து சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் மக்கள்மீது பிரகாசத்தது; ஆனால், மிகச் சிலரே அந்த மாபெரும் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அநேகர் அந்த வெளிச்சத்தினடியிலிருந்து வெளியேறி, உடனே அதை எதிர்த்து நின்றார்கள். மற்றும் சிலர் கவலையீனமாய் அதை அனுபவிக்க விருப்பமின்றியிருந்தனர். அந்த வெளிச்சமோ அவர்களை விட்டு

விலகிப்போயிற்று. சிலர் அந்த வெளிச்சத்தை விரும்பி, முழங்காலிட்டு ஜெபிக்கும் அந்தச் சிறு கூட்டத்தோடு தலை வணங்கி நின்றார்கள். இந்தக் கூட்டத்திலுள்ளோர் அனைவரும் வெளிச்சத்தைப்பெற்று அதிலே களிகூர்ந்தார்கள். அவர்களது முகங்கள் மகிமையினால் பிரகாசித்தன. (1)

பின்னர், பிதா தமது சிங்காசனத்தைவிட்டு எழுவதையும், அக்கினி இரதத்திலே திரைமறைவிலிருக்கும் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் சென்று அமருவதையும் நான் கண்டேன்; பின்னர், இயேசு சிங்காசனத்தை விட்டெழுந்தார். அவரோடு தலைவணங்கி நின்றவர்களில் அநேகர் அவரோடு எழுந்தார்கள். அவர் எழுந்த பின்பு, கவலையீனமான அந்தக் கூட்டத்தார் பூரண இருளிலே விடப்பட்டார்கள். இயேசுவிடமிருந்து வரும் ஒளிக்கதிர்களில் ஒன்றுகூட அவர்கள்மீது படியவில்லை. இயேசு எழுந்தபோது எழுந்த மற்றவர்கள், அவர்மீது தங்கள் கண்களைப் பதித்திருந்தார்கள். அவர் சிங்காசனத்தைவிட்டு சிறிது தூரம் அவர்களை வழிநடத்தினார்; பின்னர், அவர் தமது வலது புயத்தை உயர்த்தினார்; பின்பு, இங்கேயே காத்திருங்கள்; இராஜ்யத்தைப் பெறுவதற்காக என் பிதாவிடத்திற்குப் போகிறேன். உங்களது ஆடைகளைக் கறையற்றதாக வைத்திருங்கள். வெகு சீக்கிரத்தில் கலியாணத்தினின்று வந்து, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் என்ற அவருடைய இனிய சத்தத்தை நாங்கள் கேட்டோம்; பின்பு, மேக இரதம் ஒன்று அக்கினிமயமான சக்கரங்களோடும் தூதர்கள் சூழவும் இயேசு தரித்திருக்குமிடத்தில் வந்து நின்றது. அவர் இரதத்திலே அடியெடுத்து வைத்தவுடன், பிதா அமர்ந்திருந்த மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே மகா பிரதான ஆசாரியராக, பிதாவிற்கு முன்பாக இயேசு நிற்பதை நான் கண்டேன். அவரது அங்கியின் ஓரங்கள் ஒரு மணியும் ஒரு மாதுளங்கனியுமாக அடுத்தடுத்துத் தொங்கும்படிக்கு அமைக்கப்பட்டிருந்தது. இயேசுவோடு எழுந்தவர்கள் விசுவாசத்தோடு மகா பரிசுத்தஸ்தலத்தில் இருப்பவரிடத்திலே: “எங்கள் பிதாவே, உமது ஆவியை எங்களுக்குத் தாரும்” என்று ஜெபிப்பார்கள்; பின்னர், இயேசு அவர்கள்மீது பரிசுத்த ஆவியை ஊதுவார்; அதிலே வெளிச்சம், வல்லமை, மிகுந்த அன்பு, மகிழ்ச்சி, சமாதானம் முதலியவைகள் காணப்படும். (2)

அடுத்து சிங்காசனத்திற்குமுன்பாக தலைவணங்கியவாறு நிற்கும் அந்தக் கூட்டத்தைக் காண்பதற்காகத் திரும்பி நோக்கினேன். இயேசு அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டார் என்பதை அறியாதிருந்தார்கள். சிங்காசனத்தின் பக்கத்திலே இருப்பதுபோன்று சாத்தான் காணப்பட்டு, தேவனுடைய வேலையைச் செய்வதற்காக முயன்றான். சிங்காசனத்தை

நோக்கி, பிதாவே எங்களுக்கு உமது ஆவியைத் தாரும் என்று அவர்கள் ஜெபிப்பதை நான் கண்டேன். அசுத்தமான செல்வாக்கை உண்டாக்கும் ஒன்றை சாத்தான் அவர்கள்மீது அப்பொழுது ஊதுவான்; அதிலே வெளிச்சமும் மிகுந்த வல்லமையும் இருந்தது; ஆனால், இனிய அன்பும், மகிழ்ச்சியும், சமாதானமும் இல்லை. அவர்களை ஏமாற்றத்தில் வைத்துவிட்டு, அதன்பின்னர், தேவனுடைய பிள்ளைகளை ஏமாற்றுவதே சாத்தானின் நோக்கமாக இருந்தது. (3) ★

# 11

# இக்கட்டுக் காலத்தில் நமக்கு முன்னர் வைக்கப்பட்டுள்ள கடமை!

இக்கட்டுக்காலத்திலே, நமது உலகப்பிரகாரமான தேவைகளுக்காக பொருளைச் சேர்த்துவைப்பது வேதாகமத்திற்கு ஒவ்வாதது என்பதை திரும்பத் திரும்ப தேவன் எனக்குக் காட்டினார். இந்த இக்கட்டுக் காலத்திலே, பரிசுத்தவான்கள் தங்களுக்கு ஆகாரத்தைச் சேர்த்து வைத்திருந்தால், அல்லது (அறுவடைசெய்யப்படாமல்) வயலில் விட்டிருந்தால், பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் நாட்டிலே பரவியிருக்கும் போது, பலாத்காரமான கரங்களால் அவர்களது ஆகாரம் பிடுங்கப்படும்; அவர்களது வயல்களோவெனில் அந்நியரால் அறுவடைசெய்யப்படும். தேவனை முழுவதும் நம்புவதற்கு அதுவே நமது நேரமாகும்; அவர் நம்மை ஆதரிப்பார். அந்தச் சமயத்திலே, நமது அப்பமும் தண்ணீரும் நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். பசியினாலோ தேவையினாலோ நாம் துன்பம் அனுபவிப்பதில்லை. வனாந்தரத்திலுங்கூட நமக்குப் பந்தியை ஆயத்தப்படுத்த நமது தேவன் வல்லமையுள்ளவரா யிருக்கிறார். எலியாவைப் போஷித்ததுபோல, தேவையானால் நம்மையும் தேவன் காகங்களைக்கொண்டு போஷிப்பார்; அல்லது இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்ததுபோல வானத்திலிருந்து மன்னாவைப் பொழியச்செய்வார். (1)

இந்த இக்கட்டுக்காலத்திலே, வீடுகளும் நிலங்களும் பரிசுத்தவான்களுக்கு பிரயோஜனமற்றதாக இருக்கும்; ஏனென்றால், கோபவெறிகொண்ட மக்களிடமிருந்து அவர்கள் தப்பியோட வேண்டியதிருக்கும். அந்தச் சமயத்திலே அவர்களது சொத்துக்களை விற்று, நிகழ்கால சத்தியத்தைத் துரிதமாக எடுத்துச்செல்ல முடியாது. பரிசுத்தவான்கள் இக்கட்டுக்காலம் வருமுன்னதாக சுமையான அனைத்துத்

தடைகளிலிருந்தும் தங்களை விலக்கி, பலியினாலே தேவனோடு உடன்படிக்கைசெய்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்பதை நான் கண்டேன். தங்களுடைய சொத்துக்களை தேவனுடைய பீடத்திலே படைத்து, தாங்கள் செய்யவேண்டிய கடமை இன்னதென்று தேவனிடம் சிரத்தையோடு கேட்டுவிசாரிக்கும்போது, அவைகளை எப்பொழுது விற்கவேண்டுமென்பதைப் போதிப்பார்; எனவே, இக்கட்டுக்காலத்திலே எந்தவித முட்டுக்கட்டையும் அவர்களை விழத்தள்ளாதபடி விடுதலைபெற்றிருப்பார்கள். (2)

யாராவது தங்களது சொத்துக்களை இறுகப்பற்றியவர்களாக தேவனிடம் தங்களது கடமை இன்னதென்று விசாரியாதிருப்பார் களானால், அவர்களது கடமை இன்னதென்று அவரும் வெளிப்படுத்த மாட்டார். அவர்களும் தங்களது சொத்துக்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்; ஆனால், இக்கட்டுக்காலத்திலோவெனில், இவர்களுக்கு முன்பாக அந்தச் சொத்துக்கள் வந்துநின்று மலையைப்போல் அழுத்தி நெருக்கும். அவர்கள் எவ்வளவாக விற்பதற்கு முயன்றாலும் விற்கமுடியாமற்போகும். "தேவனுடைய வேலை தளர்ந்துகொண்டே சென்றது. சத்தியத்திற்காக தேவனுடைய மக்கள் பசியோடிருந்தார்கள். நாங்கள் தேவையைப் பூர்த்திசெய்ய ஒரு முயற்சியையும் செய்யவில்லை. இப்பொழுது எங்களது சொத்துக்களால் எந்தவிதமான பயனுமில்லை. ஆ! எங்களது சொத்துக்களையெல்லாம் கொடுத்து, பரலோகத்தில் பொக்கிஷம் சேர்த்திருந்தோமானால் நலமாயிருந்திருக்குமே" என்று சொல்லியவாறு துக்கித்து அழுததை நான் கேட்டேன். "தியாகம்" பெருகவில்லை; அது குறைந்து, "ஒன்றுமில்லாமற்போனதை நான் கண்டேன்." தேவனுடைய மக்கள் அனைவரும் தங்களது சொத்துக்களை ஒரே சமயத்தில் விற்பதை தேவன் அவசியமாகக் கருதவில்லை என்பதையும் நான் கண்டேன். தேவன் போதிப்பதை அவர்கள் விரும்புவார்களானால், தேவையான சமயத்தில், எப்பொழுது விற்பது, எவ்வளவு விற்பது என்ற காரியத்தை அவர், அவர்களுக்குப் போதிப்பார். அட்வெந்து வேலையைத் தாங்குவதற்காக கடந்தகாலங்களில் சிலர் தங்களது சொத்துக்களை விற்பது அவசியமாயிருந்தது. வேறு சிலரோ தேவையான காலம்வரை தங்களது சொத்துக்களை வைத்துக்கொள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். வேலைக்குப் பணம் தேவையானபோது, விற்கவேண்டியது அவர்களது கடமையாகும். (3)

"உங்களுக்குண்டானவற்றை விற்று தானம் செய்யுங்கள்" என்ற தூதானது, ஒரு சிலரால் சரியான விளக்கத்தோடு கொடுக்கப்படவில்லை என்பதை நான் கண்டேன். நமது மீட்பர் கூறிய வார்த்தைகளின் நோக்கம்

தெளிவாக விளக்கிக் கூறப்படவில்லை. நன்றாக உழைத்துத் தங்களை காப்பாற்றிகொள்ளக் கூடியவர்களுக்கு கொடுப்பதல்ல விற்பதின் நோக்கம்; மாறாக, சத்தியத்தைப் பரப்புவதே அதன் நோக்கமாகும். நன்றாக உழைக்க முடிந்தவர்களுக்கு உதவிசெய்து, சோம்பேறித்தனத்தில் திளைக்கவைப்பது பாவமாகும். கூட்டங்களில் பங்கெடுப்பதை சிலர் ஆர்வத்தோடு செய்தார்கள். அவர்கள் வருவது தேவனை மகிமைப்படுத்துவதற்கல்ல; ஆதாயத்திற்காகவே; அப்பங்களுக்காகவும் மீன்களுக்காகவுமே. இப்படிப்பட்டவர்கள் வீட்டிலே இருந்து, தங்கள் கரங்களால் “நலமான காரியத்தைச்செய்து”, தங்கள் குடும்பத்தின் தேவைகளை நிரப்பி, இந்த அரிய நிகழ்கால சத்திய வேலையைத் தாங்கவும் கொஞ்சம் கொடுக்கலாம். இப்பொழுதே இக்கட்டுக்காலத்திற்கு ஆயத்தமாகும்படி பரலோகத்தில் பொக்கிஷத்தை சேர்த்துவைத்து, நமது இருதயங்களையும் ஒருநிலைப்படுத்த வேண்டும். கைகளில் சுத்தமுள்ளவர்களும் இருதயத்தில் மாசில்லாதவர்களுமே அந்த நெருக்கடியான காலத்தில் நிலைநிற்கமுடியும். நமது மனதிலும், நெற்றிகளிலும், இருதயங்களிலும் தேவனுடைய பிரமாணம் எழுதப்படவேண்டியதற்கு ஏற்ற காலம் இதுவே. (4)

உலகத்தைப்பற்றிய கவலைகளாலும் சிந்தனைகளாலும் நம்முடைய மனங்களை நிறையச்செய்வதினால் ஏற்படும் ஆபத்தைக்குறித்து தேவன் எனக்குக் காட்டினார். பரபரப்பூட்டும் சில புத்தகங்களை வாசிப்பதின்மூலம் சிலரது மனங்கள் நிகழ்கால சத்தியத்தினின்றும், வேதத்தை நேசிப்பதினின்றும் இழுத்துச்செல்லப் படுகிறதை நான் கண்டேன்; மற்றும் சிலரோ தாங்கள் என்னத்தை உண்போம்—குடிப்போம்—உடுப்போம் என்ற கவலையினாலும் குழப்பத்தினாலும் நிறைந்திருந்திருக்கிறார்கள். சிலர் ஆண்டவர் வர இன்னும் அதிக நாட்கள் செல்லும் என்ற நோக்கோடு இருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்த நேரத்தைவிட இன்னும் சில ஆண்டுகள் கடந்து சென்றுவிட்டன; எனவே, இந்த வழியிலே நிகழ்கால சத்தியத்தைவிட்டு அவர்களுடைய மனங்கள் உலகத்தை நோக்கி இழுத்துச்செல்லப்படுகிறது. இத்தகைய காரியங்களில் ஒரு பெரிய அபாயத்தை நான் கண்டேன்; ஏனென்றால், மனம் வேறு அநேகக் காரியங்களினால் நிறைந்திருக்குமானால், நிகழ்கால சத்தியம் வெளியே தள்ளி அடைக்கப்படுகிறது; எனவே, ஜீவனுள்ள தேவனின் முத்திரையைத் தரிப்பதற்கு நமது நெற்றிகளிலே இடமில்லாமற் போகிறது. இயேசு மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் இருப்பதற்கான காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டதையும், மேலும் மிகக் குறைந்த காலமே உண்டு என்பதையும் நான் கண்டேன்; எனவே, கடைசி நாளில் நம்மை நியாந்தீர்க்கும் வேதப் புத்தகத்தை ஆராய்வதில் நமது மீதியான நேரங்கள் செலவழிக்கப்பட வேண்டும். எனது அன்பான சகோதரர்களே—

சகோதரிகளே! தேவனுடைய கற்பனைகளும், இயேசு கிறிஸ்துவைக் குறித்த சாட்சியும் உங்கள் மனங்களிலே தொடர்ந்து கிரியைசெய்து, உங்களது உலகக் கவலைகளையும், சிந்தைகளையும் நெருக்கி புறம்பாகத் தள்ளிப் போடட்டும். நீங்கள் படுக்கும்போதும் எழுந்திருக்கும்போதும் இதுவே உங்களது தியானமாக இருக்கட்டும். முற்றிலுமாக மனுஷகுமாரனது வருகை சம்பந்தப்பட்ட காரியங்களைவைத்தே வாழ்ந்து நடந்துகாட்டுங்கள். முத்திரையிடுங்காலம் நெருங்கிவிட்டது; அது சீக்கிரம் நிறைவேறித்தீரும். நான்கு தூதர்களும் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கும் இந்த நேரமே, நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக்கொள்ளும் தருணமாகும். (5) ★

# 12

# சூழ்ச்சி நிறைந்த இரகசிய கதவுத் தட்டொலிகள்!

1850–ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 24–ம் தேதி “இந்த இரகசிய கதவுத் தட்டொலிகள் என்பது” சாத்தானின் வல்லமை என்பதை நான் கண்டேன். இவைகளில் சில சாத்தானிடமிருந்து நேரடியாக வந்தன. சில மறைமுகமாக அவனது கையாட்களின் மூலமாக வந்தன; ஆனால், இவை அனைத்தும் சாத்தானிடமிருந்தே தொடர்ந்து வந்தன. அவனது இந்த வேலையைப் பல வழிகளிலும் நிறைவேற்றிக்கொண்டான்; உலகிலும் சபைகளிலும் அநேகர் முழு இருட்டிலே மூழ்கியிருந்ததால், இதை தேவனுடைய வல்லமை என்றே நினைத்துப் பற்றிக்கொண்டார்கள். தூதன் என்னை நோக்கி: “ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?”

உயிருள்ளோர் அறிவைப் பெற்றுக்கொள்ளுவதற்காக மரித்தோரிடம் செல்லலாமா? மரித்தோர் ஒன்றும் அறியமாட்டார்கள். ஜீவனுள்ள தேவனை விட்டுவிட்டு மரித்தோரிடத்திற்கா போகிறீர்கள்?” அவர்கள் ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகி, ஒன்றும் அறியாத மரித்தோரிடம் உரையாடுகிறார்கள். (ஏசாயா 8:19,20) என்றான். (1)

இந்தக் கதவுத் தட்டொலிகளுக்கு விரோதமாகப் பேசுவதுங்கூட வெகு சீக்கிரத்தில் தேவ தூஷணம் என்று கருதப்படும் என்பதையும் நான் கண்டேன். இந்தக் காரியம் அதிகமதிகமாகப் பரவி, சாத்தானின் வல்லமையும் பெருகும். அவனுடைய பக்தியுள்ள பின்னடியார்களில் சிலர் அற்புதங்களைச் செய்யும் வல்லமைபெற்று, வானத்திலிருந்து மனிதருக்கு முன்பாக அக்கினியைக்கூட வரவழைக்கும் சக்தியைப் பெற்றிருப்பார்கள். இந்தத் தட்டொலிகளினாலும், வசியத்தினாலும் அநேக நவீன மந்திரவாதிகள் இயேசு கிறிஸ்து உலகில் செய்த அற்புதங்களைப்போலவே செய்வார்கள்; எனவே, மனுஷகுமாரன் இந்தப் பூமியில் செய்த மாபெரும் வேலைகளும்

இதே வல்லமையால்தான் செய்யப்பட்டது என்று அநேகர் நம்புவார்கள் என்று எனக்குக் காட்டப்பட்டது.[1] மேலும், மோசேயின் காலத்தில் நடந்தது எனக்குக் குறிப்பாகக் காட்டப்பட்டது. தேவன் பார்வோனுக்கு முன்பாகச் செய்த அநேக அதிசயங்களும், அடையாளங்களும் எகிப்தின் மந்திரவாதிகளால் போலியாக திருப்பிச் செய்துகாட்டப்பட்டது; எனவே பரிசுத்தவான்களுக்குக் கடைசி விடுதலை கிடைப்பதற்குச் சற்றுமுன்பாக, தேவன் தமது ஜனங்களுக்காக வல்லமையாக வேலைசெய்வார். தேவனுடைய அந்த வேலைகளைப் போலியாகச் செய்துகாட்டுவதற்கு, இந்த நவீன மந்திரவாதிகளும் அனுமதிக்கப்படுவார்கள். (2)

யேகோவாவின் வல்லமையான கரத்தைப் பற்றிப்பிடிப்பதற்கான தருணம் வெகு சீக்கிரத்தில் வருகிறது; ஏனென்றால், இந்த மாபெரும் அற்புதங்களும் அடையாளங்களும் தேவனுடைய மக்களை ஏமாற்றவும் அவர்களை முறியடிக்கவும் சாத்தானால் உருவாக்கப்படுகிறது. நமது எண்ணங்கள் தேவனிலே நிலைத்திருக்க வேண்டும். துன்மார்க்கர் பயப்படுவதுபோல் நாம் பயப்படக்கூடாது; அது, அவர்கள் பயப்படுவதற்கு நாமும் பயந்து, அவர்கள் பயபக்தி செலுத்தும் காரியங்களுக்கு நாமும் பயபக்தி செலுத்துவதைப் போலாகும்; ஆனால், சத்தியத்திற்காக வீரதீரத்தோடும் வல்லமையோடும் செயல்படவேண்டும். நம்முடைய கண்கள் மாத்திரமே திறக்கப்படுமானால், கேடுசெய்யும் தூதர்கள் நம்மைச் சுற்றிலும் இருப்பதையும், நம்மைத் தொல்லைப்படுத்தி அழித்துவிடுவதற்காக சில புதிய வழிகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்வதையும் காணலாம்; மேலும், தேவனுடைய தூதர்கள் அவர்களது வல்லமையினின்று, நம்மைப் பாதுகாப்பதையும் நாம் காணலாம். இஸ்ரவேலின் நன்மைக்காக அவர்கள்மீது தேவனுடைய கண்கள் எப்பொழுதும் விழிப்பாயிருக்கிறது. அவர்கள் தங்களது நம்பிக்கையை அவர்மீது வைத்துவிடுவார்களானால், அவர் தமது மக்களைப் பாதுகாத்துப் பராமரிப்பார். சத்துரு வெள்ளம் போன்று பிரவாகித்து வரும்போது, தேவனுடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றுவார். (3)

தூதன் என்னை நோக்கி: "மயக்கி தன்வயப்படுத்தும் நிலப்பரப்பிலே நீ நின்றுகொண்டிருக்கிறாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்றான். நாம் விழிப்பாயிருந்து, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொண்டு, விசுவாசமென்னும் கேடயத்தைப் பிடித்தவர்களாய் இருப்போமானால்தான், நிலைநிற்க முடியும். துன்மார்க்கரின் அக்கினியாஸ்திரம் நமக்கு தீங்கினை விளைவிக்க முடியாது என்பதையும் நான் கண்டேன். (4)

1 இந்தத் தரிசனம் கொடுக்கப்பட்டபோது, ஆவிமார்க்கமானது அப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டு, அந்த அமைப்பானது மிகச் சிறியதாக இருந்தது. ஆவிமார்க்கம் சார்ந்த ஊடகங்கள் மிகக் குறைவே; ஆனால், ஆரம்பமான இந்தக் காலத்திலிருந்து ஆவிமார்க்கமானது உலகம் முழுவதும் பரவிவிட்டது. இந்த மார்க்கத்தை ஆதரிப்பவர்கள் இலட்சக்கணக்கில் பெருகியிருக்கிறார்கள். பொதுவாக, இந்த ஆவிமார்க்கத்தார் பரிசுத்த வேதாகமத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்தவ மார்க்கத்தை எள்ளி நகையாடுபவர்களாக இருக்கின்றனர். தனிப்பட்ட அநேக நபர்கள் பல சமயங்களில் ஆவிமார்க்கத்தாரை எதிர்த்திருக்கிறார்கள்; அவர்களது நிலையைக் குறித்து வருந்தியிருக்கிறார்கள். ஒரு சிலரே இவ்வாறு செய்ததினால், அதைக் குறித்து எவருமே அக்கறைகொண்டு கவனம் செலுத்தவில்லை. தற்சமயம் ஆவிமார்க்கத்தார் தங்கள் வழிமுறைகளை மாற்றியமைத்து, தங்களை "கிறிஸ்தவ ஆவிமார்க்கத்தார்" என்ற பெயரால் அழைத்துக்கொள்ளுகின்றனர்; அதாவது மதத்தைப் புறக்கணிக்கவேண்டுமென்று சொல்லவில்லை என்றும், உண்மையான கிறிஸ்தவ விசுவாசம் தங்களிடம் உண்டு என்றும் கூறுகின்றார்கள். அநேக பிரபல பாதிரிமார்கள் ஆவிமார்க்கத்தில் ஈடுபாடு கொண்டவர்களாய் இருக்கிறார்கள் என்பதையும் நாம் மனதில்வைத்துப் பார்க்கும்போது, 1850–ல் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்டபடி, அதன் முழுமையான நிறைவேறுதலுக்கு வழிதிறக்கப்பட்டுள்ளது என்பதை நாம் இப்பொழுது காண்கிறோம். "ஒரு விளக்கம்" என்ற 21–ம் அதிகாரத்துடன் ஆசிரியர் கொடுத்திருக்கும் குறிப்புகளை வாசிக்கவும். ★

# 13

# தூதுவர்கள்!

நிகழ்கால சத்தியத்தின் வெளிச்சத்தில் வராத—சிதறிக்கிடக்கும் மாணிக்கங்கள் போன்ற ஆத்துமாக்களின் தேவைகள்பற்றியும் அவர்களது நிலைபற்றியும் தேவன் எனக்கு அடிக்கடி ஒரு தரிசனத்தைத் தந்தார். அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காகத் தூதை எடுத்துச்செல்வோர் வெகு வேகமாக எடுத்துச்செல்ல வேண்டுமென்பதும் எனக்குக் காட்டப்பட்டது. நம்மைச் சுற்றிலுமுள்ள அநேகரின் தப்பெண்ணங்கள் நீக்கப்பட்டு, தற்போதைய நம்முடைய நிலைக்கான காரியங்கள் வேதத்திலிருந்து அத்தாட்சிகளோடு விளக்கப்படுமானால், இந்த நிகழ்கால சத்தியத்தை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வார்கள். தேவனுடைய தூதை எடுத்துச்செல்வோர் ஆத்துமாக்களைக்குறித்துக் கணக்குக் கொடுக்க வேண்டியிருப்பதால், ஆத்துமாக்களுக்காக விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். நொறுங்குண்ட ஆவியோடும் கடின உழைப்பாலும் அவர்களது ஊழியம் அமைந்திருக்க வேண்டும்; ஏனெனில், மதிப்புள்ள ஆனால், கிறிஸ்துவினது அடிக்கடி கடுமையாகப் பாதிக்கப்பட்ட வேலையின் பளுவானது அவர்கள்மீது வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் உலகத்திற்கான கவர்ச்சிகளையும் வசதிகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தங்களுடைய முழு வல்லமையோடும் நிகழ்கால சத்தியத்தைத் துரிதப்படுத்துவதையும், அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களை இரட்சிப்பதையுமே தங்களது முதல் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். (1)

அவர்களுக்கும் விலையுயர்ந்த பரிசு ஒன்று உண்டு. மகிழ்ச்சியைத் தரும் அவர்களுடைய கிரீடங்களிலே, அவர்களால் காப்பாற்றப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்கள் நட்சத்திரங்களாக என்றென்றும் பிரகாசித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சத்தியத்தை அதன் தூய்மையான அழகிலே பிரசங்கித்ததினால், ஆத்துமாக்கள் அதை நேசித்து, அதன்மூலம் பரிசுத்தமாக்கப்பட்டு, அந்த விலையேறப்பெற்ற உரிமையினாலே ஐசுவரியவான்களாக்கப்பட்டு, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, தேவனால் மீட்கப்பட்ட அந்த மாபெரும் காரியத்தைச் செய்ததினால் ஏற்பட்ட திருப்தியை மகிழ்ச்சியோடு அனுபவிப்பார்கள். (2)

யார் நம்பிக்கைக்கு பாத்திரவான்களோ, யார் தேவனுடைய தூதுகள் அனைத்திலும் நிலைத்திருக்கிறார்களோ, யார் நிகழ்கால சத்தியத்திலே உறுதியாய்த் தரித்திருக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களிடம் வேத ஆதாரத்தில் நிலைத்திருக்கக்கூடிய முக்கியமான புதிய கருத்துக்களை விவரிக்கும் முன்பாக, மேய்ப்பர்கள் கலந்தாலோசிக்க வேண்டும். அப்பொழுது மேய்ப்பர்கள் பூரணமாக இணைந்திருப்பார்கள். அப்படிப்பட்ட மேய்ப்பர்களின் ஐக்கியமானது சபையால் நன்கு உணரப்படும். இந்த நடைமுறையானது வருத்தமுண்டாக்கும் பிரிவினைகளைத் தவிர்க்கும். தேவனின் அருமையான மந்தையானது, பிளவுபடும் அபாயமோ அல்லது மேய்ப்பனைவிட்டுச் சிதறடிக்கப்படும் அபாயமோ இருக்காது. (3)

தேவனுக்கு தம்முடைய வேலையில் பயன்படுத்துவதற்கேற்ற தூதுவர்கள் இருந்தார்கள் என்பதையும் நான் கண்டேன்; ஆனால், அந்தத் தூ துவர்களோ ஆயத்தமாக இருக்கவில்லை. மந்தையின்மீது நல்ல செல்வாக்கை பயன்படுத்தாத நிலையில் யோசனையற்று அற்பமாகக் காணப்பட்டார்கள். நன்மைசெய்வதற்காக கடவுளின் தூதுவர்கள் உணரவேண்டிய அளவிற்கு வேலையின் பளுவையும் ஆத்துமாக்களின் மதிப்பையும் உணரவில்லை. “கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவி லிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்.” என்று தூதன் கூறினான். அவர்கள் தங்களை தேவனுக்கு முற்றிலுமாக ஒப்படைத்து, சிதறடிக்கப்பட்ட மந்தைக்கு இப்பொழுது கொடுக்கப்படுகிற கடைசியான இரக்கத்தின் தூதினுடைய பயபக்தியையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்திருந்தாலொழிய அவர்களால் எந்த நன்மையையும் சாதிக்கமுடியாது. தேவனால் அழைக்கப்படாதவர்கள், இந்தத் தூதோடு செல்வதற்கு விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள்; ஆனால், இந்த வேலையின் பாரத்தையும் இந்த நிலையின் பொறுப்புகளையும் உணர்ந்திருப்பார்களானால், அஞ்சியவர்களாய் திகைத்து, அப்போஸ்தலனோடுகூடச் சேர்ந்து: “இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?” என்று கூறுவார்கள். இந்த வேலையைச் செய்ய இணங்கிவருகிறார்கள் என்பதற்கு ஒரு காரணம், தேவன் அவர்கள்மீது இந்த வேலையின் பாரத்தை வைக்கவில்லை என்பதே! முதலாம் இரண்டாம் தூதனுடைய தூதுகளைக் கூறி அறிவித்த அனைவரும், முற்றிலுமாக மூன்றாம் தூதுனின் தூதினை அணைத்துக் கொண்டிருந்தாலும் அதைக் கொடுக்கவேண்டியதில்லை. ஏனென்றால், தங்களது ஆத்துமாக்களைமாத்திரமே இரட்சித்துக்கொள்ளுமளவு சிலர் அநேக தவறுகளிலும் ஏமாற்றங்களிலும் தொடர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்ட முற்படுவார்களானால், மற்றவர் களை கவிழ்ப்பதற்கு அவர்களே காரணராகிவிடுவார்கள். முன்பு

கொள்கை வெறியில் அமிழ்ந்து ஓடியவர்களே, தங்களது கடந்தகாலக் குற்றங்களினின்று தூய்மையாக்கப்படுவதற்கு முன்னதாக—தேவன் அவர்களை அனுப்பும் முன்பாக—இப்பொழுது முதலாவது ஓட முற்படுவார்கள். இவர்கள் சத்தியத்தோடு தவறுகளையும் கலந்து, தேவனுடைய மந்தைக்கு ஆகாரமூட்டுகிறார்கள். இவர்கள் தொடர்ந்து அனுமதிக்கப்படுவார்களானால், மந்தையானது, நோய்வாய்ப்பட்டு—கவனந்திருப்பப்பட்டு, கடைசியில் மரணத்திற்குள்ளாகும் என்பதை நான் கண்டேன். அவர்கள் தங்களது பிழைகளினின்று பிரித்தெடுக்கப்படும்வரை, திரும்பத்திரும்ப சலிக்கப்பட வேண்டும்; அல்லது ஒருபோதும் இராஜ்யத்தில் பிரவேசிக்கவே முடியாது என்பதை நான் கண்டேன். தூதை எடுத்துச் செல்வோர், பிழைகளிலும் கொள்கைவெறியிலுமே இருப்பவர்களுடைய அறிவுக்கூர்மையிலும் தீர்ப்புகளிலும் நம்பிக்கைவைத்தல் கூடாது; எனவே, வரம்புமீறிப் பிழைபுரிவோரிடத்திலல்ல—சத்தியத்தில் நிலைத்திருப்போரிடம் அவர்கள் நம்பிக்கை வைக்கலாம். நிகழ்கால சத்தியத்தை அப்பொழுதுதான் ஏற்றுக்கொண்ட சிலரை பணித்தளத்திற்கு துரிதமாய் அனுப்பும் மனப்பாங்குடையவர்களாய் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் ஏராளமாகக் கற்கவும் செயலாற்றவும் வேண்டியதிருந்த போதிலும், தேவனுடைய பார்வையில் தாங்கள் குற்றமற்றவர்களாக இருக்கும் முன்பாக, மற்றவர்களுக்கு வழிகாட்ட முனைகிறார்கள். (4)

எங்கெல்லாம் கொள்கைவெறியேற்படும் சந்தர்ப்பம் உண்டாகிறதோ அங்கெல்லாம் விழிப்போடிருந்து, தூதை எடுத்துச்செல்வோர் அதைத் தடைசெய்யவேண்டுமென்ற அவசியத்தை நான் கண்டேன். எல்லாப் பக்கங்களிலும் சாத்தான் நெருக்கிக் கொண்டுவருகிறான். அவனைப்பற்றிய காரியத்தில் நாம் விழிப்பாயிருந்து, அவனது தந்திரங்கள், கண்ணிகள் முதலியவற்றிற்கு நமது கண்கள் திறக்கப்பட்டதாயிருந்து, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ள வேண்டும் அல்லது பொல்லாங்கனின் அக்கினி அம்புகள் நம்மைத் தாக்கிவிடும். தேவனுடைய புஸ்தகத்திலே ஏராளமான அருமையான சத்தியங்கள் அடங்கியுள்ளன; ஆனால், இப்பொழுது மந்தைக்குத் தேவையானது, “நிகழ்கால சத்தியமே”; தூதை எடுத்துச் செல்வோர் நிகழ்கால சத்தியத்தின் முக்கியமான கருத்துக்களைவிட்டு விலகியோடி, மந்தையின் ஐக்கியத்தினிடற்கோ அல்லது ஆத்துமாவின் தூய்மைக்கோ கொண்டுசெல்லும் காரியங்களைப்பற்றிச் சிந்தியாமலிருக்கும் அபாயத்தை நான் கண்டேன். தேவனுடைய வேலையை நாசப்படுத்துவதற்கான ஒவ்வொரு சாதகமான வாய்ப்புகளையும் சாத்தான் பயன்படுத்துவான். (5)

2,300 நாட்களைப்பற்றித் தொடர்புகொண்ட ஆசரிப்புக்கூடாரம், தேவனுடைய கற்பனைகள், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசம் ஆகிய தலைப்புகள் கடந்த அட்வெந்து இயக்கத்தைப்பற்றி முற்றிலுமாக விளக்குவதற்காக வைக்கப்பட்டவை. இவைகள் நம்முடைய தற்போதைய நிலை என்ன என்பதை அறியவும், சந்தேகிப்பவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், மகிமையான அந்த வருங்காலத்திற்கு ஒரு நிச்சயத்தைக் கொடுக்கவுமே வைக்கப்பட்டவை. தூதை கொண்டுசெல்பவர்கள் மேற்சொல்லப்பட்ட இந்தக் காரியங்களையே முக்கியத் தலைப்புகளாக வைத்து போதிக்க வேண்டுமென்பதை நான் அடிக்கடி தரிசனத்தில் கண்டேன். (6)

தேவனுடைய தூதை எடுத்துச்செல்வதற்காக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தங்களது வழியிலுள்ள ஒவ்வொரு தடைகளும் நீக்கப்படட்டும் என்று காத்திருப்பார்களானால், சிதறடிக்கப்பட்ட ஆடுகளைத் தேடி அநேகர் ஒருபோதும் செல்லமாட்டார்கள். அவர்கள் தங்கள் கடமைகளைவிட்டு பின்வாங்குவதற்காகச் சாத்தான் அநேகத் தடைகளை அவர்கள் முன்பாக வைப்பான்; ஆனால், அவர்கள் தங்களை அழைத்த அவருடைய வேலையைச் செய்வதற்காக, அவரை முற்றிலுமாக நம்பி, விசுவாசத்தோடு முன்னேறிச் செல்லவேண்டும். அவர்களுடைய நன்மைக்காகவும் அவருடைய மகிமைக்காகவும் அவர்களுக்கு முன்பாக எந்த அளவிற்குத் தேவையோ அந்த அளவிற்கு வழியைத் திறந்துவைப்பார். மாபெரும் ஆசிரியரும், மாதிரியுமான இயேசுவிற்குத் தலைசாய்க்க இடமில்லாதிருந்தது. கடின உழைப்பு, துயரம், துன்பம் ஆகியவற்றால் நிறைந்ததாகவே அவரது வாழ்க்கை அமைந்திருந்தது. அவர் நமக்காக தம்மையே கொடுத்தார். கிறிஸ்துவிற்குப் பதிலாக, ஆத்துமாக்களை தேவனிடத்தில் ஐக்கியப்படுத்தும்படி மன்றாடுகிறவர்களும், மகிமையிலே கிறிஸ்துவோடு அரசாள நம்பிக்கைகொண்டோரும், அவருடைய பாடுகளிலே பங்கனுபவிப்பதை எதிர்பார்க்கவேண்டும். “கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டே போகிறான்; ஆனாலும், தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்”–சங்கீதம் 126:5,6. (7) ★

# 14

# மிருகத்தின் முத்திரை!

1850–ம் ஆண்டு, ஜூன் மாதம் 27–ம் தேதி கொடுக்கப்பட்ட தரிசனத்திலே என்னுடன் வந்த தூதன் என்னை நோக்கி: “காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது. இயேசுவின் இனிய சாயலை நீ பிரதிபலிக்கவேண்டிய பிரகாரம் பிரதிபலிக்கிறாயா?” என்று கேட்டான். பின்னர் சமீபத்தில் மூன்றாம் தூதனின் தூதை ஏற்றுக்கொண்டவர் களுக்குள் ஒரு ஆயத்தமாகும் நிலை ஏற்படவேண்டுமென்று பூமியைக்குறித்து எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. “ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாகுங்கள், இதுவரை என்றும் நீங்கள் பார்த்திராதவண்ணம் உலகத்திற்காக நீங்கள் மாபெரும் மரணத்தை ருசிபார்க்கவேண்டும்” என்று தூதன் கூறினான். அவர்களுக்காக மாபெரும் வேலை செய்யப்படவேண்டுமென்பதையும், ஆனால், அதைச் செய்வதற்கோ காலம் குறுகியதாயிருந்தது என்பதையும் நான் கண்டேன். பாதுகாப்பில்லாத அநேகர்மீது கடைசி ஏழு வாதைகளும் சீக்கிரமாக ஊற்றப்படப்போகிறது என்பதையும் நான் கண்டேன். பூமியில் விழவிருக்கின்ற அநேக நீர்த்துளிகளைப்பற்றி எந்தவித அக்கறையும் எவரும் காட்டாமலிருப்பார்களோ, அதைவிடவும் அதிகமாக இந்த உலகின்மீது கொட்டப்படவிருக்கும் ஏழு வாதைகள்பற்றி எவரும் எந்தவித அக்கறையுங்கொள்ளவில்லை. தேவனின் கோபாக்கினையாகிய அந்த ஏழு கடைசி வாதைகளின் பயங்கரமான தோற்றத்தை நான் தாங்கிக் கொள்ளும்படியாகத் தகுதிப்படுத்தப்பட்டேன். அவரது கோபம் அச்சம் தருகின்றதாயும் பயங்கரமாயும் இருப்பதை நான் கண்டேன். அவர் தமது கரத்தை நீட்டினாலோ அல்லது கோபத்தினால் உயர்த்தினாலோ பூமியின் குடிகள் அவர்கள் ஒருபோதும் இருந்திராதவண்ணம் ஆகிவிடுவார்கள்; அல்லது தீராத புண்களும், தளர்வுண்டாக்கும் வாதைகளும் அவர்கள்மீது உண்டாகும். அவர்கள் விடுதலைபெறாமலே அவற்றால் நாசமடைவார்கள். பயங்கரம் என்னைப் பிடித்துக்கொண்டதால், தூதனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, அந்தத் தோற்றத்தை என்னைவிட்டு அகற்றுமாறு கெஞ்சினேன். இது மிகவும் பயங்கரமானதால், என்னைவிட்டு மறைத்துப்போடும்படியாகக்

கெஞ்சினேன். அப்பொழுதுதான் முன்பு ஒருபோதும் இராதவண்ணம் வேத வசனங்களை கவனமாய் ஆராய்வதின் முக்கியத்துவத்தை நான் உணர்ந்தேன்: மேலும் மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி, அதன் முத்திரையை தங்களது நெற்றிகளிலும் கைகளிலும் தரித்துக்கொண்ட அவபக்தியானவர்கள்மீது வேத வசனத்தின்படி வரவிருக்கும் வாதைகளுக்கு எவ்வாறு தப்புவது என்பதையும் நான் அறிந்தேன். இவ்வளவு பயங்கரமான அச்சுறுத்தல்களும் கண்டனங்களும் இருக்கும்போது, எப்படி அவர்கள் தேவனுடைய கற்பனைகளைமீறி, அவரது பரிசுத்த ஓய்வுநாளை மிதித்துப்போட முடியுமென வியந்தேன்! (1)

போப்பானவர் ஓய்வுநாளை ஏழாம்நாளிலிருந்து முதலாம் நாளிற்கு மாற்றிப்போட்டார். மனிதன் தனது சிருஷ்டிகரை நினைவுகூருவதற்காகக் கொடுக்கப்பட்ட அந்தக் கற்பனையையே மாற்றுவதற்கு அவர் நினைத்தார். பிரமாணத்தில் சொல்லப்பட்ட மாபெரும் கட்டளையை மாற்ற நினைத்து, தன்னை தேவனுக்கு ஒப்பாகவும் அல்லது அவருக்கு மேலாகவுங்கூட உயர்த்த எண்ணினார். தேவன் மாறாதவராயிருப்பதுபோல, அவரது பிரமாணமும் மாறாத தன்மை வாய்ந்தது. பரிசுத்தமும், நீதியும், நன்மையும் வாய்ந்த அவரது மாறாத கட்டளைகளை மாற்ற வழிதேடியதின்மூலம், தேவனுக்கும்மேலாக போப்பு தன்னை உயர்த்திக்கொண்டார். தேவனுடைய பரிசுத்த நாளைக் காலின் கீழ்ப்போட்டு மிதித்துப்போட்டார்; மேலும், தமது சொந்த அதிகாரத்தினால் வேலைசெய்கின்ற ஆறுநாட்களில் ஒருநாளை அந்த இடத்தில் ஏற்படுத்திவைத்தார். நாடு முழுவதுமே மிருகத்தைப் பின்பற்றி, தேவனுடைய பரிசுத்த நேரத்தை ஒவ்வொரு வாரமும் திருடுகிறார்கள். தேவனுடைய பரிசுத்த பிரமாணத்திலே ஒரு உடைப்பை போப்பு ஏற்படுத்திவிட்டார். ஆனால், தேவனுடைய மக்களால் இந்த உடைப்பு அடைக்கப்படவேண்டுமென்றும், பாழான இடங்கள் கட்டப்பட வேண்டுமென்றும், அதற்கான காலம் முற்றிலுமாக வந்துவிட்டதென்பதையும் நான் கண்டேன். (2)

தேவ தூதனை நோக்கி, வழிவிலகிப்போன அவரது மக்களை இரட்சிக்குமாறும், அவருடைய கிருபையினிமித்தம் காப்பாற்றுமாறும் கெஞ்சி மன்றாடினேன். வாதைகள் ஊற்றப்பட ஆரம்பிக்கிறபோது, பரிசுத்த ஓய்வுநாளை தொடர்ந்து மீறிக்கொண்டுவந்தவர்கள், இப்பொழுது ஓய்வுநாளைக் கைக்கொள்ளாதபடி அவர்கள் சொல்லும் சாக்குப்போக்குகளைக்கூட வாய்திறந்து சொல்லிக் கெஞ்சவில்லை. வாதைகள் ஊற்றப்படும்போது, அவர்களது வாய்கள் மூடப்படும். யாரெல்லாம் அவருடைய பரிசுத்தப்பிரமாணத்தைக் கேலிசெய்தார்களோ, அவருடைய ஓய்வுநாளை,

“மனிதனுக்கு ஒரு சாபம்,” “துயரம் மிகுந்தது”, “எலும்புக்கூடு” என்று அழைத்தார்களோ, அவர்களுக்கு மாபெரும் பிரமாணத்தின் நியாயத்தைச் செய்யவேண்டியது அவசியமாயிற்று. பிரமாணத்தின் இரும்புப்பிடி அவர்களைப் பிடிக்கும்பொழுது, பிரமாணத்தைப்பற்றிய விளக்கங்கள் உயிருள்ள எழுத்துக்களாக அவர்கள் முன்னர் காட்சிதரும். பிரமாணத்தைப்பற்றிய வேத வசனங்கள் பரிசுத்தமும், நீதியும், நன்மையுமாய் இருக்கிறதென்று கூறும்பொழுது, தாங்கள் அதைப் பரிகாசஞ்செய்த பாவத்தைக்குறித்து அப்பொழுதுதான் உணருவார்கள். (3)

பின்பு, எனக்குப் பரலோகத்தின் மகிமையும் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற பொக்கிஷங்களும் சுட்டிக்காட்டப்பட்டது. எல்லாம் இனிமையாயும் மகிமையாகவும் காணப்பட்டன. தூதர்கள் இனிய பாடல்களைப் பாடுவார்கள். பின்னர் தங்களது பாடல்களை நிறுத்திவிட்டு, தங்களது தலையிலுள்ள கிரீடங்களை எடுத்து அழகுள்ள இயேசுவின் பாதங்களில் ஜொலிக்கும்படியாக அதைச் சமர்ப்பித்து, பின்னர் இனிய தொனியிலே, “மகிமை! அல்லேலூயா!” என்று பாடுவார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து, ஆட்டுக்குட்டியானவருக்குக் கனமும் புகழ்ச்சியும் உண்டாக்கும் பாடல்களைப் பாடினேன். அவரைத் துதிப்பதற்கு ஒவ்வொரு தடவையும் எனது வாயைத் திறந்தபோது, விவரிக்கமுடியாத மகிமை என்னைச் சூழ்ந்ததை நான் உணர்ந்தேன். அது மகா மேன்மையான— உன்னதமான மகிமையாகும். தூதன் என்னை நோக்கி: “தேவனை நேசித்து, அவரது கற்பனைகளைக் கைக்கொண்டு, கடைசிவரை உண்மையாக இருக்கும் மீதியான இந்தச் சிறுகூட்டமே இந்த மகிமையை அனுபவித்து, இயேசுவின் பிரசன்னத்தில் எப்போதும் தங்கியிருந்து, பரிசுத்த தூதர்களோடு பாடல்களைப் பாடும் வாய்ப்பையும் பெறுவார்கள்” என்று கூறினான். (4)

பின்னர், அந்த மகிமையைக் காண்பதைவிட்டு பூமியிலிருக்கும் மீதியானவர்களைப் பார்க்கும்படி எனக்குக் குறித்துக் காட்டப்பட்டது. தூதன் அவர்களை நோக்கி: “கடைசி ஏழு வாதைகளினின்று தப்பித்துக்கொள்வீர்களா? அவரை நேசித்து, அவருக்காக எல்லாப் பாடுகளையும் அனுபவிக்க சித்தமாயிருந்து, அவர் உங்களுக்காக ஆயத்தஞ்செய்திருக்கும் அந்த மகிமைக்குள் களிகூரும் பாக்கியத்தைப் பெறுவீர்களா? அப்படி ஜீவனோடிருக்க விரும்பினால், நீங்கள் நிச்சயமாகச் சாகவேண்டும். ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாகுங்கள்! இப்போது இருப்பதைக்காட்டிலும் மேலும் அதிகமான ஆயத்தம் தேவை. ஏனெனில் மிகுந்த கோபத்தோடும் உக்கிரத்தோடும் தேவனுடைய நாள் வருகிறது. அது பூமியைப் பாழாக்கி, அதிலுள்ள துன்மார்க்கரை நிர்மூலமாக்கும்.

தேவனுக்கு எல்லாவற்றையும் தியாகஞ்செய்யுங்கள். உங்களையும் உங்களுக்குண்டான உடமைகளையும், எல்லாவற்றையும் ஜீவ பலியாக படைத்தால்மாத்திரமே மகிமைக்குள் பிரவேசிக்கமுடியும். மகிமைக்குள் பிரவேசிக்கவேண்டுமானால், அனைத்தும் தத்தம்செய்யப்படவேண்டும். உங்களுடைய பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்துவையுங்கள். அங்கே திருடர்களால் தொடவும் முடியாது; துருவும் பிடிப்பதில்லை. இனிவரும் மகிமையில் அவரோடுகூடப் பங்கடையவேண்டுமானால், இங்கு அவரது பாடுகளிலும் நிச்சயமாகப் பங்காளிகளாக இருக்கவேண்டும்" என்று கூறினான். (5)

பாடுகளின்மூலம் பரலோகத்தைப் பெறுவோமானால், அது மிக எளிதாகக் கிடைக்கும். நமது வழியெல்லாம் சுயத்தை முற்றிலுமாக வெறுக்க வேண்டும். நம்முடைய "சுயம்" தினமும் சாகவேண்டும். இயேசுமாத்திரமே நம்மில் காணப்படவேண்டும். அவருடைய மகிமையை தொடர்ச்சியாக நமது பார்வையில் வைத்திருக்கவேண்டும். சமீபத்திலே சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்துவிற்காகப் பாடனுபவிப்பது என்றால் என்ன என்பதை அறிந்திருக்கவேண்டுமென்பதையும் நான் கண்டேன். அவர்கள் பாடனுபவிப்பதன்மூலமாக தூய்மையாக்கப்பட்டு—ஜீவனுள்ள தேவனின் முத்திரையைத் தரித்துக்கொள்ள தகுதியாக்கப்பட்டு, இக்கட்டுக்காலத்தைக் கடந்துசென்று, இராஜாவை அவரது பூரண அழகிலே கண்டு, தேவனுடைய—அவரது தூய்மையான பரிசுத்த தூதர்களுடைய பிரசன்னத்திலும் தங்கியிருக்க கடுமையான—ஆழ்ந்த—வேதனையைத் தரக்கூடியதான—மிகுந்த பலவித உபத்திரவங்களைக் கடந்துசெல்லவேண்டும். (6)

அந்த மகிமையைச் சுதந்தரித்துக்கொள்வதற்காக நாம் எப்படியிருக்க வேண்டுமென்பதையும், அந்த மேலான ஐசுவரியமான சுதந்திரத்தை நாம் பெறும்படியாக, இயேசு எவ்வளவாகப் பாடனுபவித்தார் என்பதையும் நான் கண்டேன். நாம் சோதனைகளிலே பின்வாங்கிப்போகாதபடிக்கு, கிறிஸ்துவின் பாடுகளிலே ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று ஜெபித்தேன். இயேசு நமக்காக பாடனுபவித்ததை அறிந்தவர்களாய் அவரது தரித்திரம், பாடுகள்மூலமாக நாம் ஐசுவரியத்தை அடையும்படிச் செய்ததினாலே, நாம் துன்பங்களை பொறுமையோடும் மகிழ்ச்சியோடும் சகிக்கவேண்டும். "சுயத்தை வெறுத்துவிடு: நீ வேகமாக அடியெடுத்து வைக்கவேண்டும்" என்று தூதன் கூறினான். நம்மில் சிலருக்கு சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள நேரமிருந்தது. ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து முன்னேறினோம். ஒவ்வொரு அடியெடுத்து வைத்தபோதும், அது அடுத்த அடியெடுத்துவைக்க பெலனைத் தந்தது: ஆனால், இப்பொழுது காலமோ

ஏறக்குறைய முடிந்துவிட்டது. நாம் வருடக்கணக்காகக் கற்றதை, அவர்கள் சில மாதங்களுக்குள் கற்றுத்தீரவேண்டும்: அதுமாத்திரமல்ல, தவறாகக் கற்றவைகளை மறக்கவேண்டும்—புதிதாகக் கற்கவேண்டும். சட்டம் பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்படும்போது, மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் தரித்துக்கொள்ளாதவர்கள் இப்பொழுது திடமான முடிவுசெய்து: "முடியாது, மிருகத்தின் கொள்கைகளை நாங்கள் மதிக்கமாட்டோம்" என்று கூறவேண்டும். (7) ★

# 15

# குருடருக்கு குருடர் வழிகாட்டுதல்!

குருடரான வழிகாட்டிகள் எவ்வாறு பாடுபட்டு உழைத்து, தங்கள்மீது என்ன வந்துகொண்டிருக்கிறது என்பதைச் சற்றும் உணராமல், தங்களைப் போலவே ஆத்துமாக்களையும் குருடாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் கண்டேன். சத்தியத்திற்கு எதிராக அவர்கள் தங்களை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது ஊழியமானது வெற்றியைத் தழுவும்போது, அவர்கள் கடவுளுடைய மனிதர்கள்தான் என்று நினைத்து வெளிச்சத்திற்காக அவர்களை நோக்கிப்பார்த்த அநேகர் கலக்கமடைகிறார்கள். ஓய்வுநாள் சம்பந்தப்பட்ட கருத்துக்களை இந்தத் தலைவர்களிடம் அவர்கள் வினவுகிறார்கள். அவர்களோவெனில், நாலாம் கற்பனையை ஒழித்துவிடும் நோக்கத்தோடு, அதற்குத் தகுந்தவிதத்தில் பதில் கூறுகிறார்கள். ஓய்வுநாளுக்கு விரோதமாக அவர்கள் எடுக்கும் எல்லா நிலைகளிலும் இயல்பான நேர்மை மதிக்கப்படவில்லை என்பதையும் நான் கண்டேன். யோகோவாவினால் ஆசீர்வதிக்கப்பட்டு—பரிசுத்தமாக்கப்பட்ட அந்த தேவனுடைய நாளை விட்டுவிட்டு, மற்ற நாளை ஆசரிப்பதே முக்கிய நோக்கமாகும். வாதஞ்செய்ய நேரும்போது, ஒரு நிலையிலிருந்து அவர்கள் விரட்டப்படுவார்களானால், அவர்களாலேயே பிரயோஜனமற்றது, ஒன்றுக்கும் உதவாதது என்று தீர்க்கப்பட்ட முரண்பாடான நிலையிலிருந்து மறுபடியும் பேசுவார்கள். (1)

விசுவாச ஐக்கியத்திலே தேவனுடைய மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். வேதாகம ஓய்வுநாளை ஆசரிப்பவர்கள் வேத சத்தியக் கருத்துக்களிலும் ஐக்கியப்பட்டவர்களாயிருக்கிறார்கள். வருகையை எதிர்நோக்கும் அட்வெந்து மக்களுக்குள் ஓய்வுநாளை எதிர்ப்பவர்கள் தங்களுக்குள் ஐக்கியமின்றி விபரீதமாகப் பிரிந்துகிடக்கிறார்கள். அவர்களில் ஒருவர் முன்னேவந்து, ஓய்வுநாளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்: அது

அப்படித்தான் என்று அறிவிக்கிறார். முடிவிலே அந்தக் காரியம் அப்படியே முடிவாகிவிட்டதென்றும் கூறிவிடுகிறார். இந்த ஓய்வுநாள் பிரச்சினையை அவரது முயற்சி சரிப்படுத்தாததினாலும், ஓய்வுநாள் சத்தியம் முன்னேறிச் செல்வதாலும், தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து அதைக் கைக்கொள்ளுவதாலும், இன்னொருவர் அதைத் தள்ளிப்போட முன்வருகிறார். ஓய்வுநாளை விட்டொழிக்கும்படி தங்கள் கருத்துக்களைக் கூறும்போது, யாரால் சத்தியத்திற்கு விரோதமாக முதல் முயற்சிசெய்யப்பட்டதோ, அவரது விவாதங்களையே முற்றிலுமாக உடைத்துப்போட்டு விவாதிப்பார்கள். நமக்கும் அவரது சொந்தக் கருத்துக்கும் விரோதமாகவே ஒரு புதிய கருத்தை முன்வைப்பார்கள். மூன்றாவதிலும் நான்காவதிலும் இவ்வாறே "ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" என்று வேத வசனம் நிலைநாட்டுவதுபோல், இவர்கள் எவரிடத்திலும் இந்தக் கருத்து இருக்காது. (2)

இப்படிப்பட்ட மாம்ச சிந்தையுள்ளவர்கள், இதனாலே தேவனுடைய பரிசுத்த பிரமாணத்திற்கு கட்டுப்பட்டிருக்கவில்லை என்பயையும் நான் கண்டேன். அவர்கள் தங்களுக்குள்ளேயும் ஒத்துபோகிறதில்லை. இருப்பினும் தங்களுடைய கருத்து முடிவுகளோடு கடினமாக உழைத்து, வேதவாக்கியங்களைத் திரித்து, தேவனுடைய பிரமாணத்திலே உடைப்பை ஏற்படுத்தி, மாற்றியும், அழித்தும் நாலாம் கற்பனையை ஆசரிப்பதைவிட வேறு ஏதாவது செய்வதற்கே முயற்சிக்கிறார்கள்: இதைப்பற்றிய கேள்வியிலே மந்தையை வாய்மூடச்செய்ய விரும்புகிறார்கள். அதனால், அவர்களை அமைதிப்படுத்தத்தக்கதாக நம்பிக்கையோடு ஏதாவது ஒன்றைச் செய்கிறார்கள். அவர்களைப் பின்பற்றும் அநேகர் வெகு குறைவாகவே தங்களது வேதத்தை ஆராய்ச்சிசெய்கிறார்கள். எனவே, அவர்களது தலைவர்கள் தவறுகளை உண்மைபோலத் தெரியும்படி மிகச் சுலபமாக அவர்களுக்குக் காட்டமுடியும். அதை நம்புகிறவர்களும் அப்படியே ஏற்றுக்கொள்வதினால், தங்கள் தலைவர்களைவிட எந்தவிதத்திலும் உயர்மட்டத்திற்கு வர அவர்களால் இயலாமற்போகிறது. (3) ★

# 16

# முடிவிற்கான ஆயத்தம்!

1850–ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 7–ம் நாள் அன்று நியூயார்க்கிலுள்ள ஆஸ்விகோ என்ற இடத்தில் தேவன் பின்வருமாறு காட்டினார். தேவனுடைய அந்தநாளிலே, தேவனுடைய மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதற்குமுன்னதாக, அவர்களுக்காக மாபெரும் வேலை செய்யப்படவேண்டுமென்று காட்டப்பட்டது. அட்வென்டிஸ்டுகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் நிகழ்கால சத்தியத்தை ஒதுக்கித்தள்ளுவது எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது; மேலும், அவர்கள் விழுந்துபோவதையும் தேவனுடைய கரம் அவர்களைப் பிரித்து, கடைசியாக ஆத்துமாக்களைச் சேகரிக்கும் அந்த நேரத்திலே, அவர்கள் சிதறியடிக்கப்படுவதையும் கண்டேன்: ஏனெனில், அவர்களிடையே காணப்பட்ட மாணிக்கங்கள்போன்ற அருமையான விசுவாசிகள் முன்னரே அவர்கள் ஏமாற்றப்பட்டிருந்தபோதிலும், இப்பொழுது கண்கள் திறக்கப்பட்டவர்களாய் தங்களுடைய உண்மையான நிலையைக் காணக்கூடும். இப்பொழுதோ தேவனுடைய ஊழியர்களால் சத்தியம் எடுத்துச்சொல்லப்பட்டபோது, அவர்கள் அதைக் கவனித்து, அதன் அழகையும் இசைவையும் காண ஆயத்தமாயிருந்தார்கள். மேலும், தங்களது பழைய தோழர்களையும் தாங்கள் கொண்டிருந்த பிழையான கருத்துக்களையும் விட்டுவிட்டு, அருமையான சத்தியத்தை அணைத்துக்கொண்டு, தங்கள் நிலையை விளக்கக்கூடிய வகையில் நிலைத்துநின்றார்கள்.

தேவனுடைய ஓய்வுநாளை எதிர்ப்பவர்கள், நம்முடைய நிலை தவறானது என்று காட்டுவதற்காக, வேதாகமத்தை எடுக்கக்கூடாது என்று கூறுவதையும் நான் கண்டேன். அதனாலே ஓய்வுநாள் சத்தியத்தை நம்பி, அதைப் போதிப்பவர்களை அவதூறாகப் பேசி, அவர்களுடைய மதிப்பைக் கெடுக்கும்விதத்தில் தாக்குவார்கள். மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு, தேவனையும் அவருடைய வசனத்தையும் நேசித்தவர்களில் அநேகர், சத்தியத்தின் வெளிச்சத்தை மறுத்ததால், இருதயத்திலே கடினப்பட்டு, பரிசுத்த ஓய்வுநாளை நேசிப்பவர்களைப்பற்றி, பழிபாவத்திற்கஞ்சாமல்

பொய்யாக எடுத்துக்கூறி, தவறாக குற்றஞ்சாட்டத் தயங்கமாட்டார்கள். இவ்வாறு செய்வதின்மூலம், சத்தியத்தை பயமின்றி எடுத்துரைப்பவர்களது செல்வாக்கைக் கெடுக்கமுடியும்: ஆனால், இந்தக் காரியங்கள் தேவனுடைய வேலையைத் தடைப்படுத்தாது. சத்தியத்தை வெறுப்பவர்களால் பின்பற்றப்படும் இந்த வழிமுறையானது, சிலரது கண்களைத் திறப்பதற்கு ஏதுவான வழியையுண்டாக்கும். ஒவ்வொரு மாணிக்கக்கல்லும் வெளியேகொண்டுவரப்பட்டு, கூட்டிச்சேர்க்கப்படும். அவருடைய மீதியான மக்களைக் கூட்டிச்சேர்ப்பதற்காக தேவனுடைய கரம் உறுதிப்பட்டுள்ளது. அந்த ஊழியத்தை உன்னத மகிமையோடு நிறைவேற்றுவார். (2)

சத்தியத்தை விசுவாசிக்கிற நாம், நம்முடைய நன்மையான காரியங்கள் தீமையாகப் பேசப்படும்படி சந்தர்ப்பம் அளிக்காதபடி, வெகு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் வேதாகமத்திற்கு இணைந்துபோகிறதா என்று அறியவேண்டும். நாம் அடிபிறழும்போதும் குற்றஞ்செய்யும்போதும் 1843–ல் சில துன்மார்க்கர் செய்ததுபோல், தேவனுடைய கற்பனையை வெறுப்பவர்கள் நம்மீது வெற்றிகொள்வார்கள். (3)

1851–ம் ஆண்டு, மே மாதம் 14–ம் நாள் நான் இயேசுவின் அழகையும் இனிய தோற்றத்தையும் கண்டேன். அவரது மகிமையைக் காணும்போது அவரது பிரசன்னத்தினின்று எப்போதாவது பிரிந்திருக்கவேண்டுமே என்ற நினைவு எனக்குத் தோன்றவேயில்லை. பிதாவைச் சுற்றிலுமிருந்த மகிமையினின்று ஒரு ஒளி பிரகாசித்தது. அந்த ஒளி என்னை நோக்கி நெருங்கும்போது, எனது உடல் நடுநடுங்கி இலையைப்போலப் படபடத்தது. அந்த ஒளி என் பக்கத்தில் நெருங்கிவருமானால், நான் உயிரோடிராதபடி அழிக்கப்பட்டுப் போவேன் என்று நினைத்தேன்: ஆனால், அந்த ஒளி என்னைக் கடந்துசென்றது. இப்பொழுதுதான் எப்படிப்பட்ட மாபெரும் பயங்கரமான தேவனிடம் தொடர்புகொண்டுள்ளோம் என்ற எண்ணம் என்னில் தோன்றிற்று. தேவனுடைய மகா பரிசுத்தத்தைப்பற்றி சிலர் எவ்வாறு தெளிவற்ற கருத்துக்களைக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், சிலரால் பேசப்படுகிற அந்த தேவன், எவ்வளவு மகா வல்லமையும் பயங்கரமுமான தேவன் என்பதையும் சற்றும் உணராமலேயே, எவ்வளவிற்கு அதிகமாக அவரது பரிசுத்தமான பயபக்திக்குரிய நாமத்தை வீணிலே வழங்குகிறார்கள் என்பதையும் கண்டேன். ஜெபிக்கும்போது, கவலையீனமான—அவபக்தியான வார்த்தைகளை அநேகர் உபயோகிக்கிறார்கள்; அது தேவனுடைய மென்மையான ஆவியைத் துக்கமடையச்செய்து, அவர்களது விண்ணப்பங்கள் பரலோகத்திற்குச் செல்லாதபடிக்குத் தடைசெய்துபோடுகிறது. (4)

இக்கட்டுக்காலத்திலே, பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் பிரதான ஆசாரியர் இல்லாத வேளையில், தேவனுடைய முன்னிலையில், எவ்வாறு இருந்தால் மாத்திரம் வாழமுடியுமென்பதை அநேகர் விளங்கிக் கொள்ளாமலிருப்பதையும்நான்கண்டேன். ஜீவனுள்ளதேவனின்முத்திரையைத் தரித்துக்கொண்டவர்களாய், இக்கட்டுக்காலத்தில் காப்பாற்றப்படுகிறவர்கள் இயேசுவின் சாயலை முற்றிலுமாகப் பிரதிபலிக்கவேண்டும். (5)

மிகத் தேவையான ஆயத்தமாயிருத்தலை அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிற அநேகரை நான் கண்டேன். அவர்கள் “மறுமலர்ச்சியும்” “பின்மாரி”யும் கிடைக்கப்போகும் காலத்தை நோக்கியிருந்து, தேவனுடைய அந்த நாளிலே அவருக்கு முன்பாக நிற்கவும், அவரது பார்வையிலேயே வாழவும், அது தங்களைத் தகுதியுள்ளவர்களாக்கும் என நினைத்தார்கள். ஆ! எத்தனை பேர் அந்த இக்கட்டுக்காலத்திலே புகலிடமின்றியிருந்தார்கள். செய்யவேண்டியதான—தேவையான ஆயத்தத்தை அவர்கள் அலட்சியஞ்செய்துவிட்டார்கள். ஆதலால், தேவனின் பார்வையிலே வாழத் தகுதியுள்ளவர்களாவதற்கு நிச்சயமாகப் பெறவேண்டிய அந்த மறுமலர்ச்சியை அவர்களால் பெறமுடியவில்லை. தீர்க்கதரிசிகளால் எச்சரிக்கப்படுவதை சிலர் வரவேற்பதில்லை. சிலர் முழுச் சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து, ஆத்துமாக்களைத் தூய்மைப்படுத்தத் தவறிவிடுகிறார்கள். தாங்கள் உண்மையாகவே இருக்கும் நிலையைவிட, நாம் எவ்வளவோ மேலான நிலையில் இருக்கிறோமென்று தங்களுக்குள்ளாக நம்பிக்கொள்ளுகிறார்கள். மேற்சொன்ன குணங்களையுடையோர் வாதைகள் ஊற்றப்படும் காலத்தை அடையும்போதுதான், கல் எவ்வாறு வெட்டப்பட்டு, சதுரமாக பணிதீர்க்கப்பட்டு, கட்டிடத்திற்குத் தகுதியாக ஆக்கப்படவேண்டுமோ, அவ்வாறு தாங்களும் ஆக்கப்படவேண்டிய தேவை எவ்வளவு என்று அறிவார்கள்: ஆனால், அப்பொழுது அதைச் செய்வதற்கோ நேரம் கிடையாது. பிதாவிற்கு முன்பாக அவர்கள் காரியத்தைப் பேசுவதற்கு மத்தியஸ்தரும் கிடையாது: இந்த காலத்திற்கு முன்பே, மாபெரும் பயங்கரமான—பக்திவிநயமான அறிவிப்பு கொடுக்கப்பட்டது. “அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்” என்பதே அது. ஒவ்வொரு பாவம், பெருமை, தன்னலம், உலக ஆசை, ஒவ்வொரு தப்பிதமான வார்த்தை, செய்கை ஆகிய அனைத்தின்மீதும் வெற்றிகொண்டாலொழிய ஒருவரும் அந்த “மறுமலர்ச்சியை” அடையக்கூடாதிருப்பதை நான் கண்டேன்; ஆகையால் தேவனிடத்திற்கு மிகமிக நெருங்கி வந்து, தேவனுடைய மகா நாளிலே நடக்கப்போகும் அந்தப் போரிலே நிற்க நாம் தகுதியடையும்படியான ஆயத்தத்தை

மிகவும் ஊக்கமாகத் தேடவேண்டும். தேவன் பரிசுத்தமுள்ளவர் என்றும், பரிசுத்தமுள்ளவர்கள்மாத்திரமே அவரது பிரசன்னத்தில் சஞ்சரிக்கமுடியுமென்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். (6) ★

# 17

# ஜெபமும் விசுவாசமும்!

தேவனுடைய பிள்ளைகள் ஜெபத்தை அலட்சியப் படுத்துவதை நான் அடிக்கடிக்க கண்டிருக்கிறேன். அதிலும், அந்தரங்கமாக ஜெபிப்பதை முற்றிலுமாக அலட்சியப்படுத்துகிறார்கள். விசுவாசம்மாத்திரமே உண்டாக்கும் அந்த எண்ணத்திற்காகக் காத்திருந்து, உரிமையோடும் கடமையோடும் செயற்படுத்தும் வண்ணமாக அநேகர் விசுவாசத்தை செயற்படுத்துவதில்லை. எண்ணமானது விசுவாசமல்ல; இவையிரண்டும் தெளிவாக வேறுபட்டவை யாகும்; விசுவாசம் என்பது நாம் செயற்படுத்தவேண்டிய ஒன்றாகும். ஆனால், மகிழ்ச்சியான எண்ணமும் ஆசீர்வாதமும் கடவுள் நமக்குக் கொடுப்பதாகும். ஜீவனுள்ள விசுவாசத்தின் வழியாக நமது ஆத்துமா தேவனுடைய கிருபையைப் பெறுகிறது. ஆனால், விசுவாசத்தை செயற்படுத்துவதோ நமது வல்லமையைப் பொறுத்ததாகும். (1)

உண்மையான விசுவாசமானது, அதை எண்ணி உணர்ந்து கொள்ளுமுன்பாகவே, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை இறுகப்பற்றியபடி உரிமையாராட்டுகிறது. இரண்டாம் திரைக்குள்ளாக நமது விண்ணப்பங்களை விசுவாசத்தோடு அனுப்பவேண்டும். நமது விசுவாசம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தைப் பற்றிக்கொண்டு, அதை நமதாக உரிமைபாராட்டவேண்டும். பின்னர், விசுவாசத்தோடு பற்றிக்கொண்டதால் ஆசீர்வாதத்தை அடைந்தோம் என்றும், வசனத்தின்படி இது நமது என்றும் நாம் விசுவாசிக்கவேண்டும். மேலும், மாற்கு 11:24–ல் சொல்லப்பட்டபடி, “ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்.” இங்கு விசுவாசமும், அப்பட்டமான விசுவாசமும் நாம் உணர்ந்துகொள்ளு முன்பே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டோம் என்பதாகும். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதம் உணரப்பட்டு, அனுபவிக்கப்படுமானால், விசுவாசம் நிறைவடைகிறது. ஆனால், பரிசுத்த

ஆவியை அதிகமாகப் பகிர்ந்துகொள்ளும்போது, அதிகமாக விசுவாசத்தை அடைகிறோமென்று அநேகர் கருதுகிறார்கள். மேலும், பரிசுத்த ஆவியின் வல்லமையை உணர்ந்தாலொழிய விசுவாசம் இருக்கமுடியாது என்றும் நினைக்கிறார்கள். விசுவாசத்தை, விசுவாசத்தின்மூலம் வருகின்ற ஆசீர்வாதத்தோடு குழப்புகிறார்கள். பரிசுத்த ஆவியை இழந்தவர்களாக உணரும் நேரந்தான் விசுவாசத்தை செயல்படுத்த சரியான நேரமாகும். திரண்ட இருள் மேகங்கள் நமது மனதில் சுற்றி வட்டமிடும்போதுதான், நமது உயிருள்ள விசுவாசம் அந்த இருளைக் கிழித்துச்சென்று, அந்த மேகங்களைச் சிதறடிக்கவேண்டும். தேவனுடைய வசனங்களிலே நிறைந்துள்ள வாக்குத்தத்தங்களின்மீது உண்மையான விசுவாசம் நிலைத்திருக்கும். அவரது வசனங்களுக்கு கீழ்ப்படிபவர்கள்மாத்திரமே அந்த மகிமையான வாக்குத்தத்தங்களின்மீது உரிமைபாராட்ட முடியும். யோவான் 15:7–ல், “நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்” என்றும், 1யோவான் 3:22–ல் “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்” என்றும் கூறப்பட்டுள்ளது. (2)

அந்தரங்க ஜெபத்தில் நாம் அதிகமாகத் தரித்திருக்கவேண்டும். கிறிஸ்து திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள், நாம் வளர்ந்து செழிக்க வேண்டுமானால், உயிர்ச்சாறு, உணவு முதலியவைகளை ஜீவனுள்ள திராட்சைச் செடியிலிருந்து தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். திராட்சைச் செடியினின்று பிரிக்கப்பட்டால், நாம் பெலனற்றுப்போகிறோம். (3)

இஸ்ரவேலிலே ஏன் விசுவாசமும் வல்லமையும் இல்லாமற்போயிற்று என்று தூதனை வினவினேன். அவன் என்னை நோக்கி: தேவனின் புயங்களை வெகுசீக்கிரத்தில் விட்டுவிடுகிறீர்கள். அவரது சிங்காசனத்திற்கு நேராக உங்களது விண்ணப்பங்களை ஏறெடுத்து தொடர்ந்து மன்றாடுங்கள்; பலத்த விசுவாசத்தினாலே இறுகப்பற்றிக்கொள்ளுங்கள்; அவரது வாக்குத்தத்தங்கள் உறுதியானவைகள். கேட்கின்றவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்; அவைகளை நிச்சயமாகப் பெற்றுக்கொள்வீர்கள். தூதன் எனக்கு எலியாவைப்பற்றிக் கூறினான். அவன் நம்மைப்போல் பாடுள்ள மனிதனாக இருந்தாலும், கருத்தாய் ஜெபித்தான். அவனது விசுவாசம் துன்பத்தைச் சகித்தது. தேவனுக்கு முன்பாக ஏழு தடவை ஜெபித்தான். கடைசியிலே மேகம் காணப்பட்டது. நிச்சயமான வாக்குத்தத்தங்களை நாம் சந்தேகப்பட்டு, நமது விசுவாசக் குறைவினால் மீட்பரைக் காயப்படுத்தினோம்

என்பதையும் நான் கண்டேன். தூதன் என்னை நோக்கி: சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்; அதற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொள்; அப்பொழுது உயிர் நிலைத்திருக்கும். உன் இதயத்தைப் பொல்லாங்கனுடைய அக்கினியாஸ்திரங்களிலிருந்து காத்துக்கொள்வாய் என்று கூறினான். நமது சத்துரு நம்பிக்கையற்றோரை வழிநடத்தி, இயேசுவை அவர்கள் கண்கள் நோக்காதபடிச்செய்து, தங்களையே நோக்கியவர்களாக, இயேசுவின் மேன்மையுள்ள தகுதியைப்பற்றியும் அவரது அன்பு, சிறப்புகள், மகா கிருபை முதலியவற்றைச் சிந்திப்பதற்குப்பதிலாக, தங்களின் அவக்கேடான நிலையை எண்ணியவர்களாய் நடக்கச்செய்து, அவர்களது விசுவாசமென்னும் கேடகத்தை தூர அகற்றி, தனது குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வான். எனவே, அவர்கள் அவனது பயங்கரமான சோதனைக்கு இலக்காவார்கள். பலவீனமானவர்கள் இயேசுவை நோக்கிப் பார்த்து, அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும். அப்போதுதான், அவர்கள் விசுவாசத்தைச் செயல்படுத்துகிறார்கள். (4) ★

# 18

# அறுவடைக்காலம்!

## (கூட்டிச்சேர்க்கும் காலம்)

செப்டம்பர் 23–ம் நாளிலே, தேவன் அவரது மீதியான மக்களை மீட்கும்பொருட்டாக இரண்டாவது தடவை தமது கரங்களை நீட்டுவதை எனக்குக் காண்பித்தார்; ஆனால், கூட்டிச்சேர்க்கும் இந்தக் காலத்திலோ முயற்சிகள் நிச்சயம் இருமடங்காக்கப்படவேண்டும். சிதறியடிக்கும்போது, இஸ்ரவேல் அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டது. ஆனால், கூட்டிச் சேர்க்கப்படும் இக்காலத்தில், தேவன் தமது மக்களை காயங்கட்டி குணமாக்குவார். இந்த சிதறியடித்தலில் சத்தியத்தைப் பரப்பிட முயற்சிசெய்யும் வேலைகளில் ஈடுபடும்போது, பெற்றுக்கொண்ட பலன் வெகு சொற்பமாகவோ அல்லது ஒன்றுமேயில்லாமலோ இருந்தது. ஆனால், கூட்டிச்சேர்க்கும்போது— தேவன் அவரது கரத்தால் அவரது பிள்ளைகளைக் கூட்டிச்சேர்க்கும்போது, சத்தியத்தைப் பரப்பும் முயற்சிகள் திட்டமிட்ட பலனைக் கொடுக்கும் வேளையில், அனைவரும் ஐக்கியப்பட்டு ஆர்வத்தோடு இருக்கவேண்டும். கூட்டிச்சேர்க்கப்படும் இக்காலத்தில், நம்மை ஆளுகை செய்வதற்கென்று சிதறியடிக்கப்பட்ட காலத்தில் ஏற்பட்ட முன்னுதாரணங்களை சுட்டிக்காட்டுவது தவறு என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. ஏனென்றால், தேவன் முன்னர் செய்ததுபோல் வேறொன்றும் இப்பொழுது செய்யாதிருப்பாரானால், இஸ்ரவேல் ஒருக்காலும் கூட்டிச்சேர்க்கப்படமுடியாது. 1843–ம் வருடத்திய அட்டவணையானது, தேவனுடைய கரங்களால் வழிநடத்தப்பட்டது என்பதையும், அது மாற்றப்படக்கூடாது என்பதையும் நான் கண்டேன். அவர் விரும்பிய வண்ணமே அந்தக் குறிப்புகள் அமைந்திருந்தன. சில குறிப்புகளிலுள்ள தவறை அவரது கரமே மூடிமறைத்தது. அவரது கரம் அந்த அட்டவணையினின்று எடுக்கப்படும்வரை யாருமே பார்க்கக்கூடாதிருந்தது. (1)

பின்னர் தானியேல் 8:12–ல் சொல்லப்பட்ட “அன்றாட” (Daily) என்ற வார்த்தையோடு “பலி” எனப்பட்ட வார்ததை மனித ஞானத்தில் கொடுக்கப்பட்டது என்றும், பலி என்ற வார்த்தை அந்த வசனத்தைச்

சார்ந்ததல்ல என்றும், தேவன் அதைப்பற்றிய சரியான விளக்கத்தை நியாயத்தீர்ப்பின் வேளை வந்தது என்று சத்தமிடுபவர்களுக்கு கொடுத்தார் என்றும் நான் கண்டேன். 1844–ம் ஆண்டிற்கு முன்பாக எல்லோரும் ஐக்கியப்பட்டிருக்கும்பொழுது, “அன்றாட” என்பதன் சரியான விளக்கத்திற்கு அநேகமாக எல்லோரும் கருத்தொருமித்திருந்தார்கள். 1844–ம் ஆண்டிற்குப்பின் குழப்பம் ஏற்பட்டதால், மற்ற விளக்கங்களைப் பின்பற்றி இருளும் குழப்பமுமே பின்தொடர்ந்தது. 1844–ம் ஆண்டிலிருந்து காலம் ஒரு பரீட்சையாக இல்லை; இனி ஒரு போதும் பரீட்சையாகவும் அமையாது. (2)

மூன்றாம் தூதனின் தூது சிதறியிருக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்றும், ஆனால், அது காலத்தைப் பற்றிப்பிடித்துச் சார்ந்திருக்கக்கூடாது என்றும் தேவன் எனக்குக் காட்டியிருந்தார். ஆனால், இந்தத் தூது பிரசங்கிக்கப்பட்ட காலத்திலிருந்து சிலருக்கு பொய்யான ஒரு பரபரப்பு ஏற்பட்டதை நான் கண்டேன். ஆனால், காலத்தைக்காட்டிலும் (இரண்டாம் வருகையின் வேளையைக் குறிப்பிடுதல்) மூன்றாம் தூதனின் தூது வல்லமை வாய்ந்ததாகும். இந்தத் தூதானது, அதன் சொந்த அஸ்திபாரத்தின்மேலேயே நிற்கக்கூடும் என்றும், அதைப் பலப்படுத்த காலம் அதற்குத் தேவையில்லை என்றும், மகா வல்லமையோடு அந்தத் தூதானது பிரசங்கிக்கப்பட்டு, அதன் “காலம்” நீதியின்நிமித்தம் குறைக்கப்படும் என்பதையும் நான் கண்டேன். (3)

சிலர் பழைய எருசலேமிற்குச் செல்வது தங்களது கடமையென்றும், தேவன் வருமுன்பாக தாங்கள் செய்யவேண்டிய வேலை ஒன்று உண்டு என்றும், ஒரு பெரிய தவறை நம்பிக்கொண்டிருப்பது எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. மூன்றாம் தூதனின் தூதின்படி தற்காலத்தில் செய்யப்படவேண்டிய தேவனுடைய வேலையிலிருந்து எண்ணத்தையும் ஆர்வத்தையும் எடுத்துப் போடுவதற்காக திட்டமிடப்பட்ட ஒரு கருத்தாகும். தாங்கள் இன்னும் எருசலேமிற்குப் போகவேண்டுமென்று நினைக்கிறவர்களது மனது அங்கேயே இருக்கும். அவர்களும் மற்றவர்களும் எருசலேமிற்குச் செல்வதற்காக, நிகழ்கால சத்தியத்திற்கு பணஉதவி செய்யாமல், தங்களிடமே பணத்தைப் பிடித்துவைத்துக்கொள்கிறார்கள். இந்த முயற்சியானது உண்மையாக எந்த நன்மையையும் சாதிக்காது என்பதை நான் கண்டேன். இந்தத் திட்டமானது செயல்படுத்தப்பட்டால், வெகு சில யூதரைக்கூட கிறிஸ்துவின் முதலாம் வருகையில் நம்பிக்கை பெறச்செய்வதற்கு வெகுகாலமாகும். அவருடைய இரண்டாம் வருகையை நம்பச்செய்யவேண்டுமானால், மேலும் அதிகக் காலமாகுமென்றும் நான் கண்டேன். இந்தக் காரியத்திலே சாத்தான் சிலரை அதிகமாக ஏமாற்றிப்போட்டான் என்பதையும், இந்த நாட்டிலே அவர்களைச்

சுற்றிலும் வாழும் ஆத்துமாக்கள், அவர்களால் உதவிசெய்யப்பட்டு தேவனுடைய கற்கனைகளைக் கைக்கொள்ளும்படி வழிநடத்தப்படமுடியும். ஆனால், அவர்களோ அந்த ஆத்துமாக்களை அழியும்படி விட்டுவிட்டார்கள். பழைய எருசலேம் ஒருக்காலும் கட்டப்படாது என்பதையும் நான் கண்டேன். ஆனால், சாத்தான் தன்னால் முயன்றதெல்லாம் செய்து, தேவனுடைய பிள்ளைகளுடைய மனதை இந்தக் காரியங்களிலே வழிநடத்திச் செல்கிறான். எனவே, சாத்தான் தேவனுடைய பிள்ளைகள் கூட்டிச்சேர்க்கப்படவேண்டிய இந்தக் காலத்தில், தங்களுடைய முழு அக்கறையையுங்காட்டி தேவனுடைய வேலையைச் செய்வதினின்று தடுத்து, தேவனுடைய வருகையின் அந்த நாளுக்காகச் செய்யவேண்டிய தேவையான ஆயத்தங்களையும் அலட்சியப்படுத்தும்படிச்செய்கிறான். (4)

**எனதன்புள்ள வாசகரே!**

என்னுடைய சகோதர—சகோதரிகளுக்காக எனக்குண்டான கடமை உணர்ச்சியும், என்னுடைய ஆடைகளிலே ஆத்துமாக்களின் இரத்தம் காணப்பட்டுவிடக்கூடாதே என்ற வாஞ்சையும் என்னை ஆட்கொண்டதால், இந்தச் சிறிய புத்தகத்தை எழுதினேன். என்னுடைய தரிசனங்களைப்பற்றி பெரும்பான்மையான மக்கள் மனதிலே அவநம்பிக்கை நிலைத்திருப்பதையும் நான் அறிவேன். இயேசுவின் வருகையை எதிர்நோக்குகிறோம் என்று சொல்பவர்களும், நாம் “கடைசி நாட்களில்” இருக்கிறோம் என்று போதிக்கிறவர்களும், என்னுடைய தரிசனங்கள் சாத்தானால் வந்தவை எனக்கூறுகிறார்கள்; இப்படிப்பட்டவர்களிடமிருந்து அதிகமான எதிர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன். இதை நான் செய்யும்படியாக தேவன் எதிர்பார்த்திருக்காவிட்டால், என்னுடைய தரிசனங்களை இவ்வளவு வெளியரங்கமாக்கியிருக்கமாட்டேன். ஏனெனில், இந்தக் காரியங்கள் சிலருக்கு வெறுப்பையும் கேலியையுமே உண்டாக்கியது. ஆனால், நான் மனிதனுக்கு பயப்படுவதைவிட தேவனுக்கே அதிகம் பயப்படுகிறேன். (5)

தேவன் முதலாவது அவருடைய மக்களை விடுவிக்கும்படியாக தூதுகளை எனக்குக் கொடுத்தபோது, அவர்களுக்கு இதைக்கூறி அறிவிப்பது எனக்குக் கடினமாயிருந்தது; அந்தத் தூதுகள் சிலரை வேதனைப்படுத்திவிடக்கூடாதேயென்று அந்த தூதுகளின் கடுமையைக் குறைத்து மென்மையாக்கிக் கொடுத்தேன். தேவன் கொடுத்த தூதுகளை அப்படியே அறிவிப்பது கடுந்துன்பமான அனுபவமா யிருந்தது. அந்தச் செயலில் நான் எவ்வளவு உண்மையற்றவளாக இருந்தேன் என்பதை நான் புரிந்துகொள்ளவில்லை. நான் ஒரு தரிசனத்திலே இயேசுவின் பிரசன்னத்திலே

எடுத்துச்செல்லப்படும்வரை, நான் செய்யும் முறையிலுள்ள பாவத்தையும் அபாயத்தையும் நான் காணவில்லை. அவர் என்னைக் கடுங்கோபத்துடன் பார்த்து, முகத்தை என்னைவிட்டு திருப்பிக்கொண்டார். நான் அனுபவித்த வேதனையும் பயங்கரத்தையும் என்னால் விவரிக்க இயலாது. நான் முகங்குப்புற அவர் முன்னே விழுந்தேன். ஒரு வார்த்தை கூறவும் எனக்கு சக்தியில்லை. ஆ! அந்த பயங்கரமான கடுங்கோபத்தினின்று மறைத்து மூடப்படவேண்டுமென்று நான் எவ்வளவாய் ஆசித்தேன்! அப்பொழுதுதான் இரட்சிப்பை இழந்துபோனவர்கள், பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: "நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்" என்று கதறுபவர்களின் எண்ணத்தை ஓரளவு உணரமுடிந்தது. (6)

உடனே, ஒரு தூதன் என்னை எழும்பி நிற்குமாறு கூறினான். நான் கண்ட காட்சி என்னால் வர்ணிக்கமுடியாத ஒன்றாகும். எனக்கு முன்பாக ஒரு கூட்டத்தினரைக் கண்டேன். அவர்களது தலைமயிர் அலங்கோலமாகவும் அவர்களது உடைகள் கிழிக்கப்பட்டுமிருந்தன. கடுந்துயரமும் பயங்கரமுமே உருவெடுத்ததுபோல் அவர்களது முகங்கள் காணப்பட்டன. அவர்கள் எனதருகில் வந்து, தங்களுடைய உடைகளை எடுத்து, என்னுடையதோடு தேய்த்துக்கொண்டார்கள். நான் என்னுடைய ஆடைகளைக் கண்டபோது அது இரத்தத்தால் கறைபட்டிருப்பதையும் அந்த இரத்தக்கறை அந்த உடைகளை அரித்துத் துவாரமிடுவதையுங்கண்டேன். மறுபடியும் என்னை அழைத்துவந்த தூதனின் காலடியிலே செத்தவளைப்போல விழுந்தேன். நான் ஒரு சாக்குப்போக்குகூட சொல்லிக் கெஞ்சமுடியாமலிருந்தேன். எனது நாவு எதையும் பேச மறுத்தது. அந்தப் பரிசுத்தமான இடத்திலிருந்து வெகுதூ ரத்திற்குச் செல்வதற்காக ஏங்கினேன். மறுபடியும் அந்தத் தூதன் என்னை காலூன்றி நிற்கச்செய்து: "இந்தக் காரியம் உன்னைக்குறித்ததல்ல. ஆனால், தேவன் உனக்கு வெளிப்படுத்தியதை மற்றவர்களுக்கு அறிவிப்பதை நீ அசட்டைசெய்வாயானால், உனது நிலையும் இவ்வாறுதான் இருக்கும் என்பதைக் காட்டவே இந்தக் காட்சிகள் உன்முன் கடந்துசென்றன. எனவே, முடிவுபரியந்தம் உண்மையோடிருப்பாயானால், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, ஜீவநதியின் நீரையும் குடிப்பாய். நீ அனுபவிக்கவேண்டிய துன்பம் ஏராளம்; ஆனால், தேவகிருபை உனக்குப்போதும்" என்று கூறினான். நான் எதைச் செய்யவேண்டுமென்று ஆண்டவர் என்னிடம் எதிர்பார்ப்பாரோ, அதை நான் மனமகிழ்வோடே செய்வேனேயானால், அவரது ஒப்புதலைப்பெற்று அவரது கடுங்கோபத்திற்கு ஆளாகாமல் தப்பமுடியும் என்று உணர்த்தப்பட்டேன். (7)

நான், ஆவியுலகக் கொள்கைக்கு விரோதமான கருத்துக்களைப் போதிப்பதாக அடிக்கடி தவறான முறையில் குற்றஞ்சாட்டப்பட்டேன். “டே ஸ்டார்” (DayStar) என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் இந்த ஏமாற்றத்திற்குள் அகப்படுமுன்னதாக, அவராலும் ஆவியுலகக் கொள்கைகளைப் போதிப்பவர்களாலும் எவ்வளவு வேதனை மிகுந்த நாசமான விளைவுகள் மந்தைக்கு ஏற்படும் என்ற தரிசனத்தை தேவன் எனக்குத் தந்தார். “ஆள் தத்துவமுடைய அழகிய இயேசுவை” அடிக்கடி கண்டிருக்கிறேன். நான் அவரை (இயேசுவை) நோக்கி: “பிதா ஆள் தத்துவமுடையவரா? அவருக்கு (இயேசுவைப்போன்று) உருவமுண்டா?” என்று வினவினேன். அதற்கு: “என்னுடைய பிதாவின் அப்பட்டமான மறு பிரதியே நான்” என்று இயேசு கூறினார். (8)

பரலோகத்தைப்பற்றிய மகிமையான எண்ணத்தையே இத்தகைய ஆவிக்குரியக் கருத்து எடுத்துப்போட்டதை அடிக்கடி கண்டிருக்கிறேன். ஆவியுலகக்கொள்கை என்ற நெருப்பானது, தாவீதின் சிங்காசனத்தையும் அழகிய இயேசுவின் ஆள்தத்துவத்தையும் அநேகருடைய மனதிலே இல்லாதபடி எரித்துப்போட்டதைக் கண்டிருக்கிறேன். மேலும், ஏமாற்றப்பட்டு இந்த தப்பிதத்திற்குள்ளாக இழுத்துச்செல்லப்பட்டவர்களில் சிலர், சத்தியமாகிய வெளிச்சத்திற்குள் கொண்டுவரப்படுவார்கள் என்பதையும் நான் கண்டேன்: ஆனால், இத்தகைய ஏமாற்றும் ஆவியுலக வல்லமையினின்று முற்றிலுமாக வெளிவருவது மிகமிகக் கடினம். அப்படிப்பட்டவர்கள் முற்றிலுமாகத் தங்களது பாவங்களை அறிக்கைசெய்து, இனி ஒருபோதும் தொடராதபடி விட்டுவிடவேண்டும். (9)

அன்புள்ள வாசகரே! தேவனுடைய வசனமே உங்கள் விசுவாசத்திற்கும் பயிற்சிக்கும் ஒரு ஒழுங்குமுறையாக அமையவேண்டுமென்று நான் பரிந்துரைக்கின்றேன். அந்த வசனத்தினாலேதான் நாம் நியாயந்தீர்க்கப்படப்போகிறோம். அவர் தமது வசனத்தின்மூலமாக கடைசி நாட்களில் தரிசனங்களைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். ஆனால், விசுவாசத்தின் புதிய ஒழுங்குமுறையாக அல்ல. அவரது மக்களை ஆறுதல்படுத்தவும் வேதாகமச் சத்தியத்தினின்று தவறுபவர்களைத் திருத்தவுமே பேதுருவைப் புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்க அனுப்பும்போதும் தேவன் இவ்வாறே செய்தார். (அப்.நட. 10). (10)

இந்தச் சிறிய புத்தகத்தை மற்றவர்கள் வாசிக்கும்படி பகிர்ந்து கொடுப்பவர்களுக்கு நான் கூறுவதாவது: இந்தப் புத்தகம் தேவனிடத்தில் உண்மையானவர்களுக்குமாத்திரமே திட்டமிடப்பட்டது. தேவனுடைய ஆவிக்கடுத்த காரியங்களைப் பரிகாசம் செய்பவர்களுக்கல்ல! (11)

1. இந்த நூலின் 21–ம் அதிகாரத்துடன் இந்த அதிகாரம் ஒப்பிட்டுப் படிக்கப்படவேண்டும்.

2. இந்தக் காரியமானது 1843–ல் ஏற்பட்ட இயக்கத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு விவர விளக்கப்படம்பற்றிக் கூறுவதாகும். இது விவரவிளக்கப்படத்தில் காணப்பட்ட தீர்க்கதரிசன காலக் கட்டங்களைப்பற்றிய கணிப்புகுறித்த சிறப்பான குறிப்பீடாகும். அடுத்த வாக்கியமானது தேவனுடைய முன்அறிவின் அருளால் ஒரு தவறானது அமைந்திருக்கும்படி அனுமதிக்கப்பட்டதை விளக்குகின்றது. இந்தக் காரியமானது அதன் பின்னர் விவர விளக்கப்படம் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்யவில்லை: ஏனெனில், 1843–ம் ஆண்டில் ஏற்பட்ட இயக்கமானது கடந்துசென்றபின், இந்த பிரசுரமானது தவறை திருத்தி, அதன் பின்னர் ஏற்பட்ட கணிப்பானது அதன் நோக்கத்தை நிறைவேற்றியது. ★

# 19

# திருமதி எலன் ஜி. ஒயிட் அவர்களது சொப்பனங்கள்!

**(இந்த நூலின் 1–ம் அதிகாரத்துடன் இந்த அதிகாரம் ஒப்பிட்டுப் படிக்கப்படவேண்டும்)**

அநேக மக்கள் கூட்டமாக ஒரு ஆலயத்திற்குச் செல்வதை எனது சொப்பனத்தில் நான் கண்டேன். காலம் முடிவாகும்போது அந்த ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தோர்மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள். ஆலயத்திற்கு வெளியே இருந்தவர்கள் என்றென்றைக்குமாக கைவிடப்படுவார்கள். வெளியே இருந்த வெகுதிரளாக கூட்டத்தார் தங்களுடைய பலவிதமான வழிகளிலே சென்று, ஆலயத்திற்குள் பாதுகாப்பிற்காகச் செல்வோரைப் பார்த்து எள்ளி நகையாடினார்கள்; மேலும், தவிர்க்கவேண்டிய எந்த அபாயமும் வெளியே இல்லையென்றும், இந்தப் பாதுகாப்பின் திட்டம் ஒரு தந்திரமான ஏமாற்றுதல் என்றும், நுழைபவர்களைப்பார்த்துக் கூறினார்கள்; அத்துடன் நிற்காமல், துரிதமாகச் செல்லும் சிலரைப்பிடித்து உள்ளே போகாதபடிக்கு தடுத்தும் நிறுத்தினார்கள். (1)

திரளான இந்தக் கூட்டத்தாரின் சிரிப்பிற்கும் கேலிக்கும் பயந்து அவர்கள் அங்கிருந்து போகும்வரை காத்திருப்பதே நல்லது என நான் நினைத்தேன்; அல்லது அவர்கள் என்னைக் காணாதவாறு நுழையும்படி நான் காத்திருந்தேன். அந்தத் திரள்கூட்டமோவெனில், குறைவதற்குப்பதிலாக அதிகரித்துக்கொண்டேபோனது. பிந்திவிடக்கூடாதே என்ற பயத்தினால் நானும் துரிதமாக, என் வீட்டைவிட்டு அந்தக் கூட்டத்தை ஊடுருவிச் செல்லலானேன். ஆலயத்தை அடையவேண்டுமே என்ற ஆவலில் என்னைச் சூழ்ந்துகொண்ட கூட்டத்தை நான் கவனிக்கவோ அல்லது இலட்சியம் பண்ணவோ இல்லை. கட்டிடத்திற்குள் நுழையும்போது, அந்த மாபெரும் கோவிலானது, ஒரு பெரிய தூணின் உதவியால் நிற்க நான் கண்டேன். அடிக்கப்பட்டு சிதைத்து இரத்தம் கொட்டி நிற்கும் ஒரு ஆட்டுக்குட்டி

அந்தத் தூணிலே கட்டப்பட்டிருந்தது. அங்கு கூடியிருந்த நாங்கள் இந்த ஆட்டுக்குட்டி எங்களுக்காகவே காயப்பட்டு, நொறுக்கப்பட்டது என்பதை அறிந்தவர்களாக இருந்தோம். அந்த ஆலயத்தில் நுழைந்த அனைவரும் அந்த ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவந்து, தங்களது பாவங்களை அறிக்கை செய்யவேண்டும். (2)

ஆட்டுக்குட்டிக்கு முன்பாக இருந்த உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்த கூட்டமான மக்கள் மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றினார்கள். மோட்சத்தின் வெளிச்சம் அவர்களது முகங்களில் பிரகாசிப்பதுபோல் காணப்பட்டது. அவர்கள் தேவனைத் துதித்து, மகிழ்ச்சியான நன்றிகூறும் கீதங்களைப் பாடினார்கள். தூதர்களின் இனிய கீதம்போன்று அது தோன்றியது. இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் முன்வந்து, தங்களது பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பைப்பெற்று, ஒரு சந்தோஷமான சம்பவத்தை மகிழ்ச்சியோடு எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். (3)

அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தபின்னருங்கூட, இந்த மக்களுக்கு முன்பாகத் தாழ்த்தவேண்டியதிருக்கிறதேயென்ற பயமும் அவமான உணர்ச்சியும் என்னை மேற்கொண்டது. நான் முன்னேறிச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்டதுபோன்று தோன்றியது. ஆட்டுக்குட்டியை காணவேண்டி தூணைச்சுற்றி மெதுவாக நடந்து சென்றேன். அப்பொழுது எக்காளச் சத்தம் தொனிக்க, ஆலயம் அதிர்ந்தது. கூடியிருந்த பரிசுத்தவான்களிடமிருந்து வெற்றியின் தொனி மேலெழும்பியது. பயங்கரமான பிரகாசம் அந்தக் கட்டிடம் முழுவதையும் பிரகாசிப்பிக்கச்செய்தது; பிறகு, ஒரே கும்மிருட்டு. அந்தப் பிரகாசத்துடனே மகிழ்ச்சியான அந்த மக்களும் மறைந்துவிட்டார்கள் அந்த அமைதியான பயங்கர இரவிலே நான் மாத்திரம் தனித்துவிடப்பட்டேன். (4)

மகா துயரத்தோடு நான் விழித்தபோது, இதுவரை நான் கனவுதான் கண்டுகொண்டிருந்தேனென்று உணர்ந்துகொள்ள முடியவில்லை. என்னுடைய அழிவு தீர்மானமாகிவிட்டதுபோன்று தெரிந்தது. தேவனுடைய ஆவி என்னைவிட்டு அகன்று இனி ஒருபோதும் திரும்ப வரக்கூடாத நிலைபோல் தோன்றியது. மேற்சொன்ன காரியங்கள் எல்லாம் நடக்கக்கூடுமோ என நினைத்ததினால் எனது மனத்தளர்ச்சி மிக அதிகமாயிற்று. (5)

இதை அடுத்து சீக்கிரத்தில் நான் வேறொரு கனவு கண்டேன். மிகுந்த மனமுறிவோடு, முகத்தைக் கைகளால் மூடி, நான் உட்கார்ந்து கொண்டு பின்வருமாறு யோசிப்பதுபோன்று தோன்றியது. இயேசு இந்த உலகில் இருப்பாரேயானால், அவரிடம் சென்று அவர் பாதத்தில் விழுந்து, என் துன்பங்களையெல்லாம் அவரிடம் கூறுவேன். அவர் என்னைவிட்டுப் போகமாட்டார். அவர் என்மேல் இரக்கங்கொள்வார், நான் அவரை நேசித்து

எப்பொழுதும் அவருக்கு ஊழியஞ்செய்வேன். இவ்வாறாக நான் கூறிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு கதவு திறக்கப்பட்டது. அழகான உருவமும் முகத்தோற்றமும் உடைய ஒருவன் வந்தான். அவன் பரிவுடன் என்னை நோக்கி: நீ இயேசுவைப் பார்க்க ஆசிக்கிறாயா? என்று கேட்டான்; மேலும், அவர் இங்குதான் இருக்கிறார். நீ விரும்பினால், அவரைப் பார்க்கலாம் உனக்குண்டான எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா என்றான். (6)

இந்தக் காரியங்களைக் கேட்டபோது, விவரிக்கமுடியாத மகிழ்ச்சியோடு, எனக்குச் சொந்தமான சிறிய பொருட்களையும், நான் மதித்துப் பொக்கிஷமாகக் கருதி வைத்திருக்கும் ஒவ்வொரு சிறிய நகையையும் எடுத்துக்கொண்டு வழிகாட்டியைப் பின்தொடர்ந்தேன். அவன் என்னை செங்குத்தான தோற்றத்தில் உறுதியற்றதாகக் காணப்பட்ட ஏணிப்படி வழியாக அழைத்துச்சென்றான். நான் அந்தப் படிகளிலே ஏற ஆரம்பித்த போது, நான் மயங்கிக் கீழே விழுந்துவிடாதபடி, உயரத்திலே என் கண்களைப்பதித்து நடக்குமாறு எனக்கு எச்சரிக்கைவிடுத்தான். செங்குத்தான அந்தப் படிகளிலே ஏறிக்கொண்டிருந்த அநேகர், மேற்பரப்பை அடையுமுன்னதாகவே விழுந்துவிட்டார்கள். (7)

முடிவிலே கடைசிப்படியை அடைந்து, நாங்கள் வாசல் முன்பாக நின்றோம், இங்கே எனது வழிகாட்டி, நான் என்னுடன் கொண்டுவந்துள்ள அத்தனை பொருட்களையும் வைத்துவிடுமாறு கூறினான். நான் மகிழ்ச்சியோடு அவைகளைக் கீழே வைத்தேன்; பின்னர், அவன் கதவைத் திறந்து என்னை உள்ளே நுழையுமாறு கூறினான். கணப்பொழுதிலே நான் இயேசுவின்முன் நின்றேன். அது ஒரு அழகான முகத்தோற்றம் என்பதில் சிறிதளவும் தவறில்லை. அந்த அன்புமயமான—கெம்பீரமான—ஒளிமயமான தோற்றம் வேறு யாருக்கும் சொந்தமாக இருக்க முடியாது. அவர் என்னை உற்று நோக்கியபோது, என் வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அறிந்தவராயும், எனது உள்ளான எண்ணங்களையும் உணர்ச்சிகளையுங்கூட தெரிந்தவராயும் இருந்தார் என்பதைக் கண்டேன். (8)

அவரது துருவிப்பார்க்கும் கண்களின் பார்வையை பொறுக்க முடியாமல், நிலைத்த அவரது பார்வையினின்று தப்பும்படியாக, நான் என்னை மறைக்க முயன்றேன்; ஆனால், அவர் புன்னகையோடு என் அருகில் வந்து, அவரது கரத்தை என் தலைமீது வைத்து, பயப்படாதே என்றார். அவரது இனிய குரலின் தொனியால், எனது இருதயம் ஒருபோதும் அனுபவித்திராத மகிழ்ச்சியின் உணர்ச்சிப் பெருக்கால் நிறைந்தது. மட்டில்லாத மகிழ்ச்சியில் ஒரு வார்த்தைகூட பேச இயலாமற்போயிற்று. சொல்லொண்ணா ஆனந்தத்தால்

அவரது பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்தேன். உதவியற்று அவரது பாதத்தில் நான் கிடக்கும்போது, மகிமையும் அழகும் நிறைந்த காட்சிகள் என் கண்முன்னாகக் கடந்துசென்றன. பரலோகத்தின் பாதுகாப்பையும் சமாதானத்தையும் அடைந்ததுபோன்று நான் உணர்ந்தேன். இறுதியிலே என் பெலன் எனக்குள்ளாக வந்தது. நான் காலூன்றி நின்றேன். இயேசுவின் அன்பான பார்வை இன்னும் என்மீது பதிந்திருந்தன. அவரது புன்னகை என் ஆத்துமாவை மகிழ்ச்சியால் நிரப்பிற்று. அவருடைய பிரசன்னம் பரிசுத்த பயபக்தியாலும், விவரிக்க முடியாத அன்பினாலும் என்னை நிரப்பிற்று. (9)

அப்பொழுது என் வழிகாட்டி கதவைத் திறந்தான். நாங்கள் இருவரும் வெளியே வந்தோம். வெளியே வைத்துப்போன அத்தனை பொருட்களையும் திரும்ப எடுத்துக்கொள்ளுமாறு கூறினான். இதைச் செய்தவுடனே, நன்றாக சுருட்டப்பட்ட பச்சை நூல் கயிற்றை என்னிடம் கொடுத்தான். இதை எனது இருதயத்திற்கு அருகாமையில் வைக்குமாறு ஆலோசனை கூறினான். இயேசுவைப் பார்க்க விரும்பினால், அந்த நூல் கயிற்றை இதயத்தின் பக்கத்தினின்று எடுத்து, அதன் உச்ச அளவுவரை நீட்டவேண்டுமென்று கூறினான். அதிக நாட்களுக்கு அந்த நூல்கயிறு சுருட்டப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படக்கூடாது என்றும் எச்சரித்தான்; ஏனெனில், அவ்வாறு வைக்கப்பட்டால், அந்தக் கயிற்றில் முடிச்சு ஏற்பட்டு நிமிர்த்துவது கடினமாகிவிடுமென்றும் கூறினான். அந்த நூல்கயிற்றை இருதயத்தின் அருகாமையிலே வைத்தவளாய், சந்தோஷத்தோடு அந்தக் குறுகிய ஏணிப்படிகளிலே இறங்கிக்கொண்டு, தேவனைத் துதித்து, நான் சந்தித்தவர்களுக்கெல்லாம் இயேசுவை எங்கே சந்திக்கலாமென்று கூறினேன். இந்தக் கனவு எனக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. அந்தப் பச்சைக்கயிறு எனது மனதிற்கு விசுவாசத்தைக் குறித்துக் காட்டியது. தேவனைச் சார்ந்திருத்தலின் அழகும் எளிமையும் இருண்ட என் ஆத்துமாவில் உதயமாக ஆரம்பித்தது. (10) ★

20

# வில்லியம் மில்லரது கனவு!

**(இந்த நூலின் 8—ம் அதிகாரத்துடன் இந்த அதிகாரம் ஒப்பிட்டுப் படிக்கப்படவேண்டும்)**

தேவன் எனது கனவிலே, காணப்படாத ஒரு கரத்தால் செய்யப்பட்ட, திறமையான வேலைப்பாடு நிறைந்த, கருங்காலி மரத்தாலான, அரிய வேலைப்பாடுடன் முத்துக்கள் பதிக்கப்பெற்ற ஒரு பெட்டியை எனக்கு அனுப்பினார். அது சுமார் பத்து அங்குல நீளமாயும், ஆறு அங்குல அகலமாயும் இருந்தது. அந்தப் பெட்டியோடு ஒரு சாவியும் இணைக்கப்பட்டிருந்தது. நான் உடனே சாவியை எடுத்து பெட்டியைத் திறந்தேன். அதிசயமும் ஆச்சரியமும் கொள்ளத்தகுந்தவிதத்தில், அப்பெட்டியானது பலவிதமான—பலவித அளவுகளிலுள்ள மாணிக்கக்கற்களாலும், வைரங்களாலும், விலையேறப்பெற்ற கற்களாலும், பலவித உருவ அளவுகளிலான மதிப்புகளிலான, தங்க வெள்ளி நாணயங்களாலும், அதன்தன் இடத்திலே அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன். அவைகள் சூரியனுக்குமாத்திரமே ஒப்பான வெளிச்சத்தையும் மகிமையையும் பிரதிபலித்தன. (1)

மதிப்புள்ள—பிரகாசம் நிறைந்த—அழகுள்ள பொருட்களால் அந்தப் பெட்டி நிரப்பட்டிருந்ததைக்கண்டு, எனது இதயம் ஆனந்தத்தால் நிறைந்தபோதிலும், இந்த அதிசயமான காட்சியை நான் மட்டும் அனுபவிப்பது எனது கடமையல்ல என்று நினைத்தேன்; எனவே, எனது அறையின் மத்தியிலுள்ள மேசையில் வைத்துவிட்டு, ஒருக்காலும் மனிதன் தனது ஜீவியத்தில் அனுபவித்திராத, மகா மேன்மைபொருந்திய ஒளிமயமான இந்தக் காட்சியை விருப்பமானவர்கள் வந்து பார்க்கலாம் என்பதாகச் செய்திவிடுத்தேன். (2)

முதலாவது வெகு சில மக்களே வர ஆரம்பித்தார்கள். ஆனால், அது பின்னர் ஒரு கூட்டமாக ஆகிவிட்டது. முதலாவது பெட்டியினுள் எட்டிப்பார்த்த உடனே அதிசயித்து மகிழ்ச்சியால் சத்தமிட்டார்கள். ஆனால், பார்வையாளர்கள் அதிகரித்தபோது, ஒவ்வொரு மாணிக்கக்கல்லையும்

அலைக்கழிக்க ஆரம்பித்தார்கள். பெட்டியிலுள்ள மாணிக்கக்கற்களை ஒவ்வொன்றாக வெளியே எடுத்து மேசைமீது சிதறிப்போட்டார்கள். (3)

பெட்டியையும் அதனுள்ளிருக்கும் மாணிக்கக்கற்களையும் அதன் சொந்தக்காரர் என் கையில் கேட்பாரே என்று சிந்திக்க ஆரம்பித்தேன். அது சிதறப்படுவதை அனுமதித்தேனானால், முன்பிருந்தவாறு அந்தப் பொருட்களை அதனதன் இடத்திலே, அந்தப் பெட்டியில் என்னால் அடுக்கிவைக்க முடியாதே என எண்ணினேன். அது ஒரு பெரிய பொறுப்பானதால், அதற்கு நான் ஒருக்காலும் பதில்சொல்லமுடியாதே என உணர்ந்தேன். எனவே, பார்க்க வந்த மக்களிடம் அதைத் தொடவோ, பெட்டியைவிட்டு வெளியே எடுக்கவோ வேண்டாமென்று கெஞ்ச ஆரம்பித்தேன். நான் எவ்வளவிற்கு அதிகமாகக் கெஞ்சினேனோ அவ்வளவிற்கு அதிகமாக அவைகளைச் சிதறடித்தார்கள். இப்பொழுதோவெனில், அவர்கள் அந்தப் பொருட்களை அறையிலும், தரையிலும், அங்குள்ள தட்டு முட்டுகளின்மீதும் சிதறியடித்தார்கள். (4)

மேலும், நான் கண்டதாவது: அந்த நல்ல மாணிக்கக் கற்களுக்கும் நாணயங்களுக்குமிடையே எண்ணிக்கைக்குள்ளடங்காத போலியான மாணிக்கக் கற்களும் மாறுபாடான போலி நாணயங்களும் சிதறடிக்கப்பட்டுக்கிடந்தன. அந்தப் பார்வையாளர்களுடைய இழிவான நடத்தையைக்குறித்தும், நன்றி கெட்டதன்மையைக்குறித்தும் நான் மிகுந்த கோபமடைந்தேன். அதற்காக அவர்களைக் கண்டித்து இடித்துரைத்தேன். நான் எவ்வளவிற்கதிகமாக கண்டித்தேனோ அவ்வளவிற்கதிகமாக போலி மாணிக்கக்கற்களையும் போலி நாணயங்களையும் ஏராளமாக கலப்படமற்ற பொருட்களினூடே சிதறினார்கள். (5)

நான் சரீரப்பிரகாரமான நிலையில் மிகுந்த எரிச்சலடைந்தவனாக என் உடல் வலிமையை உபயோகித்து, அவர்களை அறையைவிட்டு வெளியே தள்ள ஆரம்பித்தேன். ஆனால் ஒருவரை வெளியே தள்ளிக்கொண்டிருக்கும்பொழுதே, மூன்றுபேர் உள்ளே நுழைந்து அசுத்தத்தையும், மரச்சீவல் சுருள்களையும், மண்ணையும் மற்றும் பலவிதமான குப்பை கூளங்களையும் போட்டு, உண்மையான மாணிக்கக்கற்கள், வைரங்கள், நாணயங்கள் முதலியவை கண்ணிற்குத் தெரியாமற்போகுமட்டும் மூடிப்போட்டார்கள். அந்த என்னுடைய பெட்டியையும் சுக்கு நூறாக்கி, அந்தக் குப்பை கூளத்தின்மேல் சிதறடித்தார்கள். அவர்களில் ஒருவனாவது எனது துக்கத்தையும் கோபத்தையும் மதிக்கவில்லை என நினைத்தேன். நான் முற்றிலுமாக அதைரியமடைந்து, மனந்தளர்ந்து கீழே உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன். (6)

இவ்வாறு எனக்கு ஏற்பட்ட பெரிய நஷ்டத்தைக்குறித்து எப்படி பதில் சொல்வேன் என்று கலங்கிக் கண்ணீர்வடிக்கும்பொழுது, தேவனை நினைத்து, அவர் எனக்கு உதவி அனுப்பவேண்டுமென்று ஊக்கமாக ஜெபித்தேன். உடனே கதவு திறந்தது. ஒரு மனிதர் அறையினுள் நுழைந்தார். மக்கள் அனைவரும் அறையைவிட்டுச் சென்றுவிட்டார்கள். நுழைந்த அந்த மனிதர், ஜன்னல்களையெல்லாம் திறந்து, துடைப்பத்தைக்கொண்டு அறையிலுள்ள குப்பைகளை யெல்லாம் கூட்டித்தள்ளினார்.(7)

விலையேறப்பெற்ற மாணிக்கக்கற்கள் அந்தக் குப்பைகூளத்தோடு சிதறிக்கிடப்பதால், கொஞ்சம் பொறுமையா யிருக்கும்படி அவரிடம் அழுது மன்றாடினேன். (8)

அவர் என்னை நோக்கி: "பயப்படாதே, நான் அவைகளைக் கவனித்துக்கொள்வேன்" என்று கூறினார். பின்னர், அவர் அசுத்தத்தையும் குப்பைகூளங்களையும் அறையினின்று கூட்டித்தள்ளும்போது, போலியான மாணிக்கக்கற்களும், நாணயங்களும் மேகம்போன்று எழும்பி, ஜன்னல் வழியாக வெளியேசென்றன. காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று. அந்த இரைச்சலிலே நான் கண்களை ஒரு கணம் மூடினேன். நான் கண்களைத் திறந்தபோது, குப்பைகூளங்களெல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. விலையேறப்பெற்ற மாணிக்கக்கற்களும், வைரங்களும், தங்க வெள்ளிநாணயங்களும், அறையிலே ஏராளமாகச் சிதறிக்கிடந்தன. (9)

பின்பு, அவர் மேசையின் முன்பிருந்த பெட்டியைவிட மிகப்பெரிதானதும் அழகானதுமான ஒன்றை வைத்து, அந்த மாணிக்கக் கற்களையும், வைரங்களையும், நாணயங்களையும் கை நிறைய அள்ளி, ஒன்றுகூட விட்டுப்போகாமல் பெட்டியினுள் சேர்த்தார். ஊசியின் முனைபோன்ற அளவில் சிறியதான—மிகச் சிறிய வைரங்களுங்கூட உள்ளே அடுக்கிவைக்கப்பட்டு சேகரிக்கப்பட்டன. (10)

பின்பு, அவர் என்னை அழைத்து: "வந்து பார்" என்று கூறினார். அந்தப் பெட்டியினுள் பார்த்தபோது, அந்தக் காட்சி என் கண்களை கூசச்செய்தது. முன்பிருந்த மகிமையோடு பத்துமடங்கு அதிகமாகப் பிரகாசித்தது. அவைகள் துன்மார்க்கரால் அந்த அறையிலே சிதறடிக்கப்பட்டு, தூசியிலும் மண்ணிலும் மிதிக்கப்பட்டுப் போயிற்றோவென எண்ணினேன்: மாறாக, ஒழுங்காக—அதனதன் இடத்திலே பெட்டியில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பெட்டியில் வைத்த மனிதர் நாங்கள் காண, எந்தவிதச் சிரமமுமின்றி அதைச் செய்துமுடித்தார். நான் மிகுந்த மகிழ்ச்சியினால் சத்தமிட்டேன். அந்தச் சத்தம் என்னை விழிக்கச் செய்தது. (11) ★

# 21

# ஒரு விளக்கம்!

அன்புள்ள கிறிஸ்தவ நண்பர்களே:

1851–ல் வெளியிடப்பட்ட எனது அனுபவங்கள், தரிசனங்கள் ஆகியவற்றின் தொகுப்பிலே சில காரியங்களைப்பற்றி எனது சமீபத்திய கருத்துக்களைக் கொடுப்பது எனது கடமை என்று எனக்குத் தோன்றுகிறது. (1)

1) 2–ம் அதிகாரத்தின் 5–வது பாராவிலே "பரிசுத்த ஓய்வுநாளே தேவனுடைய உண்மையான இஸ்ரவேலரையும் அவிசுவாசிகளையும் பிரிக்கும் சுவராக இருக்குமென்று நான் கண்டேன். கடவுளுக்கு காத்திருக்கும் அன்பான பரிசுத்தவான்களின் இதயங்களை இணைக்கும் பெரிய கேள்வி ஓய்வுநாளே. ஓய்வுநாளை கண்டறிந்து ஆசரியாத மக்களும் தேவனுக்கு உண்டு என்று நான் கண்டேன். அதைப்பற்றிய வெளிச்சத்தை அவர்கள் தள்ளிப்போடவில்லை. இக்கட்டுக் காலத்தின் ஆரம்பத்திலே, நாங்கள் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவர்களாகப் புறப்பட்டுச்சென்று, ஓய்வுநாள் சத்தியத்தை முற்றிலுமாகக் கூறியறிவித்தோம்" என்று கொடுக்கப்பட்டுள்ளது: (2)

இந்த தரிசனமானது 1847–ல் கொடுக்கப்பட்டது. அப்பொழுது வெகு சில அட்வெந்து விசுவாசிகளே ஓய்வுநாளை ஆசரித்து வந்தார்கள். அவர்களிலும் மிகச்சிலரே, இந்த ஓய்வுநாள் ஆசரிப்பு தேவனுடைய பிள்ளைகளையும் அவிசுவாசிகளையும் பிரித்துக்காட்டும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதினார்கள். அந்தக் கருத்தின் நிறைவேறுதல் காணப்பட ஆரம்பித்திருக்கிறது. "இக்கட்டுக்காலத்தின் ஆரம்பம்" என்று இங்கே கூறப்படுவது, வாதைகள் ஊற்றப்படுவதற்கு துவங்கும் காலத்தைக் குறிப்பதல்ல. கிறிஸ்து ஆசரிப்புக்கூடாரத்தில் இருக்கும்போது, வாதைகள் ஊற்றப்படுவதற்கு சற்றுமுன்பாக, உள்ள ஒரு குறுகிய காலத்தையே குறிக்கிறது. அந்தச் சமயத்திலே மீட்பின் வேலை முடியுந்தறுவாயில் இருப்பதால், பூமியின்மேல் இக்கட்டு பெருகி, ஜாதிகள்

கோபிப்பார்கள். எனினும், மூன்றாம் தூதனின் வேலை தடைபடாதபடி மேற்சொல்லப்பட்ட காரியங்கள் ஒரு கட்டுப்பாட்டில் அடங்கியிருக்கும். இந்தச் சமயத்திலே "பின்மாரி" அல்லது மறுமலர்ச்சி தேவ பிரசன்னத்தினின்று புறப்பட்டுவரும். இது மூன்றாம் தூதனின் உரத்தசத்தத்திற்கு வல்லமையைக் கொடுத்து, கடைசி ஏழு வாதைகளும் பூமியில் ஊற்றப்படும் காலத்தில் பரிசுத்தவான்கள் அதைத் தாங்கி நிற்கும் பெலத்தை அடையும்படி அவர்களை ஆயத்தஞ்செய்யும். (3)

2) அடுத்து அந்த நூலின் 6—வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி, "திறந்த—மூடிய கதவு" என்பதைப்பற்றிய தரிசனம் எனக்கு 1849—ல் கொடுக்கப்பட்டது. வெளி. 3:7,8—ல் கூறப்பட்டவைகள் பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கும் கிறிஸ்துவின் ஊழியத்திற்கும் சம்பந்தப்பட்டவை என்ற காரியம் எனக்கு முற்றிலும் புதிய ஒரு காரியம். இந்தக் கருத்து யாராலும் சொல்லப்பட்டதாக நான் ஒருபோதும் கேள்விப்படவில்லை. இப்பொழுது ஆசரிப்புக் கூடாரத்தைப்பற்றிய காரியம் முற்றிலுமாக விளங்கிக்கொள்ளப்பட்ட காரியமாகையால், இந்த வசனங்களின் பொருத்தமும் அதன் அழகோடும் வல்லமையோடும் காணப்படுகின்றது. (4)

3) அடுத்தபடியாக இந்த நூலின் 18—ம் அதிகாரத்திலே, "தேவன் இரண்டாவது முறை தனது கரத்தை நீட்டி, அவரது மக்களில் மீதியானவர்களை மீட்கிறார்" என்பது தரிசனமாக எனக்குக் காட்டப்பட்டது. இது கிறிஸ்துவின் வருகைக்காக எதிர்நோக்கியிருந்தவர்களின் ஐக்கியத்தையும் வல்லமையையுமே குறிப்பதாகும். மேலும், தமது மக்களை எழும்பச்செய்து இணைக்க ஆரம்பிக்கிறார் என்ற உண்மையையும் கூறுவதாகும். (5)

4) ஆவிகளைப்பற்றிய வெளிப்படையான காரியங்களை இந்த நூலின் 6—ம் அதிகாரத்திலே பின்வருமாறு வாசிக்கிறோம்: "நியூயார்க் பட்டணத்திலும் மற்றும் அநேக இடங்களிலும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட—சூழ்ச்சிநிறைந்த கதவுத்தட்டல்கள், சாத்தானின் வல்லமையால் நடைபெற்றவையே. மதம் என்னும் ஆடையினால் போர்த்தப்பட்ட இந்தக் காரியங்கள், மேலும் சர்வ சாதாரணமாக நடைபெறும். இவ்வாறு செய்வதின்மூலமாக, தேவனுடைய மக்களின் மனதைத் திருப்பி, ஏமாற்றமடைந்தவர்களை இன்னும் அதிகப் பாதுகாப்பிலே கொண்டுசெல்வதுபோலத் தாலாட்டி உறங்கச் செய்கிறான். கூடுமானால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் போதனைகளையும் சந்தேகிக்கும் அளவிற்குக் கொண்டு செல்லுகிறான்." அதனின்று ஏறக்குறைய 5 வருடங்கள் கழித்து இந்தத் தரிசனம் 1849—ல் கொடுக்கப்பட்டது. இந்த ஆவியுலக வெளிப்படுத்தல்கள் ரோச்செஸ்டரில்மாத்திரமே இருந்ததால், இது "ரோச்செஸ்டர் தட்டல்கள்" என்று அறியப்பட்டிருந்தது. இந்தக்

காலத்திலிருந்தே, யாரும் எதிர்பார்த்ததற்கு மேலாக கிறிஸ்தவ உண்மைக்குப் புறம்பான இந்தக் காரியம் பரவ ஆரம்பித்துவிட்டது. (6)

1850–ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் கொடுக்கப்பட்ட தரிசனம் இந்த நூலின் 12–ம் அதிகாரத்தில் வெளியாகியுள்ளது. "சூழ்ச்சி நிறைந்த இரகசிய கதவுத்தட்டல்கள்" என்ற தலைப்பின்கீழ் இந்தத் தரிசனம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தரிசனம் அந்த நாளிலிருந்து நிறைவேறியும் நிறைவேறிக்கொண்டும் இருக்கிறது. அதன் ஒரு பகுதி இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. (7)

"இந்தக் கதவுத் தட்டொலிகளுக்கு விரோதமாகப்பேசுவதுங்கூட வெகு சீக்கிரத்தில் தேவதூஷணம் என்று கருதப்படும் என்பதை நான் கண்டேன். இந்தக் காரியம் அதிகமதிகமாகப் பரவி, சாத்தானின் வல்லமையும் பெருகி, அவனுடைய பக்தியுள்ள பின்னடியார்களில் சிலர் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப்பெற்று, வானத்தினின்று மனிதருக்கு முன்பாக அக்கினியைக்கூட வரவழைக்கும் சக்தியைப் பெற்றிருப்பார்கள். இந்தத் தட்டொலிகளினாலும் வசியத்தினாலும் அநேக நவீன மந்திரவாதிகள் இயேசு கிறிஸ்து உலகில் செய்த அற்புதங்களைப்போலவே செய்வார்கள். எனவே, மனுஷகுமாரன் இந்தப் பூமியில் செய்த மாபெரும் வேலைகளும், இதே வல்லமையால் தான் செய்யப்பட்டது என்று அநேகர் நம்புவார்கள்" என்று எனக்குக் காட்டப்பட்டது. (8)

இந்தக் கதவுத்தட்டொலியின் ஏமாற்றுக்காரியமானது மிகவும் முன்னேறிச் செல்வதை நான் கண்டேன். கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையே வஞ்சிக்கத்தக்கதாக இருக்குமென்றும் கண்டேன். கிறிஸ்துவிற்குள் நித்திரைசெய்யும் நமது நண்பர்களைப்போலவோ அல்லது உறவினர்களைப்போலவோ இருக்கும் தோற்றங்களை நம்முன் கொண்டுவரும் வல்லமை சாத்தானுக்கு உண்டு. இந்த நண்பர்கள் நம்மிடையே இருப்பதுபோன்று தோற்றமளிக்கும்படி செய்யப்படும். அவர்கள் நம்மிடையே முன்பு உயிரோடிருக்கும்போது, நாம் அறிய அவர்கள் கூறிய வார்த்தைகள், அதே குரலிலே அவர்களாலே நம் காதுகள் கேட்கப் பேசப்படும். இத்தகைய பெரிய மோசடியிலே பரிசுத்தவான்களை ஏமாற்றி, அந்தக் கண்ணியில் அகப்படச்செய்வதே அவனது திட்டமாகும். (9)

நிகழ்கால சத்தியத்தை பரிசுத்தவான்கள் விளக்கமாக முற்றிலும் அறிந்திருக்கவேண்டுமென்பதை நான் கண்டேன். அதை வேத சத்தியத்தின்மூலமாக அழியாமல் காக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். அவர்கள், மரித்தோரின் நிலை என்ன என்பதை நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும். ஏனெனில், பிசாசுகளின் ஆவிகள் உயிருக்குயிரான நண்பர்கள்போலவும் உறவினர்கள் போலவும் தோன்றி, ஓய்வுநாள் மாற்றப்பட்டுவிட்டதென்று

கூறியறிவித்து, வேதத்திற்குப் புறம்பான கொள்கைகளையும் போதிப்பார்கள். தங்களது வல்லமையாலே மற்றவர்கள் தங்கள்மீது பரிவுகொள்ளும்படிச்செய்து, தாங்கள் அறிவித்தது உண்மையென்று நிலைநாட்டுவதற்காக அவர்களுக்கு முன்பாக அற்புதங்களையும் இந்த ஆவிகள் செய்யும். தேவனுடைய மக்கள் வேதாகமச் சத்தியத்தோடு ஒப்பிட்டு, இந்த ஆவிகளைப் பகுத்தறிய ஆயத்தமுடையவர்களாக இருக்கவேண்டும். மேலும், மரித்தோர் ஒன்றும் அறியார்கள் என்றும், தங்களிடம் காணப்பட்டவர்கள் பிசாசுகளின் ஆவிகளே என்றும் தெரிந்திருக்கவேண்டும். நம்மைச் சுற்றியிருக்கும் காரியங்கள் நம்முடைய மனதை மேற்கொள்ள விடக்கூடாது. நிகழ்கால சத்தியத்தால் நமது மனம் நிரம்பியிருக்கவேண்டும். சாந்தத்தோடும் பயத்தோடும் நாம் கொண்ட நம்பிக்கையின் காரணத்தைக் காட்ட ஆயத்தமாக இருக்கவேண்டும். தவறுகளும் ஏமாற்றங்களும் நிறைந்த இந்தக் காலத்தில், நிலைநிற்கும்படி பரத்தினின்று ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். நமது நம்பிக்கையின் அடித்தளத்தை நாம் நன்றாகச் சோதித்தறியவேண்டும். அதற்குரிய காரணத்தை நாம் வேதத்திலிருந்து கொடுக்கவேண்டும். இந்த வஞ்சகம் தொடர்ந்து பரவும். நாம் அதற்கு எதிராக நின்று போராடவேண்டியதிருக்கும். நாம் அதற்கு ஆயத்தமாயிராவிட்டால், கண்ணிகளில் அகப்பட்டு மேற்கொள்ளப் படுவோம். நமக்கு முன்பாக இருக்கும் போராட்டத்திற்கு நம்மால் முடிந்தவரை ஆயத்தமாக இருந்தால், தேவன் அந்தச் சமயத்தில் அவரது பங்கைச் செய்வார். அவரது அதிவல்லமையான புயம் நம்மைப் பாதுகாக்கும். சாத்தானால் ஏமாற்றப்படாதபடி, அவனது பொய்யான அற்புதங்களால் இழுத்துச்செல்லப்படாதபடி, தேவதூதர்களால் நம்மைச் சுற்றிலும் வேலியடைப்பார். உண்மையுள்ள ஆத்துமாக்களின் விடுதலைக்காக அவர் ஒவ்வொரு தேவதூதனையும் அவனது மகிமையைவிட்டு வரும்படிச்செய்து நமக்கு உதவுவார். (10)

இந்த வஞ்சகமானது துரிதமாகப் பரவுவதை நான் கண்டேன். மின்னல்போன்ற வேகத்தில் புகைவண்டி ஒன்று தொடர்ச்சியாகச் செல்லுவது எனக்குக் காட்டப்பட்டது. அதை நன்றாகக் கவனிக்கும்படி தூதன் எனக்குக் கூறினான். அந்த வாகனத்தொடரை உற்றுக் கவனித்தேன். ஒருவர்கூட கீழே விடப்படாமல் உலகம் முழுவதுமே அந்த பெட்டிகளுக்குள்ளே இருப்பதுபோன்று கண்டேன். “எரிக்கப்படுவதற்கு ஆயத்தமாக அவர்கள் தங்களையே—கட்டுகளாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்” என்று தூதன் கூறினான்: மேலும், தூதன் அந்த வாகனங்களின் நடத்துனரைக் காட்டினான். அவன் கெம்பீரமாகவும் சிவந்த மேனியுள்ள தோற்றத்தோடும் காணப்பட்டான். பயணிகள் அனைவரும் அவனை நோக்கிப்பார்த்து, பயபக்தியோடு மரியாதை

செலுத்தினார்கள். நான் குழப்பமடைந்தவளாய் என்னுடன் வந்த தூதனை நோக்கி: அந்த வாகனங்களின் நடத்துனர் யார்? என்று வினவினேன். “அது சாத்தானே. ஒளியின் தூதனின் உருவத்திலே சாத்தானே வழிநடத்துனராக இருக்கிறான். உலகத்தையே அவன் சிறைப்படுத்தியிருக்கிறான். பொய்யை நம்பி தாங்கள் அழிந்துபோகும்படியாக கொடிய வஞ்சகத்திற்கு அவர்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். சாத்தானுக்கு அடுத்தபடியாக இருப்பவர் இந்த வாகனத்தின் பொறியியல் அமைப்பாளர். இன்னும் அவனது பிரதிநிதிகள் சாத்தானின் தேவைக்கேற்றபடி ஆங்காங்கு பலவிதமான அலுவல்களிலே நியமிக்கப்பட்டு, அழிவை நோக்கி மின்னல் வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்” என்று அவன் கூறினான். (11)

ஒருவர்கூட இந்தக் கூட்டத்தினின்று விடுபடவில்லையா என்று தூ தனை வினவினேன். எதிரான திசையிலே பார்க்கும்படி என்னிடம் கூறினான். அங்கே ஒரு சிறுகூட்டம், குறுகிய பாதைவழியாக பிரயாணஞ்செய்வதைக் கண்டேன். அனைவரும் சிறுசிறு கூட்டமாக, குழுவாக சத்தியத்தினால் உறுதியாக இணைக்கப்பட்டிருந்தார்கள். தூதன் என்னை நோக்கி: “மூன்றாம் தூதன் இவர்களை பரலோகக் களஞ்சியத்தில் சேர்ப்பதற்காக இணைத்து, முத்திரையிட்டு, கட்டுகளாகக் கட்டுகிறான்” என்று கூறினான். மிகுந்த உபத்திரவங்களையும், போராட்டங்களையும் கடந்துவந்தவர்கள் போன்று கவலையினால் அலுத்துப்போனவர்கள்போல் அந்தச் சிறு கூட்டத்தினர் காணப்பட்டார்கள். சூரியன் இப்பொழுதுதான் பின்னாலுள்ள மேகத்தினின்று வெளியேவந்து, அவர்களது முகங்களில் பிரகாசிப்பதுபோன்று காணப்பட்டது. எனவே, எல்லா வெற்றிகளையும் சம்பாதித்தவர்கள்போன்று களிப்போடு காணப்பட்டார்கள். (12)

இந்தச் சூழ்ச்சியைக் கண்டுபிடிப்பதற்கான சந்தர்ப்பத்தை தேவன், உலகத்திற்குக் கொடுத்திருக்கிறதை நான் கண்டேன். வேறு எந்தக் காரியம் இல்லாவிட்டாலும், இந்த ஒரு காரியம் கிறிஸ்தவனுக்கு ஆதாரமாக இருந்தால் போதுமானது. ஏனென்றால், மதிப்புள்ள காரியங்களுக்கும் இழிந்த காரியங்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமுமில்லை. தாமஸ் பெயின் எனப்பட்டவரின் உடலானது மண்ணோடு மண்ணாகிவிட்டது. ஆனாலும், இரண்டாம் உயிர்த்தெழுதலிலே ஆயிரம் ஆண்டுகளின் முடிவிலே, தன் பங்கைப்பெற்று, இரண்டாம் மரணத்தை அனுபவிக்கப்போகிறது. ஆனால் சாத்தானோ, தாமஸ் பெயின் பரலோகத்திலே, மேலாக உயர்த்தப்பட்ட நிலையில் இருப்பதாக விவரிக்கிறான். சாத்தான் தாமஸ் பெயினை எவ்வளவு காலம் பூமியில் உபயோகப்படுத்த முடியுமோ அவ்வளவு காலம் உபயோகப்படுத்தினான். இப்பொழுது தாமஸ் பெயின் பரலோகத்தில் மேலாக

உயர்த்தப்பட்டு, மதிக்கப்படுவதுபோன்று ஏமாற்றிக்கூறி மாய்மாலமாக அதே வேலையைச் செய்துகொண்டிருக்கிறான். இங்கு உலகத்தில் தாமஸ் பெயின் எவ்வாறு போதித்தானோ அதைப்போன்று பரலோகத்திலும் போதிக்கிறான் என்று தோன்றும்படிக் காட்டுகிறான். தாமஸ் பெயின் இந்த உலகத்திலிருந்தபோது அவனது வாழ்க்கை, அவனது மரணம், அவன் வாழ்ந்தபோது கற்றுகொடுத்த இழிவான போதனைகள் ஆகியவற்றை அச்சமூட்டும் நடுக்கத்தோடு கண்ணுற்ற சிலர், இத்தகைய வெறுக்கத்தக்க மனிதர்களிலே மிகவும் ஒழுக்கங்கெட்ட கீழ்த்தரமான மனிதனும், தேவனையும் அவரது பிரமாணங்களையும் இகழ்ந்தவனுமாகிய இவனால் போதிக்கப்படவேண்டி இப்பொழுது சரணடைகிறார்கள்.[1] (13)

பூலோகத்திலிருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, அப்போஸ்தலர்கள் எழுதியதை, அவர்களே அதற்கு எதிர்மாறாகப் பேசுவதுபோன்று தோன்றும்படி, தனது தீய தூதர்களை அனுப்பி, அப்போஸ்தலர்கள் பேசுவதுபோன்று பேசச்செய்கிறான். இவ்வாறாக, பொய்க்குப் பிதாவாகிய இவன், தனது தூதர்களை அனுப்பி, அப்போஸ்தலர்களுக்காக (அவர்கள் பேசுவதுபோன்று) பேசச்செய்து, உலகத்தை வஞ்சித்து குருடாட்டத்தில் மூழ்கச்செய்கிறான். பொய்கூறும் இந்த தூதர்கள், அப்போஸ்தலர்களை, அவர்கள் தங்கள் சொந்தப் போதனையையே, தூய்மையற்றதாக்கி, கலப்படஞ் செய்யப்பட்டது என்று அறிவிக்கும்படிச்செய்கிறான். இவ்வாறு, செய்வதின்மூலம் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்களையும் மற்றும் உலகத்தையுமே, தேவனுடைய வார்த்தையைப்பற்றி ஒரு நிச்சயமற்ற தன்மையில் மூழ்கச்செய்து, சாத்தான் மகிழ்ச்சியடைகிறான். அந்த பரிசுத்த புத்தகம், அவனது வழித்தடத்தில் நேரடியாகச் சென்று, குறுக்காக வெட்டி, அவனது திட்டங்களைக் குலைத்துப்போடுகிறது. ஆகையால், வேதாகமத்தின் தெய்வீக ஆரம்பத்தையே மக்கள் சந்தேகிக்கும்படி சாத்தான் வழிநடத்துகிறான். தாமஸ் பெயின் மரித்தபோது அவன் பரலோகத்தில் வரவேற்கப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டதுபோன்றும், இப்பொழுது பூமியிலே தான் வெறுத்த பரிசுத்த அப்போஸ்தலர்களோடு சேர்ந்து, உலகத்திற்கே போதிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதுபோன்றும், தோற்றமளிக்கச்செய்ய சமய நம்பிக்கையற்ற தாமஸ் பெயினை சாத்தான் நிலைநிறுத்துகிறான். (14)

சாத்தான் தனது தூதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலையை திட்டமிட்டு வழங்கி, செயலாற்றும்படிச் செய்கிறான். சூழ்ச்சித்திறனுடன் வஞ்சகமாகவும், மறைமுகமாகவும் செயல்படவேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிடுகிறான். தனது தூதர்களில் சிலரை, அப்போஸ்தலர்கள்போன்று

நடிக்கச்செய்து, அவர்களுக்காகப் பேசவைக்கிறான். மற்ற தூதர்களை, தேவனை தூசித்துக்கொண்டே மரித்துப்போன துன்மார்க்கரைப்போலவும், சமய நம்பிக்கையற்றவர்கள்போலவும், ஆனால், இப்பொழுது மிகவும் கடவுள்பற்று உள்ளவர்கள்போலவும் நடிக்கும்படி அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறான். இவ்வாறு, மிகவும் பரிசுத்தமான அப்போஸ்தலர்களுக்கும், சமயப்பற்றின்றி மிகவும் இழிந்த நிலையில் இருப்பவர்களுக்கும், எந்த வித்தியாசமும் காட்டப்படவில்லை. அந்த இரு வகுப்பினருமே ஒரே பொருள்பற்றி கற்பிக்கும்படி நடத்தப்படுகிறார்கள். அவனது குறிக்கோள்மாத்திரம் நிறைவேற்றப்படுமானால் போதும். யாரைப் பேச வைக்கிறான் என்பதுகுறித்து அவன் முக்கியப்படுத்துவதில்லை. பூமியிலே, சாத்தான் தாமஸ் பெயினோடு மிக நெருக்கமாக தொடர்புகொண்டிருந்தான். அவன் செய்த வேலைக்கு சாத்தான் அதிகமாக உதவிசெய்தான். சாத்தான், தனக்கு உத்தமமாக ஊழியஞ்செய்து, தனது நோக்கங்களை மிக நன்றாக நிறைவேற்றிய, தாமஸ் பெயின் எழுதிய—குறிப்பிட்ட அதே எழுத்துக்களையும், அவனது கையெழுத்தையுங்கூட, அறிவது அவனுக்கு மிகவும் சுலபமான காரியமாகும். தாமஸ் பெயின் எழுதிய புத்தகங்களில் காணப்படுகின்ற கருத்துக்களில், அதிகமானவை சாத்தானால் தூண்டப்பட்டு எழுதப்பட்டவையே. இப்பொழுது, அவனது தூதர்கள்மூலமாக, கருத்துக்களைத் தூண்டி, அவை, தாமஸ் பெயின் புத்தகங்கள்மூலமாக வந்தவையென்று கூறுவது, அவனுக்கு இலகுவான காரியமாகும். இந்தத் தீமைசெய்வோனின் உத்தம ஊழியனாகவே தாமஸ் பெயின் உலகில் வாழ்ந்தான். இதுவே சாத்தானின் தலைசிறந்த படைப்பாகும். மரித்துப்போன அப்போஸ்தலர்கள், பரிசுத்தவான்கள் மற்றும் துன்மார்க்கர் ஆகியோரிடமிருந்து வருகின்ற போதனைகளைப்போன்று எண்ணச்செய்வது, சாத்தானின் தனிப்பெரும் மேன்மையினின்று நேரடியாக வரும் காரியமாகும். (15)

தாமஸ் பெயின் தன்னால் மிகவும் அதிகமாக நேசிக்கப்பட்டவன் என்று சாத்தான் உரிமைகொண்டாடுகிறான். ஆனால், தாமஸ் பெயினோ தேவனை முற்றிலுமாக வெறுத்தான். அப்படிப்பட்டவன் பரிசுத்த அப்போஸ்தலரோடும் மகிமையின் தூதர்களோடும் இருக்கிறான் என்று சாத்தான் கூறுகிறான். இது ஒன்றே அநேகருடைய மனத்திரையை அகற்றி, சாத்தானின் அந்தகார இரகசிய வேலைகளைக் காட்டுவதற்கும் போதுமானதொன்றாகும். அவன் உலகத்தாருக்கும் மதத்தில் நம்பிக்கையற்றவர்களுக்கும் உண்மையாகவே கூறுவது என்னவென்றால்: நீ எவ்வளவு துன்மார்க்கனாக இருந்தாலும் சரி, வேதத்தையோ அல்லது கடவுளையோ விசுவாசித்தாலும் சரி—விசுவாசிக்காவிட்டாலும் சரி, நீ இஷ்டம்போல் வாழலாம்; உனக்கு பரலோகமே வீடு என்பதே. தாமஸ் பெயின் பரலோகத்தில் மேன்மையான

நிலையில் இருப்பாரானால், மற்றவர்களும் நிச்சயமாக அங்கு செல்லமுடியும் என்பதாகும். இந்தக் கருத்திலுள்ள தவறானது பளிச்சென்று தெரிவதால், விரும்பினால் எல்லோருமே கண்டுகொள்ளலாம். சாத்தான் தனது விழுகையின் காலத்திலிருந்து என்ன செய்யவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருந்தானோ, அதைத் தாமஸ் பெயின்போன்ற தனிப்பட்டவர்கள்மூலமாக இப்பொழுது செய்துகொண்டிருக்கிறான். அவன் தனது வல்லமையாலும் பொய்யான அற்புதங்களாலும் கிறிஸ்தவனின் நம்பிக்கையின் அடித்தளத்தையே உடைத்தெரிந்துகொண்டிருக்கிறான். பரலோகத்திற்குச் செல்லும் அந்தக் குறுகலான பாதைக்கு வெளிச்சத்தைத் தரக்கூடிய சூரியனையே அழித்துக்கொண்டிருக்கிறான். வேதாகமம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகமல்ல என்று உலகத்தை நம்பவைக்க முயற்சிக் கிறான். இது கதைப்புத்தகத்தைவிட சிறப்புவாய்ந்ததல்ல எனக் கூறுகிறான். வேதபுத்தகத்தின் இடத்திலே ஆவிமார்க்க விளக்கங்கள் போன்ற புத்தகங்களை சாத்தான் தூக்கிப்பிடிக்கிறான். (16)

சாத்தானுடைய அதிகாரத்திற்குட்பட்டு, சாத்தானுக்காகவே முற்றிலும் ஒதுக்கப்பட்ட ஒரு வழி இங்குண்டு. அவனுக்கு விருப்பமானதை உலகத்தை நம்பச்செய்ய அவனால் கூடும். எந்தப் புத்தகம் அவனையும் அவனது பின்னடியார்களையும் நியாயந்தீர்க்கப் போகிறதோ, அதை அவன் விரும்பியபடி ஓதுக்கிடத்தில் வைத்துவிடுகிறான். உலகின் இரட்சகரை ஒரு சாதாரண மனிதனைவிட உயர்ந்தவரல்ல என்று கூறுகிறான். பிரதான ஆசாரியரும், மூப்பர்களும் இயேசுவின் கல்லறையைப் பாதுகாத்த ரோம காவலாளிகளின் வாயிலே பொய்யான வதந்தியைப் போட்டு பரப்பச்செய்ததுபோல, இந்த இழிநிலையிலிருக்கும் ஏமாற்றப்பட்ட சாத்தானின் பின்னடியார்கள் மாய்மாலமான ஆவிமார்க்க விளக்கங்களை திரும்பத் திரும்பக்கூறி, மீட்பரின் பிறப்பிலும்—மரணத்திலும்—உயிர்த்தெழுதலிலும் எந்தவிதமான அதிசயமான காரியமும் இல்லையெனத் தோன்றும்படிச்செய்கிறார்கள். இயேசுவைப் பின்னணியில் வைத்துவிட்டு, உலகின் கவர்ச்சிகளையெல்லாம் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் செய்யும் அற்புதங்களும் பொய்யான அதிசயங்களும் இயேசுவின் செயல்களைவிட அதிகச் சிறப்புவாய்ந்தவைகள் எனக் கூறியறிவிக்கிறார்கள். இவ்வாறு உலகமானது அவனது கண்ணியில் பிடிபட்டு, பாதுகாப்பு என்ற உணர்விலே தாலாட்டப்படுகிறது. கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படுமட்டும், பயங்கரமான இந்த ஏமாற்றத்தை அறியாதிருக்கிறார்கள். தன்னுடைய திட்டம் நன்றாக நிறைவேறி, முழு உலகமுமே கண்ணியில் அகப்படுவதைக்கண்டு சாத்தான் நகைக்கிறான். (17)

5) இந்த நூலின் 10–ம் அதிகாரத்தில் ஒளிமயமான ஒரு மேகம் பிதாவை மூடியிருப்பதாகவும், அவரது உருவத்தை நான் பார்க்கக்கூடவில்லை என்றும் எழுதியிருக்கிறேன். பிதா சிங்காசனத்திலிருந்து எழும்புவதைக் கண்டேன் என்றும் கூறியிருக்கிறேன். பிதாவானவர் ஒளியாலும் மகிமையாலும் போர்த்தப் பட்டிருப்பதால், அவரது ஆள்தத்துவத்தைக் காணமுடியவில்லை. இந்த ஒளியும் மகிமையும் சிங்காசனத்தை விட்டு எழும்பியதைக் கண்டபோது, பிதாவானவர் அங்கிருந்து எழும்பியிருக்கிறார் என்று அறிந்தேன். எனவே, பிதாவானவர் எழும்ப நான் கண்டேன் எனக் கூறினேன். அவரது ஆள்தத்துவத்தின் மகிமையையோ அல்லது மேன்மையையோ நான் ஒருபோதும் கண்டதில்லை. ஒருவரும் அதைப் பார்த்து உயிரோடு இருந்ததில்லை. இருப்பினும் அவரைச் சுற்றிலும் மூடியிருந்த அந்த ஒளிமயமான மகிமையைக் காணமுடிந்தது. (18)

மேலும், "சாத்தான் தேவனுடைய சிங்காசனத்தின் பக்கத்தில் இருந்து அவருடைய வேலையைச் செய்ய முயற்சிப்பதுபோன்று காணப்பட்டான்." அதே அதிகாரத்திலிருந்து மற்றுமொரு வாக்கியத்தை இங்கு கொடுக்கிறேன். இன்னும் அந்த சிங்காசனத்திற்கு முன்பாக தலைவணங்கி நிற்கின்ற அந்தக் கூட்டத்தைப் பார்ப்பதற்காகத் திரும்பினேன். இப்பொழுது ஜெபிக்கும் கூட்டமோ பூமியில் உயிரோடிருப்பவர்கள். எனினும், அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக தலைவணங்கி நிற்பதுபோல் காட்டப்பட்டது. இந்தத் தனி நபர்கள் ஒவ்வொருவரும் உண்மையிலே புதிய எருசலேமில் இருக்கிறார்கள் என்ற எண்ணம் எனக்கு ஒருபோதும் கிடையாது. அல்லது சாத்தான் புதிய எருசலேமில் இருக்கிறதாக நான் நம்புவதாக ஜீவனுள்ளோர் யாராவது நினைப்பார்கள் என்று நான் என்றுமே நினைத்ததில்லை. பெரிய சிவந்த வலுசர்ப்பத்தை பரலோகத்திலே கண்டதாக யோவான் கூறவில்லையா? நிச்சயமாகக் கூறினார். வெளி. 12:3–ல் "ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது" என்றார். பரலோகத்தில் எப்பேர்ப்பட்ட அஞ்சத்தக்க ஒரு மிருகம்! என்னுடைய கூற்றுகளைப்பற்றி சிலர் கொடுத்திருக்கும் விளக்கத்திலே கிண்டல்செய்வதற்கு நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுபோல் தோன்றுகிறது. (19)

6) ஜனவரி 1850–ம் ஆண்டு கொடுக்கப்பட்ட ஒரு தரிசனம் இந்த நூலின் 8–ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தரிசனத்திலே, சத்தியத்தை எடுத்துச்செல்லும் தூதர்களுக்கு உதவாமல், பணத்தை அநேகர் வைத்துக்கொண்டிருக்கும் நிலைபற்றி கூறப்பட்டுள்ளது. இந்தத் தரிசனம் அந்தக் காலத்தைமாத்திரம் சிறப்பாகக் குறிக்கக்கூடியதாகும்.

அதிலிருந்து நிகழ்கால சத்தியத் தூதின் நண்பர்கள் எழும்பி, தங்களது பொருளால் நன்மை செய்யக்கூடிய சந்தர்ப்பங்களுக்குக் காத்திருந்து செய்திருக்கிறார்கள். பெற்றுக்கொண்டவர்களுக்கு கேடு உண்டாகும் அளவிற்கு, சிலர் மிகத் தாராளமாகப் பணங்கொடுத்து உதவியிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக தேவனுடைய பணத்திற்குக் குறைவில்லை. ஆனால், மிகுந்த கவலையீனமாக, அதிகத் தாராளமாக கடவுளுடைய பணம் செலவளிக்கப்படுவதுபற்றிய காரியம் எனக்குக் காட்டப்பட்டது. (20)

அடுத்து, மிச்சிகனில் ஜேக்ஸன் என்ற இடத்திலே 1853, ஜூன் 2–ல் ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டது. இந்தத் தரிசனம் அதிகமாக அந்த இடத்திலுள்ள சகோதரர்களைப்பற்றியதாகும். நம்முடைய சகோதரர்கள் ஒரு உண்மையான நோக்கத்தை முன்வைக்காமல், தங்களது சொத்துக்களை தியாகஞ்செய்ய முன்வந்து உதவிசெய்ய ஆரம்பித்திருப்பதை நான் கண்டேன். ஆனால், எந்தக் காரியத்திற்காகச் செலவளித்தார்களோ, அது சத்தியத்திற்கடுத்த காரியமல்லாமலிருக்கிறது. மேலும், மிகவும் தாராளமாக அடிக்கடி தங்கு தடையின்றி பொருளைக் கொடுத்து உதவியிருக்கிறார்கள். ஆனால், போதகர்கள் இந்தக் காரியத்திலே ஏற்பட்ட பிழைகளைத் திருத்தி, சபையிலே ஒரு நல்ல செல்வாக்கு ஏற்படப் பாடுபட்டிருக்கவேண்டுமென்றும் நான் கண்டேன். எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கிறோமோ அவ்வளவிற்கு நல்லது என்ற கண்ணோட்டத்தில் பணம் வீணடிக்கப்பட்டது. பலன்களை அதிகமாக எதிர்பார்க்காமல், பணம் வெகு சீக்கிரத்தில் வீணடிக்கப்பட்டது. ஆனால், அதன் பலனோ ஒன்றுமில்லை. சிலர் ஏராளமான நன்கொடைகளைப் பெற்றார்கள். இதில் அவர்கள் தவறான முன்மாதிரியை வைத்துள்ளார்கள். மேலும் தாராளமாகவும் கவலையீனமாகவும் பொருளை பயன்படுத்தக்கூடாது என்று பொருள் வைத்திருந்தவர்களுக்கு சிறிதளவு எச்சரிப்புகூட கொடுக்கப்பட வில்லை. தங்களது சகோதரர்கள் இவ்வளவு அதிகமாகக் கொடுப்பதை அவர்களின் கடமையென்று தேவன் நியமித்திருந்தாரா என்று வினவாமல், இத்தகைய தாராளமான நன்கொடையைப் பெற்றுக்கொண்டு, அது அங்கீகரிக்கப்பட்டது. (21)

“கொடுத்த சிலர் குறிப்பிட்ட காரியத்தின் தேவைகளை நன்றாக ஆராய்ந்து, உண்மையாகவே தேவை உண்டா என்பதை அறிந்துகொள்ளாமல் செய்ததினால் தவறுசெய்திருக்கிறார்கள். எனவே, பொருளுடையோர் அதிகக் குழப்பத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒரு சகோதரனுக்கு அவன் கையில் கொடுக்கப்பட்டிருக்கும் ஏராளமான பணமே கேடுசெய்யக்கூடியதாக அமைந்துள்ளது. அவன் சிக்கனத்தைக் கற்றுக்கொள்ளாமல், ஊதாரியாகவே வாழ்ந்துவிட்டான். அவன் பயணங்களிலே அங்குமிங்குமாகப் பணத்தைப்

போட்டு ஒரு இலாபமும் அடையவில்லை. தேவனுடைய பணத்தை தாராளமாக உபயோகித்ததின்மூலம், ஒரு தவறான செல்வாக்கைப் பரப்பிவிட்டான். தனக்குள்ளும் மற்றவர்களிடத்தும் "கடவுள் வரும்வரை உபயோகப்படுத்துவதற்கும் மேலான செல்வாக்கு சகோதரர் ஜே–யினிடத்தில் உண்டு" என்றுவேறு சொல்லிக்கொடுப்பான். இந்தக் காரியமானது அநேகரைக் கெடுத்தது. அவர்கள் சத்தியத்திற்குள் வரும்போதே தவறான கருத்துக்களோடு வருகிறார்கள். தேவனுடைய பணத்தை உபயோகிக்கிறோமே என்று சற்றும் உணராதிருக்கிறார்கள். தேவனுடைய பணத்தின் முக்கியத்துவத்தையும் அவர்கள் உணர்வதில்லை. மூன்றாம் தூதனின் தூதை முதன் முதலாக ஏற்றுக்கொண்ட அந்த இரங்கத்தக்க நிலையிலுள்ள ஆத்துமாக்கள், இப்படிப்பட்ட ஒரு முன்மாதிரி தங்கள் முன்பாக வைக்கப்படும்போது, தங்களைத் தாங்களே வெறுத்து, கிறிஸ்துவிற்காக துன்பம் அனுபவிப்பதை அதிகமாகக் கற்றுக்கொள்ளவேண்டியதிருக்கிறது. சுகபோகத்தையும், வசதியையும், சௌகரியத்தையும் விட்டுவிடக் கற்றுக்கொள்ளவேண்டும். மேலும், ஆத்துமாக்களின் விலைமதிப்பை மனதில், கொள்ளவேண்டும். தங்கள்மேல் வருகின்ற அபாயத்தை உணர்பவர்கள், சௌகரியத்தோடும் வசதிகளோடும் பிரயாணஞ் செய்வதற்காக அதிகமான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்க மாட்டார்கள். அழைப்பில்லாத சிலர், ஊழியத்திற்குவரும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்தக் காரியங்களினால் மற்றவர்கள் பாதிக்கப்பட்டு சிக்கனத்தையோ, தன்னை வெறுக்கும் தன்மையையோ உணராமலும், தேவனுடைய பொக்கிஷத்தோடு சேர்க்காமலும் போகிறார்கள். இவ்வாறு அவர்கள் எண்ணி, "இன்னும் போதுமான பொருளையுடையோர் உண்டு. அவர்கள் பத்திரிகைக்காகக் கொடுப்பார்கள். நான் எதுவுமே செய்யத் தேவையில்லை; என்னுடைய உதவியின்றியே பத்திரிகை நடைபெறும்" என்று கூறுகிறார்கள். (22)

கர்த்தருடைய ஊழியத்தை நடத்துவதற்காக சொத்துக்களை தியாகம் செய்தல் சம்பந்தமான தரிசனத்தின் இந்தப் பகுதியை எடுத்துக்கொண்டு அதைத் தவறாக உபபோகப்படுத்தியது எனக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது. மற்றக் காரியங்களிலுள்ள கொள்கைகளை அலட்சியப்படுத்திவிட்டு, பொருளை ஊதாரித்தனமாகச் செலவுசெய்கிறார்கள். இந்த நூலின் 8–ம் அதிகாரத்துடன் ஒப்பிட்டு பின்வருமாறு வாசியுங்கள். "தேவனிடமிருந்து தூதைப் பெறாத தூதாட்கள் வேலைசெய்வதினால், தேவனுடைய வேலை தடைப்பட்டு, அவமதிக்கப்படுவதை நான் கண்டேன். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் போகத் தேவையில்லாத இடத்திற்குப்போய் அவ்வாறு பிரயாணஞ்செய்யச் செலவளித்த ஒவ்வொரு காசிற்கும் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். ஏனென்றால், வீணாகச் செலவளித்த இந்தப்

பணமானது தேவனுடைய வேலைக்காகச் செலவளிக்கப்பட்டிருக்கலாமே. “மேலும், அதே அதிகாரத்தில்: “எப்படி சொத்து வைத்திருப்போர் எவ்வளவு பொறுப்புடைய்யவர்களாய் இருக்கிறார்களோ அதேபோல், கைகளால் உழைக்கச் சக்தியுடையோரும் தாங்கள் பெற்றிருக்கும் சக்திக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும்” என்பதை நான் கண்டேன். (23)

இந்த நூலின் 11–ம் அதிகாரத்தில் இந்தப் பொருளைப்பற்றிய தரிசனம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு உங்களது முக்கிய கவனத்தைக் கொடுக்குமாறு வேண்டுகின்றேன். அதன் குறுகிய தொகுப்பு இங்கு பின்வருமாறு: லுக்கா 12:33–ல் கூறப்பட்டுள்ள நமது மீட்பரின் வார்த்தைகளின் நோக்கம் விளக்கமாகக் கூறப்படவில்லை. “விற்பதின் நோக்கம் நன்றாக உழைத்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியுடையோருக்குக் கொடுப்பதற்காக அல்ல, சத்தியத்தைப் பரப்புவதற்குமாத்திரமே. நன்றாக உழைப்போருக்கு உதவிசெய்து, அவர்களை சோம்பேறித்தனத்தில் மிதக்கவிடுவது பாவமே. சிலர் எல்லா ஜெபக் கூட்டங்களுக்கும் வருவதில் மிகுந்த உற்சாகம் காட்டுகிறார்கள். இது தேவனை மகிமைப்படுத்துவதற்காக அல்ல. சொந்த ஆதாயத்திற்காகவே; “அதாவது அப்பங்களுக்கும் மீன்களுக்குமாகவே;” இப்படிப்பட்டவர்கள் வீட்டிலே தங்கி, தங்கள் கைகளால் உழைத்து, “அந்த நன்மையான காரியத்தை” செய்து, தங்களது குடும்பத்தின் தேவைகளை நிறைவுசெய்யலாம். மேலும், தேவனுடைய அரும்பெரும் ஊழியத்திற்கும் கொஞ்சம் கொடுக்கலாம். கடந்த காலங்களிலே சாத்தான் துரிதமான வேகத்தில், சிலரை தாரளமாகச் செலவுசெய்யவைத்து, சகோதரர்களில் சிலரை, சொத்துக்களை அவசரமாக விற்கும்படிச் செய்திருக்கிறான். ஏராளமான பொருட்கள் கவலையீனமாகவும் அவசரமாகவும் விரயமாக்கப்படுகிறது. இதன்மூலம், ஆத்துமாக்கள் சீர்கெட்டு அழிந்துபோகிறார்கள். ஆனால், இப்பொழுது சத்தியம் அதிகமாகப் பரவவேண்டிய நேரத்தில், பணத்தின் தேவை உணரப்படலாம். எனவே, சாத்தானின் திட்டம் ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளது. (24)

அநேகர் தங்களது பத்திரிக்கைகளும், துண்டுப்பிரசுரங்களும் அச்சிடப்படுவதற்கான உதவிபெறுவதற்காக சொத்து உடையவர்களையே எதிர்நோக்கி, தவறுசெய்கிறார்கள் என்பதை தேவன் எனக்குக் காட்டினார். “அனைவரும்” அவரவர்களுடைய பாகத்தைச் செய்யவேண்டும். எப்படி சொத்து வைத்துள்ளவர்கள் தேவனுடைய ஊழியத்தின் வளர்ச்சிக்காக உதவவேண்டுமோ, அதேபோன்று தங்களது கரங்களால் உழைக்கச் சக்தி பெற்றோர் சம்பாதித்து, தேவனுடைய வேலைக்கு உதவிசெய்யவேண்டும். நிகழ்கால சத்தியத்தை விசுவாசிக்கிறேன் என்று சொல்லுகிற தேவனுடைய

ஒவ்வொரு பிள்ளையும் இந்த ஊழியத்திற்காக அவரவர் பங்கை உற்சாகமாகச் செய்யவேண்டும். (25)

ஜூலை 1853–ல் நான் கண்டதாவது, தேவனுக்குச் சொந்தமான–தேவனுடைய ஒப்புதலைப்பெற்ற இந்தப் பத்திரிக்கையானது, அது வெளிவரவேண்டிய பிரகாரம் அடிக்கடி வரவில்லையெனக் கண்டேன். நாம் வசிக்கும் இந்தக் காலத்தின் நிலையையொத்து, இந்த ரெவ்யூ அண்டு ஹெரால்டு என்ற பத்திரிக்கை வாரம் ஒரு முறையாவது வரவேண்டும். மேலும், அநேக துண்டுப் பிரசுரங்களை அச்சிடுவதின்மூலம் இந்தக் காலத்தில் ஒவ்வொரு நாளும் பெருகிவரும் தவறுகளை வெளிக்கொண்டுவரலாம். ஆனால், பொருள் பற்றாக்குறையினால் ஊழியம் தடைபட்டுநிற்கிறது. சத்தியம் நிச்சயமாகக் கொண்டுபோகப்படவேண்டும் என்று நான் கண்டேன். நாம் அதிக பயமடையக்கூடாது. எங்கு விரும்பப்பட வில்லையோ அங்கு மூன்று பேருக்கு துண்டுப்பிரசுரங்கள் போவதைக்காட்டிலும், ஒருவராயிருந்து அதை வெகுவாக மதித்து, அதன்மூலம் நன்மைபெறக்கூடியவருக்கு நிச்சயமாக துண்டுப் பிரசுரம் சேரும்படிச்செய்யவேண்டும். சாத்தானைப்பற்றி வெளிப்படும் காரியம் பெருகிக்கொண்டேபோகிறபடியால், கடைசிக்கால அடையாளங்கள் பற்றி தெளிவாகத் தெரிவிக்கப்படவேண்டுமென்று நான் கண்டேன். சாத்தான் அவனது பிரதிநிதிகள் ஆகியோருடைய பத்திரிகைகள் பெருகிக்கொண்டேபோகின்றன. அவர்களது வல்லமை வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறது. எனவே, மற்றவர்களுக்கு முன்பாக சத்தியத்தை எடுத்துச் செல்லும் முயற்சிகள் துரிதமாகச் செய்யப்படவேண்டும். (26)

ஒரு தடவை பிரசுரிக்கப்பட்ட சத்தியமானது என்றும் நிலைக்கும். ஏனென்றால், இது கடைசி காலத்திற்கான சத்தியம். இந்தச் சத்தியம் நீடித்து வாழ்ந்திருக்கும். எதிர்காலத்தில் இதைக்குறித்து சொல்லப்படவேண்டியதின் அவசியம் குறைவே என்று எனக்கு காட்டப்பட்டது. எது தனக்காகப் பேசுகிறதோ, எது தன்னைத் தானே தெளிவாக விளங்குகின்றதோ அதைப்பற்றி கணக்கற்ற வார்த்தைகளைப் பத்திரிக்கையில்போட்டு, அதைச் சரியெனக்காட்ட முயற்சிக்கத் தேவையில்லை. சத்தியமானது நேர்மையாகவும், தெளிவாகவும், பகட்டில்லாமலும், தன்னுடைய பாதுகாப்பிலேயே தைரியமாகத் தனித்து நிற்கிறது. ஆனால், தவறுபற்றிய காரியமோ இவ்வாறல்ல. அது வளைந்து நெளிந்து, பின்னிப்பின்னி ஏராளமான வார்த்தைகளைத்தேடி, தன்னுடைய வளைந்த வடிவத்தை விளக்குகிறது. சில இடங்களில் மக்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சமானது முற்றிலும் பத்திரிக்கைகள் மூலமாகவே என்பதை நான் கண்டேன்.

ஆத்துமாக்கள் சத்தியத்தை இந்தவகையிலே பெற்று, மற்றவர்களிடத்தில் அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அநேக விசுவாசிகள் இருக்கக்கூடிய இந்த இடங்களிலே, பத்திரிக்கைமூலமாக இந்த மௌன தூதுவன் (பத்திரிக்கைகள்) சென்று விசுவாசிகளை எழுப்பியிருக்கிறான். பத்திரிகையே அவர்களுடைய ஒரே போதகர். பணத்தட்டுப்பாட்டினாலே சத்தியத்தின் முன்னேற்றம் தடைபடவேகூடாது. (27)

---

1. இந்தக் குறிப்புகளின் வேகத்தைச் சரியாக மதிப்பீடு செய்யவேண்டுமானால், ரெவரெண்ட். சி. ஹேமண்ட் என்பவரை ஊடகமாக (Medium) வைத்து, அதன்மூலமாக "ஆவியுலகத்தில் தாமஸ் பெயினின் யாத்திரை" (Pilgrimage of Thomas Paine in the Spirit World) என்று பெயரிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட புத்தகத்தை வாசகர் வாசித்து நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும். இந்தப் புத்தகத்தில் தாமஸ் பெயின் ஏழாவது வானத்தில் உயர்த்தப்பட்ட ஒரு நிலையில் இருக்கும் ஆவியாக சித்தரிக்கப்பட்டிருக்கிறார்; மேலும், நியூயார்க்கிலுள்ள "சோதனை செய்யும் வகுப்பில்" ("Investigating class in New York") கிறிஸ்து தாமே ஒரு ஊடகத்தின்மூலமாக உரையாடல் நிகழ்த்தி, தாம் ஆறாவது வானத்தில் இருப்பதாக வெளிப்படுத்தினார் என்று கூறப்பட்டது. ஆவி உலகத்தில், ஆவிகள் படிப்படியாக முன்னேறிவருகின்றன என்ற கொள்கைளை நினைவில் வைத்துக்கொண்டால், பின்வரும் இந்த முரண்பாடு நன்றாக விளங்கும். கிறிஸ்து 1800 ஆண்டுகளுக்கும்மேலாக, (அம்மையார் காலத்தில் இந்தக் காலக்குறிப்பு கணக்கிடப்பட்டது என்பதை வாசகர்கள் நினைவில்கொள்ளவும்.) ஆவி உலகத்தில் சஞ்சரித்து, படிப்படியாக முன்னேறி, ஆறாவது வானத்தை அடைந்திருப்பதாகவும் ஆனால், தாமஸ் பெயினோ சுமார் ஒரு நூற்றாண்டிற்குள் ஏழாவது வானத்தை அடைந்திருப்பதாகவும் இக்கொள்கைப்படி நம்புகிறார்கள். இதைக் குறித்த இன்னுமோர் விளக்கத்தை டாக்டர் ஹேர் (Dr. Hare) அவர்களது கூற்றில் காணலாம். அதாவது அவரது தங்கை, "கிறிஸ்து மனிதனின் இரட்சிப்பிற்காக பாடுபட்டு பாவநிவிர்த்திசெய்தார்" என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்ததினால், ஆவி உலகத்தில் அவளது ஆவி முன்னேற்றம் அடையாமல் தாமதிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது என்பதாகும். இவ்வாறு ஆவி மார்க்கமானது, கிறிஸ்தவ சமயத்தில் நம்பிக்கை அற்றவர்களையும் (infidels), கிறிஸ்தவ சமயத்தில் நம்பிக்கையின்மை என்ற கொள்கையையும் (infidelity) உயர்த்திக்காட்டுகிறது. ★

# 22

# சுவிசேஷ ஒழுங்கு!

சுவிசேஷ ஒழுங்கு என்பது குறித்து மக்கள் அதிகமாகப் பயந்து அதை அலட்சியஞ்செய்வதை தேவன் எனக்குக் காட்டினார்.[1] சம்பிரதாயத்தை அறவே ஒழிக்க வேண்டும். அப்படிச்செய்வதில் ஒழுங்கு அலட்சியப்படுத்தப்படக்கூடாது. பரலோகத்தில் ஒழுங்கு உண்டு. பூமியிலே கிறிஸ்து இருக்கும்போது சபையிலே ஒழுங்கிருந்தது. அவர் பிரிந்து சென்ற பின்னரும் அவருடைய அப்போஸ்தலர்களால் அந்த ஒழுங்கு உறுதியாகக் கடைபிடிக்கப்பட்டது. இந்தக் கடைசிக் காலங்களில் தேவன் தமது பிள்ளைகளை விசுவாச ஐக்கியத்தில் கொண்டுவரும்போது, முன் ஒருபோதும் இல்லாத வகையிலே, ஒழுங்கின் உண்மையான தேவை, இன்றும் அதிக அவசியமாக இருக்கிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளை ஐக்கியப்படுத்தும்போது, சாத்தானும் அவனுடைய கெட்ட தூதர்களும் இந்த ஐக்கியத்தை தடுத்து, நாசம்பண்ணுவதில் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளார்கள்; எனவே, ஞானமும் முடிவு செய்யும் திறனுமற்று ஒரு வேளை தங்கள் வீட்டைக்கூட ஆளத்தெரியாமலும் இருப்பவர்கள், கடவுள் தங்களுக்குக் கீழே கொடுத்த கொஞ்சப்பேரைக்கூட ஆளுகையிலும் ஒழுங்கிலும் கொண்டுவரக்கூடாத நிலையில் உள்ளோர், ஊழியத்தில் துரிதமாகக் கொண்டுவரப்படுகிறார்கள்; எனினும், மந்தையின்மீதுள்ள பொறுப்பை கவனிப்பதற்கு தாங்கள் திறமையுடையவர்களே என்று எண்ணிக்கொள்கிறார்கள். இவர்கள் அநேக தவறான காரியங்களைச் செய்கிறார்கள்; எனவே, நமது விசுவாசத்தில் இணைக்கப்படாத மற்றவர்கள், எல்லா ஊழியர்களையும் இப்படிப்பட்ட தங்களைத் தாங்களே அனுப்பிக் கொண்ட (அழைக்கப்படாதவர்கள்) ஊழியர்கள் போல மதிக்கிறார்கள்; இவ்வாறு தேவனுடைய ஊழியம் அவதூறு செய்யப்படுகிறது. மற்றபடி, நேர்மையுள்ள காரியங்கள் இப்படியிருக்கின்றனவா? என்று ஆர்வத்தோடு விசாரிக்கின்ற அவிசுவாசிகள்கூட, இதினிமித்தம் சத்தியத்தை வெறுத்துத் தள்ளிப்போடுகிறார்கள். (1)

வாழ்க்கையிலே பரிசுத்தமில்லாதவர்களும், நிகழ்கால சத்தியத்தைப் போதிக்கத் தகுதியற்றவர்களும் ஊழியத்தில் பிரவேசித்து, சபையாராலும்

சகோதரர்களாலும் பொதுவாக அவர்கள் அங்கீகரிக்கப்படாததினால், கடைசியில் குழப்பமும் பிரிவினையுமே பலனாக இருக்கிறது. சிலர் சத்தியக் கொள்கைகளை அறிந்திருக்கிறார்கள். அதை ஆதாரத்தோடு விளக்கமுடியும். ஆனால், அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலும் மதிப்பிடுவதிலும் அனுபவத்திலும் குறைவாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் சத்தியத்தைப் போதிக்குமுன்பு, எந்தெந்தக் காரியங்களை விளங்கிக்கொள்ள வேண்டுமென்பது அத்தியாவசியமோ அவைகளில் தவறுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள். இன்னும் சிலருக்கு சத்தியத்தைப்பற்றி ஆதாரப்பூர்வமான கொள்கைகள் தெரியாது; ஆனால், அவர்கள் இப்பொழுதும் அப்பொழுதும் பரபரப்பூட்டும்வண்ணம் சில பிரசங்கங்களைச் செய்வதையும் நன்றாக ஜெபிப்பதையுங்கேட்ட மற்றவர்கள், இவர்களை ஊழியத்திற்குத் தள்ளிவிடுகிறார்கள். தேவனுடைய வேலைக்கு அவரிடமிருந்து தகுதிபெற்றிராத இவர்கள் இந்த வேலையில ஈடுபடுகிறார்கள். அதற்காக, அவர்களுக்குப் போதுமான அனுபவமும் நிதானிக்கும் திறனும் இருப்பதில்லை. ஆவிக்குரிய நிலையில் கர்வம் மிகுந்தவர்களாய் தங்களைத் தாங்களே உயர்த்திக்கொண்டு, தாங்களும் தேவனது ஊழியக்காரர் என்ற மாயையான நினைவின் அடிப்படையில் காரியங்களை நடப்பிக்கின்றார்கள். தங்களைப்பற்றியே அறியாதவர்களாய் இருக்கிறார்கள் நேர்மையான முடிவுகளைச் செய்யும் திறனற்றவர்கள். மேலும் இவர்களுக்குப் பொறுமையாக காரியங்களை நிதானிக்கத் தெரியாது. தற்புகழ்ச்சியில் எப்பொழுதும் நிலைத்திருந்து, அநேகக் காரியங்களை உறுதியாகக் கூறுவார்கள்; ஆனால், தேவனுடைய வசனத்தின்மூலமாக, அந்தக் காரியங்களை அவர்களால் நிரூபிக்க முடியாது. தேவன் இதை அறிவார். இந்தக் கொடிய காலங்களில் இப்படிப்பட்டவர்களை ஊழியஞ்செய்ய தேவன் அழைக்கிறதில்லை. எனவே தேவன் அழைக்காத இப்படிப்பட்ட மக்களை அவரது ஊழியத்திற்குத் தள்ளாதபடி சகோதரர்கள் கவனமாக இருக்க வேண்டும். தேவனால் ஊழியத்திற்கு அழைக்கப்படாத மனிதர்கள் மட்டுமே, மிகுந்த நம்பிக்கையுடையவர்களாக தாங்கள் அழைக்கப்பட்டதுபோலவும், தங்களது ஊழியம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் காட்டுகிறார்கள், இப்படிப்பட்டவர்கள் பணித்தளங்களுக்குச் செல்லும்போது, பொதுவாக நல்ல செல்வாக்கைப் பிரயோகிப்பதில்லை; எனினும், அவர்களுக்குச் சில இடங்களில் ஓரளவு வெற்றியும் கிடைக்கும். இந்தக் காரியத்தினிமித்தம் இவர்களும் மற்றவர்களும் தாங்கள் நிச்சயமாகவே கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் என்று நினைப்பதற்கு ஏதுவாகிறது. (2)

இந்த மனிதர்களது ஊழியத்தினால் கிடைக்கும் ஏதோ கொஞ்சம் வெற்றியானது, இவர்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள் என்று

சொல்வதற்கு ஆதாரமாக அமையாது; ஏனெனில், தேவனுடைய தூதர்கள் தேவனுடைய உண்மையான பிள்ளைகளுடைய இருதயங்களிலே அசைவாடி நிகழ்கால சத்தியத்தை பற்றிக்கொண்டு வாழும்படியாக அதைப்பற்றிய விளக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார்கள். தேவன் வைக்காத இடத்திலே, அழைக்கப்படாத ஊழியர்கள், தங்களைத் தாங்களே அழைத்தவர்களாய், அந்த இடத்திலே வைத்து, போதகர்களாக உரிமைகொண்டாடுகிறார்கள். அவர்கள் பேசுவதின்மூலமாக ஆத்துமாக்கள் சத்தியத்தைக் கேட்கிறார்கள் என்றாலும்கூட, தேவனால் அழைக்கப்பட்டவர்கள் என்பதற்கு இது ஆதாரமல்ல; இவர்களிடமிருந்து சத்தியத்தைப்பெறும் ஆத்துமாக்கள் துன்பத்திலும் அடிமைத்தனத்திலும் கொண்டுவரப்படும் நிலையில், இந்தச் சத்தியத்தைப் பெறுகிறார்கள். பின்னரோ இந்த மனிதர்கள் தேவனுடைய ஆலோசனையில் நிற்காதவர்கள் என்று கண்டுகொள்ளுகிறார்கள். துன்மார்க்கர் சத்தியத்தை எடுத்துக் கூறியபோதிலும், சிலர் அதை ஏற்றுக்கொள்ளலாம்; ஆனால், இந்தக் காரியம் அந்த துன்மார்க்கரை தேவனுடைய வேறு எந்தவிதமான ஆதரவிற்குள்ளும் கொண்டுவராது. துன்மார்க்கமான மனிதர் இன்னும் துன்மார்க்கரே. தேவனால் மிகவும் நேசிக்கப்பட்டவர்கள்மீது அவர்கள் நடப்பித்த மாய்மாலத்திற்குத்தக்கதாகவும், சபையிலே அவர்கள் கொண்டுவந்த குழப்பத்திற்குத்தக்கதாகவும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனையும் இருக்கும். அவர்களது பாவம் மூடப்படாமல், தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையின் நாளிலே வெளியரங்கமாக்கப்படும். (3)

தங்களைத் தாங்களே அனுப்பிக்கொண்ட தூதுவர்கள் (அதாவது ஆண்டவரால் அழைக்கப்படாதவர்கள்) ஊழியத்திற்கு ஒரு சாபமாக இருக்கிறார்கள். இத்தகைய ஊழியர்கள், தேவனுடைய ஆலோசனையின்படிதான் செயல்படுகிறார்கள், சபையின் ஐக்கியத்தில்தான் இருக்கிறார்கள் என்றெண்ணி, உத்தமமான ஆத்துமாக்கள், அவர்களிலே நம்பிக்கைவைத்து, சமயச்சடங்குகளை செயல்படுத்தும்படி அனுமதிக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு முதலாவது செய்யவேண்டியதை, கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்ற கடமை தெளிவாக இருப்பதால், அவர்களால் தங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படும்படி அனுமதிக்கிறார்கள். ஆனால், வெளிச்சம் கிடைக்கும்போது, ஏனெனில் வெளிச்சம் நிச்சயமாகக் கிடைக்குமாகையால், தேவனால் அழைக்கப்பட்ட, தெரிந்துகொள்ளப்பட்ட தூதர்கள் என்று, இவர்களைப்பற்றி விளங்கிக்கொண்ட பிரகாரம், இவர்கள் இல்லாதது தெரியவரும்போது, தாங்கள் ஏற்றுக்கொண்ட சத்தியத்தின்மீதே சந்தேகங்கொண்டு, துன்பங்களினூடே தள்ளப்பட்டு, ஏற்றுக்கொண்ட சத்தியத்தை, மீண்டும், ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமென எண்ணுகிறார்கள். தேவன்தான் தங்களை நடத்தினாரா,

அல்லவா என்றெண்ணி, அவர்களது எல்லா அனுபவங்களையும்பற்றி, சத்துருவால் அவர்கள் துன்புறுத்தப்பட்டு, குழப்பத்திற்குள்ளாக்கப படுகிறார்கள்; எனவே, மீண்டும் ஞானஸ்நானம் பெற்று, வாழ்க்கையைப் புதிதாகத் தொடங்கும்வரை, திருப்தியடையாதிருக்கிறார்கள். புதிய பணித்தளங்களில் பிரவேசித்து ஊழியஞ்செய்வதைவிட, தங்களைத் தாங்களே அனுப்பிக்கொண்ட ஊழியர்களினால் (அதாவது ஆண்டவரால் ஊழியத்திற்கு அழைக்கப்படாதவர்களால்) தவறான செல்வாக்கு பிரயோகிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்வது, தேவனுடைய ஊழியர்களின் மனதிற்கு, மிகவும் அதிகமான சோர்வைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கும். தேவனுடைய ஊழியக்காரர்கள் தெளிவான முறையில் காரியங்களை நடத்த வேண்டும். ஒளிவுமறைவின்றி செய்ய வேண்டும். தவறுகளை மூடிமறைக்கக் கூடாது. ஏனெனில், அவர்கள் மரித்தோருக்கும், உயிரோடிருப்பவருக்கும், மத்தியில் நின்றுகொண்டிருக்கிறார்கள். தாங்கள் எல்லோரும் உண்மையும் உத்தமமுமானவர்கள் என்றும், தங்களது இறையருட்பணித் திட்டம்பற்றியும், தங்களை மேற்பார்வையாளராக ஆண்டவர் நியமித்து, தங்களிடம் கையளித்திருக்கும் மந்தையின்மீது எத்தகைய செல்வாக்கை தாங்கள் பிரயோகித்திருக்கிறோம் என்பதைக்குறித்தும், கட்டாயமாக கணக்கொப்புவிக்க வேண்டும். (4)

இப்படிப்பட்ட மனிதர்கள் ஒதுங்கியிருந்து, தேவன் தங்களுக்காக திட்டமிட்ட தாழ்மையான இடங்களை நிரப்பியிருந் திருப்பார்களானால், இந்த மனிதர்களால் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அதன்மூலம் துன்பம் அனுபவித்தவர்களுக்கும் இதே சத்தியம் போய்சேர்ந்திருக்கும், தேவனுடைய கண்கள் அவருடைய மாணிக்கங்களின்மீது நோக்கமாக இருப்பதால்,அவரால் அழைக்கப்பட்ட—தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர் களை அவர்களிடத்தில் செல்லும்படியாக வழிநடத்தியிருப்பார். இப்படிப்பட்ட ஊழியர்கள் ஆழ்ந்து அறிந்த மனதோடு பழகியிருப்பார்கள். சத்தியவெளிச்சம் இந்த ஆத்துமாக்களுக்கு தங்களுடைய உண்மையான நிலையைக்காட்டியிருக்கும். அவர்களுங்கூட சத்தியத்தை விளங்கி ஏற்றுக்கொண்டு, அதன் அழகினாலும் தெளிவினாலும் திருப்தியடைந்திருப்பார்கள். சத்தியத்தின் வல்லமையான பலன்களை உணர்ந்து, பலங்கொண்டு பரிசுத்த செல்வாக்கை எங்கும் பரப்பியிருப்பார்கள். (5)

தேவனால் அழைக்கப்படாதவர்கள், ஊழியத்தினிமித்தம் செல்லுவதிலுள்ள ஆபத்தைப்பற்றி மறுபடியும் எனக்குக் காட்டப்பட்டது. அவர்களுக்குச் சில வெற்றிகள் கிடைக்குமானால், தகுதிகள் குறைவுபட்டுக்காணப்படுவது உணரப்படும், அறிவற்ற முயற்சிகள்

செய்யப்படும்; அவர்களது ஞானமற்ற தன்மையினால், சில அருமையான ஆத்துமாக்கள், அவர்களை யாருமே எப்பொழுதும் அடைய முடியாத நிலைக்கு விரட்டப்படுவார்கள். சபை தனது பொறுப்பை உணர்ந்து போதகர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களது வாழ்க்கை, தகுதிகள், பொதுவான அவர்களது நிலைபற்றிய காரியங்களை கவனத்தோடும் கருத்தோடும் அறியவேண்டும். தேவன் அவர்களை அழைத்ததற்கு தவறற்ற ஒரு ஆதாரம் கொடுக்கப்படா விட்டாலும், கொடுக்கப்பட்ட அழைப்பை மதிக்காமற்போனாலும், அவர்களுக்கு ஐயோ! இப்படிப்பட்ட போதகர்கள், சபையால் அங்கீகரிக்கப்படாதவர்கள் என்பதைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவது சபையின் கடமையாகும். இந்தக் காரியத்தில் தெளிவாய் நடப்பிப்பதற்கு இந்த ஒரு வழிமூலமாகத்தான் சபையின் காரியங்களைச் செய்யமுடியும். ஏனென்றால், சபையின்மீது இந்தப் பாரம் வைக்கப்பட்டுள்ளதென்பது எனக்குக் காட்டப்பட்டது. (6)

மந்தையைத் தொல்லைப்படுத்தி, குழப்பத்தில் ஆழ்த்தும் படியாக சத்துரு வருகின்ற இந்த வழி அடைக்கப்படமுடியுமென்று நான் கண்டேன். இது எப்படி அடைக்கப்படக்கூடும் என்று தூதனை வினவினேன். சபையானது தேவ வசனத்திற்காக தீவிரித்து ஓடி, புறக்கணித்து அலட்சியப்படுத்தப்பட்டுள்ள சுவிசேஷ ஒழுங்கிலே, நிலைநாட்டப்பட வேண்டுமென்று தூதன் கூறினான். விசுவாச ஐக்கியத்திலே சபையைக் கொண்டுவருகிறதற்கு, இது ஒரு தவிர்க்க முடியாத தேவையாகும். அப்போஸ்தலர்களுடைய காலத்திலே கள்ளப்போதகர்களினால் சபை வஞ்சிக்கப்பட்டு—ஏமாற்றப்படுகின்ற ஆபத்து இருந்ததை நான் கண்டேன்; ஆகையால், சபையிலுள்ள சகோதரர்கள், தங்கள் வீட்டாரைச் சரியாக நடத்தி, தங்களது குடும்பங்களில் ஒழுங்கை நிலைநாட்டியவர்களையும், இருளில் இருப்பவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டக்கூடியவர்களையும் தேர்ந்தெடுத்தார்கள். இத்தகைய குணநலன்களை காண்பிக்கக்கூடிய நபர்களின், நல்ல ஆதாரங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தார்கள். இவர்களைப்பற்றி தேவனிடத்தில் விசாரித்து, சபையாரின் ஒப்புதலின்பேரில், பரிசுத்த ஆவியின் நல்லிணக்கத்தோடு அப்படிப்பட்டவர்கள்மீது கைவைத்து ஆசீர்வதித்து பிரித்து வைத்தார்கள்; எனவே, தேவனிடமிருந்து கட்டளையைப் பெற்று, சபையின் ஒப்புதலையும் பெற்றவர்களாய் புறப்பட்டுச்சென்று பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார்கள். மேலும், தேவனுடைய வீட்டின் பரிசுத்த நியமங்களை செயல்படுத்தினார்கள். இயேசுவின் பாடு, மரணம் பற்றிய நினைவு, தமது பிள்ளைகளின் மனதிலே பசுமையாக இருக்கும்படி, சிலுவையில் அறையப்பட்ட மீட்பரின் நொறுக்கப்பட்ட உடலையும் சிந்திய இரத்தத்தையும் குறிக்கும் அடையாளமான அப்பத்தையும் திராட்சை

இரசத்தையும் பரிசுத்தவான்களிடம் கொடுக்கும் இந்த நியமங்களில் ஈடுபட்டிருந்தார்கள். (7)

அப்போஸ்தலரின் நாட்களைப்போலவே, இன்றுங்கூட, பொய்ப்போதகர்களினிமித்தம் பாதுகாப்பின்மை நிலவுகிறது. அத்தகைய நிலைமையே, நம் மத்தியில் இன்றும் நீடிக்குமானால், மந்தையின் சமாதானம் இணக்கம், ஐக்கியம் ஆகியவற்றைத் தக்க வைத்துக்கொள்ள, அவர்களைப்போல நாமும் சிறப்பான முயற்சிகளை எடுக்கவேண்டும். அவர்களது முன்மாதிரி நமக்குள்ளதால், அதைப் பின்பற்றவேண்டும். அனுபவம் வாய்ந்த—திடமான—புத்திக்கூர்மையுள்ள சதோதரர்கள் ஒன்றுகூடி, தேவவசனத்தைப் பின்பற்றியவர்களாய், பரிசுத்த ஆவியின் அங்கீகாரமும் பெற்று, ஊக்கமான ஜெபத்துடனே, தேவனிடமிருந்து ஊழியஞ்செய்யும்படிக் கட்டளை பெற்றவர்கள்—இவர்கள் என்ற அத்தாட்சி உள்ள சகோதரர்களின் சிரங்களிலே கைகளை வைத்து ஜெபித்து, அவருடைய வேலைக்காக முழுவதும் அவர்களை பிரித்தெடுக்க வேண்டும். இந்தச் செய்கையானது, மேலான பக்திவிநயமான இந்தச் சத்தியத்தை எடுத்துச் செல்லும் தூதுவர்களாக, சகோதரர்கள் வெளியே செல்வதற்கு சபையின் ஒப்புதலைத் தெரிவிக்கும். (8)

பாவமற்ற பூரணத்துவ கொள்கைக்காரர்கள் (Perfectionism), ஆவியுலகக் கொள்கைக்காரர்கள் முதலியோர், தங்களது முந்திய பிழைகளிலேயே நிலைத்து, அவர்களது எண்ணங்களும் நிதானிக்கும் புத்தியும் பலவீனப்பட்டுப்போனதால், அப்படிப்பட்டவர்களிடத்தில் தேவன் தமது அருமையான மந்தையை ஒப்படைக்கமாட்டார். இப்படிப் பட்டவர்கள் இந்தவித பிழை நிறைந்த தங்களது போக்கினால் தங்களையும் அவமானத்திற்குள்ளாக்கி, சத்தியத்தை எடுத்துச்செல்லும் ஊழியத்தையும் அவதூறுக்கு ஆளாக்கினார்கள்; இப்பொழுது அந்தப் பிழைகளினின்று நீங்கி, இந்தக் கடைசி சத்தியத்தைப் போதிப்பதற்காக வெளியே செல்லத் தகுதியுடையவர்களென்று எண்ணினாலும், தேவன் அவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டார். அருமையான ஆத்துமாக்களை அவர்களது கவனத்தின்கீழ் ஒருபோதும் ஒப்படைக்கமாட்டார். அவர்கள் தவறுகளிலே முன்பு நிலைத்திருந்ததால், தங்களது தீர்மானங்களில் மாறாட்டம் மிகுந்தவர்களாகவே காணப்பட்டு, இன்னும் ஆவிக்குரிய காரியங்களில் பெலவீனராகவே இருக்கின்றனர். மாபெரும் பரிசுத்தமான நமது தேவன் மிகுந்த விழிப்புடையவராதலால், தமது சத்தியத்தை எடுத்துச் செல்ல தமக்காக பரிசுத்த மனிதர்களை வைத்துள்ளார். சீனாய் மலையினின்று பேசப்பட்ட பரிசுத்த பிரமாணம் அவரில் ஒரு பகுதியாகும். அதை உறுதியாகப்

பின்பற்றும் பரிசுத்த மனிதர்கள் மாத்திரமே, அதை மற்றவர்களுக்குப் போதிப்பதின்மூலம் அவரை மேன்மைப்படுத்த முடியும். (9)

சத்தியத்தைப் போதிக்கும் தேவனுடைய ஊழியக்காரர்கள் சரியான மதிப்பீடு செய்யக்கூடியவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் எதிர்ப்புகளைத் தாங்கிக்கொள்ளவேண்டும். பரபரப்படையக்கூடாது. சத்தியத்தை எதிர்ப்பவர்கள், அதைப் போதிப்பவர்கள்மீது குற்றங்கண்டுபிடிக்க முனைவார்கள். கொண்டுவரப்படும் ஒவ்வொரு மறுப்பும், அதன் மோசமான நிலையிலே கொண்டுவரப்பட்டு, சத்தியத்திற்கு எதிராகவே இருக்கும். தூதை எடுத்துச் செல்லும் தேவனுடைய ஊழியக்காரர்கள், இந்தவிதமான மறுப்புகளைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். இது அமைதியாவும், பொறுமையாகவும் சத்திய வெளிச்சத்தைக் கொண்டும் செய்யப்பட வேண்டும். இந்தவிதமாக சத்தியத்தை எதிர்ப்பவர்கள், அடிக்கடி தேவனுடைய ஊழியக்காரர்களிடத்திலே கோபமூட்டும் வகையில் பேசி, நமது ஊழிக்காரர்களும் அதே நிலைக்கு தங்களை ஆளாக்கும்படி முயற்சிப்பார்கள். இதை எவ்வளவிற்கு அதிகமாகச் செய்யவேண்டுமோ அவ்வளவிற்கு அதிகமாகச் செய்து, மற்றவர்களிடத்திலே, தேவனுடைய கற்பனைகளைப் போதிப்பவர்கள், கசப்பான ஆவியையுடையவர்கள், கடினமானவர்கள் என்று சொல்லப்பட்டபடியே இருக்கிறது என்று கூறுவார்கள். நாம் மறுப்புகளைச் சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாக இருப்பது அவசியம். பொறுமை, சரியான மதிப்பீடு, சாந்தம் ஆகியவற்றோடு, அவற்றிற்கேற்ற முக்கித்துவத்தையும் அளிக்கவேண்டும். நாம் அவற்றை (மறுப்புகளை) ஊதறித்தள்ளிவிடவோ, அல்லது தனிப்பட்ட கருத்தைத் துணிந்துகூறி, புறக்கணித்துவிடவோ கூடாது. பின்னர், எதிர்ப்பவரை வற்புறுத்தி மேற்கொள்வதோ, அல்லது அவரிடம் கடினமனப்பாங்கை வெளிப்படுத்துவதோ கூடாது. மேலும், அவர்கள் கூறும் மறுப்புக்களுக்கு, ஏற்ற முக்கியத்துவத்தை அளித்து, சத்தியத்தின் ஒளியையும், வல்லமையையும் எடுத்துக்காட்டி, அதன்மூலம், சத்தியம் மதிப்பில் உயர்ந்து தவறுகள் நீக்கப்படட்டும். அவ்வாறு, சிறந்த கருத்துப்பதிவு ஏற்படும். நேர்மையான மறுப்பாளர்கள், தாங்கள் வஞ்சிக்கப்பட்டதையும், கற்பனையைக் கைக்கொள்பவர்கள், எப்படிக் குறித்துக்காட்டப்பட்டார்களோ, அப்படிப்பட்டவர்களாக இல்லை என்பதையும் ஒப்புக்கொள்வார்கள் என்பதையும் நான் கண்டேன். (10)

ஜீவனுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் அனைவருமே, சகோதரர்களுக்கு மேலாக தங்களை உயர்த்துவதற்குப் பதிலாக, அனைவருக்கும் ஊழியஞ்செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் அன்பும் மரியாதையும்

உடையவர்களாக இருக்கவேண்டும். குற்றஞ்செய்வார்களானால், அதை முற்றிலுமாக அறிக்கைசெய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். எண்ணத்தில் நேர்மை என்ற காரியமானது, தவறுகளை அறிக்கைசெய்யாததற்கு ஒரு சாக்குப் போக்காக அமையக்கூடாது. அறிக்கைசெய்வதினால், சபை தனக்கு தூதைக் கொடுப்பவர்மீது உள்ள நம்பிக்கையை கொஞ்சங்கூட குறைத்துப் போடாது. அவர் ஒரு நல்ல முன்மாதிரியை மற்றவர்களுக்குக் காண்பிக்கிறார். அறிக்கை செய்யும் மனோபாவமானது இன்னும் சபையிலே ஊக்குவிக்கப்பட்டு, இனிமையான ஐக்கியம் அதன் பலனாக வெளிப்படும். போதகர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்வோர் கடவுட்பற்றிற்கும், சாந்தத்திற்கும், தாழ்மைக்கும், ஒரு அன்பான ஆவியை உடையவர்களாயிருப்பதற்கும் மாதிரிகளாக இருக்கவேண்டும்; இதன் மூலம் இயேசுவிற்கும் வேதசத்தியத்திற்கும் ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்யமுடியும். தேவனுடைய ஊழியக்காரன் தனது உரையாடல்களிலும், செய்கைகளிலும் சுத்தமாக இருக்கவேண்டும். அவர் பரிசுத்த தேவனால் அருளப்பட்ட பரிசுத்த வார்த்தைகளை நான் உபயோகிக்கிறேன் என்பதை எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டும். மந்தையானது அவருடைய கரத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும். இயேசு பிதாவிடத்தில் நமக்காக மன்றாடுவதுபோல் ஊழியர் சபையாரின் காரியங்களை எடுத்துச்சென்று, இயேசுவிடம் மன்றாடவேண்டும். பண்டைக்கால இஸ்ரவேல் புத்திரருடைய காரியம் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியர்கள் எவ்வளவு பரிசுத்தமும் தூய்மையுமாயிருந்தார்களென்று கண்டேன்; ஏனெனில், தங்களது ஊழியத்தினிமித்தம் தேவனோடு மிகநெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தார்கள். ஊழியஞ்செய்வோர் பரிசுத்தமாயும், தூ ய்மையாயும், பிழையற்றவர்களுமாய் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால், தேவன் அவர்களை அழிப்பார். தேவன் மாறிவிடவில்லை. அவர் என்றும்போல் பரிசுத்தமாயும், தூய்மையாயும், குறிப்பிட்ட காரியத்தில் தனிக் கவனஞ்செலுத்துபவராயும் இருக்கிறார். இயேசுவின் ஊழியக்காரர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வோர் அனுபவமும், ஆழ்ந்த பக்தியுமுடையோராய் இருக்கவேண்டும்; அப்படியிருப்பார்களேயானால், எக்காலத்தும் எவ்விடத்தும் பரிசுத்த செல்வாக்கைப் பரப்பமுடியும். (11)

எங்கெல்லாம் தேவனுடைய ஊழியத்திற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதோ, அங்கு தேவனுடைய தூதை எடுத்துச்செல்வோர் போவதற்கு இதுதான் தருணம் என்பதை நான் கண்டேன். தேவன் அவர்களுக்கு முன்பாகச் சென்று, கேட்கும்படியாக சிலரது இருதயங்களைத் திறப்பார். புதிய இடங்களில் ஊழியம் ஆரம்பிக்கப்பட வேண்டும். எங்கெல்லாம் இவ்வாறு

நடைபெறுகிறதோ அங்கெல்லாம் இணக்கமுடையவர்களாயிருந்தால், ஒருவர் கையை ஒருவர் தாங்கும்படி இருவர் இருவராகப் போவது மிகவும் நன்மையாக இருக்கும். இப்படிப்பட்ட திட்டமானது முன்பாக கொடுக்கப்பட்டது. எங்கு எதிர்ப்புகள் அதிகமாக இருக்கின்றனவோ, எங்கு ஊழியத்தேவை அதிகமாக இருக்கின்றதோ, அப்படிப்பட்ட இருள் சூழ்ந்த இடங்களுக்கு ஒருங்கிணைந்த முயற்சிகளோடும் உறுதியான விசுவாசத்தோடும் இரண்டு இரண்டு சகோதரர்கள் இணைந்து புறப்பட்டு, குழுக்களாகச் சென்று, இருளில் இருப்பவர்களுக்கு முன்பாகச் சத்தியத்தை வைக்கவேண்டும். தனித்துச் சென்று அநேக இடங்களில் விசுவாசிகளை சந்தித்துக் காரியங்களைச் சாதிக்க முடியுமானாலும், பிரயாணத்தின்போது, அடிக்கடி ஒருவரை ஒருவர் சந்தித்து, தங்களது விசுவாசத்தினாலே ஒருவர் மற்றவரை தைரியமூட்டி, அதன்மூலமாக ஒருவர் கரங்களை மற்றவர் தாங்கிப்பிடிக்க முடியும். தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் இடங்களைப்பற்றி ஒருவரையொருவர் ஆலோசித்து, தங்களில் யாருடைய, எந்தத் தாலந்து அங்கு அதிகமாகத் தேவைப்படும் என்பதைத் தீர்மானஞ்செய்து, அவர்களது இருதயங்களை வசப்படுத்திக்கொள்ள, எந்த வழியில் சென்றால், அதிகமாக வெற்றி கிடைக்கும் என்பதைத் தீர்மானிக்கவேண்டும்; பின்பு, அவர்கள் பிரிந்து செல்வார்களானால், இருளையும் எதிர்ப்புகளையும் சந்திப்பதற்கும் இரக்கமுள்ள இருதயத்தோடு அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஊழியஞ்செய்யவும், அவர்களது தைரியமும் ஆற்றலும் புத்துணர்ச்சிபெறும். (12)

தேவனுடைய ஊழியக்காரர்கள் திரும்பத்திரும்ப ஒரே இடத்திற்கு ஊழியத்திற்காகச் செல்லாமல், புதிய இடங்களில் ஆத்துமாக்களைத் தேடி அலையவேண்டுமென்றும் நான் கண்டேன். ஏற்கனவே சத்தியத்தில் உறுதிப்படுத்தப்பட்டவர்கள், ஊழியர்களது வேலையை அவர்களுக்காக அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது; ஏனெனில், அவர்கள் தனித்து நிற்கப் பழகி, தங்களைச் சுற்றிலும் உள்ள ஆத்துமாக்களையும் பலப்படுத்தவேண்டும். அந்தச் சமயத்தில், தேவனுடைய தூதை எடுத்துச்செல்பவர்கள் நிகழ்கால சத்தியத்தால் தெளிவுபெறாத அநேகருக்கு சத்தியத்தைக் கொடுப்பதற்காக இருண்ட தனித்த இடங்களிலுள்ள ஆத்துமாக்களைச் சந்திக்கவேண்டும். (13)

---

1 அட்வெண்டிஸ்தர்கள் பல சபைகளிலிருந்தும் வந்தவர்கள். முதன்முதலில் இன்னொரு சபையை அமைக்கவேண்டுமென்பது அவர்களது எண்ணமல்ல. 1844–ம் ஆண்டிற்குப்பின் ஒரு குழப்பமான நிலை காணப்பட்டது. ஒரு நிறுவனத்தை அமைக்கவேண்டுமென்ற கருத்திற்கு அநேகர் கடுமையான

எதிர்ப்பை தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். சுவிசேஷம் முழுச் சுதந்தரத்துடன் அறிவிக்கப்படுவதற்கு அந்தக் கருத்து, அதாவது ஒரு நிறுவனத்தை அமைப்பது முரண்பாடானது என்பது அவர்கள் கருத்து. திருமதி எலன் ஒயிட் அம்மையாரின் ஊழியங்களும் சாட்சியும், கொள்கைவெறியை எப்பொழுதுமே எதிர்த்துவந்தது. அவர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்ட அறிவுரையின்படி, ஆரம்பத்திலேயே, குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக, ஒரு நிறுவனம் போன்ற அமைப்பு வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது.

# 23

# சபையின் தொல்லைகள்!

அன்புள்ள சகோதர—சகோதரிகளே,

தவறுகள் துரிதமாக பெருகிக்கொண்டு செல்வதால், கர்த்தருடைய வேலையினிமித்தமாக, நாம் வாழும் காலத்தின் நிலையை உணர்ந்தவர்களாக விழிப்பாயிருத்தலை நாடவேண்டும். இருள் பூமியை மூடவிருக்கிறது. காரிரும் மக்களை மூடும். ஏறக்குறைய நம்மைச் சுற்றிலும் இருக்கும் எல்லாமே தவறுகளும், ஏமாற்றங்களுமாகிய காரிருளால் மூடப்பட்டு இருக்கின்றபடியால், மூடத்தனத்தை உதறிப்போட்டு, தேவனுக்கு அருகில் வாழ்வதே நமக்கு ஏற்றதாயுள்ளது. அதன்மூலம் இயேசுவின் முகப்பிரசன்னத்தின்று தெய்வீக மகிமை, வெளிச்சம் ஆகிய ஒளிக்கதிர்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இருள் சூழ்ந்து தவறுகள் பெருகும்போது சத்தியத்தின் முழு அறிவையும்பெற்று, வேத வசனங்களின் வழியாக நமது நிலையைக் காத்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும். (1)

சத்தியத்தின்மூலமாக நாம் பரிசுத்தமாக்கப்படவேண்டும். முற்றிலுமாக தேவனுக்கு நம்மை ஒப்படைக்கவேண்டும். அதிகமான வெளிச்சத்தை தேவன் நம்மேல் வீசப்பண்ணவும், அவருடைய வெளிச்சத்திலே நாம் வெளிச்சம் காணவும், அவருடைய பலத்தால் நாம் பெலப்படவும், அந்தப் பரிசுத்த அழைப்பை அவ்வாறு வாழ்ந்துகாட்டவேண்டும். ஒவ்வொரு கணமும் நாம் விழிப்புள்ளவர்களா யிராவிட்டால், பொல்லாங்கனால் முற்றுகையிடப்பட்டு, அந்தகாரத்தின் வல்லமையால் மேற்கொள்ளப்படும் மாபெரும் அபாயத்தில் அகப்படுவோம். சாத்தான் தனது தூதர்களை விழிப்பாயிருக்கக் கட்டளையிட்டு, தங்களால் முடியுமட்டும் அனைவரையும் மேற்கொள்ளச்செய்கிறான். சத்தியத்தை நாங்களும் கைக்கொள்ளுகிறோம் என்று சொல்லிக்கொள்பவர்களது ஏறுமாறான நிலையையும், அவர்களை ஆழ்த்தியிருக்கும் பாவங்களையும் கண்டுபிடித்து, அவர்களைச் சுற்றிலும் இருள் சூழச்செய்கிறான். இவ்வாறு, அவர்களை விழிப்பற்றுப்போகும்படிச் செய்கிறான். இதனால், தாங்கள் நேசிக்கும் சத்தியத்தை

நிந்தனைக்குள்ளாக்கும்வண்ணம் வழியை மேற்கொண்டு சபையை மிகுந்த துக்கத்திற்குள்ளாக்கு கிறார்கள். தப்பாக வழிநடத்தப்பட்ட, விழிப்பற்ற ஆத்துமாக்கள் மேலும் இருளில் அதிகமாக மூழ்குவதால், பரலோக வெளிச்சம் அவர்களிலிருந்து மெல்ல மங்கிப்போகிறது. தங்களைச் சூழ்ந்துள்ள பாவங்களைக் காணமுடியாத நிலையிலிருக்கிறார்கள். சாத்தான் அவர்களைச் சுற்றிலும் தனது வலையைப் பின்னுவதால், அவர்கள் அவனது கண்ணியில் அகப்பட்டுக்கொள்ளுகிறார்கள். (2)

தேவன் நமது பெலன். ஞானத்திற்கும் ஆலோசனைக்கும் நாம் அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய மகிமை யையும், சபையின் நலனையும், நமது சொந்த ஆத்துமாக்களின் இரட்சிப்பையும், நமது நோக்கத்தில்கொண்டவர்களாய் நம்மைச் சூழ்ந்துள்ள பாவங்களை நிச்சயமாக மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாளும் புது வெற்றியை நாம் தனியாக ஒவ்வொருவரும் அடைய நாடவேண்டும். நாம் தனியாக நின்று தேவனையே முழுவதும் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். எவ்வளவு சீக்கிரம் கற்றுக்கொள்ளுகிறோமோ அவ்வளவிற்கு நல்லது. ஒவ்வொருவரும் தான் தவறுகிறது எங்கே என்பதை நன்றாக அறிந்து, தனது பாவங்கள் தன்னை மேற்கொள்ளாதபடி மிகவும் விழிப்போடிருந்துதான் அந்தப் பாவங்களின்மீது வெற்றிசிறக்கவேண்டும். அதனால் தேவனிடத்தில் நம்பிக்கை வைக்கிறோம். பெரிய தொல்லையினின்று சபையும் தப்பமுடியும். (3)

தேவனின் தூதுவர்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஊழியஞ்செய்யச் செல்லும்போது, சத்தியத்தில் அதிக வருடங்களாக இருப்பவர்களுக்காகவே தங்கள் நேரத்தில் அதிகப் பகுதியைச் செலவிடுகிறார்கள். இத்தகைய ஆத்துமாக்கள் விழிப்போடிருந்து தங்களைக் கவனியாமல் அடக்கமின்றி, சோதனைக்காரன் அவர்களைச் சோதிக்கும்படி விட்டுவிடுகிறார்கள். தங்களைச் சோதனைக்குள்ளாக்கும்படி பொல்லாங்கனைத் தூண்டிவிடுகிறார்கள் என்று சில சமயங்களில் நான் நினைக்கிறேன். அவர்கள் சில அற்பமான தொல்லைகளிலும் சோதனைகளிலும் அகப்பட்டுக்கொள்ளுவதினால், தேவனுடைய ஊழியக்காரர்களது நேரம் அவர்களைச் (சபையார்) சந்திப்பதிலேயே செலவிடப்படுகிறது. ஊழியக்காரர்கள் மணிக்கணக்காகவும், நாட்கணக்காகவுங்கூட அங்கு நிறுத்திவைக்கப்படுகிறார்கள். அற்பமான தொல்லைகள், துன்பங்கள் மீண்டும் மீண்டும் பேசப்படுவதினால் ஊழியர்கள் துக்கமடைகிறார்கள். தங்களது பிரச்சனைகள் மிகவும் அற்பமானது என்றும், கவனிக்கப்படவேண்டிய அளவிற்கு அந்தப் பிரச்சனைகள் பெரியதல்லவென்றும் தேவனுடைய ஊழியக்காரர்கள் நினைத்துவிடுவார்களோ என்றெண்ணி, சபையார்

ஒவ்வொருவரும் தங்களது சொந்தப் பிரச்சனைகள் மிகவும் அபாயகரமானது போலத் தோற்றமளிக்கும்படி திரும்பத்திரும்பக்கூறி பெரிதுபடுத்திக் காட்டுகிறார்கள். இந்தச் சோதனைகளில் தேவ ஊழியர்கள் தங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்றிருப்பதற்குப் பதிலாக சபையார் தாங்களே தேவனுக்குமுன்பாக அழுது மன்றாடி, அவைகள் நீங்கும்வரை உபவாசித்து ஜெபிக்கவேண்டும். (4)

தேவன் தூதாட்களை பணித்தளத்திற்கு அழைத்ததின் நோக்கமே, ஊழியர்கள், தாங்கள் கூப்பிட்ட குரலுக்கு வருவதற்கும், தங்களைத் தோளில் சுமப்பதற்குமே என்று சிலர் எண்ணுகிறதுபோல் தெரிகிறது. தங்களது புத்தியீனமான செயல்களால், சாத்தானுக்கு வழிவிட்டுக்கொடுத்து, தங்களைச் சுற்றியிருப்பவர்களிடத்தில் குற்றங்கண்டுபிடிக்கும் குணமுடையவர்களாயும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில்லாதவர்களாயும், அதன் நிமித்தமாக தங்கள்மேல் வரப்பண்ணிக்கொண்ட தொல்லைகளினின்றும் சிறுசிறு கஷ்டங்களினின்றும் தங்களை மீட்டு, சரிப்படுத்திவைப்பதே தூதாட்களின் மிகமுக்கியமான வேலை என்றும் நினைக்கிறார்கள். ஆனால், இந்தச் சமயத்தில் பசியாயிருக்கும் மந்தையின் ஆடுகள் எங்கே? அவர்கள் ஜீவ அப்பத்திற்காகப் பசித்திருக்கிறார்கள். சத்தியத்தை அறிந்து, அதில் நிலைகொண்டவர்கள் அதற்குக் கீழ்ப்படியாமற்போகிறார்கள். அவர்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படிவார்களானால், இந்தத் தொல்லைகளின்று தங்களைக் காப்பாற்றிக்கொள்வார்கள். இவர்களது கீழ்ப்படியாமையினால், தேவனின் தூதாட்களை தங்களிடத்தில் நிறுத்திவிடுகிறார்கள். தேவன் தமது தூதாட்களை ஊழியத்திற்காக எதற்கு அழைத்தாரோ அந்த நோக்கம் நிறைவேறாமற்போகிறது. சபையின் இந்தக் காரியங்களால் தேவனுடைய ஊழியர்கள் துக்கித்து அதைரியப்படுகிறார்கள். இந்தச் சமயத்திலே அவர்களுடைய பாரத்தோடு கொஞ்சங்கூட சுமத்துவதற்கு முற்படாமல், உற்சாகமூட்டும் வார்த்தைகளாலும், விசுவாசமுள்ள ஜெபத்தாலும் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். சத்தியத்திற்கு கீழ்ப்படிவோம் என்று சொல்பவர்கள் தங்களுக்காக உதவியை நாடாதபடிக்கு, தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களைக் கவனித்து அவர்களுக்கு உதவிசெய்தால், ஊழியர்கள் எவ்வளவு விடுதலைபெற்றவர்களாக இருப்பார்கள். சத்தியமே எடுத்துச் சொல்லப்படாத இருண்ட இடங்களில் தேவனுடைய ஊழியர்கள் செல்லும்போது, தங்களுடைய சகோதரர்களுக்கு வந்த அவசியமற்ற உபத்திரவங்களால் ஆவியிலே நொந்துபோனவர்களாய் செல்கிறார்கள். இதோடு சேர்த்து, அங்கு எதிர்ப்பவர்களது அவிசுவாசத்தையும், தவறான எண்ணங்களையும் சந்திக்கவேண்டியதிருக்கிறது. சிலரால் மிதிக்கப்பட்டும்போகிறார்கள். (5)

தேவனுடைய ஊழியர்கள் அதைரியத்தினின்றும் சோதனைகளினின்றும் விடுபட்டிருப்பார்களானால், இருதயங்களை மாற்றுவது எவ்வளவு சுலபமாக இருக்கும்! தேவனும் எவ்வளவுக்கதிகமாக மகிமைப்படுவார்! மேலும், சத்தியத்தை அதன் அழகோடு சுதந்திர உணர்ச்சியோடு மற்றவர்கள் முன்வைக்கமுடியும். தாங்களாகவே சரிபண்ணக்கூடிய சில தொல்லைகளை ஊழியர்கள்மீது சுமத்தி, அவர்களது ஊழிய நேரத்தை தங்களுக்காக அதிகமாகச் செலவிடச்செய்யும் சபையார்கள் குற்றவாளிகளாவார்கள். தங்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து, அதன்மூலம் சாத்தானையும் திருப்திப்படுத்த இந்தக் காரியங்களில் செலவிடப்படும் பணத்திற்கும் நேரத்திற்கும் இவர்கள் கடவுளுக்கு கணக்குக் கொடுக்கவேண்டும். தங்கள் சகோதரர்களுக்கு உதவக்கூடிய நிலையில் அவர்கள் இருக்கவேண்டும். ஒரு முழுக்கூட்டத்தின் நேரத்தில் பாரத்தை சுமத்துவதற்காக தங்கள் தொல்லைகளையும் கஷ்டங்களையும் முடிக்காமல் நிறுத்திவைக்கக்கூடாது. அல்லது தேவனின் தூதாட்கள் சிலர் வந்து முடித்துவைக்கட்டுமே என்று காத்திருக்கவுங்கூடாது. தாங்களாகவே தேவனுக்கு முன்பாக தங்களை சரியாக்கிக்கொள்ளவேண்டும். தங்கள் வழிகளைவிட்டு, தொல்லைகளை நீக்கி, ஊழியர்கள் வரும்பொழுது அவர்களை பலவீனப்படுத்தாமல், அவர்கள் கரங்களை தாங்கிப்பிடிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். (6)

---

1 1853–ம் ஆண்டில் ஆகஸ்டு 11–ல் பிரசுரிக்கப்பட்ட ரிவ்யூ என்ற பத்திரிக்கையில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன. ★

# 24

# சபையின் நம்பிக்கை![1]

**சா**ந்தமும் தாழ்மையுமான இயேசுவின் பின்னடியார்களை நான் தேட முற்பட்டபோது என் மனம் மிகவும் வேதனை அடைந்தது. இயேசுவின் அதிசீக்கிர வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்பவர்களில் அநேகர் உலகத்தோடு ஒத்துப்போய்கொண்டிருக்கிறார்கள். தேவனின் அங்கீகாரத்தைவிட தங்களைச் சுற்றியிருப்போரின் பாராட்டுதல்களை அதிக அக்கறையோடு தேடுகிறார்கள். சிறிது காலத்திற்கு முன்பாக பிரிந்துவந்தார்களே அந்த சபையார்களைப்போல—குளிர்ந்து—கடமைக்கென்று இருக்கிறார்கள். அவர்களின் தற்கால நிலையை லவோதிக்கேயா சபைக்கு கூறப்பட்ட வார்த்தைகள் பூரணமாக விவரிக்கின்றது. (வெளி. 3:14–20). அவர்கள் “அனலுமின்றி குளிருமின்றி” வெதுவெதுப்பாக இருக்கிறார்கள். “உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியின்” ஆலோசனைக்குச் செவிசாய்த்து உள்ளான ஆர்வத்தோடு மனந்திரும்பி, “நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும்” “வெண் வஸ்திரத்தையும்” “கலிக்கத்தையும்” பெற்றுக்கொள்ளாவிட்டால், அவர் தமது வாயினின்று அவர்களை வாந்திபண்ணிப்போடுவார். (1)

நமது தேவனின் உடன்வருகையை எதிர்நோக்கியவர்களாக ஒரு காலத்தில் ஆரவாரித்து—மகிழ்ந்து—உரத்த சத்தமிட்டவர்களில் அநேகர் சபையின் அடித்தளத்திலும், இயேசு வருகிறார் என்பதை நம்பியவர்களுக்கு விரோதமாக தப்பான காரியங்களைப் பரப்பி, அவர்களது செல்வாக்கை அதிகரிப்பதற்காக தப்பெண்ணத்தை ஏற்படுத்தி, அவர்களை நிந்தித்த உலகத்தின் அடித்தளத்திலும் இருக்கிறார்கள். இப்பொழுது ஜீவனுள்ள தேவனை யாராவது ஒருவர் தேடி வாஞ்சித்து நீதிக்காக, பசியோடும் தாகத்தோடுமிருப்பாரானால் தேவன் அவருக்கு தமது வல்லமையை உணரும்படிச் செய்கிறார். ஏக்கமுள்ள ஆத்துமாவை திருப்திப்படுத்தி, அவரது இருதயத்தில் தமது அன்பைப் பொழிகிறார். அவர் தேவனைத் துதித்து, அதன்மூலம் மகிமைப்படுத்துவாரானால், தேவன் வருகிறார் என்று நம்புகிறோம் என்று பெயருக்காக சொல்லிக்கொள்பவர்கள் அவரை

ஏமாற்றப்பட்டுவிட்டான் இவனது மனது வசியப்படுத்தப்பட்டுள்ளது அல்லது ஒரு அசுத்தஆவி அவனில் குடிகொண்டுள்ளது என்று கருதுகிறார்கள். (2)

இப்படிப்பட்ட அநேக பெயர்க் கிறிஸ்தவர்கள் உலகத்தாரைப்போலவே உடுத்தி, பேசி, நடிக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ளமுடியும். அவர்கள் கிறிஸ்துவின் வருகைக்காக நோக்கிக்கொண்டிருக்கிறோமென்று சொன்னாலும், அவர்கள் பேச்சு பரலோகத்தைப்பற்றியில்லாமல், உலகத்தைப் பற்றியே இருக்கிறது. “இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்”–2 பேதுரு 3:11–12. “அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்”–1 யோவான் 3:3. அட்வென்டிஸ்டு என்று பெயர்கொண்டுள்ள அநேகர் வேத வசனத்தைக் கற்று, அவருக்கு எப்படி உகந்தவர்களாக இருக்கலாம் என்பதை விட்டுவிட்டு, தங்களை நன்றாக அலங்கரித்து, உலகத்தின் பார்வையில் நன்றாகத் தோற்றமளிக்கும்படியாகக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். (3)

நமக்கு மாதிரியான—நமது அழகிய இயேசுவானவர் தமது முதல் வருகையில் தோற்றமளித்ததுபோல இந்த மதபோதகர்களிடையே காட்சியளித்தால் எப்படி இருக்கும்? அவர் ஒரு தொழுவத்தில் பிறந்தார். அவரது வாழ்க்கையையும் ஊழியத்தையும் தொடர்ந்து பார்ப்போம். அவர் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார். தையலில்லாத சாதாரண அங்கியைத் தரித்துக்கொண்டிருந்த, தலைசாய்க்க இடமில்லாதிருந்த அந்தத் தாழ்மையான—அமைதியான மீட்பரைக்கண்டு, இந்த பெயர்க் கிறிஸ்தவர்கள் வெட்கப்படுவார்கள். அவரது பழுதற்ற தன்னலமற்ற வாழ்க்கை அவர்களைக் கண்டனஞ்செய்யும். அவரது பரிசுத்த பயபக்தி, அவர்களது அற்பமான வீணான சிரிப்புகளுக்கு வேதனையோடுகூடிய ஒரு கட்டுப்பாடாக இருக்கும். அவரது மாயமற்ற உடையாடல் அவர்களது உலகப்பிரகாரமான, பேராசையான உடையாடலுக்குத் தடையாயிருக்கும். அவர் அறிவித்த மேற்பூச்சில்லாத, ஊடுருவும் உண்மைகள், அவர்களது உண்மையான குணத்தை வெளிப்படுத்தும். இந்த அமைதியான முன்மாதிரியான அழகிய இயேசு தங்களது வழிகளினின்று எவ்வளவு சீக்கிரம் வெளியேற்றப்படவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் வெளியேற்றப்படவேண்டுமென்று விரும்புவார்கள். அவரது வார்த்தைகளில் அவரைப் பிடிப்பதில் இவர்களே முதலாவதாக இருந்து, “அவனை சிலுவையில் அறையும்! அவனை சிலுவையில் அறையும்!” என்று உரத்து சத்தமிட்டிருப்பார்கள். (4)

அவர் எருசலேமிற்குள் அமைதியாகப் பவனிசென்றதை பின்தொடர்ந்து செல்வோம். அப்பொழுது திரளான சீஷர்களின் கூட்டம் களிகூர்ந்து உரத்த சத்தத்தினால் தேவனைத் துதித்து: "திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் … சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" என்றார். கிறிஸ்துவின் வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்பவர்களில் அநேகர், பரிசேயரைப்போல சீஷர்களை அமைதிப்படுத்துவதில் முன்னணியில் இருப்பார்கள். அவர்கள் சந்தேகமின்றி, "சமய வெறி! உள ஆற்றல் வசியம்! உள ஆற்றல் வசியம்!" எனச் சத்தத்தை உயர்த்துவார்கள். வஸ்திரங்களையும் குருத்தோலைகளையும் வழியெல்லாம் பரப்பிய சீஷர்கள் ஊதாரிகள், கட்டுப்பாடற்றவர்கள் என்று எண்ணப்பட்டிருப்பார்கள். ஆனால், பூமியிலே, தேவனுக்கு மக்கள் உண்டு. அவர்கள் மிகக் குளிர்ந்த—மற்றும் மரித்த நிலையிலே இருக்கமாட்டார்கள். அவர்கள் அவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தக்கூடும். சிலரிடமிருந்து அவர் மகிமையைப் பெற்றுக்கொள்வார். அவர் தெரிந்தெடுத்த, அவரது கற்பனையைக் கைக்கொள்பவர்கள்கூட சத்தமிடாதிருந்தால் கல்லுகளே சத்தமிடும். (5)

இயேசு வருகின்றார்; முதல் வருகையில் வந்ததுபோல, பெத்லகேமின் குழந்தையாக அல்ல; சீஷர்கள் தேவனைத் துதித்து, "ஓசன்னா" என்று உரத்த சத்தமிட்டவாறு எருசலேமில் பவனிசென்றது போலல்ல; பரிசுத்த தூதர் கூட்டம் புடைசூழ, பிதாவின் மகிமையோடு, பூலோகத்திற்கு அழைத்து வரப்படுவார். தூதர்கள் பூமிக்கு வந்துவிட்டபடியால், பரலோகமே வெறுமையாக இருக்கும். ஒலிவ மலையினின்று அவர் பரமேறியபோது, கலிலேயரான மனிதர் வானத்தை அண்ணாந்து பார்த்ததுபோல், காத்திருக்கும் பரிசுத்தமானவர்களும், அந்தப் பொறுமையின் முன்மாதிரியைப் பின்பற்றியவர்களும் அவரைப் பார்க்கும்பொழுது: "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்" என்று மகிழ்ச்சியோடு ஆரவாரிப்பார்கள். அவர்கள் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு கணத்திலே—ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாவார்கள். அந்த எக்காளம் பூமியின் தூளில் நித்திரைசெய்யும் பரிசுத்தவான்களை அழைக்கும்பொழுது, அவர்கள் மகிமையான சாவாமையைத் தரித்துக்கொண்டவர்களாக வெளியே வந்து: "மரணத்தின்மீதும், கல்லறையின்மீதும் வெற்றி! வெற்றி!" என்று

உரத்த சத்தமிடுவார்கள். மறுரூபமான பரிசுத்தவான்கள் தூதர்களோடு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆகாயத்தில் ஆண்டவரைச் சந்திப்பார்கள். தங்களது அன்பிற்குப் பாத்திரமானவரைவிட்டு இனி ஒருபோதும் பிரிக்கப்படமாட்டார்கள். (6)

இப்படிப்பட்ட வாய்ப்பு—இப்படிப்பட்ட மகிமையான நம்பிக்கை, தமது சொந்த இரத்தத்தால் அவர் நமக்காகக் சம்பாதித்த இப்படிப்பட்ட மீட்பு நமக்குமுன்பாக இருக்கையில், நாம் அமைதியாயிருக்கலாமா? எருசலேமிற்குள் இயேசு பவனி செல்கையில் உரத்து வாழ்த்திய சீஷர்களைப்போல, தேவனை நாம் வாழ்த்தவேண்டாமா? அவர்களைவிட நமக்கிருக்கும் வாய்ப்பு அதிக மகிமை பொருந்தியதல்லவா? சாவாமையோடும் மகிமையோடும் இவ்வளவு மேலான நம்பிக்கை நமக்கிருக்க, நாம் ஆர்ப்பரித்து தேவனை மகிமைப்படுத்துவதை யார் தைரியமாகத் தடைசெய்யமுடியும்? வரப்போகும் அந்த உலகின் வல்லமையை நாம் ருசித்திருக்கின்றோம். இன்னும் ஏங்கி நிற்கின்றோம். எனது அங்கம் முழுவதும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது. அவரது பூரணத்துவத்தால் நிரப்பப்படும்வரைக்கும் நான் திருப்தியடையமாட்டேன்.

---

1. 1852, ஜூன் 10—ம் தேதி பிரசுரிக்கப்பட்ட ரிவ்யூ என்ற இதழிலிருந்து இந்தச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. ★

## 25

# கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தஞ்செய்தல்![1]

அன்புள்ள சகோதர—சகோதரிகளே!

கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார் என்றும், இந்தப் பாவ உலகிற்கு கொடுக்கக்கூடிய கிருபையின் கடைசித்தூதை வைத்திருக்கிறோமென்றும் முழு இருதயத்தோடும் நம்புகிறோமா? இருக்கவேண்டிய முறையில் நம்முடைய முன்மாதிரி இருக்கிறதா? நம்முடைய இந்தப் பாவ சரீரங்களை மாற்றி, அந்த மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மாற்றக்கூடிய, நமது தேவனும் மீட்பருமான இயேசுவின் மகிமையான பிரசன்னமாகுதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை, நம்மைச் சுற்றிலுமுள்ளவர்களுக்கு நமது ஜீவியத்தினாலும் பரிசுத்த உரையாடலின் மூலமாகவும் காட்டுகிறோமா? இந்தக் காரியங்களை நாம் எவ்வளவு விசுவாசித்து தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டுமோ அவ்வளவு தூரம் செய்யவில்லையென்று நான் அஞ்சுகிறேன். இந்த முக்கியமான சத்தியங்களை நம்புகிறவர்கள், அவர்களது விசுவாசத்தை செயற்படுத்திக்காட்டவேண்டும். இந்த உலகப்பிரகாரமான காரியங்களையும் கேளிக்கைகளையுமே மக்கள் தேடியலைகிறார்கள். ஆடைகளிலேயே மனம் அதிகமாக நாடி அலைகின்றது. அற்பமான சிறிய உரையாடல்களில் அடிக்கடி நாவு ஈடுபடுகின்றது. இது நமது ஊழியத்தில் போலியான தோற்றத்தைக் கொடுக்கிறது. ஏனெனில், நாம் நோக்கியிருக்கும் பரலோகத்தின் மீட்பரைப்பற்றியதாக நமது உரையாடல்கள் இல்லை. (1)

தூதர்கள் நம்மைக் கவனித்துப் பாதுகாக்கிறார்கள். அடிக்கடி அற்பமான உரையாடல்களிலும், கேலிகளிலும், பரிகாசங்களிலும் ஈடுபட்டு கவலையீனமான, மதியீனமான நிலைக்கு நாம் தாழ்ந்துவிடுகிறோம். அதனால் அடிக்கடி தேவ தூதர்களை துக்கத்திற்குள்ளாக்குகிறோம். அவ்வப்போது இந்தக் காரியங்களின்மீது முயற்சி செய்து வெற்றி பெற்றாலும் அதை நாம் பாதுகாத்துக் கொள்ளவிட்டால், அதே கவலையற்ற

நிர்விசாரமான நிலைக்குத் தாழ்ந்து, விரோதியை எதிர்த்து சோதனைகளை சகிக்கமுடியாமல், பொன்னிலும் மேலாக விலையுயர்ந்த நமது விசுவாசத்தின் பரீட்சையைச் சகிக்க முடியாமற்போகிறோம். நாம் கிறிஸ்துவிற்காக துன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கிறதில்லை. உபத்திரவங்களிலே மகிமையடைந்து கொண்டிருக்கிறதுமில்லை. (2)

கிறிஸ்தவ மனதைரியமும், கொள்கையின்படி தேவனை சேவிப்பதும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. சுயத்தை வாஞ்சித்து திருப்திப்படுவதையே தேடியலையாமல், தேவனை மேன்மைப்படுத்தி, மகிமைப்படுத்தவேண்டும். நாம் என்ன செய்தாலும், பேசினாலும் அவரது மகிமைக்காக என்பது ஒரே நோக்கமாக இருக்கவேண்டும். பின்வரும் மிக முக்கியமான அதாவது, "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்;" "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்" "என்னைக் காண்கிற தேவன்" எனப்பட்ட வார்த்தைகள் நமது இருதயத்தை தொட அனுமதிக்க வேண்டும். நமது மனதில் எப்பொழுதும் தங்கியிருக்கவேண்டும். நாம் மிக எளிதில் சோதனையில் விழுந்துவிடக்கூடாது. நமது வார்த்தைகள் சுருக்கமாகவும், நன்றாகத் தெரிந்தெடுக்கப்பட்டவை களாகவும் இருக்கவேண்டும். (3)

தரித்திரப் பாவிகளான நாம் மன்னிப்பைப் பெறவும், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்பை அடையவும், அவர் நமக்காகப் பட்ட பாடுகளை நினைக்கும்போது, ஒரு பரிசுத்தக் கட்டுப்பாடு இல்லாமல், இந்த முக்கியமான வார்த்தைகளை நினைக்க முடியாது. அதோடு நமக்காக அதிகத் துன்பப்பட்டு, பாடு அனுபவித்தவருக்காக நாம் பாடனுபவிக்க, நமக்கு ஊக்கமான வாஞ்சை இருக்கவேண்டும். இந்தக் காரியங்களில் நமது மனதைச் செலுத்துவோமானால், நமது இனிய "சுயம்" என்னும் அகந்தை நீங்கி, தாழ்மை அடைந்து, அந்த இடம் ஒரு சிறுபிள்ளைக்குரிய எளிய குணத்தால் நிரப்பப்படும். அப்பொழுது நாம் மற்றவர்களது கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுவோம். வெகு சுலபத்தில் எரிச்சலடையமாட்டோம். "சுய சித்தம்" கொண்ட ஒரு ஆவி நமது ஆத்துமாவை ஆளுகை செய்யாது. (4)

ஒரு உண்மையான கிறிஸ்தவனின் சந்தோஷங்களும் ஆறுதலும் பரலோகத்தைப்பற்றியதாகவே இருக்கும்; இருக்கவேண்டும். வரப்போகும் உலகத்தின் வல்லமைகளை ருசித்து, பரலோக இன்பங்களை அனுபவித்த, ஏக்கம் நிறைந்த ஆத்துமாக்கள், பூமியின் காரியங்களைக்குறித்து

திருப்தியடையமாட்டார்கள். தங்களது ஓய்வுநேரங்களில் செய்வதற்காகப் போதுமான காரியங்களை வைத்திருப்பார்கள். தேவனை நோக்கி அவர்களது ஆத்துமாக்கள் இழுக்கப்படும். பொக்கிஷமுள்ள இடத்தில் இருதயம் இருப்பதைப்போல தாங்கள் நேசித்து தொழும் தெய்வத்தோடு, இனிய உறவை வைத்திருப்பார்கள். தாங்கள் மதிக்கும் அந்த மேலான பொக்கிஷ மான அந்தப் பரிசுத்தப் பட்டணம், புதிதாக்கப்பட்ட பூமி, அவர்களது நித்திய வீடு ஆகிய பொக்கிஷங்களைப்பற்றி தியானிப்பதே மனதுக்கினிய காரியமாக இருக்கும். இவ்வாறு மேன்மையான—தூய—பரிசுத்த காரியங்களில் மனதைச் செலுத்தும்போது, பரலோகம் அவர்களுக்குச் சமீபமாகக் கொண்டுவரப்படுகிறது. பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள் உணருகிறார்கள். இது அவர்களுக்கு உலகோடு கொண்டிருக்கும் தொடர்பை அதிகமதிகமாகத் துண்டித்து, அவர்களது முக்கிய சந்தோஷமும் ஆறுதலும் தங்களது இனிய வீடான பரலோகத்தைப்பற்றிய காரியங்களிலேயே இருக்கும்படிச் செய்கிறது. தேவனிடத்திற்கும் பரலோகத்திற்கும் கவர்ந்திழுக்கக்கூடிய வல்லமை அதிகமாக இருப்பதினால், தேவனை மேன்மைப்படுத்தி— மகிமைப்படுத்தி ஆத்தும இரட்சிப்பை அடையவேண்டும் என்கிற அந்தப் பெரிய நோக்கத்தைவிட்டு அவர்களது மனதை எதுவுமே இழுத்துக்கொள்ள முடியாது. (5)

நம்மைச் சரியாக வைக்கவேண்டுமென்பதற்காக எவ்வளவு காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் நன்றாக உணரும்போது, ஆ! இரங்கத்தக்க பாவிகளான நமக்காக தேவன் கொண்ட அன்பு! ஆ! என்ன அதிசய அன்பு! என்று அதிசயிக்கும்படி நடத்தப்படுகிறேன். நம்முடைய இரட்சிப்பிற்காக என்ன செய்யப்படவேண்டுமோ, அவைகளெல்லாம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, நாம் கவலையற்ற புத்தியீனராக இருக்கலாமா? பரலோகம் முழுவதும் நமக்காக அக்கறை கொண்டுள்ளது. அந்த மேன்மையான, உயர்ந்த தேவனை மகிமைப்படுத்தவும், துதிக்கவும், கனப்படுத்தவும் நாம் விழிப்போடும் ஜீவனோடுமிருக்கவேண்டும். நம்மீது முழு அன்பும் பரிவுங்கொண்ட அவரிடத்தில் நமது இருதயங்கள் அன்பினாலும் நன்றியினாலும் நிரம்பி வழியவேண்டும். நமது வாழ்க்கையில் அவரை மேன்மைப்படுத்தவேண்டும். நமது தூய, பரிசுத்த உடையாடலின் மூலம், நாம் பரலோகத்தினின்று பிறந்தவர்கள் என்றும், இந்த உலகம் நமது வீடல்ல, மேலான நாட்டை நோக்கிப் பிரயாணஞ்செய்யும் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் என்பதையும் காட்டவேண்டும். (6)

கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி, அவருடைய அதிசீக்கிர வருகைக்காக நோக்கிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களில்

அநேகர் கிறிஸ்துவிற்காக துன்பம் அனுபவிப்பது என்றால் என்ன என்று அறியமாட்டார்கள். கிருபையினால் அவர்களது இதயங்கள் ஆட்கொள்ளப்படவில்லை. அநேகக் காரியங்களில் காண்கின்றபடி, "தான்" என்னும் அந்த சுயத்திற்கு இன்னும் அவர்கள் சாகவில்லை. அதே சமயத்தில், தங்களுக்கு கடுந்துன்பமான அனுபவங்கள் இருக்கிறதாக அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது அடங்காத இதயம், "தான்" என்ற கூருணர்வுகொண்டு, எரிச்சலடைவதே முக்கிய காரணமாகும். கிறிஸ்துவை தாழ்மையோடு பின்பற்றும் ஒரு உண்மையான கிறிஸ்தவன் என்றால் எப்படி என்பதை இப்படிப்பட்டவர்கள் உணருவார்களானால், சரியாக ஆரம்பித்து நல்ல ஆர்வத்தோடு வேலைசெய்யத் தொடங்குவார்கள். அவர்கள் "தான்" என்னும் சுயத்திற்கு முதலாவது செத்து, அவ்வப்போது உடனடியாக ஜெபித்து, இருதயத்தின் ஒவ்வொரு இச்சையையும் அடக்கி ஆள்வார்கள். சகோதரரே! சுயம் சார்ந்த நிறைவு, சுயம் சார்ந்த நம்பிக்கை ஆகிய காரியங்களை விட்டுவிடுங்கள். சாந்தமான தெய்வீக முன்மாதிரியைப் பின்பற்றுங்கள். அவரே உங்கள் முன்மாதிரி; அவரது அடிச்சுவடுகளில் நடக்கவேண்டுமென்று எப்பொழுதும் இயேசுவை உங்கள் மனதில் இருத்திவையுங்கள். நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமான இயேசுவையே நோக்கிப்பாருங்கள். தமக்கு முன்பாக வைத்திருக்கும் சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார். அவருக்கு எதிராக இருந்த பாவிகளுடைய மீறுதல்களை யெல்லாம் தாமே பொறுமையோடு சகித்தார். நமது பாவங்களுக்காக பொறுமையான அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக நொறுக்கப்பட்டு, காயப்பட்டு, அடிக்கப்பட்டு கடுந்துன்பம் அனுபவித்தார். (7)

எனவே, சந்தோஷமாக கிறிஸ்துவிற்காக துன்பம் சகிப்போம். "சுயம்" என்ற காரியத்தை தினமும் சிலுவையில் அறைவோம். கிறிஸ்துவின் பாடுகளில் இங்கு பங்காளிகளானால், அவரோடு அவரது மகிமைக்கும் பங்காளிகளாவோம். மகிமையினாலும், கனத்தினாலும், சாவாமையினாலும், நித்திய ஜீவனாலும் நாம் முடிசூட்டப்படுவோம். (8)

---

1. 1853 பிப்ரவரி 17–ம் தேதி பிரசுரிக்கப்பட்ட ரிவ்யூ என்ற இதழிலிருந்து இந்தச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. ★

# 26

# சமுதாய ஜெபக்கூட்டங்களில் உத்தமமாய் இருத்தல்!

ஓய்வுநாளை ஆசரிப்பவர்கள், அதிக அக்கறை எடுத்து தங்களது சபைக் கூட்டங்களை கவர்ச்சியுடையதாகச் செய்ய முயற்சிகள் எடுக்கவேண்டுமென்பதை தேவன் எனக்குக் காண்பித்தார். இந்த மாதிரியான வழிகளிலே அதிக ஆர்வமும் ஊக்கமும் வெளிப்படவேண்டியது மிகுந்த அவசியமாகும். தேவனைப்பற்றிய காரியங்களை எடுத்துச் சொல்வதில் எல்லோருக்கும் பங்கு இருக்கவேண்டும். அப்படிச் செய்வதினால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். சபை கூடிவருதலை விட்டுவிடாமல் அனைவரும் ஒன்றுகூடி, கலந்து மற்றவர்களுடன் உரையாடுவதுபற்றி ஞாபக புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. மீதியான சபையைச் சேர்ந்தவர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்களது சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொள்ளவேண்டும். சிலர் தாங்களாகவே விசேஷித்த எந்தச் சொந்த முயற்சியும் செய்யாமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் மாத்திரமே மேற்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பேச்சு வல்லமையை தேவன் நமக்குக் கொடுத்து, நம்மீது எவ்வளவு இரக்கமுள்ளவராக இருக்கிறார் என்பதை நான் கண்டேன். அவர் நமக்கு ஒரு நாவைக் கொடுத்திருக்கிறார். அதன் உபயோகம்பற்றி நாம் அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாக, நமது சாட்சியின் வசனத்தினாலே மேற்கொண்டு, சத்தியம் மற்றும் அவரது அளவற்ற இரக்கம் ஆகியவைகளின் மேன்மையைப்பற்றிக் கூறி, நமது உதடுகளினால் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். (1)

அமைதியாக இருப்பதற்காக நாம் கூடிவருதல் கூடாது. யார் அவரது மேன்மை, மகிமை, வல்லமைபற்றிக் கூறுவதற்காகக் கூடுகிறார்களோ, அவர்களையே தேவன் நினைவுகூருகிறார். அவர்கள்மீது தேவ ஆசீர்வாதம் தங்கியிருக்கும். அவர்கள் புதுப் பெலன் அடைவார்கள். எல்லோரும் நடந்துகொள்ளவேண்டிய முறையிலே நடந்துகொள்வார்களானால்,

அருமையான நேரம் வீணாகாது. நீண்ட ஜெபங்கள், பிரசங்கங்கள்பற்றி கண்டனம் பண்ணுவதற்குத் தேவையிருக்காது. நேரம் முழுவதும் சுருக்கமான ஜெபங்களிலும் குறிப்பான சாட்சிசொல்லுதலிலும் செலவழிக்கப்படும். கேளுங்கள், விசுவாசியுங்கள், பெற்றுக்கொள்ளுங்கள். தேவன் அதிகமாகப் பரிகாசம்பண்ணப்படுகிறார். மிகவும் அதிகமாக ஜெபித்தலானது, ஜெபமல்ல. அர்த்தமற்ற நீண்ட விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் கேட்டு, தேவதூதர்களும் சலிப்படைகிறார்கள். தேவனும் வெறுக்கிறார். முதலாவது நாம் தேவையிலிருக்கிறோம் என்பதை உணர்ந்து நமக்குத் தேவையான அதே காரியங்களுக்காக தேவனிடத்தில் கேட்கவேண்டும். கேட்கும்பொழுதே அவர் நமக்கு அவைகளைக் கொடுக்கிறார் என்றும் விசுவாசிக்கவேண்டும். அப்பொழுது நமது விசுவாசம் வளரும். அனைவரும் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்படுவோம். பலவீனமானவர்கள் பலமடைவார்கள். அதைரியமடைந்தவர்களும், அவநம்பிக்கையுள்ளோரும் மேலே நோக்கிப்பார்த்து, அவரை உண்மையாய் தேடுகிறவர்களுக்கு பலனளிக்க வல்லவராக இருக்கிறார் என்பதை விசுவாசிக்கவேண்டும். (2)

புதிதாகச் சொல்வதற்கு ஒன்றும் இல்லாததால், அவர்கள் பேச முற்படுவார்களானால், சொன்ன கதையையே திருப்பிச் சொல்ல வேண்டியதிருக்கும் என்று எண்ணி தயங்கி நின்றுவிடுகிறார்கள். ஆகையால் இவ்வாறு சொல்வதற்கான அடிப்படை, பெருமை என்பதை நான் கண்டேன். பரிசுத்தவான்களின் சாட்சிகளை தேவனும் தூதர்களும் கேட்டிருக்கிறார்கள். அவைகள் ஒவ்வொரு வாரமும் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டாலும், தேவனும் தூதர்களும் மகிழ்ச்சியடைந்து மகிமைப்படுத்தப்படுகிறார்கள். ஆண்டவர் எளிமையையும் தாழ்மையையும் விரும்புகிறார். தேவனுடைய சுதந்திரவாளிகளென்றும், இயேசுவின் உடன் பங்காளிகள் என்றும் சொல்லிக்கொள்பவர்கள், இப்படிப்பட்ட கூட்டங்களிலே அருமையான நேரத்தை வீணாக்குவதைக்கண்டு தேவன் வருந்துகிறார். தூதர்கள் துக்கமடைகிறார்கள். (3)

சகோதர—சகோதரிகள் இருக்கவேண்டிய இடத்திலே இருப்பார்களானால், கல்வாரிச் சிலுவையிலே அவர்களது பாவத்திற்காகத் தொங்கின இயேசுவின் மேன்மைபற்றி சில வார்த்தைகளாவது கூறுவதற்கு அவர்களால் முடியாமற்போகாது. நமது பாவங்களுக்காவும் மீறுதல்களுக்காகவும் தேவன் தமது ஒரே நேசகுமாரனை பலியாகக் கொடுக்கச் சித்தங்கொண்டு இறங்கியதையும், இயேசு தமது பாடுகளினாலும், கடுந்துயர்களினாலும் குற்றமுள்ள மனிதன் தப்பிக்கொள்ள வழியுண்டாக்கி, அவன் மன்னிப்புப்பெற்று வாழும்படிச் செய்ததையும்,

நெஞ்சார நினைப்பார்களானால், இயேசுவை உயர்த்தி மேன்மைபாராட்ட அதிக ஆயத்தமாயிருப்பார்கள். அவர்கள் அமைதியாயிருக்காமல், நன்றியறிதலோடும் மனநிறைவோடும் அவரது மகிமையைப்பற்றிப் பேசி, அவரது வல்லமையைப்பற்றி கூறியறிவிப்பார்கள். இவ்வாறு செய்வார்களானால், தேவனுடைய ஆசீர்வாதம் அவர்கள்மீது தங்கியிருக்கும். அதே கதையே திரும்பக் கூறப்படுமானாலும், தேவன் மகிமைப்படுவார். இரவும் பகலும் தொடர்ந்து, "மகா வல்லமையுள்ள தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர்" என்று திரும்பத்திரும்பக் கூறினாலும், தேவன் அதனால் மகிமைப்படுவார் என்றும், அவ்வாறு இரவும் பகலும் சுறுகிறவர்களைக் காட்டி, தூதன் என்னிடம் கூறினார். ஒரே கதையைத் திரும்பத் திரும்பக் கூறினாலும், அது தேவனை மகிமைப்படுத்துகிறது. அவரது குணச்சிறப்பையும் இரக்கங்களையும்பற்றி நாம் அறிகிறோம் என்பதையே அது காட்டுகிறது. (4)

பெயருக்காக இருந்த சபைகள் விழுந்துபோனதை நான் கண்டேன். உணர்ச்சியற்ற தன்மையும் மரணமும் அங்கு ஆளுகை செய்கின்றது. தேவனுடைய வார்த்தைகளைப் பின்பற்றுவார்களானால், அது அவர்களை தாழ்மையுடையவர்களாக்கும். ஆனால், அவர்கள் ஆண்டவருடைய வேலைக்கும்மேலாக தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள். தாங்கள் ஒன்றாகக்கூடும்போது, தேவனின் குணச்சிறப்புபற்றிய அந்த எளிய கதையை அவர்கள் திரும்பத்திரும்பக் கூறுவது, அவர்களுக்கு மதிப்புக்குறைவாகக் காணப்படுகிறது. சில புதிய, பெரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக—கற்றுக்கொள்ளும்படியாக மனிதருக்கு காதுகளுக்கு இனிமையாகவும் இருக்கும்படிச் செய்கிறார்கள். அப்பொழுது தேவ ஆவியானவர் அவர்களைவிட்டு நீங்குகிறார். வேதாகமத்தின்படி தாழ்மையான வழியைப் பின்பற்றுவோமானால், தேவ ஆவியின் அசைவு நம்மில் காணப்படும். தேவனையே முற்றிலுமாகச் சார்ந்து, தாழ்மையான சத்தியப் பாதையைப் பின்பற்றுவோமானால் எல்லாம் இனிமையாக இசைந்திருக்கும். தீய தூதர்களால் பாதிக்கப்படுவோமென்ற பயமே இல்லை. ஆத்துமாக்கள் தேவனுடைய ஆவிக்கும் மேம்பட்டவர்களாக உயர்த்தி, தங்கள் சொந்த பெலத்தினால் கிரியைசெய்யும்பொழுது, அவர்களைக் கண்காணிப்பதை தூதர்கள் நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் சாத்தானால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். (5)

தேவனுடைய வசனத்திலே கடமைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குக் கீழ்ப்படியும்போது, அது தேவனுடைய மக்களை தாழ்மையுள்ளவர்களாக்கி, உலகத்தினின்று பிரித்து, பெயருக்காக இருக்கும் சபைகளைப்போல் பின்வாங்கிப்போகாமல் இருக்கச்செய்கிறது. கால் கழுவுதலும், திருவிருந்து புசித்தலும் அடிக்கடி செய்யப்படவேண்டும்.

இயேசு தமது மாதிரியை வைத்து, அவர் செய்தபடியே நாமும் செய்யும்படிக் கூறியிருக்கிறார். அவருடைய முன்மாதிரியானது அப்படியே பின்பற்றப்படவேண்டுமென்பதை நான் கண்டேன். எனினும், சகோதர—சகோதரிகள் எப்பொழுதும் கால் கழுவுகின்ற நியமத்தில் கவனமாக நடந்துகொண்டதில்லை. அதனால், குழப்பமே விளைந்துள்ளது. புதிய இடங்களிலே இந்தக் காரியம் மிகுந்த கவனத்தோடும், ஞானத்தோடும், பழக்கத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும். ஆண்டவருடைய போதனைகள் மற்றும் அவர் காட்டிய மாதிரியின்படியே இந்தக் குறிப்பிட்ட காரியம், எங்கு மக்களுக்கு அறிவிக்கப்படவில்லையோ, எங்கு அதற்கு விரோதமாக தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்களோ, அங்கு மிகுந்த கவனமாக இருக்கவேண்டும். தாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ள பழைய போதகர்களின் செல்வாக்கின்மூலமாக, அநேக உண்மையான ஆத்துமாக்கள் இந்த எளிய கடமைக்கு விரோதமாக அதிகமாக தப்பெண்ணங்கொண்டிருக்கிறார்கள். சரியான நேரத்தில், தகுந்த முறையில், இந்தக் காரியம் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். சகோதரர்கள், சகோதரிகளுடைய காலைக் கழுவுவதற்கு எந்தவித முன்மாதிரியும் வேத வசனத்தில் கொடுக்கப்படவில்லை. ஆனால் சகோதரிகள் சகோதரர்களுடைய கால்களைக் கழுவுவதற்கு ஒரு உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. மரியாள் அவளது கண்ணீரால் இயேசுவின் பாதங்களைக் கழுவி, அவளது தலைமயிரால் அவகைளைத் துடைத்தாள். (மேலும் 1 தீமோ. 5:10–ஐப் பார்க்க). சகோதரர்களின் கால்களைக் கழுவும்படி ஆண்டவர் சகோதரிகளிடத்திலே செயல்பட்டிருக்கிறார். இது சுவிசேஷ ஒழுங்கின்படி அமைந்ததாகும் என்பதை நான் கண்டேன். கால் கழுவுதலை பாரமான சடங்காக்காதபடி எல்லோரும் ஒருவரையொருவர் புரிந்து செயல்படவேண்டும். (6)

இயேசுவின் சுவிசேஷத்திலே பவுல் அப்போஸ்தலனால் கூறப்பட்ட பரிசுத்த வாழ்த்தும் முறையானது, அதன் உண்மையான பொருளிலே உணரப்படவேண்டும். “அது ஒரு பரிசுத்த முத்தம்.” அது கிறிஸ்தவ நண்பர்கள் பிரிந்துசெல்லும்போதும், அநேக வாரங்கள், மாதங்கள் கழித்து திரும்ப ஒன்று சேரும்பொழுதும், கிறிஸ்தவ அந்நியோன்னியத்திற்கும் நட்பிற்கும் அடையாளமாகக் கருதப்படவேண்டும். 1 தெச. 5:26–ல் பவுல், எல்லா சகோதரரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள் என்று கூறுகிறார். அதே அதிகாரத்தில், “பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்” என்றும் கூறுகின்றார். பரிசுத்த முத்தமானது சரியான நேரத்தில் சரியான இடத்தில் கொடுக்கப்படுமானால் பொல்லாங்கான எந்தத் தோற்றமும் அங்கு இருக்கமுடியாது. (7)

சத்துருவின் உறுதியான கரங்கள் தேவனுடைய வேலைக்கு விரோதமாக வைக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். சத்தியத்தை நேசிக்கிற ஒவ்வொருவருடைய உதவியும், வலிமையும் ஒன்றாகத் திரட்டப்படவேண்டும். சத்தியத்தைப் போதிப்பவர்களது கரங்களைத் தூக்கிப்பிடிக்கும்படியாக அதிக ஆர்வம் அவர்களிடம் வெளிப்படவேண்டும். தொடர்ந்து கவனமாக இருப்பதின்மூலம் சத்துருவைத் தள்ளியடைக்கமுடியும். எல்லோரும் வேலையிலே ஒன்றாக இணைந்து, ஒரேமனிதனைப்போல ஈடுபடவேண்டும். ஆத்துமாவின் ஒவ்வொரு சக்தியும் விழிப்படைந்து, எது செய்யப்படவேண்டுமோ அது விரைவாகச் செய்யப்படவேண்டும். (8)

பின்னர், நான் மூன்றாம் தூதனைக் கண்டேன். "அவனுடைய வேலை பயங்கரமானது. அவனது வேலை அச்சம் தரக்கூடியது. களையினின்று கோதுமையைப் பிரித்து, பரலோகக் களஞ்சியத்தில் சேர்ப்பதற்காக முத்திரையிடவேண்டும் அல்லது சேர்த்துக் கட்டவேண்டும். இதுவே அவனுடைய வேலையாகும். இந்தக் காரியங்கள் முழு கவனத்தையும் எண்ணத்தையும் ஆட்கொள்ளவேண்டும்" என்று என்னுடன் வந்த தூதன் கூறினான். (9) ★

# 27

# அனுபவம் இல்லாதவர்களுக்கு...!

சத்தியத்தின் முக்கியத்துவத்தையும் அதன் பலன்களையும் சரியாகப் புரிந்துகொள்ளாதிருப்பதை நான் கண்டேன். கண நேரத்தில் உண்டாகும் மனத் தூண்டுதலாலோ, பரபரப்பினாலோ செயல்பட்டு, தங்களது எண்ணப்படியே நடந்து, சபை ஒழுங்கைப் புறக்கணிக்கிறார்கள். உரத்து சத்தமிடுவதில்தான் ஒருவரது மதமே அமைந்திருக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். அநேக வருடங்களாக, சத்தியத்திலேயே நிலைத்திருந்து, அதற்காக துன்பம் அனுபவித்து, அதன் பரிசுத்தத்தன்மையை உணர்ந்தவர்களை இப்பொழுதுதான் மூன்றாம் தூதனின் தூதைப்பெற்றுக்கொண்ட சிலர், கடிந்துகொள்ளவும், அவர்களுக்குப் போதிக்கவும் ஆரம்பிக்கிறார்கள். சத்துருவாகிய சாத்தானால் பெருமை கொண்டவர்கள், சத்தியத்தினா லுண்டாகும் பரிசுத்த செல்வாக்கை உணர்ந்துகொண்டவர்களாக, இந்தச் சத்தியம் தங்களை எவ்வாறு தாங்கள் முன்னர் இருந்த பரிதபிக்கப்படத்தக்க நிர்ப்பாக்கிய, தரித்திர, குருட்டு, நிர்வாண நிலையை உணரும் அறிவைப் பெற்றுக்கொள்ளச் செய்தது என்பதை அறியவேண்டும். சத்தியம் அதின்மேல்கொண்ட வாஞ்சையினாலே ஏற்றுக்கொள்ளப்படும்போது, ஏற்றுக்கொண்டவர்களை பரிசுத்தப்படுத்தி, கறைகளை நீக்கி, தூ ய்மைப்படுத்துகின்றது. சத்தியத்தின் வேலை அதுவே. தனக்காக இந்த மாபெரும் வேலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட இந்த மாறுதலை உணர்ந்த ஒருவன், தான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும் எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லமாட்டான். (1)

சத்தியத்தின் முதல் அடிப்படைக் கொள்கைகளை அறியுமுன்னதாகவே, நாங்கள் சத்தியத்தை அறிந்தவர்கள், எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று அதை கற்பிப்போரின் இடத்தை எடுக்க முன்வந்து, சத்தியத்தில் அநேக வருடங்கள் உறுதியாக இருப்போரைக் கடிந்துகொண்டு, காரியங்களை இப்படி நடப்பிப்பவர்கள் சத்தியத்தை விளங்கிக்கொள்ளவேயில்லை என்பதைத் தெளிவாகக் காண்பிக்கிறார்கள். சத்தியத்தினால் ஏற்படும் பலன்களையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. சத்தியத்தின் பரிசுத்த வல்லமையை

அறிந்திருப்பார்களானால், நீதிக்குரிய சமாதானத்தின் கனிகளைக் கொடுப்பவர்களாயிருந்து, அதன் இனிய வல்லமையான செல்வாக் கினால் மிகவும் தாழ்மையாயிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய மகிமைக்கான கனிகளைக் கொடுத்து, சத்தியம் தங்களுக்கு என்ன செய்துள்ளது என்பதை விளங்கிக்கொண்டு, மற்றவர்களை தங்களைவிட மேலானவர்களென்று மதிப்பிடுவார்கள். (2)

மீதியான சபையைச் சேர்ந்தவர்கள் பூமியின்மீது வரப்போகும் காரியங்களுக்காக ஆயத்தமில்லாதிருப்பதை நான் கண்டேன். அசட்டைத்தனத்தைப்போன்ற மதியீனமும், நாங்கள் கடைசித்தூதை வைத்திருக்கிறோமென்று நம்பிச் சொல்லிக்கொள்ளுகிறவர்களது மனதிலே தங்கியிருப்பதுபோன்று காணப்படுகிறது. என் உடன் வந்த தூதன் "ஆயத்தப்படு, ஆயத்தப்படு, ஆயத்தப்படு; தேவ கோபாக்கினை சீக்கிரம் வரவிருக்கிறது. இரக்கம் கலந்திராத அவரது கோபாக்கினை ஊற்றப்படவிருக்கிறது. நீங்கள் ஆயத்தமாகவில்லை. வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயத்தைக் கிழியுங்கள்; மீதியான சபைக்காக மகத்தான வேலை செய்யப்படவேண்டியதிருக்கிறது. சிறு சோதனைகளில் அநேகர் தங்கள் மனதை செலுத்திக்கொண்டிருக் கிறார்கள்" என்று மகா பயங்கரமான பயபக்தியோடு உரத்த சத்தமிட்டான். பெருந்திரளான தீய தூதர்கள் உங்களைச் சுற்றி நெருக்குகிறார்கள். உங்களை கண்ணிகளில் அகப்படுத்தி தங்களுடன் சேர்த்துக்கொள்வதற்காக, அவர்களது பயங்கரமான இருளால் சுற்றிலும் நெருக்குவதற்கு முயற்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். வருகைக்காக ஆயத்தப்படும் வேலையினின்றும், இந்தக் கடைசி காலத்திற்கேற்ற வெகு முக்கியமான உண்மைகளினின்றும், உங்கள் மனதைத் திசைதிருப்பும்படி நீங்கள் தடையின்றி அனுமதிக்கிறீர்கள். சிறு உபத்திரவங்களிலே உங்கள் மனதைச் செலுத்தி, சிறு தொல்லைகளிலுள்ள நுணுக்கமான விவரங்களை இவர்களையோ அவர்களையோ திருப்திப்படுத்துவதற்காக, அவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக முயற்சிக்கிறீர்கள் என்று தூதன் கூறினான். இவ்வகையாக இரு கட்சிகளுக்கிடையே உரையாடல்கள் அநேக மணி நேரங்கள் தொடர்கின்றது. அதனால் அவர்களுடைய நேரம் வீணாவது மாத்திரமல்ல, தேவ ஊழியக்காரர்களும் அதைக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டியதிருக்கிறது. இந்த இரு கட்சிக்காரர்களது இருதயங்களோவெனில் தேவ கிருபைக்குப் பணியாமல் இருக்கிறது. பெருமையும் தன்னலமும் ஒதுக்கிவைக்கப்படுமானால், ஐந்து நிமிடங்களில் அநேக தொல்லைகள் நீங்கிப்போகும். தான் செய்வதுதான் சரியென்று காண்பிக்க அநேக மணிநேரங்கள் செலவழிக்கப்படுகின்றன. அதை தேவன் வெறுக்கிறார். அதனால், தேவ தூதர்கள் மிகுந்த வேதனையடைகிறார்கள். நீண்ட

நேரமாக, தான் செய்வதுதான் சரியென்று நிரூபிப்பதை, தேவன் குனிந்து செவிசாய்ப்பதில்லை. அருமையான நேரம் இவ்வாறாக வீணாக்கப்படுகிறது. அவரது ஊழியர்கள் இவ்வாறு செய்வது அவருக்கு விருப்பமில்லை. இந்த அருமையான நேரம் மீறுதலுக்கு உட்படுகிறவர்களது வழிகளின் தவறுகளைக் காட்டுவதற்கும், ஆத்துமாக்களை நெருப்பினின்று வெளியே இழுத்துப் பாதுகாப்பதற்கும் செலவழிக்கப்படவேண்டும். (3)

தேவனுடைய மக்கள் மதிமயக்கும் நிலத்தளத்திலே நிற்பதை நான் கண்டேன். காலம் எவ்வளவாக குறுகியுள்ளது என்ற எண்ணத்தையும் ஆத்துமாக்களின் மதிப்பையும் சிலர் அநேகமாக நினைப்பதையே மறந்துவிட்டார்கள் என்பதையும் நான் கண்டேன். அதாவது உடையைப்பற்றிய தோற்றத்தைப்பற்றிய பெருமையானது ஓய்வுநாளை ஆசரிப்பவர்களிடையே நுழைந்திருக்கிறது. ஓய்வுநாளை ஆசரிப்பவர்கள் சுயத்திற்கும் பெருமைக்கும் பிறரது பாராட்டலில் இருக்கும் ஆசைக்கும் மரிக்கவேண்டும். (4)

இருளிலே, சத்தியத்திற்காகப் பசித்திருக்கும் மக்களுக்கு, இரட்சிப்பின் சத்தியம் கொடுக்கப்படவேண்டும். தங்களைத் தாழ்மைப்படுத்த வேண்டுமென்று அநேகர் ஆண்டவரிடத்தில் ஜெபிக்கிறதை நான் கண்டேன். தேவன் அவர்களது ஜெபத்திற்குப் பதிலளிப்பாரானால், நீதியினிமித்தம் பயங்கரமான காரியங்களாக அது அமைந்திருக்கும். தங்களைத் தாங்களே தாழ்மைப்படுத்திக் கொள்ளுவது அவர்களது கடமையாகும். தன்னை உயர்த்திக்காட்டும் தன்மை அனுமதிக்கப்படுமாயின், அது நிச்சயமாக ஆத்துமாக்களை வழிவிலகப்பண்ணும். இந்தக் குணம் மேற்கொள்ளப்படாவிட்டால், நிச்சயமாக அது அவர்களை அழிவிற்கு இழுத்துச்செல்லும். ஒருவன் தன்னைத்தானே மேன்மையாக எண்ணி, தன்னால் காரியங்களை சாதிக்க முடியுமென்று நினைக்க ஆரம்பிக்கும்பொழுது, தேவனுடையஆவி அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவன் தான் முற்றிலுமாக வீழ்த்தப்படும்வரை, தனது சொந்த பலத்திலேயே செல்லுகிறான். நேர்மையான வழியில் இருக்கும் ஒரு பரிசுத்தவான், தேவனுடைய புயத்தைக்கூட அசைக்கமுடியும். தவறுகளில் இருப்பவர்கள் அநேகராயிருந்தபோதிலும் பெலவீனராக எதுவும் செய்யமுடியாதவர்களாகிறார்கள். (5)

அநேகர் அடக்கமற்ற, தாழ்மையற்ற இருதயங்களோடு பாவிகளுடைய ஆத்துமாக்களைவிட, தங்களது சின்னச்சின்ன மனக்குறைகள், உபத்திரவங்கள் ஆகியவைகளையே அதிகமாக நினைக்கிறார்கள். தேவனுடைய மகிமையை தங்களது தோற்றத்தில் வைத்திருப்பார்களானால், தங்களைச் சுற்றிலும் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களைப்பற்றி சிந்திப்பார்கள். தங்களது பயங்கரமான நிலையை உணர்ந்தவர்களாக ஊக்கத்தோடு பற்றிக்கொண்டு,

தேவனிடத்திலுள்ள விசுவாசத்தை செயலில் காட்டி தைரியமாக—எனினும் அன்போடு, சத்தியத்தைக் கூறியறிவித்து அதைப்பற்றிக்கொள்ளும்படியும், கிருபையின் இனிய குரல் மடிந்துபோகுமுன்னதாக ஆத்துமாக்களை எச்சரித்து, இவ்வாறு அவர்களது ஊழியர்களது கரங்களைத் தாங்குவார்கள். தூதன் என்னை நோக்கி: "அவரது நாமத்தைப்பற்றிக் கூறுகிறோம் என்று சொல்லுகிறவர்கள், இன்னும் ஆயத்தமாகவில்லை" என்று கூறினான். பாதுகாப்பாற்ற துன்மார்க்கரது தலைமீது அந்தக் கடைசி ஏழு வாதைகளும் வருவதை நான் கண்டேன். அவர்கள் மனந்திரும்பாதபடி அவர்களுக்குத் தடையாக நின்றவர்களின் இதயங்கள், அந்தப் பாவிகளுடைய கசப்பான வசைமொழிகளைக் கேட்டு அவர்களுக்குள்ளே சோர்ந்துபோகும். (6)

தூதன், "நீங்கள் வைக்கோல் கீற்றுகளைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதாவது சின்னச்சின்ன உபத்திரவங்களைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள். இதன் விளைவாக, பாவிகள் அழிவையே அடைகிறார்கள்" என்று கூறினான். நமது கூட்டங்களிலே தேவன் வேலைசெய்ய விரும்புகிறார். வேலை செய்வது அவரது விருப்பம், ஆனால் சாத்தான் "அந்த வேலையைத் தடைசெய்வேன்" என்கிறான். அவனுடைய பிரதிநிதிகளோ, "ஆமென்" என்று சொல்லுகிறார்கள். சத்தியத்தின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோமென்று சொல்பவர்கள், தங்களது அற்பமான உபத்திரவங்கள் கஷ்டங்களிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள். இவைகளை சாத்தான் அவர்களுக்குமுன்பாக மிகப் பெரிதுபடுத்திக் காட்டுகிறான். வீணாக்கப்பட்ட நேரத்தை இனி திரும்ப ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது. சத்தியத்தின் விரோதிகள் நமது பலவீனத்தைக் கண்டுகொள்ளுகிறார்கள். தேவனை துயரத்திற்கு உள்ளாக்குகிறோம். கிறிஸ்துவின் மனதைப் புண்படுத்துகிறோம். சாத்தானின் நோக்கம் நிறைவேறுகிறது! அவனது திட்டங்கள் வெற்றிபெறுகின்றன. அவன் எக்களிக்கிறான்! (7) ★

# 28

# சுயத்தை வெறுத்தல்!

தேவனுடைய பரிசுத்தப் பிள்ளைகள் கூட்டங்களுக்காக அதிக ஏராளமான ஆயத்தங்கள் செய்வதில் ஆபத்து இருப்பதை நான் கண்டேன். சில அதிகமான வேலைப்பளுவினால், வீண் தொந்தரவுகளுக்கு ஆளாகும் நிலை ஏற்படுகிறது. உணவின்மீதுள்ள நாட்டம் மறுக்கப்படவேண்டும். அந்த ஆசையை வெறுக்கவேண்டும். சிலர் தங்களது அப்பங்களுக்காகவும் மீன்களுக்காகவும் (சொந்த இலாபத்தை எண்ணி) இந்தக் கூட்டங்களுக்கு வருகின்ற ஆபத்து இருக்கிறது. அருவருப்பான புகையிலையை உபயோகித்து, இன்பங்காணுகிறவர்களை நான் கண்டேன். இவர்கள் இந்தக் காரியத்தை ஒதுக்கிவிட்டு, இதைவிடமேலான உபயோகத்திற்குத் தங்களது பணத்தைச் செலவழிக்கவேண்டும். இப்படிப்பட்ட தங்களது ஆவலைத் தணிக்க, சுய திருப்திக்காகச் செலவழிப்பதை ஒறுத்து, தியாகஞ்செய்து, அந்தப் பணத்தை ஆண்டவருடைய பொக்கிஷத்திலே சேர்க்கவேண்டும். விதவையின் இரண்டு காசுகளைப்போல, இப்படிப்பட்ட நன்கொடைகள் தேவனால் கவனிக்கப்படுகின்றன. தொகை ஒருவேளை சிறியதாக இருக்கலாம். ஆனால், எல்லோரும் இப்படிச் செய்வார்களானால், தேவனுடைய பொக்கிஷத்தில் நிச்சயமாக வளர்ச்சியைக் காணலாம். தங்களது உடை சம்பந்தமான விஷயங்களிலே மிகவும் சிக்கனமாக இருந்து, உண்மையிலே சில தேவையற்ற பாரம்பரியங்களை விலக்கி, காபி, தேநீர் போன்ற உபயோகமற்ற—கேடுவிளைவிக்கக்கூடிய பொருட்களை ஒதுக்கிவைத்து, இவைகளின் மதிப்புக் கிரயத்தை தேவனுடைய வேலைக்காகக் கொடுத்தால், இம்மையில் ஏராளமான ஆசீர்வாதத்தையும், மறுமையில் அதற்குரிய வெகுமதியையும் பெறுவார்கள். தரித்திரமின்றி வாழவும், திரட்சியான உணவுகளை உண்ணவும், ஏராளமான உடைகள் உடுத்தி அனுபவிக்கவும் கடவுள் பணத்தைக் கொடுத்திருக்கிறார் என்று அநேகர் நினைக்கிறார்கள். தங்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் இருக்கும்பொழுது தாங்களும் ஒறுத்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்வதென்பது மேன்மையான சிறந்த பண்பாகக் கருதப்படமுடியாது. இப்படிப்பட்டவர்கள் தியாகஞ்செய்யவில்லை. இதைவிட

இன்னும் சற்று ஏழ்மையாக வாழ்ந்து, அந்தப் பணத்தை சத்தியத்தைப் பரப்புவதற்காகக் கொடுப்பார்களானால் அவர்களுக்கு அது உண்மையான தியாகமாக கருதப்படும். அவனவனது கிரியைகளுக்கு தக்கதாக பலனளிக்கும்போது, இந்தக் காரியங்கள் தேவனால் நினைவுகூரப்படும். (1) ★

# 29

# அவபக்தி!

தேவனுடைய பரிசுத்த நாமம் பயபக்தியோடும் நடுக்கத்தோடும் உச்சரிக்கப்படவேண்டுமென்பதை நான் கண்டேன். சர்வ வல்லமையுள்ள தேவன் என்ற வார்த்தைகள் இணைக்கப்பட்டு, சிலரால் ஜெபத்திலே கவனமற்ற, யோசனையற்ற முறையிலே உபயோகிக்கப்படுவது அவருக்கு விருப்பமற்ற காரியமாகும். தேவனைப்பற்றியோ அல்லது சத்தியத்தைப் பற்றியோ உணர்ந்துகொள்ளும் தன்மை இப்படிப்பட்டவர்களுக்குக் கிடையாது. அல்லது அந்தக் கடைசி நாளிலே நம்மை நியாயந்தீர்க்கும் மகா பயங்கரமான அந்த தேவனைப்பற்றி இவ்வாறு அவபக்தியாகப் பேசமாட்டார்கள். அவரது நாமங்களை இணைத்துப்பேசாதே. அது மிகவும் பயங்கரமானது என்று தூதன் கூறினான். தேவனுடைய மகா மேன்மையையும் தனிப்பெருஞ்சிறப்பையும் உணர்ந்து கொண்டவர்கள், அவரது நாமத்தை பரிசுத்த நடுக்கத்துடன் உச்சரிப்பார்கள். சேரக்கூடாத ஒளியிலே அவர் வாசம்பண்ணுகிறார். அவரைப் பார்த்து, ஒருவரும் உயிரோடிருக்கமுடியாது. ஒரு சபை விருத்தியடைந்து சிறப்பாக வளரும் முன்பாக, இந்தக் காரியங்கள் விளங்கிக்கொள்ளப்பட்டு, திருத்தப்படவேண்டும் என்பதை நான் கண்டேன். (1) ★

# 30

# போலியான மேய்ப்பர்கள்!

போலியான மேய்ப்பர்கள் வெறிகொண்டிருக்கிறார்கள். ஆனாலும் மதுவினாலல்ல. அவர்கள் தள்ளாடுகிறார்கள், ஆனாலும் வெறிகொண்ட மதுவினாலல்ல என்று எனக்குக் காட்டப்பட்டது. அவர்களுக்கு தேவனுடைய சத்தியம் முத்திரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதை வாசிக்க இயலாது. ஏழாம் நாள் ஆசரிப்புபற்றியும் வேதாகமத்தின் உண்மையான ஓய்வுநாள் அதுதானா அல்லவா என்பதுபற்றியும் வினவும்பொழுது, அவர்கள் கட்டுக்கதைகளுக்கு மனதை இழுத்துச்செல்லுகிறார்கள். இந்தத் தீர்க்கதரிசிகள் வனாந்தரத்து நரிகளுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். திறப்புகளினூடே அவர்கள் இன்னும் செல்லவில்லை. ஆண்டவருடைய உலக முடிவுநாளில் யுத்தம் செய்வதற்காக, தேவனுடைய மக்கள் நிற்பதற்கு, அடைப்பு வேலிகளை இவர்கள் அமைக்கவில்லை. விழிப்படைந்தவர்கள், சத்தியத்தைக்குறித்த இந்த போலி மேய்ப்பர்களிடம் வினவும்போது, தங்களது சொந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, கேள்வி கேட்போரின் மனதை அமைதிப்படுத்துவதற்காக, சுலபமான வழியைக் கையாண்டு, அதைச் செய்வதற்காக தங்களது சொந்த நிலையையே மாற்றிக் கொள்ளுகிறார்கள். இந்த மேய்ப்பர்கள்மீது வெளிச்சம் பிரகாசித்திருக்கிறது. ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. சத்தியத்தை தவிர்ப்பதற்காகவும், இன்னும் பழைய நிலையிலேயே நீடித்துக்கொண்டிருந்தால், எந்த முடிவிற்கு வரவேண்டுமோ அதனின்று தப்புவதற்காகவும், தங்களது நிலைகளை பலமுறை மாற்றிக்கொள்ளுகிறார்கள். சத்தியத்தின் வல்லமை அவர்களது அஸ்திபாரங்களை தகர்த்தெறிந்துவிட்டது. தங்களை அதற்கு ஒப்படைப்பதற்குப்பதிலாக, தங்களிலே திருப்தியடையாதவர்களாக இன்னொரு மேடையில் ஏறிநிற்கிறார்கள். (1)

இந்தப் போலிப் போதகர்கள், தேவனுடைய பழைய உபதேசங்களை மறுதலித்துவிட்டதை நான் கண்டேன். ஒரு காலத்தில் ஆர்வத்தோடு உபதேசித்த மகிமையான சத்தியங்களை மறுத்துத் தள்ளிவிட்டார்கள். வசியத்தினாலும், பலவிதமான வஞ்சகங்களினாலும் தங்களை மூடிக்கொண்டார்கள். தப்பான

போதகத்தால் வெறிகொண்டு, மயங்கி, தங்களது மந்தையை மரணத்திற்கு நடத்திச்செல்வதை நான் கண்டேன். தேவனுடைய சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கும் அநேகர், இரவிலே படுக்கையிலே சத்தியத்தை நசுக்கிப் போடுவதற்காக அதை நடப்பித்து, மக்களுக்கு ஆர்வமூட்ட ஒரு புதிய காரியத்தை உருவாக்கி, எல்லா முக்கியத்துவமும் வாய்ந்த அருமையான சத்தியத்தினின்று மக்களது மனதை திசைதிருப்புகிறார்கள். (2)

மந்தையை மரணத்திற்கு இழுத்துச்செல்லும் இந்தப் போதகர்களுடைய பயங்கரமான வாழ்வின் போக்கு, வெகு சீக்கிரம் தடைசெய்யப்படும் என்பதை நான் கண்டேன். தேவனுடைய கோபாக்கினையின் வாதைகள் வருகின்றன. ஆனால் இந்த வாதைகளில் ஒன்று அல்லது இரண்டினால் மாத்திரம் போலி மேய்ப்பர்கள் கடும் வேதனை அனுபவிப்பது போதாது. கோபாக்கினையிலும் நீதியிலும் அந்தச் சமயத்தில் தேவனுடைய கரம் நீட்டப்படும். அவரது நோக்கங்கள் முற்றிலுமாக நிறைவேறும்வரைக்கும், கூலிக்கு உழைக்கும் போதகர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, பரிசுத்தவான்களின் பாதங்களில் பணிந்துகொள்ளும்வரைக்கும் அவர்கள் சத்தியத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொண்டதினால், தேவன் அவர்களை நேசித்தார் என்பதை துன்மார்க்கர் ஏற்றுக்கொள்ளும்வரைக்கும் அநீதியுள்ளவர்கள் பூமியினின்று அழிந்துபோகும்வரைக்கும், தேவனின் நீட்டப்பட்ட அந்தக்கரம் மடக்கப்படுவதில்லை! (3)

தேவனுடைய வருகையை எதிர்நோக்கும் பலதரப்பட்ட கூட்டங்கள் ஒவ்வொன்றிடமும் ஒரு சிறு சத்தியமுண்டு. ஆனால், தேவன் இந்தச் சத்தியங்கள் அனைத்தையும் தேவனுடைய மகா நாளுக்காக ஆயத்தமாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற தமது பிள்ளைகளிடத்தில் கொடுத்திருக்கிறார். இந்தக் கூட்டத்தினரில் யாரும் அறிந்திராத, விளங்கிக்கொள்ளமுடியாத சத்தியங்களையும் அவர் கொடுத்திருக்கிறார். பார்த்து விளங்கிக்கொள்ள ஆயத்தமா யிருப்பவர்களுக்கு விளக்கிக்காட்டுகிறார். மற்றவர்களுக்கு இந்தச் சத்தியங்கள் முத்திரிக்கப்பட்டவைகளாயிருக்கின்றன. இருளிலும் தவறுகளிலும் இருப்பவர்களின் போதகத்தைக் கேட்டு, தங்கள் மனம் அறிவுப் பெருக்கம் அடையத்தக்கதாக, இப்படிப்பட்டவர்களிடம் சொல்லாமல், ஏதாவது புதிய வெளிச்சம் கொடுக்கப்படவேண்டுமாயின் அவரால் அழைக்கப்பட்டவர்களும் நேசிக்கப்பட்டவர்களும் அறிந்துகொள்ளும்படியாகத் தெரியப்படுத்துவார். (4)

கடைசி இரக்கத்தின் தூது நம்மிடத்தில் இருக்கிறது என்று நம்புபவர்கள், ஒவ்வொரு நாளும் புதிய—பிழையான கருத்துக்களை ஏற்றுக்கொண்டுவருபவர்களிடமிருந்து பிரிந்திருக்கவேண்டுமென்பதின்

அவசியம் எனக்குக் காண்பிக்கப்பட்டது. வாலிபரானாலும் வயோதிகரானாலும் யாரும் அவர்களது கூட்டங்களுக்குச் செல்லுதல் கூடாது. மூல உபதேசங்களுக்குப் பதிலாக, மனிதரது கட்டளைகளைப் போதிப்பது ஆத்துமாவை அழித்துப்போடும் சாவிற்கேதுவான விஷமாகும். இவ்வாறு பிழைகளைப் போதிக்கும் கூட்டங்களில் பங்குகொள்ள உற்சாகமூட்டுவது தவறு என்பதை நான் கண்டேன். இந்தக் கூட்டங்களால் உண்டான செல்வாக்கு நல்லதல்ல. இந்தவகையான இருளிலிருந்தும் தவறுகளினின்றும் தேவன் நம்மை விடுதலை செய்திருப்பாரானால், எதைக்கொண்டு அவர் நம்மை விடுதலையாக்கி சத்தியத்தில் களிகூரச்செய்தாரோ, அந்த விடுதலையில் உறுதியாக நிற்போமாக. நாம் போகத் தேவையற்ற கூட்டங்களுக்குச் சென்று, தவறுகளுக்குச் செவிசாய்க்கும்போது, தேவன் அதை விரும்புகிறதில்லை. சித்தத்தின் வல்லமையால், மக்கள் மனதில் தவறான உபதேசங்கள் பதியவைக்கப்படும்போது, ஆண்டவர் நம்மை அந்தக் கூட்டங்களுக்கு அனுப்பினாலொழிய, அத்தகைய இடங்களுக்கு நாம் போகக்கூடாது. அவர் நம்மை தம்மோடு வைத்துக்கொள்ளமாட்டார். (5)

தூதர்கள் நம்மீது செலுத்தும் விழிப்பான கவனத்தை நிறுத்திவிடுகிறார்கள். சாத்தானாலும் அவனது தீய தூதர்களாலும் இருள் சூழப்பட்டு, பெலவீனமாக்கப்பட்டு, அலைக்கழிக்கப்படும்படி விட்டுவிடப்படுகிறோம். நம்மைச் சுற்றியுள்ள வெளிச்சம் இருளால் தூய்மை கெட்டுப்போகிறது. (6)

கட்டுக்கதைகளுக்குச் செவிசாய்க்க மனதைச் செலுத்துவதற்கு நமக்கு நேரமில்லை என்பதை நான் கண்டேன். நமது மனம் வேறுவழியில் செலுத்தப்படக்கூடாது. ஆனால் நிகழ்கால சத்தியத்தினால் நிறைந்திருக்கவேண்டும். சாந்தத்தோடு வேதத்தினின்று நமது நம்பிக்கைக்குரிய காரணத்தைக் கொடுக்கத்தக்கதாக, சத்தியத்தில் நமது நிலைபற்றி விளக்கமாக அறிந்துகொள்ளத் தக்கதான ஞானத்தைத் தேடவேண்டும். கள்ளப்போதகங்களும், ஆபத்து நிறைந்த தவறுகளும் நமது மனதை அழுத்தும்போது, எந்தச் சத்தியம் தேவனுடைய அந்த நாளிலே இஸ்ரவேல் வீட்டாரை தகுதியாக்கி ஆயத்தமாக்கவேண்டுமோ, அந்தச் சத்தியத்திலே மனதால் நிலைத்திருக்கமுடியாமல் போகிறது. (7) ★

# 31

# மனிதனுக்கு தேவனுடைய ஈவு!

தேவன் தமது மட்டற்ற இரக்கத்தாலும் நேசத்தாலும் அருள்கூர்ந்து மனிதன் மன்னிப்பைப்பெற்று ஜீவனோடிருக்க எண்ணி, இறங்கிவந்து, கருணைகூர்ந்து, தமது குமாரனைக் கொடுத்தது எனக்குக் காட்டப்பட்டது. ஏதேன் தோட்டத்தின் அழகையும், வனப்பையும் இரசிக்கவும், ஒரு மரம் தவிர மற்ற எல்லா மரங்களின் கனிகளையும் உண்ணவும்கூடிய சிறப்புரிமையை ஆதாமும் ஏவாளும் பெற்றிருந்தார்கள் என்று எனக்குக் காட்டப்பட்டது. ஆனால் சர்ப்பம் ஏவாளை சோதித்து, அவள் தனது புருஷனாகிய ஆதாமைச் சோதித்து, இருவரும் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தார்கள். தேவனுடைய கட்டளையைமீறி பாவிகளானார்கள். இந்தச் செய்தி பரலோகம் முழுவதும் பரவி, சுரமண்டலங்களின் இனிய நாதம் நிறுத்தப்பட்டு அமைதியுண்டாயிற்று. ஆதாம், ஏவாள் இருவரும் மறுபடியும் கரங்களை நீட்டி, ஜீவவிருட்சத்தின் கனியையும் புசித்து என்றும் சாவாமையின்றி பாவிகளாகவே இருந்துவிடக்கூடாதே என்று தூதர்கள் வேதனைப்பட்டுப் பயந்தார்கள். ஆனால் மீறுதலுக்குட்பட்ட ஆதாமையும் ஏவாளையும் தேவன் ஏதேன் தோட்டத்தைவிட்டு துரத்தி விடுவேன் என்றார். என்றென்றும் சாவாமையைத் தருகின்ற தன்மையுள்ள அந்த ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, மனிதன் சாவாமையைத் தரித்துக்கொள்ளாதபடி அதற்குப்போகும் வாசலைக் காவல் செய்ய கேரூபீன்களையும் சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார். (1)

மனிதன் விழுந்துபோனான். தேவன் சிருஷ்டித்த உலகம் வேதனையையும், வியாதியையும், மரணத்தையுமே அடையும்படியாக ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களால் நிறைக்கப்படும். பாவிக்கு இனி தப்புவதற்கு மார்க்கமேயில்லை என அறிந்த பரலோகம் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது. ஆதாம் ஏவாளின் குடும்பம் முழுவதுமே மரிக்கவேண்டும்! பின்னர், நான் இனிய அழகிய இயேசுவையும், அவரது முகத்தில் ஏற்பட்ட பரிவையும் சோகத்தையும் கண்டேன். வெகு சீக்கிரத்தில் பிதாவைச் சுற்றிலுமிருக்கும் அந்த மிகுந்த பிரகாசமான வெளிச்சத்தை நோக்கி உரையாடுவதாக

என்னுடன் வந்த தூதன் கூறினான். இயேசு பிதாவோடு பேசிக்கொண்டிருக்கும் போது, தூதர்கள் மிகுந்த கவலையோடிருந்தார்கள். பிரதாவைச் சுற்றிலும் காணப்படும் அந்த மகிமையான ஒளியால், இயேசு மூன்று தடவை மறைக்கப்பட்டார். மூன்றாம் முறை அவர் பிதாவிடத்தினின்று வரும்பொழுது, அவரைப் பார்க்க முடிந்தது. எல்லாக் குழப்பத்தினின்றும் தொல்லையினின்றும் விடுதலைபெற்றதுபோல வார்த்தைகளால் விவரிக்கமுடியாது அளவிற்கு அவரது முகம் அமைதியாகவும், இனிமைபொருந்தியதாகவும் பிரகாசித்தது. விழுந்துபோன மனிதனுக்கு, தப்புவதற்கான மார்க்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது என்பதை பாடும் தூதர் குழாமிற்கு அவர் தெரிவித்தார். அவர்களது பாவத்தைச் சுமப்பதற்கும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மரண தண்டனையை தன்மேல் ஏற்றுக்கொள்வதற்கும், தமது இரத்தத்தின் புண்ணியங்களினாலே மீறுதல்களுக்கெல்லாம் மன்னிப்பு கொடுக்கவும், அவர்களது கீழ்ப்படிதலினாலே, எந்தத் தோட்டத்தினின்று விரட்டப்பட்டார்களோ அதன் உரிமையைத் திரும்பப்பெற்றுக்கொள்வதற்கும் ஒரு வழியை உண்டாக்கினார். இவ்வாறு தமது பிதாவிடம் பரிந்துபேசி, இந்த விழுந்துபோன மனுக்குலத்திற்கு தனது சொந்த ஜீவனையே பணையம் வைக்கும் அனுமதியையும் பெற்றார். பின்னர், தாங்கள் இழந்துபோன அந்த மகிமையுள்ள சாவாமையைத் தரும் ஜீவவிருட்சத்தின் கனியை பெறும் உரிமையை மறுபடியும் பெற்றுக்கொள்வார்கள். (2)

அப்பொழுது, மகிழ்ச்சி, விவரிக்கமுடியாத ஒரு மகிழ்ச்சி பரலோகத்தை நிரப்பியது. பரலோக சங்கீதக்குழுவினர் துதியும் புகழ்ச்சியும் நிறைந்த கீதம் ஒன்றை இசைத்தனர். தேவன் தமது மிகுந்த கிருபையினாலும் இரக்கங்களினாலும் தமது அருமைக் குமாரனை முரட்டாட்டமான இந்த மனுக்குலத்திற்காக இறங்கிவந்து தத்தம் செய்ததை நினைத்து, தங்களது சுரமண்டலங்களை மீட்டி முன்னைவிட உற்சாகமான குரலில் பாடினார்கள். பிதாவின் அணைப்பைவிட்டு நீங்கச் சம்மதித்து, மற்றவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பதற்காக, துன்பமும் கடுந்துயரும் நிறைந்த வாழ்வைத் தெரிந்துகொண்டு, தன்னை வெறுத்து தியாகஞ்செய்த இயேசுவிற்காக துதியும் புகழ்ச்சியும் ஏறெடுக்கப்பட்டது. (3)

பிதா தமது நேசக்குமாரனைப் போராட்டமின்றி ஒப்புக்கொடுத்தார் என்று நினைக்கிறாயா? என்று தூதன் என்னைக் கேட்டபின்பு, “அல்ல, அல்லவே அல்ல” என்று அவனே பதிலளித்தான். பாவ மனிதன் பாவத்திலே அழிந்துபோக அனுமதிப்பதா அல்லது தமது அன்பின் குமாரனை அவர்களுக்கென மரிக்க ஒப்புக்கொடுப்பதா என்ற போராட்டம் பரலோகத்தில் தேவனுக்கும் இருந்தது. தூதர்களும் மனிதனின் மீட்பில் அக்கறை

கொண்டிருந்ததால், அவர்களிலும் சிலர், தங்களது மகிமையைவிட்டு, அழிந்துபோகும் மனிதனுக்காக, தங்களது உயிரைக் கொடுக்கவும் ஆயத்தமாயிருந்தார்கள். மீறுதலோ மகா பெரிதானபடியால், இந்தக் கடனைத் தீர்ப்பதற்கு, ஒரு தூதன் உயிர் கொடுப்பதால் எந்தவித பயனுமளிக்காது. தேவகுமாரனின் தலையீடும், அவரது மரணமும் மாத்திரமே இந்த மாபெரும் கடனைத் தீர்த்து, நம்பிக்கையற்ற துன்பத்திலும் தொல்லையிலுமிருந்து விழுந்துபோன மனிதனைக் காக்கமுடியும். தூதர்களுக்கு நியமிக்கப்பட்ட வேலையோவெனில் அவர்கள் பூலோகத்திற்கு இறங்கி, பரலோத்திற்கு ஏறி, தங்கள் மகிமையைவிட்டு பாடு நிறைந்த வாழ்வு வாழும் தேவகுமாரனை திடப்படுத்தும் நறுமணதைலம்போன்று ஆறுதலளித்து, இவ்வாறு தங்களுடைய வேலைகளைச் செய்கிறார்கள் என்பதாகும். மேலும் இந்த உலகில் வாழும் கிருபையின் மக்களை சாத்தானின் தூண்டுதலால் எப்பொழுதும் நெருக்கும் தீய தூதர்களினின்றும் இருளினின்றும் காத்துப் பராமரிக்கவேண்டும். கெட்டு அழிந்துகொண்டிருக்கும் மனிதனுக்காக, தமது பிரமாணத்தை மாற்றுவது தேவனுக்குக் கூடாத காரியம் என்று நான் கண்டேன். எனவேதான், மனிதனின் மீறுதல்களுக்காக தமது அருமைக் குமாரனை மரிக்க அனுமதித்தார். (4) ★

# 32

# சாத்தானின் விழுகை!

கிறிஸ்துவிற்கு அடுத்தபடியாக, ஒரு காலத்தில் மேன்மை பொருந்திய தூதனாக, சாத்தான் பரலோகத்தில் இருந்தான். அவனது முகம் மற்ற தூதர்களைப்போல சாந்தமாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருந்தது. அவனது மிகுந்த ஞானத்தைக் காட்டும்படியாக, அவனது நெற்றி உயர்ந்தும் அகன்றும் இருந்தது. அவனது உடலமைப்பு பூரணமாக இருந்தது. அவனது தோற்றம் மேன்மையாகவும் கெம்பீரமாகவும் இருந்தது. பிதா குமாரனை நோக்கி: "நமது சாயலாக மனிதனை உண்டாக்குவோமாக" என்று கூறியபோது, சாத்தான் இயேசுவின்மேல் பொறாமைகொண்டான். மனிதன் எந்தவிதமாக உருவாக்கப்படப்போகிறான் என்ற விஷயத்தில் தன்னிடத்தில் ஆலோசிக்கவேண்டுமென்று அவன் விரும்பினான். ஆனால், அவர்கள் அதைப்பற்றி அவனிடத்தில் ஆலோசிக்காததால் எரிச்சலும், பொறாமையும், வெறுப்பும் நிறைந்தவனானான். தேவனுக்கு அடுத்தபடியாக உயர்வான மேன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அவன் விரும்பினான். (1)

இந்தக் காலம்வரை பரலோகம் முழுவதும் தேவனுடைய பூரண ஆளுகைக்கு அடியிலே இசைந்து ஒழுங்காக அமைந்திருந்தது. பிதாவின் சித்தத்திற்கும் அவர் ஏற்படுத்திவைத்திருக்கும் ஒழுங்கிற்கும் விரோதமாகக் கலகஞ்செய்வது மாபெரும் குற்றமாகும். பரலோகம் அனைத்தும் குழப்பத்தில் ஆழ்ந்தது. ஒவ்வொரு பகுதியும் ஒரு தலைமைத் தூதனுக்கடியிலே தூதர்கள் குழுக்களாகப் பிரிந்து அணி அணியாக நின்றார்கள். சாத்தான் தன்னை உயர்த்த ஆவல்கொண்டவனாக இயேசுவின் அதிகாரத்திற்கு அடங்கியிருக்க விருப்பமின்றி, தேவனுடைய ஆளுகைக்கு விரோதமாக மற்றவர்களிடம் பசப்பான வார்த்தைகளைப் பேசி, ஆதரவுபெற விரும்பினான். சாத்தானோடு சேர்ந்து சிலர் அவனது கலகத்திலே அனுதாபங்காட்டினார்கள். மற்றவர்கள் தமது குமாரனுக்கு அதிகாரத்தைக் கொடுத்த காரியத்தில், தேவனுடைய ஞானத்தையும் அவரது மேன்மையையும் போராடி நிலைநிறுத்த முயன்றார்கள். தூதர்களுக்குள்ளே பிரிவு ஏற்பட்டது.

சாத்தானும் அவனது அனுதாபிகளும் தேவனுடைய அரசாங்கத்தைச் சீர்திருத்த முயற்சிசெய்தார்கள். தேவனுடைய ஆராய்ந்துமுடியாத ஞானத்தைக் காணவிரும்பி, இயேசுவை உயர்த்தினதில் அவருக்குக் கொடுக்கப்பட்ட எல்லையற்ற வல்லமைபற்றியும் அதிகாரத்தைப் பற்றியும் பிதாவின் நோக்கத்தையும் உறுதியாக அவர்கள் அறிய விரும்பினார்கள். குமாரனின் அதிகாரத்திற்கு எதிராகக் கலகஞ்செய்தார்கள். ஒவ்வொருவரின் காரியமும் விசாரித்து தீர்மானிக்கப்படுவதற்காக பரலோகக்கூட்டம் அனைத்துமே பிதாவிற்கு முன் வரும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அங்கேதான் சாத்தானும் அவனோடு சேர்ந்து கலகஞ்செய்த தூதர்களும் பரலோகத்தைவிட்டுத் தள்ளப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பின்பு, பரலோகத்தில் யுத்தம் உண்டாயிற்று. தூதர்களும் போரில் ஈடுபட்டிருந்தார்கள். சாத்தான் தேவகுமாரனையும் அவருடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களையும் வெற்றிகொள்ள விரும்பினான். ஆனால், நல்ல—உண்மையான தூதர்கள் நிலைத்தார்கள். சாத்தானும் அவனைச் சார்ந்தவர்களும் பரலோகத்தினின்று விரட்டப்பட்டார்கள். (2)

சாத்தானும் அவனைச் சேர்ந்தவர்களும் பரலோகத்தினின்று தள்ளிவிடப்பட்டபின்பு என்றைக்குமாக அதன் மகிமையையும் தூய்மையையும் இழந்துவிட்டோமே என்று சாத்தான் உணர்ந்தான். அதற்காக மனம் வருந்தினான். பரலோகத்தில் மறுபடியும் தன்னுடைய இடத்திலே வைக்கப்படவேண்டுமென்று விரும்பினான். அவனுக்கு உரிய இடத்தையோ அல்லது எந்த வேலைகொடுக்கப்பட்டாலும் சரியென்று ஏற்றுக்கொள்ள அவன் எதற்கும் ஆயத்தமாக இருந்தான். ஆனால், முடியாது. பரலோகம் ஆபத்தில் வைக்கப்படமுடியாது. சாத்தான் திரும்பவும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், பரலோகம் முழுவதுமே கெட்டழிந்துபோகும். ஏனெனில், பாவம் அவனோடு உற்பத்தியானது. கலகத்தின் வித்துக்களும் அவனோடிருந்தது. அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அழுதார்கள். தேவ தயவிற்குள் தாங்களும் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமெனக் கெஞ்சினார்கள். ஆனால் அவர்களது பாவம், வெறுப்பு, எரிச்சல், பொறாமை முதலியவைகள் தேவனால் நீக்கிப்போடமுடியாத அளவு மிகவும் அதிகமாக இருந்தது. பாவம் தனது முடிவான தண்டனையைப் பெறக் காத்திருக்கவேண்டும். (3)

இனி தேவ தயவின்கீழ் வருவது சாத்தியமில்லையென்பது முற்றிலுமாகத் தெரிந்தபோது, அவனது பழிவாங்கும் எண்ணமும், வெறுப்பும் வெளிப்படையாக ஆரம்பமாயிற்று. அவன் தனது தூதர்களிடம் ஆலோசித்தான். தேவ ஆளுகைக்கு விரோதமாக வேலைசெய்யும்படி ஒரு திட்டம் தீட்டப்பட்டது. ஆதாமும் ஏவாளும் அந்த அழகான தோட்டத்தில்

வைக்கப்பட்டபோது, சாத்தான் அவர்களை அழித்துப்போட திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தால், எந்த வகையிலும் தேவனுடைய சந்தோஷத்தைவிட்டு அவர்களைப் பிரிக்கமுடியாது. தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அவரது ஆதரவை இழந்துபோனா லொழிய சாத்தான் தனது வல்லமையை அவர்கள்மீது உபயோகிக்க முடியாது. எனவே, கீழ்ப்படியாமைக்கு அவர்களை இழுத்துச்செல்ல ஒரு திட்டம் வகுக்கவேண்டும். அதன்மூலம் தேவனுடைய கோபத்திற்கு அவர்களை ஆளாக்கி, பின்னர் தனது மற்றும் தன்னுடைய தூதர்களின் நேரடியான செல்வாக்கின்கீழ் அவர்களைக் கொண்டுவந்துவிடலாம். சாத்தான் வேறு ஒரு உருவத்தை எடுத்து, மனிதன்மீது தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்த முடிவுசெய்யப்பட்டது. தேவனுடைய உண்மைக்குப் புறம்பாக, பசப்பு வார்த்தைகளால் அவர்களை வசப்படுத்தி, உண்மையிலே அவர் சொன்னதின்படியேதான் அதற்கான அர்த்தத்தைக் கொண்டிருந்தாரா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்த எண்ணினான். மேலும் அறியவேண்டுமென்ற ஆர்வத்தை அவர்களிடம் ஏற்படுத்தி, ஆராய்ந்துமுடியாத தேவ திட்டங்களை துருவி ஆராய அவர்களை வழிநடத்த எண்ணினான். இதே பாவத்தில்தான் சாத்தான் குற்றவாளியாக, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின்மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளின் காரணம்பற்றி ஆராய விரும்பினான். (4) ★

# 33

# மனிதனின் விழுகை!

பரிசுத்த தூதர்கள் ஏதேன் தோட்டத்தில் ஆதாமையும் ஏவாளையும் அடிக்கடி சந்தித்து, அவர்களது தொழில்பற்றி கற்றுக்கொடுத்து, சாத்தானின் கலகம், அவனது விழுகை ஆகியவைபற்றியும் போதித்திருந்தார்கள். அவர்கள் பிரிந்திருந்து வேலைசெய்வார்களானால், விழுந்துபோன சாத்தானின் தொடர்பு எப்படியாவது ஏற்பட்டுவிடுமென எண்ணி, சேர்ந்து வேலைசெய்யும்படியும், கவனமாயிருக்கும்படியும் கூறினார்கள். தேவன் கொடுத்த வழிமுறைகளைச் சரியானபடி கைக்கொள்ளும்படி, தூதர்களும் அவர்களோடுசேர்ந்து ஒத்துழைத்தார்கள். ஏனெனில், முழுமையான கீழ்ப்படிதலில்தான் அவர்கள் பாதுகாப்பாக இருக்கமுடியும். அப்படியிருக்குமானால் விழுந்துபோன விரோதி இவர்கள்மேல் எந்த வல்லமையையும் பயன்படுத்தமுடியாது. (1)

சாத்தான் ஏவாளைக் கீழ்ப்படியாமற்செய்வதற்காக, முதலில் அவளிடம் வேலையை ஆரம்பித்தான். ஏவாள் தனது கணவனுடன் வேலை செய்யும்போது, சற்று பின்வாங்கி திரிந்தலையும்போது, முதல் தவறைச் செய்தாள்! பின்னர், விலக்கப்பட்ட மரத்தைச் சுற்றி தயங்கி நின்றுகொண்டிருந்தாள். பின்னர், சோதனைக்காரனின் சத்தத்திற்குச் செவிசாய்த்தாள். “இதைப் புசிக்கும் நாளிலே சாவீர்கள்” என்ற தேவனின் வார்த்தையைச் சந்தேகிக்குமளவிற்கு துணிவு எற்பட்டது. தேவன் அதைக் கூறும்பொழுது, ஒருவேளை இந்தவிதமான பொருளோடு கூறியிருக்கமாட்டார் என்று எண்ணினாள். எனவே, துணிகரமாக முயன்று கரத்தைநீட்டி பழத்தைப் பறித்துச் சாட்பிட்டாள். அந்தக் கனி பார்வைக்கு நலமும் புசிப்பிற்கு இன்பமுமாயிருந்தது. உண்மையிலேயே நன்மையைக் கொடுக்கக்கூடிய ஒரு காரியத்தை தங்களுக்கு கிடைக்காதபடிக்குச் செய்திருக்கிறார் என்று எண்ணி, தேவன் பேரில் பொறாமைகொண்டாள். தனது கணவனையும் சோதனைக்குள்ளாக்கி, பழத்தை அவனுக்கும் கொடுத்தாள். சர்ப்பம் தனக்குச் சொன்ன எல்லாக் காரியத்தையும் கூறி, அதன் பேசும் வல்லமையைக்குறித்தும் தனது ஆச்சரியத்தைத் தெரிவித்தாள். (2)

ஆதாமின் முகத்தை துக்கம் மூடியதை நான் கண்டேன். பயந்தும் திகைத்தும் காணப்பட்டான். அவனது மனதிலே ஒரு போராட்டம் நடைபெறுவதுபோல் தோன்றியது. இந்த விரோதிக்கு எதிராகத்தான் தாங்கள் எச்சரிக்கப்பட்டோம் என்பதைத் திட்டமாக உணர்ந்தான். தன் மனைவி சாகவேண்டும். தாங்கள் இருவரும் பிரியவேண்டும் என்பதையும் அறிந்தான். அவன் ஏவாளை அதிகமாக நேசித்ததினால், மிகுந்த அதைரியப்பட்டு, அவளுக்கு நேர்ந்த கதியை தானும் பங்கிட்டுக்கொள்வோம் எனத் தீர்மானித்தான். அந்தப் பழத்தைப் பிடுங்கி சீக்கிரமாக உண்டுமுடித்தான். இதைக்கண்ட சாத்தான் களிகூர்ந்தான். பரலோகத்திலே கலகம்பண்ணி தன்னை நேசித்த அனுதாபிகளைச் சேர்த்துக்கொண்டு, தொடர்ந்து கலகத்தை நடத்தினான். தான் விழுந்துபோனான். தன்னோடு மற்றவர்களையும் சேர்த்து விழத்தள்ளினான். இப்பொழுது தேவன்பேரில் அவநம்பிக்கை கொள்ளவும், அவரது ஞானத்தை ஆராயவும், அவரது ஞானமான எல்லாத் திட்டங்களையும் ஆழ்ந்து கவனிக்க வகைதேடவும் சாத்தான் ஏவாளைச் சோதித்தான். ஏவாள் மட்டும் பாவத்தில் தனியாக விழமாட்டாள் என்பது சாத்தானுக்குத் தெரியும். ஏவாளின்மீது கொண்ட அன்பால், ஆதாமும் தேவ கட்டளையைமீறி அவளோடு பாவத்தில் விழுந்தான். (3)

மனிதனின் விழுகையின் செய்தி பரலோகமெங்கும் பரவிற்று. ஒவ்வொரு சுரமண்டலமும் அமைதியடைந்தது. துக்கத்தினால் தூதர்கள் தங்கள் தலைமீதிருந்த கிரீடங்களை அகற்றிவிட்டார்கள். பரலோகம் முழுவதும் குழப்பத்தால் நிறைந்தது. இந்தக் குற்றஞ்செய்த தம்பதிகளை என்ன செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிக்க ஆலோசனைச் சங்கம் ஒன்று கூட்டப்பட்டது. மேலும், ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, என்றும் சாவாமையைத் தரித்துக்கொள்ளும் பாவிகளாகிவிடக்கூடாதேயென்று, தேவதூதர்கள் பயந்தார்கள். ஆனால் மீறுதலுக்குட்பட்டவர்களைத் தோட்டத்திலிருந்து விரட்டுவேனென்று தேவன் கூறினார். ஜீவவிருட்சத்திற்குப் போகும் வழியைக் காவல்செய்வதற்காக, தூதர்களுக்கு உடனே கட்டளை கொடுக்கப்பட்டது. ஆதாமும் ஏவாளும் என்றைக்கும் பாவத்திலும் கீழ்ப்படியாமையிலும் வாழ்வதற்கேதுவாக தேவனுக்குக் கீழ்ப்படியக்கூடாது என்பதும், அவருடைய கோபத்தைச் சம்பாதிக்கவேண்டும் என்பதும், பின்னர் ஜீவவிருட்சத்தின் கனியையும் உண்ணவேண்டும் என்பதும்தான் சாத்தானின் திட்டமிடப்பட்ட தீர்மானமாகும். இப்படியாக பாவம் அழியாமல் நிலைபெற்றுவிடும். பரிசுத்த தூதர்கள் ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலிருந்து விரட்டுவதற்காக அனுப்பப்பட்டார்கள். ஜீவவிருட்சத்திற்குப் போகும் வழியும் அடைக்கப்பட்டது. வல்லமையுள்ள அவர்கள் ஒவ்வொருவருடைய வலது கைகளிலும் சுடரொளிப்பட்டயம்போன்ற ஒன்று காணப்பட்டது. (4)

பிறகு சாத்தான் வெற்றிப்பெருமிதம் கொண்டான். தனது விழுகையினால் மற்றவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்கினான். அவன் பரலோகத்தைவிட்டு புறம்பாகத் தள்ளப்பட்டான். அவர்களும் பரதீசுக்கு வெளியே தள்ளப்பட்டார்கள். (5) ★

# 34

# இரட்சிப்பின் திட்டம்!

பாவத்தினால் மனிதன் விழுந்துபோனான் என்பதையும், கடவுள் படைத்த உலகம் சாவையே முடிவாகக்கொண்ட மனிதர்களாலும், துன்பத்தாலும், வியாதியாலும், மரணத்தாலும் நிரம்பப்போகிறது என்பதையும், பாவிக்கு தப்பிக்கும் வழியே இல்லை என்பதையும் அறிந்தபோது பரலோகம் துக்கத்தால் நிறைந்தது. ஆதாமின் முழுக் குடும்பமும் நிச்சயமாக மரிக்கவேண்டும்; இனிய இயேசுவின் அன்பான முகத்திலே, அனுதாபமும் துக்கமும் குடிகொண்டதை நான் கண்டேன். விரைவில், பிதாவைச் சுற்றிலும் மூடியிருந்த, உன்னதமான—பிரகாசமான வெளிச்சத்தை நோக்கி அவர் நெருங்குவதை நான் கண்டேன். அவர் பிதாவுடன் தனித்து நெருக்கமாகப் பேசுகிறார் என என்னுடன் வந்த தூதன் கூறினான். இயேசு தமது பிதாவோடு உரையாடினபோது, தூதர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடு காணப்பட்டார்கள். பிதாவைச் சுற்றிலுமுள்ள மகிமையுள்ள ஒளியால் அவர் மூன்று தடவை மூடப்பட்டார். மூன்றாம் முறை அவர் பிதாவிடமிருந்து வெளியே வந்தார். அவரைக் காணமுடிந்தது. அவரது முகம் அமைதியாகவும், சந்தேகம் குழப்பம் எதுவுமின்றி விடுதலைபெற்றதாகவும், அன்புச்செயலாலும் அழகினாலும் பிரகாசித்து, வார்த்தைகளால் கூறமுடியாத அளவிற்கு இருந்தது. நித்திய ஜீவனை இழந்துபோன மனிதனுக்கு, தப்புகின்ற மார்க்கம் ஒன்று தீர்மானித்தாகிவிட்டது என்று தூதர் சேனையிடம் எடுத்துரைத்தார். அவர்மூலம் மனிதன் மன்னிப்பைப் பெறுவதற்காகவும், மனிதனின்மேல் விழுந்த மரணதண்டனையை, தன்மேல் எடுத்துக்கொள்ளுவதற்காகவும், தமது உயிரையே பணையமாகக் கொடுப்பதாகவும், அவருடைய இரத்தத்தின் தகுதியினாலும், தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும் குணத்தாலும், அவன் தேவனுடைய தயவைப் பெறமுடியுமென்றும், அதன் பலனாக, மீண்டும் அழகிய தோட்டத்தினுள் கொண்டுவரப்பட்டு, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கமுடியுமென்றும் கூறி, அவர் தமது பிதாவோடு அவர்களுக்காக மன்றாடிக்கொண்டிருந்ததாகவும் அறிவித்தார். (1)

இதைக்கேட்ட தேவதூதர்கள் முதலில் மகிழ்ச்சியடையவில்லை. அவர்களது தலைவரான இயேசு ஒன்றையும் அவர்களிடமிருந்து

மறைக்காமல், இரட்சிப்பின் திட்டத்தை விவரித்துக்கூறினார். பிதாவின் கோபத்திற்கும், பாவியான மனிதனுக்கும் நடுவாக நின்று, அநீதி, பரிகாசம் அனைத்தையும் தான் ஏற்றுக்கொள்ளுவதாக அவர்களிடம் கூறினார். எனினும் ஒரு சிலரே அவரை தேவகுமாரனென்று ஏற்றுக்கொள்ளுவார்களென்றும், அநேகமாக எல்லோருமே அவரை வெறுத்துத் தள்ளிப்போடுவார்கள் என்றும் சொன்னார். அவர் பரலோகத்தின் மகிமையையெல்லாம் விட்டுவிட்டு, பூமியிலே ஒரு மனிதனாகத்தோன்றி, ஒரு மனிதனாகத் தன்னைத்தாழ்த்தி, சோதிக்கப்படுகிறவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்பதை அறியும்பொருட்டாக, மனிதனுக்கு நேரிடவிருக்கும் பலதரப்பட்ட சோதனைகளை தன் சொந்த அனுபவத்தினாலே அறிந்துகொண்டு, கடைசியில் போதகராக தன்னுடைய வேலை நிறைவேறும்போது, மனிதர்களின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், சாத்தானும் அவனது தூதர்களும் துன்மார்க்கரைச் செய்யும்படித் தூண்டுகிற எல்லாக் கொடுமையையும் துன்பத்தையும் அனுபவித்து, பரத்திற்கும் பூமிக்கும் நடுவாக கொடிய பாவிபோல் தொங்கி, கொடுமையான மரணத்தை அடைவார் என்றும், தூதர்களும் பார்க்கமுடியாமல் அக்காட்சியிலிருந்து தங்கள் முகங்களை மூடிக்கொள்ளும் கடுந்துயரமும் பயங்கரமும் நிறைந்த வேளையை அவர் கடந்துசெல்வாரென்றும், உடலின் கடுந்துயர்மாத்திரமல்ல உள்ளத்தின் துயரும் ஒப்பிடமுடியாத அளவிற்குப் பெரியதாக இருக்குமென்றும், இந்த உலகத்தின் பாவப்பாரம் அனைத்தும் அவர்மீது சுமத்தப்படும் என்றும், அவர் மரித்து மூன்றாம்நாள் உயிர்த்தெழப்போவதாகவும், பின்பு தமது பிதாவிடத்திற்கு ஏறிச்சென்று, வழி தப்பிய பாவ மனிதனுக்காகப் பரிந்துபேசப்போவதாகவும் கூறினார். (2)

தூதர்கள் இயேசுவின் முன்பாக முகங்குப்புற விழுந்தார்கள். தங்களது ஜீவன்களைக் கொடுக்க முன்வந்தார்கள். இயேசு தமது மரணத்தினால் அநேகரை இரட்சிக்கக்கூடுமென்றும், ஒரு தூதனின் ஜீவன் அந்தக் கடனைத் தீர்க்கமுடியாது என்றும் கூறினார். இயேசுவின் ஜீவன் மாத்திரமே, பணையமாக அவரது பிதாவால் ஏற்றுக்கொள்ளப்படமுடியுமென்று கூறினார். தூதர்கள் செய்யவேண்டிய வேலையும் உண்டு என்றும், அவரோடு இருக்கவும், பல சமயங்களில் அவரைப் பலப்படுத்தவும் அவர்கள் அவசியமெனவும் கூறினார். விழுந்துபோன மனிதனின் தன்மையை அவர் எடுக்கப்போவதாகவும் மனிதர்களின் பெலனுக்குச் சமமாகக்கூட அவரது பெலன் இருக்காது என்றும் கூறினார். அவருக்கு நிகழவிருக்கும் அவமானத்தையும் உபத்திரவத்தையும் காண்கின்ற சாட்சிகளாக அவர்கள் இருப்பார்கள் என்றார். அவரது பாடு மரணத்தைக்கண்டு, மனிதர்கள் அவரை வெறுப்பதைக் காணும்போது, ஆழ்ந்த உணர்ச்சிவசத்தால்

தூண்டப்பட்டு, தாங்கள் இயேசுவிற்காகக்கொண்ட அன்பினிமித்தம் அவரது கொலைகாரர்களிடமிருந்து அவரைத் தப்புவித்து, விடுதலைசெய்ய விரும்புவார்கள்; ஆனால் தாங்கள் காண்பதைத் தடுக்கும்படி நிச்சயமாக எதிலும் தலையிடக்கூடாது என்றும், அவரது உயிர்த்தெழுதலில் அவர்கள் செய்யவேண்டிய ஒரு பகுதி உண்டு என்றும் இரட்சிப்பின் திட்டம் தீட்டப்பட்டு, அந்தத் திட்டம் பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (3)

பரிசுத்த துக்கத்தோடு இயேசு தூதர்களை ஆறுதல்படுத்தி மகிழ்ச்சியூட்டினார். தன்னால் இரட்சிக்கப்படுகிறவர்கள் தன்னோடு என்றென்றும் இருப்பார்களென்றும் தெரிவித்தார். அவரது மரணத்தினால் அநேகரை மீட்டு, மரணத்தின் வல்லமையுடையவனை அழிக்கவேண்டும். பரலோகத்தின் கீழே இராஜ்யத்தையும் இராஜ்யத்தின் மேன்மையையும் பிதா அவருக்குக் கொடுப்பார். அவர் அதை என்றென்றும் ஆளுகைசெய்வார். பரலோகத்தையாவது, பரிசுத்தப்படுத்தப்பட்ட புதிய பூமியையாவது ஒருக்காலும் தொந்தரவு செய்யமுடியாதபடி, சாத்தானும் பாவிகளும் அழிக்கப்படுவார்கள். விழுந்துபோன மனிதன் தேவனுடைய கருணையைப் பெற்று பரலோகத்தை அனுபவிக்கும்படி, தமது மரணத்தின்மூலமாக மறுபடியும் அவனை உயர்த்த தமது பிதா ஒப்புக்கொண்ட இந்தத் திட்டத்திற்கு இணங்கும்படி பரலோகக் கூட்டத்தை இயேசு அழைத்தார். (4)

மகிழ்ச்சி! சொல்லொண்ணாத மகிழ்ச்சி பரலோகத்தை நிரப்பியது. பரலோகக் கூட்டம் புகழ்ந்து துதியின் பாடல்களைப் பாடியது. வெறும் கலகக்கார மக்களுக்காக தமது அன்பான நேசகுமாரனை மரிக்கக்கொடுக்க சம்மதித்து, விட்டுக்கொடுத்த அந்த மாபெரும் கிருபையை எண்ணி, தங்களது சுரமண்டலங்களைப் பிடித்து, இன்னும் உயர்ந்த குரலில் பாடினார்கள். இயேசுவின் தியாகத்தையும் அவரது தன்னலமற்ற தன்மையையும் நினைத்து, புகழ்ச்சியும் துதியும் பெருக்கெடுத்தோடியது. இயேசு தமது பிதாவின் மடியைவிட்டு வேதனையும் கடுந்துயரம் நிறைந்த வாழ்க்கையைத் தெரிந்துகொண்டு, மற்றவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பதற்காக, இழிவான மரணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியதாயிற்று. (5)

இயேசுவிற்குத் தொண்டுசெய்யும்படி தேவ தூதர்களுக்கு வேலை நியமிக்கப்பட்டது. அவர்கள் பரத்திற்கு ஏறவும்—இறங்கவும், தேவகுமாரனின் பாடுகளிலே அவருக்கு ஊழியஞ்செய்யவும், ஆறுதலோடு பலப்படுத்தவும் அவர்களுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. அவர்களது கிருபையின் மக்களைச் சுற்றிலும் தொடர்ந்து சூழ்ந்திருக்கும் அந்தகாரத்தினின்றும், தீய தூதர்களிடமிருந்தும் அவர்களைக் காப்பாற்றி பராமரிப்பதும் அவர்களது வேலையாக இருக்கும். விழுந்துபோன அழியப்போகும் மனிதனைக்

காப்பாற்றுவதற்காக, தேவன் தமது பிரமாணத்தை மாற்றுவதோ திருத்துவதோ கூடாதகாரியமென்று நான் கண்டேன். எனவே, மனிதனின் மீறுதலுக்காக தனது நேசக்குமாரன் மரிப்பதை அனுமதித்தார். (6)

மனிதனை விழத்தள்ளியதால், தேவகுமாரனையும் அவரது மகிமையான உயர்ந்த ஸ்தானத்திலிருந்து இறக்கிவிட்டோமென்று சாத்தான் அவனது தூதர்களோடு பெருமகிழ்ச்சியடைந்தான். மேலும், விழுந்துபோன மனிதனின் தன்மையை இயேசு எடுக்கும்பொழுது, அவரை அடக்கியாண்டு, இரட்சிப்பின் திட்டம் நிறைவேறாதபடி தடுத்துப்போடலாமெனவும் தனது தூதர்களிடம் கூறினான். (7)

சாத்தான் ஒரு காலத்தில் மேன்மையான, மகிழ்ச்சி நிறைந்த தூதனாக இருந்தான் என்பது எனக்குக் காட்டப்பட்டது. பின்னர், அவன் இப்பொழுது இருக்கும் நிலையும் காட்டப்பட்டது. அவன் இராஜரீக உடல்வாகினை இன்னமும் கொண்டவனாக இருக்கிறான். விழுந்தபோன தூதனாக இருந்தபடியால், அவனது தோற்றம் மெச்சத்தகுந்ததாயிருந்தது. அவனது முகத்திலே கவலை, துன்பம், துக்கம், பழிவாங்கும் எண்ணம், வெறுப்பு, பொல்லாங்கு, ஏமாற்றம் மற்றும் எல்லாவிதத் தீமைகளும் நிறைந்திருந்தன. ஒரு காலத்தில் அழகாக இருந்த அவனது நெற்றியைக் குறிப்பாக தனிக் கவனத்துடன் நோக்கினேன். அவனது கண்களினின்று ஆரம்பித்த அந்தப் பரந்த நெற்றியானது பின்னோக்கிச் சரிந்து காணப்பட்டது. தீமைக்கு தன்னை அதிகமாக ஒப்புக்கொடுத்துவிட்டதால், அவனது ஒவ்வொரு நற்குணமும் இழிவுபட்டு, ஒவ்வொரு தீய குணமும் மேலோங்கியதை நான் கண்டேன். அவனது கண்கள் சூழ்ச்சியும் தந்திரமும் நிறைந்து, எதையும் ஆழ்ந்து ஊடுருவிப்பார்த்தது. அவனது உடலமைப்பு பெரிதாக இருந்தபோதிலும், அவனது கைகளிலும் முகத்திலும் தசை தளர்ந்து தொங்கிற்று. அவனது இடது கையினால், முகவாய் கட்டையைத் தாங்கியிருப்பதை நான் கண்டேன். ஆழ்ந்து யோசனையில் இருப்பதுபோல காணப்பட்டான். அவனது முகத்திலே காணப்பட்ட புன்னகை என்னை நடுங்கச்செய்தது. அது சாத்தானுக்கே உரிய தந்திரத்தாலும் தீமையாலும் நிறைந்திருந்தது. அவன் தனக்கு இரையாகப் போகிறவரை இன்னாரென்று நிச்சயப்படுத்துமுன்னர் இவ்வாறு புன்னகை செய்வான். அந்த நபரைக் கண்ணியில் அகப்படுத்தியபின்பு, அவனது சிரிப்பு மேலும் பயங்கரமாக உருவெடுக்கும். (8) ★

# 35

# கிறிஸ்துவின் முதலாம்வருகை!

இயேசு மனித சாயலை எடுத்து, மனிதநிலைக்கு தன்னைத் தாழ்த்தி, சாத்தானின் சோதனைகளால் துன்பப்படவேண்டுமென்ற காலத்திற்கு நான் எடுத்துச்செல்லப்பட்டேன். (1)

அவரது பிறப்பு உலக ஆடம்பரமில்லாமலிருந்தது. அவர் ஒரு தொழுவத்திலே பிறந்து, மாட்டுக்கொட்டிலிலே தாலாட்டப்பட்டார். எனினும், மனிதர் அனைவருடைய பிறப்பையும்விட அது மேலானதாக மதிக்கப்பட்டது. கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து, மேய்ப்பர்களுக்கு பரத்தின் தூதர்கள் அறிவித்தார்கள். அவர்களது சாட்சியோடு சேர்ந்து, தேவனுடைய வெளிச்சமும் மகிமையும் துணைசென்றது. பரலோகக் கூட்டம், தங்களது சுரமண்டலங்களை எடுத்து தேவனை மகிமைப் படுத்தினார்கள். விழுந்துபோன உலகத்தின் மீட்பின் வேலையை முடிப்பதற்காக, தேவகுமாரனின் வருகையை வெற்றியோடு முழக்கினார்கள். அவரது மரணத்தினால், மனிதனுக்கு சமாதானமும் மகிழ்ச்சியும் நித்திய ஜீவனும் வரவேண்டியதிருந்தது. தேவன் தமது குமாரனின் வருகையை மேன்மைப்படுத்தினார். தூதர்கள் அவரைத் தொழுதுகொண்டார்கள். (2)

அவரது ஞானஸ்நானக் காட்சியின்போது, தூதர்கள் வானிலே பரவி நின்றார்கள். பரிசுத்த ஆவி புறாவைப் போலிறங்கி அவர்மீது பிரகாசித்தார். அங்கு நின்ற மக்கள் வியப்படைந்து, அவரையே நோக்கி நின்றார்கள். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று பரத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. (3)

யோர்தானில் தன்னிடத்தில் ஞானஸ்நானம் எடுக்க வந்திருப்பவர் உலகின் மீட்பர் என்பது யோவானுக்கு நிச்சயமாகத் தெரியாது. தேவ ஆட்டுக்குட்டியை அறிந்துகொள்ளும்படியாக, ஒரு அடையாளத்தை தேவன் அவருக்கு வாக்குத்தத்தம்பண்ணியிருந்தார். பரலோகத்திலிருந்து புறா இயேசுவின்மேல் அமர்ந்ததும் அவரைச் சுற்றிலும் தேவமகிமை பிரகாசித்ததுமே கொடுக்கப்பட்ட அந்த அடையாளமாக இருந்தது. யோவான்

தனது கரங்களை இயேசுவை நோக்கிக் காட்டி, உரத்த சத்தமாக: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான். (4)

இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா—உலகத்தின் இரட்சகரென்று யோவான் தனது சீஷர்களுக்கு அறிவித்திருந்தான். தனது வேலை முடிவடையுந்தருவாயில் அவரை நோக்கிப் பார்க்கவேண்டும் என்றும், அவரே மாபெரும் போதகரென்று பின்பற்றப்படவேண்டுமென்றும், தனது சீஷர்களுக்குப் போதித்திருந்தான். யோவானின் வாழ்க்கை, துக்கம் நிறைந்ததாயும் தன்னலமற்றதாயும் இருந்தது. அவன் இயேசுவின் முதலாம் வருகையைக் கூறியறிவித்தான். ஆனால், அவருடைய அற்புதங்களைக் காணும்படியாகவும், அவரால் வெளிப்படுத்தப்படும் வல்லமைகளைக் கண்டு மகிழ்ச்சியடையும்படியாகவும் அனுமதிக்கப்படவில்லை. இயேசுதாமே ஒரு போதகராக நியமனம் பெறும்போது, தான் மரிக்கவேண்டுமென்பதையும் யோவான் நிச்சயமாக அறிந்திருந்தான். வனாந்தரத்தைத்தவிர அவனது குரல் வேறு எங்கும் கேட்கப்படவில்லை. அவனது வாழ்க்கை தனிமை நிறைந்ததாயிருந்தது. தனது தகப்பன் குடும்பத்தாரோடு சேர்ந்து அந்த வாழ்க்கையை அனுபவிக்க அவர்களோடு ஒட்டிக்கொண்டிருக்க வில்லை. தன்னுடைய வாழ்க்கையின் இலட்சிய வேலையை முடிப்பதற்காக, அவர்களைவிட்டுப் பிரிந்துசென்றான். இந்த அதிசயமான தீர்க்கதரிசியின் வார்த்தைகளைக் கேட்பதற்காக பரபரப்பான வாழ்க்கை நிறைந்த பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் திரளான மக்கள் வனாந்திரத்தில் கூடி வந்தார்கள். யோவான் மரத்தின் வேரருகே கோடரியை வைத்தான். பாவத்தைக் கண்டித்து—அதனால் வரும் விளைவுகளுக்கு அஞ்சாமல், தேவ ஆட்டுக்குட்டிக்கு வழியை ஆயத்தம்பண்ணினான். (5)

யோவானின் வல்லமையுள்ள குறிப்பிட்ட சாட்சிகளைக் கேட்ட ஏரோது பயமடைந்து, ஆழ்ந்த அக்கறையோடு யோவானின் சீஷனாவதற்கு தான் என்ன செய்யவேண்டுமென்று வினவினான். ஏரோது தனது அண்ணன் உயிரோடிருக்கும்பொழுது, அவனது மனைவியை விவாகம்பண்ணப்போகும் சமயத்தில், யோவான் ஏரோதை நோக்கி, இது சட்டப்படி சரியல்ல என்று அவனுக்கு உண்மையோடும் உத்தமத்தோடும் தெரிவித்தான். எந்தவிதமான தியாகத்தையும் செய்வதற்கு ஏரோதிற்கு மனதில்லை. அவன் தனது அண்ணன் மனைவியை மணந்துகொண்டு, அவளுடைய செல்வாக்கின்மூலமாக யோவானைச் சிறையிலிட்டான். எனினும், விடுதலையாக்க மனதாயிருந்தான். யோவான் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும்பொழுது, தன்னுடைய சீஷர்கள்மூலமாக இயேசுவின் வல்லமை நிறைந்த அற்புதங்களைப்பற்றிக் கேள்விப்பட்டான். இயேசுவின் கிருபை நிறைந்த வார்த்தைகளை

அவனால் கேட்கமுடியவில்லை. ஆனால், அவனுடைய சீஷர்கள் தாங்கள் கேட்டவைகளை யோவானுக்கு அறிவித்து, அவனைத் திடப்படுத்தினார்கள். வெகு சீக்கிரத்தில் ஏரோதுடைய மனைவியின் தூண்டுதலால், யோவானின் தலை துண்டிக்கப்பட்டது. இயேசுவைப் பின்பற்றின தாழ்மையுள்ள சீஷர்கள், அவரது அற்புதங்களைக் கண்டு, அவருடைய வாயினின்று வந்த ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டு வந்த இயேசுவின் சீஷர்கள் யோவான் ஸ்நானகனைவிட மேம்பட்டவர்களாக இருந்தார்கள். அதாவது, அவர்கள் உயர்த்தப்பட்டு மேன்மையாக மதிக்கப்பட்டு, வாழ்க்கையின் மகிழ்ச்சிகளை அனுபவித்துக்கொண்டுவந்தார்கள். (6)

இயேசுவின் முதலாம் வருகையைப் பிரசித்தம்பண்ணுவதற்காக யோவான் எலியாவின் வல்லமையோடும் ஆவியோடும் வந்தான். இயேசுவின் இரண்டாம் வருகையைப்பற்றிக்கூறி, உக்கிர கோபத்தின் நாளை பிரசித்தம்பண்ணுவதற்காக, எலியாவின் வல்லமையோடும் ஆவியோடும் புறப்பட்டுப்போகிறவர்களுக்கு யோவான் சிறந்த எடுத்துக்காட்டாக கடைசிக்காலத்தில் வைக்கப்படுவான் என்பது எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. (8)

இயேசு யோர்தானில் ஞானஸ்நானம்பெற்றபிறகு, சாத்தானால் சோதிக்கப்படும்படி, ஆவியினால் வனாந்திரத்திற்கு வழிநடத்தப்பட்டார். அந்த விசேஷமான கொடிய சோதனைக் காலத்திற்கு, பரிசுத்த ஆவியானவர் அவரை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். நாற்பது நாட்கள் சாத்தானால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் உணவு உண்ணவில்லை. விரும்பத்தகாதவைகளே அவரைச் சுற்றிலும் இருந்தன. அந்த இடத்தில் மானுடமானது திகைத்து ஒதுங்கும்படி வழிநடத்தப்படும் பாழான, தனித்த இடத்திலே காட்டு மிருகங்களோடும் சாத்தானோடும் இருந்தார். உபவாசத்தினாலும் துன்பத்தினாலும், தேவகுமாரன் வெளுத்து மெலிந்து காணப்பட்டார். ஆனால் அவரது வழி குறிக்கப்பட்டுவிட்டது. அவர் செய்ய வந்த வேலையை நிறைவேற்றியாகவேண்டும். (9)

இயேசு மனிதனின் நிலைக்கு தன்னைத் தாழ்த்திக் கொண்டதினால் தேவகுமாரனின் பாடுகளைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, பலதரப்பட்ட சோதனைகளால் அவரை வதைத்து, அவர்மேல் வெற்றிகொள்வோம் என சாத்தான் நம்பினான். “நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்” என்ற சோதனையோடு அவரிடத்தில் வந்தான். தமது தெய்வீக வல்லமையை உபயோகப்படுத்தி, தான் மேசியா என்பதற்குரிய அத்தாட்சியை பணிந்து கூறும்படியாக இயேசுவைச் சோதித்தான். அதற்கு இயேசு: “மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல,

தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே” என்று சாந்தமாகப் பதில்கொடுத்தார். (10)

இயேசு தேவனுடைய குமாரன் என்ற விஷயம்பற்றி அவரிடம் வாதாட வகைதேடினான். அவருடைய பெலவீனமான, துன்பம் நிறைந்த நிலையைச் சுட்டிக்காட்டி, இயேசுவைவிட தான் பலவான் என்பதை உறுதியாகக் கூறி பெருமையடித்துக்கொண்டான். “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்ற வார்த்தைகள் பரத்தினின்று கூறப்பட்டன. இயேசுவிற்கு அவரது பாடுகளைத் தாங்கும் சக்தியைக் கொடுக்க அந்த வார்த்தைகள் போதுமானதாக இருந்தன. சாத்தானுக்கு தமது வல்லமையைப் பற்றி உறுதிப்படுத்தவோ அல்லது தாம்தான் உலகின் மீட்பர் என்பதுபற்றிச் சொல்லவோ அவருக்கு அவசியமில்லாதிருந்தது என்பதை நான் கண்டேன். தேவகுமாரனின் உயர்ந்த நிலைபற்றியும் அதிகாரம்பற்றியும் அறிந்துகொள்ள, சாத்தானுக்கு வேண்டிய ஆதாரங்கள் இருந்தன. **கிறிஸ்துவின் அதிகாரத்திற்குப் பணியமறுத்த செயலே சாத்தானை பரத்திலிருந்த வெளியே தள்ளிற்று.** (11)

சாத்தான் தனது வல்லமையை வெளிப்படுத்துவதற்காக, இயேசுவை எருசலேமிற்குத் தூக்கிச் சென்றான். அங்கு தேவாலயத்தின் உப்பரிக்கையின்மேல் நிறுத்தி, தலையைக் கிறுகிறுக்கவைக்கும் அந்த உயரத்தினின்று கீழே குதித்து தான் தேவகுமாரன்தான் என்ற ஆதாரத்தைக் கொடுக்கும்படி அவரைச் சோதித்தான். ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகளைக்கொண்டு அவரை நோக்கி: “ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது” என்று சொன்னான். இயேசு சாத்தானை நோக்கி: “உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே” என்றார். கிறிஸ்து தமது பிதாவின் இரக்கத்திலே துணிவுகொண்டு, தமது வாழ்வின் இலட்சியத்தை நிறைவேற்றுமுன்பாக, தமது உயிரை அபாயநிலைக்கு ஆளாக்க முற்பட்டுவிடுவார் என்று சாத்தான் விரும்பினான். ஆனால், சாத்தானால் கெடுக்கப்படவோ அல்லது தொலைத்துப்போடவோ முடியாத அளவிற்குத் திட்டம் மிக ஆழமாகப் போடப்பட்டிருந்தது. (12)

அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்துவே முன்மாதிரி. அவர்கள் சோதிக்கப்படும்போது, அவர்களது உரிமைகள் வாதாட்டத்தில் இருக்கும்பொழுது, அதைப் பொறுமையாக சகித்துக்கொள்ளவேண்டும்.

ஆண்டவரிடம் ஜெபித்து, அவரது வல்லமையை வெளிப்படுத்தி அதன்மூலம் அவர்களது விரோதிகள் மேல் வெற்றிகொள்ளவேண்டும் என்ற காரியத்தில் இவ்வாறு தேவனும் மகிமைப்படுத்தப்பட்டு நேரடியாக கனப்படுத்தப்படவேண்டுமென்று அவர்கள் நினைக்கக்கூடாது. இயேசு தேவாலயத்து உப்பரிக்கையின் மீதிருந்து குதித்திருப்பாரானால், அது அவரது பிதாவை மகிமைப்படுத்தியிருக்க முடியாது. சாத்தானும் தேவதூதர்களும் தவிர வேறு யாரும் அதைப் பார்த்திருக்கமுடியாது. அது தமது பயங்கரமான விரோதியிடம் தனது வல்லமையை வெளிப்படுத்தும்படி தேவனைச் சோதிப்பதாகும். யாரை இயேசு வெற்றிகொள்ள வந்தாரோ அவனிடமே பணிவதுபோலிக்கும்! (13)

“பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து: இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும்” என்றான். “எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறதே” என்றார். (14)

சாத்தான் உலக இராஜ்யங்களை அதன் கவர்ச்சியான வெளிச்சத்திலே இயேசுவின் முன்பாக வைத்தான். இயேசு அவனைத் தொழுதுகொள்ளுவாரானால், இந்த உலகத்தை சொந்தமாக்கிக்கெள்ளும் உரிமைகளை விட்டுக்கொடுப்பதாக சாத்தான் தனது கோரிக்கையை வைத்தான். இரட்சிப்பின் திட்டம் நிறைவேறவேண்டுமானால் இயேசு மனிதனை மீட்க நிச்சயமாக மரிக்கவேண்டும். சாத்தானின் வல்லமை குறைக்கப்பட்டு, முற்றிலுமாக அவனைவிட்டு எடுக்கப்பட்டு, முடிவிலே அழிந்துபோவான் என்பது அவனுக்குத் தெரியும். எனவே, தேவகுமாரனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாபெரும் வேலையை, முடியுமானால் தடுக்கவேண்டுமென்பது அவன் ஆராய்ச்சிசெய்த திட்டமாகும். மனிதனை மீட்கும் திட்டம் தோற்றுப்போகுமானால் சாத்தான் உரிமைகொண்டாடிய இந்த உலக இராஜ்யத்தை அவனே வைத்துக்கொள்வான். அவன் வெற்றிபெறுவானானால், பரத்தின் தேவனுக்கு எதிராக தான் ஆட்சிசெய்யப்போவதாக அளவிற்குமீறி தற்புகழ்ச்சியாகப் பெருமைப்பட்டுக்கொண்டான். (15)

இயேசு வல்லமையையும் மகிமையையும் ஒதுக்கிவைத்துவிட்டு பரத்திலிருந்த வந்தபோது சாத்தான் எக்களித்தான். தன்னுடைய

அதிகாரத்திற்குள் தேவகுமாரன் வைக்கப்பட்டார் என்று எண்ணினான். சாத்தான் வெகு இலகுவாக ஏதேனின் பரிசுத்த தம்பதிகளை சோதனைக் குள்ளாக்கிவிட்டான். எனவே, தனது வல்லமையாலும் தந்திரத்தாலும், தேவகுமாரனையும் மேற்கொண்டுவிடலாம் என்று நம்பினான். இவ்வாறு, தனது ஜீவியத்தையும், இராஜ்யத்தையும் காப்பாற்றிக்கொள்ள யோசித்தான். அவரைச் சோதித்து பிதாவின் சித்தத்தினின்று அவரை நழுவச்செய்யக்கூடுமானால், அவனுடைய நோக்கம் வெற்றிபெறும். ஆனால் “அப்பாலே போ சாத்தானே” என்ற கடிந்துகொள்ளுதலோடு இயேசு சோதனைக்காரனைச் சந்தித்தார். அவர் தமது பிதாவிற்குமட்டுமே பணிவார். இந்த பூமியின் இராஜ்யம் தனதென்று சாத்தான் உரிமைபாராட்டி, இயேசுவுக்கு அவரது துன்பங்களினின்றெல்லாம் விடுதலை கிடைக்குமென்றும், அவர் மரிக்க அவசியமில்லையென்றும், தன்னை மாத்திரம் பணிந்துகொள்வாரானால், உலகத்தின் பொக்கிஷங்கள் எல்லாவற்றையும் அதன்மேல் ஆட்சிசெய்கிற மகிமையையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நயமான வார்த்தைகளைப் பேசினான். ஆனால் இயேசு தனது திட்டத்தில் உறுதியாக நின்றார். அவர் தமது சொந்த இரத்தத்தாலே சாத்தானிடமிருந்து இராஜ்யத்தை மீட்டுக்கொள்ளும் நேரம் வரவேண்டும் என்பதையும், அதன்பிறகு சிறிது காலம் சென்று பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள அனைவரும் அவருக்கு அடிபணிவார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். நித்திய சுதந்திரவீதமாக தன் கையில் கொடுக்கப்படும் பூலோக இராஜ்யங்களின் சட்டப்படியான சுதந்தரவாளியாகத்தக்கதாக, தேவனால் தனக்கு நியமித்த வழியின்படியே பாடுள்ள வாழ்க்கையையும், பயங்கரமான மரணத்தையும் தெரிந்துகொண்டார். இனி ஒருக்காலும் மகிமையிலிருக்கும் இயேசுவையோ அல்லது அவரது பரிசுத்தவான்களையோ துன்புறுத்தாமலிருக்க, மரணத்தால் அழிக்கப்படும்படி சாத்தானும் அவருடைய கையில் ஒப்புக்கொடுக்கப்படுவான். (16) ★

# 36

# கிறிஸ்துவின் ஊழியம்!

**சா**த்தான் தனது சோதனைகளையெல்லாம் முடித்தபின்பு, கொஞ்சக் காலம் இயேசுவைவிட்டுச் சென்றான். வனாந்தரத்திலே தேவதூதர்கள் அவருக்கு ஆகாரத்தை ஆயத்தப்படுத்தி அவரைப் பலப்படுத்தினார்கள். அவருடைய பிதாவின் ஆசீர்வாதம் அவர்மீது தங்கியிருந்தது. தனது பயங்கரமான சோதனைகளில் சாத்தான் தோற்றுப்போய்விட்டான்; ஆனாலும், பல சமயங்களில் அவனுடைய தந்திரத்தை அவருக்கு விரோதமாக உபயோகிப்பதற்காக, அவருடைய ஊழியத்தின் காலத்தை நோக்கிக்கொண்டிருந்தான். இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களோடு சேர்ந்து, அவரை வெறுத்து அழித்துப்போட முயன்று, அவருக்கு எதிராகக் கிளர்ச்சியுண்டுபண்ண வகைதேடினான். சாத்தான் தனது தூதர்களோடு ஒரு விசேஷ ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினான். தேவகுமாரனுக்கு விரோதமாக தாங்கள் ஒன்றும் செய்யமுடியவில்லையென்று அவர்கள் கோபங்கொண்டு ஏமாற்றமடைந்தார்கள். அவருடைய சொந்த மக்களிடத்திலே, அவர் உலகத்தின் மீட்பரல்ல என்ற அவிசுவாசத்தை உண்டாக்கி, அவர்கள் மனதை மாற்ற தங்களது வல்லமையை மிக அதிகமாக உபயோகித்து, அதிகத் தந்திரமாக வேலைசெய்யத் தீர்மானித்தார்கள். இந்த வகையில், அவரது ஊழியத்தின் நோக்கத்தை அதைரியப்படுத்தலாமென எண்ணினார்கள். யூதர்கள் தங்களது பலிகளிலும் காணிக்கைகளிலும் எவ்வளவு உண்மையாக இருந்தபோதிலும், தீர்க்கதரிசனங்களைக்குறித்து அவர்களது கண்களைக் குருடாக்கிப்போட்டு, மேசியாவானவர் உலக மகா அரசனாக வரவேண்டுமென்ற எண்ணத்தை நம்பும்படிச் செய்துவிட்டால், நிச்சயமாக மக்கள் இயேசுவை நிந்தித்து, வெறுக்க வழிநடத்தப்படுவார்கள் என்று சாத்தானும் அவனது தூதர்களும் எண்ணினார்கள். (1)

கிறிஸ்துவின் ஊழியக் காலத்திலே சாத்தானும் அவனது தூதர்களும் மக்களைத் தூண்டிவிட்டு ஏளனமும், வெறுப்பும், அவிசுவாசமும் நிறையும்படி சுறுசுறுப்பாக இயங்கினார்கள் என்பது எனக்குக் காட்டப்பட்டது. ஊடுருவக்கூடிய சத்தியங்களைக் கூறி, அவர்களுடைய பாவங்களை

இயேசு கண்டித்தபோது, மக்கள் மூர்க்கங்கொண்டார்கள். தேவகுமாரனைக் கொலைசெய்யும்படியாக, சாத்தானும் அவனுடைய தூதர்களும் அவர்களை வற்புறுத்தினார்கள். ஒரு தடவைக்கும்மேலாக கற்களை எடுத்து அவர்மீது வீச முற்படும் போது, தூதர்கள் அவரைக் காப்பாற்றி, அந்த மூர்க்கவெறிகொண்ட மக்கள் மத்தியினின்று, பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுசென்றார்கள். மறுபடியும் தெளிவான சத்தியம் அவருடைய நாவுகளிலிருந்து புறப்பட்டபோது, மக்கள் கூட்டம் அவரைப்பிடித்து மலையின் உச்சிக்குக் கொண்டுசென்று, அங்கிருந்து தள்ளிவிட எண்ணியது. அங்கு சென்றபின், அவரை என்ன செய்ய வேண்டுமென்ற தர்க்கம் அவர்களுக்குள் ஏற்பட்டது. அப்பொழுது தூதர்கள் இயேசுவை மறுபடியும் அவர்களது பார்வையிலிருந்து மறைத்துப்போடவே, அவர் அந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் நடந்து அவரது வழியே சென்றார். (2)

சாத்தான் இந்த மாபெரும் இரட்சிப்பின் திட்டம் தோற்றுப் போகுமென்று தொடர்ந்து நம்பினான். அவன் தனது வல்லமையையெல்லாம் உபயோகித்து, மக்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, அவர்களுடைய எண்ணங்களை இயேசுவிற்கு விரோதமாகக் கசப்பாகினான். ஒரு சிலரே அவரை தேவகுமாரனென்று விசுவாசிப்பார்களென்றும், அவரது பாடுகளும் பலியும் ஒரு சிறு கூட்டத்திற்கு மிக அதிகமெனக் கருதுவாரென்றும் அவன் எண்ணினான். **இயேசுவை தேவகுமாரனென்று இரண்டுபேர் ஏற்றுக் கொண்டு, தங்களது ஆத்தும இரட்சிப்பிற்காக அவரில் விசுவாசம் வைத்திருந்தாலுங்கூட, அவர் தமது இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றியிருப்பார் என்பதை நான் கண்டேன்.** (3)

துன்பத்தின்மேலிருக்கும் சாத்தானின் வல்லமையை உடைக்கத்தக்கதாக இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்தார். வியாதியஸ்தரைக் குணப்படுத்தினார். குருடருக்குப் பார்வையளித்தார். முடமானவர்களைக் குணமாக்கி, மகிழ்ச்சியோடே குதித்து தேவனை மகிமைப்படுத்தும்படிச் செய்தார். தளர்ச்சியுற்று சாத்தானின் கொடிய வல்லமையினால் பல ஆண்டுகாலமாய் நோயினால் பீடிக்கப்பட்டவர்களைக் குணமாக்கினார். கருணை நிறைந்த வார்த்தைகளால் பெலவீனருக்கு ஆறுதல் கூறினார். நடுக்கத்தில் இருந்தவர்களும் நம்பிக்கையற்றவர்களும் அவரால் தேற்றப்பட்டார்கள். சாத்தான் வெற்றியோடு தன் கையில் வைத்திருந்த, பெலவீனரையும் துன்பம் அனுபவிப்போரையும், அவனுடைய பிடியினின்று விடுவித்து, அவர்களுக்கு திடமான உடலையும், மகிழ்ச்சியையும், பேரானந்தத்தையும் அருளினார். மரித்தோரை உயிரோடெழுப்பினார். அவருடைய வல்லமையான செயலைக் கண்டு அவர்கள் தேவனை

மகிமைப்படுத்தினார்கள். அவரில் விசுவாசம் வைத்தோருக்கு மகத்தான வல்லமையோடு கிரியைசெய்தார். (4)

கிறிஸ்துவின் ஜீவியமானது நற்கிரியைகளாலும், பரிவான, அன்பான வார்த்தைகளாலும் செய்கைகளாலும் நிறைந்திருந்தது. தம்மிடம் வந்தவர்களுடைய துன்பத்தைப் போக்குவதற்கும், அதைக் கவனித்துக் கேட்பதற்கும் எப்பொழுதும் அக்கறையோடிருந்தார். திரளான மக்கள் அவரது தெய்வீக வல்லமையின் ஆதாரத்தை, தங்களது உடலில் சுமந்துசென்றார்கள். தங்களுக்கு வேலை முடிவடைந்த பின்னரோ அந்தத் தாழ்மையுள்ள ஆனால், வல்லமையான போதகரைப்பற்றி வெட்கப்பட்டார்கள்; ஏனெனில், அதிகாரிகள் அவரை விசுவாசிக்கவில்லை; மக்களும் அவரை ஏற்றுக்கொள்ள மனதாயில்லை. அவர் துன்பம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாய் இருந்தார். அவருடைய அமைதியாலும் தன்னடக்கத்தாலும் தாங்கள் ஆட்கொள்ளப்படுவதை அவர்களால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. உலகம் கொடுக்கும் மேன்மையை அவர்கள் அனுபவிக்க விரும்பினார்கள்; எனினும், அநேகர் தேவகுமாரனைப் பின்பற்றி, அவரது வார்த்தைகளுக்குச் செவிமடுத்தார்கள். கிருபையாக அவரது வாயினின்று விழுந்த வார்த்தைகளை இரசித்து விரும்பி ஏற்றுக்கொண்டார்கள். அவருடைய வார்த்தைகள் அர்த்தம் நிறைந்தவைகளாக இருந்தன; அவை மிகவும் தெளிவாக இருந்ததால், படிப்பறிவில்லாதவர்களும் விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தன. (5)

சாத்தானும் அவனது தூதர்களும் யூதர்களின் மனதையும் கண்களையும், குருடாக்கி, அவர்களது விளங்கிக்கொள்ளும் தன்மையை இருளில் மூழ்கச் செய்தார்கள். மீட்பரைக் கொலைசெய்வதற்காக மக்களில் முதன்மையானவர்களையும், அதிகாரிகளையும் எழுப்பிவிட்டார்கள். தங்களிடம் இயேசுவைக் கொண்டுவரும்படி மற்றவர்களை அனுப்பிவிட்டார்கள்; ஆனால், அவர் இருந்த இடத்திற்கு அவர்கள் வந்தபொழுது, மிகுந்த வியப்பிற்குள்ளானார்கள். மனிதர்களின் துன்பங்ளைக் கண்டமாத்திரத்தில், பரிவும் இரக்கமும் நிறைந்தவராக அவரைக் கண்டார்கள். பெலவீனரிடத்தும், துன்பம் அனுபவிப்போரிடத்தும் அன்போடும் அனுதாபத்தோடும் தைரியமூட்டும்வண்ணம் அவர் பேசுவதைக் கேட்டார்கள். வல்லமையோடும் அதிகாரத்தோடும் சாத்தானைக் கடிந்துகொள்வதை அவர்கள் கேட்டார்கள். அவனால் சிறைப்படுத்தப்பட்டவர்களை அவர் விடுதலைசெய்தார். அவரது வாயினின்று வந்த ஞானமுள்ள வார்த்தைகளைக்கேட்டு, கவர்ச்சிக்கப்பட்டார்கள். அவர்மீது அவர்களது கைகளைப் போடக்கூடாமற்போயிற்று. ஆசாரியர்களிடத்தும் மூப்பர்களிடத்தும் திரும்பிச்செல்லும்போது, இயேசுவை அழைத்துச்செல்லவில்லை. "ஏன்

அவரைக் கொண்டுவரவில்லையெனக் கேட்டபோது”, அவர்கள் கண்ட அவரது அற்புதங்களையும், அவர்கள் கேட்ட மிகுந்த அறிவுள்ள—ஞானமுள்ள—அன்பான அவரது வார்த்தைகளையுங்கூறி, “ஒருக்காலும் ஒருமனிதனும் இவரைப்போல் பேசியதில்லையென” பதிலுரைத்தார்கள்; ஆனால், பிரதான ஆசாரியர்களோவெனில், போய்வந்த நீங்களும் ஏமாற்றப்பட்டீர்களோவென குற்றஞ்சாட்டினார்கள். இயேசுவைப் பிடித்துவராததினால், சில அதிகாரிகள் வெட்கமடைந்தார்கள். ஆசாரியர்கள் அவர்களை ஏளனமாக நோக்கி, இன்னும் ஏதாவது அதிகாரிகளும் நம்பிக்கை வைத்துவிட்டார்களோ என்று வினவினார்கள்; ஆனால், அநேக நியாயாதிபதிகளும் மூப்பர்களும், அவரில் நம்பிக்கைவைத்ததை நான் கண்டேன். அதை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளாதபடி, சாத்தான் அவர்களை வைத்திருந்தான். கடவுளுக்கு பயப்படுவதைக்காட்டிலும் மக்களின் பழிச்சொல்லுக்கு மிகவும் பயந்தார்கள். (6)

இதுவரை சாத்தானின் தந்திரமும் வெறுப்பும் இரட்சிப்பின் திட்டத்தை உடைத்துப்போட முடியவில்லை. இயேசு இந்த உலகத்திற்கு வந்ததற்கான நோக்கம் நிறைவேறுவதற்கான காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. அவரது சொந்த மக்களைக்கொண்டே அவர்மீது பரிகாசத்தையும் கொடுமையையும் குவித்து, அவரது இரத்தத்திற்காக தீவிரமாகக் கூச்சலிடும்படிச் செய்யவேண்டுமென்று சாத்தானும் அவனது தூதர்களும் ஒன்றாகக்கூடி ஆலோசித்துத் தீர்மானித்தார்கள். இயேசு தன்னை இந்தவிதமாக அவர்கள் நடத்துவதை ஆட்சேபித்து, தமது தாழ்மையையும் சாந்தத்தையும் காத்துக்கொள்வதில் தோல்வியடைந்துவிடுவார் என நம்பினார்கள். (7)

சாத்தான் தனது திட்டங்களைத் தீட்டும்போது, இயேசு கவனமாக, தான் கடந்துசெல்லவேண்டிய பாடுகளைப்பற்றி அவருடைய சீஷர்களுக்குத் தெரிவிக்க ஆரம்பித்தார். தாம் சிலுவையிலறையப்படப்போவதாகவும், மூன்றாம் நாள் உயிர்த்தெழவிருப்பதாகவும் கூறினார். அவர்களது புரிந்து கொள்ளும் திறன் மந்தமாக இருந்ததால், அவர் சொன்னதை அவர்களால் விளங்கிக்கொள்ளக் கூடாமற்போயிற்று. (8) ★

# 37

# மறுரூபமாகுதல்!

கிறிஸ்து மறுரூபமாகும்பொழுது, அவரது மகிமையைக் காணும்படியாக சீஷர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பரத்திலிருந்து அவரது தெய்வீகக் குணத்தைப்பற்றிய உறுதிவாக்கினைக் கேட்டார்கள்; இதனால், சீஷர்களின் விசுவாசமானது அதிகமாகப் பெலப்பட்டது. தமது சிலுவை மரணத்தின்போது, சீஷர்கள் தங்களது கடுந்துயரத்தினாலும், ஏமாற்றத்தினாலும் தங்களது நம்பிக்கையை முற்றிலும் இழந்துபோய்விடக்கூடாதென்று, தமது பின்னடியார்களுக்கு, தாமே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா என்பதைக்குறித்து உறுதியான ஆதாரத்தைக் கொடுக்க எண்ணங்கொண்டார். மறுரூபமாகும்போது இயேசுவின் பாடு, மரணம் முதலியவற்றைக் குறித்துப் பேசுவதற்காக மோசேயையும் எலியாவையும் தேவன் அனுப்பினார். தமது குமாரனிடம் பேசுவதற்கு தூதர்களைத் தெரிந்துகொள்ளாமல், யார் தாங்களும் பூமியில் துன்பங்களை அனுபவித்தார்களோ அவர்களையே தெரிந்துக்கொண்டார். (1)

எலியா தேவனோடு நடந்தான். அவன்மூலமாக தேவன் இஸ்ரவேலின் பாவங்களைக் கண்டித்து உணர்த்தியதால் அவனுடைய வேலை, மிகுந்த துன்பங்களும் வேதனைகளும் நிறைந்ததாக இருந்தது. எலியா தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி; எனினும், தனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இடம்விட்டு இடம் ஓடவேண்டியதாயிருந்தது. அவனது சொந்த ஜாதியினரே அவனை ஒரு காட்டு மிருகத்தைப்போல வேட்டையாடி ஒழித்துவிடும்படியாக நினைத்தார்கள்; ஆனால், தேவன் எலியாவை மறுரூபமாக்கினார். தேவதூதர்கள் அவரை மகிமையோடும் வெற்றியோடும் பரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். (2)

இதற்குமுன் வாழ்ந்த எல்லோரையும்விட, மோசே மேம்பட்டவனாக இருந்தான். அவன் தேவனால் அதிகமாக மதிக்கப்பட்டவனாக இருந்தான். ஒரு மனிதன் தனது சிநேகிதனிடத்தில் பேசுவதுபோல, அவன் தேவனோடு முகமுகமாகப் பேசும் பேறுபெற்றிருந்தான். பிதாவை மூடியிருந்த பிரகாசமான வெளிச்சத்தையும், உன்னதமான மகிமையையும் பார்க்க

அனுமதிக்கப்பட்டான். மோசேயின்மூலமாக இஸ்ரவேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுதலைசெய்தார். மோசே மக்களுக்கும் தேவ கோபாக்கினைக்கும் மத்தியில் நின்று, அடிக்கடி இடைப்பட்டு தனது மக்களுக்காக மத்தியஸ்தராக இருந்தார். இஸ்ரவேலரின் அவிசுவாசம், அவர்களது முறுமுறுப்பு, அவர்களது கொடிய பாவங்களினிமித்தம் தேவ கோபாக்கினை இஸ்ரவேலுக்கு விரோதமாக கொதித்தெழுந்தபோது, அவர்களுக்காக மோசேகொண்டிருந்த அன்பு சோதிக்கப்பட்டது. அந்த மக்களை அழித்துவிட்டு, மோசேயை பெரிய ஜாதியாக்குவேன் என்று எடுத்துரைத்தார்; ஆனால், இஸ்ரவேலருக்காக மிகுந்த உருக்கமாகப் பரிந்துபேசி, இஸ்ரவேலருக்காக அவன் கொண்டிருந்த அன்பைக் காட்டினான். தனது துக்கத்திலே அவர் தமது கடுங்கோபத்தை மாற்றி, இஸ்ரவேலை மன்னிக்கும்படியாக தேவனிடம் ஜெபித்தான்; அல்லது தனது பெயரை ஜீவ புஸ்தகத்தினின்று கிறுக்கிப்போடும்படியாக வேண்டினான். (3)

இஸ்ரவேலருக்கு தண்ணீர் கிடைக்காமலிருந்தபோது, தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் கொன்றுபோடுவதற்காகவா இவ்வளவு தூரம் வழிநடத்தினார்கள் என்று மோசேக்கு விரோதமாகவும் தேவனுக்கு விரோதமாகவும் குற்றஞ்சாட்டி முறுமுறுத்தார்கள். தேவன் அவர்களது முறுமுறுப்பைக்கேட்டு, மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்படியாக—மலையினிடத்தில் பேசும்படியாக மோசேக்கு கட்டளையிட்டார். மோசே கோபத்திலே மலையை அடித்து, மகிமையைத் தனக்கு எடுத்துக்கொண்டான். இஸ்ரவேல் புத்திரரின் தொடர்ந்து வழிவிலகிப்போகும் தன்மையும் முறுமுறுப்பும், அவனுக்கு மிகுந்த துக்கத்தை உண்டாக்கியது. தேவன்கூட அவர்கள் காரியத்தில் எவ்வளவு அதிகமாக பொறுத்திருந்தார் என்பதையும், அவர்கள் முறுமுறுப்பது தனக்கு விரோதமாக அல்ல, கடவுளுக்கு விரோதமாகத்தான் என்பதையும் சற்றுநேரம் மறந்துவிட்டான். தனக்கு எவ்வளவு அதிகமாகத் தீங்குசெய்துவிட்டார்களென்று தன்னைப்பற்றிமாத்திரமே நினைத்தான். தான் அவர்களை எவ்வளவு ஆழமாக நேசித்தபோதிலும், அவர்களது நன்றிகெட்ட செய்கையைக்குறித்து வருந்தினான். (4)

தேவன் தமது மக்களை அடிக்கடி இடுக்கமான வழிகளில் கொண்டு வைத்து, பின்பு அவர்களது தேவையிலே, தமது வல்லமையினால் விடுதலைசெய்யவேண்டுமென்பது அவரது திட்டம்; எனவே, இதன்மூலம் தங்கள்மேல் அவர் கொண்ட அன்பையும் அக்கறையையும் எண்ணிப்பார்த்து, அவரைக் கனப்படுத்தி சேவிப்பார்கள். மக்கள் தேவனை மகிமைப்படுத்தும்படியாக, மோசே அவர்களுக்கு முன்பாக, தேவனை மகிமைப்படுத்தி அவருடைய நாமத்தை மேன்மைப்படுத்தத் தவறிவிட்டான்;

இந்தக் காரியத்தில் தேவ கோபத்தைத் தன்மேல் வருவித்துக்கொண்டான். (5)

இரண்டு கற்பலகைகளையும் எடுத்துக்கொண்டு மோசே மலையினின்று இறங்கிவந்தபொழுது, பொற்கன்றுக்குட்டியை இஸ்ரவேல் மக்கள் வணங்குவதைக் கண்டான்; அதினால் உக்கிர கோபமுண்டவனாகி, கற்பலகைகளை வீசி எறிந்து உடைத்துப்போட்டான். இந்தக் காரியத்தில் மோசே பாவம் செய்யவில்லை என்பதை நான் கண்டேன். தேவனுக்காகக்கொண்ட வைராக்கியத்தினாலே கோபங்கொண்டான். அது அவரது மகிமைக்காக அவன் செய்த காரியமாகும். இருதயத்தின் இயற்கை நினைவுகளுக்கு தன்னை ஒப்படைத்து, தேவனுக்கு செலுத்தப்படவேண்டியதான கனத்தை தனக்காக எடுத்துக்கொண்டதால், அவன் பாவஞ்செய்தான். அந்தப் பாவத்திற்காக, கானான் தேசத்தில் பிரவேசிக்க, தேவன் மோசேக்கு அனுமதிகொடுக்கவில்லை. (6)

தூதர்களுக்கு முன்பாக மோசேயைக் குற்றஞ்சாட்டுவதற்காக ஏதாவதொன்றைக் கண்டுபிடிக்க சாத்தான் முயற்சித்துக் கொண்டிருந்தான். மோசேயைக்கொண்டு தேவனைக் கோபப்படுத்தியதில், வெற்றியடைந்த சாத்தான், பெருமகிழ்வு கொண்டான்; எனவே, இந்த உலகத்தில், மீட்பர் மனிதனை மீட்கவரும்போது, அவரையும் மேற்கொண்டுவிடலாமென சாத்தான் அவனுடைய தூதர்களுக்குக் கூறினான். தனது மீறுதலினாலே, மோசே சாத்தானின் வல்லமையிலும் மரணத்தின் ஆளுகையிலும் கொண்டுவரப்பட்டான். மோசே உறுதியாக நின்றிருப்பானேயாகில், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு தேவன் அவனைக் கொண்டுவந்திருப்பார். மரணத்தைக் காணாதபடி, மறுரூபமாக்கி பரத்திற்கும் எடுத்துச்சென்றிருப்பார். (7)

மோசே மரணத்தைக் கடந்துசென்றான்; ஆனால் மிகாவேல் இறங்கி வந்து, அவனது உடல் அழிவைக்காணுமுன்பே, அவனை உயிரோடெழுப்பினார். மோசேயின் உடலை தனது என்று சாத்தான் உரிமைகொண்டாட முயற்சித்தான்; ஆனால், மிகாவேல் அவனை உயிர்த்தெழச்செய்து, பரத்திற்கு அழைத்துச்சென்றார். சாத்தான் தேவனுக்கு விரோதமாகப் பயங்கரமாகப் பழிசாட்டி, தனக்குச் சேரவேண்டிய இரையை தன்னிடமிருந்து அநியாயமாகப் பறித்துச்செல்வதாக வெளியரங்கமாகக் கண்டனஞ்செய்தான். தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசே, சாத்தானின் சோதனையால் பாவஞ்செய்தபோதிலும், அவர் தமது விரோதியான சாத்தானைக் கடிந்துகொள்ளவில்லை. அவர் அமைதியாக தமது பிதாவைக் குறிப்பிட்டுக்காட்டி: "கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக" என்றார். (8)

தம்முடனே நிற்பவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் வல்லமையோடு வருவதைக் காணும்வரை மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று இயேசு தமது சீஷர்களிடத்தில் கூறியிருந்தார். மறுரூபமாகும்பொழுது, இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. இயேசுவின் முகம் மகிமையடைந்து, சூரியனைப் போல் பிரகாசித்தது. அவருடைய உடை வெண்மையாகப் பிரகாசித்தது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவிருப்பவர்களுக்குப் பிரதிநிதியாக மோசே அங்கு காணப்பட்டார். இயேசுவின் இரண்டாம் வருகையிலே, மரணத்தைக் காணாமல், சாவாமையைத் தரித்துக்கொண்டு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களாக, மறுரூபமாகிறவர்களுக்குப் பிரதிநிதியாக எலியா அங்கு காணப்பட்டார். சீஷர்கள் ஆச்சரியத்தோடும் பயத்தோடும் இயேசுவின் உன்னதமகிமையையும் அவரைச் சுற்றிலும் இருக்கும் மேகத்தையும் கண்டார்கள். அச்சந்தரும் அந்த மகிமையினூடாக: “இவர் என்னுடைய நேச குமாரன்... இவருக்குச் செவிகொடுங்கள்” என்ற சத்தத்தையும் கேட்டார்கள். (9) ★

# 38

# கிறிஸ்துவானவர் காட்டிக்கொடுக்கப்படுதல்!

பஸ்கா போஜனத்தை இயேசு தமது சீஷர்களோடு புசித்த அந்த நேரத்திற்கு நான் எடுத்துச்செல்லப்பட்டேன். சாத்தான் யூதாஸை ஏமாற்றி, அவனும் கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களில் ஒருவன் என்று நினைக்கும்படிச்செய்தான்; ஆனால், அவனது இதயமோ எப்பொழுதும் மாம்ச சிந்தைக்கு ஏற்றதாக இருந்தது. அவருடைய ஊழியத்தின் காலம் முழுவதும் கூடவேயிருந்து அவருடைய மகத்துவமான கிரியைகளைக் கண்ட அவன், அவர்தான் மேசியா என்ற மிகவும் வல்லமையுள்ள ஆதாரத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்திருந்தான்; எனினும், இச்சையும் பேராசையும் மிகுந்து காணப்பட்டான். பணத்தை நேசித்தான். இயேசுவின்மேல் பூசப்பட்ட விலையுயர்ந்த நறுமண தைலத்தைக்குறித்துக் குற்றஞ்சாட்டி கோபங்கொண்டான். மரியாள் அவளுடைய ஆண்டவரை நேசித்தாள். அவளுடைய ஏராளமான பாவங்களை அவளுக்கு அவர் மன்னித்திருந்தார். அவளால் அதிகமாக நேசிக்கப்பட்ட சகோதரனை மரித்தோரிலிருந்து எழுப்பியிருந்தார். இயேசுவின்மேல் பூசக்கூடாத அளவிற்கு எந்தபொருளும் அவளுக்கு அருமையானதாக தோன்றவில்லை. அந்த பரிமளதைலம் எவ்வளவு அருமையானதோ, அவ்வளவு நன்றாக அவள் தனது நன்றியைத் தனது மீட்பருக்குத் தெரிவிக்கமுடியும்; எனவே, அதை அவருக்கு அர்ப்பணித்தாள். யூதாஸோ தனது பேராசையால், இந்தத் தைலத்தை விற்று அந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுக்கலாமே எனச் சாக்குப்போக்கு கூறினான்; ஏழைகளுக்காகக்கொண்ட கவலையினால் அவன் அதைக் கூறவில்லை; ஏழைகளுக்காகக் கொடுக்கும்படி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை தனக்காக உபயோகித்துக்கொள்ளுமளவிற்கு தன்னல முடையவனாயிருந்தான். இயேசுவின் சௌகரியங்களுக்கும் ஏன் தேவைகளுக்குங்கூட அவன் கவனஞ்செலுத்தவில்லை. தன்னுடைய பேராசையை மறைப்பதற்காக ஏழைகளைப்பற்றியே எப்பொழுதும் குறிப்பிட்டுப் பேசினான். மரியாளின் இந்தத் தாராள மனப்பான்மை

அவனுடைய பேராசையுள்ள மனநிலைக்கு ஒரு வெட்டிப்பிளக்கும் கண்டனமாக அமைந்தது. யூதாஸின் இதயத்திலே, சாத்தானின் சோதனை வழிகண்டடைய ஒரு வரவேற்பு ஆயத்தமாக இருந்தது. (1)

யூத அதிகாரிகளும் ஆசாரியர்களும் இயேசுவை வெறுத்தார்கள். ஆனால், ஞானமுள்ள உபதேசங்களைக் கேட்பதற்காகவும், அவருடைய வல்லமையான செய்கைகளைக் காண்பதற்காகவும் திரள்கூட்டம் நெருங்கி வந்து அவருக்குச் செவிசாய்த்தது. மக்களுக்கு ஆழ்ந்த ஆவலும் எழுச்சியும் உண்டாயிற்று. இந்த அதிசயமான போதகரின் போதனையைக் கேட்பதற்காக ஆவலோடு பின்தொடர்ந்தார்கள். அநேக அதிகாரிகள் அவர்மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள்; ஆனால், ஆலயத்திலிருந்து தங்களைப் புறம்பாக்கிப்போடுவார்களே என்ற பயத்தால், துணிந்து தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவில்லை. இயேசுவிடமிருந்து மக்களுடைய கவனத்தைத் திருப்புவதற்காக ஏதாவது செய்யப்படவேண்டுமென்று ஆசாரியர்களும் மூப்பர்களும் தீர்மானித்தார்கள். எல்லோரும் அவரில் விசுவாசம் வைத்து விடுவார்களென்று பயந்தார்கள். தங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையெனக் கண்டார்கள். தங்களது பதவிகளை கட்டாயமாக இழக்கவேண்டும் அல்லது இயேசு மரிக்கவேண்டும். அவரைக் கொலைசெய்த பிறகுங்கூட, அவருடைய வல்லமையின் உயிருள்ள ஞாபகார்த்தங்களாக மேலும் அநேகர் இருப்பார்கள். மரித்த லாசருவை உயிரோடு எழுப்பினார். இயேசுவைக் கொலைசெய்வார்களானால், அவருடைய மகத்துவமான வல்லமையைக்குறித்து லாசரு சாட்சிகூறுவான் என்று பயந்தார்கள். மரித்து உயிரோடெழுப்பப்பட்ட லாசருவைப் பார்க்க மக்கள் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். லாசருவையும் கொலைசெய்துவிட்டால், இந்தப் பரபரப்பை அமைதியாக்கிவிடலாமென்று அதிகாரிகள் திட்டமிட்டனர்; பின்பு, மக்களை கொள்கைகள் பாரம்பரியங்களின்படி ஒற்றலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் கொடுக்கச்செய்து, மறுபடியும் அவர்கள்மேல் செல்வாக்கை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணினார்கள். இயேசு தனியாக இருக்கும்போது, அவரைப் பிடிக்கத் தீர்மானித்தார்கள். அவர் கூட்டத்தோடு செல்கையில் பிடிக்க எத்தனிப்பார்களானால், மக்களின் மனது அவரைச் சார்ந்திருக்கிறபடியால், அவர்கள் கல்லெறியப்படுவார்கள்.(2)

பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் இயேசுவைப் பிடிக்க எவ்வளவு ஆவலாயிருந்தார்கள் என்பதை யூதாஸ் அறிவான். ஒரு சில வெள்ளிக் காசுகளுக்காக அவர்களிடம் காட்டிக்கொடுப்பதற்காக அவனும் சம்மதித்தான். பணத்தின்மேல் யூதாசுக்கு இருந்த ஆசை, தனது ஆண்டவரை அவருடைய பயங்கரமான விரோதிகளிடத்திலே காட்டிகொடுக்கும்படியாக சம்மதிக்க

வைத்தது. யூதாஸின்மூலமாக சாத்தான் நேரடியாக வேலைசெய்தான். உள்ளத்தைக் கவரும் அந்த இராப்போஜன விருந்தின் நேரத்திலே, தனது ஆண்டவரைக் காட்டிக்கொடுக்கத் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தான். என்னிமித்தம், இந்த இரவிலே நீங்கள் அனைவரும் இடறலடைவீர்களென்று துக்கத்தோடு இயேசு தமது சீஷர்களிடத்தில் கூறினார். ஆனால், பேதுரு மிகுந்த ஆர்வத்தோடு இயேசுவினிமித்தம் எல்லோரும் இடறலடைந்தாலும், தான் ஒருபோதும் இடறலடைப்போவதில்லையென உறுதியோடு கூறினான். இயேசு பேதுருவை நோக்கி: “இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு, உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு, உன் சகோதரரை ஸ்திரப்படுத்து” (லூக்கா 22:31,32) என்றார். (3)

இயேசுவை தமது சீஷர்களோடு தோட்டத்திலே நான் கண்டேன். மிகுந்த துக்கங்கொண்டவராக, சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணும்படி அவர்களிடம் கூறினார். அவர்கள் விசுவாசத்தில் சோதிக்கப்படவும், ஏமாற்றத்தைச் சந்திக்கவும் வேண்டியதிருந்தது என்பதை அவர் அறிவார். அதிக விழிப்பாக, ஊக்கமாக ஜெபஞ்செய்வதால்தான் தங்களுக்கு வேண்டிய ஆவிக்குரிய பெலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறிவார். மிகுந்த சத்தத்தோடும் கண்ணீரோடும்: “பிதாவே உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிச் செய்யும்; ஆயினும், என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்று ஜெபித்தார். மகா துயரத்தோடு தேவகுமாரன் ஜெபித்தார். இரத்தத்தின் பெருந்துளிகள் அவரது முகத்தில் அரும்பி தரையிலே விழுந்தன. மேலே பரவிநின்ற தூதர்கள் இந்தக் காட்சியைக் கண்டார்கள். தேவனுடைய கடுந்துயரத்தின் வேளையிலே ஒரு தூதனுக்கு மாத்திரம் இயேசுவை பெலப்படுத்தும்படிச் செல்ல கட்டளை கொடுக்கப்பட்டது. பரலோகமெங்கும் மகிழ்ச்சி இல்லை. தூதர்கள் தங்களது கிரீடங்களையும் சுரமண்டலங்களையும் அகற்றிப்போட்டு, ஆழ்ந்த அக்கறையோடு அமைதியாக இயேசுவைக் கவனித்தார்கள். தேவகுமாரனைச் சூழ்ந்து நிற்க ஆவல்கொண்டார்கள்; ஆனால், தலைமைத் தூதர்கள் அதை அனுமதிக்கவில்லை; ஏனெனில், அவர் காட்டிக்கொடுக்கப்படுவதை அவர்கள் காண்பார்களானால், இயேசுவை விடுதலைசெய்துவிடுவார்கள்; போடப்பட்ட திட்டம் நிச்சயமாக நிறைவேறியாகவேண்டும். (4)

இயேசு ஜெபித்த பின்பு சீஷர்களிடத்திற்கு வந்தார்; ஆனால், அவர்களோ தூங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த பயங்கரமான வேளையிலே

தமது சீஷர்களின் அனுதாபமும், ஜெபமுங்கூட அவருக்கில்லை. சற்று முன்பாக மிகுந்த ஆர்வத்தைக்காட்டிய பேதுருகூட ஆழ்ந்த தூக்கத்திலிருந்தான். இயேசு அவன் திட்டமாகக் கூறியவைகளைக்கொண்டு: "ஒரு மணிநேரமாவது என்னோடு விழித்திருக்கக்கூடாதா?" என்றார். கடுந்துயரோடு மூன்று தடவைகள் தேவகுமாரன் ஜெபித்தார்; பின்பு, ஆயுதம் தாங்கிய கூட்டத்தோடு யூதாஸ் அங்கு தோன்றினான். வழக்கமாக அவருக்கு வந்தனஞ்செய்வதுபோல் அவரை நெருங்கினான். கூட்டம் இயேசுவைச் சூழ்ந்தது; ஆனால், இயேசு தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி, அவர்களை நோக்கி: "யாரைத் தேடுகிறீர்கள்? நான்தான் அவர்" என்று கூறினார். அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர்கள் அவரது வல்லமையை உணரவேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய கரங்களினின்று அவர் தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பினால், அதுவும் அவரால் முடியுமென்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்பதற்காகவுமே இயேசு இதைக் கேட்டார். (5)

தடிகளோடும், ஆயுதங்களோடும் வந்த திரள் கூட்டம் திடீரென்று விழுந்தமாத்திரத்தில், சீஷர்களுக்கு நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்தது. அவர்கள் திரும்பவும் எழுந்து தேவகுமாரனைச் சூழ்ந்தார்கள், பேதுரு பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை காதற வெட்டினான். இயேசு அவனுடைய பட்டயத்தை அதன் உறையிலே போடச்சொல்லி, அவனை நோக்கி: "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என்றார். அவர் இந்த வார்த்தைகளைக் கூறியபோது, நம்பிக்கையினால் தூதர்களின் முகங்களில் ஆர்வம் நிரம்பியதை நான் கண்டேன். அப்பொழுது தங்களது தலைவரைச் சூழ்ந்து கொந்தளிக்கும் அந்த மக்கள் கூட்டத்தைச் சிதறடிக்க விரும்பினார்கள். இயேசு மறுபடியும்: "அப்படிச் செய்வேனானால், இந்தவிதமாகச் சம்பவிக்க வேண்டுமென்கிற வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்" என்று கூறியபோது, தூதர்களின் முகங்களில் துக்கம் நிறைந்தது. இயேசு அவரது விரோதிகளால் நடத்திச்செல்லப்படுவதை சீஷர்கள் கண்டபோது, மனமுறிவடைந்து கசப்பான ஏமாற்றத்திற்குள்ளானார்கள். (6)

சீஷர்கள் அனைவரும் தங்களது சொந்த உயிருக்கு பயந்து அவரைக் கைவிட்டு ஓடிவிட்டார்கள். கொலைகாரக் கூட்டத்தின் கைகளிலே இயேசு தனியாக விடப்பட்டார். ஆ! சாத்தானுக்கு எத்தகைய வெற்றி! ஆனால் தேவதூதர்களின் துக்கத்தையும் துயரத்தையும் என்னவென்று சொல்வது! அநேக தூதர்கள் கூட்டம், ஒவ்வொன்றும் ஒரு நெடிய தலைமைத்

தூதனுக்கடியில் இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். தேவகுமாரனுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளையும் பேசப்பட்ட ஒவ்வொரு நிந்தனையான வார்த்தைகளையும் அவர்கள் பதிவுசெய்யவேண்டும். இயேசு அனுபவிக்கவேண்டிய ஒவ்வொரு கடுந்துயரையும் பதிவுசெய்யவேண்டும்; ஏனெனில், இந்தப் பயங்கர காட்சியில் சம்பந்தப்பட்ட அதே மனிதர்கள், இதே காரியங்களை மறுபடியும் உயிருள்ள எழுத்துக்களில் காண்பார்கள். (7) ★

# 39

# கிறிஸ்துவை நியாயம் விசாரித்தல்!

தேவதூதர்கள் மிகுந்த துக்கத்தோடு, தமது ஒளிமிகுந்த கிரீடங்களை கழற்றிவைத்துவிட்டு, பரலோகத்தைவிட்டு வந்தார்கள். தங்களது படைத்தலைவர் துன்பத்தை அனுபவித்து முட்கிரீடம் அணியவிருக்கின்றபடியால், அவர்கள் தங்களது பொற்கிரீடங்களை அணிய விரும்பவில்லை. நீதிமன்றத்திலே சாத்தானும் அவனது தூதர்களும், மனுஷீக சிந்தனையையும் அனுதாபத்தையும் அழித்துப்போடுவதற்காக, துரிதமாக வேலைசெய்துவந்தார்கள். அந்தச் சூழ்நிலையே பாரமாயும் அவர்களது செல்வாக்கினால் மிகவும் கேடுபாடு நிறைந்ததாயும் இருந்தது. மனிதரால் சகிக்கக்கூடாத அளவிற்கு மிகவும் கடினமான முறையிலே, சாத்தான் பிரதான ஆசாரியர்களையும் மூப்பர்களையும் தூண்டிவிட்டு, இயேசுவை நிந்தித்து கேவலப்படுத்தும்படிச்செய்தான். இந்தவிதமான கேலியையும் வன்முறையையும் சகிக்கமுடியாமல், தேவகுமாரன் குற்றஞ்சாட்டி முறுமுறுப்பார் என்று சாத்தான் நம்பினான்; அல்லது, அவர் தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி, இந்தத் திரளான மக்களின் பிடியிலிருந்து, தன்னைத் தப்புவித்துக்கொள்வார்; இவ்வாறாக, இரட்சிப்பின் திட்டமே இறுதியில் தோல்வியடையும் என்றும் எதிர்பார்த்தான். (1)

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டபின்பு, பேதுரு அவரைப் பின்தொடர்ந்தான். இயேசுவிற்கு என்ன செய்யப்படும் என்பதைக் காண அக்கறையோடிருந்தான்; ஆனால், தானும் அவருடைய சீஷர்களில் ஒருவன்தான் என்று குற்றஞ்சாட்டப்பட்டபோது, தனது பாதுகாப்பைப்பற்றிய பயம் அவனைப் பிடித்துக்கொண்டதால், அந்த மனிதனை அறியேன் என்று கூற ஆரம்பித்தான். சீஷர்களின் பேச்சு எப்பொழுதும் சுத்தமாக இருக்கும் என்பது யாவருக்கும் தெரியும். தான் கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவன் அல்ல என்று தன்னைக் குற்றஞ்சாட்டியவர்களை நம்பச்செய்வதற்காக மூன்றாம் தடவையும் மறுதலித்து, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் ஆரம்பித்தான்.

பேதுருவிற்கு சற்று தூரத்தில் நின்ற இயேசு, துக்கத்தோடு பார்வையால் கடிந்துகொண்டார். மேலறையில் இயேசு தன்னோடு பேசிய வார்த்தைகளை பேதுரு நினைவுகூர்ந்தான்; மேலும், தானும் இயேசுவை நோக்கி: “உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்” என்று உறுதியாகக் கூறியதையும் நினைத்தான். சபித்தும் சத்தியஞ்செய்தும் தனது ஆண்டவரை மறுதலித்துவிட்டான்; ஆனால், இயேசுவின் அந்தப் பார்வை பேதுருவின் இருதயத்தை உருக்கி, அவனைக் காப்பாற்றியது. தனது பெரிய பாவத்தினிமித்தம் மனந்திரும்பி, மனங்கசந்து அழுதான்; எனவே, பேதுரு மனந்திரும்பி, சகோதரரை பெலப்படுத்த ஆயத்தமானான். (2)

திரள் கூட்டம் அவரது இரத்தத்திற்காகக் கூச்சலிட்டது. அவரை வாரினால் கொடுமையாக அடித்தார்கள். அரசர்கள் அணியும் பழைய சிவப்பு அங்கியை அவருக்கு உடுத்துவித்தார்கள். அவரது பரிசுத்த சிரசிலே முள்முடியைச் சூட்டினார்கள். அவர் கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு, “யுதருடைய இராஜாவே, வாழ்க” என்று அவரைப் பரிகாசம்பண்ணி, வணக்கஞ்செலுத்தினார்கள்; பின்பு, அந்தக் கோலை அவர் கையினின்று வாங்கி அவருடைய சிரசில் அடித்தார்கள். அப்பொழுது முட்கள் அவரது நெற்றியிலே அழுந்தியதால், இரத்தம் அவரது முகத்திலும் தாடியிலும் கசிந்தொழுகியது. (3)

அந்தக் காட்சியை தூதர்களால் சகிக்கமுடியவில்லை. இயேசுவை விடுதலைசெய்திருப்பார்கள்; ஆனால், கட்டளை கொடுக்கும் தூதர்கள் அதைத் தடுத்துவிட்டார்கள்; ஏனெனில், மனிதனுக்காகச் செலுத்தப்படவேண்டிய மாபெரும் பிணையம் அதுவே என்றும், இது முற்றுப்பெறும்போது, மரணத்தின்மேல் வல்லமைகொண்ட சாத்தானின் மரணத்திற்குக் அதுவே காரணமாகும் என்றும் கூறினார்கள். தான் அவமானமடையும் அந்தக் காட்சியை தூதர்கள் பார்த்துக் கொண்டிருப்பதை இயேசு அறிவார். பலவீனமான தேவ தூதன் கூட, கேலிசெய்யும் அந்தத் திரள் கூட்டத்தை வலிமையற்று விழச்செய்து இயேசுவை விடுவித்திருக்கமுடியும். தம்முடைய பிதாவினிடத்தில் கேட்க விரும்பியிருப்பாரானால், அந்தக் கணமே தூதர்கள் அவரை விடுதலை செய்திருப்பார்கள். மீட்பின் திட்டத்தை ஏற்று நடத்துவதற்காக துன்மார்க்கரின் வன்முறையை அனுபவிக்கவேண்டியது அவசியமாயிருந்தது. (4)

வெறிமிகுந்த திரள்கூட்டத்திற்குமுன்பாக பணிவாகவும் தாழ்மையாகவும் நின்றபோது, அவர்கள் அவரை கேவலமான வார்த்தைகளால் நிந்தித்தார்கள். எந்த முகத்தைக்கண்டு ஒருநாள் மறைய

விரும்புவார்களோ, தேவ பட்டணத்திற்கு வெளிச்சத்தைக் கொடுத்து, சூரியனைவிட பிரகாசிப்பது எந்த முகமோ—அந்த முகத்திலே துப்பினார்கள். தனக்கு துன்பம் கொடுப்பவர்களை கோபமாகக்கூடப் பார்க்கவில்லை. ஒரு பழைய துணியை எடுத்து அவரது தலையை மூடி, கண்களைக் கட்டி, அவருடைய முகத்திலே அறைந்து, "உன்னை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் சொல்" என்று உரத்தசத்தமிட்டார்கள். தேவ தூதர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. உடனே அவரைத் தப்புவித்திருப்பார்கள்; ஆனால், தலைமைத் தூதர்கள் அவர்களைக் கட்டுப்படுத்தினார்கள். (5)

சீஷர்களில் சிலர் நம்பிக்கையில் தேறியவர்களாய், இயேசு இருக்கும் இடம்வரை சென்று, விசாரணையைப் பார்த்தார்கள். அவர் தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தி, தமது விரோதிகளின் கரங்களினின்று விடுதலை பெற்று, தமக்கு அவர்கள் செய்த கொடுமைக்காக அவர்களைத் தண்டிப்பார் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். பலவிதமான காட்சிகள் மாறிமாறிச் செல்ல, அவர்களது நம்பிக்கையும் ஏறி—இறங்குவதாக இருந்தது. சில சமயங்களில் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோமோ என்று சந்தேகப்படவும், பயப்படவும் ஆரம்பித்தார்கள்; ஆனால், மறுரூபமலையிலே தாங்கள் கேட்ட சத்தம், தாங்கள் கண்ட மகிமை, அவர் தேவகுமாரன்தான் என்ற விசுவாசத்தை பெலப்படுத்தியது. தாங்கள் கண்ட காட்சிகளையும், வியாதியஸ்தர்கள் குணமானதையும், குருடர்களின் கண்கள் திறக்கப்பட்டதையும், செவிடரின் செவி திறக்கப்பட்டதையும், பிசாசுகள் கடிந்துகொள்ளப்பட்டு துரத்தப்பட்டதையும், மரித்தோர் உயிரோடெழுப்பப்பட்டதையும், காற்றும் கடலும் அமைதிப்படுத்தப்பட்டதுமாகிய அற்புதங்களை, தங்களது நினைவிற்குக் கொண்டுவந்தார்கள். அவர் மரிப்பார் என்பதை அவர்களால் நம்பமுடியவில்லை. இனியும் வல்லமையோடு வந்து, அதிகாரமுள்ள தொனியோடு இரத்தவெறிபிடித்த திரளான கும்பலை சிதறடிப்பார் என்றே நம்பினார்கள். தனியாக தேவாலயத்தில் நுழைந்து, அதை வியாபாரஸ்தலம் ஆக்கியவர்களை விரட்டியடிக்க, அவர்கள் அங்கிருந்து ஆயுதம் தாங்கிய போர்ச்சேவகர்கள் விரட்டியதைப்போல விரைந்து ஓடினார்களே, அதைப்போலவே இப்பொழுது அவர் தமது வல்லமையை எழும்பி, தமது அதிகாரத்தொனியினால் இரத்தப்பிரியரான அக்கூட்டத்தாரை விரட்டியடிப்பார் என்று நம்பினார்கள். இயேசு தமது வல்லமையை வெளிப்படுத்தி, அவர்தான் இஸ்ரவேலின் இராஜா என்பதை எல்லோரும் விளங்கிக்கொள்ளச் செய்வார் என்று சீஷர்கள் நம்பினார்கள். (6)

இயேசுவைக் காட்டிக்கொடுத்ததிலே, யூதாஸ், தான் செய்த நம்பிக்கைத் துரோகமான காரியத்தை எண்ணி, மனம் நொந்து, அவமானத்தால்

நிறைந்தான். மீட்பர் சகித்த நிந்தனையை அவன் கண்டபோது, அவனால் தாங்கமுடியவில்லை. இயேசுவை நேசித்தான்; ஆனால், பணத்தை அதற்கும் அதிகமாக நேசித்தான். தான் அழைத்துக்கொண்டுவந்த திரள்கூட்டத்தினால் பிடிக்கப்பட, இயேசு தம்மை அனுமதிப்பார் என்று யூதாஸ் நினைக்கவேயில்லை. அவர் ஒரு அற்புதத்தைச்செய்து, தன்னை அவர்களிடமிருந்து விடுவித்துக் கொள்வார் என்று எதிர்பார்த்தான்; ஆனால், நீதிமன்றத்தில் கொந்தளிக்கும் திரள்கூட்டமான மக்கள் இரத்த வெறிபிடித்து நிற்பதைக் கண்டபொழுது, தான் செய்த குற்றத்தை ஆழமாக உணர்ந்தான். இயேசுவை அநேகர் ஆவேசத்தோடு குற்றஞ்சாட்டும்பொழுது, யூதாஸ் ஜனத்திரளுக்குள்ளாகப் புகுந்தோடி, குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேன் என்று அறிக்கைசெய்தான். தனக்குக் கொடுக்கப்பட்ட பணத்தை திருப்பிக்கொடுப்பதாகச் சொல்லி, இயேசு முற்றிலும் குற்றமற்றவர் என அறிவித்து, அவரை விடுதலை செய்யும்படியாகக் கெஞ்சினான். (7)

சிறிது நேரத்திற்கு எரிச்சலும் குழப்பமும் ஆசாரியர்களை அமைதியாக்கிற்று. இயேசுவின் பின்னடியார் என்று சொல்லிக்கொள்ளுகிற ஒருவருக்கே கைக்கூலிகொடுத்து, அவரைத் தங்களுக்கு காட்டிக்கொடுக்கவேண்டுமென்று அவர்கள் செய்த காரியத்தை மக்கள் தெரிந்துகொள்ளுவதை அவர்கள் விரும்பவில்லை. திருடனைப்போல அவரைப் பின்தொடர்ந்து, இரகசியமாகப் பிடித்துக்கொண்டுவந்ததை மறைக்க விரும்பினார்கள்; ஆனால், யூதாஸின் பாவ அறிக்கையும், அவனது விரும்பப்படாத அருவருக்கத்தக்க குற்றமுள்ள தோற்றமும், திரளான மக்களுக்கு முன்பாக ஆசாரியர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோவதற்கு வெறுப்பே காரணம் என்று வெளிப்படுத்தியது. இயேசு குற்றமற்றவர் என்று யூதாஸ் உரத்துக் கூறியபோது, ஆசாரியர்கள்: “எங்களுக்கென்ன, அது உன்பாடு” என்றார்கள். தங்களது வல்லமைக்குள்ளே இயேசு இருந்ததால், அவரை விடக்கூடாது என்ற திட்டத்தோடிருந்தார்கள். கடுந்துயரம் நிறைந்தவனாய், இப்பொழுது அவன் இழிவாகக் கருதின அந்தப் பணத்தை, தன்னைக் கைக்கூலியாக அமர்த்திக்கொண்டவர்களது பாதத்தில் வீசி எறிந்துவிட்டு, மனக் கசப்போடு நடுக்கம் நிறைந்தவனாக அங்கிருந்து சென்று தூக்குப்போட்டுக்கொண்டான். (8)

இயேசுவைச் சுற்றியிருந்த கூட்டத்திலே, அவர்மேல் பரிவுகாட்டியவர்களும் இருந்தார்கள். அவரிடம் கேட்ட கேள்விகளில் அநேகத்திற்கு அவர் பதில் கொடுக்காதது, அங்கிருந்த கூட்டத்தை வியப்பிலாழ்த்தியது. அந்த மக்கள் கூட்டத்தில் கேலி, வன்முறை ஆகியவைகளுக்கு மத்தியில், கோபமோ, கலக்கமடைந்த தோற்றமோ,

அவரது முகபாவத்தில் காணப்படவில்லை. பெருந்தன்மையோடும் அமைதியோடும் காணப்பட்டார். அவரைப் பார்த்துக்கொண்டிருந்த வர்கள், வியப்பினால் அவரை நோக்கிப் பார்த்தனர். அவரது பூரணமான உருவத்தையும், உறுதியையும், மேன்மையான தோற்றத்தையும் கண்டார்கள். நியாயமன்றத்தில் இயேசுவிற்கு விரோதமாக நிற்பவர்களைப் பார்த்து, அங்குள்ள அதிகாரிகளைப் பார்க்கிலும் இவர் ஒரு அரசனைப் போலிருக்கிறார் என்று ஒப்பிட்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். ஒரு குற்றவாளியைப்போன்ற எந்த அடையாளமும் அவரில் காணப்படவில்லை. அவருடைய கண்ணானது கனிவோடு—தெளிவாக—பயமின்றியிருந்தது. அவருடைய நெற்றி அகன்று உயர்ந்து காணப்பட்டது. அவருடைய வடிவம் அன்புச் செயலாலும், மேன்மையான கொள்கையாலும் உறுதியாக விளங்கியது. ஒரு மனிதன் அனுபவிப்பது போலல்லாது அவர் காட்டிய பொறுமையையும் இரக்கத்தையும் கண்டு, அநேகர் நடுங்கினார்கள். அவருடைய மேன்மையான—கடவுள்போன்ற தோற்றத்தைக்கண்டு, பிலாத்துவும் ஏரோதுவுங்கூட அதிக மனக்கலக்கமடைந்தார்கள். (9)

இயேசு ஒரு சாதாரண மனிதனல்ல என்பது முதலிலிருந்தே பிலாத்துவின் உள்மனதிற்கு நன்றாகத் தெரியும். அவர் உன்னதமான குணவான் என்றும், கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திலும், அவர் முற்றிலும் குற்றமற்றவர் என்றும் அவரைப்பற்றி அவன் உறுதியாக எண்ணினான். இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த தூதர்கள், ரோம தேசாதிபதியின் உள்ளத்தின் நினைவுகளை அறிந்தார்கள்; எனவே, இயேசுவை சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுக்கும் இந்தப் பயங்கரமான செய்கையில் ஈடுபடாதபடி காப்பாற்றுவதற்காக, பிலாத்துவின் மனைவியிடத்திற்கு ஒரு தூதன் அனுப்பப்பட்டான். தூதன் சொப்பனத்தின்மூலமாக, பிலாத்துவின் மனைவியிடம், அவள் கணவன் ஈடுபட்டிருக்கும் விசாரணை தேவ குமாரனைப்பற்றியது எனவும், அவர் குற்றமற்றவராகப் பாடு அனுபவிக்கிறார் என்றும் கூறினான்; உடனே, அவள் பிலாத்துவிற்கு ஆளனுப்பி, இயேசு பரிசுத்தமானவரென்றும், அவர் நிமித்தம் தான் சொப்பனத்தில் வெகுபாடுபட்டதாகவும், அதனால் அவருக்கு ஒன்றுஞ்செய்யவேண்டாமென்றும் கூறியனுப்பினாள். தூதுவன் கூட்டத்தினூடே இடித்துத் தள்ளிக்கொண்டுபோய், அந்தக் கடிதத்தை பிலாத்துவின் கையில் ஒப்படைத்தான். அதை வாசித்தபோது நடுநடுங்கினான்; அவன் முகம் வெளுத்தது. இயேசுவைக் கொலைசெய்யும் திட்டத்தில் தான் எந்தப் பங்கும் வகிக்கக்கூடாதென்று தீர்மானம்பண்ணிக்கொண்டான். யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்யவிரும்பினால், தனது செல்வாக்கை அதற்காக உபயோகிக்காமல், அவரை விடுதலைசெய்துவிட எண்ணினான். (10)

ஏரோது எருசலேமில் இருக்கிறான் என்று கேள்விப்பட்டபோது, அவனுக்கு பெரிய நிம்மதி ஏற்பட்டது. இயேசுவை விசாரித்து ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கும் எல்லாவிதமான பொறுப்புகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள எண்ணினான். குற்றஞ்சாட்டுகிறவர்களோடு சேர்ந்து இயேசுவை ஏரோதினிடத்திற்கு உடனே அனுப்பிவைத்தான். இந்த ஏரோது பாவத்தினால் கடினப்பட்டவனாக இருந்தான். யோவான் ஸ்நானகனைக் கொலைசெய்ததால், அவனது மனச்சாட்சியில் ஏற்பட்ட கறையினின்று அவன் தன்னை விடுவித்துக்கொள்ளமுடியவில்லை. இயேசுவைப் பற்றியும் அவர் செய்த வல்லமையான அற்புதங்கள்பற்றியும் கேள்விப்பட்டபோது, யோவான் ஸ்நானகன்தான் மரித்தோரிலிருந்து எழும்பிவிட்டான் என்று எண்ணி, பயந்து நடுங்கினான். பிலாத்துவினால் ஏரோதின் கையில் இயேசு ஒப்படைக்கப்பட்டபோது, தனது வல்லமையையும், அதிகாரத்தையும், நியாயத்தீர்ப்பையும் ஏற்றுக்கொண்டதாக எண்ணினான்; இதன் விளைவால், முன்பு விரோதிகளாயிருந்த இந்த இரண்டு தேசாதிபதிகளும் இப்பொழுது நண்பர்களானார்கள். இயேசுவைப் பார்த்து ஏரோது மிகுந்த மகிழ்ச்சியடைந்து, தனது திருப்திக்காக மகா வல்லமையான சில அற்புதங்களைச் செய்வார் என்று எதிர்பார்த்தான். ஒருவருடைய அறியவேண்டுமென்கிற ஆர்வத்தைத் திருப்திப்படுத்துவதோ, அல்லது தனது சொந்தப் பாதுகாப்பைத் தேடுவதோ அவரது வேலையல்ல. அவரது தெய்வீக அற்புத வல்லமை அவருக்காக அல்ல, மற்றவர்களுடைய இரட்சிப்பிற்காகவே செயல்படுத்தப்படவேண்டும். (11)

ஏரோது கேட்ட அநேக கேள்விகளுக்கு இயேசு பதிலே கொடுக்கவில்லை. ஆவேசமாக தன்னைக் குற்றப்படுத்தும் விரோதிகளுக்கும் அவர் எந்தப் பதிலையும் கூறவில்லை. இயேசு தனது அதிகாரத்திற்குக்கூட பயப்படுவதாகத் தோன்றவில்லையே என ஏரோது மிகுந்த கோபமடைந்தான். தேவகுமாரனை தனது போர்வீரர்களோடு சேர்ந்து ஏளனம்செய்து—பரிகசித்து—நிந்தித்தான். அவமானமாக அவரை நிந்தித்தும், அவரது மேன்மையான—தேவன்போன்ற தோற்றம் அவனை திகைக்கச்செய்தது. அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பயந்து, மறுபடியும் பிலாத்துவிடம் அனுப்பிவிட்டான். (12)

சாத்தானும் அவனது தூதர்களும் பிலாத்துவை சோதித்து, அவனையும் அழிவிற்குள் அழைத்துச்செல்ல முயன்றார்கள். பிலாத்து இயேசுவிற்கு ஆக்கினைத்தீர்ப்புகொடுக்காவிட்டால், மற்றவர்கள் கொடுப்பார்கள் என்று சாத்தானும் அவனது தூதர்களும் பிலாத்துவிற்கு ஆலோசனை கூறினார்கள். திரளாள மக்கள் கூட்டம் அவரது இரத்தத்திற்காகத் துடித்தது. இயேசுவை சிலுவையில்

அறையும்படி ஒப்புக்கொடுக்காவிட்டால், பிலாத்து தனது அதிகாரத்தையும் உலகச் செல்வாக்கையும் இழந்து, ஒரு ஏமாற்றுக்காரனை நம்பினான் என்று உலகம் பழித்துரைக்கும். தனது செல்வாக்கையும் அதிகாரத்தையும் இழந்துபோவோமே என்ற பயத்தால், இயேசுவின் மரணத்திற்கு பிலாத்து சம்மதித்தான்; இருந்தபோதிலும், இயேசுவின் இரத்தப்பழியை அவரைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள்மீது சுமத்தினான். மக்கள் கூட்டமோவெனில்: அவனுடைய இரத்தம் எங்கள்மேலும் எங்களுடைய பிள்ளைகள்மேலும் இருக்கக்கடவது எனச் சத்தமிட்டு, இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டது; ஆயினும், பிலாத்து இதில் தப்பிவிடவில்லை. கிறிஸ்துவின் இரத்தப்பழி அவன்மேல் சுமந்தது. தன்னுடைய சுயநலமான தேவைகளுக்காக, உலகிலுள்ள பெரிய மனிதர்களின் செல்வாக்கு தனக்கு வேண்டுமென்ற ஆசையால், குற்றமற்ற மனிதனை மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்தான். பிலாத்து தனது மனதில்பட்ட உண்மையான காரியங்களைப் பின்பற்றியிருப்பானானால், இயேசுவை ஆக்கினைத்தீர்ப்பிற்கு ஆளாக்கியதில் அவனுக்கு எந்தவித பங்கும் இருந்திருக்காது. (13)

விசாரணையின்போது, இயேசுவின் தோற்றமும் அவரது வார்த்தைகளும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த அநேகருடைய மனதில் ஒரு ஆழமான எண்ணத்தை உண்டாக்கியது. இந்தச் செல்வாக்கினால் ஏற்பட்ட விளைவு அவரது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மிகத் தெளிவாகத் தெரிந்தது. சபையில் சேர்ந்தவர்களில் அநேகர் முன்னரே இயேசுவின் விசாரணையைக் கண்டிருந்ததினால் அசையாத—உறுதியான எண்ணத்தைப் பெற்றவர்களாய் சபையில் இணைந்தார்கள். யூதர்களைக்கொண்டு, இயேசுவின்மீது தான் சுமத்திய கொடுமையின் விளைவாக அவர் சிறிதளவும் முறுமுறுக்கவில்லை என்பதைக் கண்ட சாத்தான், கோபத்தால் நிறைந்தான். மனிதனின் சாயலைத் தன்மீது எடுத்துக்கொண்டபோதிலும், தெய்வத்தன்மையுள்ள மனவுறுதிபடைத்தவராய் அவர் தளராதிருந்தார். தமது பிதாவின் சித்தத்தினின்று ஒரு சிறிதும் விலகிவிடவில்லை. (14) ★

# 40

# கிறிஸ்துவின் சிலுவை மரணம்!

தேவகுமாரன் சிலுவையிலறையப்படும்படி மக்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டார். அன்பான மீட்பரை துன்மார்க்கர் வெற்றிமுழக்கத்தோடு அழைத்துச்சென்றார்கள். அவர் பெற்ற சாட்டையடிகளாலும், இடிகளாலும், இழந்த இரத்தத்தினால் ஏற்பட்ட களைப்பினாலும், வேதனையும் மயக்கமும் அடைந்தவராய் பலவீனமாய்க் காணப்பட்டார்; எனினும், சீக்கிரத்தில் அவரை வைத்து ஆணியடிக்கப்படப்போகிற பாரமான சிலுவை அவரது தோள்களின் மேல் சுமத்தப்பட்டது. பாரத்தினால் இயேசு மயக்கமடைந்தார். மூன்று தடவைகளில் அவர்மீது அந்தச் சிலுவை வைக்கப்பட்டது. மூன்று தடவைகளிலும் அவர் மயக்கமடைந்தார். வெளியரங்கமாக கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிவிக்காத—ஆனாலும் அவரில் விசுவாசம் வைத்திருந்த, அவருடைய பின்னடியார்களுள் ஒருவனை அடுத்ததாகப் பிடித்தார்கள். சிலுவை அவன்மீது சுமத்தப்பட்டது. சாவை எதிர்நோக்கும் அந்த இடத்திற்கு அவன் அதைச் சுமந்துசென்றான். அந்த இடத்திற்குமேலாக, ஆகாயத்திலே தூதர்களின் கூட்டம் அணிவகுத்து நின்றது. துக்கத்தோடும் மனங்கசந்த அழுகையோடும் கிறிஸ்துவின் சீஷர்களில் அநேகர் அவரை கல்வாரிவரை பின்தொடர்ந்தார்கள். சில நாட்களுக்கு முன்னர், அவர் வெற்றியோடு எருசலேமில் பவனி வந்ததையும், "உன்னதத்திலிருப்பவருக்கு ஓசன்னா" என்று தாங்கள் சத்தமிட்டு, வஸ்திரங்களையும் குருத்தோலைகளையும் வழியிலே பரப்பியதையும் நினைவிற்குக்கொண்டுவந்தார்கள்: அப்பொழுது, அவர் இராஜ்யத்தை சுதந்தரித்து உலகப்பிரகாரமான அரசராக இஸ்ரவேலின்மீது அரசாளுவார் என்று நினைத்தார்கள். காட்சி எப்படி மாறிவிட்டது! அவர்கள் எதிர்பார்த்தது எப்படிப் பாழாய்ப்போய்விட்டது! களிப்பின்றி—மகிழ்ச்சியூட்டும் நம்பிக்கையின்றி—நம்பிக்கையின்மையும் பயமும் பீடித்த இதயங்களோடு மெதுவாக துக்கத்தோடு அவரைப் பின்தொடர்ந்தார்கள். மரிக்கப்போகிற அவரோ இகழ்ச்சிக்கும் அவமானத்திற்குமுள்ளானார். (1)

இயேசுவின் தாயாரும் அங்கிருந்தார்கள். ஒரு அன்பான தாயேயன்றி வேறொருவரும் புரிந்துகொள்ளமுடியாத அத்தகைய கடுந்துயரம் அவளது

இருதயத்தை ஊடுருவியது; எனினும், கிறிஸ்து மாபெரும் அற்புதம் ஒன்றைச்செய்து, தமது கொலையாளி களிடமிருந்து விடுவித்துக்கொள்வார் என்று சீஷர்களோடுசேர்ந்து மரியாளும் நம்பினாள். தன்னைச் சிலுவையிலறையும்படி அனுமதிப்பார் என்ற எண்ணத்தை அவளால் தாங்கமுடியவில்லை; ஆனால், ஆயத்தங்கள் செய்யப்பட்டு, இயேசு சிலுவையிலே வைக்கப்பட்டார். சுத்தியலும் ஆணிகளும் கொண்டுவரப்பட்டன; சீஷர்களுடைய இதயங்கள் தங்களுக்குள்ளே சோர்ந்துபோயின. சகிப்பிற்கும் அப்பாற்பட்ட கடுந்துயரால், இயேசுவின் தாயார் ஒடுங்கினார்கள். அவரது இளங்கால்களிலும் கைகளிலும் ஆணிகள் கடாவி, அவை எலும்பையும் தசையையும் ஊடுருவிச்செல்லும் சத்தத்தைக் அவள் கேட்கவேண்டாமென்று, அவர் சிலுவையில் அறையப்படுமுன்பாக, சீஷர்கள் அவளை அங்கிருந்து அழைத்துச்சென்றார்கள். இயேசு முறுமுறுக்கவில்லை; ஆனால், கடுந்துயரால் முனகினார். அவர் முகம் வெளுத்து, வேர்வையின் பெருந்துளிகள் அவரது நெற்றியின்மீது காணப்பட்டன. தேவகுமாரன் அனுபவித்த பாடுகளைக்கண்டு சாத்தான் எக்களித்தான்; எனினும், இரட்சிப்பின் திட்டத்தை முறியடிக்கும் தனது முயற்சிகள் வீண் என்றும், தனது இராஜ்யத்தை இழந்து, தான் முடிவிலே ஆழிக்கப்படுவான் என்பதையும் அறிந்து பயந்தான். (2)

இயேசு சிலுவையிலறையப்பட்டபின்னர், அதிக வேகத்தோடு மேலே உயர்த்தப்பட்டு, அந்த நிலத்திலே ஆயத்தம்பண்ணப்பட்ட இடத்திலே வைக்கப்பட்டபோது, அது தசையைக் கிழித்துக்கொண்டு, அதிக துன்பத்தைக் கொடுத்தது. இயேசுவின் மரணத்தை மேலும் அதிகமாக அவமானப்படுத்த வேண்டுமென்று, பக்கத்திற்கு ஒருவராக—இரண்டு பக்கத்திலும் இரண்டு கள்ளர்கள் சிலுவையிலறையப்பட்டார்கள். அந்தக் கள்ளர்களை அவர்களது எதிர்ப்புக்கு மத்தியில், பலாத்காரத்தோடு பிடித்திழுத்து, அவர்களது புயங்களை பின்னாகத்தள்ளிச் சிலுவையிலறைந்தார்கள்; ஆனால், இயேசு சாந்தமாக தன்னை ஒப்புக்கொடுத்தார். அவரது புயங்களை பலாத்காரத்தோடு பிடித்து சிலுவையிலறைய எவரும் தேவைப்படவில்லை. தங்களுக்குத் தீர்ப்பை நிறைவேற்றுபவர்களை இந்தக் கள்ளர்கள் சபித்தபோது, மீட்பரோ மிகுந்த துயரத்தோடு, தனது விரோதிகளுக்காக: "பிதாவே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்று ஜெபித்தார். உடலின் கடுந்துயர்மாத்திரமல்ல, இந்த உலகத்தின் பாவம் அனைத்தையுமே கிறிஸ்து தம்மீது ஏற்றுச் சகித்தார். (3)

இயேசு சிலுவையில் தொங்கும்போது, அவரைக் கடந்துசென்ற சிலர் அவரை வைது, ஓர் அரசனுக்குப் பணிவதுபோல தலையைத் துலுக்கி, அவரை நோக்கி: "தேவாலயத்தை இடித்துப்போட்டு மூன்று நாட்களுக்குள்

கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால், சிலுவையிலிந்து இறங்கி வா" என்று கூறினார்கள். வனாந்தரத்தில் சாத்தானும் "நீர் தேவனுடைய குமாரனேயானால்" என்ற அதே வார்த்தைகளையே உபயோகித்தான். பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும் "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை. அவர் இஸ்ரவேலின் இராஜாவானால், சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும்; அப்பொழுது நாங்கள் விசுவாசிப்போம்" என்று கேலிசெய்தார்கள். கிறிஸ்துவின் சிலுவையேற்றக் காட்சியை மேலே பரவிநின்று பார்த்துக்கொண்டிருந்த தூதர்கள், "இவன் தேவனுடைய குமாரானானால் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளட்டும்" என்று அதிகாரிகள் கேலிசெய்யும்போது, மிகுந்த கோபங்கொண்டார்கள்; அங்கு வந்து இயேசுவைக் காப்பாற்றி, விடுதலைசெய்ய விரும்பினார்கள்; ஆனால், அவர்கள் அப்படிச்செய்ய அனுமதிகொடுக்கப்படவில்லை. அவரது அருட்பணியின் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. (4)

இயேசு சிலுவையில் தொங்கிய அந்த நீண்ட—துயரம் நிறைந்த மணிநேரங்களிலே, அவர் தனது தாயை மறக்கவில்லை. அவள் தனது மகனைவிட்டு வெகுநேரம் பிரிந்திருக்கக்கூடாமல், அந்த பயங்கரக் காட்சியைக் காண மறுபடியும் வந்துவிட்டாள். மனுஷீகத் தன்மையும் பரிவுமே இயேசுவின் கடைசிப் பாடமாக இருந்தது. துயரம் மிகுந்த தனது தாயின் முகத்தைப் பார்த்து, பின்னர் தமக்குப் பிரியமான சீஷனாகிய யோவானைப் பார்த்தார். தாயை நோக்கி: "ஸ்தீரியே அதோ உன் மகன்" என்றார். யோவானைப் பார்த்து: "இதோ, உன் தாய்" என்றார். அந்த மணி நேரத்திலிருந்தே யோவான் மரியாளைத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று கவனித்துக்கொண்டான். (5)

இயேசு தமது கடுந்துயரத்திலே தாகமாயிருந்தார். அவர்கள் அவருக்கு கசப்பு கலந்த காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள். அவர் அதை ருசித்தபோது, குடிக்க மறுத்துவிட்டார். தங்களது நேசிக்கப்பட்ட தளபதியின் கடுந்துயரைத் தூதர்கள் கண்டார்கள்; மேலும் காணச் சகிக்காமல், அந்தக் காட்சியினின்று தங்களது முகங்களை மறைத்துக்கொண்டார்கள். சூரியனும் இந்தப் பயங்கரக் காட்சியைக் காண மறுத்தது. இயேசு "முடிந்தது" என்று உரத்தசத்தமிட்டார். அது அவரது கொலையாளிகளது இதயத்தில் நடுக்கத்தை உண்டுபண்ணியது; பின்பு, தேவாலயத்தின் திரைச்சீலை, மேலிருந்து கீழாக கிழிந்தது; பூமி அதிர்ந்தது; கன்மலைகள் பிளந்தன; பூமியைக் காரிருள் மூடியது; இயேசு மரித்தபோது, சீஷர்களின் கடைசி நம்பிக்கையும் அடித்துச்செல்லப்பட்டதுபோலத் தோன்றியது. அவரது

பின்னடியார்களில் அநேகர் அவரது பாடு—மரணத்தின் காட்சியைத் தெளிவாகக் கண்டார்கள்; அவர்களது துக்கத்தின் பாத்திரம் நிரம்பியது. (6)

சாத்தான் முன்புபோல் இப்பொழுது எக்களிக்கவில்லை. இரட்சிப்பின் திட்டம் உடைத்தெறியப்படுமென நம்பிக்கொண்டிருந்தான்; ஆனால், அது மிக ஆழமாகப் போடப்பட்டிருந்தது; இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் தானும் கடைசியில் மரணமடையவேண்டுமென்பதையும், தனது இராஜ்யம் இயேசுவிடம் கொடுக்கப்படும் என்பதையும் அறிவான். தனது தூதர்களோடு சாத்தான் ஆலோசனைசெய்தான். தேவகுமாரனுக்கு விரோதமாக எதையுமே சாதிக்கமுடியவில்லை. இப்பொழுது தங்களது முயற்சிகளைப் பெருகப்பண்ணி, தங்களுடைய வல்லமையாலும் தந்திரத்தாலும் அவருடைய பின்னடியார்களிடத்திற்குத் திரும்பவேண்டுமென எண்ணினான். இயேசுவினால் சம்பாதிக்கப்பட்ட அந்த இரட்சிப்பை, ஒருவரும் பெற்றுக்கொள்ளாதபடி நிச்சயமாகத் தடைசெய்யவேண்டும்; இவ்வாறு செய்வதினிமித்தம், தேவனுடைய அரசாங்கத்திற்கு எதிராக, சாத்தான் வேலைசெய்யமுடியும். இயேசுவை அணுகாதபடி எவ்வளவுபேரை தடுக்கமுடியுமோ அது அவனுடைய சொந்த ஆர்வத்தைப் பொறுத்ததாகும். கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட அனைவருடைய பாவங்களும், கடைசியில் பாவத்தை உற்பத்திசெய்தவன்மீது மீண்டுமாக சுமத்தப்படும். அவர்களுடைய தண்டனையையும் சாத்தானே சுமக்கவேண்டும். இயேசுவின்மூலமாக இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதோர், தங்களுடைய சொந்தப் பாவத்தின் பலனான தண்டனையை தாங்கள் அடைவார்கள். (7)

கிறிஸ்துவின் வாழ்க்கையானது எப்பொழுதுமே உலகச் செல்வாக்கு, மதிப்பு, பகட்டு முதலியவைகளின்றியே இருந்தது. ஆசாரியர்கள் மூப்பர்களுடைய சுகபோகத்திற்கும் பெருமைக்கும் மாறாக, இயேசு, தாழ்மைக்கும் தன்னலமின்மைக்கும் உறைவிடமாகக் காணப்பட்டார். அவருடைய அப்பழுக்கற்ற தூய்மை, அவர்களுடைய பாவங்களைத் தொடர்ந்து கண்டித்தது. அவருடைய தாழ்மையாலும், பரிசுத்தத்தாலும், தூய்மையாலும், அவர்கள் அவரை அவமதித்தார்கள்; ஆனால், இங்கு அவரை அவமதித்தவர்கள், ஒருநாள் பரலோகத்தின் பேரழகோடும் பிதாவின் உன்னத மகிமையோடும் அவரைக் காண்பார்கள். (8)

நியாயமன்றத்திலே அவருடைய இரத்தத்திற்காக தாகங்கொண்டிருந்த விரோதிகளால் சூழப்பட்டிருந்தார். அவரது இரத்தம் எங்கள்மேலும் எங்களது பிள்ளைகள்மேலும் இருக்கக்கடவது என்று, இதயத்தைக் கடினப்படுத்தி உரத்த சத்தமிட்டவர்கள், மேன்மையுள்ள இராஜாவாக அவரைப் பார்ப்பார்கள். கொலையுண்டார்—ஆயினும், மாபெரும் வெற்றிவேந்தராக இன்னும்

வாழ்கிறார். அவரது வெற்றி, மேன்மை, வல்லமை ஆகியவைகள்பற்றிய பாட்டுக்களைப் பாடி, பரலோகக் கூட்டம் அனைத்தும் அவரை அழைத்து வரும். (9)

தரித்திரனான, பெலவீனமான, இழிந்த மனிதன் மகிமையின் இராஜாவின் முகத்திலே துப்பினான். மிருகவெறிபிடித்த கூச்சலோடு மக்கள் கூட்டம் இழிந்த வார்த்தைகளைக்கூறி ஏசிற்று. பரலோகம் முழுவதையுமே வியப்பிலாழ்த்தியிருக்கும் அந்த முகத்தை கொடுமையாலும் அடிகளாலும் நிறைத்துப் பாழ்படுத்தினார்கள். மத்தியான சூரியனைப்போன்ற—பிரகாசமான அந்த முகத்தை மறுபடியும் நோக்கிப்பார்த்து, அதற்குமுன்பாக தப்பிவிட விரைந்து ஓடுவார்கள். மிருகவெறிபிடித்த வெற்றியின் கூச்சலுக்குப் பதிலாக, அவரைக்கண்டு புலம்புவார்கள். (10)

சிலுவை மரணத்தினால் தமது கரங்களில் ஏற்பட்ட, ஆணிகளால் கடாவப்பட்ட வடுக்களை இயேசு காட்டுவார். அந்தக் கொடுமையான தழும்புகளை என்றைக்குமே சுமந்திருப்பார். (11)

ஆணிகள் கடாவப்பட்ட ஒவ்வொரு தழும்பும், மனிதனுக்குக் கிடைத்த அதிசயமான மீட்பைப்பற்றியும், அது எவ்வளவு அரிய விலைகொடுத்து வாங்கப்பட்டது என்பதையும்பற்றிய கதையைக் கூறும். ஜீவனுக்கு அதிபதியானவரின் விலாவிலே, ஈட்டியால் குத்திய அந்த மனிதர்களே, ஈட்டியால் ஏற்பட்ட தழும்பைக்கண்டு, அவரது உடம்பைப் பாழ்படுத்துவதில் தாங்கள் அவ்வாறு பங்குகொண்டதற்காக ஆழ்ந்த துயரத்தோடு புலம்புவார்கள். (12)

சிலுவையிலே அவரது தலைக்கு மேலாக, “யூதர்களுடைய இராஜா” என்று வைக்கப்பட்டிருந்த மேலெழுத்தைக்கண்டு, அவரது கொலையாளிகள் சீறினார்கள்; ஆனால், அவர் வரும்பொழுது, அவரது மகிமையிலும் இராஜரீக வல்லமையிலும் அவரைப் பார்த்தே தீரவேண்டும். அவருடைய மார்பிலும் தொடையிலும் உயிருள்ள எழுத்துக்களால் “இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா” என்று எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். அவர் சிலுவையில் தொங்கும்போது, “இஸ்ரவேலின் இராஜாவாகிய கிறிஸ்துவை நாங்கள் கண்டு விசுவாசிக்கும்படியாக, சிலுவையிலிருந்து இரங்கிவரட்டும்” என்று அவரை நோக்கிக் கேலியாகச் சத்தமிட்டார்கள்; ஆனால், அவரை இராஜவல்லமையோடும் அதிகாரத்தோடும் காண்பார்கள். இஸ்ரவேலின் இராஜா என்பதற்கு எந்தவித ஆதாரத்தையும் அப்பொழுது எதிர்த்துக் கேட்கமாட்டார்கள். அவரது மேன்மை, மகா உன்னத மகிமை ஆகிய எண்ணத்தால் மேற்கொள்ளப்பட்டு, “ஆண்டவருடைய நாமத்தினாலே

வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். (13)

இயேசு தமது ஜீவனை விட்டபோது, பூமி அதிர்ந்ததையும் கன்மலைகள் பிளந்ததையும் பூமியைக் காரிருள் மூடியதையும் "முடிந்தது" என்ற இயேசுவின் உரத்த—பலத்த சத்தத்தையும் கண்ட—கேட்ட விரோதிகளும் கொலையாளிகளும் கலக்கமடைந்து நடுநடுங்கினார்கள். இந்த வியக்கத்தக்க காரியங்களைக் கண்டபோது, சீஷர்கள் ஆச்சரியமடைந்தார்கள்; ஆனால், அவர்களுடைய நம்பிக்கைகளோ நொறுக்கப்பட்டன. தங்களையும் ஒழித்துவிட யூதர்கள் வகைதேடுவார்கள் எனப் பயந்தார்கள். தேவகுமாரனுக்கு விரோதமாக அவர்கள் காட்டிய வெறுப்பு, அவரோடு நின்றுவிடாது என்று நிச்சயமாக உணர்ந்தார்கள். தனித்த மணி நேரங்களை தங்களது ஏமாற்றத்தினிமித்தம் அழுகையிலே செலவளித்தார்கள். இயேசு உலக இராஜாவாக அரசாளுவார் என்று எதிர்பார்த்தார்கள்; ஆனால், அவரோடு அவர்களது நம்பிக்கைகளும் மடிந்துவிட்டன. தங்களது துக்கத்திலும் ஏமாற்றத்திலும், அவர் நம்மை ஏமாற்றிவிட்டாரோ எனச் சந்தேகித்தார்கள். அவர் மேசியாதான் என்ற விசுவாசத்திலே அவரது தாயாருங்கூடத் தடுமாறினார்கள். (14)

சீஷர்கள் இயேசுவைக்குறித்த நம்பிக்கைகளிலே ஏமாற்றமடைந்தபோதிலும், அவரை நேசித்தார்கள். அவரது உடலை சிறப்பாக அடக்கஞ்செய்ய விரும்பினார்கள்; ஆனால், அதை எவ்வாறு பெற்றுக்கொள்வதென்று அறியாதிருந்தார்கள். செல்வந்தனும், யூத ஆலோசனைக் கூட்டத்தில் செல்வாக்கு உள்ளவனும், இயேசுவின் உண்மைச் சீடனுமாகிய அரிமத்தியா ஊரானான யோசேப்பு தனித்து—ஆனால் தைரியமாய் பிலாத்துவிடஞ்சென்று, மீட்பரின் உடலைக் கொடுக்கும்படியாகக் கெஞ்சினான். யூதர்களின் வெறுப்பினால் பகிரங்கமாகப் போக அவன் துணியவில்லை. கிறிஸ்துவின் சடலத்திற்கு மேன்மையான ஒரு இளைப்பாறும் இடத்தைக் கொடுப்பதைத் தடுப்பதற்கு, முயற்சிகள் செய்யப்படுமென சீஷர்கள் பயந்தார்கள். பிலாத்து அவனுக்கு உத்தரவுகொடுத்தான். ஆழ்ந்த மனத்துயரத்தோடு, தங்களது அழிந்துபோன நம்பிக்கையைக் குறித்தத் துக்கத்தோடு சீஷர்கள் அவரது உயிரற்ற உடலை சிலுவையினின்று இறக்கினர்கள். மெல்லிய துணியால் அவரது உடல் கவனமாகச் சுற்றப்பட்டு, யோசேப்பின் புதிய கல்லறையில் வைக்கப்பட்டது. (15)

இயேசு ஜீவித்த காலத்தில் அவரது தாழ்மையான பின்னடியார்களாக வாழ்ந்த பெண்கள் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அவரது விரோதிகள் அவரது சடலத்தை எடுத்துக்கொண்டுபோய்விடாதபடி, அவரது உடல்

கல்லறையில் வைக்கப்பட்டு, கல்லறையின் வாசலில் மிகுந்த பாரமுள்ள ஒரு கல் புரட்டிவைக்கப்படுமட்டும் அவரைவிட்டுப் போகவில்லை; ஆனால், அவர்கள் பயந்திருக்கத் தேவையில்லை. தூதர்களின் கூட்டம் சொல்லமுடியாத ஆர்வத்தோடு, இயேசு இளைப்பாறிய இடத்தைக் காவல்புரிந்தது. மகிமையின் இராஜாவை சிறைவீட்டினின்று விடுதலைசெய்வதில், தங்களுடைய பணியைச் செய்ய, அதற்கான கட்டளைக்காக ஆவலோடே எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். (16)

கிறிஸ்துவைக் கொலைசெய்தவர்கள் அவர் உயிரோடு வந்து தங்களுக்குத் தப்பிவிடுவாரோ எனப் பயந்தார்கள். அவர்கள் மூன்றாம் நாள்வரை கல்லறையைக் காவல்காக்க பிலாத்துவிடம் வேண்டி, காவல்காரர்களைக் கேட்டார்கள். அந்த வேண்டுதல் ஏற்றுக்கொள்ளப் பட்டது. சீஷர்கள் அவரைத் திருடிக்கொண்டுபோய், பின்பு அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று சொல்லாதபடி, கல்லறை வாசலில் வைக்கப்பட்ட கல் முத்திரையிடப்பட்டது. (17) ★

# 41

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்!

சீஷர்கள் தங்கள் ஆண்டவருடைய மரணத்திற்காகத் துக்கித்து ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள். அப்பொழுது மகிமையின் இராஜா கல்லறையில் நித்திரையாயிருந்தார். இரவு நெருங்கும்போது மீட்பரின் கல்லறையண்டை போர்ச்சேவகர்கள் காவல்செய்வதற்காக நிறுத்திவைக்கப்பட்டார்கள். அந்தப் பரிசுத்த இடத்திற்கு மேலாக—கண்ணுக்குத் தெரியாமல், தேவதூதர்கள் ஆகாயத்தில் பரவிநின்றார்கள். மெல்ல மெல்ல இரவு கடந்து சென்றது. இன்னும் இருட்டாயிருக்கும்பொழுது தேவனின் அன்புக்குமாரன்—அவர்களால் நேசிக்கப்பட்ட பாசமுள்ள படைத்தலைவன், விடுதலையடையும் நேரம் ஏறக்குறைய வந்துவிட்டதென்று காவல்செய்யும் தேவதூதர்கள் தெரிந்துகொண்டார்கள். அவரது வெற்றியின் வேளைக்காக ஆழ்ந்த உணர்ச்சி வேகத்தோடு அவர்கள் காத்துக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு மகா வல்லமையுள்ள தூதன் பரலோகத்திலிருந்து வேகமாகப் புறப்பட்டுவந்தான். அவனது முகம் மின்னலைப்போல இருந்தது. அவனது வஸ்திரங்கள் பனியைப்போல் வெண்மையாயிருந்தது. அவனது பிரகாசமானது, வழியிலுள்ள இருட்டைச் சிதறடித்தது. வெற்றியோடு இயேசுவின் உடலை உரிமைபாராட்டிக்கொண்டிருந்த தீய தூதர்கள், அவனது பிரகாசத்தாலும்—மகிமையாலும் நடுக்கத்தோடு அங்கிருந்து ஓடினார்கள். கிறிஸ்துவை அவமானப்படுத்திய காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த தூதர் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன், இப்பொழுது இளைப்பாறும் இடத்தைக் காவல் காத்துக்கொண்டிருந்தான். இந்தத் தூதன் பரத்திலிருந்து வந்த தூதனோடு சேர்ந்து, இருவருமாக கல்லறையண்டை இறங்கிவந்தார்கள். அவர்கள் பூமியை நெருங்கும்போது, பூமி நடுநடுங்கி ஆடிற்று. மாபெரும் பூமியதிர்ச்சியுண்டாயிற்று. (1)

ரோம காவல் சேவகர்களை பயமும் நடுக்கமும் பிடித்தது. இயேசுவின் உடலை வைத்துக்கொள்ளக்கூடிய அந்த வல்லமை இப்பொழுது எங்கே? அவர்கள் தங்களது கடமையையும் நினைக்கவில்லை; சீஷர்கள் அவரது சடலத்தைத் திருடிக்கொண்டு போய்விடுவார்களே என்பதையும்

எண்ணவில்லை. சூரியனைவிட பிரகாசமான தேவ தூதர்களின் ஒளி சுற்றிலும் பிரகாசித்தபோது, ரோமப் போர்ச்சேவகர்கள் செத்தவர்களைப்போல தரையில் விழுந்தார்கள். தூதர்களில் ஒருவன் அந்தப் பெரிய கல்லை கல்லறை வாசலிலிருந்து உருட்டித்தள்ளி, அதன்மேல் உட்கார்ந்தான். அடுத்த தூதன் கல்லறையினுட்சென்று, இயேசுவின் தலையிலிருந்த துணியை அவிழ்த்தான்; பின்பு, பரலோகத்திலிருந்து வந்த தூதன் பூமியை அதிரவைக்கும் குரலில்: தேவனுடைய குமாரனே, உமது பிதா உம்மை அழைக்கிறார்; வெளியே வாரும் என்று உரத்தசத்தமிட்டான். இதற்குமேலாக மரணத்திற்கு அவர்மீது ஆளுகையில்லை. இயேசு மரித்தோரிலிருந்து வெற்றி வீரராக எழும்பினார். மிகவும் பயபக்தியோடும் நடுக்கத்தோடும் தூதர் கூட்டம் அனைத்துமே, இந்தக் காட்சியை உற்றுநோக்கினார்கள். இயேசு கல்லறையைவிட்டு வெளியே வந்தபோது, அந்த பிரகாசிக்கும் தேவ தூதர்கள் முகங்குப்புறத் தரையில் விழுந்து பணிந்துகொண்டு, வெற்றியின் ஜெயகீதங்களைப் பாடி அவரைத் துதித்தார்கள். (2)

பரலோக தூதர்களின் பிரகாசமாக ஊடுருவிப்பாயும் அந்த வெளிச்சத்தின்முன், சாத்தானின் தூதர்கள் ஓட்டம்பிடித்தார்கள். தங்களுக்குக் கிடைக்கவேண்டிய இரை, தங்களிடமிருந்து பலாத்காரமாக பிடுங்கப்பட்டுவிட்டதென்றும், தாங்கள் யாரை அவ்வளவாக வெறுத்தார்களோ அவர், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரென்றும், தங்கள் மன்னனாகிய சாத்தானிடம் மிகுந்த கசப்புணர்வோடு குற்றஞ்சாட்டினார்கள். விழுந்துபோன மனிதனிடம் தாங்கள்கொண்ட வல்லமை ஜீவனுக்கு அதிபதியான ஆண்டவரையே கல்லறையில் கொண்டுவைத்துவிட்டதென சாத்தானும் அவனது தூதர்களும் எக்களித்து, பயங்கரமான வெற்றிப்பெருமிதத்தோடு கொண்டாடினார்கள்; ஆனால், அது அதிக நேரம் நீடிக்கவில்லை. கெம்பீரமான வெற்றி வீரராக, தமது சிறை வீட்டினின்று இயேசு வெளிவந்தபோது, சாத்தான்—தான் கொஞ்சக்காலத்திற்குப்பின் மரிக்கவேண்டுமென்பதையும், தான் வைத்திருக்கும் இந்த இராஜ்யம் அதன் உரிமையாளருக்குப் போய்விடுமென்பதையும் அறிந்தான். சாத்தான் எத்தனையோ முயற்சிகள் செய்தபோதிலும், இயேசுவை மேற்கொள்ளமுடியாமற்போயிற்று; ஆனால், இயேசு மனிதனுக்கு இரட்சிப்பின் வழியைத் திறந்துவிட்டதினால், யாரானாலும்—அந்த வழியில் நடப்பவர்கள் எவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்து புலம்பிச் சீற்றங்கொண்டான். (3)

தீய தூதர்களும் அவனது தலைவனான சாத்தானும், மறுபடியும் ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டினார்கள். தேவனுடைய ஆளுகைக்கு விரோதமாக, இனியும் எவ்வாறு வேலைசெய்யலாம் என யோசித்தார்கள். சாத்தான் தனது ஊழியர்களை, பிரதான ஆசாரியர்களிடத்திலும்

மூப்பர்களிடத்திலும் போகும்படிக் கட்டளையிட்டான். சாத்தான் அவர்களை நோக்கி: "நாம் அவர்களை ஏமாற்றுவதில் வெற்றிபெற்றோம். இயேசுவிற்கு எதிராக அவர்களது கண்களைக் குருடாக்கி, அவர்களது இருதயத்தைக் கடினப்படுத்தினோம். அவன் ஒரு மோசக்காரன் என்று அவர்களை நம்பச்செய்தோம். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற வெறுக்கப்படக்கூடிய செய்தியை, ரோமகாவல்காரன் எடுத்துச்செல்வான். இயேசு உயிர்த்தெழுந்தார் என்று வெளியே தெரியுமானால், குற்றமில்லாத மனிதனைக் கொலைசெய்ததினிமித்தம் மக்கள் அவர்களைக் கல்லெறிவார்கள் என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்" என்று கூறினான். (4)

பரலோக தூதர் கூட்டம் கல்லறையைவிட்டுச் சென்றுவிட்டபோது, மகிமையும் வெளிச்சமும் தானாகக் கடந்துசென்றது. ரோமப் போர்ச்சேவகர்கள் தலையைத் தூக்கி, மெல்ல அங்குமிங்கும் தங்களைச்சுற்றிலும் பார்த்தார்கள். அந்தக் கல்லறையின் வாசலிலிருந்த பெரிய கல் அங்கிருந்து உருட்டப்பட்டு, இயேசுவின் உடலும் அங்கு இல்லாமற்போனதைக்கண்டு, ஆச்சரியத்தில் மூழ்கிநின்றார்கள். தாங்கள் கண்டதை ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் கூறும்படியாக பட்டணத்திற்குள் விரைந்தார்கள். இந்த ஆச்சரியமான செய்தியைக் கேட்டவுடன், அந்தக் கொலைகாரர்கள் ஒவ்வொருவருடைய முகமும் வெளுத்தது. தாங்கள் செய்துமுடித்த அந்தக் காரியத்தை நினைத்தபோது, பயங்கரம் அவர்களைப் பிடித்தது. அந்தச் செய்திமாத்திரம் உண்மையாயிருந்ததானால், அவர்களுக்குத் தோல்வி நிச்சயமாயிற்று. கொஞ்சநேரத்திற்கு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு, என்னசெய்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். இந்தச் செய்தியை ஏற்றுக்கொண்டார்களென்றால், தங்களையே ஆக்கினைக்குள்ளாக தீர்த்துக்கொண்டார்களென்பது பொருள். வேறுபுறமாகச்சென்று என்ன செய்யப்படவேண்டுமென்று ஆலோசித்தார்கள். இந்தக் காவலன் கொண்டுவந்த செய்தி, மக்களுக்குள்ளே பரவுமானால், கிறிஸ்துவைக் கொலைசெய்தவர்கள் அனைவரும் கொலைபாதகர்கள் என்று மரணாக்கினைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதை நன்கு விளங்கிக்கொண்டார்கள். காரியத்தை இரகசியமாக வைப்பதற்காக, போர்ச்சேவகர்களுக்கு இலஞ்சம் கொடுக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆசாரியர்களும் மூப்பர்களும் ஏராளமான பணத்தை அவர்களுக்குக் கொடுத்து: "அவருடைய சீஷர்கள் இரவிலே வந்து, நாங்கள் தூங்கும்போது அவரைக் களவாய்க்கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்" என்றார்கள். பணிநேரத்தில் தூங்கியதற்காக தங்களுக்கு என்னசெய்யப்படும் என்று போர்ச்சேவகர்கள் யூத அதிகாரிகளை வினவியபோது, அவர்கள்

இந்தக் காரியத்தைக்குறித்து, தேசாதிபதியுடன் பேசி இணங்கச்செய்து, அவர்களுக்கும் காவலர்களுக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். பணத்திற்காக ஆசாரியர்களாலும் மூப்பர்களாலும் கொடுக்கப்பட்ட ஆலோசனையை ஏற்றுகொள்ளச் சம்மதித்து, இவ்வாறாக ரோம காவலர்கள் தங்களது நன்மதிப்பை விற்றுப்போட்டார்கள். (5)

இயேசு சிலுவையில் தொங்கி, முடிந்தது என்று சத்தமிட்டபோது கன்மலைகள் பிளந்தன; பூமி அதிர்ந்தது; சில கல்லறைகள் திறவுண்டன; மரணத்தின்மேலும் பாதாளத்தின்மேலும் வெற்றிபெற்றவராக அவர் உயிர்த்தெழுந்தபோது, பூமி ஆட்டங்கண்டு தள்ளாடி, அந்தப் பரிசுத்த இடத்தைச் சுற்றிலும் பரலோக மகிமை பிரகாசித்தபோது, அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அநேக மரித்த நீதிமான்களுங்கூட கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்தார் என்பதற்கு சாட்சிகளாக, அவரது விசேஷ சலுகைபெற்ற—உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் மகிமையடைந்தவர்களாய் கல்லறையைவிட்டு வெளியேவந்தார்கள். சிருஷ்டிப்பின்நாள்முதல் கிறிஸ்துவின் நாள்வரைக்கும், ஒவ்வொரு காலப்பிரிவிலுமுள்ள தெரிந்துகொள்ளப்பட்ட அவரது பரிசுத்தவான்கள் காணப்பட்டார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மையை மூடிமறைக்கத் தக்கதாக யூதத் தலைவர்கள் வழிவகைகள் தேடியபோது, இயேசு உயிர்த்தெழுந்தாரென்றும், அவரது மகிமையை உறுதியாகக் கூறியறிவிப்பதற்காகவும், கல்லறைகளினின்று ஒரு கூட்டத்தை கொண்டுவர தேவன் தீர்மானித்தார். (6)

உயிர்த்தெழுந்தவர்கள் உயரத்திலும் உருவத்திலும் மாறுபட்டார்கள். சிலர் மற்றவர்களைவிட தோற்றத்தில் மிக மேன்மையாகக் காணப்பட்டார்கள். பூமியின் குடிகள் காலம் செல்லச்செல்ல, தங்களது பெலத்திலும் அழகிலும் குறைந்து, இழிநிலை அடைந்துகொண்டேபோகிறார்கள் என்பது எனக்குச் சொல்லப்பட்டது. வியாதி, மரணம் ஆகியவற்றின்மீது சாத்தானுக்கு வல்லமை இருக்கிறது. ஒவ்வொரு காலத்திலும் சாபத்தின் விளைவுகள் மேலும் தெளிவாகக் காணப்பட்டு, சாத்தானின் வல்லமையும் மிகவும் விளக்கமாகத் தெரிகின்றது. நோவா, ஆபிரகாம் ஆகியோரது நாட்களில் வாழ்ந்தவர்கள் தங்களது உருவத்திலும், பெலத்திலும், அழகிலும் தூதர்களை ஒத்திருந்தார்கள்! ஆனால், ஒவ்வொரு பின்தலைமுறையும் பலவீனமடைந்து, வியாதிகளுக்கு ஆளாக, அவர்களது வாழ்நாளும் குறுகிப்போயிற்று. சாத்தான் மனித இனத்திற்கு எப்படித் தொல்லைகொடுத்து, அதை பலவீனப்படுத்தலாமென்று பயின்றுகொண்டுவருகிறான். (7)

இயேசு உயிர்த்தெழுந்தபிறகு, அவரோடு உயிர்த்தெழுந்தவர் களும் அநேகருக்குக் காணப்பட்டு, மனிதனுக்காக கிறிஸ்துவின் பலி

நிறைவடைந்தது என்று கூறினார்கள்; மேலும், யூதர்கள் சிலுவையிலறைந்த கிறிஸ்து உயிர்த்தெழுந்தாரென்றும், தங்களுடைய வார்த்தைகளுக்கு ஆதாரமாக அவரோடு தாங்களும் உயிர்த்தெழுந்தோம் என்றும் கூறியறிவித்தார்கள்; மேலும், அவருடைய மாபெரும் வல்லமையினாலே, தாங்கள் கல்லறையினின்று வெளிவரமுடிந்தது என்றும் அவர்கள் சாட்சிகூறினார்கள். பொய்யான வதந்திகள் பரப்பிவிடப்பட்டபோதிலுங்கூட, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் செய்தியை சாத்தானாலும் அவனுடைய தூதர்களாலும், பிரதான ஆசாரியர்களாலும் மறைக்கக்கூடாமற்போயிற்று. கல்லறையினின்று கொண்டுவரப்பட்ட பரிசுத்த கூட்டம், இந்த அதிசயமான—சந்தோஷமான செய்தியை எங்கும் பரப்பியது. இதயம் உடைந்தவர்களாக, துக்கத்தோடிருந்த சீஷர்களுக்கு இயேசு தம்மைக் காண்பித்ததின்மூலமாக, அவர்களுடைய பயத்தை துரத்தியடித்து மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணினார். (8)

இந்தச் செய்தியானது, பட்டணங்கள்தோறும் நகரங்கள்தோறும் பரவியபோது, யூதர்கள் தங்களது உயிருக்குப் பயந்து, சீஷர்களுக்கு விரோதமாக நெஞ்சாரப்பேணிய தங்களுடைய வெறுப்பை மூடிமறைத்தார்கள். அவர்களுடைய பொய்யான வதந்தியைப் பரப்புவதே, அவர்களுடைய ஒரே நம்பிக்கையாயிருந்தது. இந்தப் பொய்யான வதந்தி உண்மையாயிருக்க வேண்டுமே என விரும்பியவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்திகேட்டு பிலாத்து நடுநடுங்கினான். கொடுக்கப்பட்ட சாட்சிகளை அவனால் சந்தேகிக்கமுடியவில்லை. அந்த நேரத்திலிருந்து என்றைக்குமாக சமாதானம் அவனைவிட்டு விலகிப்போயிற்று. உலகத்தின் நன்மதிப்பிற்காகவும், தனது அதிகாரத்தையும் உயிரையும் இழப்பதற்கும் பயந்து, இயேசுவை மரணாக்கினைக்கு ஒப்புக்கொடுத்தான். ஒரு குற்றமுற்ற மனிதனுடைய இரத்தப்பழிக்கு ஆளானோம் என்பதுமாத்திரமல்ல, அவர் தேவ குமாரன் என்ற காரியத்தையும் முற்றிலுமாக விளங்கிக்கொண்டான். முடிவுமட்டும் கடுந்துயரத்தை அனுபவித்தான். மனக்கசப்பும் கடுந்துயரமும் அவனுடைய நம்பிக்கையான—மகிழ்ச்சியான உணர்ச்சிகளை அழித்துப்போட்டது. அவன் தேற்றப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுத்து, மிகுந்த துயரமுள்ள மரணத்தையடைந்தான். (9)

1 ஏரோதின் இருதயமோவெனில் மேலும் கடினப்பட்டது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று கேள்விப்பட்டபோது, அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. யாக்கோபைக் கொலைசெய்தான். இது யூதர்களுக்குப் பிரியமாயிருந்தது என்று கண்டு, பேதுருவையும் பிடித்து கொலைசெய்ய எண்ணங்கொண்டான்; ஆனால், பேதுருவிற்கு தேவன் ஒரு வேலையை

வைத்திருந்ததால், அவர் தமது தூதனை அனுப்பி, பேதுருவை விடுவித்தார். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் ஏரோதின்மேலும் வந்தது. திரளான மக்களின் முன்னிலையில் அவன் தன்னை உயர்த்தியபோது, தேவனுடைய தூதனால் அடிக்கப்பட்டு, மிகுந்த பயங்கரமான மரணத்தையடைந்தான். (10)

வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே, வெளிச்சமாகுமுன்பே பக்தியுள்ள பெண்கள் இயேசுவின் உடலுக்கு சுகந்தவர்க்கமிடும்படி வாசனைத் திரவியங்களை எடுத்துக்கொண்டு கல்லறையண்டை வந்தார்கள். அந்தப் பாரமான பெரிய கல், கல்லறையின் வாசலிலிருந்து உருட்டப்பட்டுக்கிடப்பதைக் கண்டார்கள். இயேசுவின் உடலையோ அங்கு காணவில்லை. அவர்களது இதயங்கள் அப்படியே அவர்களுக்குள் அமிழ்ந்துபோயின. தங்களது விரோதிகள் இயேசுவின் உடலைக் கொண்டுபோய்விட்டார்கள் எனப்பயந்தார்கள். திடீரென்று வெண்மையான வஸ்திரந்தரித்த இரண்டு தூதர்களைக் கண்டார்கள். அவர்களுடைய முகங்கள் பிரகாசித்து ஒளிர்ந்தன. பெண்கள் அங்கு செய்யவந்த வேலையை, அந்தப் பரலோகவாசிகள் அறிந்து, அவர்களை நோக்கி: இயேசு இங்கில்லை; அவர் உயிர்த்தெழுந்தாரென்றும், அவரது உடல் கிடத்தப்பட்டிருந்த இடத்தை அவர்கள் காணலாமென்றும் கூறினார்கள். அவர்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவிற்குச் செல்வார் என்று சொல்லி, அவர்களைப்போய் இந்தச் செய்திகளை சீஷர்களுக்கு அறிவிக்கும்படிக் கட்டளையிட்டார்கள். பயத்தோடும் மிகுந்த மகிழ்ச்சியோடும் பெண்கள் விரைந்தோடி, துக்கத்தில் மூழ்கியிருக்கும் சீஷர்களுக்கு, தாங்கள் கண்ட— கேட்ட காரியங்களை அறிவித்தார்கள். (11)

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை சீஷர்களால் நம்ப முடியவில்லை. இந்தச் செய்தியைக் கொண்டுவந்த பெண்களோடு கல்லறைக்கு விரைந்தோடினார்கள். இயேசு அங்கே இல்லாதிருப்பதையும் அவரைச் சுற்றியிருந்த துணிகள் அங்கிருப்பதையும் கண்டார்கள்; ஆனால், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற அந்த நல்ல செய்தியை அவர்களால் நம்பக்கூடாமலிருந்தது. தாங்கள் கண்ட காரியங்களைக்குறித்தும், பெண்களால் கொண்டுவரப்பட்ட செய்தியைக்குறித்தும் ஆச்சரியமடைந்த வர்களாக வீடுதிரும்பினார்கள்; ஆனால், மரியாளோ கல்லறையைச் சுற்றி நேரத்தைச் செலவிடுவதைத் தெரிந்துகொண்டு, தான் கண்டவைகளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு, ஒருவேளை தான் ஏமாற்றப்பட்டிருக்கலாமோ என நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். மேலும் புதிய துன்பங்கள் தனக்காகக் காத்திருக்கிறது என உணர்ந்தாள். மறுபடியும் துக்கம் நிறைந்தவளாக மனங்கசந்து அழ ஆரம்பித்தாள். மீண்டும் கல்லறையினுள் பார்ப்பதற்காகக்

குனிந்தாள். அங்கு வெண்மையான வஸ்திரம் தரித்த இரண்டு தூதர்களைக் கண்டாள். இயேசுவின் தலை வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒருவரும், பாதங்களிருந்த இடத்தில் மற்றும் ஒருவருமாக உட்கார்ந்திருந்தார்கள். ஏன் அவள் அழவேண்டுமென ஆதரவோடு கேட்டார்கள். அதற்கு மரியாள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்; அவரை வைத்த இடத்தை நான் அறியேன் என்று கூறினாள். (12)

அவள் கல்லறையினின்று திரும்பும்போது இயேசு அங்கு நிற்பதைக் கண்டாள்; ஆனால், அவர்தான் இயேசு என்று அறியவில்லை. அவளுடைய துக்கத்திற்குக் காரணமென்னவென்றும், யாரைத் தேடிக்கொண்டிருக்கிறாளென்றும் அவர் ஆதரவோடு வினவினார். அவரைத் தோட்டக்காரரென எண்ணி, ஒருவேளை அவளுடைய ஆண்டவரை எங்காவது எடுத்துச் சென்றதுண்டானால்—வைத்த இடத்தைச் சொன்னால் தான் அவரை எடுத்துக் கொண்டுபோகமுடியுமெனக் கெஞ்சினாள். அவரோ, அவருக்கே உரிய பரலோகக்குரலில் அவளை நோக்கி: "மரியாளே" என்றார். அவளுக்குப் பழக்கப்பட்ட அந்த அன்பான குரலைக் கேட்டபோது: உடனடியாக "போதகரே" என்றாள். அவளுடைய மகிழ்ச்சியில் அவரைத் தழுவிக்கொள்ள முனைந்தபோது, இயேசு அவளை நோக்கி: "என்னைத் தொடாதே; நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப்போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார். மகிழ்ச்சியோடு இந்த நற்செய்தியைக் கூறும்படி சீஷர்களிடத்திற்கு விரைந்தாள். தாம் செலுத்திய பலியை பிதா ஏற்றுக்கொண்டார் என்று அவர் வாயினின்று கேட்கவும், பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள எல்லா வல்லமையையும் பெற்றுக்கொள்ளவும், இயேசு விரைந்து பரமேறி பிதாவிடத்திற்குச் சென்றார். (13)

தேவகுமாரனைச் சுற்றிலும் மேகம்போன்று தூதர்கள் சூழ்ந்து, மகிமையின் இராஜா பிரவேசிக்கும்படியாக, நித்திய கதவுகளை உயர்த்தும்படிக் கட்டளையிட்டார்கள். இயேசு பிரகாசமான பரலோகக் கூட்டத்தாரோடு தேவனுடைய சந்நிதியில் அவரது மகிமையால் சூழப்பட்டிருக்கும்போது, பூமியிலிருக்கும் சீஷர்களை மறந்துவிடவில்லை என்பதை நான் கண்டேன். திரும்பிவரும்போது, அவர்களுக்குக் கொடுப்பதற்காக பிதாவிடம் வல்லமையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். அதே நாளிலே, அவர் பூமிக்குத் திரும்ப வந்து, தமது சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்தார். அவர் தமது பிதாவிடத்திற்கு ஏறிப்போய், வல்லமையைப் பெற்றுவந்ததினால், தன்னை

அவர்கள் தொடும்படி அனுமதித்தார். (14)

இந்தச் சமயத்திலே, தோமா அங்கிருக்கவில்லை. சீஷர்கள் கொண்டு வந்திருந்த செய்தியை தாழ்மையுடன் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் அவருடைய கையில் ஆணிகளினாலுண்டான தழும்பைக்கண்டு, அந்தத் தழும்பிலே விரலையிட்டும், கொடும் ஈட்டியால் குத்தப்பட்ட அவருடைய விலாவிலே கையைப்போட்டும் பார்த்தாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் வலியுறுத்திக் கூறினான். இந்தக் காரியத்தில் சகோதரரிடத்திலே தனது நம்பிக்கையின்மையைக் காட்டினான். இவ்வாறு எல்லாருமே இந்தவிதமான ஆதாரத்தை வேண்டுவார்களானால், அப்பொழுது ஒருவருமே இயேசுவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவருடைய உயிர்த்தெழுதலை விசுவாசிக்கமாட்டார்கள். உயிர்த்தெழுந்த மீட்பரின் வார்த்தைகளைக் கேளாமலும், அவரைப் பார்க்காமலும் இருப்பவர்களும் சீஷர்களின் செய்தியை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது தேவசித்தம். தோமாவின் அவிசுவாசத்தை தேவன் விரும்பவில்லை. மறுபடியும் இயேசு அவருடைய சீஷர்களைச் சந்தித்தபோது, தோமாவும் அவர்களோடிருந்தான். அவன் இயேசுவைக்கண்டபோது, அவரை விசுவாசித்தான். சரியான ஆதாரத்தோடு, தோற்றமும் இருந்தாலொழிய திருப்தியடையமுடியாது என்பதாக முன்பே அறிவித்திருந்தான். அவன் விரும்பிய ஆதாரத்தை அவனுக்குக் கொடுத்தார். தோமா அவரைநோக்கி: “என் ஆண்டவனே, என் தேவனே” எனச் சத்தமிட்டான். இயேசு அவனது அவிசுவாசத்திற்காக அவனைக் கடிந்துகொண்டு: “தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்; காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்” என்றார். (15)

இதுபோலவே, முதலாம், இரண்டாம் தூதனின் தூதுகளில் அனுபவமில்லாதவர்கள், அந்தத் தூதுகளை அனுபவித்துப் பின்பற்றுவோரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். இயேசு தள்ளப்பட்டதுபோல, இந்தத் தூதுகளும் தள்ளப்பட்டதை நான் கண்டேன். வானத்தின்கீழே மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல், வேறொரு நாமத்தில் மீட்பு இல்லையென சீஷர்கள் அறிவித்தார்கள்; அதுபோலவே, மூன்றாம் தூதின் ஒரு பகுதியை மாத்திரம் தழுவிக்கொள்பவர்கள் தேவன் கொடுத்த எல்லாத் தூதுகளையும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால், இந்தக் காரியத்தில் அவர்களுக்குப் பங்கில்லை என்று தேவனுடைய ஊழியர்கள் உண்மையாகவும் பயமின்றியும் எச்சரிக்கவேண்டும். (16)

இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை பரிசுத்தமுள்ள பெண்கள்

எங்கும் எடுத்துச்சென்றபோது, பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களுடைய வாயிலே போட்ட பொய்யான வதந்தியை, அதாவது—இரவோடு இரவாக சீஷர்கள் வந்து, தாங்கள் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது, இயேசுவின் உடலைக் திருடிக்கொண்டுபோய்விட்டார்கள் என்ற செய்தியை ரோமப் போர்ச்சேவகர்கள் பரப்பிக்கொண்டிருந்தார்கள். பிரதான ஆசாரியர்களுடைய இருதயத்திலும் வாயிலும், சாத்தான் இந்தப் பொய்யை வைத்துவிட்டான். அவர்களுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள மக்கள் ஆயத்தமாக இருந்தார்கள். தேவன் இந்தக் காரியத்தை மிகவும் நிச்சயமாக்கி, நமது மீட்பைச் சார்ந்திருக்கும் இந்தச் சம்பவத்தை சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஆக்கினார். பிரதான ஆசாரியர்களுக்கும் மூப்பர்களுக்கும் அதை மறைத்துப்போட முடியாமற்போயிற்று. மரித்தோரிலிருந்து சாட்சிகள் எழுப்பப்பட்டு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டது. (17)

இயேசு தமது சீஷர்களோடு 40 நாட்கள் தங்கியிருந்து, தேவனுடைய இராஜ்யத்தின் உண்மைகளை அவர்களுக்கு முற்றிலுமாக விவரித்துக்கூறியபோது, அவர்கள் இருதயம் மகிழ்ச்சியாலும் பேரானந்தத்தாலும் நிறைந்தது. அவருடைய பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைபற்றி அவர்கள் கண்டு—கேட்ட காரியங்களை சாட்சியாக அறிவிக்கவேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். தம்மிடத்தில் வருபவர்கள் நித்திய ஜீவனைக் கண்டடையத்தக்கதாக, அவர் பாவத்திற்காக பலியானார் என்பதையும் அவர்கள் சாட்சியாக அறிவிக்கவேண்டும். மிகுந்த உண்மையான அனுதாபத்தோடு அவர்கள் அனுபவிக்கவேண்டிய உபத்திரவங்கள் பற்றியும் துன்பங்கள்பற்றியும் கூறினார்; ஆனால், தங்களது பழைய அனுபவங்களை நினைவுகூர்ந்து, அவர் தம்மோடே பேசிய வார்த்தைகளை ஞாபகத்தில்கொண்டுவந்து, அதில் ஆறுதல் அடையவேண்டுமெனக் கூறினார். பாடுகள், துன்பங்கள் ஆகியவற்றின் மூலமாகத்தான், சாத்தானால் வந்த சோதனைகளின்மீது அவர் வெற்றி கண்டார் என்பதைக் கூறினார். சாத்தானுக்கு அவர்மீது எந்தவிதமான வல்லமையும் இல்லையெனக் கூறினார்; ஆனால், அவரது நாமத்தை விசுவாசித்தவர்கள் அத்தனைபேர்மேலும், நேரடியாக அவன் சோதனையைக் கொண்டுவருவான் எனக் கூறினார்; எனவே, அவர் மேற்கொண்டதுபோலவே அவர்களும் மேற்கொள்ளலாம். இயேசு அவருடைய சீஷர்களுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கொடுத்திருந்தார். அவர்கள் துன்மார்க்கரால் உபத்திரவப்படும் பொழுது, காலாகாலங்களில் தொடர்ந்து அவர் தமது தூதர்களை அனுப்பி, அவர்களை விடுதலைசெய்வார். அவர்களுடைய வேலை நிறைவேறும்வரை, அவர்களுடைய உயிரைப்

போக்கமுடியாது. தாங்கள் எடுத்துச்சென்ற சாட்சிகள், தங்களது இரத்தத்தால் முத்திரையிடப்படவேண்டுமென்பது அவசியமாயிருக்கிறது. (18)

அவரது ஆர்வமுள்ள பின்னடியார்கள், மகிழ்ச்சியோடு அவரது போதகத்திற்குச் செவிசாய்த்தார்கள். அவருடைய பரிசுத்த உதடுகளிலிருந்து விழுந்த ஒவ்வொரு வார்த்தையையும், ஆர்வத்தோடு எடுத்து உட்கொண்டார்கள். இப்பொழுது அவர்தான் உலகத்தின்மீட்பர் என்று நிச்சயமாக அவர்களுக்குத் தெரியும். அவருடைய வார்த்தைகள் அவர்களுடைய இருதயத்தில் ஆழமாகப் பதிந்தன. தமது பரலோகப் போதகரைவிட்டு சீக்கிரம் பிரியவேண்டுமே என்று துக்கித்தார்கள். இனி அவரது வாயினின்று வரும் ஆறுதலான கிருபையுள்ள வார்த்தைகளை அவர்கள் ஒருபோதும் கேட்கமுடியாது; ஆனால், இயேசு தாம் போய் அவர்களுக்காக மாளிகைகளை ஆயத்தம்பண்ணி, அவர்கள் சதாகாலமும் தம்மோடு இருக்கும்படியாக, திரும்பவும்வந்து கூட்டிச்செல்வதாகக் கூறியபோது, அவர்களது இருதயங்கள் அன்பினாலும் மிகுந்த மகிழ்ச்சியினாலும் அனலடைந்தன. அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும்படியாக, பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாகவும் வாக்களித்தார்; மேலும், அவர் தமது கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். (19)

---

[1]ஏரோது அந்திப்பாதான், இயேசு கிறிஸ்துவை விசாரணைசெய்வதில் பங்குகொண்டவர். முதலாம் ஏரோது அகிரிப்பா, யாக்கோபை மரணதண்டனைக்கு உள்ளாக்கியவராகும். அகிரிப்பா, அந்திப்பாவுடைய உடன்பிறந்தாரது மகனும், மைத்துனருமாவார். மறைமுகமாக—சதித்திட்டத்தின்மூலமாக அந்திப்பாவிற்குக் கிடைக்கவேண்டிய சிங்காசனத்தை, அகிரிப்பா தனக்கு எடுத்துக்கொண்டார். ஆளுகையைப் பெற்றுக்கொண்டபிறகு, அந்திப்பாவின் வழியில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் சூழ்ச்சிகளைத் தொடர்ந்தார். ஏரோதின் இராஜ பரம்பரையில், ஏரோது என்ற பெயரைக் கொண்டவர்கள் ஆறுபேருண்டு. இது ஒருவழியில் பார்த்தால், பொதுவான ஒரு பட்டமாகக் காணப்பட்டது. தனிப்பட்ட நபர்கள் அந்திப்பா, பிலிப்பு, அகிரிப்பா போன்ற பெயர்களால் குறிக்கப்பட்டு நியமனம்பெற்றார்கள்; எனவே, நாம் ஜார்(czar) நிக்கோலாஸ், ஜார் அலெக்சாண்டர் போன்ற பெயர்களால் அழைப்பது போன்றிருக்கும். இந்தச் சமயத்தில் கிடைக்கும் சான்றின்படி இந்தப் பதமானது மிகவும் இயல்பாகவும் பொருத்தமாகவும் இருக்கும்; காரணம் என்னவென்றால், அகிரிப்பா, யாக்கோபைக் கொலைசெய்தபோது, அந்திப்பாவின் சிங்காசனத்தைக் கைப்பற்றிக்கொண்டார். இந்த அந்திப்பா, இதற்கு சற்று முன்னர்தான் இயேசு கிறிஸ்துவின் விசாரணையில் அக்கறைக்காட்டியிருந்தார். அவரும் இதே குணத்தையே வெளிப்படுத்தினார்; எனவே, இதுவும் அதேபோன்ற “ஏரோதிய ஆவிதான்: ஆனால் இன்னொரு முக்கிய தனிநபரில் காணப்பட்டது; அவ்வளவுதான். இந்த ஏரோதிய ஆவி எப்படி காணப்படுகிறது என்று பார்க்கும்போது, வெளிப்படுத்தின விசேஷத்தில்

12:17–ல் காணப்படும் அதே வலுசர்ப்பமே 3–ம் வசனத்திலும் காணப்படுகிறது". இந்த ஒவ்வொரு இடத்திலுமே உண்மையாகவே தூண்டும் வல்லமை 9–ம் வசனத்தில் காணப்படும் வலுசர்ப்பமே! ஒன்றிலே அஞ்ஞான ரோம்மூலமாகவும், அடுத்ததில் நமது சொந்த அரசாங்கத்தின்மூலமாகவும் செயல்படுகிறான். ★

# 42

# கிறிஸ்துவின் பரமேறுதல்!

இயேசு தமது பிதாவினிடத்திற்குப் பரமேறும் அந்தக் காட்சியின் வெற்றி நேரத்தைக் காண பரலோகம் முழுவதுமே காத்துக்கொண்டிருந்தது. மகிமையின் இராஜாவை எதிர்கொண்டு வெற்றியோடு பரத்திற்கு அழைத்துச் செல்ல தூதர்கள் வந்தார்கள். இயேசு தமது சீஷர்களை ஆசீர்வதித்தபின்பு, அவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் மேல்நோக்கிச் சென்றபோது, சிறைப்பட்டிருந்த (மரணத்தால்) கைதிகளான திரளானவர்கள் அவரோடு உயிர்த்தெழுதலில் எழுப்பப்பட்டு, பின்சென்றார்கள். திரளான பரலோகவாசிகள் அங்கு காணப்பட்டார்கள். பரலோகத்திலே எண்ணிறந்த கூட்டமான தூதர்கள், அவருடைய வருகைக்காகக் காத்திருந்தார்கள். பரிசுத்தப் பட்டணத்தை அவர்கள் அடைந்தபோது, இயேசுவை அழைத்துவந்த தூதர்கள்: "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே உயருங்கள்; மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பார்" என்று சத்தமிட, அதற்குப் பதிலாக, பட்டணத்திலிருந்த தூதர்கள் மகிழ்ச்சியோடு: "யார் இந்த மகிமையின் இராஜா?" என்று வினவ, அவரை அழைத்துவந்த தூதர்கள் வெற்றியோடு: "அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே! வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே உயருங்கள்; மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பார்" என்றார்கள். மறுபடியும் அங்கு காத்திருக்கும் தூதர்கள்: "யார் இந்த மகிமையின் இராஜா?" என்றார்கள். அவரை அழைத்துவந்த தூதர்கள் இன்னிசைக் குரலிலே: "சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் இராஜா" என்று பதில் கொடுத்தார்கள். இந்தப் பரலோகக் கூட்டம் தேவ பட்டணத்திற்குள் சென்றது. தமது கெம்பீரமான படைத்தலைவரைச் சுற்றிலும் பரலோகக் கூட்டம் சூழ்ந்தது. ஆழ்ந்த பக்தியோடு அவருக்குமுன் தலைகுனிந்து, தங்களது ஜொலிக்கும் கிரீடங்களை அவருடைய பாதபடியில் வைத்தார்கள்; பின்பு, தங்களது பொற்சுரமண்டலங்களைப் பிடித்து, அடிக்கப்பட்டும், என்றுமாக கெம்பீரத்திலும் மகிமையிலும் வாழுகின்ற ஆட்டுக்குட்டியானவருக்கு,

பொருள்செறிந்த கீதங்களையும் பாடல்களையும் இனிமையாக இசைத்து பரலோகத்தையே நிறைத்தனர். (1)

சீஷர்கள் மிகுந்த வருத்தத்தோடு பரத்தை நோக்கியவாறு, பரமேறும் ஆண்டவருடைய தோற்றத்தின் கடைசிக்காட்சியை கண்டுகொண்டிருக்கும்போது, இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர், எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள். சீஷர்களும் தேவகுமாரனின் பரமேறுதலைப் பார்த்துக்கொண்டிருந்த அவருடைய தாயாரும், அந்த இரவில் அவருடைய அதிசயமான செய்கைகள்பற்றியும், ஒரு குறுகிய காலத்திற்குள் நடைபெற்ற ஆச்சரியமான மகிமையான சம்பவங்கள்பற்றியும் பேசிப்பேசி அந்த இரவைக் கழித்தார்கள். (2)

சாத்தான் மறுபடியும் தனது தூதர்களோடு ஆலோசனைசெய்தான். தேவனுடைய ஆளுகைக்கு விரோதமாக கசப்புமிகுந்த வெறுப்படைந்து தான் இந்தப் பூமியின்மீது வல்லமையும் அதிகாரமும் வைத்திருக்கும்வரை, இயேசுவின் பின்னடியார்களுக்கும் எதிராக, பத்துமடங்கு அவர்களது முயற்சிகள் பலப்படுத்தப்பட வேண்டுமென்று தனது தூதர்களிடம் கூறினான். அவர்கள் கிறிஸ்துவிற்கு விரோதமாக எதுவுமே செய்யமுடியவில்லை; சாத்தியப்படுமானால், அவருடைய பின்னடியார்களை முறியடிக்க வேண்டும். ஒவ்வொரு தலைமுறையிலும் கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைப்பவர்களை கண்ணியிலகப்படுத்த வழிதேடவேண்டும். இயேசு அவருடைய சீஷர்களுக்கு பிசாசுகளைக் கடிந்துகொள்ளவும், துரத்தவும், அவைகள் துன்பப்படுத்துகிறவர்களைக் குணமாக்கவும் வல்லமைகொடுத்திருக்கிறார் எனக் கூறினான். இதன் பின்னர், இயேசுவின் பின்னடியார்களை ஒழிக்கும் வழியைத்தேடி கெர்ச்சிக்கிற சிங்கங்களைப்போல சாத்தானுடைய தூதர்கள் புறப்பட்டுப்போனார்கள். (3) ★

43

# கிறிஸ்துவின் சீடர்கள்!

சிலுவையிலறையப்பட்ட உயிர்த்தெழுந்த மீட்பரைப்பற்றி மிகுந்த வல்லமையோடு சீஷர்கள் பிரசங்கித்தார்கள். இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் செய்யப்பட்டன. வியாதியஸ்தர்கள் குணமாக்கப்பட்டார்கள். பிறவியிலேயே முடமாயிருந்த ஒருவன் பூரண சுகம்பெற்று, பேதுருவோடும் யோவானோடும் தேவாலயத்திற்குள் பிரவேசித்து, நடந்து— குதித்துக்கொண்டு, எல்லா மக்களுக்கும் முன்பாக, தேவனை துதித்துக்கொண்டு சென்றான். இந்தச் செய்தி பரவியபோது, மக்கள் சீஷர்களைச் சுற்றிலும் நெருங்க ஆரம்பித்தார்கள். அவர்கள் நோயாளிகளை குணமாக்குவதைக் கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு அநேகர் ஒன்று சேர்ந்து ஓடினார்கள். (1)

இயேசு மரித்தபோது, ஆசாரியர்கள் இனி தங்களுக்குள்ளே எந்தவிதமான அற்புதங்களும் நடைபெறாது என்றும் இந்தப் பரபரப்பு எல்லாம் மறைந்துபோகும் என்றும், மக்கள் பழையபடி தங்களது பாரம்பரியத்திற்குத் திரும்பிவிடுவார்கள் என்றும் நினைத்தார்கள். ஆனால் இதோ! அவர்களுக்கு மத்தியிலே சீஷர்களே அற்புதங்களைச் செய்ய ஆரம்பித்தபோது, மக்கள் ஆச்சரியத்தால் நிறைந்தார்கள். இயேசு சிலுவையிலறையப்பட்டபோதிலும், அவரது பின்னடியார்கள் எவ்வாறு இந்த வல்லமையைப் பெற்றுக்கொண்டார்களென்று வியந்தார்கள். அவர் உயிரோடிருந்தபோது அந்த வல்லமையை அவர்களுக்குக் கொடுத்ததாகவும், அவர் மரித்தபோது அற்புதங்கள் செய்யப்படுவதும் நின்றுபோகும் என்றும் எதிர்பார்த்தார்கள். பேதுரு அவர்களுடைய குழப்பத்தை அறிந்து, அவர்களை நோக்கி: “இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்;

பிலாத்து அவரை விடுதலையாக்க தீர்மானித்தபோது, அவனுக்குமுன்பாக அவரை மறுதலித்தீர்கள். பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலைபண்ணவேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது'' என்றான். (2)

பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் இந்த வார்த்தைகளைக் கேட்க விரும்பாமல், பேதுருவையும் யோவானையும் பிடித்து, காவலிலே போடும்படிக் கட்டளை பிறப்பித்தார்கள். சீஷர்கள் பேசிய ஒரே ஒரு பிரசங்கத்தைக் கேட்ட ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பி, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும், பரமேறுதலிலும் நம்பிக்கைவைக்கும்படி வழிநடத்தப்பட்டார்கள். பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் கலங்கினார்கள். மக்களின் மனதைத் தங்களிடத்தில் திருப்புவதற்காக இயேசுவைக் கொலைசெய்தார்கள். இப்பொழுது காரியம் முன்பைவிட மோசமாயிற்று. சீஷர்கள் பகிரங்கமாக, தேவகுமாரனைக் கொலைசெய்தவர்கள் இவர்கள்தான் என்று குற்றஞ்சாட்டினார்கள். இந்தக் காரியங்கள் இன்னும் எந்த அளவிற்கு வலிமையடையுமோ, நாம் எவ்வாறு மக்களால் எண்ணப்படுவோமோ என்று அவர்களால் தீர்மானிக்க முடியாதிருந்தது. பேதுருவையும் யோவானையும் மகிழ்ச்சியுடன் மரணாக்கினைக்குத் தீர்த்திருப்பார்கள். ஆனால் மக்களுக்குப் பயந்ததினால், அதைச்செய்யத் துணிவில்லாதிருந்தார்கள். (3)

அடுத்த நாளிலே, அப்போஸ்தலர்கள் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டார்கள். நீதிமானின் இரத்தத்தைச் சிந்த ஆர்வத்தோடு சத்தமிட்ட அதே மனிதர்கள் அங்கு இருந்தார்கள். சீஷர்களில் ஒருவன்தான் பேதுரு என்று குற்றஞ்சாட்டப்பட்டபோது, அவன் தனது ஆண்டவரை மறுதலித்து சபிக்கவும் சத்தியம்பண்ணவுஞ்செய்தான் என்பதைக் கேள்விப்பட்டிருந்தார்கள். எனவே இப்பொழுது பேதுருவை பயமுறுத்தலாம் என்று நம்பினார்கள். ஆனால் பேதுரு இப்பொழுது மனந்திரும்பியவனாக இருந்தான். தனது ஆத்திரத்தாலும் கோழைத்தனத்தாலும் இயேசுவை மறுதலித்திருந்தான். இப்பொழுது அந்தக் கறையைத் துடைக்க, ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்பதை அவன் கண்டான். தான் கனவீனப்படுத்திய அந்த நாமத்தை கனப்படுத்த எண்ணினான். பரிசுத்த தைரியத்தோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும், பயமின்றி அவர்களை நோக்கி: "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின்

நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர் களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்றான். (4)

பேதுரு யோவான் ஆகியோரது தைரியத்தைக் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டு, இவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதை அறிந்துகொண்டார்கள். இயேசு தமது விரோதிகளுக்குமுன் எவ்வாறு இருந்தாரோ, அதேபோல், இவர்களுடைய நடவடிக்கைகள் மெச்சத்தகுந்தவைகளாயும் பயமின்றியும் இருந்தன. பேதுரு இயேசுவை மறுதலித்தபோது, அவர் தமது பரிவும் துக்கமும் நிறைந்த ஒரே பார்வையினால் அவனைக் கடிந்துகொண்டார். இப்பொழுது, தைரியமாய் பேதுரு இயேசுவை ஏற்றுக்கொண்டபோது, இயேசுவும் அவனை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்தார். இயேசு அவனை ஏற்றுக்கொண்டார் என்பதற்கு அடையாளமாக அவன் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டான். (5)

ஆசாரியர்களால் தாங்கள் சீஷர்கள்மேல் கொண்டுள்ள வெறுப்பைத் துணிந்து வெளிக்காட்ட முடியவில்லை. எனவே, ஆலோசனைச் சங்கத்தைவிட்டு வெளியேபோகும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு: "இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்? எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது" என்றார்கள். இந்த நற்காரியங்கள் மக்களுக்குள் அதிகமாகப் பரவிவிடக்கூடாதே எனப் பயந்தார்கள். பொதுவாக இந்தக் காரியம் தெரியவருமானால் ஆசாரியர்கள் தங்களது சொந்தச் செல்வாக்கைத் தொலைத்து, தாங்கள்தான் இயேசுவைத் தீர்த்துக்கட்டிய கொலையாளிகள் எனக் கருதப்படுவோம் என்று எண்ணினார்கள். என்றாலும், இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பிரசங்கித்தால், மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள் என்று அப்போஸ்தலர்களை மிரட்டுவதற்குமட்டுமே அவர்களுக்குத் துணிவிருந்தது. ஆனால் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்று பேதுரு தைரியமாகக் கூறியறிவித்தான். (6)

இயேசுவின் வல்லமையால், தங்களிடம் கொண்டுவரப்பட்ட நோயாளிகளையும் அல்லற்படுவோரையும் சீஷர்கள் தொடர்ந்து

குணமாக்கினார்கள். சிலுவையிலறையப்பட்ட, உயிர்த்தெழுந்த, பரமேறிய மீட்பரின் கொடியின்கீழ் தினமும் நூற்றுக்கணக்கானோர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆசாரியர்களும் மூப்பர்களும் குறிப்பாக அவர்களோடு அலுவல்களில் ஈடுபட்டிருந்தவர்களும் பயமடைந்தார்கள். எனவே பரபரப்பு அடங்கிப்போகும் என்று நம்பி, மறுபடியும் அப்போஸ்தலர்களை காவலில் போட்டார்கள். சாத்தானும் அவனது தூதர்களும் எக்களித்தார்கள். ஆனால் தேவ தூதர்கள் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, பிரதான ஆசாரியர்கள் மூப்பர்கள் ஆகியோரது கட்டளைக்கு எதிராக, அப்போஸ்தலர்களை நோக்கி: “நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்” எனக் கட்டளையிட்டார்கள். (7)

ஆலோசனைச் சங்கம் கூடி, சிறைச்சாலைக்கு ஆட்களை அனுப்பினார்கள். அதிகாரிகள் சிறைச்சாலைக் கதவைத்திறந்தபோது, தாங்கள் தேடிப்போன அவர்களை அங்கு காணவில்லை. பிரதான ஆசாரியர்களிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பிவந்து, “சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள். அப்பொழுது ஒருவன் வந்து: இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம்பண்ணுகிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான். உடனே சேனைத்தலைவன் சேவகரோடேகூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால், பலவந்தம்பண்ணாமல் அவர்களை அழைத்துக்கொண்டுவந்தான். அப்படி அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி: நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென் றிருக்கிறீர்கள் என்று சொன்னான்.” (8)

அந்த யூதத் தலைவர்கள்—மாயக்காரர்கள். தேவனை நேசிப்பதைவிட மனிதரின் புகழ்ச்சியை அதிகம் நாடினார்கள். அவர்களது இருதயங்கள் வெகுவாகக் கடினப்பட்டிருந்ததால், அப்போஸ்தலரால் செய்யப்பட்ட மகா வல்லமையான அற்புதங்கள் அவர்களை மூர்க்கமடையச்செய்தது. சீஷர்கள் இயேசுவையும் அவரது சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியவற்றையும்பற்றிப் பிரசங்கிப்பார்களானால், அவர்கள்தான்

(ஆசாரியர்களும் மூப்பர்களும்) இயேசுவைக் கொலைசெய்தவர்கள் என்ற குற்றத்தை உறுதிப்படுத்திவிடும் என்பதை அவர்கள் அறிவார்கள். எனவே, ஆவேசத்தோடு "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கத்திய அளவிற்கு இயேசுவின் இரத்தத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமாயில்லை. (9)

அப்போஸ்தலர்கள் மனிதனுக்கு பயப்படுவதைப் பார்க்கிலும் தேவனுக்கே பயப்படவேண்டும் என்று தைரியமாகக் கூறியறிவித்தார்கள். பேதுரு அவர்களை நோக்கி: "நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள்." பயமற்ற இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தக் கொலைகாரர்கள் மூர்க்கங்கொண்டார்கள். எனவே, அப்போஸ்தலர்களைக் கொலைசெய்து, தங்கள் கைகளைக் கறைப்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டார்கள். இவ்வாறு அவர்கள் திட்டமிட்டுக்கொண்டிருக்கும்போது, இந்த ஆசாரியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஆலோசனை கூறும்படி, தேவதூதன் கமாலியேலின் இருதயத்தை ஏவினார். கமாலியேல் அவர்களை நோக்கி: "இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்த தானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர் களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்" என்றான். அப்போஸ்தலர்களைக் கொலைசெய்யும்படியாக தீயதூதர்கள் ஆசாரியர்களையும் மூப்பர்களையும் ஏவிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தேவன் தமது தூதனை அனுப்பி, யூதத்தலைவர்களுக் குள்ளேயே தமது பிள்ளைகளுக்கு ஆதரவாகப் பேசும்படி ஒருவரை எழுப்பினார். அப்போஸ்தலர்களின் வேலை இன்னும் முடிவடையவில்லை. அவர்கள் இராஜாக்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு, இயேசுவின் நாமத்தினிமித்தம் அவர்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும்குறித்து சாட்சிகளாக இருந்து, உறுதியாக எடுத்துக்கூறவேண்டியதிருந்தது. (10)

ஆசாரியர்கள் தங்களது சிறைக்கைதிகளை அடிக்கும்படி உத்தரவு கொடுத்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளை பிறப்பித்து விருப்பமின்றி விடுதலைசெய்தார்கள். அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக

எண்ணப்பட்டபடியினால், மகிழ்ச்சியாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே—கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். இவ்வாறு தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று. சீஷர்கள் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் தைரியமாய் கூறியறிவித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வல்லமையான அற்புதங்களைச் செய்தார்கள். முன்னர் தேவகுமாரனின்மீது அதிகாரஞ்செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்தில் அவர்களும் அதை ஏற்றுக்கொள்ள மிகவும் விருப்பமாக இருந்தார்கள். அவர்கள்மீது இப்பொழுது இயேசுவின் இரத்தத்தைக்குறித்து சீஷர்கள் குற்றஞ்சாட்டினார்கள். (11)

ஒவ்வொரு தலைமுறையிலும், கிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஒரு நங்கூரமாக இருந்து உதவிசெய்யும்படி, முக்கியமான பரிசுத்த சத்தியங்கள், விசேஷித்த கவனத்தோடு காக்கப்படவேண்டுமென்று, தேவனுடைய தூதர்களுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டதை நான் கண்டேன். கிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகிய இஸ்ரவேலின் நம்பிக்கையாக இருக்கவேண்டிய முக்கிமான சத்தியங்களின் சாட்சிகளாயிருந்த அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவி சிறப்பானவிதமாக தங்கியது. உலகின் மீட்பரே தங்களது ஒரே நம்பிக்கையென்று, அனைவரும் அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். அவர் தமது சொந்த ஜீவனை பலியாக ஒப்புக் கொடுத்ததினிமித்தம், அவர் திறந்துவைத்த வழியிலே நடக்கவேண்டும். மேலும், தேவனுடைய பிரமாணத்தை கைக்கொண்டு வாழவேண்டும். தான் செய்த எந்த வேலைக்காக யூதர்களால் வெறுக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டாரோ, அதே வேலையைச் செய்வதற்கு சீஷர்களுக்கு வல்லமை கொடுத்ததினிமித்தம் இயேசுவின் ஞானத்தையும் மேன்மையையும் நான் கண்டேன். அவருடைய நாமத்தினாலே சாத்தானின் கிரியைகளின்மீது அவர்களுக்கு வல்லமை இருந்தது. இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய காலங்களை மையமாகக்கொண்டு ஒரு ஒளிவட்டமும், மகிமையும் பரவி, இயேசுவே உலகத்தின் மீட்பர் என்ற பரிசுத்த சத்தியத்தை என்றும் நின்று நிலைத்திருக்கும்படிச் செய்தது. (12) ★

## 44

# ஸ்தேவானின் மரணம்!

எருசலேமில் சீஷர்கள் ஏராளமாகப் பெருகினார்கள். விசுவாசத்திற்கு அநேக ஆசாரியர்களும் கீழ்ப்படிந்திருந்தார்கள். ஸ்தேவான் முழு விசுவாசத்தோடு மக்களுக்குள்ளாக மாபெரும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்துகொண்டிருந்தான். ஆசாரியர்கள் தங்களது பாரம்பரியங்களையும், பலிகளையும் காணிக்கைகளையும் விட்டுத் திரும்பி, இயேசுவே மாபெரும் பலியென ஒப்புக்கொண்டபோது, யூதத்தலைவர்கள் மிகுந்த கோபங்கொண்டார்கள். ஸ்தேவான் பரத்திலிருந்துபெற்ற வல்லமையினால், அவிசுவாசத்தில் தொடர்ந்து நிலைத்திருந்த ஆசாரியர்களையும் மூப்பர்களையும் கடிந்துகொண்டு, இயேசுவை அவர்களுக்குமுன்பாக உயர்த்தினான். ஸ்தேவான் வல்லமையோடும் ஞானத்தோடும் பேசியபோது, அவர்களால் எதிர்த்து நிற்கக்கூடாமற்போயிற்று. தாங்கள் அவனுக்கு விரோதமாக ஒன்றும் செய்யக்கூடாமற்போனதைக் கண்டபோது, சிலரைக் கைக்கூலிக்கு அமர்த்தி, மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக ஸ்தேவான் தேவதூஷணம் பேசியதைக் கேட்டதாகக்கூறி பொய்யாக ஆணையிடும்படிச் செய்தார்கள். மேலும், மக்களைத் தூண்டிவிட்டு, ஸ்தேவானைப் பிடித்து, பொய்சாட்சிகள் மூலமாக நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகவும், ஆலயத்திற்கு விரோதமாகவும் பேசினான் எனக் குற்றஞ்சாட்டினார்கள். நாசரேத்து ஊரைச் சேர்ந்த இந்த இயேசு, மோசே கொடுத்த பழக்கவழக்கங்களை தாம் ஒழித்துப்போடுவதாகக் கூறியதை தாங்கள் கேட்டதாக வலியுறுத்திக் கூறினார்கள். (1)

நியாயாதிபதிகளுக்குமுன்பாக ஸ்தேவான் நிற்கும்போது, தேவ மகிமையின் வெளிச்சம் அவனது முகத்தில் பிரகாசித்தது. “ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்.” அவனுக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றங்களுக்கு பதில்கொடுக்கும்படி அவனை அழைத்தபோது, அவன் மோசே

மற்றும் தீர்க்கதரிசிகளுடைய காலத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை விவரித்துக்கூறி, தேவன் அவர்களோடு எவ்வாறு தொடர்புகொண்டாரென்றும், தீர்க்கதரிசனத்தில் எவ்வாறு கிறிஸ்துவைப்பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது என்றும் எடுத்துக்காட்டினான். ஆலயத்தின் வரலாற்றை அவர்களுக்குக் குறிப்பிட்டுக்காட்டி, தேவன், கையினால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசம்பண்ணுகிறவரல்ல என்பதை அவர்களுக்கு அறிவித்தான். யூதர்கள் ஆலயத்தைத் தொழுதுகொண்டிருக்கிறபடியால், தேவனுக்கு விரோதமாகப் பேசப்படுபவைகளைவிட, ஆலயத்திற்கு விரோதமாகப் பேசப்படுபவைகளைத் தாங்கக்கூடாமல், மிகுந்த கோபத்தால் நிறைந்தார்கள். ஸ்தேவான் கிறிஸ்துவைக் குறித்துப்பேசி, ஆலயத்தைக் குறிப்பிட்டபோது, மக்கள் அவனது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாததைக் கண்டான். உடனே பயமின்றி: “வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள்” எனக் கடிந்துகொண்டான். அவர்கள் வெளிப்படையான மதச்சடங்காச் சாரங்களை அனுசரித்துவந்தபோதிலும், அவர்கள் இருதயமோ சாவிற்கேதுவான தீமையாலும் கேடுபாடுகளாலும் நிறைந்திருந்தது. அவர்களது முற்பிதாக்கள் எவ்வாறு தீர்க்கதரிசிகளை கொடுமையாக துன்புறுத்தினார்களென்பதையும் குறிப்பிட்டான். கிறிஸ்துவை மறுதலித்துக் கொலைசெய்ததால், மாபெரும் பாவத்தைச் செய்தீர்கள் என்று முன்பாக அமர்ந்திருந்த அவர்களுக்கு அறிவித்தான். “தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாம லிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள்” என்றான். (2)

தெளிவான—பிளக்கக்கூடிய சத்தியங்கள் எடுத்துப்பேசப்பட்ட போது, ஆசாரியர்களும், நியாயாதிபதிகளும் மூர்க்கமடைந்து, பற்களைக் கடித்துக்கொண்டு, ஸ்தேவான்மீது பாய்ந்தார்கள். “அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்” எனக் கூறினான். அவன் சொன்னதைக் கேட்க மக்கள் விரும்பவில்லை. “அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள்.” அவனோ, முழங்காற்படியிட்டு:

“ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.” (3)

ஸ்தேவான் வல்லமைபொருந்திய தேவ மனிதன் என்பதையும் விசேஷமாக சபையிலே ஒரு முக்கியமான இடத்தை வகிப்பதற்காக எழுப்பப்பட்டவர் என்பதையும் நான் கண்டேன். ஸ்தேவானின் மரணத்தில் சாத்தான் எக்களித்தான். ஏனெனில், ஸ்தேவானின் மரணத்தினாலேற்பட்ட இழப்பைக்குறித்து அவனது சீஷர்கள் பெரிதும் வருந்துவார்கள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் சாத்தானின் வெற்றி சிறிது காலத்திற்கே நிலைத்தது. ஏனெனில் அந்தக்கூட்டத்திலே ஸ்தேவானின் மரணத்தைக்கண்ட ஒருவருக்கு கிறிஸ்து தன்னை வெளிப்படுத்துவதாக இருந்தார். ஸ்தேவானைக் கல்லெறிவதில் சவுல் எந்தவிதப் பங்கும் வகிக்கவில்லை. ஆனால் சம்மதித்திருந்தான். தேவனுடைய சபையை உபத்திரவப் படுத்துவதிலும், அவர்களை வேட்டையாடி, அவர்களது வீடுகளிலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவந்து, கொல்லப்படும்படியாக ஒப்புக்கொடுப்பதிலும் மிகுந்த தீவிரமாகச் செயல்பட்டான். சவுலோ திறமையும் கல்வியுமுடையவனாக இருந்தான். அவனது ஆர்வமும் கல்வியும் யூதர்களிடையே அவனுக்குப் பெருமதிப்பைக் கொடுத்திருந்தது. அதே சமயத்தில் கிறிஸ்துவின் சீஷர்கள் அநேகர் அவனைக் கண்டு பயந்தார்கள். தேவகுமாரனுக்கும் அவரில் விசுவாசம் வைத்தவர்களுக்கும் விரோதமாக கலகத்தை நடத்துவதற்கு, சாத்தான் சவுலின் தாலந்துகளை மிகுந்த ஆற்றலோடு உபயோகித்தான். ஆனால் அந்த மாபெரும் சத்துருவின் வல்லமையை தேவன் உடைத்து, அவனால் சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யமுடியும். கிறிஸ்து தமது நாமத்தைப் பிரசங்கஞ்செய்வதற்கும், தமது சீஷர்களை அவர்களுடைய வேலையிலே பலப்படுத்தவும், அதற்கும் மேலாக, ஸ்தேவானின் இடத்தை நிரப்பவும், சவுலைத் தெரிந்துகொண்ட பாத்திரமாகப் பிரித்தெடுத்தார். (4) ★

# 45

# சவுலின் மனந்திரும்புதல்!

சவுல் தமஸ்குவிற்குப் பிரயாணம்பண்ணும்பொழுது, இயேசுவைப் பிரசங்கிக்கும் ஆண்களையும் பெண்களையும் கட்டி, எருசலேமிற்குக் கொண்டுவரும்படி அவனுக்கு அதிகாரமளிக்கும் நிருபங்களைப் பெற்றுவந்தான். தீய தூதர்கள் அவனைச் சுற்றிலும் எக்களித்தார்கள். திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிலும் பிரகாசித்தது. அதன் விளைவாக, தீய தூதர்கள் அந்த இடத்தைவிட்டே விரைந்து பறந்துசென்றனர். அந்தப் பேரொளி சவுலைக் கீழே விழச்செய்தது. “சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்” என்றார். (1)

அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் வாயடைத்து நின்றார்கள். வெளிச்சம் மறைந்தபோது, சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தான். அப்போது முற்றிலும் குருடனாக இருப்பதை உணர்ந்தான். பரலோக ஒளியின் மகிமை அவனது கண்களைக் குருடாக்கிப்போட்டது. அப்பொழுது கைலாகுகொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தான். சவுல் யாரைச் சிறைப்பிடிக்கவேண்டுமென்றிருந்தானோ அவர்களில் ஒருவனிடத்திற்கு தேவன் தமது தூதனை அனுப்பினார். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: “நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப்போய், யூதாவின் வீட்டிலே தர்சுபட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்; அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான்

பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான்" என்றார். (2)

அனனியா மிகவும் பயந்து, இந்தக் காரியத்திலே ஏதோ தவறு இருக்கிறதென்று நினைத்து, தான் சவுலைப்பற்றிக் கேள்விப்பட்ட காரியங்களை ஆண்டவரிடத்தில் கூற ஆரம்பித்தான். ஆனால் ஆண்டவர் அனனியாவை நோக்கி: "நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றார். அப்பொழுது அனனியா ஆண்டவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து: "சகோதரனாகிய சவுலே, நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்" என்றான். (3)

உடனே சவுல் பார்வையடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்றான். பின்பு அவன் நிச்சயத்தோடு, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: "எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா" என்றார்கள். சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான். சவுல் இயேசுவிற்கு விரோதமாக மிகுந்த ஊக்கத்தோடு அவருடைய நாமத்தை விசுவாசித்தவர்களை வேட்டையாடி, மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததுபற்றி அனைவருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் சவுலின் ஆச்சரியப்பிரகாரமான மனந்திரும்புதலினால், இயேசுவே தேவனுடைய குமாரனென்று அநேகர் உறுதியாக நம்பினார்கள். பரிசுத்தஆவியின் வல்லமையால், சவுல் தனது அனுபவங்களை எல்லோருக்கும் எடுத்துக்கூறினான். ஆண்களையும் பெண்களையும் கட்டி சிறையிலேபோட்டு மரணமட்டும் அவர்களை உபத்திரவித்துக்கொண்டிருந்தான். அவன் தமஸ்குவிற்குப் பிரயாணமானபோது, திடீரென்று மாபெரும் ஒளி பரலோகத்தினின்று அவனைச் சுற்றிலும் பிரகாசித்தது. இயேசு அவனுக்குத் தன்னை வெளிப்படுத்தினார். தாம் தேவகுமாரன் என்பதையும் அவனுக்குக் கற்பித்தார். (4)

சவுல் தைரியமாக இயேசுவைப்பற்றி பிரசங்கித்தபோது, ஒரு வல்லமையுள்ள செல்வாக்கை வெளிப்படுத்தினான். அவனுக்கு வேத

வசனங்களைப்பற்றிய நல்ல அறிவு இருந்தது. அவனது மனந்திரும்புதலுக்குப் பின்னர், இயேசுவைப்பற்றிய—தீர்க்கதரிசனங்களைக் குறித்த தெய்வீக வெளிச்சம் கிடைத்ததால், சத்தியத்தைப்பற்றி தெளிவாகவும் தைரியமாகவும் பிரசங்கிக்க முடிந்தது. வேதவசனங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள எந்த முரண்பாட்டையும் திருத்திக்கொள்ள முடிந்தது. தேவனுடைய ஆவியானவர் தன்மீது தங்கியிருந்ததால், தனக்கு செவிசாய்ப்பவர் களுக்கு மனதில் பதியும்படியாக தீர்க்கதரிசனங்களில் ஆரம்பித்து, கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலம் வரைக்கும் விளக்கிக் கூறினான். மேலும், கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப்பற்றி வேத வாக்கியங்கிளல் கூறப்பட்டவைகள் எவ்வாறு நிறைவேறின என்றும் எடுத்துக்காட்டினான். (5) ★

# 46

# பவுலை கொலை செய்வதற்கு யூதர்கள் தீர்மானஞ்செய்கிறார்கள்!

பவுலின் அனுபவத்தால் கூறப்பட்ட காரியங்களின் விளைவுகளைக் கண்ணாரக் கண்ட பிரதான ஆசாரியர்களும், அதிகாரிகளும் அவனுக்கு விரோதமாக வெறுப்பினால் நிறைந்தார்கள். பவுல் தைரியமாக இயேசுவைப் பிரசங்கித்ததையும் அவருடைய நாமத்தினாலே அற்புதங்கள் செய்ததையும் திரளான மக்கள் அவனுக்குச் செவிகொடுத்து தங்கள் பாரம்பரியங்களினின்று விலகி, யூதத்தலைவர்களே தேவகுமாரனைக் கொன்ற கொலையாளிகள் என்று நோக்கிப்பார்த்ததையும் அவர்கள் கண்டார்கள். அவர்களது கோபம் தூண்டிவிடப்பட்டது. இந்தப் பரபரப்பை அடக்குவதற்கு என்ன செய்தால் நன்றாக இருக்குமென்று கூடியாலோசித்தார்கள். ஒரே பாதுகாப்பான வழி பவுலைக் கொலைசெய்வதே எனத் தீர்மானித்தார்கள். ஆனால், தேவன் அவர்கள் நோக்கத்தை அறிந்து, பவுல் தனது வேலையை நிறைவேற்றும்வரை உயிர்வாழ வேண்டுமென்று, அவனைக் காப்பதற்காக தேவதூதர்களுக்குக் கட்டளை கொடுத்தார். (1)

சாத்தானால் வழிநடத்தப்பட்டு, அவிசுவாசியான யூதர்கள் தமஸ்குவின் வாசல்களை இரவும் பகலும் காவல்புரிந்தார்கள். பவுல் கடந்துபோனால் உடனே அவனைக் கொலைசெய்ய வேண்டுமென் றிருந்தார்கள். ஆனால் யூதர்கள் தமது உயிரை வாங்கத் தேடியலைகிறார்கள் என்பது பவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, சீஷர்கள் இரவிலே மதிற்சுவர் வழியாக பவுலைக் கூடையில்வைத்து இறக்கிவிட்டார்கள். தங்களது நோக்கங்கள் நிறைவேறாமல் தோல்வியடைந்ததால், யூதர்கள் அவமானமும் கோபமு மடைந்தார்கள். சாத்தானின் நோக்கம் தோல்வியடைந்தது. (2)

இதன்பிறகு சீஷர்களோடு சேர்ந்துகொள்ளும்படியாக பவுல் எருசலேமிற்குப் போனான். ஆனால், அவர்களோ அவனைக்கண்டு பயந்தார்கள். அவனும் ஒரு சீஷன் என்று அவர்களால் நம்ப முடியவில்லை. தமஸ்குவிலே யூதர்கள் அவனது உயிரை வேட்டையாடினார்கள். இங்கு

அவனது சொந்தச் சகோதரர்களோ ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆனால் பர்னபா அவனை அப்போஸ்தலரிடம் அழைத்துவந்து, எப்படி வழியிலே பவுல் தேவனைக் கண்டான் என்றும், தைரியமாக தமஸ்குவிலே இயேசுவின் நாமத்தைப் பிரசங்கித்தானென்றும் அவர்களிடத்தில் அறிவித்தான். (3)

ஆனால், பவுலை அழிக்கும்படியாக சாத்தான் யூதர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தான். எனவே, இயேசு பவுலை எருசலேமைவிட்டு வெளியே போகும்படிக் கட்டளையிட்டார். பவுல் பர்னபாவின் துணையோடு மற்றப் பட்டணங்களுக்குச் சென்று, இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தான். அற்புதங்கள் செய்தான். அநேகர் மனந்திரும்பிக் குணப்பட்டார்கள். நீண்ட காலமாக முடவனாக இருந்த ஒரு மனிதன் குணமாக்கப்பட்டபோது, விக்கிரகங்களை வணங்கிக்கொண்டிருந்த மக்கள் சீஷர்களுக்கு ஏறக்குறைய பலியிடும் நிலைக்கு வந்துவிட்டார்கள். பவுல் துக்கமடைந்து அவர்களை நோக்கி: அவனும் அவனது உடன் வேலையாளும் மனிதர்களே என்றும், வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளில் இருக்கும் யாவற்றையும் உண்டாக்கின தேவனை மாத்திரம் தொழுதுகொள்ளவேண்டுமென்றும் கூறினான். இவ்வாறு பவுல் மக்களுக்கு முன்பாக தேவனை உயர்த்திக் காண்பித்தான். ஆனாலும், அவர்களைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. உண்மையான தெய்வத்தை விசுவாசிப்பதைப்பற்றிய முதல் எண்ணம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தொழுகையும் கனமும் அவருக்கு உரியது என்ற எண்ணமும் அவர்கள் மனதில் உருவாக்கப்பட்டது. அவர்கள் பவுலுக்கு செவிசாய்த்துக் கொண்டிருந்தபோது, மற்றப் பட்டணங்களிலுள்ள அவிசுவாசிகளான யூதர்களை சாத்தான் தூண்டிவிட்டு, பவுலைப் பின்தொடர்ந்துபோய் அவனால் செய்யப்பட்ட நல்ல வேலையை அழித்துப்போடும்படிக் கூறினான். பவுலைப்பற்றி பொய்யான தகவல்களைக் கூறிய யூதர்கள் அங்குள்ள விக்கிரக ஆராதனைக்காரர்களது மனதைக் கெடுத்து, அவர்களை அவனுக்கு எதிராகத் தூண்டிவிட்டார்கள். மக்கள் கொண்ட அதிசயமும் வியப்பும் இப்பொழுது வெறுப்பாக மாறிற்று. சற்றுமுன்பாக சீஷர்களைத் தொழுதுகொள்ள ஆயத்தமாக இருந்தவர்கள், பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று யூகித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே இழுத்துக்கொண்டுபோய் போட்டார்கள். சீஷர்கள் பவுலைச் சுற்றிலும் நின்று அவனுக்காகத் துக்கித்துக்கொண்டிருக்கும்போது, பவுல் அவர்கள் மகிழ்ச்சியடையும்வண்ணம், எழுந்து அவர்களோடு பட்டணத்திற்குள் சென்றான். (4)

பவுலும் சீலாவும் மறுபடியும் இயேசுவைப் பிரசங்கித்தபோது, அசுத்த ஆவிபிடித்த பெண் அவர்கள் பின்னாகச் சென்று: “இந்த மனுஷர்

உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்துகொண்டு வந்தாள். இவளது சத்தம் சத்தியத்தில் மனதைச் செலுத்தாதபடி மக்களது கவனத்தைத் திருப்பியதால், பவுல் துக்கமடைந்தான். மக்களைச் சலிப்படையச்செய்து, சீஷர்களின் செல்வாக்கைக் கெடுக்கவேண்டுமென்றே அவளை இவ்வாறு சாத்தான் வழிநடத்தினான். பவுல் சினங்கொண்டு: "நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்;" அந்தத் தீய ஆவி அவளைவிட்டுப் போயிற்று. (5)

சீஷர்கள் பின்னாக அவள் சத்தமிட்டுச் சென்றுகொண்டிருந் ததைக் கண்ட அவளது எஜமானர்கள் சந்தோஷமடைந்தார்கள். ஆனால் அந்தக் கெட்ட ஆவி, அவளை விட்டுப் புறப்பட்டுப் போனபோது, கிறிஸ்துவின் சீஷிபோன்று அமைதியாக இருந்தாள். எனவே, அவளது எஜமான்களின் கோபம் கொந்தளித்தது. அவளது குறிசொல்லுதலாலே அவர்கள் ஏராளமாகப் பணம் சேர்த்திருந்தார்கள். இப்பொழுதோ அவர்களது இலாபத்தின் நம்பிக்கையே அற்றுப்போய்விட்டது. சாத்தானின் நோக்கம் தோற்கடிக்கப்பட்டது. எனவே அவன் வேலையாட்கள் பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தைவெளிக்கு இழுத்துச்சென்று, அங்குள்ள அதிகாரிகளிடத்திலும், நியாயாதிபதிகளிடத்திலும் "யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணுகிறார்கள்" எனக் கூறினார்கள். திரளான மக்கள் கூட்டமாக அவர்களுக்கு விரோதமாக எழும்பினார்கள். நியாயாதிபதிகள் அவர்களுடைய வஸ்திரங்களை கிழித்துப்போட்ட பின்னர் அவர்களை அடிக்கவும் கட்டளையிட்டார்கள். அவர்களை அநேக அடிகள் அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து, பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்கு கட்டளை யிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப்பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களை தொழுமரத்தில் மாட்டிவைத்தான். ஆனால், தேவனுடைய தூதர்கள் சிறைச்சாலையினுள் அவர்களுக்குத் துணையாக இருந்து, அவர்களுடைய சிறைவாசம் தேவனுடைய மகிமையைக் கூறவும், அவர்களது வேலையிலும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர்களோடும் கடவுள் இருக்கிறார் என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டவும் செய்தார்கள். (6)

நடு இராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அதிரும்வண்ணம் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே எல்லாருடைய கட்டுகளையும் தேவதூதர்கள்

அவிழ்த்துப்போடுவதை நான் கண்டேன். சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு, மிகவும் பயந்தான். கைதிகள் தப்பியிருப்பார்கள் என்றும், தான் மரணதண்டனை அடையவேண்டிய திருக்குமென்றும் நினைத்தான். அதனால், அவன் தனது உயிரை மாய்த்துக்கொள்ளப் போகும்போது, பவுல் மிகுந்த சத்தமிட்டு: "நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ்செய்துகொள்ளாதே: நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம்" என்றான். (7)

தேவவல்லமை சிறைச்சாலைத் தலைவனுக்கு அவன் ஒரு பாவி என்பதை உணர்த்திற்று. தீபங்களைக் கேட்டு வாங்கி, வேகமாக உள்ளே சென்று நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து: "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று அவர்களை வெளியே அழைத்து வந்து கேட்டான். அதற்கு அவர்கள்: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று கூறினார்கள். சிறைச்சாலைத் தலைவன் தனது வீட்டார் அனைவரையும் அங்கு கூட்டினான். பவுல் அவர்களுக்கு இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தான். இவ்வாறு சிறைச்சாலைத் தலைவனுடைய இருதயம் அவனது சகோதரர்களோடு இணைந்தது. அவன் அவர்களது காயங்களைக் கழுவி, அவனும் அவனது வீட்டார் அனைவரும் அன்று இரவிலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அவன் அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து, மகிழ்ச்சியடைந்து, அவனும் அவனது வீட்டாரனைவரும் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்கள் ஆனார்கள். (8)

சிறைச்சாலையின் கதவுகள் தானாகத் திறவுண்டதிலும், சிறைச்சாலைத் தலைவன் வீட்டார் அனைவரோடுங்கூட மனந்திரும்பிய அந்த ஆச்சரியமான செய்தியிலும், தேவனுடைய வல்லமை வெளிப்பட்ட காரியம் எல்லா இடங்களிலும் பரவிற்று. அதிகாரிகள் இந்தச் செய்திகளைக் கேட்டதால் பயந்து, பவுலையும் சீலாவையும் விட்டுவிடும்படி, சிறைச்சாலைத் தலைவனுக்குச் செய்தி அனுப்பினார்கள். இவ்வாறு இரகசியமாய் சிறைச்சாலையை விட்டுப் போக பவுல் விரும்பவில்லை. தேவனுடைய வல்லமையின் வெளிப்படுத்தல்களை அவன் மறைவாக மூடிவைக்க விரும்பவில்லை. பவுல் அவர்களை நோக்கி: "ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலை யிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலை யாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும்" என்றான். இந்த வார்த்தைகள் நியாயாதிபதிகளுக்கு அறிவிக்கப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் ரோம

குடிமக்கள் என்பதை அறிந்து, ஒருவேளை சட்டத்திற்குப் புறம்பாக அவர்களை நடத்தியதற்கு இராயனிடத்தில் அதைப்பற்றி குற்றஞ்சாட்டுவார்களோ எனப் பயந்து, அவர்களுடனே நயமாய்ப்பேசி, அவர்களை வெளியே அழைத்துக் கொண்டுபோய், பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். (9) ★

47

# பவுல் எருசலேமிற்குச் செல்லுகிறார்!

பவுலின் மனந்திரும்புதலுக்குப்பிறகு, அவர் எருசலேமிற்குச் சென்று இயேசுவையும் அவரது கிருபையின் அதிசயங்களையும் குறித்துப் பிரசங்கித்தான். தமது அதிசயமான மனந்திரும்புதலைப் பற்றியும் அவன் கூறினான். அதை ஆசாரியர்களும் ஆளுகை செய்வோரும் கேட்டு, கோபமடைந்து, அவனை கொலைசெய்ய வகைதேடினார்கள். காப்பாற்றப்படும்படியாக பவுல் ஜெபித்தபோது, இயேசு அவனது தரிசனத்தில் காணப்பட்டு: “நீ என்னைக்குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ” என்று கூறினார். அதற்கு பவுல்: “உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிற வர்களை நான் காவலில் வைத்து ஜெப ஆலயங்களிலே அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே” என்றான். எருசலேமிலுள்ள யூதர்கள், தான் கொடுக்கப்போகும் சாட்சியை எதிர்க்கமுடியாது எனப் பவுல் நினைத்தான். ஏனெனில், தேவனுடைய வல்லமையால்தான் அவனில் அந்தப் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து பார்ப்பார்கள் என்று நினைத்தான். ஆனால் “நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்” என்று பதில் முன்பைவிடவும் மிகவும் திட்டவட்டமாக வந்தது. (1)

எருசலேமில் பவுல் இல்லாதிருந்த காலத்தில் பல இடங்களுக்கு அநேக கடிதங்களை எழுதினான். வல்லமையுள்ள தனது சாட்சியோடு தனது அனுபவங்களையும் கூறியிருந்தான். ஆனால் இந்தக் கடிதங்களின் செல்வாக்கை ஒழித்துவிட சிலர் பிரயாசப்பட்டார்கள். அவனது கடிதங்கள்

வல்லமையும் முக்கியத்துவமும் வாய்ந்தவை என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாயிற்று. ஆனால் அவனது உடல் பெலவீனமானதாயும் அவனது பேச்சு வெறுக்கத்தக்கதாயும் இருக்கிறதாகவும் கூறினார்கள். (2)

காரியத்தின் உண்மை என்னவென்றால், பவுல் மாபெரும் கல்விமானாகையால் அவனது ஞானமும் நடவடிக்கைகளும் கேட்போரைக் கவரக்கூடியதாக இருந்தது. கற்றோர் அவனது ஞானத்தைக்கண்டு மகிழ்ந்தார்கள். அவர்களில் அநேகர் இயேசுவை விசுவாசித்தார்கள். பெருங்கூட்டங்களிலும் அரசர்கள் முன்னிலையிலும் அனைவரையும் கவர்ந்திழுக்கத்தக்கதாக அவனது பேச்சாற்றல் அமைந்திருக்கும். இது ஆசாரியர்களையும் மூப்பர்களையும் மிகுந்த கோபத்திற்குள்ளாக்கியது. பவுல் மக்களை ஆழ்ந்து சிந்திக்கவைத்து, உயர்ந்த நிலையில், மேலான எண்ணங்களில் அவர்களை ஈடுபடுத்தி, தேவனுடைய கிருபையின் ஆழ்ந்த ஐசுவரியங்களை அவர்கள்முன் கொண்டுவந்து, கிறிஸ்துவின் ஆச்சரியமான அன்பை அவர்களுக்குப் படம்போல் பிடித்துக்காட்டினான். பின்பு, எளிய முறையில், சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளத்தக்கதாக, அதிக வல்லமையோடு தன்னுடைய அனுபவத்தை எடுத்துக் கூறுவான். இதன்மூலம் கிறிஸ்துவின் சீஷனாக வேண்டுமென்ற பெரிய ஆர்வம் கேட்போருக்குள் எழும்பிற்று. (3)

மறுபடியும் பவுலுக்கு தேவன் தரிசனமாகி, அவன் எருசலேம் வரை போகவேண்டுமென்றும் அங்கு அவரது நாமத்திற்காகக் கட்டப்பட்டு உபத்திரவம் அனுபவிக்கவேண்டுமென்றும் வெளிப்படுத்தினார். நீண்ட நாட்களுக்கு அவன் கைதியாக இருந்தபோதிலும், தேவன் தமது விசேஷ வேலையை அவன் மூலமாகத் தொடர்ந்து செய்தார். அவனது கட்டுகளின்மூலமாக கிறிஸ்துவைப்பற்றிய அறிவு பரவி, தேவன் மகிமைப்படுத்தப்பட்டார். விசாரணையினிமித்தம் ஒவ்வொரு பட்டணமாக அவன் அனுப்பப்பட்டபோது, இயேசுவைப்பற்றிக் கூறுகின்ற சாட்சியையும் தமது சொந்த மனந்திரும்புதலைப்பற்றிய ஆர்வமூட்டும் சம்பவங்களையும் அரசர்களுக்கும் தேசாதிபதிகளுக்கும் கூறினான். எனவே, இயேசுவைப்பற்றிய காரியத்தில் இனி போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை. ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவை விசுவாசித்து, அவரது நாமத்தினிமித்தம் களிகூர்ந்தார்கள். பவுலின் கடற்பிரயாணத்திலே, தேவனுடைய விசேஷ நோக்கம் நிறைவேறியதை நான் கண்டேன். பவுலின்மூலமாக தேவனுடைய வல்லமையை கப்பலின் மாலுமிகள் காணவேண்டுமென்பதும், பவுலின் மூலமாக அஞ்ஞானிகளும் கிறிஸ்துவின் நாமத்தை அறியவேண்டுமென்பதும், பவுலின் போதனையாலும் அவன் செய்த அற்புதங்கள் மூலமாகவும்

அநேகர் மனந்திரும்பவேண்டுமென்பதும் தேவனுடைய திட்டமாயிருந்தது. அவன் கொடுக்கும் காரண காரிய ஆதாரங்களைக் கண்டு, இராஜாக்களும் தேசாதிபதிகளும் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். ஆர்வத்தோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் இயேசுவைப் பிரசங்கித்து, அவனுடைய அனுபவத்தின் ஆர்வமிக்க சம்பவங்களை எடுத்துக்கூறினான். இயேசுவே தேவனுடைய குமாரன் என்ற மறுக்கமுடியாத உண்மை அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டது. பவுலின் பிரசங்கத்தைக் கேட்ட சிலர் ஆச்சரியத்தால் வியந்துகொண்டிருக்கையில் ஒருவர்: "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்" என்று சத்தமிட்டார். அவருடைய பேச்சைக் கேட்ட அநேகர் எதிர்காலத்தில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தாங்கள் கேட்டதைக்குறித்து சிந்திக்கலாம் என்று எண்ணினார்கள். இந்தத் தாமதத்தை சாத்தான் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டான். அவர்கள் இதயம் மென்மையடையும்பொழுது கொடுக்கப்பட்ட தருணத்தை அலட்சியஞ்செய்ததால், என்றுமாக நித்திய ஜீவனை இழந்துபோனார்கள். அவர்களது இருதயங்கள் கடினப்பட்டுப்போயின. (4)

யூதர்கள் இயேசுவை தங்களது இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதபடி சாத்தான் முதலாவது அவர்களது கண்களைக் குருடாக்கிப்போட்ட செயல் எனக்குக் காட்டப்பட்டது. அவரது மகத்தான வேலையினிமித்தம் பொறாமைகொண்டு, அவரது உயிரை எடுக்கும்படி அவர்களை நடத்திச்சென்றான். கிறிஸ்துவின் சொந்தப் பின்னடியார்களில் ஒருவருக்குள் சாத்தான் புகுந்து, ஜீவனுக்கும் மகிமைக்கும் தேவனாகிய அவரைச் சிலுவையிலறையும்படி, அவருடைய விரோதிகளிடத்தில் காட்டிக்கொடுக்க வழிநடத்தினான். (5)

இயேசு மரித்தோரினின்று எழுந்தபின்னர் யூதர்கள் பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டி, அவர் உயிர்த்தெழுந்த உண்மையை மறைப்பதற்காக, ரோம காவலாளிக்குக் கூலிகொடுத்து, வலியுறுத்தி பொய்கூறும்படிச் செய்தார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதல், அவரோடு அதே சமயத்தில் உயிர்த்தெழுந்த திரளான சாட்சிகளின் மூலமாக, இருமடங்காக நிச்சயப்படுத்தப்பட்டது. உயிர்த்தெழுதலுக்குப்பிறகு சீஷர்களுக்குக் காணப்பட்டார். ஐந்நூறுபேர்களுக்கு அதிகமான கூட்டத்தில் காணப்பட்டார். அவரோடு உயிர்த்தெழுந்தவர்களும் அநேகருக்குக் காணப்பட்டு, இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதைக் கூறியறிவித்தார்கள். (6)

யூதர்கள் இயேசுவை தேவகுமாரனாக ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கும், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் தங்களது கைகளை

கறைப்படுத்திக்கொள்வதற்கும், சாத்தான் யூதர்களை தேவனுக்கு விரோதமாக கலகஞ்செய்யத் தூண்டிவிட்டான். இயேசுதான் தேவனுடைய குமாரன்—உலகத்தின் இரட்சகர் என்று எவ்வளவு வல்லமையான ஆதாரங்கள் கொடுக்கப்பட்டாலும், அவருக்குச் சாதகமான எந்த ஆதாரத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், அவரைக் கொலைசெய்தார்கள். சாத்தானின் விழுகைக்குப்பின் அவன் நினைத்ததுபோல், அவர்களது ஒரே நம்பிக்கையும் ஆறுதலும் தேவகுமாரனுக்கு விரோதமாக மேலோங்கி நிற்பதே. அவர்கள் அதனால் தங்களது கலகத்தைத் தொடர்ந்து நடத்தி, கிறிஸ்துவின் சீஷர்களைக் கொலைசெய்து, அவர்களை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள். சிலுவையிலறைந்த இயேசுவின் நாமத்தை அவர்கள் காதுகள் சகித்துக்கொள்ளக்கூடாதிருந்தது. அவருக்குச் சாதகமாக வரும் எந்த ஆதாரத்திற்கும் செவிசாய்ப்பதில்லை எனத் திட்டஞ்செய்துகொண்டார்கள். ஸ்தேவான் மூலமாக, பரிசுத்த ஆவியானவர் இயேசுவே தேவகுமாரன் என்பதற்கு பலத்த ஆதாரங்களைக் கூறியபோது, தாங்கள் சம்மதித்துவிடக் கூடாதென்று, தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டார்கள். இயேசுவின் கொலையாளிகளை சாத்தான் தனது கையில் இறுகப் பிடித்துவைத்திருந்தான். தங்களது துன்மார்க்கமான கிரியைகளாலே அவனது மனப்பூர்வமான மக்களாக தங்களை ஒப்புக்கொடுத்து விட்டார்கள். இவர்கள் மூலமாக கிறிஸ்துவின் விசுவாசிகளை உபத்திரவப்படுத்த, எரிச்சலூட்டும் வேலையிலீடுபட்டான். இயேசுவிற்கு எதிராகவும்,அவரைப் பின்பற்றியோருக்கு எதிராகவும், யூதர்கள் மூலமாக புறஜாதிகளைத் தூண்டிவிடும்படி வேலைசெய்தான். தாங்கள் கண்ட—கேட்ட காரியங்களை வலியுறுத்திக் கூறவும், தளரா உறுதியினிமித்தம் தங்களது இரத்தத்தால் தங்களது சாட்சியை முத்திரையிடவும், சீஷர்களை அவர்களுடைய வேலையில் பலப்படுத்தவும் தேவன் தமது தூதர்களை அனுப்பினார். (7)

யூதர்கள் தனது கண்ணியில் இருப்பதைக்கண்டு சாத்தான் களிகூர்ந்தான். அவர்கள் இன்னும் தங்கள் பலிமுறைகளையும், சடங்காச்சாரங்களையும், உபயோகமற்ற காரியங்களையும் தொடர்ந்து செய்தார்கள். சிலுவையில் தொங்கியவராக “முடிந்தது” என்று சத்தமிட்டபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது, பலிகளையும் சடங்காச்சாரங்களையும் ஏற்றுக்கொள்வதற்காக தேவாலயத்தின் ஆசாரியர்களை இனிமேல் தேவன் சந்திக்கமாட்டார் என்பதற்கு அடையாளமாக இருந்தது. மேலும் யூதர்களையும் புறஜாதிகளையும் பிரித்த அந்தத் தடுப்புச்சுவர் உடைக்கப்பட்டது என்பதையும் காட்டியது. இந்த இரு வகுப்பாருக்கும் இயேசு தம்மையே காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார். இரட்சிக்கப்படவேண்டுமானால் இந்த இருவகுப்பாரும் அவரை விசுவாசித்து,

பாவத்திற்காகக் கொடுக்கப்பட்ட பலி அவரென்றும், உலகின் இரட்சகர் அவரென்றும் ஏற்றுக்கொள்ளவேண்டும். (8)

போர்சேவகன் இயேசுவின் விலாவிலே ஈட்டியால் குத்தும்போது, தனிப்பட்ட இருவகையான ஊற்றுகள் பெருக்கெடுத்தோடியது. ஒன்று இரத்தம்; அடுத்தது தண்ணீர். தமது நாமத்தை விசுவாசிப்போரது பாவத்தைக் கழுவுவதற்காகவே அந்த இரத்தம்; விசுவாசிக்கு ஜீவன் கொடுப்பதற்காக இயேசுவிடமிருந்த பெற்ற ஜீவத்தண்ணீரைக் குறிப்பதற்குத்தான் அந்த தண்ணீர். (9) ★

# 48

# மாபெரும் மருளவிழுகை!

அஞ்ஞான விக்கிரக வணக்கக்காரர்கள் கிறிஸ்தவர்களை கொடூரமாய் உபத்திரவப்படுத்தி, கொலைசெய்த காலத்திற்கு நான் எடுத்துச்செல்லப்பட்டேன். இரத்தம் ஆறாகப் பெருகிற்று. பிரபுக்கள் கல்விமான்கள், பாமர மக்கள் அனைவரும், ஒன்றுபோல் இரக்கமின்றிக் கொலைசெய்யப்பட்டார்கள். தங்களது மதவைராக்கியத்தை விட்டுக்கொடுக்காததால் அநேக செல்வந்தர்கள் தரித்திர ராக்கப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் உபத்திரவங்கள் துன்பங்கள் ஆகியவற்றைச் சகித்தபோதிலும், தங்களது ஆவிக்குரிய நிலையினின்று தாழ்ந்துபோகவில்லை. தங்களது மதத்தை தூய்மையாக வைத்திருந்தார்கள். அவர்கள் துன்பம் அனுபவிப்பதைக் கண்டு, சாத்தான் வெற்றிகொண்டு எக்களிப்பதை நான் கண்டேன். தேவன் தமது உண்மையுள்ள இரத்தசாட்சிகளை மிகுந்த ஒப்புதலோடு கண்ணோக்கினார். அந்த பயங்கரமான காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், தேவனால் மிகவும் நேசிக்கப்பட்டார்கள். ஏனெனில் அவருக்காக மனப்பூர்வமாகத் துன்பம் அனுபவிக்க ஆயத்தமாயிருந்தார்கள். அவர்கள் அனுபவித்த ஒவ்வொரு துன்பமும் பரலோகத்தில் அவர்களுக்குக் கிடைக்கப்போகும் வெகுமதியைப் பெருக்கிற்று. (1)

பரிசுத்தவான்கள் துன்பம் அனுபவிப்பதினிமித்தம் சாத்தான் மகிழ்ச்சியடைந்தபோதிலும் அவன் இன்னும் திருப்தியடையவில்லை. அவன் மனதையும் உடலையும் ஆதிக்கங்கொள்ள விரும்பினான். அவர்கள் அனுபவித்த துன்பங்கள் அவர்களை தேவனிடத்தில் மேலும் நெருங்கிச் சேரத் தூண்டிற்று. ஒருவரையொருவர் நேசிக்க வழிநடத்தியது. அவருக்கு விரோதமான காரியங்களைச் செய்யாமல் அவருக்கு பயப்படும்படிச் செய்தது. தேவனைக் கோபப்படுத்தும்படி அவர்களை வழிநடத்த சாத்தான் விரும்பினான். அதன்மூலம் அவர்கள் தங்கள் உறுதியையும், பலத்தையும், கட்டுப்பாட்டையும் இழந்துவிடுவார்களென்பது அவனுக்குத் தெரியும். ஆயிரமாயிரம் உண்மையான விசுவாசிகள் கொல்லப்பட்டபோதிலும், அவர்களது இடத்தை நிரப்ப மேலும் அநேகர் எழும்பினார்கள். சாத்தான்

தனது குடிமக்களை இழந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் உபத்திரவத்தைச் சகித்து, மரணத்தை அடைந்தபோதிலும், இயேசுவிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவரது இராஜ்யத்தின் குடிமக்களானார்கள். எனவே, சாத்தான் தேவனுடைய ஆளுகைக்கு எதிராக, மிகுந்த வெறியோடே போர்செய்து, சபையை ஒழித்துவிடத் திட்டமிட்டான். கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு பகுதியை பின்பற்றும்படியாக, அஞ்ஞான விக்கிரக வணக்கக்காரர்களை வழிநடத்தினான். அவர்கள் இயேசுவின் சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நம்புவதாகக் கூறினார்கள். இதயத்தில் மாற்றமின்றி இயேசுவின் பின்னடியார்களோடு இணையத் தீர்மானித்தார்கள். ஆ! சபைக்கு என்ன பயங்கரமான ஆபத்து! மனம் கடுந்துயர் அனுபவித்த காலமது. கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒருபகுதியை மாத்திரம் தழுவிக்கொண்ட விக்கிரக ஆராதனைக்காரருடன், தாங்களும் தாழ்ந்து—இறங்கிவந்து—இணைந்தால், அவர்கள் முற்றிலுமாக மனந்திரும்ப ஒரு வழி அமையுமென்று சிலர் நினைத்தார்கள். வேதத்தின் கொள்கைகளை தாறுமாறாக்க சாத்தான் வழி வகைகளைத் தேடினான். (2)

அஞ்ஞானிகள் கிறிஸ்தவர்களோடு இணைந்தார்கள். எனவே சபையின் தரம் வெகுவாகத் தாழ்த்தப்பட்டுவிட்டது என்பதை நான் கண்டேன். இந்த விக்கிரகங்களை வணங்குபவர்கள் தாங்கள் மனந்திரும்பியவர்கள் என்று சொல்லிக்கொண்டாலும்,அவர்கள் தங்களது விக்கிரக வணக்கத்தைச் சபையினுள்ளாகக் கொண்டுவந்துவிட்டார்கள். விக்கிரக வணக்கத்திற்கான பொருள்களை மாற்றிக்கொண்டார்கள். பரிசுத்தவான்கள், கிறிஸ்து, அவரது தாயார் மரியாள் ஆகியோரது சிலைகளைக்கூட வணங்க ஆரம்பித்தார்கள். கிறிஸ்துவின் பின்னடியார்கள் மெல்லமெல்ல அஞ்ஞானிகளோடு இணைந்தபோது கிறிஸ்தவ மதம் கேடுபாடடைந்து, சபை அதன் தூய்மையையும் வல்லமையையும் இழந்துபோயிற்று. சிலர் அவர்களோடு இணைய மறுத்தார்கள். அப்படிப்பட்டோர் தங்களது தூய்மையைக் காத்துக்கொண்டு, தனியாக தேவனைத் தொழுதுகொண்டார்கள். பூமியிலும் வானத்திலும் உள்ளவற்றிற்கு ஒப்பான எந்த விக்கிரகத்திற்கும் அவர்கள் தலைவணங்கமாட்டார்கள். (3)

அநேகர் விழுந்துபோனதைக்கண்டு, சாத்தான் எக்களித்தான். பின்பு, விழுந்துபோன சபையைத் தூண்டிவிட்டான். மதத்தின் தூய்மையைக் காத்துக்கொண்டவர்கள் தங்களது சடங்காச் சாரங்களுக்கும், விக்கிரக வணக்கத்திற்கும் சம்மதிக்காவிட்டால், மரணாக்கினையைக் கொடுத்துத் தீர்த்துக்கட்டினான். கிறிஸ்துவின் உண்மையான சபைக்கு விரோதமாக உபத்திரவத்தின் நெருப்பு கிளறிவிடப்பட்டு, இலட்சக்கணக்கானோர் இரக்கமின்றி கொலைசெய்யப்பட்டார்கள். (4)

பின்வரும் வகையிலே எனக்குமுன்பாக இந்தக் காரியம் வைக்கப்பட்டது. அஞ்ஞான விக்கிரக ஆராதனைக்காரர்களின் பெருங்கூட்டம் ஒன்று கறுப்புக்கொடி ஏந்தியிருந்தது. அதிலே சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் அடையாள உருவங்கள் காணப்பட்டன. அந்தக் கூட்டம் மிகக் கொடூரமான கோபத்தோடு காணப்பட்டது. அதன்பின்னர், வெண்கொடி பிடித்த இன்னொரு கூட்டம் எனக்குக் காட்டப்பட்டது. அதிலே "தேவனுக்கு தூய்மையும் பரிசுத்தமும்" என்று எழுதப்பட்டிருந்தது. அவர்களது முகங்கள் உறுதியோடும் பரலோக அமைதியோடும் காணப்பட்டன. அஞ்ஞான விக்கிரக வணக்கத்தார் அவர்களை நெருங்குவதையும், அங்கே ஒரு மாபெரும் சங்காரம் நிகழ்ந்ததையும் நான் கண்டேன். அவர்கள் முன்பாகக் கிறிஸ்தவர்கள் அழிக்கப்பட்டுப்போனார்கள். என்றாலும் கிறிஸ்தவர்களது கூட்டம் இன்னும் நெருக்கமாக கொடியை உறுதியாகப் பற்றிக்கொண்டது. அநேகர் விழுந்தபோது, கொடியைச் சுற்றிலும் மற்றவர்கள் அவர்களது இடங்களை நிரப்பினார்கள். (5)

விக்கிரக வணகத்கத்தாரின் கூட்டம் சேர்ந்து ஆலோசிப்பதை நான் கண்டேன். கிறிஸ்தவர்களைச் சம்மதிக்கப்பண்ணத் தவறிவிட்டதால், மற்றுமொரு திட்டத்தைத் தீட்டினார்கள். தங்களது கொடிகளைத் தாழ்த்தி உறுதியான கிறிஸ்தவக் கூட்டத்தை நெருங்கி, சில தீர்மானங்களை அவர்களிடத்தில் எடுத்துக்கூறினார்கள் என்பதை நான் கண்டேன். முதலில் அவர்களது கருத்துக்கள் முற்றிலுமாக மறுக்கப்பட்டன. பின்பு அந்தக் கிறிஸ்தவக் கூட்டம் சேர்ந்து ஆலோசிப்பதை நான் கண்டேன். சிலர் தங்களது கொடியைத் தாழ்த்தி, அவர்கள் கூறுகின்ற காரியங்களை ஏற்றுக்கொள்வோம்; நமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம்; முடிவிலே நாம் பெலனடைந்து, அஞ்ஞானிகளுக்கு மத்தியில் நம் கொடியைப் பிடிக்க வல்லமையடைவோம் என்று கூறினார்கள். ஒரு சிலர் இந்தத் திட்டத்திற்கு உடன்படாமல் கொடியைத் தாழ்த்துவதைவிட உறுதியாகப் பற்றிப்பிடித்து, சாவைத் தெரிந்துகொண்டார்கள். பிறகு அநேகர் தங்களது கொடிகளைத் தாழ்த்தி அஞ்ஞானிகளோடு இணைந்தார்கள். உறுதியாயும் விடாப்பிடியாயும் இருந்தவர்கள் மறுபடியும் கொடியைப் பிடுங்கி உயர்த்திப்பிடித்தார்கள். தூ ய்மையான கொடியைப் பிடித்த கூட்டத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வெளியேறி, வெண்கொடி பிடித்தவர்களை துன்புறுத்த கறுப்புக் கொடியின்கீழ் இருக்கும் அஞ்ஞானிகளோடு இணைந்தார்கள். அநேகர் கொல்லப்பட்டார்கள். எனினும், வெண்கொடி உயர்த்திப் பிடிக்கப்பட்டது. விசுவாசிகள் அதைச் சுற்றிலும் தொடர்ந்துவரும்படி எழுப்பப்பட்டார்கள். (6)

அஞ்ஞானிகளின் கோபத்தை இயேசுவிற்கு எதிராக எழுப்பிய யூதர்கள் தண்டனைக்குத் தப்பிப்போவதில்லை. நியாயம் விசாரிக்கப்படுகின்ற

அரங்கத்தில் பிலாத்து இயேசுவை ஆக்கினைக்குத் தீர்க்கத் தயங்கியபோது, கொதித்தெழுந்த யூதர்கள் "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூக்குரலிட்டனர். தங்கள் தலைமீது வரவழைத்துப் போட்டுக்கொண்ட பயங்ரமான சாபத்தின் நிறைவேறுதலை யூத ஜாதி அனுபவித்துவிட்டது. அஞ்ஞானிகளும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டவர்களும் அவர்களுக்கு விரோதிகளாக இருந்தார்கள். பெயர்க் கிறிஸ்தவர்கள், யூதர்கள் சிலுவையிலறைந்த கிறிஸ்துவின்மேல் தாங்கள் கொண்ட ஆர்வத்தினால், எவ்வளவு துன்பத்தை யூதர்கள்மீது கொண்டுவரமுடியுமோ அவ்வளவிற்கு தேவன் மகிழ்ச்சியடைவார் என நினைத்தார்கள். எனவே, விசுவாசிக்காத அநேக யூதர்கள் கொல்லப்பட்டார்கள். மற்றவர்களோவெனில் இடத்திற்கு இடம் விரட்டப்பட்டு, எல்லா வகைகளிலும் தண்டிக்கப்பட்டார்கள். (7)

தாங்கள் கொன்றுபோட்ட இயேசுவினுடைய மற்றும் அவரது சீஷர்களுடைய இரத்தம் அவர்கள்மேலிருந்தது. பயங்கரமான ஆக்கினைத்தீர்ப்புகள் அவர்கள்மேல் வந்தன. தேவனுடைய சாபம் அவர்களைப் பின்தொடர்ந்தது. அஞ்ஞானிகளுக்கும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டோருக்கும் ஒரு பழிச்சொல்லாகவும் கேலிக்கூத்தாகவும் ஆனார்கள். காயீனின்மேல் போடப்பட்ட அடையாளம் அவர்கள்மேலும் இருப்பதுபோன்று அவர்கள் இழிவுபடுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டு வெறுக்கப்பட்டார்கள். ஆனால் தேவன் இந்த மக்களை ஆச்சரியமானவிதமாகப் பாதுகாத்து, தேவனுடைய சாபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவதற்காக உலகம் முழுவதும் சிதறப்பண்ணினார் என்பதையும் நான் கண்டேன். ஆனால் யூதர்களில் தனிப்பட்ட நபர்கள் மனந்திரும்புவார்களானால் தங்களது இதயத்தை மூடியிருக்கும் திரையைக் கிழித்து தங்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருப்பதைக் காண்பார்கள். இயேசுவை உலகின் இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள். இயேசுவைத் தள்ளி—சிலுவையிலறைந்து—தங்களது ஜாதியார் செய்துமுடித்த அந்த மாபெரும் பாவத்தை அவர்கள் காண்பார்கள். (8) ★

# 49

# அக்கிரமத்தின் இரகசியம்!

மக்களின் மனதை இயேசுவிடமிருந்து மனிதனுக்கு இழுத்து தனிப்பட்ட நபரின் பொறுப்புணர்வை ஒழிப்பதே, எப்பொழுதும் சாத்தானின் திட்டமாக இருக்கிறது. சாத்தான் மனுஷகுமாரனைச் சோதிக்கும்போது, தனது திட்டத்தில் தோற்றுவிட்டான். ஆனால் விழுந்துபோன மனிதனிடத்தில் வந்தபோது, அதில் அதிக வெற்றிபெற்றான். கிறிஸ்தவ மதத்தில் கேடுபாடுகள் நிறைந்துவிட்டன. போப்புகளும் பாதிரிமார்களும் ஒரு உயர்ந்த நிலையைத் தங்களுக்கு எடுத்துக்கொள்வதில் துணிகரத்தோடு இருந்தார்கள். பாவமன்னிப்பிற்காக கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதற்குப்பதிலாக, தங்களை நோக்கிப்பார்க்கவேண்டுமென்று மக்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். (1)

மக்கள் முற்றிலுமாக ஏமாற்றப்பட்டார்கள். போப்புகளும் பாதிரிமார்களும் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்பதாகப் போதிக்கப்பட்டார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் சாத்தானின் பிரதிநிதிகளாக இருந்தார்கள். அவர்களுக்கு தலைவணங்கியவர்கள் சாத்தானையே தொழுதுகொண்டார்கள். மக்கள் வேதபுத்தகம் வேண்டுமெனக் கேட்டார்கள். ஆனால் பாதிரிகளோ மக்கள் தாங்களாகவே வேதத்தை வாசித்தால் ஆபத்து; அவர்கள் இன்னும் அதிகமாக வெளிச்சத்தைப்பெற்று தலைவர்களது பாவங்களை வெளியரங்கமாக்கிவிடுவார்களோ எனப் பயந்தார்கள். தேவனுடைய வாயினின்று பெற்றுக்கொள்ளுவதுபோல் அவர்களை ஏமாற்றுகிறவர்களிடமிருந்து மக்கள் ஒவ்வொரு வார்த்தையையும் பெற்றுக்கொள்ளும்படிப் போதிக்கப்பட்டார்கள். தேவன் மாத்திரமே தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டிய அவர்களது மனதை இவர்கள் தங்களது ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள். அதை தேவன் மாத்திரமே வைத்திருக்கக்கூடும். தாங்கள் தங்களது உள்ளத்திலே மறுக்கமுடியாத உண்மையென விளங்கிக்கொண்ட காரியங்களைப் பின்பற்ற யாராவது தைரியங்கொள்வார்களானால் எத்தகைய வெறுப்பை சாத்தானும் யூதர்களும் இயேசுவின்மீது காட்டினார்களோ, அத்தகைய வெறுப்பை இவர்களுக்கு விரோதமாகவும் தூண்டிவிட்டார்கள். அதிகாரத்திலுள்ளவர்கள் அவர்களது இரத்தத்திற்காகத் தாகமாயிருந்தார்கள். (2)

சாத்தான் சிறப்பாக வெற்றிகொண்ட ஒரு காலக்கட்டம் எனக்குக் காட்டப்பட்டது. தங்கள் மதத்தின் தூய்மையைக் காத்துக்கொள்ளத் துணிந்ததால் திரளான கிறிஸ்தவர்கள் பயங்கரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். வேதாகமம் வெறுக்கப்பட்டது. அதை பூமியினின்றே அழித்துவிடும்படி முயற்சிகள் செய்யப்பட்டன. மரண வேதனையைக் காட்டி மக்கள் வேதம் வாசிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கண்டுபிடிக்கப்பட்ட வேதப்பிரதிகள் கொளுத்தப்பட்டன. ஆனால் தேவன் தமது வார்த்தைகளின்பேரில் விசேஷித்த கவனம் வைத்திருந்தார் என்பதை நான் கண்டேன். அவர் அதைப் பாதுகாத்தார். வெவ்வேறு காலக்கட்டங்களில் வேதாகமத்தின் ஒரு சில பிரதிகளே உலகில் இருந்தன. எனினும் அவரது வார்த்தைகள் அழிந்துவிட அவர் அனுமதிக்கவில்லை. ஏனெனில் கடைசிநாட்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வேதாகம புத்தகம் வீதம் சொந்தமாக வைத்திருக்கும்வண்ணம் அதன் பிரதிகள் மிகவும் அதிகரிக்கப்படும். ஒரு சில வேதாகமப் பிரதிகளே இருக்கும்போது, அது மிகவும் அருமையானதும், உபத்திரவம் அனுபவித்த இயேசுவின் பின்னடியார்களுக்கு ஆறுதலாகவும் இருந்ததை நான் கண்டேன். வேதம் மிகவும் இரகசியமாக வாசிக்கப்பட்டது. இத்தகைய மேலான பாக்கியத்தை பெற்றிருந்தவர்கள் தேவனோடும், அவரது குமாரனாகிய இயேசுவோடும் அவரது சீஷர்களோடும் தாங்கள் நேரில் பேசுவதாக உணர்ந்தார்கள். ஆனால் இந்த பாக்கியமான உரிமை அநேகரின் உயிரைக் குடித்தது. வேதாகமம் வைத்திருந்தவர்கள் கண்டுபிடிக்கப்படும்போது, சிரச்சேதஞ்செய்யப்படும்படி அதற்காக நியமிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அல்லது கம்பங்களில் கட்டிவைக்கப்பட்டு எரிக்கப்பட்டார்கள். அல்லது பாதாளச் சிறைகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பட்டினியால் சாகும்படி விடப்பட்டார்கள். (3)

மீட்பின் திட்டத்தை சாத்தானால் தடைசெய்ய முடியவில்லை. இயேசு சிலுவையிலறையப்பட்டு, மூன்றாம்நாளில் உயிரோடெழுந்தார். ஆனால் சாத்தான் இயேசுவின் சிலுவை மரணத்தையும் அவரது உயிர்த்தெழுதலையும் தனக்குச் சாதகமாகச் செயல்படும்படி அமைக்க எண்ணி, அதைத் தனது தூதர்களுக்குச் சொன்னான். கிறிஸ்துவோடு பத்துக்கட்டளைகளைக்குறித்த பிரமாணமும் மடிந்துபோய்விட்டது என்று சற்று தீவிரமாக, முயன்று, அழுத்தங்கொடுத்து, அவர்களை நம்பச்செய்யக்கூடுமானால், அத்துடன் யூதர்களின் பலிமுறைகள், காணிக்கைகள் ஆகியவைகளுக்குரிய பிரமாணங்கள் கிறிஸ்துவின் மரணத்தோடு மறைந்துபோய்விட்டது என்று இயேசுவில் விசுவாசம் வைத்தவர்களை நம்பவைக்கமுடியும் என்ற காரியத்திலும் உடன்பாடு கொண்டிருந்தான். (4)

அநேகர் சாத்தானின் தந்திரத்திற்கு தங்களை ஆயத்தமாக ஒப்புக்கொடுத்ததை நான் கண்டேன். தேவனுடைய பரிசுத்தப் பிரமாணம் காலின் கீழ்ப்போட்டு மிதிக்கப்படுவதைக் கண்ட பரலோகம் முழுவதுமே கோபத்தால் கொதித்தது. இயேசுவும் அவரது பரலோகக் குடும்பம் அனைத்தும் தேவனுடைய பிரமாணத்தின் தன்மையை நன்றாக அறிந்தவர்கள். தேவன் அதை மாற்றவோ வழக்கொழியச்செய்யவோ மாட்டார் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். மனிதனின் விழுகைக்குப்பின்னாக அவனது நம்பிக்கையற்ற நிலைமை பரலோகத்தில் ஆழ்ந்த துக்கத்தை ஏற்படுத்தியது. தேவனுடைய பரிசுத்தப் பிரமாணத்தை மீறுகிறவர்களுக்காக இயேசு தன்னை பலியாக ஒப்புக்கொடுத்தார். பிரமாணம் இரத்துசெய்யப்படக்கூடுமானால் இயேசுவின் மரணமில்லாமலேயே மனிதன் இரட்சிக்கப்பட்டிருக்கக்கூடும். இயேசுவின் மரணம் அவரது பிதாவின் பிரமாணத்தை ஒழித்துப்போடவில்லை. மாறாக, பிரமாணத்தை கனப்படுத்தி—மேன்மைப்படுத்தி, அதன் அனைத்துப் பரிசுத்த கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதலை ஏற்படுத்தியது. (5)

சபை தூய்மையாகவும், உறுதியாகவும் நின்றிருந்திருக்கு மானால் சாத்தான் அவர்களை ஏமாற்றியிருக்கமுடியாது. தேவனுடைய பிரமாணத்தை காலின் கீழ்ப்போட்டு மிதிக்கச்செய்திருக்கவும் முடியாது. இந்தத் துணிவான திட்டத்தில்பரலோகத்திலும்பூலோகத்திலுமிருக்கும்தேவனுடைய ஆளுகையின் அடித்தளத்திற்கு எதிராக சாத்தான் நேரடியாகத் தாக்குகிறான். அவனது கலகம் அவனைப் பரலோகத்திலிருந்து தள்ளுவதற்குக் காரணமாயிற்று. அவன் கலகஞ்செய்தபின்பு, தன்னை இரட்சித்துக்கொள்ளும்படியாக தேவனுடைய பிரமாணம் மாற்றப்படவேண்டுமென விரும்பினான். ஆனால் பரலோகக்கூட்டத்தார் அனைவருக்கும் முன்பாக, தேவனுடைய பிரமாணம் மாற்றப்படக்கூடாத ஒன்று என்று கூறப்பட்டது. தேவனுடைய பிரமாணத்தை மீறும்படி மற்றவர்களை வழிநடத்தினால் தனது பக்கத்திற்கு அவர்களை இழுத்துக்கொள்ளலாம் என்பது சாத்தானுக்குத் தெரியும். ஏனெனில் பிரமாணத்தை மீறுகிற ஒவ்வொருவரும் சாகவேண்டும். (6)

சாத்தான் இன்னும் சற்று அதிகமாகச் செயல்படத் தீர்மானித்தான். சிலர் தேவனுடைய பிரமாணத்தைப்பற்றி வைராக்கியமாயிருப்பார்கள் என்றும், அவர்களை இந்தக் கண்ணியிலே அகப்படுத்தமுடியாதென்பதையும் அவன் தனது தூதர்களுக்குக் கூறினான். மேலும், பத்துக்கட்டளைகளும் மிகத் தெளிவாக இருக்கின்றன. எனவே அவைகள் தங்களைக் கட்டுப்படுத்துகின்றன என்று அநேகர் விசுவாசிக்கிறார்கள். ஆகையால் ஒரு கட்டளையை மாத்திரம் அழித்துப்போட வகைதேடுகிறான். தனது பிரதிநிதிகளைக்கொண்டு, ஓய்வுநாள் பிரமாணமாகிய நான்காம் பிரமாணத்தை மாற்றுவதற்கு முயற்சிசெய்தான்.

இவ்வாறு உண்மையான தேவனைப்பற்றிய காட்சியைக் கொண்டுவருகின்ற பத்தில் ஒரு கட்டளையான—ஓய்வுநாள் கட்டளையை மாற்றினான். இந்தக் கட்டளையே பூமியையும் வானத்தையும் படைத்தவரைப்பற்றிக் கூறுகிறது. சாத்தான் இயேசுவின் மகிமையான உயிர்த்தெழுதலை அவர்களுக்கு முன்பாக நிறுத்தி, அவர் வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்ததால் அவர் ஓய்வுநாளை ஏழாம் நாளிலிருந்து முதலாம் நாளிற்கு மாற்றிவிட்டார் என்று கூறினான். (7)

இவ்வாறு சாத்தான் உயிர்த்தெழுதலை தனது நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொண்டான். தாங்கள் ஆயத்தம்பண்ணிய தவறான காரியங்களை எவ்வாறு கிறிஸ்துவின் நண்பர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் எனக்கூறி, தமது தூதர்களோடு மகிழ்ந்து கொண்டாடினான். ஒருவர் மதசம்பந்தமான நடுக்கத்தோடு அதை நோக்கும்போது, மற்றவரோ அதை ஏற்றுக்கொள்ளுகிறார். இவ்வாறு பல வகையான வேதப்புரட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதிக உற்சாகத்தோடு பாதுகாக்கப்பட்டன. அவரது வார்த்தையின்மூலமாக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தம் தவறுகளாலும் பாரம்பரியங்களாலும் மூடப்பட்டு, தேவனுடைய கற்பனைகளைப்போலவே போதிக்கப்பட்டன. பரலோகத்தையே எதிர்த்து நிற்கும் இந்த வஞ்சகமானது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டாலும், இந்தப் பிழைகளும் ஏமாற்றங்களும் நிறைந்த காலங்கள் நெடுகிலும், தேவனுக்கான சாட்சிகளும் இல்லாமலிருக்கவில்லை. சபையின் உபத்திரவத்திலும் இருண்ட காலத்தின் மத்தியிலும் தேவனுடைய எல்லாக் கட்டளைகளையும் எப்போதும் பின்பற்றிவந்த தேவனுடைய உண்மையான விசுவாசிகள் இருந்துவந்தார்கள். (8)

மகிமையின் இராஜாவின் பாடு—மரணத்தைக் கண்ட பரலோகத்தின் தூதர் கூட்டம், வியப்பினால் நிறைந்திருந்ததை நான் கண்டேன். ஜீவனுக்கும் மகிமைக்கும் தேவனானவர், பரலோகத்தை மகிழ்ச்சியாலும் அழகாலும் நிரப்பியவர், மணரத்தின் கட்டுகளைத் தகர்த்து, மாபெரும் வெற்றிவேந்தனாக சிறையினின்று வெளியே வந்தது அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கவில்லையென்பதையும் நான் கண்டேன். எனவே, இந்தச் சம்பவங்களில் ஏதாவதொன்றை ஞாபகத்தில் இருத்தி, ஓய்வுநாளாக நினைக்கப்படவேண்டுமானால் அது சிலுவை மரணமே. ஆனால் இந்தச் சம்பவங்களில் எதுவானாலும் தேவனுடைய பிரமாணத்தை மாற்றவோ அல்லது ஒழித்துக்கட்டவோ திட்டஞ்செய்யப்பட்டதல்ல. மாறாக, பிரமாணத்தின் மாறாத தன்மைக்கு உறுதியான அதாரத்தை அவைகள் கொடுக்கின்றன. (9)

இந்த இரு சம்பவங்களுக்கும் ஞாபகார்த்தங்கள் இருக்கின்றன. பிட்கப்பட்ட அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் அருந்தி, திருவிருந்தில் பங்கொடுப்பதின்மூலமாக இயேசு வரும்வரையிலும் அவரது மரணத்தைத் தெரிவிக்கிறோம். அவரது பாடு—மரணத்தின் காட்சிகள் நமது கண்களுக்கு முன்பாக பசுமையாகக் கொண்டுவரப்படுகின்றன. நாம் ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு, அந்தத் தண்ணீர் கல்லறையினின்று, புதிய வாழ்வு வாழ்வதற்காக, அவரது உயிர்த்தெழுதலுக்கு ஒப்பாக திரும்ப எழுப்பப்படுகிறோம். இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவுகூரவே ஏற்படுத்தப்பட்டது. (10)

தேவனுடைய பிரமாணம் என்றும் நிலைத்திருக்குமென்றும், நித்திய நித்திய காலமாக புதிய பூமியில் நிலைத்திருக்குமென்றும் எனக்குக் காட்டப்பட்டது. சிருஷ்டிப்பின்போது, பூமியின் அஸ்திபாரங்கள் போடப்பட்டபோது, தேவகுமாரர்கள் சிருஷ்டிகரின் கிரியைகளைக்கண்டு வியந்து, பரலோகக் கூட்டம் அனைத்துமே ஆனந்தத்தால் ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுதுதான் ஓய்வுநாளுக்கும் அஸ்திபாரம் இடப்பட்டது. ஆறுநாளில் சிருஷ்டிப்பின் முடிவிலே, தேவன் தமது வேலைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அவர் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தப்படுத்தினார். ஏனெனில் தமது வேலைகளைவிட்டு அந்த நாளிலே ஓய்ந்திருந்தார். ஏதேனில் மனிதனின் விழுகைக்கும் முன்னரே ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டது. ஆதாமும் ஏவாளும் பரலோகக் குடும்பம் அனைத்துமே அதை ஆசரித்தார்கள். தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து, அதை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தப்படுத்தினார். ஓய்வுநாள் ஒருக்காலும் ஒழிந்துபோகாது என்பதை நான் கண்டேன். நித்தியகாலமாக மாபெரும் சிருஷ்டிகரின் மகிமைக்காக மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் தேவதூதர் கூட்டமும் அதை ஆசரிப்பார்கள். (11) ★

# 50

# மரணமே! கடுந்துயர நித்தியவாழ்வு அல்ல!

சாத்தான் ஏதேனிலே தனது ஏமாற்றும் வேலையை ஆரம்பித்தான். ஏவாளிடத்தில் "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று கூறினான். ஆத்துமா அழியாதது என்பதுபற்றிய சாத்தானின் முதல்பாடம் இதுவே. இந்த ஏமாற்றும் காரியத்தை அந்தநாளிலிருந்து இன்றுவரை, அதாவது, தேவனுடைய பிள்ளைகளின் சிறையிருப்பு மாறும்வரை அவன் நடத்துவான். ஏதேனில் ஆதாம்—ஏவாள்பற்றிய காரியங்கள் எனக்குக் காண்பிக்கப்பட்டது. விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தார்கள். எனவே, ஜீவவிருட்சத்தைச் சுற்றிலும் சுடரொளிப் பட்டயம் வைக்கப்பட்டது. அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியையும் புசித்து, எனறும் சாவாமையையுடைய பாவிகளாக இருந்து விடக்கூடாதே என்று தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். சாவாமையை என்றும் நிலைக்கச்செய்வதே அந்த மரத்தின் கனியின் தன்மையாகும். "ஆதாமின் குடும்பத்தில் யாராவது அந்தச் சுடரொளிப் பட்டயத்தைக் கடந்து, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்ததுண்டோ" என்று ஒரு தூதன் வினவுவதைக் கேட்டேன். அதற்கு மற்றொரு தூதன் "ஆதாமின் குடும்பத்தில் ஒருவர்கூட சுடரொளிப்பட்டயத்தைக் கடந்துவந்து, ஜீவவிருட்சதின் கனியைப் புசித்ததில்லை" என்று பதில் கூறினான். ஆகையால் சாவாமையையுடைய ஒரு பாவியும் கிடையாது. ஒரு ஆத்துமா பாவஞ்செய்யும்போது, அது நித்திய மரணத்தை அடைகிறது. அந்த மரணத்தில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையே கிடையாது. அதற்குப்பின்பே தேவனின் உக்கிரகோபம் தணியும். (1)

"பாவஞ்செய்கின்ற ஆத்துமா சாகும்" என்ற தேவனுடைய வார்த்தைகளை பாவஞ்செய்கின்ற ஆத்துமா சாகாது; அது கடுந்துன்பத்தில் நித்தியமாக வாழுமென்று பொருள்கொடுத்து, அதை மனிதர்கள் நம்பும்படிச்செய்து, சாத்தான் வெற்றிகண்டது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. "மகிழ்ச்சியிலிருந்தாலும், வேதனையிலிருந்தாலும் ஜீவன்

ஜீவனே என்றும்—வேதனையற்ற—மகிழ்ச்சியற்ற—வெறுப்பற்ற ஒரு நிலைதான் மரணம்” என்றும் தூதன் கூறினான். (2)

ஏதேனில் ஏவாளிடம்: “நீங்கள் சாகவே சாவதில்லை” எனக்கூறிய முதல் பொய்யை, சிறப்பான முயற்சியெடுத்துப் பரப்பும்படியாக சாத்தான் அவனது தூதர்களுக்குக் கூறினான். இந்தத் தவறான காரியம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனிதன் சாவாமையுடையவன் என்று நம்பும்படி வழிநடத்தப்பட்டார்கள். பாவிகள் நித்திய வேதனையில் வாழவேண்டுமென நம்பும்படி சாத்தான் வழிநடத்தினான். எனவே சாத்தான் தனது கையாட்களின் மூலமாக மக்களிடத்தில் தேவன் பழிவாங்கும் கொடுங்கோன்மையுடையவர் என்ற எண்ணத்தை நிலைநாட்ட வழி ஆயத்தஞ்செய்யப்பட்டது. தன்னை சந்தோஷிப்பிக்காத ஆத்துமாக்களை நரகத்தில் அமிழ்த்தி, தனது உக்கிர கோபத்தை என்றும் உணரச்செய்கிறவரென்றும், அவர்கள் சொல்லிமுடியாத கடுந்துயரை அனுபவிக்கும்போதும், நித்திய அக்கினியிலே துடிக்கும்போதும், அவர் மனநிறைவோடு மேலிருந்து கீழே பார்க்கிறதாகவும் காட்டுகிறான். இந்தத் தவறான காரியத்தை அநேகர் ஏற்றுக்கொண்டால், தேவனை நேசித்து ஆராதிப்பதற்குப் பதிலாக அவரை வெறுப்பார்களென்பதை அவன் அறிவான். வேத வசனத்தின் பயமுறுத்தல்கள் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறாது என்று அநேகர் நம்புவார்கள். ஏனெனில் தான் சிருஷ்டித்த மக்களையே நித்தியமாக கடுந்துயரத்தில் அமிழ்த்துவது அவரது இரக்கம் நிறைந்த அன்பான குணத்திற்கு விரோதமானதாக இருக்கும். (3)

இன்னொரு வகையில் சாத்தான் மிதமிஞ்சிப்போய், தேவனுடைய நியாயத்தையும் அவருடைய வார்த்தைகளில் உள்ள பயமுறுத்தல்களையும் மக்கள் முற்றிலுமாக அலட்சியஞ்செய்யும்படி வழிநடத்தினான். அதாவது அவர் முற்றிலும் இரக்கமே உருவானவர். ஒருவருமே அழிந்துபோவதில்லை. பாவியும் பரிசுத்தவானும் கடைசியில் அனைவருமே அவருடைய இராஜ்யத்தில் மீட்கப்படுவார்கள் என்றும் நம்பும்படிச் செய்தான். (4)

ஆத்துமாவின் அழியாமை, முடிவில்லாத நரகவேதனை என்ற பிரபலமான தவறுகளின் பலனாக, வேதபுத்தகம் ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்படவில்லை என்று மற்றொரு வகுப்பாரை நம்பச்செய்து, அதன்மூலம் அவனது கை ஓங்குகின்றது. வேதாகமம் அநேக நல்ல காரியங்களைப் போதிக்கின்றது. ஆனால் அதையே நேசித்துச் சார்ந்துவிட முடியாது; ஏனென்றால், வேதம் நித்திய நரகம் என்ற கொள்கையை அறிவிக்கிறது என்று அவர்கள் போதிக்கப் பட்டிருந்தார்கள். (5)

இன்னொரு வகுப்பாரை இன்னும் சற்று அதிகமாக வழிநடத்தி, தேவன் இல்லையென்று மறுக்கும்படிச்செய்கிறான். நித்திய நித்தியமாக மானிடக்

குடும்பத்திற்கு பயங்கரமான வேதனைகளைப் பங்காக வைப்பாரானால், வேதாகமத்தில் சொல்லப்பட்ட தேவனின் குணாதிசயத்திற்கும் இதற்கும் எந்தவித ஒற்றுமையும் அவர்களால் காணமுடியாது. எனவே, வேதாகமத்தையும் அதன் ஆசிரியரையும் மறுத்து, மரணத்தை நித்திய நித்திரையாக எண்ணுகிறார்கள். (6)

பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிற இன்னொரு வகுப்பாருண்டு. அவர்களைப் பாவஞ்செய்யும்படி சாத்தான் சோதிக்கிறான். அவர்கள் பாவம் செய்தபிறகு அவர்களுக்கு முன்பாக பாவத்தின் சம்பளம் மரணமல்ல—முடிவில்லாத நித்திய யுகங்கள் நெடுகிலும் பயங்கரமான வேதனையை அனுபவிக்கவேண்டும் என்பதாகக் கூறுகிறான். இவ்வாறு, பலவீனமான அவர்களது மனதிலே முடிவில்லாத நரகத்தின் பயங்கரத்தைப் பெரிதுபடுத்தி, அவர்களது பகுத்தறிவையும் இழக்கச்செய்கிறான். அவர்களது சிந்தனைகளையும் தன்வயப்படுத்திக்கொள்கிறான். பிறகு, சாத்தானும் அவனது தூதர்களும் எக்களிக்கிறார்கள். சமய நம்பிக்கையற்றவரும் நாத்திகரும் கூடிக்கொண்டு, கிறிஸ்தவ மதத்தை இழித்துக் கூறுகிறார்கள். உண்மையைக் கூறுமிடத்து, வேதத்தையும் அதின் ஆசாரியரையும் நம்புவதினல் ஏற்பட்ட இயல்பான விளைவுகளே இந்தத் தீமைகளாகுமென்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் உண்மையைக் கூறுமிடத்து. பிரபலமான முரண்பாடுகள் நிறைந்த சமயக்கொள்கைகளை ஏற்றுக்கொள்வதின் விளைவுகளே இவைகளாகும். (7)

சாத்தானின் துணிந்த இந்த வேலைகளைக் கண்டு பரலோகக் குழுவினர் அனைவரும் கோபத்தால் நிறைந்திருப்பதை நான் கண்டேன். தேவதூதர்கள் மிகுந்த வல்லமையுள்ளவர்களாக இருக்கும்போது, கட்டளையிடப்பட்டால், விரோதியின் வல்லமையை எளிதாக முறியடித்து விடக்கூடிய நிலை இருக்க்கின்றபோது, ஏன் இந்த ஏமாற்றங்களெல்லாம் மக்களின் மனதில் செயல்படும்படி அனுமதிக்கப்படவேண்டும் என நான் வினவினேன். மனிதனை அழிக்க எல்லாவிதத் தந்திரங்களையும் சாத்தான் முயற்சிப்பான் என்பதை கடவுள் அறிந்திருந்தார் என்பதை நான் கண்டேன். அதனால்தான் அவருடைய வார்த்தைகளை எழுதப்படும்படிச்செய்தார். மிகவும் பெவீனமானவர்கள்கூட தவறுசெய்யக்கூடாது என்ற மனுக்குலத்திற்கான அவரது நோக்கங்கள் மிகவும் தெளிவானவை. தமது வார்த்தைகளை மனிதனுக்கு கொடுத்தபின்பு, அவை சாத்தானாலும், அனது தூதர்களாலும், கையாட்களாலும், பிரதிநிதிகளாலும் அழிக்கப்பட்டுவிடாதபடி மிகக் கவனத்தோடு பாதுகாத்தார். மற்றப் புத்தகங்கள் அழிக்கப்படலாம். ஆனால், வேதாகமம் என்றும் நிலைத்திருக்கவேண்டியதொன்றாகும்.

உலகமுடிவின் நேரத்தில், சாத்தானின் ஏமாற்றங்கள் பெருகும்போது, வாஞ்சிக்கின்ற அனைவருக்கும் வேதாகமம் கிடைக்கிறதற்கேதுவாக இந்தப் புத்தகத்தின் எண்ணிக்கையும் பெருகவேண்டும். அவ்வாறு இருக்குமானால் சாத்தானுடைய ஏமாற்றங்களுக்கும் பொய்யான அற்புதங்களுக்குமெதிராகத் தங்களைக் காத்துக்கொள்ளமுடியும். (8)

எண்ணிக்கையில் மிகக்குறைவாக இருந்த காலத்திலும் வேதாகமத்தை மிகச் சிறப்பாக தேவன் பாதுகாத்தார் என்பதை நான் கண்டேன். மேலும் தெளிவாக்குகிறோம் என்று எண்ணிக்கொண்டு அறிஞர்கள் சில சந்தர்ப்பங்களில் சில வார்த்தைகளை மாற்றினார்கள். ஆனால் உண்மையிலேயே தெளிவாக இருந்த அதைக் குழப்பிவிட்டார்கள். பாரம்பரியத்திற்கு ஒத்ததாக தாங்கள் நிலைநிறுத்திய கருத்துக்களின்பேரில் சார்ந்துவிட்டார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தைகளோவெனில் முற்றிலுமாக ஒரு பூரணமான சங்கிலித்தொடர்போன்று ஒரு பகுதி இன்னொரு பகுதியோடு இணைந்து, அதை விளக்குவதாக உள்ளது என்று நான் கண்டேன். சத்தியத்தை உண்மையாகத் தேடுபவர்கள் தவறு செய்யத் தேவையில்லை. வாழ்க்கைப் பாதையை அறிவிப்பதில் தேவனுடைய வசனம் தெளிவாகவும் எளிதாகவும் இருப்பதுமட்டுமின்றி, அதில் விளக்கப்பட்டிருக்கும் ஜீவனுக்கான பாதையை விளங்கிக் கொள்ளத்தக்க ஆலோசகராக பரிசுத்த ஆவியானவரும் கொடுக்கப்பட்டுள்ளார். (9)

நமது சித்தத்தை அடக்குவதற்காக தேவ தூதர்களுக்கு ஒருபோதும் அதிகாரம் இல்லையென்பதை நான் கண்டேன். மனிதனுக்கு முன்பாக ஜீவனையும் மரணத்தையும் கடவுள் வைக்கிறார். அவனுக்குத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. மனிதன் ஜீவனை விரும்புகிறான். ஆனால் விசாலமான பாதையிலே இன்னும் தொடர்ந்து நடக்கிறான். அவர் தமது மிகுந்த கிருபையினாலும் இரக்கத்தினாலும் தமது குமாரனை அவர்களுக்காக மரிக்கக்கொடுத்தும் தேவ ஆளுகைக்கு எதிராகக் கலகஞ்செய்வதைத் தெரிந்துகொண்டார்கள். இவ்வளவு அருமையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மீட்பை ஏற்றுக்கொள்ளும்படித் தெரிந்துகொள்ளாதவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் தேவன் இவர்கள் முடிவில்லாத துன்பத்தை அனுபவிக்கும்படி, நரகத்தில் தள்ளி அடைப்பதில்லை என்றும், அதே சமயத்தில் மோட்சத்திற்கும் கொண்டுசெல்ல மாட்டாரென்பதையும் நான் கண்டேன். தூய்மையான பரிசுத்தமானவர்களின் குழுவிலே அவர்களைக் கொண்டுவருவது என்பது, அவர்களுக்கு மிகுந்த துயரத்தையே உண்டாக்கும் என்பதையும் நான் கண்டேன். ஆகையால், அவர் அவர்களை முற்றிலுமாக அழித்து, அவர்கள் இல்லாததுபோலவே ஆக்கிப்போடுவார்.

பின்பு அவரது நீதி திருப்தியடையும். மண்ணினாலே மனிதனைப் படைத்தார். அசுத்தமானவர்களும் கீழ்ப்படியாதவர்களும் அக்கினியிலே எரியுண்டு மறுபடியும் மண்ணுக்குத் திரும்புவார்கள். இந்தக் காரியத்தில் தேவனுடைய நற்செய்கையும், பரிவும், அவரது குணாதிசயத்தை வியக்கவும் அவரது பரிசுத்த நாமத்தைத் துதிக்கவும் வழிநடத்தவேண்டுமென்பதைக் கண்டேன். துன்மார்க்கர் பூமியினின்று அழிக்கப்பட்டுப்போனபின்பு, பரலோகத்தார் அனைவரும் "ஆமென்" என்று கூறுவார்கள். (10)

கிறிஸ்துவின் பெயரைச்சொல்லிக்கொண்டு, எனினும் நெருக்கமாக தானே ஏற்படுத்திய வஞ்சகங்களின்படி உன்னிப்பாகப் பின்பற்றி நடக்கிறவர்களைக்கண்டு சாத்தான் மிகுந்த திருப்திகொள்ளுகிறான். மேலும் புதியதாக ஏமாற்றும் வழிகளைக் கண்டுபிடிப்பதே அவனது வேலையாயிருக்கிறது. அவனது வல்லமையும் தந்திரமும் இந்தப் பாதையில் தொடர்ந்து பெருகிக்கொண்டேபோகிறது. தனது பிரதிநிதிகளான போப்புகளையும் பாதிரிகளையும் தங்களை உயத்தும்படிச்செய்தான். அவனது ஏமாற்றங்களை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்களை கடுமையாக உபத்திரவப்படுத்தி, ஒழித்துக்கட்டுவதற்காக மக்களைத் தூண்டிவிடும்படிச் செய்தான். ஆ! எத்தகைய துன்பங்களையும் கடுந்துயரையும் கிறிஸ்துவின் அருமையான பின்னடியார்கள் அனுபவிக்கவேண்டியதிருந்தது. அதைக்குறித்த எல்லா விவரத்தையும் தூதர்கள் உத்தமமான ஆவணங்களில் குறித்துவைத்துள்ளார்கள். துன்பம் அனுபவித்த பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்த தூதர்களிடம் இவர்களில் ஒரு உண்மையான கிறிஸ்தவனும் பூமியிலிராதபடி அனைவரும் கொல்லப்படவேண்டும் என்று மிகுந்த எக்களிப்போடு சாத்தானும் அவனது தூதர்களும் கூறினார்கள். அந்தச் சமயத்தில் தேவனுடைய சபை தூய்மையாயிருந்ததை நான் கண்டேன். கேடுபாடான இருதயத்தையுடைய மனிதர்கள் உள்ளே வரும் ஆபத்து அங்கில்லை. துணிவாக தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்திய உண்மையான கிறிஸ்தவர்கள், சாத்தானும் அவனது தூதர்களுமாகச் சேர்ந்து கண்டுபிடித்த அல்லது மனிதனின் மனதைத் தூண்டி அதன்மூலம் உண்டாக்கப்பட்ட சித்திரவதைக் கருவிகளால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் கம்பங்களில் கட்டிவைத்து எரிக்கப்படுதல்போன்ற ஆபத்துக்களால் பாதிக்கப்படும் நிலையிலிருந்தார்கள். (11) ★

# 51

# சீர்திருத்தம்!

பரிசுத்தவான்கள் உபத்திரவப்பட்டபோதிலும் தேவனுடைய சத்தியத்தின் உயிருள்ள சாட்சிகள் எங்கும் எழும்பினார்கள். தேவனுடைய தூதர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையைச் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் இருளான இடங்களில் தேடிக்கொண்டிருந்தார்கள். இருளில் இருந்தாலும், இதயத்தில் உண்மையுள்ளவர்களை பொறுக்கியெடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் தவறுகளிலே புதையுண்டிருந்தார்கள். எனினும் சவுலை அழைத்ததுபோல், தேவன் அவருடைய சத்தியத்தை எடுத்துச்சொல்லும் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாயும், அவருடையவர்கள் என்ற நிலையிலிருந்த பெயர்க் கிறிஸ்தவர்களுடைய பாவங்களுக்கு எதிராக தங்களது குரல்களை உயர்த்துவதற்காகவும் அவர்களை அழைத்தார். தேவதூதர்கள் மார்ட்டின் லுத்தர், மெலாங்தான் மற்றும் பற்பல இடங்களிலுள்ள பலருடைய இருதயங்களை அசைத்து, வேத வசனத்தின் உயிருள்ள சாட்சிக்காக தாகத்தோடிருக்கவேண்டுமெனச் செய்தார்கள். சத்துரு வெள்ளத்தைப்போல வந்துவிட்டதால், அவனுக்கு எதிராக நமது கொடி மேலாக உயர்த்தப்படவேண்டும். இந்தப் புயலைச் சமாளிக்கவும் விழுந்துபோன ஒரு சபையின் கோபத்திற்கு எதிராக—திடமாக நிற்கவும், தங்களது பரிசுத்த வேலைக்கு உண்மையாயிருக்கும் ஒருசிலரை பலப்படுத்தவும் லுத்தர் தெரிந்துகொள்ளப்பட்டார். அவர் தேவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்ய எப்பொழுதுமே பயந்தார். தேவனின் செல்வாக்கை கிரியைகளினாலே பெறுவதற்கு முயன்றார். ஆனால் பரத்திலிருந்த ஒளிப்பெருக்கை அடையுமட்டும் அவர் திருப்தியடையவில்லை. அந்தப் பரத்தின் ஒளி அவரது மன இருளைவிரட்டி, கிரியைகளில் நம்பிக்கை வைக்காமல், கிறிஸ்துவின் இரத்தத்தின் புண்ணியத்திலே நம்பிக்கை வைக்கும்படி அவரை நடத்தியது. போப்புகள் அல்லது பாவஅறிக்கையைக் கேட்பவர்கள் மூலமாக வராமல், இயேசு கிறிஸ்துவின்மூலமாக தனக்காக தானே இனி தேவனிடத்திற்கு வரமுடியும். (1)

ஆ! இந்த புதிய—மகிமையான வெளிச்சம் அவருடைய இருண்ட மனதிலே உதித்து, மூடநம்பிக்கைகளை விரட்டியபோது, எவ்வளவு

அருமையாக இருந்தது! விலையேறப்பெற்ற பூலோக பொக்கிஷத்தைக் காட்டிலும் அதை மேலாக மதிப்பிட்டார். தேவ வசனம் புதிதாக இருந்தது. எல்லாம் மாறிப்போயிற்று. எந்தப் புத்தகத்தின் அழகைக் காணக்கூடாமல் நடுங்கினாரோ, அந்தப் புத்தகம் அவருக்கு ஜீவனாக—நித்திய ஜீவனாக இருந்தது. அது அவரது மகிழ்ச்சியாகவும், ஆறுதலாகவும், ஆசீர்வதிக்கப்பட்ட போதகராகவும் இருந்தது. அதைப் படிக்காமலிருக்கும்படி எந்த சக்தியாலும் அவரைத் தூண்டமுடியவில்லை. மரணத்திற்கு பயந்தார். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை வாசித்தபோது, அவரது நடுக்கமெல்லாம் மறைந்தது. தேவனுடைய குணாதிசயத்தை வியந்து அவரை நேசித்தார். தானாகவே வேதாகமத்தை ஆராய்ந்தார். அதிலடங்கிய விலையேறப்பெற்ற சத்தியங்களை விரும்பி மகிழ்ச்சியோடு அனுபவித்தார். பின்பு சபைக்காக வேதாகமத்தை ஆராய்ந்தார். மீட்பிற்காக யாரிடம் நம்பிக்கை வைத்திருந்தாரோ அவர்களது பாவங்களைக்கண்டு மிகவும் வெறுப்படைந்தார். தன்னை மூடியிருந்த அதே இருள் மற்றும் அநேகரை மூடியிருந்ததைக் கண்டபோது, உலகின் பாவங்களைச் சுமந்துதீர்க்கும் தேவஆட்டுக்குட்டியினிடத்திற்கு அவர்களை வழிநடத்த ஆவலோடு தருணத்தைத் தேடினார். (2)

போப்பு சபையின் பிழைகளுக்கும் பாவங்களுக்கும் எதிராக சத்தத்தை உயர்த்தினார். மீட்பிற்காக கிரியைகளிலே விசுவாசம் வைத்த, ஆயிரமாயிரம் ஆத்துமாக்களைக் கட்டியிருந்த அந்த இருளின் சங்கிலியை உடைத்தெறிய ஊக்கமாக முயற்சித்தார். இயேசு கிறிஸ்துவின்மூலமாகப் பெறும் மீட்பின் மகிமைபற்றியும், தேவ கிருபையின் உண்மையான பொக்கிஷங்கள்பற்றியும் மக்களுக்கு விளங்கவைக்கவேண்டுமென்று ஏங்கினார். சபையின் தலைவர்களுடைய பாவங்களுக்கு எதிராக, பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே உரத்த சத்தமிட்டார். பாதிரிமார்களின் புயல்போன்ற எதிர்ப்பைச் சந்தித்தபோதிலும் அவர் அதைரியமடையவில்லை. தேவனுடைய பலத்த புயத்திலே அவர் உறுதியாக நம்பிக்கை வைத்தார். வெற்றிக்கு தேவனையே முழுவதுமாக நம்பியிருந்தார். மேலும் மேலும் நெருங்கி தனது போராட்டத்தைத் தொடர்ந்தபோது, பாதிரிமார்களின் கோபம் அதிக உக்கிரமாக அவருக்கு விரோதமாகத் தூண்டப்பட்டது. சீர்திருத்தமடைய அவர்கள் விரும்பவில்லை. கட்டுக்கடங்காத உல்லாசத்தையும், துன்மார்க்கத்தையும், சுகபோகங்களையும் தெரிந்து கொண்டார்கள். சபையும் இருளிலே இருக்கவேண்டுமென்று விரும்பினார்கள். (3)

பாவத்தைக் கடிந்துகொள்வதிலும், சத்தியத்தை பிரசித்தஞ்செய்வதிலும் லூத்தர் துணிவோடும்—ஆர்வத்தோடும்— பயமின்றியும்—தைரியத்தோடும் இருப்பதை நான் கண்டேன். துன்மார்க்கரையும் பிசாசுகளையும்

அவர் இலட்சியஞ்செய்யவில்லை. இவர்கள் அனைவரையும்விட மகா வல்லமையான ஒருவர் தன்னிடம் உண்டு என்பதை அவர் அறிவார். லூத்தர் ஆர்வமும் தைரியமும் துணிவுமுடையவராய் இருந்தார். சில சமயங்களில் எல்லைமீறிப் போகுமளவிற்கு ஆபத்திலிருந்தார். இவருக்கு மாறான குணம் படைத்த, மெலாங்தானை கர்த்தர் எழுப்பினார். அவர் சீர்திருத்த வேலையிலே லூத்தருக்கு உதவியாக இருந்தார். மெலாங்தான் கோழையாகவும், பயந்தவராகவும், கவனமுடையவராகவும், மிகுந்த பொறுமையுடையவராகவும் இருந்தார். தேவனால் மிகவும் நேசிக்கப்பட்டவராயிருந்தார். வேத வாக்கியங்களைப்பற்றிய அறிவு அவரிடத்தில் அதிகமாக இருந்தது. அவரது மதிப்பிடும் திறனும் ஞானமும் மிக உயர்ந்ததாக இருந்தது. தேவன் இந்த இரு மனிதர்களுடைய இதயங்களையும் ஒன்றாக இணைத்தார். அவர்கள் பிரிக்கமுடியாத நண்பர்களாக இருந்தார்கள். மெலாங்தான் பயத்திலும் தாமதிக்கும் ஆபத்துக்களிலும் இருக்கும்போது, லூத்தர் அவருக்கு மாபெரும் உதவியாக இருந்தார். வெகு துரிதமாகப்போகும் ஆபத்தில் லூத்தர் இருக்கும்போது, மெலாங்தான் அவருக்கு மாபெரும் உதவியாக இருந்தார். இந்த வேலைக்கு லூத்தர்மட்டுமே பொறுப்பாக இருந்திருப்பாரானால் அநேக தொல்லைகள் வந்திருக்கும். ஆனால் மெலாங்தானின் தொலைநோக்கோடுகூடிய கவனம் அந்தத் தொல்லைகளைத் தடுத்து நிறுத்தியது. அநேக சமயங்களில் மெலாங்தான் மட்டுமே இந்த வேலைக்கு பொறுப்பாக இருந்திருப்பாரானால் வேலை இவ்வளவாக முன்னேறியிருக்காது. இந்தச் சீர்திருத்த வேலையை நடத்த, இந்த இரண்டு மனிதரையும் தெரிந்துகொண்டதில் தேவனுடைய ஞானம் எனக்குக் காண்பிக்கப்பட்டது. (4)

பின்பு நான் அப்போஸ்தலர் காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டேன். ஊக்கமுள்ள—ஆர்வமிகுந்த பேதுருவையும், பொறுமையான—சாந்தமான யோவானையும் தோழர்களாகத் தெரிந்துகொண்டார். சில சமயங்களில் பேதுரு துடுக்குத்தனமாக இருப்பார். அநேகந்தடவைகளில் காரியம் இப்படி இருக்கும்போது, அன்பான சீஷனாகிய யோவான் அவரைத் தடுத்து நிறுத்துவார். ஆனால் எப்படியும் இந்தக் காரியம் பேதுருவைச் சீர்திருத்தம் செய்யவில்லை. ஆகையால் இயேசுவை மறுதலித்து, பாவ அறிக்கை செய்து மனந்திரும்பியபின், அவரது தீவிர போக்குகளையும் துரிதத்தையும் தடுத்தது, யோவானிடமிருந்த வந்த சாந்தமான எச்சரிப்பே. வேலை யோவானிடம் மட்டுமே விடப்பட்டிருந்தால் அது மிகவும் தடைபட்டிருக்கும். பேதுருவின் ஊக்கம் தேவையாக இருந்தது. பேதுருவின் தைரியமும் சக்தியும் அவர்களை அநேக தொல்லைகளினின்று விடுவித்து, விரோதிகளையும் அமைதியாக்கிற்று. யோவான் வெற்றியுடையவராயிருந்தார். அவரது

பொறுமையான சகிப்பினாலும் ஆழ்ந்த பயபக்தியினாலும் அநேகரை கிறிஸ்துவிடம் கொண்டுவந்தார். (5)

போப்பு சபையிலே நிலைத்திருக்கும் பாவங்களுக்கு எதிராக சத்தத்தை உயர்த்தவும் சீர்திருத்த வேலையை முன்னேறச்செய்யவும் தேவன் மனிதரை எழுப்பினார். இந்த உயிருள்ள சாட்சிகளை ஒழிக்கவேண்டுமென சாத்தான் வகைதேடினான். ஆனால் தேவனோ அவர்களைச் சுற்றிலும் வேலி அடைத்தார். அவரது நாமத்தின் மகிமைக்காக தாங்கள் சொல்லிவரும் சாட்சியை சிலர் இரத்தத்தால் முத்திரையிட அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் இன்னும் லூத்தரைப்போலவும் மெலாங்தானைப்போலவும் வல்லமையுள்ளவர்கள் இருந்தார்கள். அவர்கள் உயிரோடிருந்து, தேவனுக்கு தங்களது மகிமையைச் செலுத்தி, பாதிரிமார்களுடைய மற்றும் போப்புகள் அரசர்களுடைய பாவங்களை மக்களுக்குத் தெரியும்படிச்செய்தார்கள். லூத்தருடைய மற்றும் அவரது உடன் ஊழியர்களுடைய குரலைக் கேட்டு இவர்கள் நடுங்கினார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட இந்த மனிதர்கள்மூலமாக வெளிச்சத்தின் கிரணங்கள் இருளை விரட்ட ஆரம்பித்தன. அநேகர் வெளிச்சத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு அதிலே நடந்தார்கள். தேவனுடைய ஒரு சாட்சி கொல்லப்பட்டபோது, இரண்டு அல்லது அதற்கும் அதிகமான சாட்சிகள் அதன் இடத்தை எடுக்கும்படி எழுப்பப்பட்டார்கள். (6)

ஆனால் சாத்தான் திருப்தியடையவில்லை. உடலின்மீது மட்டுந்தான் அவனுக்கு அதிகாரம் உண்டு. விசுவாசிகள் தங்களது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் விட்டுவிடச்செய்ய அவனால் முடியாது. மரணத்திங்கூட, நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் இருக்கும் சாவாமை என்னும் பிரகாசமான நம்பிக்கையைக் கொண்டவர்களாக வெற்றிசிறந்தார்கள். அவர்களது சக்தி, மனித சக்திக்கும் மேற்பட்டதாக இருந்தது. அவர்கள் ஒரு கணமும் தூ ங்கத் துணியாமல், தங்களைச் சுற்றிலும் கிறிஸ்தவ சர்வாயுதவர்க்கத்தைத் தரித்திருந்தார்கள். ஆவிக்குரிய பகைவர்களிடத்தில் மட்டுமல்ல, மனிதர் உருவிலே “விசுவாசத்தை விட்டுவிடு, அல்லது மரிக்க ஆயத்தமாயிரு” என்று தொடர்ந்து கத்திக்கொண்டிருக்கும் சாத்தானிடத்திலும் போராட்டத்திற்காக ஆயத்தமாக இருந்தார்கள். இந்தச் சில கிறிஸ்தவர்கள் தேவனிடத்தில் மிக உறுதியாக இருந்தார்கள். கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக்கொண்டு அவருடைய ஊழியத்திலே கோழையாயிருப்பவர்கள், உலகத்தின் அரைப் பங்களவு இருந்தாலும் அவர்களால் பயனில்லை. ஆனால் தேவனிடத்தில் உறுதியாகப் பற்றுவைத்திருக்கும் இந்த ஒரு சில கிறிஸ்தவர்களே தேவனுடைய பார்வையில் மிகவும் அருமையாகக் காணப்பட்டார்கள். சபை உபத்திரவப்படும்போது, அதன் அங்கத்தினர்கள் இணைந்திருந்தார்கள்.

ஒருவரையொருவர் நேசித்தார்கள். தேவனில் பலங்கொண்டிருந்தார்கள். சபையோடு இணைந்திருக்க பாவிகள் அனுமதிக்கப்படவில்லை. கிறிஸ்துவிற்காக எல்லாவற்றையும் விட்டுவிட விருப்பமாயிருந்தவர்கள் மாத்திரமே அவருடைய சீஷர்களாயிருக்கமுடியும். இவர்கள் ஏழைகளாகவும், தாழ்மையாகவும் கிறிஸ்துவைப்போலிருக்கவும் வாஞ்சித்தார்கள். (7) ★

# 52

# சபையும் உலகமும் ஒன்றானது!

இதன்பிறகு சாத்தான் அவனது தூதர்களோடு ஆலோசித்து, தாங்கள் அடைந்த முன்னேற்றம்பற்றிச் சிந்தித்தார்கள். மரண பயத்தினாலே பயந்த சில ஆத்துமாக்களை சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதபடி வைத்திருந்தது உண்மைதான். ஆனால் அநேகர்—மிகப் பயந்தவர்கள்கூட சத்தியத்தை ஏற்றுக்கொண்டார்கள். எனவே, அவர்களது பயங்களும் பலவீனங்களும் உடனே அவர்களைவிட்டு ஓடின. தங்களது சகோதரது மரணத்தையும் அவர்கள் காட்டிய உறுதியையும் பொறுமையையும் கண்ணாரக் கண்டபோது, தேவனும் அவரது தூதர்களும் இந்தப் பாடுகளை அனுபவிக்கும்படி உதவி செய்கிறார்கள் என்பதை அறிந்தார்கள். எனவே, துணிவோடு பயமற்றவர்களாக விளங்கினார்கள். தங்களது உயிரை மாய்க்கும்படியாக அழைக்கப்பட்டபோது, தங்களது விசுவாசத்தை பொறுமையோடு காத்துக்கொண்டார்கள். அவர்கள் காட்டிய உறுதியைக் கண்ட கொலைகாரர்களுங்கூட நடுங்கிப் பயந்தார்கள். சாத்தானும் அவனது தூதர்களும் ஆத்துமாக்களை அழித்துப்போட மிகவும் வெற்றியான ஒரு வழியை, கடைசியிலே அதிக நிச்சயத்தைக் கொடுக்கும் ஒரு வழியைத் திட்டமிட்டார்கள். கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படும்படி அனுமதிக்கப்பட்டாலும், அவர்களது மனஉறுதியும் அவர்களைத் தேற்றிய பிரகாசமான நம்பிக்கையும், பெலவீனரையும் பெலப்படுத்தியது. அவர்கள் சித்திரவதைக் கருவிக்கும் நெருப்பிற்கும் அஞ்சாது முன்செல்லும்படி பலப்படுத்தப்பட்டார்கள். கிறிஸ்து தம்மைக் கொலைசெய்ய வந்தவர்களுக்குமுன்பாகக் காட்டிய அதே மேன்மையான தன்மையைக் காட்டினார்கள். தங்களது உறுதியினாலும் தேவனுடைய மகிமை தங்கள்மீது அமர்ந்ததாலும், சத்தியத்தை உண்மையென்று அநேகர் உணர்ந்துகொள்ளும்படிச் செய்தார்கள். (1)

எனவே, சாத்தான் கடுமையற்ற மென்மையான அணுகுமுறையைத் தெரிந்தெடுத்தான். ஏற்கெனவே, வேதாகமக் கொள்கைகளைப் பாழாக்கிவிட்டான். இலட்சக்கணக்கானோரைப் பாழாக்கக்கூடிய பாரம்பரியங்கள் ஆழமாக வேரூன்றலாயின. வெறுப்பை அடக்கிக்கொண்டவனாக, கசப்பான

உபத்திரவங்களைத் தனது மக்கள் தூண்டாமலிருக்கத் திட்டமிட்டான். பரிசுத்தவான்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை விட்டுவிட்டு, பலவகையான பாரம்பரியங்களாலே போராடும்படி சபையை வழிநடத்தினான். நன்மைகளைத்தான் பெறுகிறோம் என்ற மாயமான அடிப்படையில் அநேக சலுகைகளையும் மேன்மைகளையும் உலகத்தினின்று பெறும்படியாக சபையை ஊக்குவித்தான். எனவே தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த ஆதரவை சபை இழக்க ஆரம்பித்தது. சிற்றின்பப் பிரியர்களையும் உலகத்தை நேசிப்போரையும் ஒதுக்கி வெளித்தள்ளும் நேரடியான சத்தியங்களை சபை அறிவிக்காமல் விட்டுவிட்டது. கொஞ்சங்கொஞ்சமாக சபை தனது வல்லமையை இழந்தது. (2)

உபத்திரவத்தின் நெருப்பு சபைக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்ட போது இருந்த தனிப்பட்ட விசேஷ மக்களாக, சபை இப்போது இருக்கவில்லை. எப்படி இந்தப் பொன் மங்கிப்போயிற்று! அதிக நேர்த்தியான பொன் எவ்வாறு மாறிப்போயிற்று! சபை தனது பரிசுத்தமான விசேஷமான குணத்தை எப்பொழுதுமே வைத்திருந்திருக்குமானால், சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தப் பரிசுத்த ஆவியின் வல்லமையும் சபையுடனேகூட தொடர்ந்து இருந்திருக்கும். நோயாளிகள் குணமடைந்திருப்பார்கள்; பிசாசுகள் கடிந்துகொள்ளப்பட்டு துரத்தப்பட்டிருக்கும்; மகா வல்லமையோடுகூடிய அந்த சபை அதன் விரோதிகளுக்கு நடுக்கமாகவே இருந்திருக்கும். (3)

இயேசுவின் பெயரைச் செல்லிக்கொள்ளுகிற பெருங்கூட்டத்தை நான் கண்டேன். ஆனால் தேவன் அவர்களைத் தம்முடையவர்களாக அங்கீகரிக்கவில்லை. அவர்களில் அவருக்கு எந்தவித மகிழ்ச்சியும் இல்லை. சாத்தான் மதத்துக்குரிய குணலட்சணங்களை ஏற்றுக் கொண்டவன்போல் காணப்பட்டு, மக்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொள்ள வேண்டுமென்ற காரியத்தில் அதிக விருப்பமுடையவனாக இருந்தான். மேலும், அவர்கள் இயேசுவையும், அவரது சிலுவை மரணத்தையும், அவரது உயிர்த்தெழுதலையும் விசுவாசிக்கவேண்டுமென்றும் ஆர்வத்தோடு இருந்தான். சாத்தானும் அவனது தூதர்களும் இவைகளைத் தாங்களே முற்றிலுமாக விசுவாசித்து நடுங்குகிறார்கள். ஆனால் இந்த விசுவாசம் நற்கிரியைகளின்மூலமாக பலன்கொடுக்காவிட்டால், தன்னை ஒறுத்து வாழ்ந்த கிறிஸ்துவின் வாழ்க்கையாக மலராவிட்டால், அவன் நிம்மதியாக இருக்கிறான். அவனுக்கு இதைப்பற்றிய பிரச்சனையே இல்லை. அவர்கள் கிறிஸ்தவன் என்ற பெயரை மாத்திரம் வைத்திருக்கிறார்கள்; அவர்கள் இருதயமோ இன்னும் மாம்சத்தோடு இசைந்ததாக இருக்கிறது. அவர்கள் அவனுடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளாவிட்டாலுங்கூட, அவன்

அவர்களைத் தன்னுடைய உழியத்தில் நன்றாக உபயோகிக்கமுடியும். கிறிஸ்தவன் என்ற பெயரில் தங்களது குறைபாடுகளை மறைத்துக்கொண்டு, பரிசுத்தமற்ற குணங்களோடு கடந்துசெல்லுகிறார்கள். அவர்களது தீய குணங்கள் இன்னும் கட்டுப்பாட்டிற்குள் அடங்கவில்லை. அவிசுவாசிகள் தங்களது கேடுபாடான குணங்களோடு கிறிஸ்துவைப் பழித்துரைக்க இது ஒரு சந்தர்ப்பங்கொடுக்கிறது. மேலும் தூய்மையான கேடுபாடற்ற மதத்தைப் பின்பற்றுவோரை அவமதிப்புக்குள்ளாக்குகிறது. (4)

மாம்சத்திற்கேற்ற காரியங்களை வேண்டுவோருக்கு, விருப்பத்திற்கேற்றபடி போதகர்கள் மேற்பூச்சான போதகத்தைக் கொடுக்கிறார்கள். இயேசுவைப்பற்றியோ வேதத்திலுள்ள ஊடுருவிச்செல்லும் சத்தியத்தைப்பற்றிய கருத்துக்களையோ போதிக்கத் துணியமாட்டார்கள். அப்படிப் போதிப்பார்களானால் மாம்சத்திற்கேற்றபிரகாரமான போதனையை விரும்புவோர் சபையில் அங்கமாக இருக்கமாட்டார்கள்; சாத்தானும் அவனது தூதர்களும் எவ்விதத்தில் தகுதியற்றவர்களோ, அப்படியே இருந்தாலுங்கூட, மிகப்பெரும் செல்வந்தர்களை சபையில் எப்படியாவது வைத்துக்கொள்ளவேண்டும். இதுதான் சாத்தான் விரும்பிய நிலை. உலகத்தின் கண்களில் இயேசுவின் மதம் பிரபலமாகவும், மதிப்புடையதாகவும் தோன்றும்படிச் செய்யப்பட்டிருக்கிறது. மதத்தை அனுசரிப்பவர்கள் உலகத்தால் மதிக்கப்படுபவர்கள் என்று மக்களுக்குக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட போதனைகள் இயேசுவின் போதனையினின்று வெகு அதிகமாக வேறுபடுகின்றது. இயேசுவின் கொள்கைகளும் உலகமும் சமாதானத்தோடு இணைந்திருக்க முடியாது. அவரைப் பின்பற்றுவோர் நிச்சயமாக உலகத்தை வெறுக்கவேண்டும். இந்த மேற்பூச்சான காரியங்கள் சாத்தானோடும் அவனது தூதர்களோடும் உதித்தவையாகும். அவர்கள் திட்டம் வகுத்தார்கள்; பெயர்க்கிறிஸ்தவர்கள் அதைச்செயல்படுத்தினார்கள். விருப்பமான கட்டுக்கதைகள் போதிக்கப்பட்டு, தடையின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன. மாயக்காரரும் வெளியரங்கமான பாவிகளும் சபையில் ஒருங்கிணைந்தார்கள். சத்தியமானது அதன் தூய நிலையிலே போதிக்கப்பட்டிருந்தால் இப்படிப்பட்ட வகுப்பினரை அது சீக்கிரத்தில் வெளியே தள்ளி அடைத்திருக்கும். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் அவரது பின்னடியார்களுக்கும் உலகத்தாருக்கும் எந்தவிதமான வித்தியாசமும் காணப்படவில்லை. இத்தகைய சபை அங்கததினர்களின் பொய்யான முகமூடி கிழித்து எறியப்படுமானால், அவர்களில் காணப்படும் அநீதியும், இழிவான குணங்களும், இலஞ்ச ஊழல்களும் வெளியரங்கமாக்கப்பட்டுவிடும். பெரும்பாலும் தன்னம்பிக்கையே அற்றுப்போன தேவனுடைய பிள்ளைக்குக்கூட இத்தகைய நிலையில் பெயர்க்கிறிஸ்தவர்களாக

இருப்பவர்களை அவர்களுக்கே ஏற்புடைய உண்மையான பெயரைச்சொல்லி அழைக்க தயக்கமே இருக்காது. ஏனெனில் பிசாசைப் பிதாவாகக் கொண்ட பிள்ளைகளாகிய இவர்கள் அவனது வேலையையே செய்தார்கள். (5)

இயேசுவும் அவரது பரலோகக் குழுவினரும் வெறுப்போடு இந்தக் காட்சியைப் பார்த்தனர். எனினும், பரிசுத்தமான முக்கியமான தேவனுடைய சபைக்கு தேவனுடைய தூது ஒன்று உண்டு. அது ஏற்றுக்கொள்ளப்படுமானால் சபையில் முழுமையான சீர்திருத்தத்தை உண்டுபண்ணும். மேலும் உயிருள்ள சாட்சியைப் புதுப்பித்து, மாயக்காரர்களையும் பாவிகளையும் ஒழித்துக்கட்டி, தேவனுடைய அனுகூலமான ஆதரவில் சபையைக் கொண்டுவரும். (6) ★

# 53

# வில்லியம் மில்லர்!

ஒரு குடியானவரின் இருதயத்தை அசைப்பதற்காக தேவன் தமது தூதனை அனுப்பினார். தீர்க்கதரிசனங்களை ஆராயும் அளவிற்கு நடத்தப்பட்ட வேதாகமத்தை அவர் நம்பவில்லை. தெரிந்துகொள்ளப்பட்ட இந்த மனிதரை திரும்பத்திரும்ப தேவதூதர்கள் சந்தித்தார்கள். தேவனுடைய மக்களுக்கு இருண்டிருந்த தீர்க்கதரிசனங்களை அவருக்கு விளங்கவைக்கவும், அவரது மனதைத் தூண்டவும் தூதர்கள் சந்தித்தார்கள். சத்தியச் சங்கிலித்தொடரின் துவக்கம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதன் ஒவ்வொரு இணைப்பையும் ஆராயும்படி வழிநடத்தப்பட்டார். வேத வசனத்தை வியப்போடும் அதிசயத்தோடும் நோக்கும்வரை ஆராய்ந்தார். சத்தியத்தின் முழுமையான சங்கிலித்தொடரை அவர் அங்கு கண்டார். ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்படாதது என்று தான் நினைத்திருந்த வேத வசனம், அவரது கண்களுக்குமுன்பாக அதன் அழகோடும் மகிமையோடும் தெளிவாகக் காணப்பட்டது. வேதாகமத்தின் ஒரு பகுதி மற்றொரு பகுதியை விளக்குவதைக் கண்டார். ஒரு பகுதி அவருக்கு விளங்காமலிருந்தபோது, வேத வசனத்தின் மற்றொரு பகுதியில் அதன் விளக்கத்தைக் கண்டார். தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளை மகிழ்ச்சியோடும் ஆழ்ந்த பயத்தோடும் மதிப்போடும் கருதினார். (1)

தீர்க்கதரிசனங்களை அதன் தொடர்பிலே படித்துவரும்போது, பூமியின் குடிகள் உலக சரித்திரத்தின் கடைசிச் சம்பவங்களை நெருங்கி இருக்கிறார்கள் என்பதைக் கண்டார். ஆனால் உலக மக்களோ அதை இன்னும் அறியவில்லை. சபைகள் கறை படிந்தவைகளாக இருப்பதைக் கண்டார். இவர்கள் இயேசுவின் மேலுள்ள அன்பைவிட்டு, உலகத்தின்மீது அதிகமாகச் சார்ந்திருந்தார்கள். பரலோகத்திலிருந்த வருகின்ற மேன்மைக்குப் பதிலாக, இந்த உலக மேன்மையைத் தேடிக்கொண்டிருந்தார்கள். பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்துவைப்பதற்குப்பதிலாக உலகப் பொக்கிஷத்தைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். மாய்மாலம், இருள், மரணம் ஆகியவைகள் எங்குமிருப்பதை அவரால் காணமுடிந்தது. அவரது ஆவி அவருக்குள்ளே எழுச்சி அடைந்தது. எலிசாவை, தனது எருதுகளையும்

வயலையும் விட்டுவிட்டு எலியாவைப் பின்பற்றும்படியாக கடவுள் அழைத்ததுபோல, வில்லியம் மில்லரை அவரது பண்ணையை விட்டுவரும்படி அழைத்தார். நடுக்கத்தோடு தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை மக்களுக்குமுன்பாக விவரிக்க ஆரம்பித்தார். தீர்க்கதரிசனங்களை விவரித்து, கடைசியாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகைமட்டும் கூறினார். ஒவ்வொரு முயற்சியோடும் வல்லமையையும் பெற்றார். யோவான் ஸ்நானகன் அவரது முதலாம் வருகையைக் கூறியறிவித்து அவருக்கு வழியை ஆயத்தஞ்செய்ததுபோல், வில்லியம் மில்லரும் அவரைச் சார்ந்தவர்களும் தேவகுமாரனின் இரண்டாம் வருகையைக் கூறியறிவித்தார்கள். (2)

சீஷர்களின் நாட்களுக்கு நான் எடுத்துச்செல்லப்பட்டேன். அவர் அன்பாக நேசித்த யோவான் முடிக்கவேண்டிய ஒருசிறப்பான வேலையை கடவுள் வைத்திருந்தார் என்பது எனக்குக் காட்டப்பட்டது. இந்த வேலையைத் தடைபண்ண சாத்தான் திட்டம்பண்ணினான். எனவே, யோவானை ஒழித்துவிடும்படி அவனது ஊழியர்களை வழிநடத்தினான். ஆனால் தேவன் அவருடைய தூதனை அனுப்பி, அதிசயமாகப் பாதுகாத்தார். யோவானின் விடுதலையில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வல்லமையைக் கண்ட அனைவரும் ஆச்சரியமடைந்தார்கள். அநேகர் தேவன் அவனோடிருப்பதையும், இயேசுவைப்பற்றி அவன் கூறிய சாட்சி உண்மையானது என்றும் மனப்பூர்வமாக அறிந்தார்கள். அவனை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றிருந்தவர்கள், மறுபடியும் அவனைக் கொல்ல முயற்சிக்கப் பயந்தார்கள். இயேசுவிற்காக துன்பம் அனுபவிக்கும்படி அவன் அனுமதிக்கப்பட்டான். அவனது விரோதிகளால் பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டான். வெகு சீக்கிரத்தில் தனித்த ஒரு தீவிற்கு கடத்தப்பட்டான். அங்கு அவர் தமது தூதனை அனுப்பி, பூமியில் நடக்கப்போகும் சம்பவங்களையும், முடிவுவரையிருக்கும் சபையின் நிலைபற்றியும், சபையின் மருளவிழுகையின் நிலைபற்றியும், சபை தேவனுக்குப் பிரியமாக கடைசியிலே வெற்றிசிறக்கவேண்டுமானால் என்ன நிலையை அடையவேண்டுமென்பதுபற்றியும் வெளிப்படுத்தினார். (3)

தேவனுடைய மகத்தான மகிமை தனது முகத்தில் பிரகாசிக்கும்படியாக தேவதூதன் கெம்பீரமாக யோவானிடத்தில் வந்தான். தேவனுடைய சபையின் சரித்திரத்திலே வரப்போகும் ஆழ்ந்த—கிளர்ச்சியூட்டும் காட்சிகளை யோவானுக்கு வெளிப் படுத்தினான். கிறிஸ்துவின் பின்னடியார்கள் அனுபவிக்கப்போகும் பயங்கரமான போராட்டங்களையும் அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தான். பயங்ரமான சோதனைகளைக் கடந்து, துன்பம் அனுபவித்து, முகம் வெளுத்தவர்களாக, முடிவில் வெற்றியோடு மேற்கொண்டு தேவனுடைய இராஜ்யத்திலே மகிமையாகச்

சேர்க்கப்பட்டவர்களாக அவர்களை யோவான் பார்த்தான். தேவ தூதனின் முகம் மகிழ்ச்சியினால் ஒளிமிகுந்து, மகா மகிமையினால் நிறைந்திருந்தது. அப்போஸ்தலனாகிய யோவான், சபையின் கடைசி விடுதலையைக் கண்டபோது, அந்தக் காட்சியின் மகிமையினால் பெரும் மகிழ்ச்சியில் திளைத்து, ஆழ்ந்த பயபக்தியோடும் பயத்தோடும் வணங்குவதற்காக தேவ தூதனின் பாதங்களில் விழுந்தான். விழுந்தமாத்திரத்தில் பரலோகத் தூதன் யோவானை எழுப்பிவிட்டு: "இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" என்று கூறி, மென்மையாகக் கடிந்துகொண்டான். பின்பு, தூதன் பரலோகப் பட்டணத்தை அதன் அழகோடும் ஜொலிக்கும் மகிமையோடும் காண்பித்தான். அதைப்பார்த்து, பரவசத்தால் மேற்கொள்ளப்பட்டு, முன்பு தூதன் தன்னைக் கடிந்துகொண்டதையும் மறந்து, தொழுதுகொள்ளும்படியாக மறுபடியும் அவன் பாதத்திலே விழுந்தான். மறுபடியும் தூதன் யோவானை நோக்கி: "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" என்று கடிந்துகொண்டான். (4)

போதகர்களும் மக்களும் வெளிப்படுத்தல் புத்தகத்தை விளங்கிக்கொள்ளக்கூடாத ஒன்று என்றும், மற்ற வேதவசனப் பகுதிகளைவிட, முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்றும் நினைத்தார்கள். கடைசிக்காலத்தில் வாழ்கின்ற மக்களின் சிறப்பான நன்மைக்காகவே இந்தப் புத்தகம் கொடுக்கப்பட்டது என்பதையும், மேலும், கடைசி நாட்களில் வாழ்வோர் தங்களது உண்மையான நிலையையும் கடமையையும் திட்டம்பண்ணிக்கொள்ள இந்தப் புத்தகம் ஒருவழிகாட்டி என்பதையும் நான் கண்டேன். தேவன் வில்லியம் மில்லரை தீர்க்கதரிசனங்களிடத்தில் வழிநடத்தி, வெளிப்படுத்தல் புத்தகம் பற்றிய சிறப்பான வெளிச்சத்தைக் கொடுத்தார். (5)

தானியேலின் தரிசனங்களை விளங்கிக்கொண்டால், யோவானின் தரிசனங்களையும் மக்கள் விளங்கிக்கொள்ளுவார்கள். ஆனால் சரியான நேரத்திலே தேவன் தாம் தெரிந்துகொண்ட ஊழியக்காரன்மேல் அசைவாடினர். வில்லியம் மில்லரும் தெளிவோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையாலும் நிறைந்து, தீர்க்கதரிசனங்களை விளக்கி, தானியேலாலும் யோவானாலும் எழுதப்பட்ட தரிசனங்கள், மற்றும் வேதாகமப்பகுதிகளில் காணப்படும் தரிசனங்கள் ஆகியவற்றின் ஒற்றுமையை விளக்கிக்காட்டினார்.

மேலும் மக்களுடைய இருதயத்திலே ஆழமாகப் பதியும்படியாக, மனுஷ குமாரனின் வருகைக்கு ஆயத்தப்படும்படியாக, வேத வசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பரிசுத்தமான—பயம் நிறைந்த எச்சரிப்புகளை விளக்கினார். அவரது பிரசங்கங்களைக் கேட்ட மக்கள் மனதிலே ஆழ்ந்த—பயபக்தியான எண்ணம் ஏற்பட்டது. போதகர்களும், மக்களும், பாவிகளும், சமய நம்பிக்கையற்றவர்களும் தேவனிடத்தில் திரும்பி, நியாயத்தீர்ப்பிலே நிற்கும்படியாகத் தங்களை ஆயத்தஞ்செய்துகொண்டார்கள். (6)

வில்லியம் மில்லரது ஊழியத்திலே தேவ தூதர்கள் துணை சென்றார்கள். அவரிடத்தில் நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட தூதை, தீர்க்கமாகவும், துணிவோடும், பயமின்றியும் கூறியறிவித்தார். துன்மார்க்கத்திலும் குளிர்ந்துபோயும் இருக்கும் உலகமும், உலகப்பிரகாரமான சபையுமாகிய அனைத்தும் ஒன்றுசேர்ந்து எதிர்த்தபோது, தனது சக்தியையெல்லாம் ஒன்றுகூட்டி, மனப்பூர்வமாக உழைத்து, துன்பத்தையும் தனிமையையும் பாடுகளையும் அனுபவித்தார். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களாலும் உலகத்தாராலும் எதிர்க்கப்பட்டபோதிலும், சாத்தானாலும் அவனது தூதர்களாலும் அலைக்கழிக்கப்பட்டபோதிலும், நித்திய சுவிசேஷத்தை அறிவிப்பதையும், தூரத்திலோ சமீபத்திலோ எங்கெங்கு அழைக்கப்பட்டாரோ, அங்குகூடிய ஜனத்திரளின் மத்தியிலே: “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது” என்று போதிப்பதையும் நிறுத்தவேயில்லை. (7) ★

# 54

# முதலாம் தூதனின் தூது!

1843–ல் முழக்கப்பட்ட—“காலத்தைக் கூறியறிவித்த” அந்தச் சம்பவத்தில் இயேசுவின் இரண்டாம் வருகையைப்பற்றிய தேவனின் இசைவு இருந்தது என்பதை நான் கண்டேன். மக்களை விழிப்படையச்செய்து, அவர்கள் சத்தியத்தை ஆதரிக்கிறார்களா அல்லது மறுக்கிறார்களா என்பதைக் கண்டறிய ஒரு சோதனைக்கட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தவேண்டுமென்பதே அவரது திட்டமாகும். தீர்க்கதரிசன காலக்கணக்கை போதகர்கள் சரியென ஒத்துக்கொண்டார்கள். சிலர் தங்களது பெருமைகளை ஒழித்து, வருமானங்களை விட்டுவிட்டு, சபைகளையும்விட்டு, தூதைக்கொடுப்பதற்காக ஒவ்வொரு இடமாகச் சென்றார்கள். கிறிஸ்தவ போதகர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மிகச் சிலரின் இருதயத்தில் மாத்திரம், இந்தப் பரலோகத்தின் தூது இடம்பெற்றதால், இந்த வேலை போதகரல்லாத அநேகர்மீது வைக்கப்பட்டது. சிலர் தூதை முழக்குவதற்காக வயல்களைவிட்டு வந்தார்கள். சிலர் கடைகளினின்றும் வியாபாரத்தினின்றும் அழைக்கப்பட்டார்கள். இந்த முதல் தூதை அறிவிக்கும்—பிரபலமடையாத இந்த வேலையில் ஈடுபடுவதற்காக சில மனிதர்கள் தங்களது பதவிகளை விட்டுவரும்படியாகக்கூடக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். (1)

போதகர்கள் தங்களது வகுப்புவாதக் கொள்கைகளையும் எண்ணங்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு, இயேசுவின் வருகையைக் கூறியறிவிப்பதிலே ஐக்கியப்பட்டார்கள். தூது எங்கெல்லாம் கொடுக்கப்பட்டதோ, அங்கெல்லாம் அது மக்களை அசைத்தது. பாவிகள் மனந்திரும்பி, அழுது, மன்னிப்பிற்காக ஜெபித்தார்கள். நாணயமற்ற வாழ்க்கை நடத்தியவர்கள், அதற்குப் பரிகாரஞ்செய்ய ஆவலாக இருந்தார்கள். பெற்றோர், பிள்ளைகளுக்காக ஆழ்ந்த அனுதாபங்கொண்டார்கள். தூதை ஏற்றுக்கொண்டவர்கள், மனந்திரும்பாத தங்களது நண்பர்களுக்காகவும் உறவினர் களுக்காகவும் உழைத்தார்கள். இந்த பக்திவிநயமான தூதின் பாரத்தினால் அவர்கள் தங்களது ஆத்துமாக்களைத் தாழ்த்தி மனுஷ குமாரனுடைய வருகைக்காக ஆயத்தஞ்செய்யும்படி எச்சரித்தார்கள்;

கெஞ்சினார்கள். இதயப்பூர்வமான எச்சரிக்கைகளின் மூலமாகப் பெற்ற ஆதாரப்பூர்வமான அழுத்தமான காரியங்களுக்கும் அசைந்து கொடுக்காதவர்கள் கடினமான மக்களானார்கள். ஆத்துமாவை சுத்திசெய்யும் இந்தப் பணியானது, உலகப்பொருள்களின்மீதிருக்கும் ஆசையை நீக்கி, முன்பு ஒருபோதும் அனுபவித்திராத அர்ப்பணிப்பிற்கு வழிநடத்தியது. (2)

வில்லியம் மில்லரால் போதிக்கப்பட்ட சத்தியத்தை தழுவும்படி ஆயிரக்கணக்கானோர் வழிநடத்தப்பட்டார்கள். எலியாவின் வல்லமையும் ஆவியும் உடையவர்களாய், சத்தியத்தைக் கூறியறிவிக்க தேவனுடைய ஊழியர்கள் எழுப்பப்பட்டார்கள். இயேசுவிற்கு முன்னோடியான யோவான் ஸ்நானகனைப்போல, இந்த பக்திவிநயமான தூதைப் போதித்தவர்கள் கோடரியை மரத்தின் வேர் அருகே வைக்கும்படி, கட்டாயமாய் உணர்த்தப்பட்டு, மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைத் தரும்படி மக்களை வேண்டினார்கள். அவர்களது சாட்சி, சபைகளை தட்டியெழுப்புவதற்கு வழிவகுத்து, வல்லமையாக வேலைசெய்து, அவர்களது உண்மையான குணத்தை வெளிப்படுத்தியது. வரப்போகும் கோபாக்கினைக்குத் தப்பும்படி இந்த பக்திவிநயமான எச்சரிப்பு முழக்கப்பட்டபோது, சபைகளோடு சேர்ந்திருந்த அநேகர், குணமாக்கும் தூதையும் பெற்றுக்கொண்டார்கள். தங்களது பின்வாங்கிப்போன நிலையைக் கண்டார்கள். மனந்திரும்புதலுக்கு ஏற்ற மனங்கசந்த கண்ணீரோடும், ஆழ்ந்த ஆத்தும துயரத்தோடும் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தினார்கள். தேவ ஆவி அவர்கள்மீது அமர்ந்தபோது, “தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது” என்று உரத்தசத்தமிட அவர்கள் உதவிசெய்தார்கள். (3)

இயேசு திட்டமாக இந்த நேரத்தில் வருவார் (இரண்டாம் வருகையின் நேரம்) என்ற போதனையை எல்லா வகுப்பினரும் எதிர்த்தார்கள். பீடத்தில் பிரசங்கஞ்செய்யும் போதகர்கள்முதல், பரத்திற்கே சவால்விடுகின்ற உதவாக்கரை பாவிகளுங்கூட எதிர்ப்புத்தெரிவித்தார்கள். மாய்மாலப் போதகர்களும் துணிந்து பரிகாசஞ்செய்பவர்களும்: “அவர் வரும் நாளையாவது நாழிகையையாவது ஒருவனும் அறியான்” என்று கூறினார்கள். தீர்க்கதரிசன காலக்கட்டங்கள் முடிவடைந்துவிடுமென்றும், கிறிஸ்துவின் வருகை சமீபம்—வாசலருகே வந்து நிற்கிறார் என்று காட்டும் அடையாளங்களையும் விசுவாசித்து, அந்த ஆண்டை சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தவர்களால், இவ்விரு கூட்டத்தாருமே போதிக்கப்படவோ திருத்தப்படவோமாட்டார்கள். மந்தையின் அநேக மேய்ப்பர்கள்—இயேசுவை நேசிக்கிறோம் என்று சொல்பவர்கள், எங்களுக்கு கிறிஸ்துவின் வருகைபற்றி போதிப்பதற்கு எந்தவிதமான எதிர்ப்புமில்லை; ஆனால், திட்டமான நேரத்தைக்

குறிப்பிடுவதைத்தான் ஆட்சேபிக்கிறோம் என்று கூறினார்கள். எல்லாவற்றையும் பார்த்தறியும் தேவனின் கண்கள் அவர்களது இருதயத்தை வாசித்தறிந்தது. கொஞ்சம் சமீபமாகக்கூட அவர்கள் இயேசுவை நேசிக்கவில்லை. கிறிஸ்துவிற்கு விரோதமான தங்களது வாழ்க்கையானது பரீட்சைக்கு நில்லாது என்பதை அறிந்தார்கள். அவரால் குறிப்பிடப்பட்ட எளிமையான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. தேவனுடைய வேலையின் பாதையில் இந்த கள்ளப் போதகர்கள் குறுக்காக நின்றார்கள். ஏற்றுக்கொள்ளக்கூடியதான வல்லமையில் போதிக்கப்பட்ட சத்தியம் மக்களை விழிப்படையச்செய்தது. சிறைச்சாலைத் தலைவனைப்போல், “இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?” என்று ஒவ்வொருவரும் வினவ ஆரம்பித்தார்கள்; ஆனால், சத்தியத்திற்கும் மக்களுக்கும் நடுவாக மேய்ப்பர்கள் வந்து, சத்தியத்தைவிட்டு வழிவிலகச்செய்வதற்காக இலகுவான காரியங்களைப் போதித்தார்கள். சாத்தானோடும் அவனுடைய தூ தர்களோடும் ஐக்கியப்பட்டு, அங்கு சமாதானம் இல்லாதிருந்த நிலையிலே “சமாதானம், சமாதானம்” என்று சத்தமிட்டார்கள்; சுகவாழ்க்கையை விரும்பியவர்களையும், இயேசுவிற்கும் தங்களுக்கும் இருக்கும் இடைவெளி தூரத்தில் திருப்தியடைந்தவர் களையும், அவர்கள் மாம்ச சம்பந்தமான பாதுகாப்பிலே திருப்தியோடிருந்ததினால், தேவனால் விழிப்படையச்செய்ய முடியவில்லை. தேவனுடைய தூதர்கள் இதையெல்லாம் குறித்துவைப்பதையும், அர்ப்பணஞ்செய்யாத அந்த மேய்ப்பர்களின் உடைகள் ஆத்துமாக்களின் இரத்தத்தால் மூடப்பட்டிருந்ததையும் நான் கண்டேன். (4)

இந்த மீட்பின் தூதை ஏற்றுக்கொள்ள விரும்பாத போதகர்கள், இதை யாரெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடுமோ அவர்களையெல்லாம் தடைசெய்தார்கள். ஆத்துமாக்களின் இரத்தம் அவர்கள்மேல் இருந்தது. பரத்திலிருந்து வந்த இந்தத் தூதை எதிர்ப்பதற்காகவும், வில்லியம் மில்லரையும் அவரோடிணைந்து இந்த வேலை செய்பவர்களை துன்புறுத்துவதற்காகவும், போதகர்களும் மக்களும் ஒருங்கிணைந்தார்கள். அவரது செல்வாக்கைக் கெடுக்கும்வண்ணமாக தவறான காரியங்கள் பரப்பப்பட்டன. பலமுறைகளிலும் தேவனுடைய ஆலோசனை என்ன என்பதைத் தெளிவாக அறிவித்து, தனது பிரசங்கங்களைக் கேட்பவர்களது இருதயங்களில் பிளக்கும் உண்மைகளை உபயோகித்தபோது, அவருக்கு விரோதமாக மகா கோபம் எழும்பியது. கூட்டம் நடத்திவிட்டு அந்த இடத்தைவிட்டுச் செல்லும்போது, சிலர் அவரைக் கொலைசெய்வற்காக வழியருகே பதிவிருந்தார்கள். தேவனால் அனுப்பப்பட்ட தூதர்கள் கோபங்கொண்ட மக்கள் கூட்டத்திடமிருந்து அவரைப் பாதுகாத்து வழிநடத்திச் சென்றார்கள்; அவரது வேலை இன்னும் முற்றுப்பெறவில்லை. (5)

அதிக பக்தியுள்ளோர் அவரது தூதினை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார்கள். இது கடவுளிடமிருந்து வந்த தூது, சரியான நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்தார்கள். இந்தப் பரலோகத் தூதின் விளைவு என்ன என்பதை ஆழ்ந்த ஆர்வத்தோடு தூதர்கள் கவனித்துக்கொண்டிருந்தார்கள். சபைகள் முகத்தைத் திருப்பி, இந்தத் தூதை தள்ளிவிட்டபோது மிகுந்த துக்கத்தோடு இயேசுவிடம் ஆலோசித்தார்கள். இந்தச் சபைகளைவிட்டு, இயேசுவும் தமது முகத்தைத் திருப்பி, இந்தச் சாட்சிகளைத் தள்ளிப்போடாத அருமையான மக்களை உத்தமமாகக் கவனிக்கும்படியாக, தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டார்; ஏனெனில், மற்றுமொரு வெளிச்சமானது அவர்கள்மேல் பிரகாசிக்க வேண்டியதிருந்தது. (6)

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தங்களது மீட்பரின் வருகையை நேசித்திருப்பார்களானால், தங்களது ஆசைகளை அவர்மீது வைத்திருப்பார்களானால், உலகில் எவரையுமே அவரோடு ஒப்பிடமுடியாது என்பதை உணர்ந்திருப்பார் களானால், அவர் வரப்போகிறார் என்ற முதல் செய்தியை மகிழ்ச்சியோடு வரவேற்றிருப்பார்கள். இயேசு வரப்போகிறார் என்ற மாத்திரத்தில், அவர்கள் வெளிக்காட்டிய வெறுப்பு ஒன்றே அவர்கள் அவரை நேசிக்கவில்லையென்பதற்குச் சரியான ஆதாரமாகும். சாத்தானும் அவனது தூதர்களும் வெற்றியடைந்தார்கள். அவரை நேசிக்கிறோம் என்று கூறுகின்ற, அவரது மக்களுக்கு ஒரு சிறிதும் அன்பில்லாததினால், அவரது இரண்டாம் வருகையை, அவர்கள் விரும்பவில்லையென இயேசுவிடமும் அவரது பரிசுத்த தூதர்களிடமும் அவர்களது முகத்திற்கு எதிராகச் சாத்தானும் அவனது தூதர்களும் கூறினார்கள். (7)

தேவனுடைய மக்கள் அவரை எதிர்நோக்குவதில் மகிழ்ச்சிகொண்டு, அவர்களது ஆண்டவருக்காகக் காத்திருப்பதை நான் கண்டேன்; ஆனால், அவர்களை நிருபிப்பதற்காக தேவன் திட்டமிட்டார். தீர்க்கதரிசன காலக்கணக்கை குறிப்பிடும்போது, ஒரு தவறை அவரது கரம் மறைத்தது. ஆண்டவருக்காகக் காத்துக்கொண்டிருந்தவர்கள் இந்தத் தவறைக் கண்டுபிடிக்கவில்லை. இந்த நேரத்தை எதிர்த்த—படித்த மேதைகளும் இதைக் காணத் தவறிவிட்டார்கள். தமது மக்கள் இந்த ஏமாற்றத்தைச் சந்திக்க வேண்டுமென்பது தேவனது திட்டம்; காலம் கடந்தது. தங்கள் மீட்பரை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்தவர்கள் துக்கமடைந்து, அதைரியப்பட்டார்கள். இயேசுவின் வருகையை விரும்பாத மற்றவர்கள், தூதை பயத்தோடே ஏற்றுக்கொண்டதால், எதிர்பார்த்த நேரத்தில் வரவில்லையென மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்களது தொழில் வாழ்க்கையையும் தூ

ய்மைப்படுத்தவில்லை; இருதயத்தையும், பாதிக்கவில்லை. இப்படிப்பட்ட இருதயங்களை வெளிப்படுத்துவதற்காக, கடந்துசெல்லும் இந்த நேரமானது நன்றாகக் கணக்கிடப்பட்டது. உண்மையிலேயே தங்களது மீட்பரின் வருகையை எதிர்பார்த்து—ஏமாற்றமடைந்து—துக்கத்திலிருப்பவர்களை முதலிலே கேலிசெய்தது இவர்கள்தான். தமது மக்களை நிரூபிப்பதிலும், சோதனை நேரத்திலே வெறுத்து ஒதுங்கி, பின்னிட்டுத் திரும்பியவர்களை ஆராய்ந்து பரிசோதிப்பதிலும், தேவனுடைய ஞானத்தை நான் கண்டேன். (8)

தங்கள் ஆத்துமாவில் வாஞ்சித்து, இனிய எதிர்பார்ப்புடன் கூடிய ஏக்கத்தோடு ஆண்டவரைக் காணவேண்டுமென்று இருந்தவர்களை இயேசுவும் பரலோகக் கூட்டம் அனைத்தும் பரிவோடும் அன்போடும் நோக்கியது. அவர்களது சோதனை வேளைகளில், காப்பாற்றுவதற்காக தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் பரவிநின்றார்கள். பரத்தின் தூதைப் பெற்றுக்கொள்ளாதபடி அலட்சியஞ்செய்தவர்கள் இருளிலே விடப்பட்டார்கள். பரத்திலிருந்து அவர் அனுப்பிய வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளாததால், தேவ கோபாக்கினை அவர்களுக்கு விரோதமாகக் கிளறிவிடப்பட்டது. ஏமாற்றமடைந்த தேவனுடைய உண்மையான விசுவாசிகள்: “ஏன் ஆண்டவர் வரவில்லை” என்று விளங்கிக்கொள்ளக்கூடாதபோதிலும், இருளிலே விடப்படவில்லை. மறுபடியும் தீர்க்கதரிசன காலக்கட்டங்களை ஆராயும்படி தங்களது வேதாகமங்களுக்கு வழிநடத்தப்பட்டார்கள். அந்த எண்களினின்று தேவனுடைய கரம் எடுக்கப்பட்டது; தவறு விளக்கப்பட்டது: தீர்க்கதரிசன காலங்கள் 1844—ஐ அடைந்தது என்று கண்டார்கள். 1843—ல் தீர்க்கதரிசன காலங்கள் முடிவடைகிறது என்பதற்குக் காட்டப்பட்ட ஆதாரங்களானது, 1844—ல் முடிவடைகிறது நிரூபிக்கப்பட்டது. வேதவசனங்களினின்று வந்த வெளிச்சம் அவர்கள் நிலையை விளக்கிற்று. “அது தாமதித்தாலும் அதற்காகக் காத்திரு” என்ற தாமதிக்கும் காலம் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். கிறிஸ்துவின் உடனடி வருகையை அவர்கள் வாஞ்சித்ததால், இந்தத் தரிசனம் தாமதிக்கும் என்பதைக் காணத் தவறிவிட்டார்கள். உண்மையாகக் காத்திருப்போர் யார் என்பதை வெளிப்படுத்த இவ்வாறு கணக்கிடப்பட்டது. மறுபடியும் குறிப்பிடப்பட்ட ஒரு காலம் இருந்தது; எனினும், இந்தக் கொடிய ஏமாற்றத்திலிருந்து அநேகருக்கு மீண்டும் எழும்பமுடியாமற்போயிற்று. 1843—ல் காட்டிய விசுவாசத்திற்கேற்ற ஆர்வமும் உற்சாகும் அவர்களிடத்தில் இல்லை. (9)

சாத்தானும் அவனது தூதர்களும் அவர்கள்மீது வெற்றி கொண்டார்கள். தூதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தாங்கள் “ஏமாற்றம்”

என்று அழைத்த இதைப் பெற்றுக்கொள்ளாததில் தாங்கள் முன்னதாகக் காணக்கூடிய தீர்மானத்தையும் ஞானத்தையுங்குறித்துத் தங்களையே பாராட்டிக்கொண்டார்கள். தங்களுக்கு விரோதமாக, தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிப்போட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் உணரவில்லை. பரலோகத்தினின்று கிடைக்கப்பெற்ற தூதினால், வாழ்ந்துகொண்டிருக்கிற தேவனுடைய மக்களை கலங்கடிக்க, சாத்தானோடும் அவனது தூதர்களோடும் வேலைசெய்கிறோம் என்பதை, அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. (10)

இந்தத் தூதை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் சபைகளிலே துன்புறுத்தப்பட்டார்கள். சிறிதுகாலம் தூதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பயத்தினால் கட்டப்பட்டு, தங்கள் இருதயத்திற்கேற்ப நடக்கக்கூடாமல் இருந்தார்கள்; ஆனால், காலம் கடந்துசென்றபோது, அவர்களுடைய உண்மையான உள்ளுணர்வுகள் வெளியரங்க மாயிற்று. தீர்க்கதரிசன காலம் 1844–வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்ற தூதை காத்திருப்போர் கட்டாயமாக எடுத்துச்செல்லவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டார்கள்; ஆனால், இந்தச் சாட்சியைக் கூறாதபடி அமைதியாக்க மற்றவர்கள் விரும்பினார்கள். விசுவாசிகள் தெளிவாக தங்கள் தவறுகளை விளக்கி, ஏன் இயேசுவை 1844–ல் எதிர்பார்த்தோம் என்பதற்கு காரணங்களைக் கொடுத்தார்கள்; இதை எதிர்த்தவர்கள் வல்லமையாகக் கொடுக்கப்பட்ட இந்தக் காரணங்களுக்கு எதிராக, எந்த விவாதத்தையும் கொண்டுவரமுடியாதிருந்தது; எனினும், சபைகளின் கோபமானது கிளறிவிடப்பட்டது. ஆதாரத்திற்குச் செவிசாய்ப்பதில்லையெனத் தீர்மானம்பண்ணிக்கொண்டார்கள். மற்றவர்கள் கேட்கக்கூடாதபடி இந்தச் சாட்சிகளை சபைகளுக்குள் நுழையவிடக்கூடாது என்று தீர்மானஞ்செய்துகொண்டார்கள். தேவன் தங்களுக்குக்கொடுத்த வெளிச்சத்தை அடக்கிக்கொள்ளத் துணிவு இல்லாதவர்கள் சபைகளுக்கு வெளியே தள்ளப்பட்டார்கள்; ஆனால், இயேசு அவர்களோடிருந்தார். அவரது முகப்பிரசன்னத்தின் வெளிச்சத்தால் மகிழ்ச்சியாக இருந்தார்கள்; இரண்டாம் தூதனின் தூதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்கள். (11) ★

# 55

# இரண்டாம் தூதனின் தூது!

சபைகள் முதலாம் தூதனின் தூதை ஏற்கமறுத்தபோது, பரத்திலிருந்து வந்த வெளிச்சத்தைத்தள்ளி, தேவனுடைய ஆதரவிலிருந்தும் விழுந்துவிட்டார்கள்; தங்களது சுயபலத்தையே நம்பினார்கள். முதலாம் தூதை எதிர்த்ததினாலே, இரண்டாம் தூதனின் தூதின் வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாத நிலையில் தங்களை வைத்துக்கொண்டார்கள். துன்பம் அனுபவித்தாலும் தேவனை நேசிப்பவர்கள், "பாபிலோன் விழுந்தது" என்ற தூதை ஏற்றுக்கொண்டு, மற்ற சபைகளைவிட்டு வெளியேறினார்கள். (1)

இரண்டாம் தூதனின் தூது முடிவதற்குச் சமீபித்துக் கொண்டிருந்த வேளையிலே, தேவனுடைய மக்கள்மீது மாபெரும் வெளிச்சம் ஒன்று பரத்திலிருந்து பிரகாசிப்பதை நான் கண்டேன். வெளிச்சத்தின் ஒளிக்கதிர்கள் சூரியனைப்போன்று பிரகாசித்தன. "இதோ, மணவாளன் வருகிறார்; புறப்பட்டுப்போய் அவரைச் சந்தியுங்கள்" என்று சத்தமிடும் தூதர்களின் குரல்களை நான் கேட்டேன். (2)

இது இரண்டாம் தூதனுடைய தூதிற்கு வல்லமை கொடுக்கவேண்டிய நடுஇராத்திரியின் சத்தமாகும். அதைரியமடைந்த பரிசுத்தவான்களை விழிப்படையச்செய்து, அவர்களுக்கு முன்னாலிருக்கும் மாபெரும் வேலைக்கு ஆயத்தஞ்செய்வதற்காக, பரலோகத்திலிருந்து தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். இந்தச் சத்தியத்தை முதலாவது ஏற்றுக்கொண்டவர்கள், மிகுந்த தாலந்துகளையுடைய மனிதர்களல்ல; தாழ்மையும் பக்தியுமுடையவர் களிடத்தில் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். "இதோ, மணவாளன் வருகிறார்; புறப்பட்டுப்போய் அவரைச் சந்தியுங்கள்" என்று சத்தமிடும்படி அவர்களை நெருக்கி ஏவினார்கள். இவ்வாறு குரல்கொடுக்கும்படி பொறுப்பேற்றவர்கள் துரிதமாகப் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தூதை முழக்கி, அதைரியமடைந்த சகோதரர்களை விழிப்படையச்செய்தார்கள். இந்த வேலை மனித ஞானத்தினாலும் கல்வியினாலும் நடைபெறவில்லை; இது தேவ வல்லமையினால் நடைபெற்றது. இந்தச் சத்தத்தைக்கேட்ட அவரது பரிசுத்தவான்கள் அதை எதிர்க்கக்கூடாமற்போயிற்று. மேம்பட்ட—

ஆவிக்குரிய நிலையையுடையோர், முதலாவது இந்தத் தூதை ஏற்றுக்கொண்டார்கள். இந்த வேலையை முன்பு நடத்திசென்றவர்கள், கடைசியாக பெற்றுக்கொண்டார்கள். “இதோ, மணவாளன் வருகிறார். புறப்பட்டுச்சென்று, அவரைச் சந்தியுங்கள்” என்ற அந்தச் சத்தத்தைக் கேட்க அவர்கள் உதவிசெய்து, சத்தம் உரத்துத் தொனிக்கச் செய்தார்கள். (3)

உலகின் ஒவ்வொரு பாகத்திலும் இரண்டாம் தூதனுடைய தூதைப்பற்றிய வெளிச்சம் கொடுக்கப்பட்டது. இந்தச் சத்தம் அநேகமாயிரம் இதயங்களைக் கரைத்தது. தேவனுக்காகக் காத்திருக்கும் மக்கள் முற்றிலுமாக விழிப்படையும்வரை பட்டணம் பட்டணமாக, கிராமம் கிராமமாக இந்தத் தூது சென்றது. இந்தத் தூதைக் கொடுக்கும்படி, அநேக சபைகளிலே அனுமதிகொடுக்கப்பட வில்லை. உயிருள்ள சாட்சியையுடைய ஒரு பெரிய கூட்டம் விழுந்துபோன இந்தச் சபைகளைவிட்டு வெளியேறினார்கள். இந்த நடுஇராத்திரியின் சத்தத்தினாலே மாபெரும் வேலையானது செய்துமுடிக்கப்பட்டது; இந்தத் தூது இருதயத்தை ஆராய்வதற்கு மக்களை நடத்திச்சென்றது. உயிருள்ள அனுபவத்தை தங்களுக்குத் தேடிக்கொள்ளும்படி சபையாரை வழிநடத்திற்று. ஒருவர் ஒருவர்மேல் சார்ந்திருக்கமுடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். (4)

பரிசுத்தவான்கள் ஆண்டவருக்காக ஆவலோடு காத்திருந்து, உபவாசித்து—விழிப்பாயிருந்து—தொடர்ந்து ஜெபத்திலே தரித்திருந்தார்கள். சில பாவிகள், வரப்போகும் அந்த நாளை நடுக்கத்தோடே நோக்கினார்கள்; ஆனால், பெரிய கூட்டங்களில் இந்தத் தூதிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதிலே சாத்தானின் ஆவியை வெளிப்படையாகக் காட்டினார்கள். “அவர் வரும் நாளையாவது நாழிகையையாவது ஒருவனும் அறியமாட்டான்” என்பதை எங்கும் திரும்பத்திரும்பக்கூறி, கேலியும் கிண்டலுஞ்செய்தார்கள். அவர்களது இதயங்களைக் கடினப்படுத்தவும், பரத்திலிருந்துவரும் ஒவ்வொரு ஒளிக்கதிரையும் ஒதுக்கித்தள்ளவும், அவ்வாறு சாத்தானின் கண்ணியிலே பிடித்துவைக்கப்படும்படியாக தீய தூதர்கள் தூண்டினார்கள். கிறிஸ்துவிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்த அநேகருக்கு, இந்தத் தூதின் வேலையில் பங்கில்லை. அவர்கள் கண்ட தேவ மகிமையும், காத்திருப்போரின் தாழ்மையும், ஆழ்ந்த பக்தியும் ஆதாரங்களின் திரட்சியும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று சொல்லக் காரணமாயிற்று; ஆனாலும், அவர்கள் மனமாற்ற மடையவில்லை; அவர்களது ஆண்டவரின் வருகைக்காக அவர்கள் ஆயத்தமாயிருக்கவில்லை. (5)

ஒரு பக்திவிநயமான—ஊக்கமான ஜெப ஆவியானது எங்கும் பரிசுத்தவான்களால் உணரப்பட்டது. ஒரு பரிசுத்த பயபக்தி அவர்கள்மீது தங்கியிருந்தது. ஆழ்ந்த ஆர்வத்தோடு தூதின் பலனைத் தூதர்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பெற்றுக்கொண்டவர்களை உயர்த்தினார்கள். அவர்களை பூமிக்கான பொருள்களிடமிருந்து இழுத்து, மீட்பின் ஊற்றிலிருந்து ஏராளமாகப் பெற்றுக்கொள்ளச்செய்தாாகள். தேவனுடைய மக்கள் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களானார்கள். மகிழ்ச்சியோடு இயேசு அவர்களைக் கண்ணோக்கினார்; ஏனெனில், அவரது சாயல் அவர்களில் பிரதிபலிக்கப்பட்டது. முழுமையான தியாகஞ்செய்து, முற்றிலுமாகத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். சாவாமையைத் தரித்துக்கொள்ள எதிர்பார்த்தார்கள்; ஆனால், மறுபடியும் துக்கத்தோடு ஏமாற்றமடையும்படி அவர்களுக்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. விடுதலையை எதிர்பார்த்து நோக்கிய நேரமும் கடந்துவிட்டது. இன்னமும் பூமியிலேதான் இருந்தார்கள். சாபத்தின் பலாபலன்கள் ஒருபோதும் இவ்வளவு தெளிவாகத் தோன்றியதில்லை. பரலோகத்தின்மீது தங்களது ஆசைகளை வைத்துவிட்டார்கள். இனிய எதிர்பார்ப்பிலே நித்திய விடுதலையை ருசித்துவிட்டார்கள்; ஆனால், அவர்களது நம்பிக்கைகள் இன்னமும் நிறைவேறவில்லை. (6)

அநேக மக்கள் கொண்டிருந்த பயம் உடனே மறைந்துவிடவில்லை. ஏமாற்றமடைந்தவர்கள்மீது உடனே அவர்கள் வெற்றியும் கொண்டு விடவில்லை; ஆனால், தேவ கோபாக்கினையின் வெளிப்படையான அடையாளங்கள் காணப்படவில்லை; எனவே, தாங்கள் கொண்டிருந்த பயம் நீக்கி, தங்களது கேலிகளையும் பரிகாசங்களையும் ஆரம்பித்துவிட்டார்கள். தேவனுடைய மக்கள் மறுபடியும் பரிசோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டார்கள். உலகம் நகைத்து—கேலிசெய்து—கண்டனஞ்செய்தது. சீஷர்கள் இயேசுவின் கல்லறையண்டை நின்று: “எங்கள் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்; அவரை வைத்த இடத்தை நாங்கள் அறியோம்” என்று சொன்னார்கள்; அதுபோல, இயேசு முன்னதாகவே வந்து, மரித்தோரை எழுப்பி—உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களை மறுருபமாக்கி—இராஜ்யத்தை ஏற்று என்றைக்குமாகச் சொந்தமாக்குவார் என்று சந்தேகமின்றி விசுவாசித்தவர்கள் நினைத்தார்கள். (7) ★

# 56

# அட்வெந்து இயக்கம் விளக்கப்பட்டது!

கயிற்றால் ஒன்றாக இணைக்கப்பட்டுக் கட்டப்பட்டவைபோன்று அநேகக் கூட்டத்தினரை நான் கண்டேன். இந்தக் கூட்டங்களிலுள்ள அநேகர், முழுவதும் இருளிலே இருந்தார்கள். அவர்களது கண்கள் கீழாக—பூமியை நோக்கியிருந்தன. அவர்களுக்கும் இயேசுவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லாததுபோல் தோன்றியது. பலவிதமான இந்தக் கூட்டங்களிலே, சிலர் அங்குமிங்குமாகச் சிதறியிருந்தார்கள். அந்தச் சிலரது முகங்கள் பிரகாசித்தன. அவர்களது கண்கள் பரத்தை நோக்கியிருந்தன. இயேசுவிடமிருந்து ஒளிக்கதிர்கள் சூரிய கதிர்கள்போன்று, அவர்களுக்கு அளிக்கப்பட்டது. நன்றாகக் கவனிக்கும்படி ஒரு தூதன் எனக்குக் கட்டளையிட்டான். ஒளிக்கதிர்கள் தங்கியிருக்கும் ஒவ்வொருவரையும் ஒரு தூதன் கவனித்துக் கொண்டிருப்பதை நான் கண்டேன். இருளில் இருக்கும் அனைவரையும் சுற்றி, கேடுசெய்கின்ற தூதர்கள் கூட்டம் இருந்தது. "தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது" என்று ஒரு தூதன் சத்தமிடுவதை நான் கேட்டேன். (1)

ஏற்றுக்கொள்பவர்கள் அதிகமான ஒளியைப்பெற, ஒரு மகிமையான வெளிச்சம் இந்தக் கூட்டங்களின்மீது தங்கியது. இருளில் இருந்த சிலர் வெளிச்சத்தைப்பெற்று பெருமகிழ்ச்சியடைந்தார்கள். தங்களை வழி விலகச்செய்வதற்காக வந்த வெளிச்சமென்று, மற்றவர்கள் பரலோகத்தின் வெளிச்சத்தை எதிர்த்தார்கள். வெளிச்சம் அவர்களை விட்டுப்போயிற்று. அவர்கள் இருளிலே விடப்பட்டார்கள். இயேசுவிடமிருந்து வந்த வெளிச்சத்தை ஏற்றுக்கொண்டவர்கள், தங்கள்மீது அமர்ந்த அரும்பெரும் வெளிச்சத்தை மகிழ்ச்சியாக ஏற்று பேரானந்தமடைந்தார்கள். பரிசுத்த மகிழ்ச்சியினாலே அவர்களது முகங்கள் பிரகாசித்தன. மிகுந்த ஆர்வத்தோடு இயேசுவை நோக்கி, அவர்களது பார்வை நிலைத்திருந்தது. "தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது"

என்ற தூதனின் குரலோடு, அவர்களது குரல்களும் இணைந்து கேட்டன. இந்தச் சத்தத்தை அவர்கள் உயர்த்தியபோது, இருளில் இருந்தவர்கள் தங்களது தோள்களாலும் பக்கவாட்டிலும் இடித்துத்தள்ளுவதை நான் கண்டேன். பரிசுத்த வெளிச்சத்தை வாஞ்சித்தவர்கள், தங்களைக் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்துவிட்டு, அந்தக் கூட்டங்களிலிருந்து பிரிந்து தனித்து நின்றார்கள். இதை இவர்கள் செய்துகொண்டிருக்கும்போது, அநேகக் கூட்டங்களைச் சேர்ந்த மனிதர்கள்—இவர்களால் மதிக்கப்பட்டவர்கள் கடந்துசென்றார்கள்; அவ்வாறு செல்லும்போது, சிலர் இனிய வார்த்தைகளைப் பேசினார்கள்; மற்றவர்கள் கோபத்தோடு முறைத்தார்கள்; பயமுறுத்தும் செய்கைகளைச் செய்தார்கள்; மேலும் பலவீனமாகிக்கொண்டிருந்த கயிறுகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். இந்த மனிதர்கள்: “தேவன் எங்களோடிருக்கிறார்; நாங்கள் வெளிச்சத்தில் நிற்கிறோம்; எங்களிடம் சத்தியம் இருக்கிறது” என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் மனிதர்கள் யார் என்று கேட்டேன். அதற்கு: “இவர்கள் ஊழியர்களும் பெருந்தலைவர்களுமாவார்கள்; வெளிச்சம் தங்களுக்கு வேண்டாமென்று இவர்களும் தள்ளிவிட்டார்கள்; மற்றவர்கள் அந்த வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளுவதும் இவர்களுக்கு விருப்பமில்லை” என்று தூதனால் எனக்குக் கூறப்பட்டது. (2)

இந்த வெளிச்சத்தை விரும்பி—நேசித்து—வாஞ்சித்து—பரத்தை நோக்கி மிகுந்த ஆவலோடு காத்துக்கொண்டிருந்தவர்கள், இயேசு வந்து தங்களை அவரிடத்தில் அழைத்துச்செல்ல வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள் என்பதை நான் கண்டேன். சீக்கிரத்தில் ஒரு மேகம் அவர்களைக் கடந்து சென்றது. அவர்களது முகங்கள் துக்கமாகக் காணப்பட்டன. அந்த மேகத்தின் காரணம் என்ன என்பதை வினவினேன்; அது அவர்கள் அடைந்த “ஏமாற்றமே” என எனக்குக் காட்டப்பட்டது. தங்களது மீட்பரை எதிர்பார்த்திருந்த நேரம் கடந்துவிட்டது; இயேசு வரவேயில்லை; காத்திருப்பவர்கள் மிகுந்த அதைரியம் அடைந்தார்கள்; இதைப்பார்த்து, நான் முன்பு கவனித்த போதகர்களும் பெருந்தலைவர்களும் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். இந்த வெளிச்சத்தைத் தள்ளிப்போட்ட அனைவரும் வெற்றியாகக்கொண்டாடினார்கள். சாத்தானும் அவனுடைய கெட்ட தூதர்களும் எக்களித்தார்கள். (3)

“பாபிலோன் விழுந்தது, விழுந்தது” என்று சொல்லும் மற்றொரு தூதனின் குரலை நான் கேட்டேன். நம்பிக்கையிழந்து தவிக்கும் மக்கள்மீது வெளிச்சம் பிரகாசிப்பதை நான் கண்டேன். இயேசுவின் வருகையை மிகுந்த ஆவலோடு விரும்பி, அவர்மேலேயே தங்களுடைய கண்களை மறுபடியும் பதித்தார்கள். “பாபிலோன் விழுந்தது” என்று சத்தமிடும் தூதனோடு மேலும்

அநேக தூதர்கள் உரையாடிக்கொண்டிருப்பதை நான் கண்டேன். அவர்களும் இந்தத் தூதனோடு சேர்ந்து: “இதோ, மணவாளன் வருகிறார்; அவரைச் சந்திக்கப் புறப்பட்டுப்போங்கள்” என்று சத்தமிட்டார்கள். இந்தத் தூதர்களுடைய இன்னிசைபோன்ற குரல்கள் எப்பக்கத்திலும் ஒலித்ததுபோன்று காணப்பட்டன. தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற வெளிச்சத்தை வாஞ்சித்து நேசித்தவர்களைச் சுற்றிலும் மிகவும் பிரகாசமான—மகிமையுள்ள வெளிச்சம் பிரகாசித்தது. மேன்மையான மகிமையோடு அவர்களது முகங்கள் பிரகாசித்தன. “இதோ, மணவாளன் வருகிறார்” என்ற சத்தமிடும் தூதனோடு சேர்ந்து அவர்களும் சத்தமிட்டார்கள். பலவிதமான கூட்டங்களுக்கு மத்தியில் இவர்கள் ஒன்றுசேர்ந்து, இந்தச் சத்தத்தை உயர்த்தியபோது, இந்த வெளிச்சத்தைத் தள்ளிவிட்டவர்கள், அவர்களைத் தள்ளிவிட்டு, கோபப்பார்வையோடு கேலிசெய்து இகழ்ந்தார்கள். உபத்திரவப் படுகிறவர்கள்மீது, தேவனுடைய தூதர்கள் தங்களது செட்டைகளால் மென்மையாக விசிறியபடிப் பறந்தார்கள். ஆனால், சாத்தானும் அவனுடைய தூதர்களும் பரத்திலிருந்து வந்த வெளிச்சத்தை அவர்கள் தள்ளிவிடவேண்டும் என்பதற்காக, தங்களது இருளை அவர்களைச் சுற்றிலும் கவியச்செய்தார்கள். (4)

இவ்வாறு தள்ளிவிடப்பட்டு கேலிபண்ணப்பட்டவர்களை நோக்கி “அவர்களைவிட்டு வெளியேவந்து, அசுத்தமானதைத் தொடாதிருங்கள்” என்று சொல்லும் குரலை நான் கேட்டேன். இந்தச் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, அநேகர் தங்களைக் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்து, இருளிலே தாங்கள் இருந்த அந்தக் கூட்டங்களைவிட்டு வெளியே வந்தார்கள்; மேலும், முன்பு விடுதலைபெற்று வெளியே வந்தவர்களோடு, தாங்களும் இணைந்து மகிழ்ச்சியோடு குரலெழுப்பினார்கள். இருளிலே இருந்த மற்றக் கூட்டங்களிலே தொடர்ந்து தங்கியிருந்தவர்கள் உருக்கமாக—துயரம்நிறைந்த குரலோடு ஜெபித்ததை நான் கேட்டேன். போதகர்களும் பெருந்தலைவர்களும் இந்தப் பலவிதமான கூட்டங்களைச் சுற்றிவந்து, கட்டுகளை மேலும் பலமாக இறுக்கினார்கள்; எனினும், உருக்கமான விண்ணப்பத்தின் குரல் என் காதுகளிலே விழுந்தது. தேவனின் பெருமகிழ்ச்சியடைந்து, விடுதலைபெற்றவர்களாய், ஐக்கியமடைந்த ஒரு கூட்டத்தைக்கண்டு, ஜெபித்துக்கொண்டிருந்தவர்கள் கைகளை நீட்டி, உதவி கேட்பதை நான் கண்டேன். அவர்களோ பரத்தை உருக்கத்தோடு நோக்கியவர்களாய், மேலே காட்டி: “அவர்களிடமிருந்து வெளியேவந்து பிரிந்திருங்கள்” என்று பதிலுரைத்தார்கள். தனிப்பட்டோர் விடுதலைக்காகப் போராடுவதை நான் கண்டேன். கடைசியில் தங்களைக் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்தெறிந்தார்கள். இந்தக் கயிறுகளை இறுக்கமாகக் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை எதிர்த்தார்கள். “தேவன்

நம்மோடிருக்கிறார்; சத்தியம் நம்மிடத்தில் இருக்கிறது” என்ற திரும்பத்திரும்ப அழுத்திக் கூறப்பட்ட வார்த்தைகளைக் கவனிக்க மறுத்துவிட்டார்கள். (5)

இருளில் இருந்த இந்தக் கூட்டங்களைவிட்டு தொடர்ந்து மக்கள் வெளியேறி, விடுதலைபெற்ற கூட்டத்தைச் சேர்ந்தார்கள். பூமிக்கு மேலாக, திறந்த ஒரு வயல்வெளியிலே இருப்பதுபோன்று இவர்கள் காணப்பட்டார்கள். அவர்களது பார்வை மேல்நோக்கி நிலைத்திருந்தது. தேவனுடைய மகிமை அவர்கள்மீது தங்கியிருந்தது. மகிழ்ச்சியோடு அவரைப் புகழ்ந்து சத்தமிட்டார்கள். அவர்கள் நெருக்கமாக இணைக்கப்பட்டு, பரத்தின் வெளிச்சத்தினாலே அணைக்கப்பட்டதுபோல் தோன்றியது. இந்தக் கூட்டத்தைச் சுற்றிலும் இந்த வெளிச்சத்தின் செல்வாக்கிற்கு அடியில் சிலர் வந்தார்கள்; ஆனால், குறிப்பாக இந்தக் கூட்டத்தோடு அவர்கள் இணைக்கப்படவில்லை. தங்களுக்குக் கிடைத்த வெளிச்சத்தை வாஞ்சித்தவர்கள், மிகுந்த அக்கறையோடு பரத்தை நோக்கிப்பார்த்தார்கள். அவரது வருகையை எதிர்பார்த்து, அவரது பிரசன்னத்திற்காக ஏங்கினார்கள். தயங்கிய பார்வையை பூமியின்மீது ஒருமுறைகூட சிறிதும் செலுத்தவில்லை. மறுபடியும் ஒரு மேகம் காத்திருப்பவர்கள்மீது படிந்தது. அவர்கள் தங்களது சோர்ந்த கண்களால் கீழ்நோக்கிப் பார்ப்பதை நான் கண்டேன். இந்த மாற்றத்திற்கு காரணமென்ன என்று நான் வினவினேன். “தங்களது எதிர்பார்ப்புகளிலே மறுபடியும் ஏமாற்றமடைந்தார்கள்” என்று என்னுடன் வந்த தூதன் கூறினான். இன்னமும் பூமிக்கு இயேசு வரக்கூடாதிருந்தது. அவருக்காக மேலும் அநேக சோதனைகளை அனுபவிக்கவேண்டும். மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பாரம்பரியங்களையும் தவறுகளையும் விட்டுவிட்டு, தேவனிடத்திற்கும் அவருடைய வசனத்தினிடத்திற்கும் முற்றிலுமாகத் திரும்பவேண்டும். அவர்கள் சோதிக்கப்பட்டு, வெண்மையாக்கப்பட்டு, தூய்மையாக்கப்பட வேண்டும். இந்தக் கசப்பான சோதனைகளை அனுபவிப்பவர்களே நித்திய வெற்றியைப் பெற்றுக்கொள்வார்கள். (6)

காத்திருக்கும் மகிழ்ச்சியான கூட்டம் எதிர்பார்த்ததுபோல, இயேசு பூமியை நெருப்பினால் கூட்டெரித்து, தூய்மையாக்குவதின் மூலம் ஆசரிப்புக்கூடாரத்தை சுத்திகரிக்க, பூமிக்கு வரவில்லை; தீர்க்கதரிசன காலக்கட்டங்களை குறிப்பிட்டதிலே, அவர்கள் செய்தது சரி என்பதை நான் கண்டேன்; தீர்க்கதரிசன காலம் 1844–ம் ஆண்டில் முடிவடைந்தது. அந்த நாட்களின் முடிவிலே, ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்தை சுத்திகரிப்பதற்காக இயேசு பிரவேசித்தார். எது ஆசரிப்புக்கூடாரம், எப்படிப்பட்ட தன்மையுள்ள சுத்திகரிப்பு? என்பது போன்ற காரியங்களை விளங்கிக்கொள்ளாததில்தான் அவர்களது தவறு அடங்கியிருந்தது.

காத்திருந்த—ஏமாற்றமிகுந்த அந்தக் கூட்டத்தினரை நான் மறுபடியும் பார்த்தபோது, அவர்கள் துக்கமாகக் காணப்பட்டார்கள். தீர்க்கதரிசன காலக்கட்டங்களை கணக்கிட்டதின்வழியாக தொடர்ந்துசென்று, தங்களது விசுவாசத்திற்கான ஆதாரங்களை கவனமாக பரிசீலனைசெய்தார்கள்; ஆனால், எந்தத் தப்பிதத்தையும் கண்டுபிடிக்கவில்லை. காலம் நிறைவேறிவிட்டது; ஆனால், அவர்களது மீட்பர் எங்கே? அவர்களோ அவரைக் காணமுடியவில்லை! (7)

கல்லறையண்டை வந்து, இயேசுவின் உடலை அங்கு காணாதபோது, சீஷர்கள் அடைந்த ஏமாற்றம் எனக்குக் காட்டப்பட்டது. "என் ஆண்டவனை தூக்கிக்கொண்டுபோய்விட்டார்கள்; அவரை எங்கே வைத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது" என்று மரியாள் கூறினாள். துயரமடைந்த சீஷர்களுக்கு, அவர்களது ஆண்டவர் உயிர்த்தெழுந்தாரென்றும், அவர்களுக்கு முன்பாக கலிலேயாவிற்குப் போகிறார் என்றும் தூதர்கள் கூறினார்கள். (8)

இதேபோன்று, அவருடைய வருகைக்காகக் காத்திருந்து ஏமாற்றமடைந்தவர்களை ஆழ்ந்த அனுதாபத்தோடு இயேசு கவனித்தார் என்பதை நான் கண்டேன். அவர் தமது தூதர்களை அனுப்பி, அவர்களது மனதை நேர்ப்படுத்தி, அவர் எங்கிருக்கிறாரோ அங்கே அவரைத் தொடரும்படி வழிசெய்தார். இந்த பூமி ஆசரிப்புக்கூடாரமல்ல என்பதைக் காட்டினார்; ஆனால், தமது மக்களுக்காக பாவநிவிர்த்தி செய்யவும், தமது பிதாவிடமிருந்து இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளவும், பின்பு பூமிக்குத் திரும்பிவந்து, தமது மக்களை தம்மிடத்தே சேர்த்துக்கொண்டு, எந்நாளும் அவரோடு அவர்களை வாழச்செய்யவும், அவர் பரலோக ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டியதாயிருக்கிறது. முதலில் சென்ற சீஷர்கள் ஏமாற்றமடைந்தார்கள். இந்தச் சம்பவம் 1844—ல் ஆண்டவரை எதிர்பார்த்து ஏமாந்தவர்களைக் குறிக்கிறது. (9)

இயேசு வெற்றி வீரராக எருசலேமில் பவனிவந்த காட்சியின் காலத்திற்கு நான் அழைத்துச்செல்லப்பட்டேன். மகிழ்ச்சிநிறைந்த அவரது சீஷர்கள் அவர் இந்த உலக அரசராக, இராஜ்யத்தைப்பெற்று அரசாளப்போகிறாரென்று நம்பினார்கள். மிகுந்த நம்பிக்கையோடு தமது அரசரைப் பின்தொடர்ந்தார்கள். அழகிய குருத்தோலைகளை வெட்டி—தங்களது மேலாடைகளைக் கழற்றி, உற்சாகப்பெருக்கிலே வழியெல்லாம் விரித்தார்கள். சிலர் முன்னே சென்றார்கள்; சிலர் பின்னே சென்று: "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா; ஆண்டவரின் நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர் உன்னதத்திலிருப்பவருக்கு ஓசன்னா" என்று

உரத்தசத்தமிட்டார்கள். இந்தப் பரபரப்பு பரிசேயர்களை எரிச்சலூட்டியது. இயேசு தமது சீஷர்களைக் கடிந்துகொள்ளவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள்; ஆனால், இயேசு அவர்களை நோக்கி: "இவர்கள் அமைதியாயிருந்தால், இந்த கல்லுகளே சத்தமிடும்" எனக்கூறினார். சகரியா 9:9—ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிச்சயமாக நிறைவேறவேண்டும்; எனினும், கசப்பான ஏமாற்றத்திற்குள்ளாக சீஷர்கள் தீர்க்கப்பட்டார்கள். சில நாட்களிலே கல்வாரியை நோக்கி இயேசுவின் பின்னாகச் சென்றார்கள். அவர் இரத்தம் சிந்துவதையும் கொடூரச் சிலுவையில் சிதைக்கப்பட்டதையும் கண்டார்கள். துயரமிகுந்த அவரது மரணத்தைக்கண்டு, அவரது சடலத்தைக் கல்லறையிலும் கொண்டுவந்துவைத்தார்கள். துக்கத்தால் அவர்களது இருதயங்கள் அமிழ்ந்துபோயின. இந்தக் காரியத்தில், அவர்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. அவர்களது நம்பிக்கைகள் இயேசுவோடு மரித்துப்போயின; ஆனால், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து துயரத்திலிருக்கும் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டபோது, அவர்களது நம்பிக்கைகளும் உயிர்பெற்றன. அவரை மறுபடியும் கண்டுகொண்டார்கள். (10)

1844—ல் கிறிஸ்து வருவார் என்று நம்பியவர்களின் ஏமாற்றமானது முதல் சீஷர்கள் குழாம் அடைந்த ஏமாற்றத்திற்குச் சமமாக இருக்கவில்லை. முதலாம் இரண்டாம் தூதர்களுடைய தூதுகளிலே தீர்க்கதரிசனம் நிறைவேறியது. இவைகள் சரியான சமயத்தில் கொடுக்கப்பட்டன, தேவன் திட்டமிட்டு நிறைவேற்ற எண்ணியதை அந்தத் தூதுகள் நிறைவேற்றி முடித்தன. (11) ★

# 57

# மற்றுமொரு விளக்கம்!

**பூ**மியில் செய்யப்படும் வேலையைக்குறித்து, பரலோகம் முழுவதுமே எவ்வளவு அக்கறைகொண்டிருக்கிறது என்று எனக்குக் காட்டப்பட்டது. இயேசு ஒரு வல்லமையுள்ள தூதனுக்குக் கட்டளையிட்டு, அவரது இரண்டாம் வருகைக்கு, பூமியின் குடிகளை ஆயத்தஞ்செய்வதற்காக எச்சரிக்க—பூமிக்கு இறங்கிப்போகும்படிக் கூறினார். இந்தத் தூதன் பரலோகத்தில் இயேசுவின் பிரசன்னத்தை விட்டுப் புறப்பட்டவுடனே மாபெரும் பிரகாசமுள்ள—மகிமையுள்ள வெளிச்சம் அவனுக்கு முன்பாகச் சென்றது. அவனுடைய மகிமையால் பூமியை பிரகாசிப்பிக்க வேண்டுமென்றும், வரப்போகும் தேவ கோபாக்கினைக்கு மனிதரை எச்சரிக்கவேண்டுமென்றும் அவனுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் எனக்குக் கூறப்பட்டது. திரளான மக்கள் வெளிச்சத்தை ஏற்றுக்கொண்டார்கள். சிலர் பக்திவிநயமாகத் தோன்றினார்கள். மற்றும் பலரோ மகிழ்ச்சியோடும் களிப்புநிறைந்தவர்களாயும் காணப்பட்டார்கள். இந்த வெளிச்சத்தை ஏற்றுக்கொண்ட அனைவரும் பரலோகத்திற்கு நேராகத் தங்களது முகங்களைத் திருப்பி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். அனைவர்மேலும் இந்த வெளிச்சம் பிரகாசித்தும், சிலர் அந்த செல்வாக்கின்கீழ் வந்தும், அதை இதயப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வில்லை. அநேகர் மகா கோபத்தால் நிறைந்தார்கள். ஊழியர்களும் மக்களும் தீமைசெய்பவர்களோடு ஒன்றாக இணைந்து, அந்த மகா பராக்கிரமமுள்ள தூதனால் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தைப் பலமாக எதிர்த்தார்கள். ஆனால் இந்த வெளிச்சத்தை ஏற்றுக்கொண்டவர்களோவெனில் உலகத்தினின்று பிரிந்து—தனித்து அவர்கள் மாத்திரமே ஒருவரோடொருவர் இணைந்து வாழ ஆரம்பித்தார்கள். சாத்தானும் அவனது தூதர்களும் இந்த வெளிச்சத்தினின்று எத்தனை பேரைப் பிரித்து, கவர்ச்சித்து, வெளியே இழுக்கமுடியுமோ, அந்த அளவிற்குத் தீவிரமாக வேலைசெய்தார்கள். இந்த வெளிச்சத்தை ஒதுக்கி, தள்ளிப்போட்ட கூட்டத்தார் இருளிலே விடப்பட்டார்கள். தம்முடையவர்கள் என்று அழைக்கப்பட்ட மக்களை தேவனுடைய தூதன் ஆழ்ந்த அக்கறையோடு கவனிப்பதைக் கண்டேன். பரலோகத்தை

ஆரம்பமாகக்கொண்ட அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தினால், எப்படிப்பட்ட குணக்கட்டுமானத்தை அவர்கள் விருத்திசெய்தார்கள் என்பதை தூதன் பதிவுசெய்தான். இயேசுவை நேசிக்கிறோம் என்று சொல்லிக்கொண்ட அநேகர், கேலி—கிண்டல் மற்றும் வெறுப்புமிகுந்தவர்களாக பரலோகத்தின் தூதினின்று பின்வாங்கிப்போனதைக் கண்டு, தூதன் ஒருவன் கையிலுள்ள தோற்சுருளிலே கேவலத்திற்குரிய அந்த விவரத்தைப் பதிவு செய்தான். தமது பின்னடியார்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டவர்கள்மூலமாக இயேசு அலட்சியப்படுத்தப் பட்டதைக்கண்டு, பரலோகம் முழுவதுமே கோபத்தால் நிறைந்தது. (1)

நம்பியிருந்தோர் தாங்கள் எதிர்பார்த்த நேரத்தில் ஆண்டவரைச் சந்திக்க முடியாததால் பெருத்த ஏமாற்றத்திற்குள்ளானார்கள் என்பதை நான் கண்டேன். வருங்காலத்தை மறைத்துவைத்து, தேவனுடைய மக்களை ஒரு தீர்மானத்திற்குக் கொண்டுவரச்செய்வது, தேவ நோக்கமாக இருந்தது. கிறிஸ்துவின் வருகையைக்குறித்த, திட்டமான நேரத்தைப் போதித்தாலொழிய தேவனால் திட்டமிடப்பட்ட வேலையைச் செய்து முடித்திருக்கமுடியாது. கிருபையின் கால முடிவிற்கும் நியாயத்தீர்ப்பிற்கும் அடுத்து, தொடர்ந்து மாபெரும் சம்பவங்கள் எதிர்காலத்தில் வெகு தொலைவில் இருப்பதாக நோக்கும்பபடி சாத்தான் அநேகரை வழிநடத்திக்கொண்டிருந்தான். நிகழ்கால ஆயத்தத்தை ஊக்கமாகத் தேடும்படி மக்களைக் கொண்டுவரவேண்டியது அவசியமாக இருந்தது. (2)

காலம் கடந்துசென்றபோது, தூதனின் வெளிச்சத்தை முற்றிலுமாக பெற்றுக்கொள்ளாதவர்கள் இந்தத் தூதை அவமதித்தவர்களோடு சேர்ந்து கொண்டு, ஏமாற்றமடைந்தவர்களைக் கேலிசெய்ய ஆரம்பித்தார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் அடியார்களது நிலையை தூதன் குறித்துக்கொண்டான். திட்டமாகக் குறிக்கப்பட்ட காலம் கடந்துபோனபோது, அவர்கள் சோதிக்கப்பட்டு, நிரூபித்துக்காட்டப்பட்டார்கள். அநேகர் தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டார்கள். தாங்கள் கிறிஸ்தவர்கள் என்ற உரத்து உரிமைபாராட்டினார்கள்; ஆனாலும் ஒவ்வொரு காரியத்திலும் கிறிஸ்துவைப் பின்பற்றத் தவறிவிட்டார்கள். கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்று சொல்லிக்கொள்வோரது நிலையைக் கண்டு சாத்தான் எக்களித்தான். அவர்களைத் தனது கண்ணியிலே வைத்திருந்தான். அநேகரை நேரான வழியைவிட்டு விலகும்படியாக வழிநடத்தினான். மற்ற வழிகளிலே பரலோகத்திற்கு ஏறுவதற்கு அவர்கள் முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். பரிசுத்தமான—தூய்மையான மக்கள் சீயோனிலுள்ள பாவிகளோடும், உலகத்தை நேசிக்கும் மாய்மாலக்காரரோடும் கலந்திருப்பதைத் தூதன்

கண்டான். இயேசுவின் உண்மையான சீஷர்களை அவர்கள் நன்றாகக் கவனித்தார்கள். கறைபட்டோர், பரிசுத்தவான்களை வெகுவாகப் பாதித்தார்கள். இயேசுவைப் பார்க்கவேண்டுமென்று இருதயம் கொழுந்துவிட்டு எரியும்படி உள்ளான ஆர்வத்தால் நிறைந்தவர்களை அவர்களது சகோதரர்கள் என்று அழைக்கப் பட்டவர்கள் இயேசுவின் வருகையைப்பற்றிப் பேசக்கூடாது என்று தடைசெய்தார்கள். இந்தக் காட்சியைக்கண்ட தேவ தூதர்கள் தேவனுடைய வருகைக்காகக் காத்திருக்கும் மீதியானவர்களோடு சேர்ந்து அவர்களுக்காகப் பரிவுகாட்டினார்கள். (3)

மற்றுமொரு மகா வல்லமையுள்ள தூதனுக்கு பூமிக்கு இறங்கிச்செல்லும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. எழுதப்பட்ட ஒன்றை இயேசு அவனது கையிலே வைத்தார். அவன் பூமிக்கு வந்து: “பாபிலோன் விழுந்தது, விழுந்தது” என்று உரத்த சத்தமிட்டான். பின்னும் ஏமாற்றமடைந்தவர்கள் தங்கள் கண்களைப் பரத்திற்கு நேராக உயர்த்தி, விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் ஆண்டவரின் வருகையை நோக்கியிருப்பதை நான் கண்டேன். நித்திரையில் இருப்பதுபோன்று அநேகர் முட்டாள்தனமான நிலையிலேயே காணப்பட்டார்கள். எனினும் மிகுந்த துக்கத்தின் அடையாளத்தை அவர்களது முகங்களிலே என்னால் காணமுடிந்தது. ஏமாற்ற மடைந்தவர்கள் வேத வசனங்களிலிருந்து தாங்கள் காத்திருக்கும் காலத்தில் இருக்கிறோமென்றும், தரிசனத்தின் நிறைவேறுதலுக்கு பொறுமை யாகக் காத்திருக்கவேண்டுமென்றும் கண்டார்கள். எந்த ஆதாரம் 1843–ல் தேவனை எதிர்நோக்க வழிநடத்தியதோ, அதே காரியந்தான் 1844–லும் வழிநடத்தியது. என்றாலும் 1843–ல் கொண்டிருந்த விசுவாசத்தின் உற்சாகத்தை இப்பொழுது அநேகர் கொண்டிருக்கவில்லை என்பதையும் நான் கண்டேன். அவர்களது ஏமாற்றம் விசுவாசத்தை குளிரப்பண்ணிவிட்டது. (4)

தேவனுடைய மக்கள் இரண்டாம் தூதனுடைய சத்தத்தில் ஐக்கியப்பட்டபோது, தூதின் பலன்களை ஆழ்ந்து ஆர்வத்தோடு பரலோகக்கூட்டம் கவனித்தது. கிறிஸ்தவர்கள் என்று பெயர்வைத்துக்கொண்டவர்கள் ஏமாற்றமடைந்தவர்களை கேலியும் கிண்டலுஞ்செய்வதை அவர்கள் கண்டார்கள். கேலிசெய்யும் உதடுகளினின்று “ஓ நீங்கள் இன்னும் மேலே போகவில்லையா” என்ற வார்த்தைகள் விழுந்தமாத்திரத்தில் ஒரு தூதன் அதைக் குறித்துவைத்தான். “அவர்கள் தேவனைக் கேலிசெய்கிறார்கள்” என்று தூதன் கூறினான். பண்டைய காலத்திலும் இதே பாவம் செய்யப்பட்டது என்பது எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. எலியா மறுரூபமாக்கப்பட்டு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.

அவனது சால்வை எலிசாவின்மேல் விழுந்தது. தேவனுடைய மனுஷனை அவமதிப்பதை தங்களது பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்ட துன்மார்க்கமான வாலிபர்கள் எலிசாவைப் பின்தொடர்ந்து: “மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டைத்தலையா ஏறிப்போ” என்று கேலிசெய்தார்கள். அவருடைய ஊழியக்காரனை இவ்வாறு அவமதித்ததின்மூலமாக தேவனை அவமதித்து, அதற்குரிய தண்டனையை அங்கேயே அப்பொழுதே பெற்றுக்கொண்டார்கள். இதேமுறையில் பரிசுத்தவான்கள் மேலேபோகும் விஷயத்தில் அவர்களைக் கேலியும் பரிகாசமும் செய்தவர்களை தேவ கோபாக்கினையானது நிச்சயமாகச் சந்திக்கும். நம்மை உண்டாக்கியவரிடத்தில் விளையாடுவது இலேசான காரியமல்ல என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளும்படிச் செய்யப்படுவார்கள். (5)

இயேசு மற்ற தூதர்களை நோக்கி: வேகமாகப்பறந்துசென்று தமது மக்களின் குன்றிப்போன விசுவாசத்தை உயிர்ப்பித்து பலப்படுத்தும்படியாகவும், இரண்டாம் தூதனின் தூதை அவர்கள் விளங்கிக்கொள்ளும்படியாகவும் வெகுசீக்கிரத்தில் பரலோகத்தில் செய்யப்படப்போகிற முக்கியமான காரியத்திற்காக அவர்களை ஆயத்தம்பண்ணும்படியாகவும் கட்டளை கொடுத்தார். மற்ற தூதர்கள் இயேசுவிடமிருந்த மகா வல்லமையையும் வெளிச்சத்தையும் பெற்று, இரண்டாம் தூதன் தனது வேலையை முடிக்க அவனுக்கு உதவும்படியும், தாங்கள்பெற்ற கட்டளையை நிறைவேற்றவும் பூமிக்கு வேகமாகப் பறந்துசென்றார்கள். “இதோ மணவாளன் வருகிறார் அவரைச் சந்திக்கப் புறப்பட்டுப்போங்கள்” என்று தூதர்கள் உரத்தசத்தமிடும்போது, தேவனுடைய மக்கள்மீது மாபெரும் வெளிச்சம் ஒன்று பிரகாசித்தது. பின்பு ஏமாற்றமடைந்தவர்களும் எழுந்து இரண்டாம் தூதனோடு இணைந்தவர்களாக: “இதோ மணவாளன் வருகிறார் அவரைச் சந்திக்கப் புறப்பட்டுப்போங்கள்” என்று கூறியறிவித்தார்கள். தேவ தூதர்களிடமிருந்து வந்த வெளிச்சம் எங்குமுள்ள இருளை ஊடுருவிச்சென்றது. சாத்தானும் அவனுடைய தூதர்களும், இந்த வெளிச்சம் பரவி திட்டமிடப்பட்ட அதன் பலாபலன்கள் கிடைத்துவிடாதபடி தடுக்கத் தீவிரமாகப் பணியாற்றினார்கள். அவர்கள் பரலோகத்தின் தூதர்களை நோக்கி முறுமுறுத்து: தேவன் மக்களை ஏமாற்றிப்போட்டாரென்றும், இயேசு வரப்போகிறார் என்று அளவில்லாத வெளிச்சத்தாலும் வல்லமையாலும் உலகத்தை நம்பவைக்க அவர்களால் முடியாது என்றும் கூறினார்கள். இருந்தபோதிலும், வழிகளை அடைக்கவும் வெளிச்சத்தினின்று மக்களின் மனதை இழுத்துக்கொள்ளவும் சாத்தான் மிகுந்த முயற்சிகள் செய்தான். ஆனாலும் தேவனுடைய தூதர்கள் தொடர்ந்து தங்களது வேலைகளைச்செய்தார்கள். (6)

வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் மிகுந்த மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்கள். அவர்கள் உறுதியாக— பரத்தை நோக்கிப்பார்த்தவர்களாக இயேசுவின் வருகைக்காக ஏங்கிநின்றார்கள். சிலர் மிகுந்த துயரத்தோடே அழுது ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பரத்தை நோக்கிப்பார்க்க தைரியமற்றவர்களாக தங்களையே நோக்கிப்பார்ப்பவர்கள்போல் தோன்றியது. பரலோகத்தினின்று வந்த வெளிச்சம் ஒன்று அவர்களிடமிருந்த இருளைப் பிரித்தது. நம்பிக்கையற்று, தங்களையே பார்த்துக்கொண்டிருந்த கண்கள் இப்பொழுது பரத்தை நோக்கித் திரும்பின. நன்றியும் பரிசுத்த மகிழ்ச்சியும் ஒவ்வொரு அங்கத்திலும் வெளிப்பட்டன. இயேசுவும் தூதர் கூட்டம் அனைத்தும் விசுவாசத்தோடு காத்திருக்கும் அவர்களை ஒப்புதலோடு நோக்கினர். (7)

முதல் தூதனின் வெளிச்சத்தை எதிர்த்து ஒதுக்கித் தள்ளியவர்கள், இரண்டாம் தூதனின் தூதால் வரும் வெளிச்சத்தையும் இழந்துவிட்டார்கள். "இதோ மணவாளன் வருகிறார்" என்ற தூதின் வல்லமையாலும் மகிமையாலும் நன்மை பெறக்கூடாமற்போயிற்று. அவர்கள் அவரை அலட்சியப்படுத்தித் தள்ளிப்போட்டதால் இயேசு கோபத்தோடு அவர்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டார். தூதை ஏற்றுக்கொண்டவர்களோவெனில், மகிமையின் மேகத்தினால் அணைக்கப்பட்டார்கள். தேவனுடைய மனதை நோகவைப்பதற்கு அவர்கள் மிகவும் பயந்தார்கள். அவருடைய சித்தத்தை அறிவதற்காக காத்திருந்து—பார்த்திருந்து ஜெபித்தார்கள். தேவனுடைய மக்களிடமிருந்த இந்த தெய்வீக வெளிச்சத்தை மறைத்துப்போட சாத்தானும் அவனது தூதர்களும் வழிவகைகளைத் தேடியலைந்தார்கள். ஆனால் காத்திருந்தவர்கள் வெளிச்சத்தை நேசித்து—விரும்பி தங்கள் கண்களை பூமியின்று இயேசுவினிடத்திற்கு நேராகத் திருப்பியிருக்கும்வரை, அந்த வெளிச்சத்தின் அரிய ஒளிக்கதிர்களை அவர்களைவிட்டுப் பிரிக்க சாத்தானுக்கு வல்லமையில்லாமற்போயிற்று. பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்ட தூது, சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் கோபத்திற் குள்ளாக்கியது. எனவே, இயேசுவை நேசிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, அவரது வருகையை அவமதிப்பவர்கள் விசுவாசத்தோடு நம்பியிருக்கும் மக்களைக் கேலிசெய்து இகழும்படி நடத்தியது. தேவனுடைய பிள்ளைகளுக்கு தங்களது சகோதரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களிடமிருந்து வரும் ஒவ்வொரு நிந்தனையையும் ஒவ்வொரு அலட்சியத்தையும் ஒவ்வொரு தவறையும் ஒரு தூதன் குறித்துக்கொண்டான். (8)

"இதோ, மணவாளன் வருகிறார்" என்று சத்தமிட அநேக குரல்கள் உயர்ந்தன. இயேசுவின் வருகையை விரும்பாத அவருடைய வருகைக்கான

பொருள்பற்றிப் பேச அனுமதிக்காத இவர்கள் சகோதரர்களைவிட்டு விலகிவிட்டார்கள். தம்மைப் புறக்கணித்து, தமது வருகையை நிந்தித்தவர் களிடமிருந்து இயேசு தமது முகத்தைத் திருப்பிக்கொண்டதை நான் கண்டேன். தமது மக்கள் கெட்டுப்போகாதபடிக்கு, அசுத்தமானவர்களிடமிருந்து அவர்களைப் பிரித்து வெளியே கொண்டுவருவதற்காக அவர் தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டார். தூதிற்கு கீழ்ப்படிந்தவர்கள் விடுதலை பெற்றவர்களாக, அனைவரும் இணைந்து நின்றார்கள். ஒரு பரிசுத்த ஒளி அவர்கள் மேல் பிரகாசித்தது. அவர்கள் உலகத்தை முற்றிலுமாகத் துறந்துவிட்டார்கள். பூமிக்கடுத்த ஆசைகளைத் தியாகஞ்செய்து விட்டுவிட்டார்கள். பூமியின் பொக்கிஷங்களை விட்டுவிட்டார்கள். தாங்கள் நேசிக்கும் விடுதலை வீரரை எதிர்நோக்கி, ஆவல்பொங்கும் பார்வையை பரத்திற்கு நேராகத் திருப்பினார்கள். ஒரு பரிசுத்தவெளிச்சம் அவர்களது முகங்களிலே பிரகாசித்தது. அது அவர்கள் மனதினில் ஆளுகைசெய்து கொண்டிருந்த மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் எடுத்துக்கூறிற்று. அவர்களுக்கு வரப்போகும் சோதனைவேளை நெருங்கிவிட்டபடியால், இயேசு தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டு, அவர்களை பலப்படுத்தும்படியாகக் கூறினார். காத்திருக்கும் இந்த மக்கள், தாங்கள் சோதிக்கப்படவேண்டிய அளவிற்கு இன்னமும் சோதிக்கப்படவில்லை என்பதை நான் கண்டேன். தவறு செய்வதினின்றும் அவர்கள் முற்றிலுமாக விடுதலை பெறவுமில்லை. பூமியின் மக்களுக்கு எச்சரிப்பை அனுப்புவதில் தேவனுடைய இரக்கத்தையும் நன்மையையும் நான் கண்டேன். அவர்கள் தங்களது இருதயங்களை உன்னிப்பாக ஆராய்ந்துபார்த்து, வேத வசனங்களைக் கற்றுக்கொள்ளுவதற்காக, திரும்பத்திரும்ப தூது கொடுக்கப்பட்டது. அஞ்ஞானிகளிடமிருந்தும், போப்பு மார்க்கத்தாரிடமிருந்தும், தாங்கள் கற்றுக்கொண்ட பிழைகளையெல்லாம் விட்டு, அவர்கள் மனதைத் திருப்புவதற்காக இவைகளெல்லாம் செய்யப்பட்டன. இந்தத் தூதுகளின் மூலமாக தேவன் தமது மக்களை எங்கு அவர் மகா வல்லமையோடு அவர்களுக்காக வேலைசெய்யமுடியுமோ, எங்கு அவர்கள் அவருடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளமுடியுமோ, அங்கு இருக்கும்படி வெளியே கொண்டுவந்துகொண்டிருக்கிறார். (9) ★

# 58

# ஆசரிப்புக்கூடாரம்!

எதிர்பார்த்த நேரத்தில் இயேசு வரவில்லையென்று தேவனுடைய மக்கள் அடைந்த துக்ககரமான பெருத்த ஏமாற்றம் எனக்குக் காட்டப்பட்டது. தங்களது மீட்பர் ஏன் வரவில்லையென அவர்களுக்குத் தெரியாது. ஏனெனில் தீர்க்கதரிசன காலம் முற்றுப்பெறவில்லை என்பதற்கு எந்தவித ஆதாரத்தையும் அவர்கள் காணவில்லை. “தேவனுடைய வார்த்தை தவறிப்போயிற்றோ? என தூதன் வினவினான். அல்ல, அவர் வாக்குத்தத்தம்பண்ணியவைகள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டார். இயேசு எழுந்து பரலோக ஆசரிப்புக்கூடாரத்தைச் சுத்தஞ்செய்வதற்காக மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் செல்லும் கதவைத்திறந்து உள்ளே பிரவேசித்திருக்கிறார். பொறுமையாகக் காத்திருக்கும் அனைவரும் அந்த இரகசியத்தை விளங்கிக்கொள்வார்கள். மனிதன் தவறு செய்துவிட்டான். ஆனால் தேவனால் எந்தத் தவறும் இழைக்கப்படவில்லை. தேவன் வாக்குத்தத்தம் பண்ணியவைகள் அனைத்தும் நிறைவேறியாகிவிட்டது. ஆனால் மனிதனோ இந்தப் பூமியே ஆசரிப்புக்கூடாரமென்றும், தீர்க்ககதரிசன கால முடிவிலே அது சுத்திகரிக்கப்படவேண்டியதென்றும் தவறாக நம்பினான். இது மனிதனின் எதிர்பார்ப்பு. நிறைவேறாமற்போனது தேவனுடைய வாக்குத்தத்தம் அல்ல” என்றான். (1)

இஸ்ரவேலுக்காக விசேஷ பாவநிவர்த்தி செய்வதற்கும் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுத்திகரிப்பதற்கும் அங்கு பிரவேசித்திருக்கிறார். ஏமாற்றமடைந்த மக்களின் மனதை மகா பரிசுத்தஸ்தலத்தின் பக்கமாகத் திருப்பும்படி தேவன் தமது தூதர்களை அனுப்பினார். இயேசுவைக் கண்டுகொண்டவர்கள் அனைவரும் அவர் செய்யவேண்டிய வேலையை புரிந்துகொள்வார்களென இயேசு தூதர்களிடம் கூறினர். இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்திலே இருக்கும்போது, புதிய எருசலேமாகிய மணவாட்டியை மணந்துகொள்வார் என்பதையும், மகா பரிசுத்தஸ்தலத்திலே தமது வேலையை நிறைவேற்றிய பிறகு, இராஜரீக வல்லமையோடு பூமிக்கு இறங்கிவந்து, தனது வருகைக்காகப் பொறுமையோடு காத்துக்கொண்டிருந்த

விலையேறப்பெற்ற ஆத்துமாக்களைத் தன்னிடத்தில் சேர்த்துக்கொள்வார் என்பதையும் நான் கண்டேன். (2)

தீர்க்கதரிசன கால முடிவிலே 1844–லே பரலோகத்தில் என்ன காரியம் நடைபெற்றது என்பது எனக்குக் காட்டப்பட்டது. இயேசு பரிசுத்தஸ்தலத்திலே தமது ஊழியத்தை முடித்து, அந்தப் பகுதியின் கதவை மூடியபோது, அவரது வருகையின் தூதைக் கேட்டு ஒதுக்கித் தள்ளியவர்கள்மீது பெரும் இருள் கவிந்தது. எனவே, அவர்கள் அவரைக் காணக்கூடாமற்போயிற்று. பின்னர் மிகவும் மேன்மையான ஆடைகளை இயேசு அணிந்துகொண்டார். அவரது வஸ்திரத்தின் தொங்கலிலே ஒரு மணியும் ஒரு மாதுளம்பழமும், ஒரு மணியும் ஒரு மாதுளம் பழமுமாக (அடுத்தடுத்து) காணப்பட்டன. அரிய வேலைப்பாடுடைய ஒரு மார்ப்பதக்கம் அவரது தோள்களினின்று தொங்கியது. அவர் அசைந்தபோது, அந்த மார்ப்பதக்கம் வைரக்கற்களைப்போன்று ஜொலித்தது. அந்த மார்ப்பதக்கத்திலே எழுதப்பட்ட அல்லது பொறிக்கப்பட்ட பெயர்கள்போன்று அந்த எழுத்துக்கள் பெரிதாகக் காணப்பட்டன. கிரீடத்தின் தோற்றமுள்ள ஒன்று அவர் தலைமீது காணப்பட்டது. அவர் தமது ஆடைகளை முற்றிலுமாகத் தரித்துக்கொண்டபின்னர் தூதர்களால் சூழப்பட்டார். அக்கினி இரதத்தின்மீது அமர்ந்து இரண்டாம் திரைக்குள் பிரவேசித்தார். (3)

பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் இரு பிரிவுகளையும் பார்க்கும்படி நான் கட்டளையிடப்பட்டேன். அந்தத் திரை அல்லது கதவு திறக்கப்பட்டது. நான் உள்ளே நுழையும்படி அனுமதிக்கப்பட்டேன். முதல்பகுதியிலே ஏழு விளக்குத்தண்டுகளுள்ள விளக்கையும், சமூகத்தப்பம் வைக்கப்பட்ட மேசையையும், தூப பீடத்தையும், தூப கலசத்தையும் கண்டேன். இந்த அறையின் தட்டுமுட்டுகள் அனைத்தும் சுத்தப்பொன்னாலாகியவைபோன்று காணப்பட்டு, அதில் நுழைந்தவரது சாயலைப் பிரதிபலித்தன. இரண்டு பிரிவுகளுக்கும் நடுவிலுள்ள திரையானது, பலவித வண்ணங்களாலும் பலவித நூற்சேர்க்கையாலும் ஆகியிருந்தது. திரையின் தொங்கலில் அழகிய கரையிருந்தது. இந்தத் திரையில் தூதர்களின் உருவங்களைக் குறிக்கும்படியாக தங்க வேலைப்பாடு காணப்பட்டது. திரை உயர்த்தப்பட்டது. நான் இரண்டாவது பகுதியை நோக்கினேன். சுத்தப்பொன்னாலான தோற்றமுடைய ஒரு உடன்படிக்கைப்பெட்டியை நான் அங்கு கண்டேன். அந்த உடன்படிக்கைப்பெட்டியின் மேல்ஓரமெங்கும் கிரீடங்கள் வைத்ததுபோன்று அழகான வேலைப்பாடு அமைந்திருந்தது. பத்துக்கட்டளைகள் அடங்கிய கற்பலகைகள் உடன்படிக்கைப்பெட்டிக்குள் இருந்தன. (4)

உடன்படிக்கைப்பெட்டிக்கு மேலாக இரண்டு அழகிய கேருபீன்கள் இரண்டு ஓரங்களிலும் எதிர்எதிராக தங்களது செட்டைகளை விரித்து

நின்றன. இயேசு கிருபாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது, அவரது தலைக்கு உயரே ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு நின்றன. இவைகளின் முகங்கள் ஒன்றுக்கொன்று எதிராக இருந்தன. தேவனுடைய பிரமாணத்தின்மீது தூதர்கள் கூட்டமே ஆர்வத்தோடு நோக்குவதைக் காட்டுவதுபோன்று உடன்படிக்கைப்பெட்டியைக் குனிந்து நோக்கி நின்றன. இந்த கேருபீன்களுக்கு மத்தியிலே பொன் தூபகலசம் இருந்தது. பரிசுத்தவான்களின் ஜெபம் விசுவாசத்திலே ஏறெடுக்கப்படும்போது, இயேசுவை வந்தடைந்தன. அந்த விண்ணப்பங்களை அவர் பிதாவிடம் சமர்ப்பித்தார். சுதந்த வாசனைத் திரவியங்களிலிருந்து எழுந்த நறுமணப்புகை, மணமுள்ள மேகம்போன்று எழும்பி, மிகவும் அழகான வண்ணங்களாலான புகைபோன்று தோன்றியது. உடன்படிக்கைப் பெட்டிக்குமுன்பாக—இயேசு நிற்குமிடத்திற்கு மேலாக மிகப்பிரகாசமான மகிமை தங்கியிருந்தது. என்னால் அதைப் பார்க்கக்கூடாதிருந்தது. அது தேவ சிங்காசனம்போன்று காட்சியளித்தது. தூபம் பிதாவினிடத்திற்கு மேலாக எழும்பியபோது, மகா மகிமை சிங்காசனத்திடமிருந்த இயேசுவை வந்தடைந்தது. பின்பு அவரிடமிருந்த அந்த மகிமை யாருடைய ஜெபங்கள் இனிய புகையைப்போன்று எழும்பியதோ அவர்கள்மீது அமர்ந்தது. மிக அதிகமான வெளிச்சம் இயேசுவின்மேல் படிந்து, கிருபாசனத்தையே மறைத்துப்போட்டது. அந்த மகிமையின் மிகுதியானது ஆலயத்தை நிரப்பியது. அந்த அதிஉன்னத வெளிச்சத்தை என்னால் அதிக நேரம் பார்க்கக்கூடாமலிருந்தது. எந்த மொழியாலும் அதை வர்ணிக்கமுடியாது. நான் மேற்கொள்ளப்பட்டு, மகிமையும் கெம்பீரமும் பொருந்திய காட்சியினின்று திரும்பினேன். (5)

இரு பிரிவுகள் கொண்ட பூமியிலிருந்த ஆசரிப்புக்கூடாரமும் எனக்குக் காட்டப்பட்டது. அது பரலோக மாதிரியை ஒத்ததாக இருந்தது. அது பரலோக மாாதிரி வடிவிலே அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் முதல் பிரிவிலே காணப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களைப்போலவே பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் முதல் பிரிவின் தட்டுமுட்டுச் சமான்கள் காணப்பட்டன. திரை உயர்த்தப்பட்டது. மகா பரிசுத்தஸ்தலத்தை உற்றுநோக்கினேன். பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்தஸ்தலத்தில் காணப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களைப்போலவே இங்கும் காணப்பட்டன. பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் இருபிரிவுகளிலும் ஆசாரியன் ஊழியஞ்செய்தான். முதல் பகுதியிலே தினமும் பணியாற்றினான். ஆனால் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் அங்கு கொண்டுசெல்லப்பட்ட பாவங்களைச் சுத்திகரிப்பதற்காக ஆண்டுக்கு ஒருமுறையே பிரவேசித்தான். பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் இரு பிரிவுகளிலும் இயேசு ஊழியஞ்செய்வதை நான் கண்டேன். பூலோக ஆசரிப்புக்கூடாரத்திலே

பாவத்திற்குக் காணிக்கையாக மிருகத்தின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு ஆசாரியன் உள்ளே பிரவேசித்தான்; பரலோக ஆசரிப்புக்கூடாரத்தினுள் தமது சொந்த இரத்தத்தையே காணிக்கையாக எடுத்துக்கொண்டு கிறிஸ்து பிரவேசித்தார். பூலோக ஆசாரியர்கள் மரணத்தாலே அந்த வேலையினின்று அகற்றப்பட்டார்கள். எனவே, நீண்டகாலம் தொடர்ந்து செய்யமுடியாமற்போயிற்று. ஆனால் இயேசுவோவெனில் என்றும் ஆசாரியராக விளங்குகிறார். பூலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கு கொண்டுவரப்பட்ட பலிகள் காணிக்கைகள்மூலமாக, வரப்போகும் மீட்பரின் புண்ணியங்களை இஸ்ரவேல் புத்திரர் பற்றிக்கொண்டிருக்க வேண்டியதாயிருந்தது. தேவஞானத்தினாலே இந்த வேலையின் விவரங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டு, அதன்மூலமாக அவைகளை நோக்கி, பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் இயேசு செய்யும் வேலையை விளங்கிக்கொள்ள முடிந்தது. (6)

கல்வாரியில் இயேசு மரிக்கும்போது, “முடிந்தது” என்று உரத்த சத்தமிட்டார். அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது. இது பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் வேலை என்றுமாக முடிவடைந்துவிட்டது என்பதைக் காண்பித்தது. இனி பலிகளை ஏற்றுக்கொள்வதற்காக தேவன் பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஆசாரியர்களைச் சந்திக்கமாட்டார். பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே இயேசுவினாலேயே செலுத்தப்படும்படியாக, இயேசுவினுடைய இரத்தம் சிந்தப்பட்டது. பூலோக ஆசரிப்புக்கூடாரத்தைச் சுத்திகரிப்பதற்காக ஆசாரியன் ஆண்டுக்கு ஒருமுறை மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதுபோன்று 1844–ம் ஆண்டில், தானியேல் எட்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, 2300 இராப்பகலின் முடிவிலே, இயேசு பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்து, அவரது மத்தியஸ்த வேலையினாலே பயனடையப்போகின்ற அனைவருக்கும் கடைசியாகப் பாவநிவர்த்திசெய்து, இந்தவிதமாக ஆசரிப்புக்கூடாரத்தைச் சுத்திகரிப்பார். (7) ★

59

# மூன்றாம் தூதனின் தூது!

இயேசுவின் ஊழியம் பரிசுத்தஸ்தலத்திலே முடிவடைந்தபோது, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தேவனுடைய பிரமாணம் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்றார். மகா வல்லமையுள்ள வேறொரு தூதனிடம், உலகிற்கான மூன்றாம் தூதைக் கொடுத்தனுப்பினார். தூதனின் கையிலே ஒரு தோற்சுருள் வைக்கப்பட்டது. வல்லமையோடும் கெம்பீரத்தோடும் பூமியின்மீதிறங்கி ஒருக்காலும் மனிதனுக்குக் கொடுக்கப்படாத நடுநடுங்கும் பயமுறுத்தல் நிறைந்த அச்சத்தோடுகூடிய எச்சரிப்பைக் கூறியறிவித்தான். தேவனுடைய பிள்ளைகள் விழிப்போடு இருக்கத்தக்கதாகவே இந்தத் தூது திட்டஞ்செய்யப்பட்டது. மேலும், அவர்களுக்குமுன்பாக இருக்கும் சோதனை வேளையையும் பெரும் துயரத்தையும் இது காட்டியது. தூதன் என்னை நோக்கி, மிருகத்திற்கும் அதன் சொரூபத்திற்கும் முன்பாக மிகவும் நெருக்கமான முறையில் போரிடும் நிலைக்கு கொண்டிவரப்படுவார்கள். நித்திய வாழ்க்கையின் ஒரே நம்பிக்கை அவர்கள் உறுதியாக நிற்பதிலேயே இருக்கிறது. உயிருக்கு ஆபத்து இருந்தாலும், சத்தியத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்" என்று கூறினான். மேலும் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொண்ட பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" என்று மூன்றாம் தூதன் தனது தூதை முடித்தான். இந்த வார்த்தைகளை திரும்பக்கூறியபோது, பரலோக ஆசரிப்புக்கூடாரத்தைச் சுட்டிக்காட்டினான். இந்தத் தூதை ஏற்றுக்கொண்ட எல்லாருடைய மனதும் மகா பரிசுத்தஸ்தலத்திற்கு நேராக வழிநடத்தப்பட்டது. யார்யாருக்கெல்லாம் இரக்கம் இன்னும் தயங்கி நின்றுகொண்டிருக்கிறதோ, யாரெல்லாம் புத்தியீனமாக தேவனுடைய பிரமாணத்தை மீறிப்போட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் கடைசியாக உடன்படிக்கைப்பெட்டிக்கு முன்பாக நின்று பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். இந்தப் பாவநிவர்த்தி மரித்த நீதிமான்களுக்கும் உயிருள்ள நீதிமான்களுக்கும் செய்யப்பட்டது. தேவனுடைய பிரமாணத்தைப்பற்றின வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளாமல்,

அவருடைய கட்டளைகளை அறியாமையினால் மீறி, கிறிஸ்துவின்மேல் நம்பிக்கைவைத்து மரித்தவர்களையும் உள்ளடக்கியிருந்தது. (1)

இயேசு மகா பரிசுத்த ஸ்தலத்தின் கதவுகளைத் திறந்தபோது, ஓய்வுநாள்பற்றிய வெளிச்சம் காணப்பட்டது. இஸ்ரவேல் புத்திரர் ஆதிகாலத்தில் தேவனுடைய பிரமாணங்களை கைக்கொள்ளுவார் களோ மாட்டார்களொவெனச் சோதிக்கப்பட்டதுபோல், தேவனுடைய மக்களும் சோதிக்கப்பட்டார்கள். மூன்றாம் தூதன் மேல்நோக்கியவனாக பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்தஸ்தலத்திற்கான வழியை ஏமாற்றமடைந்தவர்களுக்குச் சுட்டிக்காட்டுவதை நான் கண்டேன். விசுவாசத்தினாலே மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும்பொழுது, அங்கே இயேசுவைக் காண்கிறார்கள். புதிய நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தளிர்த்து மேலோங்குகிறது. இயேசுவின் இரண்டாம் வருகைபற்றிய அறிவிப்பிலிருந்து, 1844–வரை அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக்குறித்து, அவர்கள் பின்னிட்டுப் பார்த்து, பழைய காலத்தை திருப்பிப்பார்ப்பதை நான் கண்டேன். அவர்களது ஏமாற்றம் பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டதைக் காண்கிறார்கள். மகிழ்ச்சியும் நிச்சயமும் மறுபடியும் அவர்களுக்கு உயிரூட்டியது. மூன்றாம் தூதன் அவர்களுக்கு கடந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் விளக்கிக்காட்டினான். விளங்கிக்கொள்ளக்கூடாத தேவநடத்துதல் மூலமாகவே தேவன் நடத்தினார் என்பது அவர்களுக்குத் தெரியும். (2)

மீதியானவர்கள் இயேசுவோடு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, உடன்படிக்கைப்பெட்டியையும் கிருபாசனத்தையுங்கண்டு, அதன் மகிமையால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள் என்பது எனக்கு குறித்துக்காட்டப்பட்டது. இயேசு அந்தப் பெட்டியின் மூடியை உயர்த்தவே, இதோ அங்கு பத்துக்கட்டளைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் காணப்பட்டன. அந்த உயிருள்ள கட்டளைகளை ஒவ்வொன்றாக வாசிக்கிறபோது, மற்ற ஒன்பது கட்டடைகளையும்விட, மிகப் பிரகாசமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் நான்காம் கட்டளையைக் கண்டு, திகைத்து நடுங்குகிறார்கள். அதைச் சுற்றிலும் ஒரு மகிமையான ஒளிவட்டம் பிரகாசிக்கிறது. அங்கே ஓய்வுநாள் ஒழிக்கப்பட்டது என்றோ, அல்லது வாரத்தின் முதலாம் நாளுக்கு மாற்றப்பட்டது என்பதுபற்றியோ எந்தவிதத் தகவலையும் அவர்கள் காணவில்லை. பயபக்தியோடும் மலையிலே பயங்கரமான இடி முழங்கிட, மின்னல் பளிச்சிட, தேவ சத்தம் பேசியதுபோலவே அந்தக் கற்பனை தோற்றங்கொடுக்கிறது. கற்பலகைகளிலே: “ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக;

ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" என்று அவரது சொந்த விரலால் எழுதப்பட்டதுபோலவே இருக்கிறது. பத்துக்கட்டளைகள் பற்றிய காரியத்தில் எவ்வளவு அக்கறை கொடுக்கப்படுகிறது என்பதைக் கண்டு வியப்படைகிறார்கள். அவைகள் யேகோவாவின் பக்கத்திலே வைக்கப்பட்டு, அவரது நிழலால் மறைக்கப்பட்டு, அவருடைய பரிசுத்தத்தால் பாதுகாக்கப்பட்டதை அவர்கள் காண்கிறார்கள். பத்துக்கட்டளையில் ஒன்றான நான்காவது கட்டளையை தாங்கள் மிதித்துக்கொண்டிருக்கிறதைக் காண்கிறார்கள். யேகோவாவினால் பரிசுத்தமாக்கப்பட்ட நாளுக்குப்பதிலாக, அஞ்ஞானிகளாலும் போப்பு மார்க்கத்தாராலும் கொடுக்கப்பட்ட நாளை தாங்கள் ஆசரித்ததைக் காண்கிறார்கள். தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, தங்களது பழைய மீறுதல்கள்நிமித்தம் துக்கிக்கிறார்கள். (3)

இயேசு அவர்களது பாவ அறிக்கைகளையும் விண்ணப்பங்களையும் பிதாவினிடத்தில் சமர்ப்பித்தபோது, தூப கலசத்திலே வாசனைத் திரவியங்கள் புகைவதை நான் கண்டேன். அந்தப் புகை மேலே எழுந்தபோது, ஒரு பிரகாசமான வெளிச்சம் இயேசுவின் மேலும் அவரது கிருபாசனத்தின்மீதும் அமர்ந்தது. தேவனுடைய பிரமாணத்தை இவ்வளவு நாளும் மீறுபவர்களாக இருந்தோமென்பதைக்கண்டு, மிகுந்த துக்கமடைந்த அவர்கள், ஊக்கமாக ஜெபித்தபோது, ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அவர்களது முகங்கள் நம்பிக்கையாலும் மகிழ்ச்சியாலும் பிரகாசமடைந்தன. மூன்றாம் தூதனின் வேலையிலே தங்களை ஐக்கியப்படுத்தி, இந்த பயபக்தியான எச்சரிப்பை கூறியறிவிப்பதற்காக, தங்களது சத்தத்தை உயர்த்தினார்கள். ஆனால் ஒரு சிலரே அதை முதலாவது ஏற்றுக்கொண்டார்கள். எனினும், சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஆற்றலோடு சத்தியத்தைக் கூறியறிவித்தார்கள். மூன்றாம் தூதனின் தூதை அநேகர் ஏற்றுக்கொள்ளுவதை நான் கண்டேன். அவர்கள் முதலாவது எச்சரிப்பைக்கொடுத்தவர்களோடு இணைந்து, சத்தியத்தை அறிவித்தார்கள். அவர்கள் பரிசுத்த ஓய்வுநாளை ஆசரித்து, தேவனுக்கு கனத்தைச் செலுத்தினார்கள். (4)

மூன்றாம் தூதை ஏற்றுக்கொண்ட அநேகருக்கு முதல் இரண்டு தூதுகளிலும் அனுபவம் இல்லாதிருந்தது. சாத்தான் இதை அறிந்து கொண்டான். அவர்களை மேற்கொள்ளுவதற்காக அவனது தீய கண்கள் அவர்கள்மேல் இருந்தன. ஆனால் மூன்றாம் தூதனோவெனில் மகா பரிசுத்த ஸ்தலத்தை அவர்களுக்குக் குறித்துக்காட்டினான். பழைய தூதுகளிலே அனுபவமுள்ளவர்கள், இவர்களுக்கு பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கான வழியைச் சுட்டிக்காட்டினார்கள். தூதர்களின் தூதுகளில் பூரணமான சத்தியத்தொடரை அநேகர் கண்டார்கள். அதன்

வரிசைக்கிரமத்திலே அதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார்கள். பரலோக ஆசரிப்புக்கூடாரத்தினுள் விசுவாசத்திலே இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். இந்தத் தூதுகள் தேவனுடைய மக்களுக்கு ஒரு நங்கூரம்போன்று இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இந்தத் தூதுகளை விளங்கி ஏற்றுக்கொள்பவர்கள், சாத்தானின் அநேகமான மாய தந்திரங்களினால் அடித்துக்கொண்டுபோகப்படாதபடிக்கு காப்பாற்றப்படுவார்கள். (5)

1844–ல் ஏற்பட்ட அந்தப் பெரிய ஏமாற்றத்திற்குப்பிறகு, சாத்தானும் அவனது தூதர்களும் சபையின் விசுவாசத்தைக் குலைப்பதற்கு கண்ணிகளை வைப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். இந்தத் தூதுகளிலே ஏற்கனவே அனுபவம் உடையவர்கள் மற்றும் தாழ்மையின் தோற்றம் உடையவர்களது மனங்களைச் சாத்தான் பாதித்தான். சிலர் முதலாம் இரண்டாம் தூதுகளின் நிறைவேறுதலுக்கு எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டினார்கள். மற்றவர்களோவெனில் அதிமுன்னதான கடந்தகாலத்தைச் சுட்டிக்காட்டி, அவைகள் அக்காலத்திலேயே நிறைவேறிவிட்டதாகக் கூறியறிவித்தார்கள். இவர்கள் அனுபவமற்றவர்களுடைய மனங்களின்மீது செல்வாக்கைப்பெற்று, அவர்களது விசுவாசத்தை நிலைகுலையச் செய்தார்கள். சிலர் சபையினின்று பிரிந்து, தனிப்பட்ட ஒரு விசுவாசத்தைத் தோற்றுவிப்பதற்காக வேதாகமத்தை ஆராய்ந்துகொண்டிருந்தார்கள். இவைகளெல்லாவற்றையுங்கண்டு சாத்தான் எக்களித்தான். நங்கூரம்போன்ற சத்தியத்தினின்று பிரிந்துசென்றவர்களை பலவிதமான தவறுகளினாலும் பலவிதமான கொள்கைகளினாலும் திகைப்படையச்செய்யமுடியும் என்பதை அவன் அறிவான். முதலாம் இரண்டாம் தூதுகளின் காலங்களிலே, நடத்திச்சென்ற அநேகர், இப்பொழுது மறுதலித்தனர். அதன் விளைவாக சபை முழுவதிலும் பிரிவினையும் குழப்பமும் நிறைந்து காணப்பட்டது. (6)

வில்லியம் மில்லரைப்பற்றிய காரியத்தில் எனது கவனம் இழுக்கப்பட்டது. அவர் குழப்பமடைந்து காணப்பட்டார். அவரது மக்களுக்காகக் கொண்ட துயரமும் பாரமும் அவரை வெகுவாக அழுத்தியது. 1844–ம் ஆண்டிலே, ஐக்கியத்திலும் அன்பிலும் நிலைகொண்டிருந்த கூட்டம், அன்பை இழந்து, ஒருவரையொருவர் எதிர்த்து, மிகவும் குளிர்ந்து பின்தங்கிப்போன நிலையில் காணப்பட்டார்கள். இதைக் கண்ணுற்றபோது, துக்கம் அவரது பெலனைக் குன்றச்செய்தது. தலைவர்கள் சிலர் அவரை உன்னிப்பாகக் கவனித்து, அவர் மூன்றாம் தூதனின் தூதையும் பத்துக்கட்டளைகளையும் ஏற்றுக்கொண்டுவிடக்கூடாதே என்று பயந்தனர். பரலோக வெளிச்சத்தின்பக்கமாக அவர் சாயும்பொழுது, அந்த மனிதர்கள் சில திட்டங்களைத் தீட்டி, அவரது மனதை அதைவிட்டுப்

பிரிக்கமுயல்வார்கள். அவரை இருளிலே வைப்பதற்காகவும், சத்தியத்தை எதிர்த்தவர்கள் மத்தியிலே அவரது செல்வாக்கை நிலைநிறுத்தவும் ஒரு மனிதமுயற்சி உபயோகிக்கப்பட்டது. இறுதியில் வில்லியம் மில்லரும் பரலோக வெளிச்சத்திற்கு விரோதமாக தமது சத்தத்தை உயர்த்தினார். அந்தத் தூதை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டார். அந்தத் தூது, அவரடைந்த ஏமாற்றத்தைப்பற்றியும், கடந்தகாலத்தின் காரியங்களைப்பற்றின மகிமை யையும் விளக்கத்தையும் காட்டியிருக்கும். அது அவர் இழந்த சக்திகளை உயிர்ப்பித்து, அவரது நம்பிக்கையைப் பிரகாசமாக்கி தேவனை மகிமைப் படுத்தும்படி வழிநடத்தியிருக்கும். அவர் தெய்வஞானத்திற்குப்பதிலாக, மனித ஞானத்தைச் சார்ந்துவிட்டார். எஜமானனின் காரியத்திலே, அவரது கடினமான உழைப்பினாலும் முதிர்வயதினாலும் அவர் உடைந்துபோனார். எனவே, சத்தியத்தினின்று அவரைப் பிரித்துவைத்தவர்களிடம் கணக்கு கேட்கப்படுவதுபோன்று இவரிடம் கேட்கப்படமுடியாது. அவர்களே பொறுப்பாளிகள். அந்தப் பாவமானது அவர்கள்மீது தங்கியிருக்கிறது. (7)

மூன்றாம் தூதின் வெளிச்சத்தை வில்லியம் மில்லர் கண்டிருப்பாரானால், இருண்டு—விளக்கக்கூடாமலிருந்த அநேகக் காரியங்கள் அவருக்கு விளக்கப்பட்டிருக்கும். ஆனால் அவருடன் இருந்த சகோதரர்கள் அவருக்காகக் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பினாலும் அக்கறையினாலும் அவர்களிடமிருந்த தமது உறவை முறித்துக்கொண்டு போகமுடியாதே என்று நினைத்தார். சத்தியத்தின் பக்கமாக அவரது இருதயம் சாயும். பின்பு அவரது சகோதரர்களைப் பார்ப்பார். அவர்களோ அதை எதிர்த்தார்கள். தன் பக்கத்தில் நின்று கிறிஸ்துவின் வருகையைக் கூறியறிவித்தவர்களைவிட்டு அவர் விலகி விடமுடியுமா? அவர்கள் நிச்சயமாகவே தம்மை வழிவிலகச் செய்யமாட்டார்களென்று உறுதியாக நம்பினார். (8)

சத்தியத்தினின்று தொடர்ந்து அவரை வெளியே இழுத்தவர்களிடமிருந்து அவரைப் பிரிப்பதற்காக, சாத்தானின் ஆதிக்கத்திலுள்ள மரணத்தைச் சந்திக்கச்செய்து, தேவன் அவரை கல்லறையில் மறைத்துவைத்தார். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நாட்டை அடைவதற்குச் சற்றுமுன்பாக மோசே தவறு செய்தான். அதைப்போல சத்தியத்திற்குப் புறம்பாக தனது செல்வாக்கை அனுமதித்ததின்மூலம், வெகுசீக்கிரத்தில் பரமகானானுக்குள் பிரவேசிக்கவிருந்த அவர் தவறுசெய்தார் என்பதை நான் கண்டேன். மற்றவர்கள் அவரை இந்த நிலைக்கு வழிநடத்தினார்கள். அவர்கள் அதற்குக் கணக்குக்கொடுக்கவேண்டும். தேவனுடைய ஊழியக்காரனது விலையேறப்பெற்ற இந்தச் சடலத்தூசியை தூதர்கள் பாதுகாத்து வருகிறார்கள். கடைசி எக்காளத்தொனியைக் கேட்டு, அவர் வெளியே வருவார். (9) ★

# 60

# ஒரு உறுதியான மேடை!

நன்றாகப்பாதுகாக்கப்பட்ட உறுதியான ஒரு கூட்டத்தை நான் கண்டேன். சபையோரின் நிலைவரப்பட்ட விசுவாசத்தைக் குலைப்பவர்களை இவர்கள் ஏறிட்டுப்பார்ப்பதில்லை. தேவன் இவர்களை ஒப்புதலோடு நோக்கிப்பார்த்தார். முதலாம், இரண்டாம், மூன்றாம் தூதனின் தூதுகளான மூன்று படிகள் எனக்குக் காட்டப்பட்டன. என்னுடன் வந்த தூதன் என்னை நோக்கி: “இந்த தூதுகளில் ஒரு பகுதியையோ அல்லது ஒரு ஊசி முனையளவான சத்தியத்தையோ அசைத்துப்போடுகிறவனுக்கு ஐயோ, இந்தத் தூதுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டியது மிக முக்கியம். ஆத்துமாக்களின் முடிவு இந்த முத்தூதுகள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அதைப்பொறுத்துத்தான் முடிவுசெய்யப்படுகின்றது” என்று கூறினான். இந்தத் தூதுகளின் வழியாக நான் கொண்டுசெல்லப்பட்டேன். எவ்வளவு அருமையாக தேவனுடைய மக்கள் இந்த அனுபவங்களை அதிக விலைக்கிரயங்கொடுத்து வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் கண்டேன். மிகுந்த உபத்திரவத்திலும், பயங்கரமான போராட்டத்தின் மூலமாகவும் இதைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதையும் நான் கண்டேன். தேவன் தமது பிள்ளைகளை உறுதியான அசையாத மேடையில் ஏற்றும்வரை, படிப்படியாக அழைத்துவந்திருக்கிறார். தனிப்பட்டோர் அந்த மேடையை அணுகி, அதன் அஸ்திபாரத்தைப் பரிசோதிப்பதை நான் கண்டேன். சிலர் உடனே மகிழ்ச்சியோடு அந்த மேடையில் ஏறுவதைக் கண்டேன். மற்றவர்களோ அந்த அடித்தளத்திலே குற்றங்கண்டுபிடிக்க ஆரம்பித்தார்கள். சில திருத்தங்கள் செய்யப்பட்டால் மேடை இன்னும் பரிபூரணமடையும்; மக்களும் மகிழ்ச்சியடைவார்கள் என விரும்பினார்கள். சிலர் மேடையை விட்டிறங்கி அதைப் பரிசோதித்து, அது தவறாகப் போடப்பட்டிருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால் அனைவரும் மேடையின்மீது உறுதியோடு நின்று மேடையை விட்டிறங்கியவர்களைப் பார்த்து, குறைகூறுதலை விட்டுவிடும்படி வேண்டினார்கள். ஏனெனில் தேவனே தேர்ந்த கட்டிடக்கலைஞர். அவர்கள் குறைகூறும்போது, அவருக்கு விரோதமாகவே போர் செய்தார்கள். தங்களை அந்த உறுதியான மேடைக்கு

நடத்திச்சென்றவருடைய அதிசயமான வேலையை மறுபடியும் அவர்கள் எண்ணிப்பார்த்தார்கள். பின்னர் ஐக்கியமாக தங்கள் கண்களைப் பரத்திற்கு நேராக ஏறெடுத்து, உரத்த சத்தமாக தேவனை மகிமைப்படுத்தினார்கள். குறைகூறி மேடையைவிட்டு இறங்கிப்போன சிலரை இது வெகுவாகப் பாதித்தது. அவர்கள் தாழ்மையான கண்களோடு மறுபடியும் அதில் ஏறினார்கள். (1)

கிறிஸ்துவின் முதல் வருகைபற்றிய அறிவிப்பு எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இயேசுவிற்கு வழியை ஆயத்தம்பண்ண எலியாவின் வல்லமையும் ஆவியும் நிறைந்த யோவான் அனுப்பப்பட்டான். யோவானின் சாட்சியை ஒதுக்கித்தள்ளியவர்கள் இயேசுவின் போதனையால் நன்மை பெறவில்லை. இயேசுவின் முதல்வருகையின் தூதை முன்னறிவித்தபோது அதை எதிர்த்தார்கள். எனவே, அவரே மேசியா என்ற உறுதியான ஆதாரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. யோவானின் தூதை மறுத்தோரை, சாத்தான் மேலும் சற்று தூரமாக அழைத்துச்சென்று அவர்கள் இயேசுவைப் புறக்கணிக்கவும், கடைசியில் சிலுவையில் அறையவும் வழிநடத்தினான். இதைச்செய்ததால் பெந்தெகொஸ்தே நாளில் வந்த ஆசீர்வாதத்தைப் பெறக்கூடாத நிலைக்குத் தங்களை வைத்துக்கொண்டார்கள். அந்த ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றிருந்தால் அது அவர்களை பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கு வழிநடத்தியிருக்கும். தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்ததின் மூலமாக, யூத பலிமுறைகளும் சடங்காச்சாரங்களும் இனி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது என்பது காட்டப்பட்டது. அந்த மாபெரும் பலி, செலுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் இறங்கினார். அவர் சீஷர்களின் மனதை பூலோக ஆசரிப்புக்கூடாரத்தினின்று பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கு எடுத்துச்சென்றார். இயேசு தமது சொந்த இரத்தத்தினாலே அங்கே பிரவேசித்து, தாம் செய்த பாவப்பரிகாரத்தினாலே தமது சீஷர்களின்மீது நன்மையைப் பொழிந்தார். ஆனால் யூதர்களோ முழு இருட்டிலே விடப்பட்டார்கள். மீட்பின் திட்டத்தின்பேரில் தங்களுக்குக் கிடைத்திருக்கவேண்டிய வெளிச்சத்தையெல்லாம் இழந்துவிட்டார்கள். தொடர்ந்து தங்களது உபயோகமற்ற பலிகளிலும் காணிக்கைகளிலுமே நம்பிக்கை வைத்தார்கள். பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் இடத்தை பரலோக ஆசரிப்புக்கூடாரம் எடுத்துக்கொண்டது. அந்த மாறுதலைப்பற்றின எந்த அறிவும் இல்லாதவர்களாயிருந்தார்கள். எனவே, பரிசுத்த ஸ்தலத்திலே இயேசுவின் மத்தியஸ்தத்தினால் எந்தவித பலனையும் அவர்கள் அடையக்கூடாமற்போயிற்று. (2)

இயேசு கிறிஸ்துவை ஒதுக்கி, அவரைச் சிலுவையில் அறைந்த யூதர்களின் போக்கை அநேகர் பயங்கரத்தோடு நோக்கினார்கள். அவர் எப்படி அவமானத்திற்குள்ளானார் என்று அந்தச் சரித்திரத்தை வாசிக்கும்போது, தாங்கள் அவரை நேசிப்பதாக நினைக்கிறார்கள். மேலும், பேதுரு மறுதலித்ததுபோல, அல்லது யூதர்கள் சிலுவையிலறைந்ததுபோல, தாங்கள் செய்திருக்கமாட்டோம் என்று எண்ணுகிறார்கள். ஆனால் அனைவருடைய இருதயங்களையும் வாசித்தறிகிற தேவனானவர் அவர்கள் உணருகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற இயேசுவின் அன்பை பரீட்சைக்கு நிற்கும்படி யாக வைத்திருக்கிறார். முதலாம் தூதனின் தூது எப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்பதை பரலோகம் முழுவதுமே மிகுந்த ஆழ்ந்த அக்கறையோடு கவனித்தது. இயேசுவை நேசிக்கிறோம் என்ற சொல்லிக்கொண்டவர்கள், சிலுவையின் கதையை வாசித்து கண்ணீர் வடித்தவர்கள், அவர் வருகிறார் என்ற நற்செய்தியை பரிகசித்தார்கள். அந்தத் தூதை மகிழ்ச்சியோடு வரவேற்பதற்குப் பதிலாக, அது ஒரு ஏமாற்றம் என்று அறிவித்தார்கள். அவருடைய வருகையை நேசித்தவர்களைப் பகைத்து, உலகத்தை அவர்களுக்கு அடைத்துப்போட்டார்கள். முதலாம் தூதை ஒதுக்கித் தள்ளியவர்களுக்கு, இரண்டாம் தூதால் எந்தவிதப் பலனுமில்லை. பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திலே, விசுவாசத்தினால் இயேசுவுடன் பிரவேசிப்பதற்கு ஆயத்தஞ் செய்யவிருந்த அந்த நடு இராத்திரியின் சத்தத்தாலும் பலனில்லலாமல் போயிற்று. முந்திய இரு தூதுகளையும் தள்ளிப்போட்டதாலே அவர்களது புரிந்துகொள்ளும் தன்மை இருளில் மூழ்கடிக்கப்பட்டது. எனவே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே வழிகாட்டுகின்ற மூன்றாம் தூதனின் தூது கொடுக்கும் வெளிச்சத்தைக் காணக்கூடாமற்போயிற்று. யூதர்கள் இயேசுவை சிலுவையிலறைந்தது போல, வீணாக—பெயருக்காக—கிறிஸ்தவ சபைகள் என்று இருந்தவைகள் இந்தத் தூதுகளை சிலுவையிலறைந்துபோட்டன. எனவே, மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் பாதையைப்பற்றிய எந்த அறிவும் இவர்களுக்கு இல்லை. ஆகையால் இயேசுவின் மத்தியஸ்த ஊழியத்தால் இவர்களுக்கு எந்தவித பலனுமில்லை. வீணான பலிகளை யூதர்கள் செலுத்தியதுபோல, ஆசரிப்புக்கூடாரத்தில் இயேசு விட்டுச்சென்ற பகுதிக்கு நேராக தங்களது வீணான ஜெபங்களை ஏறெடுக்கிறார்கள். இந்த ஏமாற்றத்தில் மகிழ்ச்சிகொண்ட சாத்தான் மதப்பண்புகளை உடையவன்போல தன்னைக் காட்டி, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களது மனதைத் தன்னிடத்திற்கு நடத்தி, அவனது கண்ணியில் அவர்களை அகப்படுத்தும்படி தனது வல்லமையாலும், தனது அடையாளங்களாலும், பொய்யான அற்புதங்களாலும் முயற்சிக்கிறான். சிலரை ஒருவிதத்திலும் மற்றவர்களை

வேறுவிதத்திலும் ஏமாற்றுகிறான். பலவகையான உள்ளங்களுக்கு பலவிதமான வகைகளில் ஏமாற்றும் தந்திரங்களை ஆயத்தஞ்செய்கிறான். ஒரு ஏமாற்றத்தை பயத்தோடு நோக்கும் சிலர், மற்றொன்றை ஆயத்தமாக வரவேற்கிறார்கள். ஆவியுலகக் கொள்கையால் சாத்தான் சிலரை ஏமாற்றுகிறான். ஒளியின் தூதனைப்போல வந்து, பூமியில் தனது பொய்யான சீர்திருத்தங்கள் மூலமாக, தனது செல்வாக்கைப் பரப்புகிறான். சபைகளோவெனில் தேவன் தங்களுக்காக ஆச்சரியமானவிதத்தில் வேலை செய்கிறார் எனக்கருதி பெருமைகொள்ளுகின்றன. ஆனால் அதுவோ வேறு ஒரு ஆவியின் வேலையாகும். அந்த பரபரப்பானது சீக்கிரத்தில் ஒழிந்துபோகும். உலகையும் சபையையும் முன்னிலும் கேடான நிலைக்கே கொண்டுவருகிறது. (3)

பெயருக்காக அட்வெந்துக்கள் என்று வாழ்பவர்களிலும் மற்றும் விழுந்துபோன சபைகளிலும் தேவனுக்கு உண்மையான பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பதையும், வாதைகள் ஊற்றப்படுமுன்பாக போதகர்களும் மக்களும் இந்தச் சபைகளிலிருந்து வெளியே அழைக்கப்பட்டு, சத்தியத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் நான் கண்டேன். சாத்தானுக்கு இது தெரியும். மூன்றாம் தூதனின் உரத்த சத்தமாகிய அந்தத் தூது கொடுக்கப்படுமுன்பாக இந்த மதச்சார்புள்ள கூட்டங்களிலே ஒரு பரபரப்பை ஏற்படுத்துகிறான். எனவே, சத்தியத்தை மறுத்துவிட்டவர்களுங்கூட, தேவன் தங்களோடிருப்பதாக நினைக்கிறார்கள். சாத்தான் உண்மையானவர்களையும் ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கிறான். தேவன் தொடர்ந்து சபைகளுக்கு ஊழியஞ்செய்கிறார் என்று நினைக்கும்படித் தூண்டுகிறான். ஆனால் வெளிச்சம் பிரகாசிக்கும். உண்மையானவர்கள் விழுந்துபோன சபைகளைவிட்டு வெளியேறி, மீதியானவர்களுடன் தங்கள் பங்கைத் தெரிந்துகொள்வார்கள். (4) ★

# 61

# ஆவிமார்க்கம்!

கதவுத் தட்டொலி ஏமாற்றமானது எனக்கு முன்பாக வைக்கப்பட்டது. இயேசுவிற்குள் நித்திரைசெய்யும் நமது உறவினர் அல்லது நண்பர்களைப்போன்று தோற்றமளிக்கும் நோக்கத்தோடுள்ள உருவ அமைப்புகளை நம்முன் கொண்டுவர சாத்தானுக்கு வல்லமையுண்டு என்பதை நான் கண்டேன். இந்த நண்பர்கள் உண்மையிலேயே உயிரோடிருப்பதுபோன்று நமக்குத் தோன்றுவார்கள். நாம் அவர்களோடு பழகும்போது, உபயோகித்த வார்த்தைகளும் அங்கு பேசப்படும். எந்தக் குரலால் அவர்கள் பூமியிலிருக்கும்போது நாம் பேசக்கேட்டோமோ, அதே குரல் நமது காதுகளில் விழும். இவையனைத்தும் உலகை ஏமாற்றி, இந்த மாயையான கண்ணியில் மக்களை அகப்படுத்துவதற்காகவே! (1)

பரிசுத்தவான்கள், வேத வசனங்களின்மூலமாக, நிகழ்கால சத்தியத்தின் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருக்கவேண்டுமென்பதை நான் கண்டேன். மரித்தோரின் நிலை என்ன என்பதை நன்றாக அறிந்திருக்கவேண்டும். ஏனென்றால் பிசாசுகளின் ஆவிகள் அவர்கள் முன்பு தோன்றும். மிக அன்பான நண்பர்கள் அல்லது உறவினர்கள் என்று சொல்லிக்கொண்டு, வேதத்திற்குப் புறம்பான கொள்கைகளை அறிவிக்கும். அனுதாபங்கொள்ளும்படியாக தங்கள் வல்லமையினால் செய்யமுடிந்ததையெல்லாம் செய்வார்கள். அவர்களுக்கு முன்பாக அற்புதங்களையும் நடப்பித்து, தாங்கள் அறிவிப்பதை உறுதிப்படுத்துவார்கள். இந்த ஆவிகளை எதிர்த்துநிற்க தேவனுடைய மக்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும். வேதாகம சத்தியத்தின்படி மரித்தோர் ஒன்றும் அறியார்கள் என்றும், இப்படித் தோன்றுபவர்கள் பிசாசுகளின் ஆவிகளென்றும் அறியவேண்டும். (2)

நமது நம்பிக்கையின் அடித்தளத்தை நாம் நன்றாகச் சோதித்துப்பார்க்கவேண்டும். ஏனென்றால் அதற்குரிய காரணத்தை வேத வசனங்களிலிருந்து நாம் கொடுக்கவேண்டும். இந்த ஏமாற்றம் பரவும். இதோடு நாம் முகமுகமாகப் போராடவேண்டும். அதற்கு நாம்

ஆயத்தமாயிராவிட்டால், நாமும் அந்தக் கண்ணிகளில் அகப்பட்டு மேற்கொள்ளப்படுவோம். நமக்குமுன்பாக இருக்கும் இந்தப் போராட்டத்தில் நம்மால் முடிந்ததை நாம் செய்ய ஆயத்தமாயிருப்போமானால் தேவன் அவரது பங்கைச் செய்வார். அவரது மகா வல்லமையுள்ள புயம் நம்மைப் பாதுகாக்கும். சாத்தானின் பொய்யான அற்புதங்களால் ஏமாற்றப்பட்டு இழுத்துச்செல்லப்படுவதைவிட, தமது ஒவ்வொரு தூதனும், அவனது மகிமையை விட்டு இங்குவந்து அவரது உண்மையான ஆத்துமாக்களைச் சுற்றிலும் வேலியாயிருப்பதையே அவர் விரும்புவார். (3)

எவ்வளவு துரிதமாக இந்த ஏமாற்றம் பரவிக்கொண்டுவந்தது என்பதை நான் கண்டேன். மின்னல் வேகத்தில் செல்லும் தொடர்வாகனங்கள் எனக்குக் காட்டப்பட்டன. அதைக் கவனமாகப் பார்க்கும்படி தூதன் எனக்குக் கட்டளையிட்டான்.அந்த வாகனத்தொடரை கூர்ந்து கவனித்தேன். உலகத்தார் அனைவருமே அதனுள்ளே இருப்பதுபோன்று தோன்றியது. அதன் நடத்துனரை எனக்குக் காண்பித்தான். அவன் அழகும் கெம்பீரமும் நிறைந்த தோற்றமுடையவனாயிருந்தான். பயணிகள் அனைவரும் அவனை நோக்கிப்பார்த்து வணக்கஞ்செலுத்தினார்கள். நான் குழப்பமடைந்து, என்னுடன் வந்த தூதனை நோக்கி: “அவன் யார்?” என்ற கேட்டேன். “அவன்தான் சாத்தான். ஒளியின் தூதனின் உருவிலே இருந்த அவன்தான் வாகனத்தின் நடத்துனராகும். உலகம் முழுவதையும் சிறைப்பிடித்துக்கொண்டான். பொய்யை நம்பி தாங்கள் அழிந்துபோகும்படியாக, கொடிய வஞ்சகத்திற்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறார்கள். சாத்தானுக்கு அடுத்தபடியாக இருப்பவன் அந்த வாகனத்தின் பொறியியல் அமைப்பாளன். மேலும் அவனுக்குத் தேவையான மற்ற பலவிதமான அலுவல்களிலே மற்றும் பல ஆட்களை நியமித்திருந்தான். அவர்கள் அனைவரும் மின்னல் வேகத்தில் அழிவைநோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்” என்று கூறினான். (4)

மீதியாக ஒருவரும் விடப்படவில்லையோவென தூதனை நான் கேட்டேன். எதிர்த் திசையில் பார்க்கும்படி என்னைக் கட்டளையிட்டான். ஒரு சிறிய கூட்டமானது, குறுகலான பாதைவழியாகப் பிரயாணஞ்செய்வதை நான் கண்டேன். அனைவரும் சத்தியத்தால் உறுதியாக ஐக்கியப்பட்டவர்கள்போல் தோன்றியது. பயங்ரகமான சோதனைகளையும் போராட்டங்களையும் கடந்துவந்தவர்கள்போன்று இந்தச் சிறுகூட்டம் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்பட்டது. பின்னாலிருக்கும் மேகத்தினின்று இப்பொழுதுதான் சூரியன் உதித்ததுபோன்று அவர்களது முகங்கள் பிரகாசித்துக் காணப்பட்டன. அவர்கள் ஏறக்குறைய வெற்றியை அடைந்ததுபோன்று பெருமிதமாகக் காணப்பட்டார்கள். (5)

தேவன் உலகத்திற்கு இந்தச் சூழ்ச்சியைக் கண்டுப்பிடிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறதை நான் கண்டேன். வேறு எந்தக் காரியம் இல்லாவிட்டாலும், இந்த ஒரு காரியம் கிறிஸ்தவனுக்கு ஆதாரமாக இருந்தால் போதுமானது. ஏனென்றால் மதிப்புள்ள காரியங்களுக்கும் இழிந்த காரியங்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமுமில்லை. தாமஸ் பெயின் எனப்பட்டவரின் உடலானது மண்ணோடு மண்ணாகிவிட்டது. ஆனாலும் இரண்டாம் உயிர்த்தெழுதலிலே ஆயிரம் ஆண்டுகளின் முடிவிலே, தன் பங்கைப்பெற்று, இரண்டாம் மரணத்தை அனுபவிக்கப்போகிறான். ஆனால் சாத்தானோ, அவன் பரலோகத்திலே மேலாக உயர்த்தப்பட்ட நிலையில் இருப்பதாக விவரிக்கிறான். சாத்தான் தாமஸ் பெயினை எவ்வளவு காலம் பூமியில் உபயோகப்படுத்தமுடியுமோ அவ்வளவு காலம் உபயோகப்படுத்தினான். இப்பொழுதும் தாமஸ்பெயின் பரலோகத்தில் மேலாக உயர்த்தப்பட்டு, மதிக்கப்படுவதுபோன்று ஏமாற்றிக்கூறி, மாய்மாலமாக அதே வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். இங்கு உலகத்தில் தாமஸ்பெயின் எவ்வாறு போதித்தானோ அதைப்போன்று பரலோகத்திலும் போதிக்கிறான் என்று தோன்றும்படிக் காட்டுகிறான். தாமஸ்பெயின் இந்த உலகத்திலிருந்தபோது அவனது வாழ்க்கையையும், மரணத்தையும், அவன் வாழ்ந்தபோது கற்றுக்கொடுத்த இழிவான போதனைகளையும் அச்சமூட்டும் நடுக்கத்தோடு கண்ணுற்ற சிலர், இத்தகைய, வெறுக்கத்தக்க மனிதர்களிலே மிகவும் ஒழுக்கங்கெட்ட கீழ்த்தரமான மனிதனும், தேவனையும் அவரது பிரமாணங்களையும் இகழ்ச்சி செய்தவனுமாகிய இவனாலே போதிக்கப்பட இப்பொழுது சரணடைகிறார்கள்! (6)

பூலோகத்திலிருக்கும்பொழுது, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, அப்போஸ்தலர்கள் எழுதியதை, அவர்களே அதற்கு எதிர்மாறாக பேசுவதுபோன்று தோன்றும்படி, தனது தீய தூதர்களை அனுப்பி, அப்போஸ்தலர்கள் பேசுவதுபோன்று பேசச்செய்கிறான். இவ்வாறாக பொய்க்குப் பிதாவாகிய இவன் தனது தூதர்களை அனுப்பி, அப்போஸ்தலர்களுக்காக பேசச்செய்து, உலகத்தை வஞ்சித்து குருட்டாட்டத்தில் மூழ்கச்செய்கிறான். பொய்கூறும் இந்தத் தூதர்கள், அப்போஸ்தலர்களே தங்கள் சொந்தப் போதனைகளை தூய்மையற்றதாக்கி, கலப்படஞ்செய்யப்பட்டது என்று அறிவிக்கும்படிச் செய்கிறான். இவ்வாறு செய்வதின்மூலம் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்களையும் மற்றும் முழு உலகத்தையுமே, தேவனுடைய வார்த்தையைப்பற்றிய ஒரு நிச்சயமற்ற தன்மையில் மூழ்கச்செய்து மகிழ்ச்சியடைகிறான். அந்த பரிசுத்த புத்தகம், அவனது வழித்தடத்தில் நேரடியாகச் சென்று, குறுக்காக வெட்டி அவனது திட்டங்களைக் குலைத்துப்போடுகிறது. ஆகையால், வேதாகமத்தின்

தெய்வீக ஆரம்பத்தையே மக்கள் சந்தேகிக்கும்படி வழிநடத்துகிறான். தாமஸ் பெயின் மரித்தபோது அவன் பரலோகத்தில் வரவேற்கப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டதுபோன்றும், இப்பொழுது பூமியிலே தான் வெறுத்த பரிசுத்த அப்போஸ்தலர்களோடு சேர்ந்து உலகத்திற்கே போதிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதுபோன்றும், தோற்றமளிக்கச் செய்ய சமய நம்பிக்கையற்ற தாமஸ் பெயினை சாத்தான் நிலைநிறுத்துகிறான். (7)

சாத்தான் தனது தூதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலையை திட்டமிட்டு வழங்கி, செயலாற்றும்படிச் செய்கிறான். சூழ்ச்சித்திறனுடன் வஞ்சகமாகவும் மறைமுகமாகவும் செயல்பட வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிடுகிறான். தனது தூதர்களில் சிலரை அப்போஸ்தலர்கள்போன்று நடிக்கச்செய்து, அவர்களுக்காகப் பேசவைக்கிறான். மற்ற தூதர்களை தேவனை தூஷித்துக்கொண்டே மரித்துப்போன துன்மார்க்கரைப்போலவும், சமய நம்பிக்கையற்றவர்கள் போலவும் நடிக்கும்படி கற்றுக்கொடுக்கிறான். இவ்வாறு மிகவும் பரிசுத்தமான அப்போஸ்தலர்களுக்கும் சமயப்பற்றின்றி மிகவும் இழிந்த நிலையில் இருப்பவர்களுக்கும் எந்த வித்தியாசமும் காட்டப்படவில்லை. அந்த இரு வகுப்பினருமே ஒரே பொருள்பற்றி கற்பிக்கும்படி நடத்தப்படுகிறார்கள். அவனது குறிக்கோள்மாத்திரம் நிறைவேற்றப்படுமானால் போதும். யாரைப் பேசவைக்கிறான் என்பது குறித்து அவன் முக்கியப்படுத்துவதில்லை. பூமியிலே சாத்தான் தாமஸ் பெயினோடு மிக நெருக்கமாக தொடர்புகொண்டிருந்தான். அவன் செய்த வேலைக்கு சாத்தான் அதிகமாக உதவிசெய்தான் . தனக்கு உத்தமமாக ஊழியஞ்செய்து தனது நோக்கங்களை மிக நன்றாக நிறைவேற்றிய தாமஸ் பெயின் எழுதிய குறிப்பிட்ட அதே எழுத்துக்களையும் அவனது கையெழுத்தையுங்கூட அறிவது அவனுக்கு மிகச் சுலபமான காரியமாகும். தாமஸ்பெயின் எழுதிய புத்தகங்களில் காணப்படுகின்ற கருத்துக்களில் அதிகமானவை சாத்தானால் தூண்டப்பட்டு எழுதப்பட்டவையே. இப்பொழுது அவனது தூதர்கள் மூலமாக, கருத்துக்களைத் தூண்டி அவை தாமஸ் பெயின் புத்தகங்கள்மூலமாக வந்தவையென்று கூறுவது அவனுக்கு இலகுவான காரியமாகும். இந்த தீமைசெய்வோனின் உத்தம ஊழியனாகவே தாமஸ்பெயின் உலகில் வாழ்ந்தான். இதுவே சாத்தானின் தலைசிறந்த படைப்பாகும். மரித்துப்போன அப்போஸ்தலர்கள், பரிசுத்தவான்கள் மற்றும் துன்மார்க்கரிடமிருந்து வருகின்ற போதனைகளைப்போன்று எண்ணச்செய்வது சாத்தானின் தனிப்பெரும் மேன்மையினின்று நேரடியாக வரும் காரியமாகும். (8)

தாமஸ் பெயின் மிகவும் அதிகமாக நேசிக்கப்பட்டவன் என்று சாத்தான் உரிமைகொண்டாடுகிறான். ஆனால் தாமஸ் பெயினோ தேவனை முற்றிலுமாக

வெறுத்தான். ஆனால் அப்படிப்பட்டவன் பரிசுத்த அப்போஸ்தலரோடும் மகிமையின் தூதர்களோடும் இருக்கிறான் என்று அவன் கூறுகிறான். இது ஒன்றே அநேகருடைய மனத்திரையை அகற்றி, சாத்தானின் அந்தகார இரகசிய வேலைகளைக் காட்டுவதற்கு போதுமானதொன்றாகும். அவன் உலகத்தாருக்கும் சமய நம்பிக்கையற்றவர்களுக்கும் உண்மையாகவே கூறுவது என்னவென்றால்: "நீ எவ்வளவு துன்மார்க்கனாக இருந்தாலும் சரி—வேதத்தையோ அல்லது கடவுளையோ விசுவாசித்தாலும் சரி—விசுவாசிக்காவிட்டாலும் சரி, நீ இஷ்டம்போல் வாழலாம்; உனக்கு பரலோகமே வீடு; தாமஸ் பெயின் பரலோகத்தில் மேன்மையான நிலையில் இருப்பாரானால் மற்றவர்களும் நிச்சயமாக அங்கு செல்லமுடியும்" என்பதாகும். இந்தக் கருத்திலுள்ள தவறானது பளிச்சென்று தெரிவதால், விரும்பினால் எல்லாருமே கண்டுகொள்ளலாம். சாத்தான் தனது விழுகையின் காலத்திலிருந்து என்ன செய்யவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருந்தானோ, அதையே தாமஸ் பெயின் போன்ற தனிப்பட்டவர்கள்மூலமாக இப்பொழுதும் செய்துகொண்டிருக்கிறான். அவன் தனது வல்லமையாலும் பொய்யான அற்புதங்களாலும் கிறிஸ்தவனின் நம்பிக்கையின் அடித்தளத்தையே உடைத்தெரிந்து கொண்டிருக்கிறான். பரலோகத்திற்குச் செல்லும் அந்தக் குறுகலான பாதைக்கு வெளிச்சத்தைத் தரக்கூடிய சூரியனையே அவித்துக்கொண்டிருக்கிறான். வேதாகமம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகமல்ல என்று உலகத்தை நம்பவைக்க முயற்சிக்கிறான். இது கதைப்புத்தகத்தைவிட சிறப்பு வாய்ந்ததல்ல எனக்கூறுகிறான். வேத புத்தகத்தின் இடத்திலே "ஆவிமார்க்க விளக்கங்கள்" என்ற புத்தகங்களை அவன் தூக்கிப்பிடிக்கிறான். (9)

சாத்தானுடைய அதிகாரத்திற்குட்பட்டு, சாத்தானுக்காவே முற்றிலும் ஒதுக்கப்பட்ட ஒரு வழி இங்குண்டு. அவனது விருப்பத்தின் படி உலகை நம்பச்செய்ய அவனால் முடியும். எந்தப் புத்தகம் அவனையும் அவனது பின்னடியார்களையும் நியாயந்தீர்க்கப் போகிறதோ, அதை அவன் விரும்பியபடி ஒதுக்கிடத்தில் வைத்துவிடுகிறான். உலகின் இரட்சகரை ஒரு சாதாரண மனிதனைவிட உயர்ந்தவரல்ல என்று கூறுகிறான். பிரதான ஆசாரியரும், மூப்பர்களும் இயேசுவின் கலலறையைப் பாதுகாத்த ரோமகாவலாளிகளின் வாயிலே பொய்யான வதந்தியை போட்டு பரப்பச்செய்ததுபோல, இந்த இழிநிலையிலிருக்கும் ஏமாற்றப்பட்ட சாத்தானின் பின்னடியார்கள், மாய்மாலமான ஆவிமார்க்க விளக்கங்களை திரும்பத்திரும்பக் கூறி, மீட்பரின் பிறப்பிலும்—மரணத்திலும்—உயிர்த்தெழுதலிலும் எந்தவிதமான அதிசயமான காரியமும் இல்லையெனத் தோன்றும்படிச்செய்கிறார்கள். இயேசுவைப் பின்னணியில் வைத்துவிட்டு, உலகின் கவர்ச்சிகளையெல்லாம்

தங்கள் பக்கம் இழுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் செய்யும் அற்புதங்களும் பொய்யான அதிசயங்களும் இயேசு செய்த அற்புதங்களைவிட அதிகச் சிறப்புவாய்ந்தவைகள் எனக்கூறியறிவிக்கிறார்கள். இவ்வாறு உலகம் அவனது கண்ணியில் பிடிபட்டு, பாதுகாப்பு என்ற உணர்விலே தாலாட்டப்படுகிறது. கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படுமட்டும், பயங்கரமான இந்த ஏமாற்றத்தை அறியாதிருக்கிறார்கள். தன்னுடைய திட்டம் நன்றாக நிறைவேறி, முழு உலகமுமே கண்ணியில் அகப்படுவதைக்கண்டு சாத்தான் நகைக்கிறான். (10) ★

# 62

# பேராசை!

தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கியிருக்கும் மக்களுக்கு எதிராக கண்ணிகளை வைக்கும்படியாக சாத்தான் அவனது தூதர்களுக்கு கட்டளையிட்டதை நான் கண்டேன். சபைகள் அனைத்தும் நித்திரையில் இருப்பதை சாத்தான் தனது தூதர்களுக்கு அறிவித்தான். தனது வல்லமையையும் பொய்யான அற்புதங்களையும் பெருகச்செய்து, அவர்களை பிடித்துவைத்துக்கொள்ளவும் முடியும். “ஆனால் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகிற கூட்டத்தாரை நாம் வெறுக்கிறோம். அவர்கள் நமக்கு எதிராக தொடர்ந்து வேலைசெய்கிறார்கள். நாம் வெறுக்கும் தேவ கட்டளைகளைக் கைக்கொள்ளும்படியாக, நமது குடிமக்களை நம்மிடமிருந்து அவர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். நிலத்தையும் பணத்தையும் வைத்துக்கொண்டிருப்பவர்களை கவலையால் மூழ்கிப்போகும்படிச் செய்யப் புறப்பட்டுப்போங்கள். அவர்களது ஆசைகளையெல்லாம் இந்தவிதமான பொருட்களின்மீது வைக்கும்படியாக நீங்கள் செய்துவிடக்கூடுமானால், இன்னும் நம் பக்கத்திலேயே அவர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு விருப்பம் என்று சொல்லுவதை அவர்கள் செய்யட்டும். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வெற்றிபற்றியோ அல்லது நாம் வெறுக்கும் சத்தியத்தைப் பரப்புவதுபற்றியோ அல்லாமல் பணத்திற்காக மாத்திரம் அவர்கள் அதிகக் கவலைப்படும்படிச் செய்துவிடுங்கள். உலகத்தை நேசித்து, அதன்மீது அளவிற்குமீறிய ஆசைவைக்கத்தக்கதாக மிகவும் கவர்ச்சியான வெளிச்சத்தில் உலகை அவர்கள் முன்னால் வையுங்கள். நமது அணிவரிசைகளிலே, அனைத்து வழிவகைகளிலும் செல்வ ஆதாரங்கள்மீதுள்ள முழு அதிகாரத்தையும் கைப்பற்றி அதை நம் கையில் வைத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய தொண்டிற்காக, அவரது பின்னடியார்கள் எவ்வளவு பொருளை ஒதுக்குகிறார்களோ, அவ்வளவிற்கதிகமாக நமது இராஜ்யத்தைப் பங்கப்படுத்தி, நமது மக்களையும் எடுத்துக்கொள்வார்கள். அவர்கள் பல இடங்களிலும் கூட்டங்கள் நடத்துகிறபடியால், நாம் ஆபத்திலிருக்கிறோம். எனவே, விழிப்புள்ளவர்களாக இருங்கள். முடியுமானால் தொல்லைகள்,

குழப்பங்கள் முதலியவற்றை உண்டாக்குங்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதை அழித்துப்போடுங்கள். அவர்களது ஊழியர்களை அதைரியப்படுத்தி, திடமற்றுப்போகச் செய்யுங்கள். ஏனென்றால் நாம் அவர்களை வெறுக்கிறோம். பொருளுடையோர் அதைத் தேவனுடைய வேலைக்காகக் கொடுத்துவிடாதபடி, நேர்மையாகத் தோன்றுகிற சில காரணங்களை அவர்களுக்குக் கொடுங்கள். உங்களுக்கு முடியுமானால் பணவிஷயங்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்து, அவர்களது ஊழியர்களை தரித்திரத்திலும் துன்பத்திலும் அகப்படச்செய்யுங்கள். இது அவர்களது தைரியத்தையும் ஆர்வத்தையும் பலவீனப்படுத்தும். தளத்திலே ஒவ்வொரு அங்குலமாகப் போரிடுங்கள். பேராசையையும் உலகப்பொருட்களின் மீதுள்ள வாஞ்சையையும் அவர்களது குணத்திலே அடக்கியாளும் குணமாக ஆக்கிவிடுங்கள். இந்தக் குணங்கள் ஆளுகைசெய்யும்வரை, இரட்சிப்பும் கிருபையும் பின்னிட்டுச் செல்கிறது. எல்லாக் கவர்ச்சிகளையும் அவர்களைச் சுற்றிலும் நெருக்கமாக வையுங்கள். நிச்சயம் அவர்கள் நம்முடையவர்களே. அவர்கள் நம்மவர்களே என்பதைக்குறித்து நிச்சயமாக இருக்கிறோம். அதுமாத்திரமல்ல, அவர்களது வெறுக்கத்தக்க செல்வாக்கும் மற்றவர்களை பரலோகத்திற்கு நடத்திச் செல்ல உபயோகப்படாது. அவர்களில் யாராவது பொருளுதவி செய்ய முயற்சிப்பார்களானால் அவர்கள் கொடுக்காதபடி கஞ்சத்தனமான தன்மையை அவர்களிலே வைத்து, எப்போதாவது சொற்பமாகக் கொடுக்கும்படிச் செய்யுங்கள். (1)

சாத்தான் அவனது திட்டங்களை நன்றாக நடத்திச் செல்லுகிறான் என்பதை நான் கண்டேன். தேவனுடைய ஊழியர்கள் கூட்டங்கள் நடத்தத் தீர்மானிக்கும்பொழுது, சாத்தானும் அவனது தூதர்களும் அந்த இடத்தில் அந்த வேலையைத் தடைசெய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள். தேவனுடைய மக்களின் மனதிலே அநேக ஆலோசனைகளை இடைவிடாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறான். சிலரை ஒருவழியிலும் மற்றும் சிலரை வேறு வழியிலும் நடத்துகிறான். சகோதர—சகோதரிகளிடத்திலுள்ள கெட்டகுணங்களை தனது ஆதாயத்திற்கென்று உபயோகித்து, பரபரப்பூட்டி, இயற்கையிலேயே அவர்களைச் சூழ்ந்துள்ள பாவநிலையில் அவர்களைத் தூண்டிவிடுகிறான். அவர்கள் தங்களது தன்மையிலே தன்னலமாகவும் பேராசையுடையோராகவும் காணப்பட்டால், சாத்தான் அவர்கள் பக்கமாகத் தனது நிலையைத் தெரிந்துகொள்ளுகிறான். தனது முழு பலத்தோடும் அவர்கள் சூழ்ந்துள்ள பாவங்களிலேயே ஆழ்ந்துபோகும்படிச் செய்கிறான். தேவனுடைய கிருபையும் சத்தியத்தின் வெளிச்சமும் அவர்களது பேராசை, தன்னலமான எண்ணங்கள் முதலியவற்றை சிறிதளவு நீக்கிப்போடமுடியும். ஆனால் அவர்கள் முழு வெற்றியும் அடையாவிட்டால், அவர்கள் அந்த

இரட்சிப்பின் வல்லமையின் பாதுகாப்பில் இராதபொழுது, சாத்தான் உள்ளேவந்து ஒவ்வொரு மேன்மையான—தாராளமான கொள்கையையும் உலர்ந்துபோகச் செய்கிறான். ஏன் நம்மிடத்தில் இவ்வளவு கேட்கப்படுகிறது? என்று அவர்கள் நினைக்க ஆரம்பிக்கிறார்கள். நற்காரியங்கள் செய்வதில் தளர்ச்சியடைகிறார்கள். இயேசு செய்த மேலான தியாகத்தை மறந்து, நம்பிக்கையற்ற துயரத்தினின்றும் சாத்தானின் வல்லமையினின்றும், இயேசு தங்களை இரட்சிப்பதற்காகச் செய்த மகத்தான தியாகத்தை மறந்துவிடுகிறார்கள். மரியாள் விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின்மீது ஊற்றியபோது, சாத்தான் யூதாசின் பேராசையுள்ள—தன்னலமான தன்மையை பயன்படுத்தி, முறுமுறுக்கும்படிச்செய்தான். யூதாஸ் இதைப்பார்த்து, பெருத்த வீணடிப்பு என்றும் இந்தப் பரிமளத்தைலம் விற்கப்பட்டு, தரித்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாமென்றும் வலியுறுத்திக் கூறினான். யூதாஸ் ஏழைகளுக்காகக் கவலைப்பட்டவனில்லை. ஆனால் இயேசுவிற்குச் செலுத்திய தாராளமான காணிக்கையை ஊதாரித்தனம் என்று கருதினான். ஒரு சில வெள்ளி நாணயங்களுக்காக இயேசுவை விற்றுப்போடுமளவிற்கு யூதாஸ் அவரை விலைக்கிரயமிட்டிருந்தான். தேவனுக்காக காத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்பவர்களிலும் யூதாஸைப்போல சிலர் இருப்பதை நான் கண்டேன். சாத்தான் அவர்களைக் கட்டுப்படுத்துகிறான். ஆனால் அவர்கள் அதை அறியமாட்டார்கள். சிறிதளவு பேராசையோ, தன்னலமோ இருந்தாலும் தேவன் அதை ஒப்புக்கொள்ளமாட்டார். இந்தவிதமான தீய பழக்கங்களில் மூழ்கியிருப்போரது ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் கர்த்தர் அருவருக்கிறார். சாத்தான் தனது காலம் குறுகியது என்று அறிந்து, மனிதர்மேலும் தன்னலமும் பேராசையுமுடையோராய் ஆகும்படிக்கு வழிநடத்துகிறான். குறுகிய எண்ணத்தினாலும் கஞ்சத்தனத்தினாலும் தன்னலத்தினாலும் தங்களைத் தாங்களே போர்த்திக்கொண்டவர்களைக் கண்டு எக்களிக்கிறான். இப்படிப்பட்டவர்களது கண்கள் திறக்கப்படுமானால் சாத்தானின் கண்ணிகளில் அகப்பட்டு, அவனது ஆலோசனைகளை ஏற்றுக்கொள்பவர்களது முட்டாள்தனத்தைக் கண்டு, அவன் பாதாள வெற்றியோடு பெருமகிழ்வுகொண்டு சிரிக்கிறான் என்பதைக் கண்டு கொள்வார்கள். (2)

இப்படிப்பட்டவர்களது கேவலமான—பேராசை நிறைந்த நடவடிக்கை களை சாத்தானும் அவனது தூதர்களும் குறித்துக் கொள்ளுகிறார்கள். பின்பு இயேசுவையும் அவரது பரிசுத்த தூதர்களையும் பார்த்து: "இவர்கள் கிறிஸ்துவின் பின்னடியார்களாம்! மறுரூபமாகும்படி தங்களை ஆயத்தஞ்செய்துகொள்ளுகிறார்களாம்!" என்று இகழ்ந்துரைக்கிறார்கள். சாத்தான் அவர்களது போக்கை வேதத்தின் பகுதிகளைவைத்து ஒப்பிடுகிறான்.

அதில் வெகு தெளிவாக் கடிந்துகொள்ளப்படுவதைக் காட்டி: “இவர்கள் கிறிஸ்துவையும் அவருடைய வசனத்தையும் பின்பற்றுகிறார்களாம்; கிறிஸ்துவின் தியாகத்தாலும், மீட்பின் பலனாலும் வந்த கனிகளாம்” என்று கூறி இடித்துரைக்கிறான். இதைக் கேட்டமாத்திரத்தில் தேவதூதர்கள் அருவருப்பினால் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். தேவன் தமது பிள்ளைகளிடத்தில் விடாமுயற்சியோடு கூடிய வேலையை எதிர்பார்க்கிறார். நன்மைசெய்வதில் இவர்கள் சோர்வடையும்போது, அவர்களைக்குறித்து அவரும் சோர்ந்து போகிறார். அவரது பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்பவர்களிடத்தில் காணப்படும் சிறிதளவு தன்னலத்தையுங்குறித்து அவர் அதிகமாக வேதனையடைகிறார். ஏனெனில் அவர்களுக்காவும் தமது விலையேறப்பெற்ற உயிரைத் தத்தம் செய்தாரே! ஒவ்வொரு தன்னலமும் பேராசையுமுள்ள ஆத்துமாவும் வழியருகே விழுந்துவிடுவான். இயேசுவை விற்றுப்போட்ட யூதாஸைப்போல் பூமியின் ஒரு சிறிய இலாபத்தையடைய நல்ல கொள்கைகளையும் மேன்மையான—தாராளமான தன்மையையும் விற்றுப்போடுவார்கள். இப்படிப்பட்ட அனைவரும் கடவுளுடைய மக்களிடமிருந்து சலிக்கப்பட்டுப் பிரிக்கப்படுவார்கள். பரலோகம் வேண்டுமென்பவர்கள் தங்களது முழுச்சக்தியோடும், பரலோகத்தின் கொள்கைகளை ஊக்குவிக்கவேண்டும். தன்னலத்தினாலே உலர்ந்துபோவதற்குப் பதிலாக, அவர்களது ஆத்துமாக்கள் அன்பின் செயல்களால் விரிவடையவேண்டும். ஒருவருக்கொருவர் நன்மைசெய்வதின்மூலம் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மேம்பாடடையச் செய்யவேண்டும். இவ்வாறு, பரலோகக் கொள்கைகளை நெஞ்சார நேசிக்க வேண்டும். இயேசுவே பூரண மாதிரி என்பது எனக்குக் காட்டப்பட்டது. அவரது வாழ்க்கையானது தன்னலத்தின்மீது ஆர்வமற்றதாக இருந்தது. தன்னலமற்ற அன்புச்செயல்களால் எப்போதும் நிறைந்து காணப்பட்டது. (3) ★

# 63

# அசைக்கப்படுதல்!

சிலர் பலத்த விசுவாசத்தோடும் கடுந்துயர் நிறைந்த கூக்குரலோடும் தேவனிடத்தில் மன்றாடுவதைக் கண்டேன். அவர்களது உள்போராட்டத்தை வெளிப்படையாகக் காட்டும்வண்ணமாக அவர்களது முகங்கள் வெளுத்தும், மிகப் பதற்றமடைந்தும் காணப்பட்டன. உறுதியும் அதிக ஆர்வமும் அவர்களது முகங்களிலே காணப்பட்டன. அவர்களது நெற்றிகளிலிருந்து பெரும்வேர்வை துளிகள் விழுந்தன. இப்பொழுதும்—அப்பொழுதுமாக சில சமயங்களில் வேத ஒப்புதலின் அவடையாளங்களால் அவர்களது முகங்கள் பிரகாசமடையும். மறுபடியும் அதே பயபக்தியான ஆர்வமும் அக்கறையும் மிகுந்த தோற்றம் அவர்களிலே அமையும். (1)

கேடுசெய்யும் தூதர்கள் சுற்றிலும் நெருக்கிநின்று அங்கு இருள் கவியும்படிச்செய்து, இயேசுவை அவர்களது பார்வையினின்று மறைக்கும்படி பெரும் முயற்சிகள் செய்தார்கள். அதன்மூலம் அவர்களது எண்ணங்களை தீய தூதர்களைச் சுற்றியே இழுத்து, இவ்வாறாக அவர்கள் தேவனை நம்பாமல், அவருக்கு விரோதமாக முறுமுறுக்கும்படி அவர்களை வழிநடத்தலாம் என்று முயன்றார்கள். அவர்கள் தங்களது கண்களை மேலே உயர்த்தி நோக்குவதில்தான் அவர்களது ஒரே பாதுகாப்பே இருந்தது. தூதர்களுக்கு அவர்களது மக்களைப் பார்த்துகொள்ளவேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்வமுள்ள மக்களைச் சுற்றிலும் தீய தூதர்களால் நச்சு நிறைந்த சூழ்நிலை நிறைந்திருந்தபோதிலும் பரலோகத்தின் தூதர்கள் தொடர்ச்சியாக அவர்கள்மீது தங்களது செட்டைகளால் தொடர்ந்து விசிறி, அங்கிருந்த அந்தகாரத்தை சிதறடித்துக்கொண்டிருந்தார்கள். (2)

ஜெபித்துக்கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து உருக்கமாகக் கதறும்போது, சில சமயங்களில் இயேசுவிடமிருந்து வந்த ஒளிக்கதிர்கள் அவர்கள்மீது வீசியது. இவ்வாறாக, அவர்களது இதயங்களைத் திடப்படுத்தி, முகங்களைப் பிரகாசிப்பிக்கச்செய்தார். இந்தக் கடுந்துயரிலும் மன்றாட்டிலும் சிலர் பங்குகொள்வேயில்லை என்பதையும் நான் கண்டேன். அவர்கள் விருப்பு வெறுப்பின்றி கவலையற்றுக் காணப்பட்டார்கள். அவர்கள்

தங்களைச் சுற்றிலுமிருக்கும் இருளை எதிர்க்கவில்லை. அது இருண்ட மேகம்போன்று அவர்களை அடைத்துக்கொண்டது. தேவதூதர்கள் அவர்களை விட்டுவிட்டு உருக்கத்தோடு ஜெபிப்பவர்களின் உதவிக்குச் சென்றார்கள். முழு பலத்தோடும் தீய தூதர்களை எதிர்த்துப்போராடி, உதவியை நாடி, விடாமுயற்சியோடு தேவனை அழைத்தவர்களுக்கு தேவ தூதர்கள் உதவிசெய்ய விரைந்ததை நான் கண்டேன். ஆனால் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள எந்த உதவியையும் தேட முயற்சிக்காதவர்களை விட்டு அவர்கள் சென்றார்கள். என்னாலும் அவர்களைக் காணமுடியவில்லை. (3)

நான் பார்த்த இந்த அசைவின் பொருள் என்ன என்பதை வினவினேன். லவோதிக்கேயருக்குக் கொடுக்கப்பட்ட, உண்மையுள்ள சாட்சியின் ஆலோசனையால் அழைக்கப்பட்ட, நேரடிச்சாட்சியினால் ஏற்படுவதுதான் இந்த அசைவு என்று எனக்குக் காட்டப்பட்டது. மேற்கூறப்பட்ட காரியம் ஏற்றுக்கொள்பவரது இருதயத்திலே கிரியைசெய்து, அவரது நிலையை உயர்த்தி, நேரடி சத்தியத்தைப் பொழியும். இந்த நேரடி சாட்சியை சிலரால் தாங்கிக்கொள்ளமுடியாது. அவர்கள் இதற்கு விரோதமாக எழும்புவார்கள். இதுவே தேவனுடைய மக்களுக்கு மத்தியிலே ஒரு அசைவை ஏற்படுத்தும். (4)

உண்மையுள்ள சாட்சியின் வார்த்தைகளில் பாதியளவுகூட கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை நான் கண்டேன். பயபக்தியான சாட்சியில்தான் சபையின் முடிவே நிலைபெற்றுள்ளது. இதை முற்றிலுமாகப் புறக்கணிக்காவிட்டாலும், குறைவாக மதிப்பிடுகிறார்கள். இந்தச் சாட்சியானது ஆழமான மனந்திரும்புதலை ஏற்படுத்தவேண்டும். இதை உண்மையாக ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் அதற்குக் கீழ்ப்படிந்து அதன்மூலமாக தூய்மையடைவார்கள். (5)

“நீ கவனி” என்று தூதன் கூறினான். சீக்கிரத்தில் அநேக வாத்தியக்கருவிகள் ஒருங்கேயிணைந்து—பூரணமான—இனிய இன்னிசை ஒலித்தது போன்ற ஒரு குரலை நான் கேட்டேன். நான் இதுவரை கேட்டிருந்த சங்கீதம் எல்லாவற்றையும்விட அது மிகவும் மேம்பட்டதாக இருந்தது. அது இரக்கத்தாலும், பரிவினாலும் உன்னதத்திற்கு உயர்த்தும் பரிசுத்த மகிழ்ச்சியாலும் நிறைந்ததாகக் காணப்பட்டது. அது என்னை முழுவதுமாக மெய்சிலிர்க்கவைத்தது. “நீ பார்” என்று தூதன் கூறினான். வெகுவாக அசைக்கப்பட்ட ஒரு கூட்டத்தைப் பார்க்கும்படி எனது கவனம் திருப்பப்பட்டது. முன்பு கடுந்துயர் நிறைந்து ஆவியிலே அழுது ஜெபிப்பவர்களாகக் கண்டிருந்தேனே, அவர்கள்தான் இப்பொழுதும் எனக்குக் காட்டப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலுமுள்ள பாதுகாக்கும்

தூதர்களின் கூட்டம் இருமடங்காகியது. அவர்கள் தலையிலிருந்து பாதங்கள்வரை ஆயுதங்களால் தரிப்பிக்கப்பட்டிருந்தார்கள். போர்வீரர்கள் குழுவினைப்போன்று அணிவகுத்துச்சென்றார்கள். தாங்கள் அனுபவித்த பயங்கரப் போராட்டத்தையும், தாங்கள் கடந்துவந்த கடும் எதிர்ப்புகளையும் அவர்களது முகங்கள் வெளிப்படுத்தின. உள்ளத்தில் ஏற்பட்ட கடுந்துயரைக் காட்டிய முகங்கள், பரலோகத்தின் வெளிச்சத்தாலும் மகிமையாலும் பிரகாசித்தது. அவர்கள் வெற்றியடைந்துவிட்டார்கள். அதனால் ஆழ்ந்த நன்றியும், தூய பரிசுத்த மகிழ்ச்சியும் அவர்களில் காணப்பட்டன. (6)

இந்த மக்கள் கூட்டத்தின் தொகை குறைந்துவிட்டது. சிலர் அசைக்கப்பட்டதினால் வழியருகே விடப்பட்டார்கள். யார்யார் வெற்றியையும் மீட்பையும் வெகுவாக மதித்து அதற்காக விடாமுயற்சியோடு மன்றாடி, கடுந்துயர் அனுபவித்தார்களோ, அத்தகைய நபர்களோடு சேர்ந்துகொள்ளாத—கவலையற்ற—முக்கியத்துவத்தை உணர்திராத மக்கள் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இருளிலே விடப்பட்டார்கள். அவர்களது இடங்கள் சத்தியத்தைப் பற்றிக்கொண்டு, அணிவரிசைகளில் சேர்ந்துகொண்டவர்களால் உடனே நிரப்பப்பட்டது. அவர்களைச் சுற்றிலும் தீய தூதர்கள் நெருக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள்மீது தீய தூதர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லாதிருந்தது. (7)

ஆயுதம் தரிப்பிக்கப்பட்டவர்கள் மிகுந்த வல்லமையோடு சத்தியத்தைப் போதிப்பதை நான் கேட்டேன். அதற்கு பலனிருந்தது. அநேகர் கட்டப்பட்டிருந்தார்கள். கணவன்மாரால் மனைவிகளும், சில பெற்றோரால் பிள்ளைகளும் கட்டப்பட்டிருந்தார்கள். சத்தியத்தைக் கேட்காதபடி தடுத்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த சில உண்மையானவர்கள் இப்பொழுது அதை ஆவலோடு பற்றிக்கொண்டார்கள். அவர்களது உறவினர்களைப்பற்றின பயமெல்லாம் போய்விட்டது. சத்தியம் மாத்திரமே அவர்களுக்கு உயர்த்திக் காட்டப்பட்டது. அவர்கள் சத்தியத்திற்காகப் பசித்தவர்களாக—தாகமுடையவர்களாக இருந்தார்கள். அது மிக அருமையானதாகவும் உயிரைவிட மேலானதாகவும் கருதப்பட்டது. இந்தப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது எது எனக் கேட்டேன். ஒரு தூதன் என்னை நோக்கி: “இதை ஏற்படுத்தியது பின்மாரியே. தேவ சமூகத்தினின்று வந்த புதுப்பெலனும் மூன்றாம் தூதனின் உரத்த சத்தமும்” என்று பதில் அளித்தான். (8)

இப்படித் தெரிந்துகொள்ளப்பட்டவர்களிடத்தில் அதிக வல்லமை இருந்தது. “நோக்கிப்பார்” என்று தூதன் என்னிடம் கூறினான். துன்மார்க்கர் அல்லது அவிசுவாசிகளின்மீது எனது கவனம் திருப்பப்பட்டது. அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள். தேவனுடைய மக்களிடையே காணப்பட்ட

ஆர்வமும் வல்லமையும் அவர்களைத் தூண்டிவிட்டு கோபமடையச்செய்தது. எந்தப்பக்கத்திலும் ஒரே குழப்பம்—குழப்பம்! தேவனுடைய வல்லமையையும் வெளிச்சத்தையும் தங்களிடத்தில் பெற்றிருந்த மக்களுக்கு எதிராக, சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர்களைச் சுற்றிலும் இருள் கவிந்தது. ஆனால் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களோ அவர்மீது நம்பிக்கைவைத்து உறுதியாக நின்றார்கள். அவர்கள் குழப்பம் அடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். பின்பு தேவனிடம் ஊக்கமாக மன்றாடுகிறதை நான் கேட்டேன். அவர்களது கூக்குரல் இரவும் பகலும் ஓயவில்லை. “ஓ தேவனே, உமது சித்தம் ஆகக்கடவது. இந்தக் காரியம் உமது நாமத்தை மகிமைப்படுத்தக்கூடுமானால் உமது மக்கள் தப்பிக்க வழியை ஏற்படுத்தும்! சுற்றிலும் இருக்கும் அஞ்ஞானிகளிடமிருந்து எங்களைத் தப்புவியும். எங்களை அவர்கள் மரணத்திற்காக நியமித்திருக்கிறார்கள். ஆனால் உமது புயம் இரட்சிப்பைக் கொண்டுவரும்” என்று ஜெபித்தார்கள். இந்த வார்த்தைகளை மாத்திரமே எனது மனதிற்குக் கொண்டுவரமுடிகிறது. தங்களது தகுதியற்ற நிலையை ஆழ்ந்து சிந்தித்து, முற்றிலுமாக தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தலை வெளிப்படுத்துவதுபோல் தோன்றியது. எனினும் யாக்கோபைப்போல ஒருவரும் விடாமல், ஒவ்வொருவரும் மன்றாடி விடுதலைக்காக ஊக்கமாகப் போராடிக்கொண்டிருந்தார்கள். (9)

இதற்குப்பிறகு சீக்கிரத்தில், அவர்கள் கூக்குரலிட ஆரம்பித்தவுடனே தூதர்கள் அவர்களைக் காப்பாற்றி விடுதலையளிக்க விரும்பினார்கள். ஆனால் உயரமான கட்டளையிடும் தூதனானவன் அவர்கள் உதவிசெய்வதை அனுமதிக்கவில்லை. அவன் : “தேவ சித்தம் இன்னும் நிறைவேறவில்லை. அவர்கள் அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணவேண்டும். அந்த ஞானஸ்நானத்தால் ஸ்நானம் செய்விக்கப்படவேண்டும்” எனக் கூறினான். (10)

வெகு சீக்கிரத்தில் பூலோகத்தையும் பரலோகத்தையும் அதிரச்செய்யும் தேவ சத்தத்தைக் கேட்டேன். மாபெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஒவ்வொரு பக்கத்திலும் கட்டடங்கள் அதிர்ந்து விழுந்தன. அப்பொழுது நான் இன்னிசை போன்றதும் தெளிவானதும் உரத்ததுமான வெற்றியின் ஜெய தொனியைக் கேட்டேன். சிறிது நேரத்திற்குமுன்பாக மிகுந்த துயரத்திலும் அடிமைத்தனத்திலும் இருந்த அந்தக் கூட்டத்தை நான் கண்ணோக்கினேன். அவர்களது சிறையிருப்பு நீங்கிற்று. மகிமையான வெளிச்சம் அவர்கள்மேல் பிரகாசித்தது. அப்பொழுது அவர்கள் எவ்வளவு அழகாகக் காட்சியளித்தார்கள்! கவலை—சோர்வு முதலியவற்றின் அடையாளங்களைக் காணவில்லை. அவர்களது முகத்திலே

ஆரோக்கியமும் அழகும் காணப்பட்டன. அவர்களைச் சுற்றிலுமிருந்த அவர்களது விரோதிகளான அஞ்ஞானிகள், செத்தவர்களைப்போல விழுந்தார்கள். விடுதலை செய்யப்பட்ட பரிசுத்தவான்களின்மீது பிரகாசிக்கும் வெளிச்சத்தை அவர்களால் சகிக்கக்கூடாமலிருந்தது. இயேசு வானத்தில் மேகங்கள்மீது காணப்படும்வரைக்கும் வெளிச்சமும் மகிமையும் அவர்கள்மீது தங்கியிருந்தது. உண்மையாயிருந்து, துன்பம் அனுபவித்த கூட்டமானது, ஒரு கணத்திலே—ஒரு கண்ணிமைப்பொழுதிலே மறுரூபமடைந்து, மகிமையின்மேல் மகிமையை அடைந்தது. கல்லறைகள் திறவுண்டன. சாவாமையைத் தரித்துக்கொண்டவர்களாக பரிசுத்தவான்கள் வெளியேவந்து: "மரணத்தின்மேலும் பாதாளத்தின்மேலும் வெற்றி" என்று உரத்த சத்தமிட்டார்கள். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களோடுகூட, தேவனைச் சந்திப்பதற்காக அவர்கள் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். மகிமை, வெற்றி என்பவைகளின் இன்னிசையான பலத்த குரலானது சாவாமையை அணிந்துகொண்ட ஒவ்வொருவருடைய நாவிலும் இருந்தது. (11) ★

# 64

# பாபிலோனின் பாவங்கள்!

இரண்டாம் தூதன் சபைகளின் விழுகைபற்றி கூறியறிவித்தபிறகு அநேக சபைகள் மேலும் மேலும் இழிநிலையை அடைந்துகொண்டிருப்பதை நான் கண்டேன். கிறிஸ்துவின் பின்னடியார்களது பெயர்களை அவைகள் தாங்கிநிற்கின்றன. எனினும் உலகத்திற்கும் இந்த சபைகளுக்கும் எந்த வித்தியாசமும் இருப்பதாகக் கூறி வேறுபடுத்திக்காட்ட முடியாமல் இருக்கிறது. ஊழியர்கள் வேதத்திலிருந்து வசனங்களை எடுக்கிறார்கள். ஆனால் மூடிமழுப்பி மென்மையாகப் போதிக்கிறார்கள். இந்தக் காரியத்தில் இயல்பான (மனிதனின்) இருதயம் எந்த மறுப்பையும் காட்டுகிறதில்லை. மாம்சமான இந்த இதயத்திற்கு ஆவியும், சத்தியத்தின் வல்லமையும் கிறிஸ்துவின் இரட்சிப்புமே வெறுப்பான காரியமாகும். பிரபலமான பொது ஊழியத்திலே சாத்தானின் உக்கிரக் கோபத்தைத் தூண்டவும் பாவியை நடுங்கச்செய்யவும் சீக்கிரத்தில் வரப்போகும் நியாயத்தீர்ப்பின் பயங்கர உண்மைகளை இருதயத்திற்கோ அல்லது மனச்சாட்சிக்கோ வேண்டுகோள் விடுப்பதற்கு அதில் ஒன்றுமேயில்லை. துன்மார்க்கர் பொதுவாக உண்மையான கடவுள் பக்தியின்றி பக்தியின் வேஷத்தை விரும்புகிறவர்களாயிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட மார்க்கத்தைத்தான் உதவிசெய்து ஆதரிப்பார்கள். (12)

தூதன் என்னை நோக்கி: "இருளின் வல்லமைகளை" மேற்கொண்டு அவைகளின்மீது வெற்றிசிறப்பதற்கு நீதியின் முழு ஆயுதமே மனிதனுக்கு உதவும். சபைகளை ஒருதொகுதியாக சாத்தான் தனக்கு முழு உடைமையாக்கிக்கொண்டான். மிகத் தெளிவான— வேத வசனத்தின் ஊடுருவும் உண்மைகளுக்குப்பதிலாக, மனிதர்களால் கூறப்பட்ட கருத்துக்களையும், செய்யப்பட்ட செயல்களையும்பற்றி சிந்தித்து பிரசங்கிக்கிறார்கள். உலக சிநேகமும் ஆவியும் தேவனுக்குப் பகையாயிருக்கிறது. இயேசுவில் இருந்ததுபோல் எளிமையும் ஆற்றலுமுள்ள சத்தியம், உலகத்தின் ஆவிக்கு எதிராகக் கூறப்படும்போது, துன்புறுத்தும் ஆவியை விழிப்படையும்படிச்செய்கிறது. கிறிஸ்தவர்கள் என்று

சொல்லிக்கொள்ளுகிறவர்களில் அநேகர் தேவனை அறியாதிருக்கிறார்கள். இயற்கையான இருதயம் அங்கு மாறுதலடையவில்லை. மாம்ச சிந்தையானது தேவனுக்குப் பகையாக உள்ளது. எப்படியிருந்தாலும் இவர்கள் சாத்தானின் உத்தமமான ஊழியர்கள் என்றாலும் வேறு பெயரைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள். (13)

இயேசு பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்தஸ்தலத்தை விட்டு வெளியேறி, இரண்டாம் திரைக்குள் பிரவேசித்ததிலிருந்து சபைகள் ஒவ்வொரு அசுத்தமான—அருவருக்கத்தக்க பறவையாலும் நிறைந்துகொண்டே இருக்கிறது என்பதையும், அதிக இழிவான காரியங்களும் அநீதியும் சபைகளில் இருப்பதையும் நான் கண்டேன். ஆனால் அதன் அங்கதினர்களோ தங்களைக் கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்களது நம்பிக்கை, வேண்டுதல்கள், பிரசங்கங்கள் அனைத்துமே தேவனுடைய பார்வையில் மிகவும் அருவருப்பானவைகள். அவர்களுடைய சபைக்கூட்டங்களை தேவன் முகர்ந்துபார்க்கமாட்டார். தன்னலம், மோசடி, ஏமாற்றுதல்முதலியவை மனச்சாட்சியின் கடிந்துகொள்ளுதலின்றி செயல்பட்டுவருகின்றன. அந்த எல்லாக் கெட்டகுணங்களுக்கும்மேலாக, மதம் என்னும் மேலங்கியைப் போட்டுக்கொள்ளுகிறார்கள் என்று தூதன் கூறினான். பெயரளவில் மாத்திரமே இயங்கிக்கொண்டிருந்த சபைகளின் பெருமை எனக்குக் காட்டப்பட்டது. அவர்களுடைய நினைவுகளிலே தேவன் இல்லை. தங்களைப்பற்றியே அவர்களது மாம்ச சிந்தை ஆலோசிக்கிறது. தங்களது கேவலமான—அழிவிற்கேதுவான உடல்களை அலங்கரித்துக்கொண்டு, திருப்தியோடும் மகிழ்ச்சியோடும் தங்களைப் பார்த்துக்கொள்ளுகிறார்கள். இயேசுவும் அவரது தூதர்களும் கோபத்தோடு அவர்களை நோக்கிப் பார்க்கிறார்கள். “அவர்களது பாவங்களும் பெருமையும் பரலோகத்தை எட்டின. அவர்களது பங்கு ஆயத்தமாயுள்ளது. நீதியும் நியாயத்தீர்ப்பும் வெகுகாலம் தூங்கிவிட்டன. ஆனால் சீக்கிரம் விழித்தெழும்பும். பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிலளிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” என்று தூதன் கூறினான். மூன்றாம் தூதனின் நடுக்கம் நிறைந்த பயமுறுத்தல்கள் நடைபெற வேண்டியதிருக்கின்றன. தேவ கோபாக்கினையை துன்மார்க்கர் அனைவரும் குடிக்கவேண்டும். எண்ணிலடங்காத தீய தூதர்கள் உலகம் முழுவதும் பரவி, சபைகளில் கூட்டமாக நெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். சாத்தானின் கையாட்கள் இந்த மதக்குழுக்களை மகிழ்ச்சியோடு நோக்குகின்றனர். பழி—பாவங்களையும், அநீதியையும், மதமென்னும் மேலங்கி மூடிக்கொண்டிருக்கிறது. (14)

தேவனுடைய கைவேலையான மனிதர்கள் தங்களது உடன் சகோதரர்களாலேயே மிருகங்களோடு வைத்தெண்ணப்படும் நிலைக்கு

மிகவும் கீழ்த்தரமான இழிநிலைக்குக் கொண்டுசெல்லப்பட்டதை அறிந்து பரலோகம் முழுவதுமே கோபத்தால் நோக்கிப்பார்க்கிறது. மனித துன்பத்தைக்கண்டு, மனதுருகும் அருமை மீட்பரின் பின்னடியார்கள் எனச் சொல்லிக்கொள்பவர்கள், இத்தகைய பயங்ரமான—பொறுக்கமுடியாத பாவத்தில் ஈடுபட்டு, அடிமைகள் மற்றும் மனிதர்களின் ஆத்துமாக்களோடும் மனதார (தீய நோக்கமுடன்) செயல்படுகிறார்கள். இவ்வாறாக மானுடத்திற்கு கடுந்துயர் இழைக்கப்படுகிறது. அதாவது, அடிமைகள் இடம்விட்டு இடம் கொண்டுசெல்லப்பட்டு—விற்கப்பட்டு—வாங்கப்படுகிறார்கள். தூதர்கள் அவற்றையெல்லாம் பதிவுசெய்திருக்கிறார்கள். புத்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. பக்தியுள்ள ஆண்களும்—பெண்களுமான அடிமைகள், தகப்பன்மார்கள், தாய்மார்கள், குழந்தைகள், சகோதரர்கள், சகோதரிகள் ஆகியயோரது கண்ணீர்கள் பரலோகத் துருத்திகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. இன்னும் சிறிது காலத்திற்கு தேவன் தமது கோபத்தைக் கட்டுப்படுத்துவார். இந்த நாட்டின்மீதும் குறிப்பாக இந்தப் பயங்கரமான அடிமைத்தனத்தை அனுமதித்து, இதில் தங்களை ஈடுபடுத்தியும் இருக்கிற சமயசார்புள்ள தொகுதிகளின்மீதும் தேவ கோபம்பற்றி எரிகின்றது. சாந்தமும் தாழ்மையுமுள்ள இயேசுவின் பின்னடியார்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் அநேகர் இப்படிப்பட்ட அநீதி, கொடுங்கோன்மை வேதனைகள் முதலியவற்றை இரக்கமின்றி அக்கறையின்மையோடு நோக்குகிறார்கள்.இவர்களில் அநேகர் வெறுப்படையச்செய்யும் திருப்தியோடு, இந்தவித விவரிக்கமுடியாத கடுந்துயரை மற்றவர்கள் அனுபவிக்கும்படிச்செய்யமுடியும். எனினும் தேவனைத் தொழுதுகொள்ளத் துணிகிறார்கள். இது ஒரு பக்திவிநயமான கேலிக்கூத்தாகும். இதன் காரணமான சாத்தான் எக்களித்து, இந்தவித முரண்பாடான காரியத்தால் இயேசுவையும் அவரது தூதர்களையும் இகழ்ந்து: "இப்படிப்பட்டவர்கள்தான் கிறிஸ்துவின் பின்னடியார்களாம்" என்றுகூறி, பாதாள வெற்றியுடன் பார்த்து: "கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் இப்படித்தான்" என்று கொக்கரிக்கிறான். (15)

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் இவர்கள், இரத்தசாட்சிகளின் துயரங்கள் நிறைந்த வரலாறுகளை வாசிக்கும்போது, அவர்களது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடும். மனிதர் தங்களைக் கடினப்படுத்தி இந்தவிதக் கொடுமையை தங்களது உடன் மனிதருக்கு இழைக்கிறார்களென்று ஆச்சரியப்படுகிறார்கள். இவ்வாறு நினைக்கிறவர்களும் பேசுகிறவர்களும் அதே சமயத்தில் மனிதர்களை அடிமைகளாகத்தான் வைத்திருக்கிறார்கள். இதுமாத்திரமல்ல, இயற்கையின் பிணைப்புகளை அறுத்துவிட்டு, தங்களது உடன்சகோதரர்களை மிகக் கடுமையாகத் துன்புறுத்துகிறார்கள். போப்பு மார்க்கத்தாரும் அஞ்ஞானிகளும் கிறஸ்துவின்

பின்னடியார்களுக்குச் செய்ததுபோன்று இவர்களும் மற்றவர்களை மனிதத்தன்மையற்ற கொடுமையோடு இரக்கமின்றி நடத்தமுடியும். “இந்த மனிதருக்குக் கொடுக்கப்படும் நியாயத்தீர்ப்பைவிட, அஞ்ஞானிகளுக்கும் போப்பு மார்க்கத்தாருக்கும் தேவன் கொடுக்கின்ற நியாயத்தீர்ப்பு சகிக்கக்கூடியதாயிருக்கும்” என்று தூதன் கூறினான். கொடுமை அனுபவிப்போரின் கூக்குரல் தேவ சமூகத்தை எட்டியது. சிருஷ்டிகரின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன், அவனது உடன் மனிதருக்கு இழைக்கும் சொல்லமுடியாத கொடுமையையும் வேதனையையுங்கண்டு தேவதூதர்கள் திகைத்து நிற்கிறார்கள். கொடுமைக்காரரின் பெயர்கள் இரத்தத்தால் எழுதப்பட்டு, தழும்புகளால் குறுக்கே கோடிடப்பட்டு, கடுந்துயரின்—தீவிர வேதனையின்—கண்ணீரின் பெருக்கினாலும் அமிழ்ந்து கிடக்கிறது. பாபிலோனை இருமடங்காகத் தண்டிக்கும்வரை, அவரது உக்கிர கோபத்தின் பாத்திரத்தின் வண்டல்களை இந்த வெளிச்சத்தின் நாடு குடித்துத்தீருமட்டும் தேவ கோபம் நிற்காது. “அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்” என்று தூதன் கூறினான். (16)

அடிமையின் எஜமானன் தனது அடிமையை அறியாமையில் வைத்திருந்ததற்காக, அவனது ஆத்துமாவிற்காக பதிலளிக்க வேண்டுமென்பதை நான் கண்டேன். அடிமையின் பாவங்களுக்காக, எஜமானுக்கு தண்டனை கொடுக்கப்படும். அடிமைத்தனத்திலும் இழிவான நிலையிலும் வைக்கப்பட்டு, தேவனைப்பற்றியோ வேதத்தைப்பற்றியோ ஒன்றும் அறியாமல், எஜமானனின் சாட்டையடியைத்தவிர வேறெதற்கும் பயப்படாமல், மிருகங்களைவிடக் கீழான நிலையில் வைக்கப்பட்டிருக்கும் அடிமையை தேவன் மோட்சத்திற்குக் கொண்டுசெல்லமுடியாது. ஒரு உருக்கமுள்ள தேவன் என்னசெய்யமுடியுமோ, அந்த நல்ல காரியத்தை அந்த அடிமைக்குச் செய்கிறார். அவன் இல்லாததுபோல் போய்விடும்படி அனுமதிக்கிறார். ஆனால் எஜமானனோ கடைசி ஏழு வாதைகளையும் அனுபவிக்கவேண்டும். இரண்டாம் உயிர்த்தெழுதலின்மூலம் மறுபடியும் வந்து, மிகப்பயங்கரமான இரண்டாம் மரணத்தையும் அனுபவிக்கவேண்டும். பின்பு தேவ நீதி திருப்தியடையும். (17) ★

# 65

# உரத்த சத்தம்!

ஒரு முக்கிய சம்பவத்தின் நிறைவேறுதலுக்கு ஆயத்தஞ்செய்வதற்காக தூதர்கள் பரலோகத்தில் அங்குமிங்குமாக துரிதமாகச் செல்வதும், பூமிக்கு இறங்குவதும், பின்பு வானத்திற்கு ஏறிப்போவதுமாக இருந்தார்கள். பின்பு, மற்றொரு வல்லமையுள்ள தூதன் மூன்றாம் தூதனுடைய சத்தத்தோடு இணைந்து, அதற்கு வல்லமையும் வேகமும் கொடுப்பதற்காக கட்டளைபெற்று பூமிக்கு இறங்கிவர நான் கண்டேன். அந்தத் தூதனுக்கு மகா வல்லமையும் மகிமையும் கொடுக்கப்பட்டது. அவன் இறங்கியபோது, பூமி அவனது மகிமையின் வெளிச்சத்தால் நிறைந்தது. அந்தத் தூதனோடு வந்த வெளிச்சம் எல்லா இடங்களுக்கும் ஊடுருவிச்சென்றது. அவன் தனது பலத்த குரலால் உரத்த சத்தமிட்டு: “மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று” என்று கூறினான். இரண்டாம் தூதனால் சொல்லப்பட்ட தூதான, பாபிலோனின் விழுகையோடு, 1844–க்குப் பிறகு, சபைகளிலே நுழைந்துவிட்ட கேடுபாடுகளும் சேர்த்து திரும்பவும் கூறப்பட்டது. மூன்றாம் தூதனின் தூதாகிய மாபெரும் வேலையோடு, இது உரத்த சத்தமாகப் பெருகிவருவதற்கு, இந்தத் தூதனின் வேலை சரியான சமயத்தில் வந்து இணைகிறது. தேவனுடைய மக்கள் தாங்கள் சீக்கிரம் சந்திக்கப்போகிற சோதனைவேளையில் நிற்கும்படியாக இவ்வாறு ஆயத்தமாகிறார்கள். மாபெரும் வெளிச்சம் அவர்கள்மீது தங்கியிருப்பதை நான் கண்டேன். அவர்கள் மூன்றாம்தூதனின் தூதைப் பயமின்றிக் கூறியறிவிக்க ஒருங்கே இணைந்தார்கள். (1)

பரலோகத்தினின்று இறங்கிய அந்தத் தூதனுக்கு உதவும்படியாக தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். “என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத்

தேவன் நினைவுகூர்ந்தார்" என்று எங்கும் குரல்கள் ஒலித்ததைப்போன்று நான் கேட்டேன். மூன்றாம் தூதனின் தூதோடு மேலும் அதிகமாக இந்தத் தூது சேர்க்கப்பட்டதுபோன்று இணைந்து, நடு இராத்திரியின் சத்தமாக 1844–ல் கொடுக்கப்பட்ட இரண்டாம் தூதோடு இணைந்தது. காத்திருக்கும் பொறுமையான பரிசுத்தவான்களின்மீது தேவமகிமை தங்கியது. அவர்கள் பயமின்றி, பயபக்தியான கடைசி எச்சரிப்பைக்கூறி, பாபிலோனின் விழுகையைப் பிரசித்தப்படுத்தி, பயங்கரமான அழிவிற்குத் தப்பும்படியாக அவளைவிட்டு வெளியேவரும்படியாக தேவனுடைய மக்களை அழைத்தார்கள். (2)

காத்திருக்கும் நபர்கள்மீது, பிரகாசிக்கும்படியாகக் கொடுக்கப்பட்ட வெளிச்சம் எங்கும் ஊடுருவிப் பாய்ந்தது. முத்தூதுகளைக் கேட்டு—தள்ளிப்போடாத ஏதோ ஒரு வெளிச்சத்தில் இருந்த சபைகளிலுள்ளோர் அழைப்பிற்குக்கீழ்ப்படிந்து, விழுந்தபோன சபைகளை விட்டு வெளியேறினார்கள். இந்தத் தூதுகள் கொடுக்கப்பட்டதாலும் வெளிச்சம் அவர்கள்மீது பிரகாசித்ததாலும் மரணத்தையோ ஜீவனையோ தெரிந்துகொள்ளும் சிலாக்கியம் பெற்றதாலும் அநேகர் கணக்குக்கொடுக்கவேண்டிய அளவின் ஆண்டுகளைச் சந்திக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவரை எதிர்பார்த்து இருப்பவர்களோடு சேர்ந்திருக்க சிலர் தீர்மானித்து, ஜீவனைத் தெரிந்துகொண்டார்கள். மூன்றாம் தூது, அதனுடைய வேலையைச் செய்யவேண்டும். அதன்மூலம் எல்லாரும் சோதிக்கப்படவேண்டும். மதச்சார்பான கூட்டங்களினின்று விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் வெளியேவரும்படி அழைக்கப்படவேண்டும். விலக்கமுடியாத ஒரு வல்லமை நேர்மையுள்ளவர்களை அசைத்தது. அவர்களது அவிசுவாசிகளான நண்பர்கள்மேலும் உறவினர்கள்மேலும் தேவ வல்லமையின் வெளிப்படுத்தல்கள் ஒரு பயத்தையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியது. எனவே அவர்களால் ஊழியத்திற்காக தேவ ஆவியின் அனுக்கிரகத்தைப் பெற்றவர்களை தடைசெய்யமுடியாமற்போயிற்று. கடைசி அழைப்பு பரம ஏழைகளான அடிமைகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டது. அவர்களில் தேவ பக்தியுள்ளோர் வருங்காலத்தில் கிடைக்கப்போகும் மகிழ்ச்சியான விடுதலையை எண்ணியமாத்திரத்தில் அவர்களிடமிருந்து பெருமகிழ்ச்சியின் கீதங்கள் பெருக்கெடுத்தன. அவர்களது எஜமான்களால் அவர்களைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. பயமும் ஆச்சரியமும் அவர்களை மௌனமாக்கிற்று. மாபெரும் அற்புதங்கள் நிகழ்ந்தன. பிணியாளிகள் சுகமடைந்தனர். அடையாளங்களும் அற்புதங்களும் விசுாவசிகளைப் பின்தொடர்ந்தன. அவர்களது ஊழியத்தில் தேவன் இருந்தார். ஒவ்வொரு பரிசுத்தவானும் விளைவுகளைப்பற்றி பயமின்றி, தனது சொந்த மனசாட்சியின் தீர்ப்புகளைக் கடைப்பிடித்து, தேவனுடைய கட்டளைகளைக்

கைக்கொள்ளுபவர்களோடு இணைந்தார்கள். வல்லமையோடு மற்ற நாடுகளில் மூன்றாம் தூதை கூறியறிவித்தார்கள். இந்தத் தூதானது நடு இராத்திரியின் சத்தத்தைவிட வல்லமையோடும் ஊக்கத்தோடும் முடிவடையும் என்பதை நான் கண்டேன். (3)

தேவஊழியர்கள் பரத்திலிருந்து வல்லமையைப் பெற்றவர்களாக தங்களைப் பரிசுத்தமாக ஒப்படைத்ததினால் ஏற்பட்ட ஒளியினால் முகங்கள் பிரகாசமடைந்து, பரத்திலிருந்து வந்த தூதை வெளியே சென்று கூறியறிவித்தார்கள். மதச்சார்புள்ள மற்ற குழுக்களிலே சிதறியிருக்கும் ஆத்துமாக்கள் செவிசாய்த்தார்கள். அழிவிற்கு முன்பாக லோத்து சோதோமை விட்டு துரிதமாக வெளியேற்றப்பட்டதுபோல், அழிவிற்காக நியமிக்கப்பட்ட சபைகளிலிருந்த அருமையான விசுவாசிகள் துரிதமாக வெளியேற்றப்பட்டார்கள். தங்கள்மீது ஏராளமாக தங்கியிருந்த உன்னத மகிமையினால் தேவனுடைய மக்கள் பலப்படுத்தப்பட்டார்கள். இந்தக் காரியம் சோதனை வேளையை சகித்துக்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்தியது. எங்கும் திரளான குரல்கள் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" என்று கூறுவதை நான் கேட்டேன். (4) ★

# 66

# மூன்றாம் தூது முடிவடைந்தது!

மூன்றாம் தூதனின் தூது முடிவடைந்துகொண்டிருக்கும் காலம் எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. தேவ வல்லமை அவரது மக்கள்மீது தங்கியிருந்தது. அவர்கள் தங்கள் வேலைகளை முடித்து, தங்களுக்குமுன்பாக இருந்த இக்கட்டுக்காலத்தைச் சந்திப்பதற்காக ஆயத்தமாக்கப்பட்டார்கள். தேவனுடைய சமூகத்தினின்று பின்மாரியாகிய மறுமலர்ச்சியைப் பெற்றுவிட்டார்கள். உயிருள்ள சாட்சியானது புத்துணர்ச்சிபெற்றுவிட்டது. கடைசி மாபெரும் எச்சரிப்பு எங்கும் கொடுக்கப்பட்டாயிற்று. அது பரப்பரப்பூட்டி, தூதை ஏற்றுக்கொள்ள விரும்பாத பூமியின் குடிகளை கோபமூட்டியது. (1)

பரலோகத்தில் தேவ தூதர்கள் அங்குமிங்கும் துரிதமாகச் செல்வதை நான் கண்டேன். கணக்கனின் மைக்கூட்டை பக்கத்திலே வைத்துள்ள ஒரு தூதன் பூமியினின்று திரும்பி இயேசுவினிடத்தில் வந்து, அவனது வேலை முடிந்ததென்றும், பரிசுத்தவான்கள் முத்திரையிடப்பட்டு தொகை கணக்கிடப்பட்டுவிட்டது என்றும் கூறினான். பத்துக்கட்டளைகளும் வைக்கப்பட்டுள்ள உடன்படிக்கைப் பெட்டியின்முன் ஊழியஞ்செய்து கொண்டிருந்த இயேசு தூபகலசத்தை கீழே வைத்ததை நான் கண்டேன். அவர் தமது கரங்களை உயர்த்தி, உரத்தசத்தமாய் "முடிந்தது" என்றார். பின்னர்: "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" என்ற அந்த பக்திவிநயமான அறிவிப்பைக் கூறியபோது, தூதர்கள் கூட்டம் அனைத்துமே தங்களது கிரீடங்களை கழற்றிவைத்துவிட்டார்கள். (2)

ஒவ்வொருவர் காரியமும் மரணத்திற்கென்று அல்லது ஜீவனுக்கென்று முடிவுசெய்யப்பட்டுவிட்டது. ஆசரிப்புக்கூடாரத்திலே இயேசு ஊழியஞ்செய்துகொண்டிருந்தபோது, மரித்த பரிசுத்தவான்களுக்கும், பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களுக்கும் நியாயத்தீர்ப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. கிறிஸ்து தமது மக்களுக்காக பிராயச்சித்தஞ்

செய்து, அவர்களது பாவங்களை எடுத்துப்போட்டு, தமது இராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டார். (3)

இராஜ்யத்தின் பிரஜைகள் யார் என்றும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஆட்டுக்குட்டியானவரின் திருமணமும் நிறைவுபெற்றுவிட்டது. வானத்தின் கீழே இருந்த இராஜ்யமும் இராஜ்யத்தின் மேன்மையும் இயேசுவிற்கும் இரட்சிப்பின் சுதந்திரவாளிகளுக்கும் கொடுக்கப்பட்டாயிற்று. இயேசு இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் அரசாளவேண்டும்.(4)

இயேசு மகா பரிசுத்தஸ்தலத்தினின்று வெளியேறியபோது, அவரது வஸ்திரத்திலுள்ள மணிகளின் ஒலியை நான் கேட்டேன். அவர் வெளியே சென்றவுடனே, இருண்ட மேகம் பூமியின் குடிகளை மூடிற்று. அப்பொழுது குற்றவாளியான மனிதனுக்கும் குற்றமிழைக்கப்பட்ட கடவுளுக்கும் இடையே மத்தியஸ்தர் யாருமேயில்லை. இயேசு குற்றவாளியான மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே நின்றபோது, (சாத்தானிடமிருந்து) மக்களை நிறுத்தும் ஆற்றல் நிலவியிருந்தது; ஆனால், மனிதனுக்கும் பிதாவிற்கும் நடுவினின்று வெளியே வந்துவிட்டபோது, அந்த கட்டுப்படுத்தும் ஆற்றலும் எடுக்கப்பட்டுப்போயிற்று. முடிவிலே மனந்திரும்பாதவர் கள்மீது சாத்தானுக்கு முழு ஆதிக்கமும் கிடைத்தது. இயேசு ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியஞ்செய்யும்பொழுது வாதைகள் ஊற்றப்படக்கூடாமல் இருந்தது; ஆனால், அவருடைய வேலையும் பரிந்துபேசும் ஊழியமும் முற்றுப்பெற்றபோது, எதனாலும் தேவ கோபாக்கினையை நிறுத்த முடியாமற்போயிற்று. இரட்சிப்பை அல்லத்தட்டி கடிந்துகொள்ளுதலை வெறுத்த—பாதுகாப்பற்ற குற்றமுள்ள பாவியின் தலைமீது தேவகோபாக்கினை அதன் கொடிய வெறியோடு தாக்குகிறது. அச்சமிகும் அந்தக் காலத்தில், இயேசுவின் மத்தியஸ்த ஊழியத்தின் முடிவிலே பரிசுத்தவான்கள், பரிசுத்த தேவனின் பார்வையிலே பரிந்துபேசுபவர் இல்லாமல் வாழ்கிறார்கள். ஒவ்வொருவருடைய காரியமும் முடிவுசெய்யப்பட்டு, ஒவ்வொரு மாணிக்கமும் எண்ணப்பட்டுவிட்டது. இயேசு பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியிலுள்ள கூடாரத்திலே ஒரு கணம் (விநாடி) காத்திருந்தார். அவர் மகா பரிசுத்தஸ்தலத்திலிருக்கும்போது, அறிக்கைசெய்யப்பட்டுவிட்ட பாவங்களெல்லாம் தண்டனையை அனுபவிக்க வேண்டிய—பாவத்தின் உற்பத்தியாளனான சாத்தான்மீது வைக்கப்பட்டது. (5)

பின்பு, இயேசு தமது ஆசாரியத்துவ ஆடைகளைக் கழற்றி வைத்துவிட்டு, மகா மேன்மையான இராஜ வஸ்திரங்களை அணிந்து கொண்டார். ஒன்றனுள் ஒன்றாக ஏராளமான கிரீடங்கள் அவரது சிரசின்மீது இருந்தன. தூதர்களின் கூட்டம் புடைசூழ, பரலோகத்தைவிட்டுப் புறப்பட்டார்.

பூமியின் குடிகளின்மீது வாதைகள் ஊற்றப்பட்டுக்கொண்டிருந்தன. சிலர் தேவனைப் பழித்துக்கொண்டும் சபித்துக்கொண்டுமிருந்தார்கள்; மற்றவர்கள் தேவனுடைய பிள்ளைகளிடத்திற்கு விரைந்துவந்து, அவரது தண்டனைக்கு எவ்வாறு தப்புவது என்பதைத் தங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று கெஞ்சினார்கள். பரிசுத்தவான்களால் அவர்களுக்கு எந்த உதவியும் செய்யமுடியவில்லை. பாவிகளுக்காக கடைசிக் கண்ணீர் சிந்தப்பட்டாயிற்று; கடுந்துயரோடு கடைசி ஜெபமும் ஏறெடுக்கப்பட்டாயிற்று; கடைசி பாரத்தையும் சகித்தாகிவிட்டது; கடைசி எச்சரிப்பும் கொடுத்தாகிவிட்டது; கிருபையின் இனிய சத்தம் இனி ஒருபோதும் அவர்களை வரவேற்காது. பரிசுத்தவான்களும் முழு பரலோகமும் அவர்களது இரட்சிப்பில் மிகுந்த ஆர்வங்கொண்டபோது, அவர்களிடத்தில் தங்களுக்கான எந்த ஆர்வமும் காணப்படவில்லை. மரணமும் ஜீவனும் அவர்கள் முன்பாக வைக்கப்பட்டது. அநேகர் ஜீவனை வாஞ்சித்தார்கள்; ஆனால், அதைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை. அவர்கள் ஜீவனைத் தெரிந்துகொள்ளவில்லை; இப்பொழுது பாவஞ்செய்த குற்றவாளியை கழுவிச் சுத்திகரிக்க பிராயச்சித்தம் செய்யும் இரத்தம் அங்கில்லை. “தண்டிக்கப்படாமல் இந்தப் பாவி பிழைத்துப்போகத்தக்கதாக இன்னுங்கொஞ்சம் காத்திருப்போம்,” என்று பரிந்துபேசி மன்றாடும் இரக்கமுள்ள மீட்பர் அங்கில்லை. “செய்தாயிற்று, முடிந்தது” என்ற பயங்கர வார்த்தைகளைக் கேட்ட பரலோகம் முழுவதும் இயேசுவுடன் இணைந்து விட்டது. இரட்சிப்பின் திட்டம் நிறைவேற்றப்பட்டாயிற்று. வெகு சிலரே அதை ஏற்றுக்கொண்டனர். கிருபையின் இனிய சத்தம் நின்றுபோனவுடன், பயமும் நடுக்கமும் துன்மார்க்கரைப் பிடித்தது. “மிகவும் பிந்திவிட்டது; மிகவும் பிந்திவிட்டது” என்ற வார்த்தைகளை, பயங்கரமான தெளிவோடு கேட்டார்கள். (6)

தேவனுடைய வசனங்களை மதிக்காதவர்கள் அங்குமிங்கும் துரிதமாக அலைந்தார்கள். கடலுக்குக் கடல் அலைந்து திரிந்தார்கள். தேவனுடைய வார்த்தைகளைத் தேடி, வடக்கினின்று கிழக்காக அலைந்தார்கள். “அவர்கள் நிச்சயமாகக் கண்டடையமாட்டார்கள்; தேசத்திலே ஒரு பஞ்சமுண்டாயிற்று; அப்பத்திற்கான பஞ்சமுமல்ல, தண்ணீருக்கான தாகமுமல்ல; தேவனுடைய வசனத்தைக் கேட்கக்கூடாத பஞ்சம்; தேவனுடைய சம்மதத்தைக் கூறும் ஒரு வார்த்தைக்காக எதைத்தான் கொடுக்கமாட்டார்கள்; ஆனால், இல்லை; அவர்கள் கண்டிப்பாக பசியும் தாகமும் அடையவேண்டும். ஒவ்வொரு நாளும் இரட்சிப்பை அலட்சியப்படுத்தினார்கள். பரலோகத்திற்கு இழுக்கும் காரியங்களையோ பொக்கிஷங்களையோவிட, பூமியின் ஐசுவரியத்தையும் பூமிக்கான சந்தோஷத்தையும் பெரிதாக மதிப்பிட்டார்கள். அவர்கள் இயேசுவைத் தள்ளிவிட்டு, அவரது பரிசுத்தவான்களை இகழ்ந்தார்கள்.

அசுத்தமாயிருக்கிறவன் என்றுமே அசுத்தமாயிருக்கட்டும்" என்று தூதன் கூறினான். (7)

வாதைகளின் வேதனையால் துன்புற்ற துன்மார்க்கரில் அநேகர் மிகுந்த கோபங்கொண்டார்கள். பயங்கரம் நிறைந்த வேதனைக்காட்சியாக அது இருந்தது. பெற்றோர் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோரையும் சகோதரர்கள் அவர்கள் சகோதரிகளையும், சகோதரிகள் தங்கள் சகோதரர்களையும் மனக்கசப்போடு குற்றஞ்சாட்டினார்கள்; "அந்தச் சத்தியத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், இந்தப் பயங்கர வேளையினின்று நான் காப்பாற்றப்பட்டிருப்பேன்; நீதான் என்னைத் தடுத்துவிட்டாய்" என்று ஒவ்வொரு திசையினின்றும் பலத்த அழுகையின் குரல்கள் கேட்டன. மக்கள் கசப்பான வெறுப்போடு திரும்பி, தங்களது போதகர்களை நோக்கி: "நீங்கள் எங்களை எச்சரிக்கவில்லை. உலகத்தார் அனைவருமே மனந்திரும்புதலுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்றுகூறி, தூண்டிவிடப்பட்ட ஒவ்வொரு பயத்தையும் அமைதிப்படுத்த சமாதானம், சமாதானம் என்று சத்தமிட்டீர்கள். நீங்கள் இந்த வேளையைக்குறித்து எங்களுக்குக் கூறவில்லை. இதைப்பற்றி எங்களை எச்சரித்தவர்களை கொள்கைவெறியர்கள் என்றும், இந்தத் தீய மனிதர்கள் நம்மை அழிவிற்கு ஆளாக்கிவிடுவார்கள் என்றும் வலியுறுத்திக் கூறினீர்களே" என்று பலவாறாகச் சாடினார்கள். போதகர்களும் தேவ கோபாக்கினைக்குத் தப்பவில்லையென்பதை நான் கண்டேன். அவர்கள் அனுபவித்த வேதனையானது, அவர்களது விசுவாசிகள் அனுபவித்த வேதனையைவிட பத்ததுமடங்காக இருந்தது. (8) ★

# 67

# இக்கட்டுக்காலம்!

பரிசுத்தவான்கள் பட்டணங்களையும் கிராமங்களையும்விட்டுப் புறப்பட்டு, கூட்டங்கூட்டமாக இணைந்து தொடர்புகொண்டவர்களாய் வெளியேசென்று, தூரமான, மிகவும் தனியான ஒதுக்கிடங்களிலே வாழ ஆரம்பித்ததை நான் கண்டேன். அவர்களுக்கு ஆகாரத்தையும் தண்ணீரையும் தூதர்கள் கொடுத்தனர்; ஆனால், துன்மார்க்கரோ பசியாலும் தாகத்தாலும் அவதிப்பட்டார்கள்; பின்பு, பூமியின் தலைமைப்பீடத்திலிருக்கும் மனிதர்கள் ஒன்றாகக்கூடி ஆலோசித்ததை நான் கண்டேன். சாத்தானும் அவனது தூதர்களும் அவர்களைச் சுற்றிலும் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். அவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையை நான் கண்டேன். அதன் பிரதிகள் பூமியின் பல பாகங்களுக்கும் சிதறடிக்கப்பட்டன. பரிசுத்தவான்கள் தங்களது இந்த விசித்திரமான விசுவாசத்தையும் ஓய்வுநாளையும் கைவிட்டு வாரத்தின் முதல் நாளை ஆசரிக்காவிட்டால், அவர்களைக் கொல்லும்படியாக மக்களுக்கு உரிமைகொடுக்கப்பட்டது; ஆனால், அந்த இக்கட்டான நேரத்திலே, தேவன் தங்களைத் தப்புவிப்பார் என்ற வாக்குத்தத்தத்தைமட்டுமே பற்றிக்கொண்டவர்களாய், பரிசுத்தவான்கள் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்து, சாந்தத்தோடும் அமைதியோடுமிருந்தார்கள். சில இடங்களிலே, அந்த மரணாக்கினையின் சட்டம் அமுலாக்கப்படுவதற்கும் முன்பாகவே, பரிசுத்தவான்களைக் கொல்லுவதற்காக துன்மார்க்கர் அவர்கள்மேல் பாய்ந்தனர்; ஆனால், போர்வீரர்களது உருவத்தில் தேவதூதர்கள் பரிசுத்தவான்களுக்காக போர்செய்தார்கள். உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை அழிப்பதற்காக சாத்தான் தனக்கு உரிமைவேண்டுமென விரும்பினான்; ஆனால், பரிசுத்தவான்களைக் காப்பதற்காக, தேவன் தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டார். சுற்றிலுமுள்ள அஞ்ஞானிகளுக்கு மத்தியில், பிரமாணத்தைக் கைக்கொண்ட தமது பிள்ளைகளோடு, தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி மகிமைப்படுவார். நீண்டகாலமாக அவரை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த உத்தம விசுவாசிகள், மரணத்தைக் காணாதபடி அவர்களை மறுரூபமாக்குவதின்மூலமாக இயேசு மகிமைப்படுவார். (1)

சீக்கிரத்திலே பரிசுத்தவான்கள் கொடிய மன உளைச்சலால் அவதிப்படுவதை நான் கண்டேன். பூமியில் வாழும் துன்மார்க்கரால் அவர்கள் சூழப்பட்டதுபோன்று தோன்றியது. ஒவ்வொரு தோற்றமும் அவர்களுக்கு விரோதமாக இருந்தது. துன்மார்க்கரின் கையிலே தாங்கள் அழிந்துபோகும்படி தேவனால் விடப்பட்டோம் என்று சிலர் பயப்பட ஆரம்பித்தார்கள்; ஆனால், அவர்களது கண்கள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தால், தங்களைச் சூழ்ந்திருக்கும் தேவ தூதர்களைக் கண்டிருப்பார்கள்; பின்பு, திரளான கோபங்கொண்ட துன்மார்க்கர் வந்தார்கள்; அதன்பின்னர், கேடுசெய்யும் தூதர்கூட்டம் வந்து, பரிசுத்தவான்களைக் கொல்லும்படியாகத் துன்மார்க்கரைத் துரிதப்படுத்தினார்கள்; ஆனால், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளை நெருங்குமுன்பாக, அவர்களைச் சுற்றிலுமுள்ள வல்லமையுள்ள பரிசுத்த தூதர் கூட்டத்தைக் கடந்துசெல்லவேண்டும்; அது கூடாத காரியமாகும்; தேவ தூதர்கள் அவர்களைப் பின்வாங்கச்செய்தார்கள்; மேலும், அவர்களைச் சுற்றிலும் நெருக்கிக்கொண்டிருக்கும் தீய தூதர்களைப் பின்னிட்டு விழச்செய்தார்கள். (2)

அது பரிசுத்தவான்களுக்கு அச்சம்மிகுந்த, பயங்கரமான கடுந்துயர் அனுபவிக்கும் வேளையாயிருந்தது. விடுதலைக்காக இரவும் பகலும் தேவனிடத்தில் கதறினார்கள். வெளிப்பார்வைக்கு எந்தவிதத்திலும் அவர்கள் தப்பமுடியாததுபோல் தோன்றியது; ஏற்கெனவே, துன்மார்கர்: “உங்கள் தேவன் எங்கள் கைகளிலிருந்து ஏன் உங்களைத் தப்புவிக்கிறதில்லை? நீங்கள் ஏன் மேலே (பரலோகம்) சென்று உங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடாது? என்று கேலிசெய்து வெற்றி ஆரவாரம்செய்ய ஆரம்பித்து விட்டார்கள்; ஆனால், பரிசுத்தவான்கள் அதில் கவனம் செலுத்தவில்லை. யாக்கோபைப்போல் அவர்கள் தேவனோடு போராடிக்கொண்டிருந்தார்கள். தூதர்களோவெனில், பரிசுத்தவான்களை விடுவிக்கவேண்டுமென ஏங்கினார்கள்; ஆனால், அவர்கள் இன்னும் சற்று அதிகமாகக் காத்திருக்க வேண்டியதிருந்தது; ஏனெனில், தேவனுடைய மக்கள் அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணி, அந்த ஸ்நானத்திலும் பங்குகொள்ளவேண்டியதாயிருந்தது. தூதர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பிற்கு உண்மையாகத் தொடர்ந்து காவல்புரிந்தார்கள். அஞ்ஞானிகள் மத்தியிலே தமது நாமம் அவதூறுசெய்யப்படுவதை கடவுள் அனுமதிக்கமாட்டார். தமது மகா வல்லமையை அறியச்செய்து, மகிமையோடு தமது பரிசுத்தவான்களை விடுதலைசெய்யும்வேளை ஏறக்குறைய வந்துவிட்டது. தமது நாமத்தின் மகிமைக்காக புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டு, பொறுமையாகக் காத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் விடுவிப்பார். (3)

பின்னர் உண்மையுள்ள நோவாவைப்பற்றி எனக்குக் குறித்துக் காட்டப்பட்டது. மழைபொழிந்து வெள்ளம் வந்தபோது, நோவாவும் அவனது குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். அவர்களை உள்ளேவிட்டு, தேவன் பேழையை அடைத்துப்போட்டார். ஜலப்பிரளயத்திற்கு முன்னான உலகில் வாழ்ந்த குடிகள், நோவாவை கேலிசெய்து எள்ளிநகையாடினபோது, அவன் அவர்களை உத்தமமாக எச்சரித்தான். பூமியிலே வெள்ளம் பெருகின போதும், ஒருவர்பின் ஒருவராக மூழ்க ஆரம்பிக்கும்போதும் தாங்கள் வெகுவாகக் கேலிசெய்த அந்தப் பேழையை நோக்கிப்பார்த்தார்கள். அந்தப் பேழை உண்மையுள்ள நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றியவண்ணம் பத்திரமாக தண்ணீரில் மிதந்துகொண்டிருந்தது; வரப்போகும் அவரது கோபாக்கினையைக் குறித்து உலகிற்கு உண்மையாக எச்சரிக்கைவிடுத்த தேவனுடைய பிள்ளைகள் விடுவிக்கப்படுவார்கள் என்பதை நான் கண்டேன். மிருகத்தின் முத்திரையைத் தரிக்காதவர்களையும், மிருகத்தின் சட்டத்திற்குத் தலைவணங்காதவர்களையும், மறுரூபமாக்கப்பட காத்திருப்பவர்களையும் அழிக்கும்படி தேவன் துன்மார்க்கரை அனுமதிக்கமாட்டார். பரிசுத்தவான்களைக் கொல்லும்படி துன்மார்க்கர் அனுமதிக்கப்படுவார்களானால், சாத்தானும் கேடுசெய்யும் அவனது தூதர்களும் தேவனை வெறுப்பவர்கள் அனைவரும் மனநிறைவடைவார்கள் என்று நான் கண்டேன். தாங்கள் நேசித்த அவரைக் காண காலங்காலமாகக் காத்திருந்த அந்தப் பரிசுத்தவான்களோடு செய்யும் முடிவுப் போராட்டத்தில் சாத்தானின் கெம்பீரத்தோடு வல்லமையும் சேர்ந்திருக்குமானால், ஆ! அது அவனுக்கு எத்தகைய ஆரவாரமாக இருந்திருக்கும். பரிசுத்தவான்கள் மேலே (பரலோகம்) செல்வார்கள் என்ற காரியத்தைக் கேலிசெய்தோர், தேவன் தமது மக்கள்மேல் கொண்டுள்ள அக்கறையையும் அந்த மகிமையான விடுதலையையும் காண்பார்கள். பரிசுத்தவான்கள் பட்டணங்களையும் கிராமங்களையும்விட்டு வெளியேறியபோது, துன்மார்க்கர் அவர்களைத்தேடி கொலைசெய்யும்படி பின்தொடர்ந்தார்கள்; ஆனால், தேவனுடைய மக்களைக் கொல்லுவதற்காக உயர்த்தப்பட்ட வாட்கள் வைக்கோலைப்போல வலிமையற்று தரையில் விழுந்தன. தேவனுடைய தூதர்கள் பரிசுத்தவான்களை கேடயம்போன்றிருந்து பாதுகாத்தார்கள். அவர்கள் விடுதலைக்காக இரவும் பகலும் கதறினார்கள்; அவர்களின் கண்ணீர் தேவ சமூகத்தை எட்டியது. (4) ★

# 68

# பரிசுத்தவான்களுக்குக் கிடைக்கும் விடுதலை!

தேவன் தமது பிள்ளைகளை விடுதலை செய்யும்படியாக நள்ளிரவைத் தெரிந்துகொண்டார். தேவனுடைய பிள்ளைகளைச் சுற்றிலும் நின்று துன்மார்க்கர் கேலிசெய்யும்போது, திடீரென்று சூரியன் காணப்பட்டு தனது முழு வல்லமையோடும் பிரகாசித்தது. சந்திரனும் நிலைத்து நின்றது. துன்மார்க்கர் வியப்பினால் இந்தக் காட்சியை நோக்கிப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் பரிசுத்தவான்களோவெனில், பரிசுத்த மகிழ்ச்சியோடு, இவைகளைத் தங்களது விடுதலையின் அடையாளங்களாகக் கண்டார்கள். ஒன்றன்பின் ஒன்றாக, மிகத் துரிதமாக அடையாளங்களும் அதிசயங்களும் கடந்துசென்றன. எல்லாமே இயற்கையின் ஓட்டத்தினின்று மாறுபட்டுக் காணப்பட்டன. சிற்றாறுகள் ஓட்டத்தை நிறுத்தின; இருண்ட கனத்த மேகங்கள் வந்து ஒன்றோடொன்று மோதின; ஆனால், மகிமை தங்கிய ஒரே ஒரு இடம் மாத்திரம் தெளிவாகத் தெரிந்தது. வானங்களையும் பூமியையும் அசைக்கத்தக்கதாக, அநேகம் தண்ணீர்களைப்போல, தேவனுடைய சத்தம் அந்த இடத்தினின்று வந்தது. மாபெரும் பூமியதிர்ச்சி உண்டாயிற்று. கல்லறைகள் திறவுண்டன. ஓய்வுநாளைக் கைக்கொண்டு, மூன்றாம் தூதனின் தூதை ஏற்றுக்கொண்டு, அந்த விசுவாசத்தில் மரித்தவர்கள், தங்களது மண்படுக்கைகளின்று மகிமையுள்ளோராய் எழுந்து, அவரது பிரமாணத்தைக் கைக்கொண்டவர்களோடு, தேவன் செய்வதாக இருந்த அந்தச் சமாதான உடன்படிக்கையைக் கேட்கும்படி வந்தார்கள். ஆகாயம் திறந்து திறந்து மூடி, குமுறியது. காற்றில் அடிபடும் நாணல்போன்று மலைகள் நடுங்கின; கரடுமுரடான பாறைகளை சுற்றிலும் வீசின; பானையில் தண்ணீர் கொதிப்பதுபோன்று கடல் கொந்தளித்து, கற்களை நிலத்தின்மீது வீசியது. இயேசு வரப்போகும் நாளையும் குறிப்பிட்ட மணிநேரத்தையும் கூறி, தேவன் தமது மக்களுக்கு அவரது நித்திய உடன்படிக்கையை அறிவித்தபோது, அவர் ஒரு வாக்கியம் உரைத்தார்; பின்பு, சற்று நிறுத்தினார். அந்தச் சமயத்திலே அந்த வார்த்தைகள் பூமியெங்கும் உருண்டோடின. தேவனுடைய

இஸ்ரவேலர்கள் மேல் நோக்கியவர்களாய், அந்த வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து நின்றார்கள். யேகோவாவின் வாயினின்று வந்த அந்த வார்த்தைகள், பூமியெங்கும் இடிமுழக்கம் போன்று உருண்டோடியது. அது அச்சமூட்டும் பக்திவிநயமான நேரமாக இருந்தது. ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் பரிசுத்தவான்கள்: “மகிமை, அல்லேலூயா” என்று உரத்தசத்தமிட்டார்கள். தேவ மகிமையினால் அவர்களது முகங்கள் பிரகாசமடைந்தன. மோசே, சீனாய் மலையினின்று இறங்கி வரும்போது, அவனுடைய முகம் பிரகாசித்தது போன்று, இந்தப் பரிசுத்தவான்களின் முகங்கள் மகிமையினால் பிரகாசித்தன; அந்த மகிமையினால் துன்மார்க்கர் பரிசுத்தவான்களை நோக்கிப்பார்க்கக் கூடாமலிருந்தனர். தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாளைக் கைக்கொண்டு, தேவனை கனப்படுத்தியவர்கள்மீது என்றும் நிலைத்துநிற்கும் ஆசீர்வாதம் கூறப்பட்டபோது, மிருகத்தின்மேலும் அதன் சொரூபத்தின்மேலும் ஏற்பட்ட வெற்றியினால் அங்கு ஆரவாரம் எழுந்தது. (1)

பின்பு, தேசம் ஓய்வுகொள்ளவேண்டிய அந்த விடுதலை நாள் ஆரம்பமாயிற்று. பக்தியுள்ள அடிமை தன்னைக் கட்டியுள்ள சங்கிலியை உதறிப்போட்டு, ஜெய கெம்பீரத்தோடு எழுவதையும், அவனுடைய துன்மார்க்கமான எஜமான் என்னசெய்வது என்று அறியாத குழப்பத்தில் ஆழ்ந்ததையும் நான் கண்டேன்; ஏனெனில், தேவ தொனியின் வார்த்தைகளை துன்மார்க்கர் புரிந்து கொள்ளக்கூடாதிருந்தது. (2)

சீக்கிரத்தில் பெரிய வெண்மேகம் காணப்பட்டது. மனுஷகுமாரன் அதிலே வீற்றிருந்தார். தூரத்திலே அந்த மேகம் காணப்பட்டபோது, அது மிகச் சிறியதாகக் காணப்பட்டது; அது மனுஷகுமாரனின் அடையாளம் என்பதாகத் தூதன் கூறினான். பூமிக்கு அருகிலே வரும்போது, வெற்றி கொள்பவராக பயணித்துவரும் இயேசுவின் மேன்மையான மகிமையையும் கெம்பீரத்தையும் காணமுடிந்தது. பிரகாசிக்கும் ஒளிமிகுந்த கிரீடங்களை தலையில் அணிந்த தேவ தூதர் கூட்டம் புடைசூழ்ந்து, அவரது வழியிலே அவரை நடத்திவந்தார்கள். அந்தக் காட்சியை எந்த மொழியாலும் விவரிக்க முடியாது. கெம்பீரமும் இணையில்லா மகிமையும் பொருந்திய ஜீவனுள்ள மேகம் நெருங்க நெருங்க அழகுள்ள இயேசுவை நன்றாகப் பார்க்கமுடிந்தது. அவர் முட்கிரீடம் அணிந்திருக்கவில்லை; ஆனால், மகிமையின் கிரீடம் அவரது பரிசுத்த சிரசிலே தங்கியிருந்தது. அவரது ஆடைகளிலும் தொடையிலும் இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர் என்ற ஒரு பெயர் எழுதப்பட்டிருந்தது. நடுப்பகல் சூரியனைப்போன்று அவர் முகம் பிரகாசித்தது. அவரது கண்கள் அக்கினி ஜுவாலைபோன்று இருந்தன. அவரது பாதங்கள்

சுத்த வெண்கலம்போன்று தோற்றமளித்தன. அவரது சத்தம் அநேக கீத வாத்தியங்கள்போன்று ஒலித்தது. பூமி அவருக்கு முன்பாக அதிர்ந்தது. வானமும் சுருட்டப்பட்ட புத்தகம்போலாகி விலகிப்போயிற்று. ஒவ்வொரு மலையும், தீவும் தங்கள் தங்கள் இடங்களைவிட்டு விலகிப்போயின. “பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும், கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலைநிற்கக்கூடும்” என்று கதறினார்கள். தேவனுடைய உண்மையான பிள்ளைகளை சற்று நேரத்திற்கு முன்பாக, பூமியிலிருந்தே அழித்துப் போடவிருந்தவர்கள், தேவனுடைய மகிமை அவர்கள்மீது தங்கியிருப்பதைக் கண்டார்கள். தங்களது பயங்கரத்தின் மத்தியிலே “இதோ, இவரே எங்கள் தேவன், இவருக்காகக் காத்திருந்தோம், இவரே எங்களை இரட்சிப்பார்” என்று பரிசுத்தவான்கள் எழுப்பும் மகிழ்ச்சியின் இசைத்தொனியைக் கேட்டார்கள். (3)

தூங்கும் பரிசுத்தவான்களை தேவகுமாரன் அழைத்தபோது, பூமி வெகுவாக அதிர்ந்தது. அவரது அழைப்பை ஏற்று, மகிமையுள்ள சாவாமையைத் தரித்தவர்களாக கல்லறையினின்று வெளியே வந்தார்கள். “மரணத்தின்மீதும் பாதாளத்தின்மீதும் வெற்றி! வெற்றி! ஓ மரணமே, உன் கூர் எங்கே? ஓ பாதாளமே, உன் ஜெயம் எங்கே?” என்று உரத்த சத்தமிட்டார்கள்; பின்பு, ஏற்கெனவே உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும், வெற்றியின் ஆரவாரத்திலே நீண்ட நேரம் உரத்தசத்தமிட்டார்கள். வியாதி, மரணம் போன்ற அடையாளங்களோடு கல்லறைக்குச்சென்ற உடலையுடையோர், அழியாத சுகத்தையும் வலிமையையும் பெற்றவர்களாக வெளியே வந்தார்கள். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் ஒரு கணத்திலே ஒரு இமைப் பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு, உயிர்த்தெழுந்தவர் களோடு இணைந்து, அனைவருமாக ஆகாயத்தில் தேவனைச் சந்திக்கிறார்கள், ஆ! என்ன மகிமையான சந்திப்பு! மரணத்தால் பிரிந்த நண்பர்கள் ஒன்று கூடினார்கள்; அவர்களுக்கு இனிமேல் பிரிவு என்பதேயில்லை. (4)

மேக இரதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் செட்டைகளிருந்தன. அதன் அடியிலே ஜீவனுள்ள சக்கரங்கள் இருந்தன. இரதமானது

மேல்நோக்கி உருண்டுச் செல்லும்போது, சக்கரங்கள் “பரிசுத்தர்” என்று சத்தமிட்டன. செட்டைகள் அசையும்போதும் “பரிசுத்தர்” என்று சத்தமிட்டன. மேகத்தைச் சூழ்ந்துவரும் பரிசுத்த தூதர் கூட்டமும் “பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், கர்த்தர் வல்லமையுள்ள தேவன்!” என்று சத்தமிட்டன. மேகத்திலே பயணிக்கும் பரிசுத்தவான்கள், “மகிமை! அல்லேலூயா!” என்று சத்தமிட்டனர். இரதம் மேல்நோக்கி எழும்பி உருண்டு பரிசுத்தப் பட்டணத்திற்குச் சென்றது. பட்டணத்திற்குள்ளாகச் செல்லும்முன், பூரண சதுர வடிவிலே பரிசுத்தவான்கள் நிற்கும்படி ஒழுங்குசெய்யப்பட்டது. இயேசு அவர்கள் மத்தியில் நின்றார். அவரது தலையும் தோள்களும் பரிசுத்தவான்களுக்கும் தூதர்களுக்கும்மேலாக உயரமாகத் தெரிந்தது. இவ்வாறு அவர் நிற்கும்போது, அவரது கெம்பீரத் தோற்றத்தையும் அழகிய முகத்தையும் சதுர வடிவத்தில் நின்ற அனைவரும் காணமுடிந்தது. (5) ★

# 69

# பரிசுத்தவான்களுக்குக் கிடைக்கும் பரிசு!

பின்பு, நான் பார்த்தபோது, ஏராளமான தேவ தூதர்கள் தங்கள் கைகளில் மகிமையுள்ள கிரீடங்களை ஏந்தியவர்களாக, பட்டணத்திலிருந்து வெளியே வந்தார்கள். ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒரு கிரீடம் உண்டு. அதிலே அவனுடைய பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். இயேசு கிரீடங்களைக் கேட்டபோது, தூதர்கள் அவற்றை அவரிடம் கொடுத்தார்கள். இனிய இயேசு தமது செந்த வலது கரத்தினாலே பரிசுத்தவான்களின் தலைகளிலே அதைச் சூடினார். இதேவிதத்தில் தூதர்கள் சுரமண்டலங்களையும் கொண்டுவந்தார்கள். அதையும் இயேசு பரிசுத்தவான்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார். கட்டளையிடும் பணியை மேற்கொண்ட தூதர்கள் ஆரம்பதொனியைக் கொடுத்தபோது, அனைவரும் நன்றியும் மகிழ்ச்சியும் கலந்த துதியோடு சத்தத்தை உயர்த்திப் பாடினார்கள். ஒவ்வொரு கரமும் வெகு திறமையோடு சுரமண்டலத்தின் நரம்புகளை மீட்டியது. அந்தச் சமயத்தில் இசையமுதம் பூரணமான திரட்சியோடு பெருக்கெடுத்தோடியது; பின்பு, இயேசு அந்த மீட்கப்பட்ட கூட்டத்தை பட்டணத்தின் வாசலுக்கு நடத்திச் சென்றார். மின்னும் கீல்களிலே அசைந்தாடும் கதவுகளைத் தொட்டவுடன் அவைகள் விரிவாகத் திறந்தன. சத்தியத்தைக் காத்துக்கொண்ட ஜாதிகளை உள்ளேவரும்படி அழைத்தார். பட்டணத்தினுள்ளே காணப்பட்ட ஒவ்வொன்றும் கண்ணிற்கு விருந்தாக அமைந்திருந்தது. எங்கும் திரண்ட மகிமையைக் கண்டார்கள்; பின்பு, இயேசு மீட்கப்பட்ட பரிசுத்தவான்களைக் கண்ணோக்கினார். அவர்களது முகங்கள் மகிமையால் பிரகாசித்தன. அவர் தமது அன்பின் பார்வையை அவர்கள்மீது பதித்தபோது, அவர் தமது இனிமை செறிந்த கீதத் தொனியால்: "எனது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியடைந்தேன். இந்த மேன்மையான மகிமையானது உங்களுடையதே. நீங்கள் நித்தியமாக அனுபவிக்கலாம். உங்களது துயரங்கள் முடிவடைந்தன; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, இனி வேதனையே கிடையாது" என்று கூறினார்.

மீட்கப்பட்ட அந்தக் கூட்டத்தார் அவரைப் பணிந்து, அவர்களது கிரீடங்களை அவரது பாதபடியில் சமர்ப்பித்தார்கள்; பின்பு, இயேசுவின் அழகிய கரம் அவர்களைத் தாங்கி நிறுத்தியபோது, அவர்கள் தங்களது பொற்சுரமண்டலங்களை மீட்டி, ஆட்டுக்குட்டியானவருக்காக, தங்களது இன்னிசையாலும் கீதங்களாலும் பரலோகத்தை நிறைத்தார்கள். (1)

பின்பு, இயேசு தமது மக்களை ஜீவவிருட்சத்தினருகில் அழைத்துச் சென்றார். மீண்டும், மானிடரின் காதுகள் ஒருபோதும் கேட்டிராத— இன்னிசையிலும் மேலான இனிய குரலால்: “இந்த மரத்தின் இலைகள் மக்களின் ஆரோக்கியத்திற்கு ஏதுவானவைகள். இவைகளையெல்லாம் உண்ணுங்கள்” எனக் கூறினார். ஜீவவிருட்சத்திலுள்ள மிக அழகான கனிகளை, பரிசுத்தவான்கள் அனைவரும் உரிமையோடு புசிக்கலாம், பட்டணத்திலே மகிமையுள்ள சிங்காசனம் ஒன்று இருந்தது. அதனின்று பளிங்கிற்கொப்பான தூய ஜீவநதி புறப்பட்டுவந்தது. நதியின் இருமருங்கிலும் ஜீவவிருட்சம் காணப்பட்டது. மற்றும் நதியின் கரைகளிலே உணவிற்கேற்ற நல்ல கனிகளைக் கொடுக்கக்கூடிய அழகான மரங்களும் காணப்பட்டன. (2)

பரலோகத்தை வர்ணிக்கமுயன்றால், மொழியானது அதற்கு முற்றிலும் ஆற்றலற்றதாகும். பரலோகக் காட்சி என் முன்னால் எழுகின்ற போது, நான் வியப்பினால் என்னையே இழந்துவிடுகின்றேன். தலைசிறந்த அழகும் மேன்மையான மகிமையும் என்னைக் கவர்ந்திழுக்கிறது. பேனாவைக் கீழே வைத்துவிட்டு: “ஆ! என்ன அன்பு! என்ன அதிசயமான அன்பு” என்று ஆச்சரியமடைகின்றேன். பரலோகத்தின் மகிமையையும், மீட்பரின் இணையில்லாத ஆழ்ந்த அன்பையும் விவரிக்கமுடியாமல், மிக மேலான உன்னதமான மொழியும் ஆற்றல் இழந்து நிற்கிறது! (3) ★

# 70

# பூமி பாழாய்க்கிடத்தல்!

எனது கவனம் மறுபடியும் பூமிக்குத் திருப்பப்பட்டது. துன்மார்க்கர் அழிக்கப்பட்டார்கள். அவர்களது உயிரற்ற உடல்கள் பூமியின் மேற்பரப்பில் கிடந்தன. தேவனின் உக்கிரகோபம் கடைசி ஏழு வாதைகள்மூலமாக பூமியின் குடிகளைச் சந்தித்ததினால், வேதனை மிகுதியால், தங்களது நாவுகளைக் கடித்துக்கொண்டு தேவனைச் சபித்தார்கள். யேகோவாவின் கோபத்திற்கு, பொய்யான மேய்ப்பர்கள் குறிப்பிட்ட முக்கிய இலக்கானார்கள். அவர்கள் காலூன்றி நிற்கும்போது, அவர்களது கண்கள் குழிகளிலேயும், நாவுகள் வாயிலும் அழுகிப்போயின. தேவனுடைய சத்தத்தால் பரிசுத்தவான்கள் விடுதலையடைந்தபோது, துன்மார்க்கர் தங்கள் கோபத்தை ஒருவர்மேலொருவர் திருப்பினார்கள். இரத்த வெள்ளம் பூமியில் பெருக்கெடுத்ததுபோல் தோன்றியது. ஒருமுனையினின்று மறுமுனைமட்டும் பிணங்கள் கிடந்தன. (1)

பூமி பாழான வனாந்தரம்போல் காட்சியளித்தது. பட்டணங்களும் கிராமங்களும் பூமி அதிர்ச்சியினால் குலுங்கி, குவியலாகக் கிடந்தன. மலைகள் தங்களது இடங்களைவிட்டு அகன்றதால், பெரிய கிடங்குகள் காணப்பட்டன. சமுத்திரம் எறிந்த பாறைகளும் அல்லது பூமியினின்று சாய்ந்த குன்றுகளும் பூமியின் மேற்பரப்பெங்கும் சிதறிக்கிடந்தன. மாபெரும் விருட்சங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு, பூமியெங்கும் வீசியெறியப்பட்டுக் கிடந்தன. இந்தப் பாழான பூமிதான் சாத்தானுக்கும் அவனது கேடுண்டாக்கும் தூதர்களுக்கும் ஓராயிரம் ஆண்டுகளுக்கு வீடாகும். கட்டுப்படுத்தப்பட்ட—வெளியேற முடியாத நிலையில் பூமியின் மேற்பரப்பிலே மேடுகளிலும் பள்ளங்களிலும் அலைந்துதிரிந்து தேவனுடைய பிரமாணத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் விளைவுகளை அவன் காண்பான். தன்னால் உண்டான சாபத்தின் பலனை, ஓராயிரம் ஆண்டுகள் அவன் அனுபவிக்கவேண்டும். விழுந்துபோகாத மற்ற உலகங்களுக்குச் சென்று, அவர்களைச் சோதித்து, தொல்லைகொடுக்காதபடி, அங்கு போகும் உரிமையை இழந்து, இந்தப் பூமியிலேயே கட்டுப்படுத்தப்பட்டு, தனிமையில் விடப்படுகிறான். இந்தக்

காலக்கட்டத்தில் சாத்தான் கடுமையாக துன்பத்தை அனுபவிக்கிறான். அவனுடைய விழுகையின் நாட்களிலிருந்து அவனது தீயகுணங்களே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவந்தன; ஆனால், இப்பொழுதோ அவன் தன்னுடைய வல்லமையை இழந்தவனாக தனது விழுகை நாளிலிருந்து, தன்னால் நடத்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் சிந்தித்துப்பார்க்கும்படி விடப்படுகிறான்; மேலும், தான் செய்த தீமைகள் அனைத்திற்கும் துன்பம் அனுபவித்து, செய்யப்பட்ட எல்லாப் பாவங்களுக்கும் தானே காரணமாக இருந்ததற்காகவும், தான் தண்டிக்கப்படவேண்டியதையும் நினைத்து, அந்தப் பயங்கரமான எதிர்காலத்தை பயத்தோடும்—நடுக்கத்தோடும் நோக்குகிறான். (2)

தூதர்களிடமிருந்தும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களிடமிருந்தும் வெற்றியின் ஆரவார முழக்கத்தை நான் கேட்டேன். அது பத்தாயிரம் கீதவாத்தியங்கள் இசைத்ததைப் போன்று தொனித்தது; ஏனெனில், மற்ற உலகின் மக்கள் அவனது பிரசன்னத்தினின்றும் சோதனைகளின்றும் விடுதலைசெய்யப்பட்டார்கள். இனி மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் ஒருபோதும் அவனால் சோதிக்கப்படவும் தொல்லைகளை அனுபவிக்கவும் மாட்டார்கள். (3)

பின்பு நான் சிங்காசனங்களைக் கண்டேன். இயேசுவும் அவரது மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் அவைகளில் உட்கார்ந்தார்கள். பரிசுத்தவான்கள் இராஜாக்களாயும் ஆசாரியர்களாயும் தேவனுக்காக ஆளுகைசெய்தார்கள். கிறிஸ்து தமது மக்களோடிணைந்து, மரித்த துன்மார்க்கரது கிரியைகளை தேவனுடைய வசனமாகிய நியாயப்பிரமாணப்புத்தகத்தோடு ஒப்பிட்டு, ஒவ்வொருவருடைய காரியத்தையும் அவரவர் சரீரத்தில் செய்த செய்கைக்குத் தக்கபடியாக நியாயந்தீர்த்தார். துன்மார்க்கருடைய கிரியைகளுக்குத் தக்கதாக, அவர்கள் அனுபவிக்கவேண்டிய தண்டனை அவர்களுக்கு நிறைவேற்றப்பட்டது. மரண புத்தகத்திலே அவர்களுடைய பெயர்களுக்கு எதிராக அது எழுதப்பட்டது. சாத்தானும் அவனுடைய தூதர்களும், இயேசுவாலும் அவரது பரிசுத்தவான்களாலும் நியாயந்தீர்க்கப்பட்டார்கள். சாத்தானுக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனையோ, அவனால் ஏமாற்றப் பட்டவர்களுக்குக் கிடைக்கவேண்டியதை விட மிகமிக அதிகமாக இருக்கும். அவர்களுடைய துன்பத்தோடு ஒப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு அவனுடைய துன்பம் மிகவும் அதிகமாகவிருக்கும்! அவனால் ஏமாற்றப்பட்டவர்களோவெனில், அனைவரும் அழிந்துபோனார்கள்; ஆனால், சாத்தான் மேலும் உயிரோடிருந்து, மற்ற அனைவரையும்விட அதிகப்படியாக—நீடித்த துன்பத்தை அனுபவிக்கவேண்டியதிருக்கும். (4)

மரித்த துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்பெழுதப்பட்டு முடிந்த பின்பு—ஆயிரம் ஆண்டுகளின் முடிவிலே, இயேசு பட்டணத்திலிருந்து வெளியேற, பரிசுத்தவான்களும் தூதர் கூட்டமும் அவரைப் பின்தொடர்ந்து சென்றது. இயேசு ஒரு மாபெரும் மலையின்மீது இறங்கினார். அவரது பாதங்கள் தொட்டமாத்திரத்திலே அது இரண்டாகப் பிளந்து, மாபெரும் சமவெளிப் பிரதேசமாக மாறியது; பின்பு, நாங்கள் அண்ணாந்து பார்த்து, அந்த அழகிய மாபெரும் பட்டணத்தைக் கண்டோம். அது பன்னிரண்டு அஸ்திபாரங்கள்மேல் கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு பக்கமும் மூன்று வாசல்களாக பன்னிரண்டு வாசல்கள் இருந்தன. ஒவ்வொரு வாசலிலும் ஒரு தூதன் நின்றிருந்தான். "ஆ, பட்டணம், மாபெரும் பட்டணம், தேவனிடமிருந்து—பரலோகத்திலிருந்து இறங்கிவருகிறது" என்று உரத்தசத்தமிட்டோம். அந்தப் பட்டணமானது கண்ணைப்பறிக்கும் அழகோடும் மகிமையோடும் இறங்கி, இயேசு பெருமான் ஆயத்தமாக்கியிருந்த அந்த மாபெரும் சமவெளியிலே நிலைகொண்டது. (5) ★

# 71

# இரண்டாம் உயிர்த்தெழுதல்!

பின்பு, இயேசுவும் அவரது பரிசுத்த தூதர்களின் கூட்டமும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களனைவரும் பட்டணத்தைவிட்டு புறப்பட்டார்கள். தூதர்கள் தங்களது தளகர்த்தரைச் சூழ்ந்து, அவரை அவரது பாதையில் அழைத்துவந்தார்கள். மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டம் பின்தொடர்ந்தது; பின்னர், இயேசு தமது பயங்கரமான, அச்சமூட்டத்தக்கதான கெம்பீரத்தோடு, மரித்துப்போன துன்மார்க்கரை வெளியேவரும்படி அழைத்தார். அவர்கள் எந்தவித பலவீனமான—வியாதிமிகுந்த உடல்களோடு கல்லறைக்குச் சென்றார்களோ அவ்வாறே உயிர்த்தெழுந்துவந்தார்கள்! என்ன தோற்றம்! எத்தகைய காட்சி! முதலாம் உயிர்த்தெழுதலிலே உயிர்த்தெழுந்த அனைவரும் சாவாமையைத் தரித்த புதுமலர்ச்சியோடு வெளியேவந்தார்கள்; ஆனால், இரண்டாம் உயிர்த்தெழுதலிலே சாபத்தின் அடையாளங்கள் அனைவர்மேலும் காணப்பட்டன. பூமியின் இராஜாக்களும், பிரபுக்களும், அற்பமானவர்களும், தாழ்ந்தோரும், கற்றோரும், கல்லாதோரும் ஒன்றாக உயிர்த்தெழுகிறார்கள். அனைவரும் மனுஷகுமாரனைப் பார்க்கிறார்கள். அவரை நிந்தித்துக் கேலிசெய்தவர்களும், அவரது பரிசுத்த சிரசின்மீது முள்முடியைச் சூட்டியவர்களும், அவரைக் கோலினால் அடித்தவர்களும், அவரது இராஜரீக மகிமையிலே அவரைக் காண்கிறார்கள். அவரது சிலுவைப்பாடுகளின்போது, அவர்மீது துப்பியவர்கள், அவரது ஊடுறுவும் பார்வையினின்றும் அவரது மகிமையான முகப்பிரசன்னத்தினின்றும் தங்களது முகங்களைத் திருப்பிக்கொள்கிறார்கள். அவரது கைகளிலும் கால்களிலும் ஆணிகளைக் கடாவியவர்கள், அவரைச் சிலுவையில் அடித்ததினால் ஏற்பட்ட அடையாளங்களை நோக்கிப்பார்க்கிறார்கள். அவரது விலாவிலே ஈட்டியால் குத்தியவர்கள், அவர்களது கொடுமையின் அடையாளத்தை அவரது உடலிலே காண்கிறார்கள். அவரது மரண வியாகுலத்திலே கேலிசெய்து, சிலுவையிலடித்த இயேசு இவர்தான் என்று அறிந்துகொள்கிறார்கள். அங்கு நீண்ட அழுகையின் தொனி எழும்புகிறது. இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமான அவரது பிரசன்னத்திற்கு முன்பாக நிற்கமுடியாமல்

ஓடிஒளிகிறபோது, அங்கு நீண்ட வேதனைமிகுந்த கூக்குரல் எழும்புகிறது. (1)

ஒருகாலத்தில், தாங்கள் நிந்தித்த அந்த பயங்கரமான மகிமை பொருந்தியவருக்கு முன்பாக, தங்களை மறைத்துக்கொள்ளும்படி குன்றுகளைத் தேடி, அனைவரும் அலைகிறார்கள். அவரது கெம்பீரத்தையும் மிகுந்த மகிமையையுங்கண்டு, அதனால் மேற்கொள்ளப்பட்டவர்களாக வேதனை அடைந்து, எல்லாரும் ஏகோபித்து—ஒரேகுரலில்—மிகவும் தெளிவாக: "கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று சத்தமிடுகிறார்கள். (2)

பின்பு, இயேசுவும் அவரது பரிசுத்த தூதர்களும், பரிசுத்தவான்கள் அனைவரும் பின்தொடர்ந்துவர, பட்டணத்திற்குள் மறுபடியும் போகிறார்கள். கேட்டிற்கென முன்கூட்டியே ஒதுக்கிவைக்கப்பட்ட துன்மார்க்கரின் கசப்பான புலம்பல்களும் அழுகையின் தொனிகளும் ஆகாயத்தை நிரப்பின. பின்பு, சாத்தான் மறுபடியும் தனது வேலையை ஆரம்பித்துவிட்டதை நான் கண்டேன். சுற்றிவந்து தனது பிரஜைகளைக்கண்டு, நலிந்து பலவீனமானவர்களை பலமுள்ளவர்களாக்குகிறான். அவர்களிடத்தில் தானும் தனது தூதர்களும் வலிமைவாய்ந்தவர்கள் எனக் கூறினான். உயிர்த்தெழுந்த எண்ணிமுடியாத—இலட்சக்கணக்கான மக்களை அவர்களிடத்தில் காட்டினான். இராஜ்யங்களைவென்று போரிலே வீரதீரம்காட்டின மாபெரும் போர்வீரர்களும் அரசர்களும் அங்கிருந்தார்கள். ஒருக்காலும் ஒரு போரிலும் தோல்வியடையாத வீரதீரர்களும், பராக்கிரமசாலிகளும் அங்கு இருந்தார்கள். எந்த கர்வமிக்க—பேராசைகொண்ட நெப்போலியன் நெருங்குவதைக்கண்டு இராஜ்யங்கள் நடுங்கினவோ, அந்த நெப்போலியன் அங்கு இருந்தான். வெற்றிவேட்கையினால், போரில் வீழ்ந்த வீரர்கள் தங்களது மிக உயரமான—கெம்பீரமான உடலமைப்போடும் மதிப்பான தோற்றத்தோடும் அங்கு நின்றார்கள். கல்லறையினின்று வெளியே வந்தபோது, எந்தச் சிந்தனையோடு மரணத்தைச் சந்தித்தார்களோ, அந்த சிந்தனைகளை மீண்டும் பற்றிக்கொண்டார்கள். தாங்கள் விழும்போது எத்தகைய—வெற்றிகொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தால் அடக்கியாளப்பட்டிருந்தார்களோ, அத்தகைய விருப்பமிகுந்தவர்களாகவே காணப்பட்டார்கள். சாத்தான் தனது தூதர்களிடம் ஆலோசனைசெய்து, பின்னர் இராஜாக்களிடமும், வெற்றி வேந்தர்களிடமும் பராக்கிரமசாலிகளிடமும் ஆலோசனைசெய்கிறான். பரந்து நிற்கும் சேனையைப் பார்த்து: பட்டணத்திற்குள் இருக்கும் கூட்டம் சிறியது—பலவீனமானது என்றும், மேலே சென்று, அந்தப் பட்டணத்தைக் கைப்பற்றி, அதன் குடிகளை விரட்டிவிட்டு, அதன் ஐசுவரியத்தையும் மகிமையையும் தங்களுடையதாக்கிக் கொள்ளலாமென்றும் கூறுகிறான். (3)

சாத்தான் அவர்களை ஏமாற்றுவதில் வெற்றிகொள்ளுகிறான். அனைவரும் உடனே போருக்காக ஆயத்தஞ்செய்கிறார்கள். அந்தப் பிரமாண்டமான சேனையிலே திறமைமிக்க வீரர்கள் அநேகருண்டு. அவர்கள் யுத்தத்திற்கான பலவிதமான தளவாடங்களையும் ஆயத்தஞ்செய்கிறார்கள். பிறகு சாத்தானின் தலைமையின்கீழ் அந்தக் கூட்டம் இயங்க ஆரம்பிக்கிறது. இராஜாக்களும், போர்வீரர்களும் சாத்தானைத் தொடர்ந்துசெல்லுகிறார்கள். மற்ற ஜனக்கூட்டமோ குழுக்களாகப் பின்தொடருகின்றன. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் உண்டு. நொறுங்கிப்போன பூமியின் மேற்றளத்தின்மீது பரிசுத்தப் பட்டணத்திற்கு அணிவகுத்துச் செல்லும்போது, ஒழுங்கு கடைபிடிக்கப்படுகிறது. இயேசு பட்டணத்தின் கதவுகளை மூடுகிறார். பிரமாண்டமான அந்தச் சேனை அதைச் சுற்றிவளைக்கிறது. பயங்கரமான சண்டையை எதிர்நோக்கி அணிவகுத்து நிற்கிறார்கள். இயேசுவும், அவரது தூதர் கூட்டமும், பரிசுத்தவான்களனைவரும், ஜொலிக்கும் கிரீடங்களை சிரசில் சூடியவர்களாக பட்டணத்தைச் சுற்றியிருக்கும் கோட்டையின்மீது ஏறுகிறார்கள். இயேசு கெம்பீரமாக அவர்களை நோக்கி: “ஓ பாவிகளே, பாருங்கள்! இதோ, நீதிமான்களின் பரிசு! எனது மீட்கப்பட்ட கூட்டமே! பாருங்கள்! துன்மார்க்கரின் பரிசு” என்று கூறுகிறார். பட்டணத்தின் மதில்மேலிருக்கும் அந்த மகிமையான கூட்டத்தை அந்தப் பெருந்திரள் காண்கிறது. அவர்களது ஜொலிக்கும் கிரீடங்களின் அழகைப் பார்த்து, இயேசுவின் சாயலைப் பிரதிபலிக்கும் மகிமைபொருந்திய முகங்களைக்கண்டு, இணையில்லா மகிமையும் கெம்பீரமும் பொருந்திய இராஜாதி இராஜாவையும், கர்த்தாதி கர்த்தாவையுங்கண்டு, அவர்களது பலம் குன்றிப்போகிறது. இப்படிப்பட்ட ஐசுவரியத்தையும் மகிமையையும் இழந்துபோனோமே என்ற அந்த எண்ணமானது அவர்களைத் தீவிரமாகத் தாக்குகிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை உணருகிறார்கள். தாங்கள் நிந்தித்த அந்தப் பரிசுத்தமான மகிழ்ச்சியான கூட்டமானது மகிமை, கனம், சாவாமை, நித்திய ஜீவன் ஆகியவைகளால் போர்த்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறார்கள். ஒவ்வொரு அற்பமான—அருவருப்பான காரியத்தினாலும் சூழப்பட்டு, தாங்கள் பட்டணத்திற்கு வெளியே நிற்பதையும் காண்கிறார்கள். (4) ★

# 72

# இரண்டாம் மரணம்!

**சா**த்தான் அவனது பின்னடியார்களுக்கு மத்தியில் விரைந்துசென்று அந்தக் கூட்டம் செயலில் இறங்கும்படியாக தூண்டிவிட முயற்சிக்கிறான்; ஆனால், பரலோகத்தின் தேவனிடமிருந்து அக்கினி மழையாக அவர்கள்மீது பொழிந்தது. மேதாவிகள், பலவான்கள், பிரபுக்கள், ஏழைகள், இழிந்தோர் அனைவரையும் அது ஒன்றாக பட்சித்துபோட்டது. சிலர் வெகுவிரைவில் அழிந்துபோனதையும், மற்றவர்கள் அதிகமாகத் துன்பமடைந்ததையும் நான் கண்டேன். தங்கள் சரீரத்தில் செய்த செயல்களுக்குத்தக்கதாக அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சிலர், அநேக நாட்களாக, தங்கள் உடலில் பட்சிக்கப்படும்படியான பகுதி இருக்கும்வரை வெந்துகொண்டிருந்தார்கள். அந்த வேதனையின் முழு உணர்ச்சி கடைசிவரை இருந்தது. “பட்சிக்கப்படும்படியான கடைசிச் சிறு அணு இருக்கும்வரை அந்த வாழ்க்கை அழிந்துபோவதில்லை; அதுவரை அந்த நெருப்பும் அணைக்கப்பட்டுப்போவதில்லை” என்று தூதன் கூறினான். (1)

சாத்தானும் அவனுடைய தூதர்களும் நீடித்த துன்பத்தை அனுபவித்தார்கள். சாத்தான் தனது சொந்தப் பாவங்களின் பாரத்தையும் தண்டனையையும் மாத்திரம் சுமக்காமல், தன்மீது வைக்கப்பட்ட, மீட்கப்பட்ட கூட்டத்தாரின் பாவங்களின் பாரத்தையும் தண்டனையையும் அனுபவித்தான்; மேலும், தன்னால் அழிக்கப்பட்ட ஆத்துமாக்களுக்காகவும் அவன் துன்பம் அனுபவிக்கவேண்டிய திருந்தது; பின்பு, சாத்தானும் அவனது துன்மார்க்கக் கூட்டத்தாரும் அழிக்கப்பட்டு, தேவ நீதியானது திருப்தியடைந்தது. தூதர் கூட்டமனைத்தும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் உரத்த குரலில் “ஆமென்!” என்று ஆர்ப்பரித்தார்கள். (2)

பின்பு, தூதன்: “சாத்தான் வேர், அவனது பிள்ளைகள் கொப்புகள்; இப்பொழுது அவர்கள் வேரும் கொப்புமாக அழிக்கப்பட்டுப்போனார்கள். அவர்கள் அடைந்தது நித்திய மரணம்; அவர்களுக்கு ஒருபோதும் உயிர்த்தெழுதல் கிடையாது. இனி தேவனுக்கு ஒரு தூய்மையான பிரபஞ்சம் இருக்கும்” என்று கூறினான். பின்பு, துன்மார்க்கரை அழித்த நெருப்பானது,

குப்பைகூளங்களையெல்லாம் எரித்து, பூமியைச் சுத்தமாக்கியதையும் நான் கண்டேன். மறுபடியும், நான் தூய்மையாக்கப்பட்ட பூமியை நோக்கிப் பார்த்தேன். சாபத்தின் ஒரு சிறு அடையாளங்கூட அங்கில்லை. உடைந்த ஒழுங்கற்ற பூமியின் மேற்பரப்பு சமப்படுத்தப்பட்ட விரிவான சமவெளியாக இப்பொழுது காணப்பட்டது. தேவனுடைய இந்தப் பிரபஞ்சம் முழுவதும் சுத்தமாக இருந்தது. மாபெரும் போராட்டம் என்றைக்குமாக முடிவடைந்துவிட்டது. எங்கு பார்த்தாலும், எந்தப் பொருளின்மீது எங்கள் கண்கள் பட்டாலும் அவை அழகாயும் பரிசுத்தமாயும் இருந்தன. மீட்கப்பட்ட கூட்டத்திலுள்ள அனைத்து முதியோரும் வாலிபரும், பெரியோரும், சிறியோரும், ஜொலிக்கும் தங்களது பொன்னாலான கிரீடங்களை மீட்பரின் பாதத்திலே சமர்ப்பித்து, என்றென்றும் சதாகாலங்களிலும் ஜீவனோடிருப்பவரைத் தொழுதுகொள்ள அவரது பாதத்திலே முகங்குப்புற விழுந்து பணிந்தார்கள். அழகான இந்தப் புதிய பூமி எல்லா மகிமையோடும் பரிசுத்தவான்களின் நித்திய சுதந்திரமாக இருந்தது. வானத்தின் கீழே இராஜ்யமும் ஆளுகையும் இராஜ்யத்தின் மேன்மையும் உன்னதமானவரின் பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டது; அவர்களே அதை என்றுமாக! நித்தியநித்திய காலமாக உடமையாக்கிக்கொள்ளுவார்கள்! (3) ★